சமூக உளவியல்

ஆசிரியர்:
V.V. அகோல்கர்.

தமிழாக்கம் :-

N.வேதமணிமனுவேல்

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ்வெளியீட்டுக் கழக வரிசை:—24

சமூக உளவியல்

(சமூகத்தில் மனத்தைப்பற்றிய ஆய்வு)

Social Psychology (STUDY OF MIND IN SOCIETY)

ஆசிரியர் :

V. V. அகோல்கர் M.A.,

(பம்பாய் கல்வித் துறை)

ஆமதாபாத் குஜராத் கல்லூரித் தத்துவத் துறைத் தலைவர்

தமிழாக்கம் :

நா. வேதமணி மனுவேல் M.A., M.Ed.

முன்னாள் துணை விரிவுரையாளர், ஆசியர் கல்லூரி, சைதாப்பேட்டை ; முன்னாள் பேராசிரியர், ஆசிரியர் கல்லூரி, ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம், கோவை மாவட்டம்.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

முதற் பதிப்பு: ஏப்ரல், 1963.

©தமிழ் வெளியீட்டுக் கழகம்

விலை ரூ. 9-25

விற்பனை உரிமை:

மெஸர்ஸ் ஹிக்கின் பாதம்ஸ் பிரைவேட் லிமிடெட்,
சென்னை-2.

அச்சிட்டோர்:

ராஜன் எலக்ட்ரிக் பிரஸ்,
7, சுங்குராமச் செட்டித் தெரு,
சென்னை-1.

அணிந்துரை

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி. ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என் முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர். இவற்றுள் ஒன்றான 'சமூக உளவியல்' என்னும் இந்நூலை அனைவரும் வரவேற்பார்கள் என நம்புகிறோம்.

கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் இதுவரை வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம், வணிக இயல் ஆகிய பலதுறைகளிலும் 59 நூல்கள் வெளி வந்துள்ளன.

இத்துறையை இன்னும் விரிவுபடுத்தச் சென்னை அரசினர், தமிழ் வெளியீட்டுக் கழகம் ஒன்றை நிறுவியுள்ளனர். அதன்மூலம் இன்னும் வேறு பல நூல்கள் தமிழில் வெளிவர இருக்கின்றன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக. 'உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. ஆதலின் உழைத்து வெற்றி காண்போம்'

தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும், ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்,

தமிழக முதலமைச்சர்.

முன்னுரை

(மூல ஆசிரியரின் முதற்பதிப்பு முகவுரையின் தமிழாக்கம்)

இந்நூலாசிரியர் பட்டப்படிப்பு மாணவருக்கும், பட்டப் பின்படிப்பு மாணவருக்கும் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் அடிப்படையில் இந் நூல் இயற்றப் பெற்றுள்ளது. ஆசிரியர் கூறிய கருத்துக்களைப் புத்தக வடிவில் வெளியிடவேண்டுமென்று மாணவர் விரும்பியதால் இந்நூல் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டது.

இரு முக்கிய கருத்துக்களைத் தம் மனத்திற் கொண்டு ஆசிரியர் இந்நூலை இயற்றியுள்ளார். முதலாவதாக, சமூக உளவியல் துறை விரைந்து முன்னேறுவதால் இந்திய மாணவர் ஆங்கிலத்திலுள்ள சமூக உளவியல் இலக்கியம் அனைத்தையும் மூல நூல்களினின்று படித்துத் தெரிந்து கொள்வது அரிதாகிவிட்டது. ஆகையால், பரந்த, நேர்மையான முறையில் அண்மைக் காலம்வரையுள்ள ஆய்வுக் கருத்துக்களைக் கூறும் ஒரு புத்தகம் மாணவர்களுக்குத் தேவை யாகும். இத்தேவையை முன்னிட்டு ஆசிரியர் ஏறக்குறைய முன்னூறு பக்கங்களுக்குள் சமூக உளவியலின் பல்வேறு நோக்குகளை—நடத்தை நெறி, ஃஆர்மிக நெறி, உள்ளப் பாகுபாட்டு நெறி, பண்பாட்டு நெறி முதலியவற்றைத் தொகுத்துக் கூறியுள்ளார். புற ஆய்வாளர் கண் டுள்ள சமூக உளவியற் கருத்துக்களும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. உளவியலில் ஒரு குறிப்பிட்ட மதத்தினர் (sect) கூறும் தனிச் சொல் லாட்சி தவிர்க்கப்பட்டுள்ளது. ஆனால், சொல்லாட்சிக்குரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. சொல் கருத்தைப் புரிந்துகொள்வதற்குத் துணைபுரியும் ஒரு கருவியேயாகும்.

இரண்டாவதாக, அறிவியற் கொள்கைகளை மாணவர் புரிந்து கொள்ள வேண்டுமானால், பாடத்தை அவர்களுடைய சொந்தச் சூழ்நிலையின் அடிப்படையில் விளக்க வேண்டும். இக்கருத்தை

மனத்திற்கொண்டு பாடத்தை இந்தியச் சூழ்நிலையில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இந்நூலில் நடத்தை நெறியினரும் ஃஆர்மிக நெறியினரும் பயன் படுத்தும் சொற் பயில்வுகள் ஒன்றேடொன்று முரண்படுகின்றன. ஆனால் ஆசிரியருக்கு ஒரு குறிப்பிட்ட கொள்கை கிடையாது என்பது இதன் பொருளல்ல. நடத்தை நெறிச் சொல்லாட்சி விவரிப்பதையே நோக்கமாகக் கொண்டது. ஆகையால், அதைப் பயன்படுத்துவதில் தவறு ஒன்றுமில்லை. ஃஆர்மிக நெறி, விளக்கும் நோக்கத்தைக் கொண்டது. ஆதலின் அது இடம் பெற்றே தீரவேண்டும். கோட் பாடு முறையில் நடத்தை நெறியினை முற்றுமாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆயினும் அவர்தம் கோட்பாட்டினை இன்று குறை கூறுவது சாகும் குதிரையைச் சாட்டையால் அடிப்பது போலாகும். நடத்தை நெறியினர் ஆழ்ந்த கூறுபடுப்பு முறைமையையும், மன வாழ்க்கையின் உடலியல் ஆராய்வையும் வற்புறுத்துவது வரவேற்கற் பாலது. ஃஆர்மிக உளவியலாரும் இக்கூறுகளின் சிறப்பை வற்புறுத்தி யுள்ளனர். இவ்விரு நோக்கு நிலைகளும் நெருங்கி வரவேண்டுமாயின் தம் அடிப்படைக் கருத்தின் உட்பொருளை, அதாவது மறிவினைகளை ஆக்கநிலையுறுத்தும்போது எண்ணங்கள் தூண்டல்களாகின்றன என் பதை நடத்தை நெறியாளர் உணரவேண்டும். மனவாழ்க்கைக்குத் தாழ்ந்த மட்டங்கள் (தாலமிக மட்டம், தண்டுவட மட்டம் போன் றவை) உண்டென்று அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்.

இந்நூலிலுள்ள மேற்கோள்களும் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள நூற்றொகுதியும் ஆசிரியர் பலருக்குக் கடன்பட்டுள்ளார் என்பதைக் காட்டுவன. இந்நூல் இயற்றுவதில் பல நண்பர்கள் ஆசிரியருக்குத் துணை புரிந்தனர். குறிப்பாக முதற்பதிப்பில் பேராசிரியர் மிஸ்த்திரி யும் (H. A. Mistry), யார்தியும் (V. V. Yardi) இந்நூலின் முதல் வடிவத்தைப் படித்தும், அச்சுப் பிரதியைத் திருத்தியும் ஆசிரியருக் குத் துணை புரிந்தனர். இந்நூலுக்கு உறுதுணையாயிருந்த (மூவர் கொண்ட) உற்றார்க் குழுவினுக்கு ஆசிரியர் இந்நூலைச் சமர்ப்பிக்கிறார்

* * *

[முதற்பதிப்பு 1953-இல் வெளியிடப்பட்டது. இந்நூல் 1957-இலும் பின்னரும் திருத்தப் பெற்றுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு பதிப்பிலும் ஆசிரியர் பல நண்பருக்குக் காட்டவேண்டிய நன்றியைத் தெரிவித்துள்ளார்.]

* * *

தமிழாக்க ஆசிரியரின் குறிப்புக்கள்

இம்மொழி பெயர்ப்பிலுள்ள கலைச்சொற்கள் பெரும்பாலும் தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள கலைச்சொல் அகராதியையும் தமிழ் ஆக்கக் கழகம் வெளியிட்டுள்ள ஆசிரியர் கல்லூரிக் கலைச் சொற்றொகுதியையும் அடிப்படையாகக் கொண்டவை. இவற்றுள் அடங்காத பல சொற்கள் இம்மூல நூலில் வந்துள்ளன. இவற்றைக் குறிப்பிடுதற்குப் புதிய கலைச் சொற்கள் புனைய வேண்டியதாயிற்று. இப்பணியில் ஈ. த. ராஜேஸ்வரி அம்மையார், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் முதலிய அறிஞர் வகுத்துள்ள தமிழாக்க முறை பெரிதும் பயன்பட்டது.

மூல நூலாசிரியர் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி இந்நூலில் பலவகை நெறியினரின் கருத்துக்களும், அண்மைக்காலம் வரை அறிஞர் கண்டுள்ள ஆய்வு முடிவுகளும் விளக்கப் பெற்றுள்ளன. ஆகையால், இந்நூலின் சில இடங்களில் கலைச்சொல் அடர்த்தி சற்று அதிகமாகவே உள்ளது. அவற்றைப் பொதுமக்களுக்குக் கூறுவது போல் விரித்து விளக்கி எழுதாமல், பட்டப் படிப்பு மாணவர் அறிவியல் நுணுக்கத்தோடு கற்பதற் கேற்ப சொற்செறிவுடன் (சில இடங்களில் புதிய சொல் அமைப்புக்களுடன்) எழுதும் முறை கையாளப் பெற்றுள்ளது. ஆதலின், இப்பகுதிகளை முதலில் விரைந்து படிப்பது சற்று அரிதாகவே இருக்கும். மாணவர் படிப்பதன்மூலமும், ஆராய்வதன்மூலமும் ஆசிரியர் விளக்கத்தின்மூலமும் சொல்லும் கருத்தும் இணையும் நிலை ஏற்பட்டதும் இப்புதிய பயில்வுகள் எளிதாகிவிடும்.

இத்தகைய நூல்களைத் தமிழில் படிப்பதால் ஆங்கில நூல்களை நேரில் படிக்கும் தேவை முற்றிலும் நீங்கிவிடாது. தமிழ் நூல்களைப் படிப்பது மாணவரிடம் கல்வி ஆழத்தையும் அகலத்தையும் பெறும் ஆர்வத்தைத் தூண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயின், இப்பாட நூலுக்குத் துணையான நூல்களை மாணவர் ஆங்கில மூலத்திலும்

படிக்க விரும்புவர். இத்தகைய விரிவுப் படிப்புக்குத் துணை புரிவதற் காகவும், தற்போது நாம் பயிலும் தமிழ்க் கலைச் சொற்களோடு ஆங்கிலக் கலைச்சொற்கள் நன்கு வேரூன்றிப் பலருக்கு உடனே பொருள் தருவதன் காரணமாகவும், கலைச்சொற்கள் முதன்முதல் வரும்போது அவற்றின் ஆங்கிலச் சமச் சொல்லையும் பிறைக்கோடு களில் கொடுத்துள்ளோம். சில அரிய சொற்களின் பின்னர் ஆங்கி லச் சொற்கள் பலதடவை கொடுக்கப்பெற்றுள்ளன. இந்நூலின் இறுதியில் கருத்தகராதியொன்று கொடுக்கப் பெற்றுள்ளது.

மேற்கோள் ஆசிரியர்கள் பெயர்கள் பல ஆங்கிலத்திலும், பிற ஐரோப்பிய மொழிகளிலும் அமைந்துள்ளன. இப்பெயர்களைக் குறிப் பிடுவதில் ஆங்கில ஒலி யமைப்பிற்கும் தமிழ் ஒலியமைப்பிற்கும் உள்ள வேறுபாட்டைக் கவனிக்க வேண்டியதாயிற்று. எடுத்துக் காட்டாக 'ப' என்னும் தமிழ் எழுத்து B, F, P என்னும் மூன்று ஆங் கில எழுத்துக்களையும் குறிக்கும். இத்தகைய நிலைமை சில வேளை களில் பல ஐயம் திரிபுகளுக்குக் காரணமாகிறது. இக்குறையைப் போக்கக் கீழ்க்கண்ட குறியீட்டுமுறை கையாளப்பெற்றுள்ளது.

ஃ ப என்பது F ஐக் குறிக்கும்.

இனி ஆய்தத்தைத் தலைகீழாகப் பயன்படுத்திப் பின் தகுந்த வல்லெழுத்தை அமைத்து G, J, D, B என்னும் ஒலிகளைக் குறிப்பிட லாம்.

ஃ க = G, ஃ ட = D, ஃ ப = B.

J – ஐ ஃ ச என்று குறிப்பிடலாம். ஆனால் 'ஜ' வழக்கிலுள்ள தால் இக்குறியீடே பெரும்பாலும் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

H-ஐக் குறிக்க 'ஹ' வும் 'ஃ அ' வும்
பயன்படுத்தப் பெற்றுள்ளன.

சொல்லின் நடுவில் வல்லினம் இரட்டிப்பது வல்லொலி வருவ தைக் காட்டும். இங்குக் கையாளப் பெற்றுள்ள, முறைக்குப் பண் டைய இலக்கண முறையில் சான்று காட்ட முடியாதெனினும் குறிப் பிட்ட சில ஆங்கிலச் சொற்களையொட்டி ஐயம் திரிபை நீக்கவே அவற் றைப் பயன்படுத்துவதால், அறிஞர் இதனைப் பிழையாகக் கொள்ளார் என்று நம்புகிறோம்.

இறுதியாக, மூல ஆசிரியர் இந்தியச் சூழ்நிலையில் இப்பாடத்தை விளக்கியுள்ளார். இதற்காக அவர் இயம்பியுள்ள எடுக்துக்காட்டுக்கள் பெரும்பாலும் இந்தியா அனைத்திற்கும் பொருந்துவன. ஆயினும் சில இடங்களில் ஆசிரியர் கூறியுள்ள எடுத்துக்காட்டுக்கள் தமிழ் நாட்டுச் சூழ்நிலைக்கு முற்றிலும் பொருந்துவனவாக இல்லை. அத் தகைய இடங்களில் ஆசிரியர் கூறியுள்ளவற்றை அப்படியே மொழி பெயர்த்துக் கூறிவிட்டு நம் அண்டைய சூழ்நிலைக்குரியவேறுபாட்டை அடிக்குறிப்புக்களின்மூலம் காட்டியுள்ளாம் (எ - டு: பக்கம் 153 அடிக்குறிப்புக்கள் காண்க) இக்குறிப்புக்கள் மாணவரின் சிந்தனையையும், சூழ்நிலையோடு ஒட்டிப்படிக்கும் பழக்கத்தையும், வளர்க்கவே எழுதப் பெற்றுள்ளன. சமூக உளவியல் பாடத்தைத் தகுந்த சமூக உட்காட்சியுடனும், அண்மையிலும் சேய்மையிலும் உள்ள சுற்றுப்புறத் தொடர்புடனும், ஆராய்ச்சி ஆழத்துடனும், பரந்த மனப்பான்மையுடனும், தேசீய உணர்வுடனும் கற்றல் மாணவர் அறிவியல் முறையில் முன்னேற்றம் பெறுவதுடன் நாட்டின் பல பிரச்சினைகளையும் தீர்க்கத் துணைபுரிவர் என்பது திண்ணம்.

பொருளடக்கம்

பக்கம்

1. சமூக உளவியலின் தன்மையும் எல்லையும் 1—27

சமூக உளவியல்—அன்றும் இன்றும்; சமூக உளவியலின் முக்கியப் பிரச்சினைகள்; சமூக உளவியலின் தேவை; தனியாள் உளவியலும் சமூக உளவியலும் சமூகவியலும்; சமூக உளவியலும் சமூகவியலும்; பண்பாட்டு மனிதவியல்.

2. சமூக உளவியல் முறைகளும் தகவலும் 28—48

அறிவியல் சார்ந்த சமூக உளவியல்; சமூக உளவியல் முறைகள்; உற்றுநோக்கு; கள உற்றுநோக்கு; புற ஆய்வு உற்றுநோக்கு; சோதனைகளைப் பயன்படுத்தல்; சொற் புறத்தெறி சோதனை; சமூக உளவியல் தகவல்களும், இதனோடு தொடர்புள்ள துறைகளிலுள்ள கருத்துக்களும்; சமூகவியலும் பண்பாட்டு மனிதவியலும்.

3. குழு மனக்கருத்து 49—61

திறனாய்வு

4. சமூக நடத்தையின் தனியியல் அடிப்படைகள் 62—92

மனித நடத்தையின் உள்ளார்ந்த அடிப்படை; உயிரியத் தேவைகளும் கல்லாமல் அமையும்

நடத்தையும்; இயற்கையான செயற்போக்குகள்; பிற கல்லாத ஊக்கக் கூறுகள்; உயிரியல்—உளவியல் தேவைகள்; மனித நடத்தையைப்பற்றிய இயல்பியக் கோட்பாடுகள்; மக்டுகலின் ஃஆர்மிகக் கொள்கை; சமூகத்தில் இயல்பூக்கம்; ஃபிராய்டிய இயல்பூக்கக் கொள்கை; இயல்பூக்க உளவியல் திறனாய்வு; இயல்பூக்க உளவியற் நிறனாய்வின் மதிப்பீடு; நடத்தையின் உள்ளார்ந்த அடிப்படையைப்பற்றிய முதன்மையை மறுவிக்கொள்கை நடத்தையின், பெற்ற அடிப்படை; மனப்பான்மைகளும் பற்றுக்களும் ஊக்கிகள் ஆதல்; வாழ்க்கைக் கோள்களும் கவர்ச்சிகளும்; உரையாடற் சுருக்கம்.

5. சமூக இடைவினை 93—109

சமூகத் தூண்டுவிப்பு; சமூகத் தூண்டல்; சைகை; முகத்தின்மூலம் எழுச்சி வெளிப்பாடு; நிறுக்கை நிலை; பேச்சும் மொழியும்; முக அமைப்பு; நகை ஒரு சமூகத் தூண்டலாதல்; சமூக இடைவினை வகைகள்; ஒத்துழைப்பு; போட்டி; விட்டுக் கொடுத்தல்.

6. சமூக இடைவினை (தொடர்ச்சி) 110—136

சமூகத் துலங்கல்கள்; கருத்தேற்றமும் கருத்தேற்குமையும்; சமூக வாழ்க்கையில் கருத்தேற்குமையின் பங்கு; பின்பற்றல்; தெரியாமற் பின்பற்றல்; தெரிந்து பின்பற்றல்; பின்பற்றல்விதிகள்; இனி இவ்விதிகளை விவரிப்போம்; சமூக வாழ்க்கையில் பின்பற்றலின் பங்கு; ஒத்துணர்வு; ஒத்துணர்வின் சமூகச் சிறப்பு; நகை; ஒன்றுதல்; பொருள்வயப்படுதல்; புறத்தெறிதல்; இடப் பெயர்ச்சி; சமூக இடைவினையில் வசதியளிப்பும் தடையும்.

7. சமூக அமைப்பும் குழுக்களும் 137—161

குழுக்களும் அவற்றின் வகைகளும்; உளவியற் குழு; குழுக்களின் வகைகள்; உடன் செயல்புரி

குழுக்களும் இடைச் செயல்புரி குழுக்களும்; திறந்த மூடிய குழுக்கள்; முதனிலைக் குழுக்களும் வழிநிலைக் குழுக்களும்; அமைப்பு; அமைப்பின் நிறுவனக் கூறுகள்; அமைப்பின் காரணிகள்; குழு ஒற்றுமைக் காரணிகள்; கிராமச் சமுதாயம்-ஒரு முதனிலைக் குழு; வகுப்புக்கள்; சாதிகள்; சமூக அடுக்கமைப்பு; குழு அமைப்புக் குலைவு; திரட் சமூகம்.

8. தனியார் சமூகத்தன்மை பெறல் 162—184

சமூகத்தன்மை பெறும் முறை; சமூகத்தன்மை பெறுவதில் முதனிலைக் குழுக்களின் பங்கு; சமூகத் தன்மைப்படுத்தலின் காரணிகள்; புற முறை சாரா சமூகக் கட்டுப்பாட்டின்மூலம் சமூகத்தன்மை பெறல்; குழுவின் மொழியைக் கற்றுக்கொள்ளல்; திறமைகளைக் கற்றுக்கொள்ளல்; பாவனையும் சமூக அங்கம் வகிக்கக் கற்றலும்; தனியாளின் தன்னகத்தின் சமூகப் பண்பு; ஊக்கிகள் சமூகத்தன்மை பெறல்; மடை மாற்றம்; தட மாற்றம்; மனவெழுச்சி வெளிப்பாட்டைச் சமூகம் பாதித்தல்; புலக்காட்சியைச் சமூகம் பாதித்தல்.

9. ஆளுமை 185—228

ஆளுமை என்றால் என்ன? தனியாள் யார்? ஆளுமைக் கூறுகள்; இயற்கையாற்றலும், ஆற்றலும்; நுண்ணறிவு; இயங்காற்றல்; தன் வெளிப்பாடு; மேலோங்கல், தன்னம்பிக்கை பணிதல்; விரிவும் குவிவும்; மனப்பாங்கு; பண்புக் கூறுகள் மேலோங்கல்—பணிவு; மனப்பான்மைகள்; சமூகத்தன்மை; மரபுநிலை—சூழ்நிலையும், ஆளுமையும்; முக்கியமான விசை நிலைமைகள்; குமரப் பருவம்; திருமணமும் இல்வாழ்க்கையும்; தொழில்; உளநோயுடை ஆளுமையும் நெறி பிறழ்வும்; ஒழுக்கம்; பண்பாடும் ஆளுமையும்; ஆளுமையை ஆயும் முறைகள்; எழுச்சி முதிர்வையும் பொருத்

தப்பாட்டுப் பாகையையும் அளத்தல்; கட்டுப் படுத்திய நாட்குறிப்பு முறையைத் தன் தரமீட் டுக்குப் பயன்படுத்தல்; பிறர் தரமிடல்; புறத் தெறி நுண்முறைகள்; வாக்கியம் நிரப்புதல்; தன்—எண்ணம் நிரப்புதற் சோதனை.

10. சமூகக் கட்டுப்பாடு 229—259

சமூகக் கட்டுப்பாட்டைப்பற்றிய சமூக எதிர் பார்ப்பு; சமூகக் கட்டுப்பாட்டுச் செயலிகள்; சமூகக் கட்டுப்பாட்டு வகைகள்; சமூகக் கட்டுப் பாட்டுச்சாதனங்கள்; சமூக மரபுநிலை; நாட்டவர் வழிகள்; செந்நிலைகள்; அறநெறி; வழக்கங்களைப் பற்றிய உளவியல் ஆய்வு; வழக்கத்திற்கும் சட் டத்திற்கும் உள்ள தொடர்பு; வழக்கமும் காலக் கோலமும்; சமயம் இயற்றும் கட்டுப்பாடு; அரசும், சட்டத்தால் ஏற்படும் கட்டுப்பாடும்; காலக்கோலம், காலப்பாணி, காலக்கோட் டம்—நிறுவனப்படாத சமூகக் கட்டுப்பாடுகள்; காலக் கோலத்தின் ஊக்கிகள்.

11. சமூகக் கட்டுப்பாடு (தொடர்ச்சி) 260—277

கருத்துப் பரப்பலும் பொதுமக்கள் எண்ணமும்; கருத்துப் பரப்பல் வகைகள்; கருத்துப் பரப்பும் நுண்முறைகள்; மீள் பயில்வு; ஊக்கிகளைத் தூண்டல்; பொதுமக்களும், பொதுமக்கள் எண் ணமும்; பொதுமக்கள் எண்ணம் மாறுதல்.

12. தலைமை 278—293

புதுமுறைச் சார்ந்த தலைமை; உண்மைத் தலைமை; தலைவர் பல வகையர்; உண்மைத் தலைவர் புரியும் செயல்கள்; தலைவர்களும் சமூக மாறுதலும்; தலைவரின் வலிமைக்குரிய உளவியல் அடிப்படை; தலைமைப் பண்புகள்பற்றிய பிரச் சினை; தலைவர்கள் உருவாக்கும் குழுக் கவி நிலை.

13. மனப்பான்மையும் முற்சார்பும் 294—312

மனப்பான்மையை வகுத்தல்; மனப்பான்மைகளின் தோற்றுவாய்; முற்சார்புகள்; முற்சார்பால் ஏற்படும் தீங்குகள்; முற்சார்பின் காரணங்களும் அது வேரூன்றும் வகையும்; முற்சார்பை மாற்றலும் போக்குதலும்; மனப்பான்மைச் சோதனைகள்; மனப்பான்மையைச் சோதிப்பதற்குரிய சொல் முறைகள்; கட்டுரை முறை; பலவிற் றேர்தலும் அடித்துவிடற் சோதனையும்; மனப்பான்மையைச் சோதிக்கும் பிறமுறைகள் (தரமிடுதல், வரிசைப்படுத்தல், கணிநிரல்).

14. கேட்போர் அவையும் கும்பலும் 313—324

கேட்போரவை; அவை வகைகள்; கும்பலும் கும்பல் நடத்தையும்; கும்பல் நடத்தையைத் தொடங்குவித்தல்; குழு நடத்தையின் தரப் பிறழ்வு.

15. இனமும் தேசமும் 325—339

இனமும் இனப் பண்பும்; தேசத்தின் கூறுகள் யாவை? தேச மனம்: அது தோன்றுதற்குக் காரணிகள்; சமூக வாழ்க்கையில் எண்ணத்தின் பங்கு; தேசப் பண்பு உண்டா? தேசப் பண்பு என்றல் என்ன? தேசப் பண்பின் தீர்விகள்.

16. சமூக மாறுதலும் முன்னேற்றமும் 340—351

சமூக மாறுதலும் தனியாளின்பால் அதன் வன்மையும்; சமூக மாறுதலால் தனியாளின் மேல் ஏற்படும் விளைவுகள்; குடும்ப அமைப்பில் மாறுதல்கள்; சமயச் சீர்குலைவு; சமூகம் தொழின் மயப்படல்; சமூக முன்னேற்றமும் அதன் காரணங்களும்; ஃபக்கிளின் மனித—புவியியற் கொள்கை; சமூக முன்னேற்றத்தில் பொருளா

தாரக் கோட்பாடு; சமூக முன்னேற்றத்தைப் பற்றிய உளவியற் கோட்பாடு.

17. மனப்பான்மையையும் பொது எண்ணத்தையும் அளத்தல் 352—368

மனப்பான்மைக் கணி நிரல்கள்; பொகார்டஸ் சமூகத் தொலைவுச் சோதனை; வரிசைமுறைக் கணிநிரல்; சொல் முறைகளின் மதிப்பீடு; மனப் பான்மையை அறிதற்குரிய மறைமுக முறைகள்; புறத்தெறி முறை; மெய்—பொய்ச் சோதனை; பொதுமக்கள் எண்ணத்தை அளத்தல்; வாக் கெடுப்புக் கேள்விகள்.

1. சமூக உளவியலின் தன்மையும் எல்லையும்

(Nature and Scope of Social Psychology)

மனிதன் வாழும் சூழ்நிலையைப் பூதச் சூழ்நிலை, சமூகச் சூழ்நிலை என இருவகையாகப் பிரிக்கலாம். மனிதன் பொருட்களுக்கும் பிற மக்களுக்கும் நடுவே வாழ்கின்றான். ஆதலால் அவனுடைய மனவாழ்க்கை, நடத்தை, ஆளுமை ஆகியவற்றைச் சரிவரக் கற்பதற்கு அவனுடைய சமூகச் சூழ்நிலையின் தன்மையையும் அதில் அடங்கியுள்ளவற்றையும் அறியவேண்டும். மனிதனைச் சமூகத்தில் கண்டு ஆயும் நூல் சமூக உளவியல் ஆகும்.

தொட்டில் முதல் சுடுகாடு வரை மக்கள் சமூக நிலைமைகளுக்கு உட்படுகின்றனர். அவர்கள் சூழ்நிலையை உணர்ந்து, அதற்கேற்பத் துலங்கித் தம்மை மாற்றியமைத்துக் கொள்ளும் தன்மை வாய்ந்த உயிரிகள் (organisms) ஆவர். மனிதக் குழவியின் புதைந்த ஆற்றல்கள் பல. அவன் இப்படித்தான் வளர்வான் என்று திட்டமாகக் கூறுவதற்கில்லை. ஆனால் பிறந்தவுடன் அவன் கையாலாகாத பிராணியாகக் காட்சியளிக்கிறான். இவ்வாறே பல மாதங்கள் கிடக்கிறான். அவனுக்கு உணவூட்டவும், அனலூட்டவும், அவனைப் பாதுகாக்கவும், குளிப்பாட்டவும், பிறரது—பொதுவாகத் தாயின்—துணை தேவையாகிறது. பிறந்தவுடன் கருப்பக் கொடியை அறுத்து அவனைத் தாயினின்றும் பிரிப்பது உண்மைதான். ஆயினும் அவனுடைய முதனிலை உயிரியத் தேவைகள் (primary organic needs) அவனை நெடுங்காலம் தாயின் சார்பில் இருத்துகின்றன. இதன் விளைவாக, பொதுமைப் பட்ட சார்வு (belongingness) உடனிருக்கைத் (company) தேவைகள் தோன்றுகின்றன. மனிதனை இயற்கை ஒரு

சமூகப் பிராணியாக அமைத்துள்ளது என்று அரிஸ்டாட்டில் கூறியதும் இக்கருத்துப் பற்றியே போலும்.

பிறந்த பின் சில நாட்களாகத் தனியாள் (individual) தானும் தன் தாயும் கொண்டதோர் இருவர் குழுவில் உறுப்பினனாகிறான். ஆனால் அவனது சமூக உலகம் விரியும் தன்மையானது. அவன் வளர வளர அஃதும் விரிவடைகிறது. விரைவில் குடும்பத்திலுள்ள முதிர்ந்தோரும் இளையோரும் அதில் சேர்கிறார்கள். நாளடைவில், விளையாடும் தோழர், ஆசிரியர், இளங்குமர நண்பர், வாழ்க்கைத்துணைவி, குழந்தைகள், அண்டையர், மற்றும் அவனோடு தொடர்புள்ளவர் அனைவரும் இவ்வுலகில் இடம் பெறுகின்றனர். இவர்கள் அனைவருடனும் அவனுக்கு நேரடியான முகம்புகு தொடர்பு (face to face relationship) உண்டு.

இத்துடன் தனியாளுக்கு மறைமுகத் (indirect) தன்மை வாய்ந்த வேறு சில தொடர்புகளும் உள. இவற்றின் மூலம் அவன் இன்னும் விரிந்த உலகத்தோடு தொடர்பு கொள்கிறான். செய்தித்தாள், வானொலி, பேசும்படம் முதலியன இத்தொடர்பின் வாயில்கள். வரலாற்றின் வாயிலாக அவன் இறந்த காலத்துடன் தொடர்பு கொள்கிறான். இலக்கியமும் கலையும் துணையாகக் கொண்டு புதியதோர் உலகைப் படைத்துக் கொள்கிறான். அவனைச் சுற்றியுள்ள பொருட்களும், ஆட்களும், அவன் படிக்கும் இலக்கியமும் அவனைச் சூழ்நிலையின் வன்மைக்குட்படுத்துகின்றன; இவற்றைப் பண்பாட்டுக் கவிநிலை (climate of culture) என்கிறோம். அது காட்ட வொண்ணாதது, ஆனால் வன்மையுள்ளது. தனியாள் அதில் உளன் என்னும் மாத்திரையன். தனியாள் பிறப்பதற்கு முன்னமே பண்பாடு அவனைப் பாதிக்கிறது. குழந்தையின் மூதாதையர் பண்பாட்டு விதிகளின்படியே இணைந்தவர் ஆவர். இவ்வாறு குழந்தையின் மரபுநிலையையும் (heredity), இயற்கை ஆற்றல்களையும், தொடக்கச் சமூக ஏற்றத்தையும் (status), வாய்ப்புக்களையும் அமைப்பது பண்பாடே. பிறந்தபின் பண்பாட்டின் பதிலிகளாகிய (agents) பெற்றோரும், ஆசிரியரும் அவனது இயல்புத் துடிப்புக் குட்பட்ட நடத்தையை ஒழுங்குபடுத்தி, தொடக்க அறக் கொள்கைகளை அவனுக்குக் கற்பிக்கின்றனர். வளர்ச்சியின் பல்வேறு நிலைகளில் அவன் வகிக்க வேண்டிய பல்வேறு அங்கங்களுக்கு அவனை ஆயத்தப்படுத்துபவரும் இப்பண்பாட்டுப் பதிலிகளே.

தனியாள் சமூகத்தில் வாழ்பவன்; சமூகத்தில் வாழும் மற்றவர்களுடன் அவனுடைய வாழ்க்கை இணைக்கப் பட்டுள்ளது. ஆகையால் தனியாளின் வாழ்க்கை வரலாறு சமூக இடைவினையால் ஏற்படுவது. அவன் உலகில் தோன்றும்பொழுதே ஓர் உடலமைப்பும் ஓரளவு நுண்ணறிவு ஆற்றலும், மனப்பாங்குச் சார்பும் (temperamental bias) கொண்டுள்ளான். சமூக உலகில் அவன் நுழைந்தவுடனே தன் முதல் அழுகையால் பிறரது கவனத்தை ஈர்க்கிறான். வாழ்க்கையின் எல்லாப் பருவத்திலும் அவன் கவனப் பொருளாகவே அமைகிறான். அவன் பிறரைத் தூண்டு கிறான்; அதற்கேற்பப் பிறர் துலங்குகின்றனர். அப்படியே, பிறர் அவனைத் தூண்ட அவன் அதற்கேற்பத் துலங்கு கிறான். இப்பாதிப்பு (influence) ஒரு கொடுக்கல் வாங்கல் நிலையாகும். உள்ளத்தின் ஒவ்வொரு செயன்முறையும் (process) தனியாளின் ஒவ்வொரு செயலும் இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பால் பாதிக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, தனியாள் பொருட்களையும் ஆட்களையும் புலன் காணும்போது (perceive) அவன் தேர்கிறான்; விட்டுவிடு கிறான்; மையப்படுத்துகிறான்; சேர்க்கிறான். இத்தேர்தலுக் கும், சேர்த்தலுக்கும், மையப்படுத்தலுக்கும் பின்புலமாக (background) அவனுடைய கவர்ச்சிகள் (interests), மனப் பான்மைகள் (attitudes), தீர்ப்புத் தரங்கள் (standards of judgement) ஆகியவை அமைகின்றன. இவை எல்லாம் சமூ கச் சுற்றுப்புறத்தால் பாதிக்கப்படுபவை. தனியாள் செயல் ஆற்றுவதற்கு அடிப்படையாகின்ற நம்பிக்கைகளுட் பல, அவன் குழந்தைப் பருவத்திலேயே போதனை மூலமும், முன் மாதிரி கொண்டும் கற்றுக் கொண்டவை. அவன் தானாகவே பெறும் நம்பிக்கைகள்கூட எண்ணக் கவிநிலையின் (climate of opinion) நுண்ணிய வன்மைக் குட்பட்டனவேயாம். அவனது ஆய்வும் (reasoning) பெரும்பாலும் அவனது நம் பிக்கைகளின் ஏதீடுகளேயாம் (rationalization). ஃபிரான் சிஸ் ஃபேக்கன் (Francis Bacon) கூறிய 'இனவழி மயக்கங் கள்' (idols of the tribe) என்னும் திரிபுச் சிந்தனைகள் மனித னுடைய ஆய்வு முறையைப் பாதிக்கின்றன. அவன் தன் சொந்த எண்ணங்களென்று நினைப்பவையெல்லாம் அவனது 'தன்னகத்தால்' (self) தீர்மானிக்கப்படுகின்றன. ஆனால் 'தன்னகமே' சமூகத்தால் ஆவது. தனியாள் இப்பொழுது இருக்கும் நிலை, அவனது வளர்ப்பினாலும், அவன் பிறரை மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவதாலும் அமைவது. பிறர் அவனைப்பற்றி எண்ணும் எண்ணம் அவனுடைய தற்காட்சி

யைப் பாதிக்கிறது. பிறஆட்களே பெரும்பாலும் அவனுடைய எழுச்சிக்கும் பற்றுக்கும் உரிய பொருட்கள் ஆவர். அவன் தன்னில் அன்புகூர்ந்தால் பிறர்பாலும் அன்புகூர்கிருன்; தன்னே வெறுத்தால் பிறரையும் வெறுக்கிருன்.

வெளிப்படையான நடத்தையைப் பார்த்தால் கூட, சமூக வன்மைகளின் சுவடில்லாத செயலைக் காணல் அரிது. ஒருவன் எப்படிச் செயலாற்றப் பயிற்றுவிக்கப்படுகிருனே, எப்படிச் செயலாற்ற எதிர்பார்க்கப்படுகிருனே, எப்படிச் செயலாற்ற அனுமதிக்கப்படுகிருனே, அப்படியே செயலாற்றுகிருன். தனியாள் ஒரு குடும்பத்தின், ஒரு சமயக் குழுவின், ஒரு தேசத்தின் உறுப்பினனாக அமைவதன் விளைவு அவனைப் பின்தொடர்கிறது. பெரும்பாலும் சமூகத்தால் தீர்மானிக்கப்பட்ட வழியிலே அவன் நடக்கிருன். அவனது நடத்தை பொதுமக்களின் எண்ணத்தாலும் கருத்துப் பரப்பலாலும் கட்டுப்படுத்தப்படுவது.

சமூக உளவியலின் நோக்கமாவது, தனியாளின் ஆளுமையையும் நடத்தையையும் சமூகச் சூழ்நிலையமைப்பில் நிறுத்தி ஆய்வதாகும்.

சமூக உளவியல்-அன்றும் இன்றும்

சமூக உளவியல் என்ற பாடம் அண்மையில் தோன்றியது. ஆனல் மனிதச் சமூக வாழ்க்கையின் உட்பொருளைக் காணவும், சமூகப் புத்தமைப்பிற்கு உளவியல் உட்காட்சிகளைப் பயன்படுத்தவும் ஏற்பட்ட பல முயற்சிகளை மனிதச் சிந்தனையின் வரலாற்றில் பல காலங்களிலும் காணலாம். ஆனல் அண்மைக் காலம் வரை இவ் உட்காட்சிகள் தனித்த தோர் அறிவுத் தொகுதியாக அமையும் நிலையை எட்டவில்லை. தனியாள் உளவியல் பல நூற்ருண்டுகளாகத் தத்துவத்தின் குடைநிழலில் வதிந்ததுபோல், சமூகத்தில் மனிதனைப் (man-in-society) பற்றிய சர்ச்சையும் அறவியல், அரசியல், பொருளியல் பற்றிய பொதுச் சிந்தனைகளோடு ஒட்டியே வளர்ந்தது. சமூக உளவியலர் இன்று முறையாக ஆராய்ந்துவரும் பல பிரச்சினைகளைப் பண்டைய கிரேக்கர்கள் உணர்ந்திருந்தார்கள். மனித இயல்பின் தன்மை, உயிரியல் மரபுநிலை (biological heredity), இன யைச் சூழ் நிலை, பயிற்சி, வழக்கங்கள் (customs), வைத்துக் கோடல் (conventions) ஆகியவற்றின் வன்மை, இவையெல்லாம்

கிரேக்கச் சிந்தனையாளர் ஆராய்ந்த பிரச்சினைகள். பித்த கோரஸ் (Pythagorus) என்பவர் மக்கள் அனைவருக்கும் அடிப் படையான மனிதத் தன்மை ஒன்றே என்றும், அடிமைகள் (பெண்கள் உட்பட) அனைவரும் சமமானவர், சகோதரர் என்றும் எடுத்துக் கூறினர். (இத்தகைய கருதுகோட்களை (hypotheses) அடிப்படையாகக் கொண்டே பால் (sex) உளவியலிலும், இன உளவியலிலும் பல ஆராய்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன.) ஆயினும் வெறும் பொறிவயிற் (mechanical) சமநிலையைப் பித்தகோரஸ் வலியுறுத்த வில்லை. மனப்பாங்குகளிலும் கவர்ச்சிகளிலும் தனி வேற்று மைகள் உள்ளனவென்று அவர் கண்டார். ஒலிம்பிக் விளை யாட்டுக்களில் மூவகை மக்கள்-பார்ப்பவர்கள், பங்கெடுத்துக் கொள்பவர்கள், வியாபாரிகள்-கூடுவதை அவர் எடுத்துக் காட்டினர். * எம்ப்பிடாக்லிஸ் (Empedocles) மனிதனுடைய மரபுவழி உடல் அமைப்பிற்கும், அவனது பாங்குகளுக்கும் (dispositions) செயல்களுக்கும் உள்ள தொடர்பை விளக்கு கிறார். க்ஸேனோஃபானேசும் (Xenophanes) பிளாட்டோவும் (Plato) சமூக இடைவினையில் ஏற்படும் கருத்தேற்றம் (suggestion), பின்பற்றல் (imitation) ஆகிய சமூகத் துலங்கல்களையும், தனியாள் வளர்ச்சியில் அவற்றின் சிறப் பையும் எடுத்துக் கூறினர். ஹோமரின் தெய்வங்கள் குழந்தை களுக்குத் தீய முன்மாதிரிகளாக அமைந்து, சமூகத்தில் அறம் சீர்குலைவதற்குக் காரணமாகின்றனர் என்றும் அவர் கள் கூறினார்கள். இவ்வாறு, குழந்தைகளுக்கு நல்ல முன் மாதிரிகள் அமையவேண்டும் என்னும் கருத்தை இவ் அறிஞர்கள் வலியுறுத்தினர்கள்.

பண்டை ஃகிரீஸினுள் அண்டை நாடுகளினின்றும் விடு தலை பெற்ற அடிமைகள் நுழைந்தபின் பண்பாட்டுத் தொடர்புகள் பெருத்து, நாடுகளிடையேயுள்ள வேலிகள் தகரத் தொடங்கிய காலத்தில் சமரசக் குறிக்கோளும் மக் களாட்சி மனப்பான்மையும் தலைகாட்ட ஆரம்பித்தன. உரிமை (Right), சட்டம் (Law), வழக்கம் முதலியவற்றைப் பற்றி மக்கள் அதிகமாக உரையாடத் தொடங்கினர். வைத்துக்கோடல் வேறு, இயற்கை வேறு என்னும் கருத்துத் தோன்றியது. வைத்துக் கோடலின் வன்மையை ஹெர டோட்டஸ் (Herodotus) விளக்குகிறார். வழக்கங்கள் அனைத்

* குணங்களையும் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு வருணம் அமைக்கப்பட்டது என்னும் கருத்து பண்டைய இந்தியாவில் சாதியை நிலை நாட்டவும், சாதிக்கவும் பயன்பட்டமையை மூல நூலாசிரியர் இங்கு எடுத்துக் காட்டுகிறார்.

தையும் மக்கள் முன் நிறுத்தினால் அவர்கள் அவற்றுள் தாம் எதைக் கடைப்பிடித்துள்ளார்களோ, அதையே தேர்வார் கள் என்றும், வழக்கம் மக்களின் மன்னன் ஆகும் என்றும் அவர் கூறினர். ப்ரோட்டோகோரஸ் (Protogorus) விலங்குகளினின்றும் மக்களை உயர்த்துவது சட்டமேயென்று கூறினர். இக்கருத்தை இன்றைய சமூகவியலர் கூறுவ தாலல், மனித உயிரி சமூகத்தரங்களினாலேயே மனிதத் தன்மை பெறுகிறது என்பர். மனித இயல்பு நெகிழ்ச்சி (plasticity) யுள்ளதென்றும், கல்வியானது மரபினாலும் மாதிரியாலும் மக்களை மாற்றுகிறது என்றும் பிளாட்டோ கண்டார். மனித இயல்பு சமூகத்தால் ஆவது என்று அவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

புதிய தத்துவக் காலத்தில் மாலபிராங்க்கே (Malebranche, 1638-1715) கருத்தேற்றம், பின்பற்றல், சிந்தனைத் தரப்பகிர்வு (shared norms of thinking) முதலியவற்றைப் பற்றி எழுதினர். 'கடவுள் மனிதருக்குச் சில இயற்கையான ஒற்றுமைத் தன்மைகளைக் கொடுத்துள்ளார்; பார்த்துச் செய்யும் பாங்கு, ஒத்த வகையில் தீர்ப்பளிக்கும் ஆற்றல், ஒத்த உணர்ச்சி எய்தும் தன்மை, பிறருடைய நன்மதிப்பைப் பெறும் பாங்கு, இதன் விளைவாக உயர்ந்தோரின் பேச்சை யும் நடையையும் பின்பற்றல் ஆகியவை இத்தகைய பண்பு களாகும். லிவியாதான் (1651) என்ற நூலில் ஹாப்சும் (Hobbes) பொது அரசாட்சி (Civil Government) என்ற நூலில் ஜான் லாக்கும் ஒப்பந்தக் கோட்பாட்டை வகுத்துக் கூறினர். புராதன (primitive) மனிதன் பாதுகாப்புத் தேவைகளாலும் உடம்படுப்புத் (communication) தேவைகளாலும் உந்தப் பட்டுச் சமூகத்தை ஓர் ஒப்பந்தத்தால் அமைத்தான் என்று அவர்கள் கொண்டனர். இக்கோட்பாடு இன்று அறிஞரால் ஏற்கப்பெறுதது. தாமஸ் மூர் (Thomas Moore) என்பவர் யூட்டோப்பியா என்னும் நூலில் தனியாளைச் சமூகத்தன் மைப் படுத்துவதன் சிறப்பைப் பற்றிக் குறிப்பிட்டார். யூட் டோப்பியர் முற்றிலும் சமூகத் தன்மை அடைந்தவர்கள்; வெவ்வேறு சமூக நிலைமைகளில் நடந்து கொள்ளவேண்டிய வகையை நன்கு தெரிந்தவர்கள்; அவர்களைக் கட்டுப்படுத் தச் சட்டங்கள் அதிகமாகத் தேவைப்படா. ஒத்துணர்ச்சி யின் குழுப் பயனையும் மூர் எடுத்துக் கூறினர். பதினெட் டாம் நூற்றாண்டில் டேவிட் ஹியூம் (David Hume) என்பவர் சமூகச் செயன்முறைகளை, அறிவு வாயிலாகக் கட்டுப்படுத்த முடியும் என்றும், அறிவறிந்த ஒத்துழைப்பிற்கு

அடிப்படையாகுமாறு ஒத்துணர்வை வளர்க்கவேண்டும் என்றும் கூறினர்.

1856-இல் ஃபேய்ன் (Bain) என்பவர் மனித ஊக்குவித் தலை ஆராய்ந்தார். உடல் அனலினுல் ஏற்படும் இன்ப உணர்ச்சியே தாய்மை நடத்தைக்கு அடிப்படையென்றும், உற்றறி இன்பமே அன்பு அனைத்திற்கும் ஆதியும் அந்தமு மாகும் என்றும் அவர் கூறினர். தனியாளின் சமூகப் பண் பாட்டுச் சூழ்நிலையையும் தத்துவர்கள் ஆய்ந்தனர். பத் தொன்பதாம் நூற்றாண்டில் ஹெகல் (Hegel, 1770-1831), மார்க்ஸ் (Marx, 1818-1883), காம்ட்டே (Comte, 1798-1857) ஆகியோர் குழுவின் முதன்மையைப் பற்றியும், மனித இயல்பு, நம்பிக்கை, மனப்பான்மை ஆகியவற்றைத் தீர்மா னிப்பதில் சமூக அமைப்பின் பங்கைப் பற்றியும் எடுத்துக் கூறினர். இந்த நோக்கு நிலை (point of view) இன்றும் சமூக உளவியலரால் கொள்ளப்படுவ தொன்றாகும்.

ஃடார்வினின் (Darwin) படிமலர்ச்சிக் கோட்பாட்டிற்குப் (Theory of evolution) பின்னரே சமூக உளவியல் ஒரு தனித்த அறிவியற் பகுதியாக உருவாகத் தொடங்கியது. சூழ்நிலைக்கேற்ப அமைத்துக் கொள்ளுதல் (adaptation to environment) என்பது விலங்குப் படிமலர்ச்சியையும் நடத் தையையும் புரிந்து கொள்வதற்கு ஒரு முக்கியக் கருத்தா கியது. இன்னும் ஒரு படி முன்சென்று மனிதனையும் சமூ கத்தையும் இதே நோக்குடன் காண்பதற்கு இது ஏதுவானது. 1860-இல் ஸ்டெய்ன்தாலும் (Steinthal) லாசரசும் (Lazarus) நாட்டவர் உளவியல் (Folk Psychology) என்றதொரு சஞ்சி கையைத் தொடங்கினர். 'குழு மனம்' (Group Mind) என்ற தலைப்பில் பல்வேறு இனக் குழுக்களின் உளவியற் பண்பு களைப் படிப்பதே இவர்களது நோக்கம்.

சமூக உளவியலின் வளர்ச்சியில் 1890-க்கும் 1910-க்கும் இடையேயுள்ள காலமே மிகவும் முக்கியமானது. இக்காலத் தில்தான் உளவியலரும் சமூகவியலரும் சமூக உளவியலுக்கு அடிப்படை அமைத்தனர். டார்டே (Tarde) 1890-இல், பின்பற்றல் விதிகள் (Laws of Imitation) என்னும் நூலில், தனியாளின் வாழ்க்கையைச் சமூகச் சூழ்நிலை பாதிக்கும் விதத்தை வலியுறுத்தினர். லிபான் (Le Bon) 1892-இல் கும்பலில் காணப்படும் நடத்தையை விளக்க முயன்றார். கும்பலில் உள்ள மனிதன், சமூகத்தன்மை பெறுத நடத்தை

நிலைக்குத் திரும்புகிறான் என்று அவர் கூறினார். 1898-இல் ஃகி டிங்ஸ் (Giddings) சமூகத்திண்மையைத் (solidarity) தன்இன உணர்வு (consciousness of kind) என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்கினார். சார்லஸ் கூலீ (Charles Cooley) தனியாளின் அற, சமூக வளர்ச்சியில் குடும்பம், சமுதாயம் போன்ற முதனிலைக் குழுக்களின் பங்கை எடுத்துக் காட்டினார். பொதுமக்கள் எண்ணத்தையும் ஒரு செயல் முறையாகக் (Process) கருதி, அவர் உரையாடினார். ராஸ் (E. A. Ross) என்பார் 1908-இல், குழுக்களிடையே மொழியமைப்பிலும், சமயநடத்தையிலும், பண்பாட்டுக் கூறுகளிலும் காணப்படும் ஒப்புக்களைக் குறிப்பிட்டார். கும்பலில் காணப்படும் நடத்தையையும், வேலை நிறுத்தத்தையும், புரட்சிக் கூட்டங்களில் காணப்படும் தரம்பிறழ் (abnormal) செயல்களையும் அவர் எடுத்துக் காட்டினார். அதே ஆண்டில் வில்லியம் மக்டூகல் (William Mc Dougall) சமூக நடத்தையை விளக்குவதற்கு ஓர் இயல்பியக் (nativistic) கொள்கையைக் கூறினார். சமூக இடைவினைகள் அனைத்திற்கும் இயங்கியல் தீர்ப்பிகளாக (dynamic determinants) அமைபவை இயல்பூக்கங்களும் உள்ளத் தெழுச்சிகளுமே என்பது அவர் கருத்து.

மக்டூகல் மேலும் கூறுவதாவது: எண்ணங்களும் நம்பிக்கைகளும் மனிதத் தொடர்புகளை ஒழுங்குபடுத்தி, சமூக நிறுவனங்களின் (institutions) அமைப்பைத் தீர்மானிக்கின்றன. ஆகையால் அரசியற் கோட்பாட்டினர், பொருளியலர், சட்டவியலர், கல்வியியலர் அனைவருக்கும் 'மனிதச் செயற் பாட்டின் ஊற்றினைப்' (springs of human action) பற்றிய அறிவு தேவையாகிறது. மனித நடத்தையையும் விலங்கு நடத்தையையும் படிவளர்ச்சி (evolution) முறையில் ஒப்பிட்டுப் பெறும் கண்நிலை (empirical) உளவியலே சிறந்தது ஆகும். சூழ்நிலை தனியாளின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கிறது. முற்றிலும் தனித்த மனித உள்ளம் என்று ஒன்றைப் பிரித்தெடுக்க முடியாது. சமூகச் சூழ்நிலையில் உருவாக்கப் பட்டாலன்றி முதிர்ந்த மனித உள்ளம் அமைவதில்லை.

உளவியலில் மக்டூகலின் நோக்குநிலை பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டது. 1919 வரை அரசியலரும், கல்வியியலரும் இயல்பூக்கக் கருத்துடையவராக இருந்தனர். ஆயினும் அவரது உளவியல் போதிய அளவு காண்நிலையதாக

அமையவில்லையென்று சிலர் குறை கூறினர். பற்பல சமூகங்களில் இயற்றிய மனிதவியல் (anthropology) ஆராய்ச்சிகள் இந்த எதிர்ப்பை வலுப்படுத்தின. மக்டூகல் கூறிய சில இயல்பூக்கங்கள் எல்லாவிடத்தும் காணப்படுபவையல்ல என்று தெரிந்தது. பண்பாட்டுக் கூறுகள் தனியாளின் மரபுவழி உயிரியல் உந்தல்களைத் தடுக்கவும், விரிக்கவும், அவற்றுக்குத் துணைபுரியவும் வல்லவை என்று அறிஞர் கண்டனர்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக, சமூக உளவியல் புற ஆய்வு (experiment) அடிப்படையில் வளர்ச்சியடைந்து வருகிறது.

சமூக உளவியலின் முக்கியப் பிரச்சினைகள்

ஒருவகையாகப் பார்க்கப்போனால் சமூக உளவியலில் ஒன்று அல்லது இரண்டே பிரச்சினைகள்தாம் உண்டென்று கூறலாம். தனியாளை உருவாக்கும் செயன்முறையை, தனியாள் தனது குழு அல்லது குழுக்களில் உண்மையான உறுப்பினனாக அமையும் செயன்முறையை, அதாவது தனியாள் சமூகத் தன்மை பெறும் செயன்முறையைச் சமூக உளவியல் ஆய்கிறது எனலாம். இந்நிலையில் வைத்துப் பார்க்கும்போது சமூக உளவியலின் பொருள் சமூக இடைவினையே யாகும். இவ் இடைவினை பிறப்பில் தொடங்கி வாழ்க்கை முழுவதும் நடைபெறுகிறது.

ஆனால் இப்பிரச்சினையை விரிவாக ஆராய வேண்டுமானால், ஒன்றோடொன்று தொடர்புள்ள பல்வேறு பிரச்சினைகள் நம் கண்முன் தோன்றுகின்றன. இவற்றுட்பல, சமூக உளவியலின் முக்கியப் பிரச்சினைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. மனித உயிரியின் இயல்பு யாது? அவனைச் செயலாற்றத் தூண்டுவிக்கும் தேவைகள் யாவை? இத்தேவைகள் உயிரியல் தன்மை மட்டும் உடையனவா? அல்லது உளவியல் தன்மையும் வாய்ந்தனவா? மேற்கூறிய கேள்விகள் மிக முக்கியமானவை. ஏனெனில், தனியாள் வெற்றுத்தாளாகப் பிறப்பதில்லை. அவன் சில ஆற்றல்களும், திறன்களும் உடையவனாகவே உலகில் தோன்றுகிறான். தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துகிறான். திட்டமான ஆளுமை உருவாவதற்கு மூலப் பொருட்களாக அமைவன இந்நடத்தைப் பாங்குகளேயாம்.

தனியாட்களுக்கிடையே ஏற்படும் இடைவினை நல்ல தோர் ஆய்பொருளாகும். தனியாட்கள் ஒருவரையொருவர் பல்வேறு வகைகளில் தூண்டுகின்றனர். உடனிருக்கையா லும், முகவெளிப்பாடுகளாலும், சைகைகளாலும், சொற் களாலும், சிரிப்பாலும் இன்ன பிறவற்றாலும் ஒருவரை யொருவர் தூண்டுகின்றனர். மனிதன் சமூகத்தில் ஊடாடும் போது பல துலங்கல்களை இயற்றுகிறான். தனியாட்கள் கருத்தீடுகளை (suggestions) ஏற்றுக் கொள்கின்றனர்; தம் அருகில் உள்ளவர்களைப் பின்பற்றுகின்றனர்; ஒருவர் ஓர் உள்ளத்தெழுச்சியைத் தோற்றுவித்தால் அதைப் பார்ப்ப வரிடத்தும் அதே உள்ளத்தெழுச்சி உண்டாகிறது. இவ்வாறு கருத்துக்களும், உள்ளத்தெழுச்சிகளும், செயல்களும் கடத்தப்படுகின்றன. இவையும் இவைபோன்ற பிற செயன்முறைகளும் ஏற்படும் திட்டவட்டமான நிலைமைகளை ஆராயும் நூல் சமூக உளவியல் ஆகும்.

சமூக இடைவினையில் ஈடுபடுபவர் குழுக்களின் உறுப்பி னர் ஆவர். குழுக்களில் உறுப்பினராயிருப்பது அவரது புலக்காட்சிகளையும், உணர்ச்சிகளையும், எதிர் வினைகளையும் பாதிக்கிறது. அறிவும், செயலும், உணர்ச்சியும், சார்ந்த செயல்களுக்குப் புன்புலமாக மனப்பான்மைகளும் கவர்ச்சி களும் விழுமியங்களும் (values) அமைகின்றன. இவற்றைத் தீர்மானிப்பதற்குத் தனியாளின் அனுபவம் மட்டுமின்றிக் குழுவின் அனுபவமும் தேவைப்படுகிறது. ஆகையால் குழுக்களை வகைப்படுத்துவதும், அவற்றின் குறிப்பிடு மையை (significance) ஆய்வதும் சமூக உளவியல் ஆய் விற்கு இன்றியமையாதனவாம்.

இனி, சமூக மரபுநிலையை (social heredity) எடுத்துக் கொள்வோம். தலைமுறை தலைமுறையாகக் கடந்து வரும் வழக்கங்கள், அறப்பழக்கங்கள், குறிக்கோள்கள், நிறுவனங் கள் (institutions) ஆகிய அனைத்தும் இதனுள் அடங்கும். தனியாள் நடத்தையைத் திருப்புவதற்கும் ஒழுங்கு படுத்து வதற்கும் இப்பண்பாட்டுக் கூறு பெரிதும் உதவுகிறது. இது, பெற்றோர், ஆசிரியர், புத்தகங்கள் முதலிய வாயில்கள் கொண்டு அவனைக் கட்டுப்படுத்திச் சமூகத்தன்மைப் படுத்துகிறது. சமூகக் கட்டுப்பாடு (social control) என்ற பகுதி முதலில் சமூகவியலின் பாகமாகவே இருந்தது. ஆனால் இன்று சமூக உளவியலரோ சமூக வன்மைகளின் (pressures) பல வடிவங்களையும், அவற்றின் உளவியல் அடிப்படையை யும் ஆராய்கின்றனர்.

மேற்கூறிய பிரச்சினைகள் அனைத்தும் ஆளுமையுடன் நெருங்கிய தொடர்புடையவை. இயல்புத்தன்மையும் பண்பாடும் பிணைவதாலேயே ஆளுமை அமைகிறது. ஆதலால் ஆளுமைப் பிரச்சினை சமூக உளவியலின் மையமாக அமைகிறது என்று சொல்வதும் உண்டு. பண்பாடும் ஆளுமையும் எவ்வாறு தொடர்புற்றுள்ளன என்பதை ஆராய்வதற்காகச் சமூக உளவியலர் வெவ்வேறு பண்பாட்டுப் படிவங்களை (patterns of culture) ஆய்கின்றனர்.

அறிவியல் வளர்ச்சிகள் ஏற்படுவதாலும், பண்பாடுகள் கலப்பதாலும், சமூக நோக்கங்களைப் பற்றி மக்கள் அதிக மதிகமாக அறிந்து கொள்வதாலும் சமூக அமைப்பு மாறுபடுகிறது. இம்மாறுதல்களால் மனித ஆளுமையில் ஏற்படும் விளைவுகளைப் பற்றிச் சமூக உளவியல் ஆய்கிறது.

கடைசியாக, சமூக உளவியல் தனி (pure) உளவியலின் ஒரு பகுதிமட்டுமன்று; அது ஒரு நடைமுறை (applied) உளவியலாகும். சமூக நடத்தையை முற்கூறலும் (prediction) கட்டுப்படுத்தலும் அதன் நோக்கமாகும். சமூக வாழ்க்கையின் பல பகுதிகளிலுள்ள அன்றாட நடவடிக்கைகளுக்கு ஒரு சிறந்த கோட்பாட்டு அடிப்படை காணும் விருப்பத்தாலேயே இந்நூல் தோன்றியது. சமூகத்தின் இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றவும், மக்கள் எதிர்ப்படும் பிரச்சினைகளை விடுவிக்கவும், சமூகத் தீங்குகளைப் போக்கவும் உளவியலர் சமூக உளவியல் அறிவை நாடுகின்றனர். அதாவது சமூக வாழ்வைத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்த அவர்கள் விழைகின்றனர். இன்றைய சமூக உளவியற் பிரச்சினைகள் பல இவ்வாறே தோன்றியவை. எடுத்துக் காட்டாகச் சமயம் மக்களெல்லாரும் சமம் என்கிறது. நீதியும் அனைவரும் சமம் என்கிறது; ஆனால் நடத்தைக்கும் நம்பிக்கைக்கும் பெரும் மாறுபாடு காணப்படுகிறது. குழுக்களுக்கிடையே இயற்கையான வேற்றுமை உண்டு என்னும் கருத்தினைக் கொண்டு இத்தகைய மாறுபாடுகளை மக்கள் விளக்க முயன்றனர். ஆனால் சமூக உளவியலர் அறிவின் துணை கொண்டு இம்முரண்பாட்டைப் போக்க முற்படுகின்றனர். இயல்பாகவே குழுக்களுக்கிடையே வேற்றுமைகள் உளவா? அவை உயிரியல் தன்மையுடையனவா? இயல்பான உளவியல் வேற்றுமைகள் உளவா? இல்லையென்றால் வெள்ளையர், கருப்பர் என்ற முற்சார்பு (prejudice) ஏற்படுவது எதனால்? இவற்றை ஆராய்ந்ததிலிருந்து மனப்பான்மைத்

தோற்றம், மனப்பான்மை மாற்றம், முற்சார்பைக் குறைக்கும் வகை முதலிய துறைகளில் அறிவு முன்னேறியுள்ளது.

உலகப் போர்களாலும், சமூகத்தைத் தொழில் மயப் படுத்துவதாலும் புதிய பிரச்சினைகள் பல தோன்றியுள்ளன. வெவ்வேறு கருதுகோட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பல் வேறு மாற்று முறைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றியெல்லாம் இன்றைய சமூக உளவியல் ஆராய்கிறது. உளவியலர் குழு இயங்கியலையும் குழுமனத்திடத்தையும் அளவிடுகிறார்கள். மனப்பான்மையையும், ஆளுமையையும் பொதுமக்கள் எண்ணத்தையும் ஆராய்கிறார்கள்; ஏனெனில் அம்முடிபுகள் சமூக வாழ்வின் பல பகுதிகளிலும் பயன்படு மென நம்புகிறார்கள்.

சமூக உளவியலின் தேவை

சமூக உளவியல் நல்ல அடிப்படையில் அமைய வேண்டுமென்பதை மக்டூகல் முதன்முதலாக வற்புறுத்தி னார். நாளடைவில் இந்நூலின் தேவை அதிகரித்தது. மனி தன் தன்னையும் பிற மனிதரையும் புரிந்துகொள்ள வேண்டும்; அந்த அறிவை நடைமுறையில் பயன்படுத்த வேண்டு மென்று அறிஞர் விரும்பினர். மருத்துவ (clinical) உள வியலும் இத்தேவையை உணர உதவியுள்ளது. மருத்துவ உளவியலின் நோக்கம் திட்டமான நடைமுறைத் தன்மை யுடையது; தனியாட்களை நன்கு வழிநடத்தி அதன்மூலம் அவர்களது வாழ்க்கையைச் சீர்ப்படுத்தி, சமூகத் தொடர்பு களையும் முன்னேற்றுவதே அதன் நோக்கம். நல்ல மனிதர் களை உருவாக்குவதன் மூலம் சமூகம் சீர்ப்படுகிறது. தனித் தனி மருத்துவ நெறியினரிடையே வேற்றுமைகள் இருந்த போதிலும் அவர்கள் அனைவரும் இத்தகைய முன்னேற்ற வழிகளை வலியுறுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக, மனி தன் தன்னை அறியவேண்டும்; தன் உண்மை நிலையைப் பெறவேண்டும்; இதன்மூலம் உள்ளத்தின் வற்ருத ஊற் றைத் தன்னில் கண்டு, அதன்மூலம் பிறரைப்பற்றிய அன் பும் பொறையும் பெறவும், தனக்குள்ள மன்னுயிர்ப் பொறுப் புக்களை உணரவும் வேண்டும் என்று ஜங் (Jung) கூறி யுள்ளார்.[1]

பூதச் சூழ்நிலையைப் பற்றிய அறிவில் மனிதன் பெரிய முன்னேற்றம் கண்டுள்ளான். 'அறிவே ஆற்றல் ஆகும்'

என்ற ஃபேக்கனின் கூற்றை இன்றைய அறிவியல் உலகு மெய்ப்பித்துவிட்டது. மனிதன் இயற்கையின் வன்மைகளைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தவும் அறிந்துகொண்டான். பல புதுப்புனைவுகளின் (inventions) மூலம் மனிதனது வசதிகள் பெருகியுள்ளன; பொருளியல் வாழ்க்கை நலம் உயர்ந்துள்ளது. உயிரிய (organic) வாழ்க்கையைப் பற்றிய அறிவியற் சாதனைகளும் குறிப்பிடத்தக்கவை. மரபுநிலையியலின் (eugenics) துணைகொண்டு மனித இனத்தின் தரத்தை உயர்த்த முடியும். மனித வாழ்க்கையைப் பார்ப்போமானால் எழுத்தறிவு பெருகியுள்ளது. தனியாளின் பொது அறிவு முன்னேறியுள்ளது. மனிதனுடைய கவர்ச்சிகள் பெருகியுள்ளன. இன்றைய மனிதன் வேறுபட்ட பல செயல்களில் ஈடுபடுகிறான். ஆனால் இவ்வாறு அறிவு விரிவடைவதாலும், சாதனைகள் பெருகுவதாலும், செயல்துறைகள் மிகுவதாலும் மனிதனது இன்பம் போதிய அளவு பெருகுவதாகத் தெரியவில்லை. செல்வமும் வறுமையும் உடனுறைகின்றன. அறிவு பெருகியுள்ளது. ஆனால் அன்பும் உணர்வும் பெருகவில்லை. மனித ஆற்றல்களுக்குப் பல்வேறு வெளியீடுகள் கிடைத்துள்ளன; ஆனால் விழுமியங்களுக்குள் (Values) ஒருமைப்பாடு ஏற்படவில்லை. நாகரிகமடைந்த நாடுகளுக்குள்ளும் குழுக்களுக்கும் இடையே வேண்டத்தகாத ஒதுக்குதல் (segregation), ஒருவரையொருவர் ஐயுறல், முற்சார்பு (prejudice) முதலியவற்றைக் காண்கிறோம். தேசங்களுக்கிடையே போர்ப் புகைச்சலும், உண்மையாகவே பரந்த அழிவுப்போர் வந்து விடுமோ என்ற அச்சமும் உள்ளன. ஃபிராட் (C. D. Broad) கூறியபடி, நாம் பூதச் சூழ்நிலையையும் நமது வாழ்க்கை முறைகளையும் மாற்றிய போதிலும், நமது மனத்தைப் போதிய அளவு மாற்றிக்கொள்ளவில்லை.[2] அறிவியல் முன்னேற்றம் நம்மைத் தாண்டிச் சென்றுவிட்டது. நாகரிகம் காக்கப்படவேண்டுமானால், மனிதன் முதலில் தன்னை அறிந்து கொள்ளவேண்டும்; தன் சமூக, பொருளாதார, அறிவியல் வாழ்க்கைகளை அறிவுடன் திட்டமிடவேண்டும்.

மேற்கூறிய கருத்துக்களை அறிஞர் உணர்ந்துள்ளதால் தான் இன்று உளவியல் ஆய்வு முக்கிய இடம் பெற்றுள்ளது. உளவியலர், மனித சமுதாயத்தின் நலனை வளர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். மனிதன் தனித்து வாழ்வதை விடச் சமூகத்தில் வாழ்வதே அதிகமாதலால் மனித உளவியலில் பெரும்பகுதி

சமூக உளவியலாகிறது. இதனையே சமூக உளவியலர் ஆய்கின்றனர். "ஞானமார்க்கத்தை நாடுபவர்கள், நமக்கும் நமது பெண்டு பிள்ளைகளுக்கும் உள்ள தொடர்பு யாது? விசித்திரமான இவ்வாழ்க்கையில் யார் நமக்கு இறுதித் துணையாக வருவார்கள்? முதலிய கேள்விகளுக்கு விடை காணவேண்டும். மிகவேறுபட்ட வாழ்க்கைப் படிவத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டும்" என்று சங்கராச்சாரியார்* கூறியுள்ளார். சமூக உளவியல் இத்தகைய கேள்விகளையே சமயச் சார்பற்ற நிலையில் நின்று ஆராய்கிறது. 'தான்' அல்லது 'தன்னகம்' (self) என்பது யாது? தனியாள் 'தன்னகத்தைப்' பற்றி என்ன நினைக்கிறான்? உலகில் வாழும் உயிர்கள் யாவை? அவற்றிற்கிடையேயுள்ள தொடர்பு எத்தகையது? வாழ்க்கைச் செயல்முறைகளின் பல கூறுகள் யாவை? இத்தகைய பல கேள்விகளுக்கும் நாம் விடை காண வேண்டும்.

சமூக உளவியலறிவு இன்று வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் தேவைப்படுகிறது. கல்வி ஒரு சமூகச் செயன்முறையாகிறது. ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையேயும், மாணவ சமூகத்தினுள்ளும் உள்ள பல இடைவினைகள் இதில் அடங்கியுள்ளன. தொழிற் சமூக உளவியலில் மனிதத் தொடர்புகள் முக்கிய இடம் பெறுகின்றன. இன்றைய முதலாளி, தொழிலாளிகளை வெறும் தொழிலுறுப்புக்களாகக் கருதாமல் முழு ஆட்களாகக் கருதியாக வேண்டும். ஆலை அவர்களுக்குத் தேவையான வெளிச்சம், காற்று, ஓய்வு, இடைவேளை முதலிய உடலுறு வசதிகள் அளிப்பது மட்டும் போதாது. நல்ல சம்பளம் கொடுப்பதால் மட்டும் இன்பம் பிறவாது. தொழில்தரும் உள்நிறைவு, மேலாளருடன் கொண்டுள்ள தொடர்பு, தொழிற்சாலையுள் அவன் கொண்டாடும் சொந்த உறவு, தன் உடன் ஊழியருடன் அவன் கொண்டுள்ள தொடர்பு இவை யாவும் நன்கு அமைந்தால்தான் வேலை திறம்பட நடக்கும்.

தேசீய வாழ்க்கையில், ஆட்சியை நடத்துபவர்கள் இப்பொழுது உளவியல் நோக்கொடு சிந்திக்கின்றனர். அதிகார அரசு (Authoritarian state) தனியாட்களின் அற வளர்ச்சியைப் பாதித்து, ஆளுமை வளர்ச்சியைத் தடுக்

* Ka t'e Kanta, Kast'e putrah,
samsaroyamativa vicitrah;
kasya tvam vayayatah
tattvam cintaya tadidam bhratah.

கிறது என்று அவர்கள் கண்டுள்ளனர். சமூகத்திட்டங்கள் அமைப்பதிலும், அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் உளவியல் குறிப்பிடத்தக்க இடம் பெற்று வருகிறது. அரசியலில், 'உளவியல் நோக்கின் மூலம் மக்கள் அச்சத்திற்கும் கவலைக்கும் ஆளாவதைத் தடுக்க முடியும்; அரசு, மக்களுடைய இயற்கைத் தேவைகளையும் உணர்ச்சிகளையும் நன்கு உணர்ந்துகொண்டு, அத்துடன் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப் படுத்த முடியும்,' 'அரசு மக்களுக்குக் காப்புணர்ச்சி (security) அளித்து, மக்களைக் கட்டாயப் படுத்துவதற்குப் பதிலாகக் கருத்தை உணர்த்தி மக்களிடமிருந்து பெரிய தியாகங்களை எதிர் பார்க்கலாம்,' என்று டாக்டர் ஸ்ரீமாலி கூறியுள்ளார்.*

மேனாடுகளில் உளக்கோட்டம் அதிகமாகி வருகிறது. இன்றைய சமூக வாழ்வில் உள்ள போட்டியமைப்பும், சமயச் சார்பற்ற பண்பாட்டு விழுமியங்களுமே இதற்குக் காரணம் என்று பலர் ஆய்ந்து கூறியுள்ளனர். எடுத்துக் காட்டாக, அமெரிக்காவில் குழந்தையானது போட்டிச் சூழ்நிலையில் வளர்கிறது. உயர்ந்த பொருளியல் வாழ்க்கைத் தரமே ஒரு சாதாரண அமெரிக்கனின் விழுமியமாகும். இன்பத்தை நாடுதலும், தேவைகளைப் பெருக்குதலும் இதனால் விளைகின்றன. ஆனால் இத்தகைய குறிக்கோளில் மனமுறிவின் (frustration) வித்து அடங்கியுள்ளது. மேலும் போட்டியிடும் தனியாளின் தன்—மைய விழுமியத் தேட்டமும், அவனுடைய அடிப்படையான (பற்றுள்ளத்தை மிஞ்சிய) ஈதல் தேவைகளும் முரணுவதுண்டு. அமெரிக்கன் ஒருவன் போட்டிச் சூழ்நிலையில் வதிந்த போதிலும், மனிதப்பண்பு, சகோதர அன்பு, தாழ்மை முதலிய உயர் விழுமியங்களையும் நம்புகிறான். இது அமெரிக்கப் பண்பிலுள்ள முரண்பாடாகும் என்று பலர் கருதுகிறார்கள்.[2]

இந்திய மக்களாகிய நாமும் ஏமாந்திருத்தல் சாலாது. மேலை நாடுகள் செல்லும் வழியிலே நாமும் விரைந்து சென்று கொண்டிருக்கிறோம். நாடு வேகமாகத் தொழில்மயப்பட்டு வருகிறது. பண்டைய அற அமைப்புக்களும் ஒப்புரவு உணர்ச்சியும் குறைந்து வருகின்றன. தியான மார்க்கமும் பக்தி நெறியும் குறைந்து வருகின்றன. இவற்றிற்கு ஈடு செய்யக்கூடிய ஒருமைப்பாட்டுச் சக்திகள் எவையும்

* டாக்டர் கே. எல். சிரிமாலி. 1957. (இந்திய உளவியலர் மா நாட்டில் தொடக்க உரை.')

தோன்றவில்லை. வாழ்க்கை நிலைப்பேற்றிற்குத் துணைபுரியும் விழுமியங்களையும் தொழில்நுட்ப நாகரிகத்தின் பயன்களையும் இணைப்பதற்கான முயற்சிகளைப் பற்றி நாம் இப்பொழுதே சிந்திக்க வேண்டும். மனிதனைப்பற்றிய சமூக உளவியற் படிப்பு இம்முயற்சிக்குத் துணைபுரியக்கூடும். இதன்மூலம் இன்றைய இன்றியமையாப் பிரச்சினைகள் சிலவற்றிற்கு நாம் விடைகாணக் கூடும். ஆகவே சமூக உளவியல் பெரும்பாலும் நடைமுறை ஊக்கிகளாலே உந்தப்பட்டுள்ளது. டீப்ரௌன் (T. E. Brown) கூறியபடி, 'சமூக உளவியலின் எதிர்காலம் அதன் நடைமுறைப் பயனைப் பொறுத்தது'. சமூக உளவியலர், சமூகவியலருடன் கலந்து சமூகப் பிரச்சினைகளை அலசி, இன்றைய நிலையை ஆய்ந்தறிந்து, இந்நிலையை மாற்றக் கூடிய வசதிகளும், தொழில்நுட்பமும், அதிகாரமும் உடையவர்களுக்கு அறிவுரை வழங்கலாம்.[2]

தனியாள் உளவியலும் சமூக உளவியலும் சமூகவியலும்

தனியாள் உளவியல் அல்லது பொது உளவியல் மனிதனின் மனவாழ்க்கையையும் நடத்தையையும் பற்றி அறிவிக்கிறது; அவற்றைப் பற்றிய பொது விதிகளை வகுக்க முயல்கிறது. தனியாள் உளவியல் வெறும் மனிதனை மட்டும் நோக்குகிறது. அவனுடைய புலக்காட்சி, சிந்தனை, நம்பிக்கைகள், மனப்பான்மைகள், நடத்தை ஆகிய யாவும் சமூகப்பண்பாட்டு வாழ்க்கையால் அமைந்தபோதிலும், இந்த நோக்கத்தைத் தனியாள் உளவியலர் குறிப்பாக மனத்திற்கொள்வதில்லை. மனிதன் ஓர் உணர்ச்சியுள்ள உயிரி; அவன் தன்னைச் சுற்றியுள்ள தூண்டல்களுக்கேற்ப வினையிலும் எதிர்வினையிலும் ஈடுபடுகிறான் என்பதை மட்டும் அவர் நோக்குகிறார். அதாவது பொதுமைப்பட்ட மனிதனைப் பற்றிப் படிப்பது பொது உளவியல் ஆகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும், பிறக்கும் பொழுதே, நரம்புத்தொகுதியும், சுரப்பித் தொகுதியும், உடலமைப்பும் உண்டு; இவை பெரும்பாலும் மரபுநிலையினால் தீர்மானிக்கப் படுபவை. மனிதன் முதிர்ச்சியடையும்பொழுது அகத் தூண்டல்களுக்கும் புறத் தூண்டல்களுக்கும் ஏற்ப அவனுடைய எதிர்வினைகள் வேறுபடுகின்றன. சூழ்நிலையுடன் இடைவினையியற்றும் உயிரி என்ற முறையில் அவன் பொருட்களைக் கவனிக்கிறான், புலன் காண்கிறான். இதனால் அவனது புவியியற் சூழ்நிலையில் ஒரு பகுதி அவனுக்கு

உளவியல் சூழ்நிலையாகிறது. அவன் தன் முன்னைய அனுபவங்களை மனத்தில் இருத்திக் கொள்கிறான்; இதன் மூலம் கற்பனையும் உண்டாக ஏதுவாகிறது. மேலும், அவன் ஆய்கிறான்; பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்கிறான்; பல முரண்பட்ட வழிகளில் ஒன்றைத் தேர்கிறான்; முயற்றித் தீர்மானங்கள் (voluntary decisions) செய்கிறான். அவனுடைய உள்ள, உடல் நடத்தைகளைக் கவிந்து, அவற்றைத் திசைப்படுத்துவன அவனுடைய உயிரியல், உளவியல் தேவைகளேயாம்.

உண்மையில் மேற்கூறியவற்றுளெல்லாம் சமூகக் கூறு அடங்கியுள்ளது. தனியாள் சமூகத்திலேயே பிறந்து வளர்கிறான். சமூகத்தில் வாழ்க்கை முறைகளும், நம்பிக்கைகளும், விழுமியங்களும் அடங்கியுள்ளன. இவை தனியாளினுள் ஊடுருவிச் சென்று, அவனது தன்மையில் ஒரு பாகமாகின்றன. உருவெடுத்த மனிதத்தன்மை எல்லாப் பண்பாடுகளிலும் ஒரே மாதிரி அமைவதில்லை. ஒரே பண்பாட்டின் உட்கூறுகளுக்கிடையேயும், அது மாறுபடுவதைக் காண்கிறோம். ஒரே சமூகக் குழுவிலுள்ள இரண்டு தனியாட்கள் முற்றிலும் ஒத்த சமூக வன்மைகளுக்கு ஆளாவதில்லை. ஆனால் பொது உளவியல் சமூக உண்மைகளின் இடப் பேற்றிலிருந்து (context) தனியாளைப் பிரித்து ஆராய்கிறது. நரம்புத் தொகுதியும் சுரப்பித் தொகுதியும் மனித வாழ்க்கையையும் நடத்தையையும் உடனடியாக எப்படிப் பாதிக்கின்றன? பல்வேறு மனச் செயன்முறைகள் ஏற்படுவதற்கு வேண்டிய பொது நிலைமைகள் யாவை? தனியாளின் வாழ்க்கையில் அவற்றின் செயல் யாது? என்பவற்றையெல்லாம் அது ஆய்கிறது. மனவாழ்க்கையின் பல பகுதிகளும் எப்படி ஒன்றோடொன்று தொடர்புகொண்டு உயிரியல் ஒருமை பெறுகின்றன என்பதையும் அது ஆய்கிறது.

இதற்கு மாறுக, சமூக உளவியல் மனிதனைக் குழுக்களின் உறுப்பினன் என்ற முறையில் காண்கிறது. மனிதன் பிற மனிதரோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பு கொள்கிறான். பூதப் பொருட்கள் மட்டுமின்றி, பிற ஆட்களும் அவனுக்குத் தூண்டல்களாக அமைகின்றனர். புறப் பொருட்களை அவன் புலன்காண்பதிலும் ஒரு தேர்தல் முறை அடங்கியுள்ளது. இம்முறை, சமூகத்தால் பயிற்றுவிக்கப் பட்ட கவர்ச்சிகளால் பெரிதும் தீர்மானிக்கப்படுவது. புறப் பொருட்களுக்கும் ஆட்களுக்கும் அவன் அளிக்கும்

பொருண்மை, ஓரளவு அவனது தனி அனுபவத்தையும், ஓரளவு அவன் சமூகக் குழுக்களால் வளர்க்கப்பட்ட வகையையும் பொருத்தது. அவன் இப் புறப்பொருட்களுக்கும், ஆட்களுக்கும் ஏற்ப நடந்துகொள்ளும் வகையையும் முறையையும் தீர்மானிப்பது இப் பொருண்மையே யாகும். ஆகையால் மனிதனைச் சமூக உளவியல் முறையில் ஆய்வது அவசியமாகிறது.

மனிதனுடைய உள்ளார்ந்த, பெற்ற தேவைகளும் கவர்ச்சிகளும், உந்துகளும் அவனது கவனத்தை ஆளுகின்றன; அவனது புலன்காட்சியைப் பாதிக்கின்றன என்று பொது உளவியல் பொதுவாகக் கூறுகிறது. கற்றற் செயன் முறையை, முயன்று தவறிக் கற்றல், தனியாளின் இயல்பான எதிர்வினைகளை மாற்றியமைத்தல் என்றெல்லாம் விவரிக்கிறது. தனியாள் நாளடைவில் பல்வேறு புறப்பொருட்களுக்கும் ஆட்களுக்கும் ஏற்பத் துலங்கக் கற்றுக் கொள்கிறான் என்று கூறுகிறது. மனிதன் புறப்பொருட்களையும் ஆட்களையும் புலக்காட்சியின் மூலம் பிரித்தறிகிறான். முதலில் தோன்றுத பொருளை அவன் நாளடைவில் காண்கிறான். சிந்தனை வளர்ச்சியிலும் அவன் அளவையியல் நிலைக்கு முந்திய பாவனையில் தொடங்கிப் பின் தகவல்களை ஆய்ந்து அறியும் நிலையை அடைகிறான். சுருங்கக் கூறின், அவன் சரியான செயலைச் சரியான வழியில் செய்யவும், பொருட்களையும் ஆட்களையும் குறிப்பிட்ட வகையில் புலன்காணவும், தகுந்த வழியில் சிந்திக்கவும் தெரிந்து கொள்கிறான்.

ஆனால் சமூகச் சூழ்நிலை அவனுடைய உயிரியல் தேவைகளை நிறைவேற்றித் தேவைகளால் உந்தப்பட்ட அவனது நடத்தையைக் கட்டுப்படுத்தி, அவனுடைய உளவியல் தேவைகளை வெளிப்படுத்துகிறது. ஆகையால் அவனது சமூகச் சூழ்நிலையின் அமைப்பையும், அளவையும், அது எப்படித் தனியாளைப் பாதிக்கிறது என்பதையும் நாம் அறிய வேண்டும். இவ்வாறே சமூகத்தில் ஏற்படும் கல்வியானது பிற ஆட்களின் துணை, மாதிரி, போதனை ஆகியவற்றால் அமைவது. ஆதலால் கற்றலின் சமூகக் கூறினை நாம் ஆராய வேண்டும்.

பொது உளவியலையும் சமூக உளவியலையும் திட்டவட்டமாகப் பிரிக்க முடியாதென்பது மேற்கூறியவற்றிலிருந்து விளங்கும். இப்படிப் பிரிப்பது வசதிக்காக நாம் ஏற்படுத்திக்

கொள்ளும் வேலைப் பாகுபாடே யாகும். இரண்டு உளவியல் கள் இருக்க முடியாது. நமது நடத்தையில் ஒரு பகுதி பொருட்களுடனும் ஒரு பகுதி ஆட்களுடனும் தொடர்பு கொண்டது என்பது பொருந்தாது. மனிதன் இருக்கும் ஒவ் வொரு நிலைமையையும் சமூகக் கூறுகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கின்றன என்பதுதான் உண்மை. மக்டூகல் கூறுகிறபடி, 'முதிர்ந்த மனித உள்ளம் சமூகச் சூழ் நிலையின் வன்மையால் உருப்பெற்றதாகும்'. முற்றிலும் தனித்த தனியாள் மனது என்பது ஒரு வெற்றுநிலையே (abstraction) யாகும்; உண்மையில் அப்படி ஒன்றும் இல்லை. ஆகையால் பொது உளவியல் என்பது சமூகக் கூறு களைப் பற்றி ஒப்புமையாகக் குறைந்த கவனம் செலுத்திப் பெறப்படுவது. சமூக உளவியல் தனியாளின் சமூகச் சூழ் நிலையைப் பற்றிக் குறிப்பாகக் கவனம் செலுத்தி, அதன் துணையாகத் தனியாளின் சமூக நடத்தையை ஆய்வதாகும். கும்பல், சங்கம், பொதுமக்கள் போன்ற குழுக்களில் ஏற் படும் நடத்தைக்குரிய விதிகளை ஆய்வதும் அதன் நோக்க மாகும்.

மேற்கூறியவாறு ஆயுங்கால், சமூக உளவியல் தனியாள் உளவியற் கருத்துக்களைப் பயன்படுத்தியே தீரவேண்டும்.[6] தேவைகள், அறிதல், எழுச்சிகள், மனப்பான்மை முதலிய கருத்துக்கள் சமூக உளவியலுக்கு இன்றியமையாதவை. குழுக்களின் நடத்தையைப் பற்றிப் படிக்கும் பொழுதும், குழுவின் நடத்தை அதன் உறுப்பினராகிய தனியாட்களின் கோள்கள் (goals), அறிவு, எழுச்சி ஆகியவற்றைச் சார்ந்தது என்பதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும்.

வழக்கங்கள், செந்நிலைகள் (mores), நிறுவிய செய லாறுகள் (institutionalized practices) ஆகியவை அடங் கிய சமூக மரபுநிலையைப் பற்றிப் படிக்கும்போதும், மேற் கூறிய கருத்துக்கள் பொருந்தும். சமூக நிகழ் முறைகளைக் (phenomena) கூறுபடுத்தும் சமூகவியலருக்குச் சமூக மரபு நிலை (social heredity) என்னும் கருத்து பயன்படுகிறது. ஆனால் மேற்கூறிய உளவியற் கூறுகளின் துணையின்றி இச் சமூகக் கூறுகளை ஆய்தல் இயலாது. 'கோட்பாட்டு அள விலாவது பொது உளவியற் சொற்களால் விளக்க முடியாத சமூகக் கூறு ஒன்றும் கிடையாது' என்று தௌலஸ் (R. H. Thouless) கூறியுள்ளார்.[7]

சமூக உளவியலும் சமூகவியலும்

மனிதனையும் சமூகத்தையும் பிரிக்க முடியாது. மனிதன் எப்பொழுதும், குடும்பம், சிறுகுடி (clan), சமுதாயம் போன்ற குழுக்களிலேயே வாழ்ந்து வந்துள்ளான். மனிதன் ஒரு காலத்தில் சமூகநிலையின்றி வாழ்ந்து வந்தான். பின் அச்சத் தாலும் தற்காப்பினாலும் உந்தப்பட்டுச் சமூகத்தை அமைத் துக் கொண்டான் என்னும் சமூக ஒப்பந்தக் கோட்பாடு இன்று ஏற்றுக் கொள்ளப்படுவதன்று. மனிதவியல் உற்று நோக்குகள் இக்கோட்பாட்டை ஆதரிப்பதில்லை. அளவை யியல் (logic) முறைக்கும் இது பொருந்துவதன்று; ஏனெனில் ஒப்பந்தம் செய்ய வரும் மக்களிடையே இருவழி நம்பிக்கை யும் நல்லெண்ணமும் உண்டாதல் வேண்டும். சமூகத்திற்கு முந்திய மனிதனிடம் இப்பண்புகள் அமைதல் இயலாது.

மாரிஸ் ஃகின்ஸ்பெர்க் (Morris Ginsberg) சமூகவியலின் முக்கிய வேலைகளை எடுத்துக் கூறியுள்ளார். அவையாவன: நிறுவனங்களையும் பலவகையான மனிதச் சங்கங்களையும் அமைக்க உதவும் சமூகத் தொடர்புகளை வகைப்படுத்தல்; சமூக வாழ்க்கையின் வெவ்வேறு கூறுகளுக்குள்ளேயுள்ள இடைத்தொடர்பை உற்றுநோக்கல்; சமூக வாழ்க்கை நிலைத்து நிற்பதன் அடிப்படை யாதென்று உணர்ந்து கொள்ளல்; மனிதச் சங்கங்களில் பல்வேறு அமைப்புக்களில் ஏற்படும் மாறுதல்களைப் புரிந்து கொள்ளல்.[8] சமூகவியலின் இவ்வேலைகளைச் சுருக்கி விளக்கலாம்.

சமூகவியல், சமூகத்தை உண்மைத் தன்மையுடையது என்று கொண்டு ஆராய முற்படுகிறது. ஆனால் மனிதப் பெருஞ் சமூகம் பல உட்சமூகங்களையும் துணைக்குழுக்களையும் தன்னுள்ளே கொண்டது. இவைகள் ஒன்றையொன்று சார்ந்தவை. ஆனால் தனித்தன்மையும் உடையவை. ஒவ் வொரு உட்சமூகமும் சிக்கலான அமைப்பை உடையது. அதற்கென்றே ஒரு வரலாறும் தனிநடத்தைக் கோலமும் உண்டு. எடுத்துக் காட்டாக, நகரக் குழுக்களும் நாட்டுப் புறச் சமுதாயங்களும் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் தனித்த தோர் அமைப்பு உண்டு. பல்வேறு வகுப்புக்கள் (சாதிகள்) உள்ளன. ஒவ்வொரு குழுவும் இடைத்தொடர்புள்ள (inter-related) தனியாட்களின் தொகுதியாகும். இத்தனி யாட்களுக்குச் சமூகத்தில் அவரவர்க்கேற்ற இடமும் (position) ஏற்றமும் (status) உள்ளன. இவற்றிற்கேற்ப

அவர்களுக்கு உரிமைகளும், சலுகைகளும், கடமைகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, குழந்தைக்குத் தன் குடும்பத்தில் ஓர் இடம்உண்டு. இந்த இடம் குழந்தையின் பாலையும் பொறுத்தது. குமரப்பருவப் பையனுக்கும் பெண்ணுக்கும் அவரவர்க்குரிய இடம் உண்டு. முதிர்ந்தோருள்ளும், ஆணுக்கும், பெண்ணுக்கும் வெவ்வேறு இடம் உண்டு. இதனை விரிப்பிற் பெருகும். குடும்பத்திற்கு வெளியே, தொழிலுக்கேற்பச் சமூக இடங்களும் தொடர்புகளும் அமைவதைக் காணலாம். பூசாரி, மருத்துவர், வணிகர், ஆசிரியர் அனைவருக்கும் சமூகத்தில் உரிய இடம் உண்டு. இந்நோக்கு நிலையில் நின்று ஆயும் சமூகவியலர் சமூகத்தை 'ஓர் இடைத் தொடர்புடைய இட அமைப்பாகக், (a system of inter-related position) கருதுகின்றனர். இவ் அமைப்பு மிகவும் சிக்கலாக அமைந்துள்ளதால் இதனை ஓர் உயிரிக்கு ஒப்பிடுகின்றனர்.

இத்தொடர்புகளின் விளைவாகச் சில நடத்தைப் படிவங்கள் (behaviour patterns) அமைகின்றன. இவற்றுட் சில, எல்லாச் சமூகங்களிலும் காணப்படுவன. எங்கும், தனியாளுக்குக் குடும்பத்திலும் சமுதாயத்திலும் குறிப்பிட்ட இடம் உண்டு; சமய அமைப்பில் உறுப்பினராக அமையும் பங்கு உண்டு. ஒரு சமூக அமைப்பில் அரசியலமைப்பு இருந்தால் அதிலும் தனியாளுக்கு ஓர் இடம் உண்டு. இக் குழுக்களில் உறுப்பினராக அமைந்துள்ள காரணத்தால் தனியாட்கள் ஒருவருக்கொருவர் குறிப்பிட்ட விதத்தில் நடந்துகொள்கின்றனர். இக்கூட்ட நடத்தைப் படிவங்கள் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றன. ஒவ்வொரு தலைமுறையிலும் உள்ள உறுப்பினர் தொன்று தொட்டு வரும் முறைப்படியே நடந்து கொள்வதால் சமூகத்தின் குழுக்கள் அமைப்பில் தொடர்புள்ளவையாகின்றன.

ஒரு சமூகத்தின் உறுப்பினர்கள் வசிக்கும் இடங்களையும், அவ் இடங்களுக்கேற்ப அவர்கள் வகிக்கும் அங்கங்களையும் (roles) சமூகவியலர் ஆய்கின்றனர், இவ்அங்கங்களும் இடங்களும் ஒரு குழுவின் தற்காப்புக்கு எங்ஙனம் துணைபுரிகின்றன என்பதையும் அவர்கள் ஆராய்கின்றனர். ஆகவே, மனித சமூகங்கள், அவற்றின் அமைப்பு, நிறுவனங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை முறையாக ஆராய்வது சமூகவியல். உறுப்பிய (structure) முறையை எடுத்துக் கொண்டால், குடும்பம், சாதி, தொழில் சார்ந்த குழுக்கள்,

சமய அமைப்புக்கள், சங்கங்கள் முதலியவற்றின் தொகுதியே சமூகமாகும். இக்குழுக்களைப் பல்வேறு நோக்கு நிலைகளில் நின்று வகுக்கலாம். குடும்பம், அண்டையம் (neighbourhood), ஊர்ச்சமுதாயம் ஆகியவற்றிலுள்ள மக்களிடையே நெருங்கிய நேரடித் தொடர்பு உளதாகலின் இவற்றை முதனிலைக் (primary) குழுக்கள் என்றும், பிறவற்றை வழி நிலைக் (secondary) குழுக்கள் என்றும் கூறுகிறோம்.

சமூகத்தில் காணப்படும் சிக்கலான அமைப்புக்களையும் சமூகவியல் விளக்க முற்படுகிறது. இந்தியச் சமூகத்தைப் பற்றி ஆராயும் சமூக உளவியலருக்கு முக்கியமாகத் தோன்றும் சில கேள்விகளாவன: இந்தியச் சமூகத்தில் பெரும் இடம் வகிக்கும் சாதி முறை எப்படித் தோன்றியது? சாதி முறை பிளவினால் ஏற்பட்டதா? அல்லது ஒவ்வொரு சாதியும் கலவாத தனித்தனி இனக்குழுவா?[9] இந்தியச் சமூகத்தில் காணப்படும் குடும்பமுறை எத்தகையது? குடும்பத்தில் குழந்தை, குமரப்பருவத்தினர், தாய், தந்தை ஆகியோரின் இடம் யாது? முதலியன.

சமூக அமைப்பில் மாறுதல்களும் ஏற்படுகின்றன. சமூக வியலர் இம்மாறுதல்களுக்குக் காரணம் காண விழைகின்றனர். எடுத்துக்காட்டாக, குடும்பத்தின் அமைப்பும் அளவும் மாறிவிட்டன. தாய்வழி உரிமை (matrilineal system) இருந்த பல இடங்களில் அது மாறி, தந்தை வழி உரிமை (patrilineal system) இடம் பெற்றுள்ளது. வீட்டிலும் வெளியிலும் பெண்ணின் இடம் மாறியுள்ளது. சமுதாய வாழ்க்கைப் படி வமும் மாறியுள்ளது. அரசியல் அமைப்புக்களும் மாறி விட்டன. இவற்றையெல்லாம் விளக்குவதற்காகச் சமூக வியலர் கருதுகோள் (hypothesis) வகுக்கின்றனர். எடுத்துக்காட்டாக, சாதி முறை பிளவினால் ஏற்பட்டதன்று. இனக் குழுக்கள் சரிவரக் கலவாததாலேயே ஏற்பட்டதென்பது ஒரு கருதுகோள். குடும்பம் முதலில் தாயும் குழந்தைகளுமே கொண்டதாக அமைந்தது என்றும், இனவிருத்தியில் தந்தையின் பங்கு தெரிந்த பின்னர் தந்தைக்கும் குடும்பத்தில் இடம் கிடைத்தது என்றும் கருதிக்கொள்வர். முதலில் தாயும் அவளது சகோதரரும் குடும்பத்தில் ஆதிக்கம் கொண்டனர். தாய்வழி உரிமை உள்ள சமூகங்களில் இன்றும் இந்நிலையைக் காண்கிறோம். தந்தை தனது தந்தைமையை உணர்ந்ததும், குடும்பத்தில் தலைமை வகிக்கவும், குடும்பத்தின் பொருளாதார வாழ்க்கையில் பங்கு கொள்ளவும் முற்பட்டார் என்பர்.

இன்றைய சமூக அமைப்பில் ஏற்படும் மாறுதல்களை யும் சமூகவியலர் ஆய்கின்றனர். சமூகம் தொழில்மயப்படு வதன் விளைவாக, கிராமச் சமுதாயமும், கூட்டுக் குடும்ப (joint family) அமைப்பும் விரைவில் சிதைந்து வருகின்றன. உயர்ந்த வகுப்பிலும், உயர் இடைநிலை வகுப்பிலும் குடும் பப் பெண்களுக்குப் பொருளாதார விடுதலையும், இயங் குரிமையும் கிடைத்துள்ளன. ஆகையால் பெண்ணின் இடமும் தாய்வழி உரிமை முறையிலுள்ள தரங்களைப் போலவே மாறி வருகிறது.

சமூகவியலும், சமூக உளவியலும் சமூக நூற்களாத லால் அவற்றிற்கிடையே நெருங்கிய தொடர்பு உண்டு. மனித இயல்பையும் நடத்தையையும் ஏற்புடைய முறையில் விளக்க வேண்டுமானால் தனியாட்கள் வாழும் சமூகத்தின் அமைப்பு, பண்பாடு ஆகியவற்றை நாம் அறிதல் வேண் டும் என்று சமூக உளவியலர் உணர்ந்துள்ளனர். இவ் உணர்வின் பயனாகவே சமூக உளவியல் தோன்றியுள்ளது. 'மனித இயல்பு' என்று ஒருமையில் கூறுவதை விட மனித இயல்புகள் என்று கூறுவது பொருத்தமுடையது என்று அறிஞர் கூறுவர். தனியாள் வேற்றுமைகள் உள்ளார்ந்த உயிரியல் கூறுகளால் மட்டுமன்று, குழுப்பண்பாட்டின் மூலம் தனியாள் பெற்ற பயிற்சியாலும் ஆனவை என்பர்.

இது போலவே, சமூகவியலரும் உளவியல் உண்மை களைப் பயன் படுத்துகின்றனர். சமூக அமைப்புக்களிலும், நிறுவனங்களிலும், நடைமுறைகளிலும் நாம் காணும் நிலை யான தன்மை, உளவியற் கூறுகளாலும் ஓரளவு ஏற்படுவது என்பதை அவர்கள் உணர்வர். உடனிருக்கை (companion-ship), உடம்படுப்பு (communication), அறிமுகம் பெறல், (recognition) முதலிய தனியாளின் உயிரியல்-உளவியல் தேவைகளை நிறைவேற்றுவதாலேயே சமூக அமைப்பு நிலை பெறுகிறது. வாழ்க்கை நிலைகள் மாறும்போது, மனித னுடைய தேவைகளும் மாறுகின்றன. இதற்கேற்பச் சமூக அமைப்பும் மாறவேண்டியதிருக்கிறது. தட்ப வெப்பநிலை, புவியியல், பொருளாதார அரசியற் கூறுகள் அனைத்தும் முக்கியமானவைதாம். ஆயினும் தனியாட்களின் தேவை களைப் பாதிப்பதாலேயே அவை சமூகவியற் பயன் பெறு கின்றன.

இவ்விரண்டு அறிவுத் துறைகளும் ஒன்றையொன்று சார்ந்தவை என்பதால், சமூகவியல் சமூக உளவியலின் கிளைப்

பகுதி என்றே, சமூக உளவியல் சமூகவியலின் கிளைப்பகுதி என்றே கொள்ளக் கூடாது. சிறிது காலத்திற்குமுன் சில அறிஞர் இவ்வாறு கொண்டதும் உண்டு. அவர்கள் இவ்விரு துறைகளுக்கும் இடையேயுள்ள முக்கிய வேற்றுமைகளைக் கருதவில்லை. முழுமையான சமூகங்களைப் பற்றி ஆய்வது சமூகவியலுக்குப் பொருத்தமான நோக்கம். குழுவின் உறுப்பினராகிய தனியாட்கள் ஒருவரோடொருவர் இயற்றும் இடைவினையையும், அதனால் அவர்களிடத்து ஏற்படும் விளைவுகளையும் ஆய்வது சமூக உளவியல். சமூகவியலைப் பொருள் திரள்வையும், தன்மையையும் பற்றிப் படிக்கும் பொறி ஆய்வியலுக்கு (mechanics) ஒப்பிடலாம். ஏனெனில் சமூகக் குழு அமைப்பு, அவற்றிற்கு மையமான விழுமியங்கள், அவற்றின் விளைவாகத் தோன்றும் பல்வேறு நிறுவன நடத்தைகள் ஆகியவற்றைச் சமூகவியல் ஆய்கிறது. சமூக உளவியலையோ, அணுத்திரள்களையும் அவற்றின் இடைவினைகளையும் ஆராயும் அணுத்திரட் பூதவியலுக்கு (molecular physics) ஒப்பிடலாம். ஏனெனில் சமூக உளவியல், சமூகப் பின்புலத்தில் தனியாளின் செயலை எப்பொழுதும் காண்கிறது. தனியாள் சமூகத்தில் ஏற்கும் இடமும், அவருக்குச் சமூகம் அளிக்கும் அங்கமும், அவரிடத்துச் சமூகம் எதிர்பார்ப்பதையும், அவரது தேவைகளைச் சமூகம் நிறைவேற்றுகிறதா என்பதையும் இந்நூல் ஆராய்கிறது. பண்பாட்டுக் கூறுகளும் சமூக வன்மைகளும் தனியாளைத் தாக்குகின்றன. ஆழ்ந்து நோக்கினால், குழுவின் நடத்தைகள் அனைத்தும், முன்னும் இன்றுமுள்ள தனியாட்களுக்கிடையேயுள்ள இடைவினையின் விளைவுகளேயாம்.

ஆகவே, சமூகவியலும் சமூக உளவியலும், சமூக வாழ்க்கையை வெவ்வேறு நிலைகளில் நின்று ஆராய்கின்றன. இவற்றிற்கிடையேயுள்ள தொடர்பைச் சரிவரப் புரிந்து கொண்ட சமூகவியலர் சமூகத்தை ஓர் உயிரியாகக் கொள்ளும் உருவகத்தை முழு உண்மையாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், உளவியலின் நிழலில் படாமல் செல்ல வேண்டும் என்று முயலமாட்டார்கள்.

பண்பாட்டு மனிதவியல் (Cultural anthropology)

பண்பாட்டு மனிதவியல் சமூகவியலின் ஓர் உட்பிரிவுத் துறை. சமூக உளவியல் இத்துறையுடனும் அதிகத் தொடர்பு கொண்டுள்ளது. மார்கரெட் மீட் (Margaret

Mead), ரூத் ஃபெனிடிக்ட் (Ruth Benedict), மாலினோஸ்கி (Malinowsky) முதலிய பல அறிஞர் பண்பாட்டுப் படிவங்களைப் பற்றிக் கண்ட உண்மைகள் சமூக உளவியலருக்கு வேண்டிய தகவல்களாவதுடன் அவரது அறிவியற் காட்சிகளையும் சீர்ப்படுத்தியுள்ளன. நாட்டவர் வழி (folkways), அற உணர்வு, வழக்கங்கள், குடும்பச் சமூகத் தொடர்புகள், பிள்ளைவளர்ப்பு முறைகள், சமய நம்பிக்கைகள், வணங்கும் பொருட்கள், ஆளுமை, புராதனப் பண்பாட்டுப் பண்புகள்- இத்தகையவற்றைப் பண்பாட்டு மனிதவியலர் ஆராய்கின்றனர். மனிதத் தன்மை உலகில் எங்கணும் ஒன்று போல் அமைவதில்லை என்றும், பொதுவான மனித ஊக்கிகள் என்று நாம் சொல்லக்கூடியவை, பசி, தாகம், பாலுறக்கம், பாதுகாப்பை நாடல் முதலிய சிலவேயாம் என்றும் அவர்கள் கண்டுள்ளனர்.

ஆகவே, சமூக உளவியற் பிரச்சினைகளைச் சரிவர உருப்படுத்துவதற்குப் (formulate) பண்பாட்டு மனிதவியல் ஆய்வுகள் துணைபுரிந்துள்ளன. எடுத்துக்காட்டாக, தனது பண்பாட்டைத் தவிர வேறொன்றையும் அறியாத மனிதன், மனிதத் தன்மை என்று பொதுவான ஒன்று உண்டென்னும் முற்கோளுடன் ஆராய்ச்சியைத் தொடங்குவான். அவன் மனிதத் தன்மையென்று எண்ணுவதெல்லாம் தனது பண்பாட்டுப் படிவத்தில் தான் கண்டதையே அடிப்படையாகக் கொண்டது. ஆனால் பல்வேறு பண்பாடுகளைப் பற்றி அறிந்தவர்கள், மனிதத் தன்மை எங்கும் ஒன்றுதானா? மனிதத் தன்மையில் பல்வேறு படிவங்கள் உண்டானால் அவற்றோடு உடனியையும் (correlation) கூறுகள் யாவை? என்றெல்லாம் பிரச்சினையை உருப்படுத்துவர்.

உயிரியற் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும், மரபுநிலையையும் சூழ்நிலையையும், துண்டாகப் பிரிக்க இயலாது என்பதைச் சமூக உளவியலர் இன்று வற்புறுத்துகின்றனர். மக்களுடைய உயிரியல் முற்பாங்குகள் (predispositions) வெற்று நிலையில் வெளியிடப்படுவதில்லை. புலக்காட்சி முறையும் இத்தகையதே. தனியாளின் புலக்காட்சியில் எத்தகைய பொருட்களும் ஆட்களும் முன்நிற்பார்கள் என்பதைப் பண்பாட்டுப் பயிற்சியே தீர்மானிக்கிறது. ஆறு, செடி, விலங்கு, குழந்தை, பையன், பெண் ஆகியவற்றை வெவ்வேறு வகையில் புலன்காண்டல் உண்டு. வெவ்வேறு சமூகங்களில் இவற்றின் பொருண்மை

வெவ்வேறுகும். இவற்றைப் புலன்காண்பதற்குத் துணைபுரி யும் நம்பிக்கைகள், கூட்டு நோக்கங்கள், சமூகக் குறிக் கோள்கள் ஆகிய பண்பாட்டுக் கண்ணுடிகள் சமூகங் களுக்கிடையே வேறுபடுபவை.

சமூக உளவியல் துறையின் வரம்புகளையும் பண்பாட்டு ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. சமூக உளவியற் புற ஆய்வுகளின் பயனும் பொருண்மையும் அவ் ஆய்வுகள் இயற்றப்பட்ட அந்தப் பண்பாட்டை ஒட்டியே அமையும் என்று மர்ஃபியும் நியூக்கோம்பும் (Murphy and Newcomb) கூறியுள்ளனர்.[10] தாம் வகுக்கும் விதிகளைப் பற்றிப் பொதுமை பாராட்டும் உளவியலர் மிகுந்த எச்சரிப்புடன் இருக்க வேண்டும்.

ஆனல், சமூக உளவியல் வேறு; பண்பாட்டு மனித வியல் வேறு. பண்பாட்டு மனிதவியல் பெரிய குழுக்களைப் பற்றியது; சமூக உளவியல் தனியாட்களையும் அவர்களது சமூக இடைவினையையும் பற்றியது. ஏனெனில் உயிரிகளா கிய தனியாட்கள்தாம் சமூகப் பண்பாட்டுச் சூழ்நிலைக்கேற் பத் தம்மைப் பொருத்திக் கொள்கின்றனர்; தம் பண்பாட்டை உற்று நோக்கித் தன்வயப்படுத்தி (assimilate) வாழ்கின்ற னர்; வேறு வாழ்க்கை முறைகளைப் பின்பற்றத் தயங்கு கின்றனர்; பண்பாட்டு வழிகளைத் தம் மாதிரியின் மூலமும், போதனையின் மூலமும் பின் தலைமுறையினருக்குக் கடத்து கின்றனர்.

(References).

1. T. Jacobi, The Psychology of C. G. Jung, p. 172.

2. C. D. Broad, Mind and Its place in Nature, p. 664.

3. Karen Horney, The Neurotic Personality of our Times.

4. J. F. Brown, Psychology and the Social Order.

5. Krech and Crutchfiled, Theory and Problem & Social Psychology, P. 12.

6. A. J. Laird and Knight in Current Trends in British Social Psychology.

7. R. H. Thouless, Introduction to Psychology & Religion. p. 144.

8. Morros Ginsbers, Sociology. P. 70.

9. Mrs. Iravati Karve in Society in India.

10. Murphy, Murphy and Newcomb, Experimental Social Psychology. P. 7.

2. சமூக உளவியல் முறைகளும் தகவலும்

(Methods and data of Social Psychology)

அறிவியல் சார்ந்த சமூக உளவியல்:

மனித நடத்தையின் சமூகக் கூறுகளைப் பற்றி அறிஞர் பண்டைக் காலத்திலும், இற்றைக் காலத்திலும் சிந்தித்து வந்துள்ளனர் என்று முன்னரே பார்த்தோம். மனித இடை வினையில் அவர்கள் கண்டதை விவரித்தார்கள். அவர்களது விளக்கத்தில் ஒத்துணர்வு, பின்பற்றல், கருத்தேற்குமை (suggestibility) முதலிய அகவயக் கூறுகளின் பங்கையும், பண்பாட்டுக் கவிநிலை, சமூக நிறுவனங்கள், இளமையப் பயிற்சி முதலிய சூழ்நிலைக் கூறுகளின் பங்கையும் காண லாம். அவர்கள் மனிதனது சமூக நடத்தையைப் பற்றிக் கொண்டுள்ள அக்கரைக்கு இரண்டு காரணங்கள் உள. ஒன்று ஆராய்வுக்கம்; மற்றொன்று, எல்லா நிகழ்முறைகளை யும் விளக்குவது போலவே, மனித சமூக நடத்தையையும் காரண காரிய முறையில் விளக்க முடியும் என்ற அறிவியல் உறுதி. சமூகச் செயல்முறைகளை அறிவினைற் கட்டுப்படுத்த லாம் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருந்ததென்பது அவர்கள் கூறிய சமூகப்புனராக்க ஆலோசனைகளிலிருந்து தெரிகிறது.

ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரை இருந்த சமூக உளவியலெல்லாம் அரசியல், பொருளாதாரம், சட்டவியல் முதலிய பிற சமூக நூல்களுக்குத் துணையாகத் தோன்றியதேயாகும். அது தன்னைக் கொண்டே ஒரு தனி நூலாகவில்லை. அதற்கென்று தெளிவாக வரையறுக்கப் பட்ட பிரச்சினைகளும், ஆராய்ச்சி முறைகளும் அமைய

வில்லை. சமூக உளவியற் பொதுமைகள் பல கூறப்பட்டன. ஆனால் அவை அறிவியல் நோக்கினால் ஆகவில்லை; வெறும் பொது உணர்வையே (common sense) அவை அடிப்படை யாகக் கொண்டவை. இப்பொதுமைகளுக்கு ஆதாரமாகக் கூறப்பட்ட உற்று நோக்குகளெல்லாம், தற்செயலாக அமைந்தவையேயன்றி, முறையாகத் திட்டமிட்டவையல்ல. ஆகையால், இருபதாம் நூற்றாண்டிற்கு முந்திய சமூக உள வியல் பெரும்பாலும் இருந்த இடத்திலிருந்தே கற்பனை செய்த அறிவியற்கு முற்பட்ட (Pre-scientific) கோட்பாடு களேயாகும். அது காண்நிலைத் (empirical) தன்மையற்றது. கற்பித நிலைத்தன்மையது (speculative)

அறிவியல் சார்ந்த சமூக உளவியல், குறிப்பான கேள்வி களை வரையறுக்கவும், திட்டவட்டமான கருதுகோள்களை வகுக்கவும், இவற்றை மெய்ப்பிப்பதற்காகப் பொருத்தமான உண்மைகளையெல்லாம் உற்றுநோக்கவும் முற்படுகிறது. ஐயுறற்குரிய முற்கோள்களையும், தகவல்களை விளக்குவதற் குத் தேவையற்ற கருதுகோள்களையும் அது விலக்குகிறது. அறிவியலர் என்ற முறையில் உளவியலர் தமது கற்பனையை அறிவினாலும், தகவல்களாலும் கட்டுப்படுத்துகின்றனர். அவர்கள் திருத்தத் தரங்களை (standards of accuracy) ஏற் படுத்திக் கொள்கின்றனர். நிகழ்முறைகளின் சிக்கல்கள் அவர்களுக்குத் தெரியும். ஆகையால் அளவுக்கு மிஞ்சிய எளிய விடைகளை அவர்கள் சந்தேகிக்கின்றனர். மனிதனது சமூக நடத்தையைத் தீர்மானிக்கும் காரணிகள் அனைத்தை யும் காண்பதற்காக அவர்கள் மனிதனது சமூக நடத்தை யைப் போதிய அளவு கூறுபடுக்கின்றனர். ஆகவே, அறிவியல் சார்ந்த சமூக உளவியல் முறையின் சாரமாவது, இருக்கை நிலை(positive) அறிவியலின் முறையேயாம். அதா வது உற்று நோக்கு (observation), கூறுபடுப்பு (analysis), கருதிக்கோடல் (hypothesizing), மெய்ப்பித்தல், (verifica-tion), ஒன்றிய கோட்பாட்டை உருவாக்கல், விதி விளக்கம் (deduction), காண்நிலை முறையில் சரிபார்த்தல் ஆகியவை யாம்.

'மனிதன் ஒரே அகண்ட ஆன்மாவின் தோற்றக் கூருகியதால்தான் கூடி வாழும் தன்மை படைத்துள் ளான்,' 'போர்கள் ஒரு தெய்வீகத் திட்டத்தினாலேயே ஏற் படுகின்றன,' 'ஆளுமையிலும், சாதனைகளிலும் காணப்படும் வேற்றுமைகளெல்லாம் முற்பிறப்புச் செயல்களின் விளைவு

கள், இவைபோன்ற கூற்றுக்களெல்லாம் வெறும் கற்பிதங் களேயாம் (speculations). ஆனால் சமூக உளவியலர் தாமே உற்று நோக்கக் கூடிய உண்மைகளையும் காண்நிலையில் மெய்ப்பிக்கக் கூடிய பொதுமைகளையுமே வரவேற்கிறார். பூதப்புற (metaphysical) விளக்கங்களை விட இயற்கை யுடன் இயைந்த (naturalistic) விளக்கங்களையே அவர் விரும்புகிறார். கூட்டு வாழ்க்கைக்கு ஆன்ம ஒருமைப்பாட் டையும், போருக்குத் தெய்வத் திட்டத்தையும், மனித வேற்றுமைகளுக்கு ஊழையும் காரணமாகக் கற்பித்துக் கொள்ளலாம். ஆனால் பூதவியலர் சமயக்கருது கோள் களை எவ்வாறு கருதுகிறாரோ, அவ்வாறே சமூக உளவிய லரும் மேற்கூறியவற்றைக் கருதுகிறார். லாப்லாஸின் (Laplace) பூதவியலில் கடவுளைப் பற்றிக் கூறவில்லையென்று நெப்போலியன் எடுத்துக் காட்டியபோது, அவர், 'கடவுட் கருதுகோள் எனது ஆய்வுக்குத் தேவையில்லை,' என்று கூறினராம். தேவையில்லாத, மெய்ப்பிக்க முடியாத கருது கோட்களைச் சமூக உளவியலர் உருவாக்குவதில்லை. இது அறிவியல் மனப்பான்மையின் ஒரு கூறு. ஆனால் ஃபிரௌன் (T. F. Brown) கூறியதுபோல், 'அறிவியலும், சமயமும் பெரிதும் முரண்பட்டவை. அவைகள் நண்பர் களல்ல, எதிரிகளேயாம்.' 1 என்ற அந்த அளவுக்கு நாம் போக வேண்டியதில்லை. ஒரு சமயத்தத்துவர் அறிவியற் கண்டுபிடிப்புகளையெல்லாம் ஒத்துக் கொண்டு 'கடவுள் இப்படிச் செயலாற்றுகிறார்' என்று சொல்லக்கூடும். சமய நோக்கு அறிவியல் ஆய்வுகளைத் தடை செய்யாதவரையில் அறிவியலரும் அதனை எதிர்க்கத் தேவையில்லை. ஃபெர்க்லீ (Berkeley) என்ற அயர்லாந்து நாட்டுத்தத்துவர் 'இயற்கை முழுவதும் கடவுளின் மொழி, இயற்கையின் விதிகள் அதன் இலக்கணம் என்று கூறினர். அறிவியலர் இதற்கு மறு மொழியாக, 'கடவுளின் மொழிக்கு ஓர் இலக்கணம் உண் டென்றும், அது இயற்கை விதிகளுக்கேற்ப இயங்குகிற தென்றும் நீர் கூறுவது எனக்குப் போதுமானது; ஏனென் றால் அந்த விதிகளைக் கண்டுபிடிக்கவே நான் முயலுகி றேன்' என்று கூறக்கூடும்.

முன்னைப் பிறவிகள் உண்மையாக இருக்கலாம்; ஊழ்வினை வந்து உருத்தலாம்; ஆனால் இவை எப்படி வேலை செய்கின்றன என்று நமக்குத் திட்டமாகத் தெரியாது. இன்றைச் சமூக உளவியலர் இக்கருத்துக்களை எச்ச வகை யீடுகளாகக் (Residual categories) கருதுகிறார். இவற்றை

விடக் காண்நிலையிலுள்ள கருதுகோட்கள் இல்லாவிட்டால் தான் அவர் இவற்றை அணுகுவார். எடுத்துக்காட்டாக, ஏற்றம், வாய்ப்புக்கள், இன்பம், ஆளுமை முதலியவற்றில் காணப்படும் வேற்றுமைகளைத் தனியாளின் கற்பித முற் பிறப்புக்களைக் கொண்டு விளக்குவதற்குப் பதிலாக, இவ் வேற்றுமைகள் ஒருவருடைய முன்னோராலும், உடன் வாழ்வோராலும் தீர்மானிக்கப்பட்டிருக்க முடியுமா என்பதை முதலில் ஆராய்வார்.

பொது உணர்வு சார்ந்த உவிளயலுக்கும், அறிவியல் சார்ந்த உளவியலுக்கும் உள்ள வேற்றுமையைப் பின்வரு மாறு விளக்கலாம். மாருத, முழு முதலான மனித இயல் பைப் பொது உணர்வு நம்புகிறது. போட்டி, ஒத்துழைப்பு, மேலோங்கல் (dominarce) வன்செயல் (aggression), பின் பற்றல் முதலியவற்றையெல்லாம் சாதாரண மனிதன் காணும்போது 'இது மனித இயல்பு' என்று கூறுகிறுன். ஆனல் எல்லாச்சமூகங்களிலும், போட்டியும், மேலோங் கலும், சண்டையும், காணப்படுவதில்லை; எல்லோரும் எல்லோரையும் எல்லாவற்றிலும் பின்பற்றுவதில்லை என்று அறிவியல் முறை பயின்ற உளவியலர் காண்கிருர். ஆகை யால், அவர் இந்நடத்தைப் படிவங்களைக் கூறுபடுத்தி இவற்றுடன் இயைந்த காரணிகளைக் காண முற்படுகிருர். சாதாரண மனிதனுக்கு, தலைவர்களிடம் இயல்பாகவே சில சிறந்த பண்புகள் உண்டு என்பது வெள்ளிடை மலைபோல் தோன்றும். ஆனல் தலைவர்கள் தலைமைப் பதவியை நிலையாக வகிப்பதில்லை. ஆதலால் சமூக உளவியலர் இந்நிகழ் முறையை இன்னும் நுட்பமாக ஆய்கின்றனர். சாதாரண மனிதர் 'தேசீயப் பண்புகள்' என்று சில உண் டென்று நம்புகிருர். சமூக உளவியலர் இதையும் கூறிட்டுக் காண்கிருர். ஏனென்றல் இந்தியப் பண்பு அல்லது ரஷியப் பண்பு என்று நாம் இன்று சொல்வது, நாடு தொழில்மயமா வதற்கு முன் இல்வாறு அமையவில்லை. சுருங்கச் சொன் னல், அனைத்தையும் போர்த்தும் விளக்கங்களைப் பற்றி அறிவியல்சார்ந்த சமூக உளவியல் ஐயுறுகிறது. அது கற்பிதத்தை விட மெய்ப்பித்தலை நாடுகின்றது. அதன் உற்றுநோக்கு தற்செயலான (casual) தன்று, முறையானது.

சமூக உளவியல் முறைகள் :

ஒரு வகையாகப் பார்த்தால் சமூக உளவியல் தகவல் களுக்கு ஒரே தோற்றுவாய் (Source) உண்டு. அதுதான்

உற்றுநோக்கு. இது எல்லா இருக்கைநிலை அறிவியலுக்கும் பொருந்தும். ஆனால் உளவியலரின் பிரச்சினைகள் மனித நடத்தையைப் பற்றியவை. அது உடலியற் கூறுகளாலும், மனக்கூறுகளாலும் ஆவது. பூதப் பொருட்களைப் போல அவற்றைக் காண முடியாது. ஆகையால் உளவியலர் வேறு வகையான உற்றுநோக்குகளைத் தனித்தோ, இணைத்தோ பயன்படுத்துகிறார். ஒரே வகையான உற்று நோக்கலையே முற்றிலும் நம்புவது கொண்டது விடாமை யென்னும் குற்றமாகும். அகக்காட்சி அறிக்கைகள் (introspective reports) மனித நடத்தையின் உள்நிலையைக் காட்டுவ தால் அவற்றை உளவியலர் வரவேற்கிறார். தனியாட்களையும் குழுக்களையும் உற்று நோக்குவது அவருக்கு இரண்டாவது தகவல் தோற்றுவாயாகும். இவ்விரண்டு மூலங்களையும் அவர் கூடியவரை கட்டுப்படுத்திய நிலைகள் கொண்டு அகழ்கின்றார். இத்தகைய புற ஆய்வு முறைகளில் பல சிறப்புக்கள் உள்ளன. சரியான தகவல்களை விரைவில் சேர்ப்பதற்காக அவர் தகுந்த நுண்முறைகளைக் (techniques) கையாளுகிறார். ஆகவே, சமூக உளவியலரின் முறைகள் பலவாகின்றன. அகக்காட்சி: (Introspection) சிலவகைப் பிரச்சினைகளுக்கு அகக்காட்சித் தகவல்கள் அவசியம். மக்களுடைய மனப்பான்மைகளும், தீர்ப்புக்களும், ஏன் குழுவின் வைத்துக்கோடலுக்கும் (conventions) தரங்களுக்கும் (norms) ஏற்ப அமைகின்றன என்று ஆராய்வேண்டுமானால், இந்நிகழ் முறையில் அடங்கியுள்ள உளவியற் கூறுகளை அறியவேண்டும். தனியாட்களை அணுகி, அவர்கள் மனத்தில் இருப்பதைப் பற்றி வினவுதல் இதற்கு ஏற்ற முறையாகும். காலக்கோலத்தைப் (fashions) பற்றி ஆராய்ச்சி செய்யவிரும்பும் உளவியலர், இக்கோலங்களைத் தொடங்குவிப்பவரையும், இவற்றைப் பின்பற்றுபவரையும் கண்டு பேசி அவர்கள் ஏன் அவ்வாறு செய்கிறார்கள் என்று அறியவேண்டும். புற ஆய்வுகளின் முடிவுகளை விளக்குவதற்கும் அகக்காட்சி முறை பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஓர் ஆய்வில், குழுநிலைமை தனியாட்களின் உள்ள, உடற் செயல்களை எவ்வாறு பாதிக்கிறது என்று ஆராய்ந்தனர். ஒத்த வேலையைச் செய்யும் மற்றவர்கள் அருகில் இருப்பது ஒருவாறு செயலைத் தூண்டுவிக்கின்றது என்று கண்டறிந்தனர். இந்தக் கண்டுபிடிப்புகளை விளக்குவதற்கு அவ்வேலையாட்களையே தம் அகம் கண்டு (introspect), உடன் செயலாற்றும் (Co-acting) குழு நிலைமையில் தம் மனநிலையை விவரிக்கச் செய்யவேண்டும்.

நடைமுறை (applied) உளவியலிலும் அகக்காட்சியைத் தவிர்க்க முடியாது. தன்தரமிடு (self-rating) முறையில் ஆளுமையை அளக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். இந்த முறையில் ஆட்படுநர் (subject) பல கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். தன்னுள்ளம் காண்பதாலேயே அவர் இவற்றிற்குப் பதிலளிக்க முடியும்.

மனப்பான்மையை அளவிடுதல் இன்றைய சமூக உளவியலர் பெரிதும் ஈடுபடும் ஒரு துறையாகும். அவர்களுட் பலர் தன்தரமிடு முறை இதற்கு மிகவும் ஏற்றதென்று வெளிப்படையாக வாதாடியுள்ளனர். 'மக்கள் எவ்வுணர்ச்சியுடையர், எதை அனுபவிக்கின்றனர், அவர்களுடைய எழுச்சிகளும் ஊக்கிகளும் யாவை, அவர்கள் ஏன் குறிப்பிட்டவாறு செயல்புரிகின்றனர் என்று நாம் அறிய வேண்டுமானால் அவர்களிடமே கேட்டுவிட்டால் என்ன?' என்று ஆல்ப்போர்ட்டு கூறியுள்ளார். இவ்வாறே, கிரெச்சும் க்ரட்ச்ஃபீல்டும் (Krech and Crutchfield) "ஒரு தனியாளின் உடனடி அனுபவமானது மனப்பான்மைகளையும் எண்ணங்களையும் தரமிடுவதற்கு நிகரற்றதோர் சிறந்த தகவல் மூலமாகும். இத்தகவல்கள், அனுபவிக்கும் தனியாளுக்கு நேரடியாகக் கிடைப்பவையாகும்" 2 என்று கூறியுள்ளார்.

தகவல்களைச் சேர்ப்பதற்கு அகக்காட்சி முறை பயன்படுவதென்றாலும், அதன் குறைகளையும் நாம் மனத்திற் கொள்ள வேண்டும். நமக்குத் தெரியாத மொழி பேசும் புராதன மனிதரிடமும், தம்மை ஆயும் ஆற்றல் பெறுத சிறு குழந்தைகளிடமும் இருந்து அகக்காட்சி அறிக்கை பெற முடியாது. இவர்களைப் பற்றிச் சமூக உளவியல் தகவல்களைப் பெறுவதற்கு நாம் உற்று நோக்கையும் உய்த்தலையும் (inferences) தான் சார வேண்டியதிருக்கிறது. தம்மை ஆய்ந்து கூறக்கூடிய முதிர்ந்தோரிடத்தும் அகக்காட்சி முறையைக் கையாளுவதில் சில குறைகள் உள்ளன. தனது ஊக்கங்கள், உணர்ச்சிகள், சிந்தனைகள் அனைத்தையும் எல்லோரும் வெளியிட விரும்பமாட்டார்கள். அப்படி வெளியிடும் தகவல்களிலும் ஏதீடுகள் (rationalisation) இருக்கலாம். உண்மையான ஊக்கங்கள் ஆட்படுநருக்கே தெரியாத நனவிலிக் கூறுகளாக இருக்கலாம்.

உற்றுநோக்கு (Observation)

மனத்தின் உள்ளே நடக்கும் நாடகத்தைப் பார்ப்பதற்கும், தனியாளின் நடத்தையின் ஊக்கக் காரணத்தைத் தெரிந்து கொள்வதற்கும், அகவய (subjective) உடனிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதற்கும் அகக்காட்சி அறிக்கைகள் பயன்படுகின்றன. ஆனால் தனியாளின் நடத்தையை நாம் நேராக உற்றுநோக்க முடியும். நடத்தையையும், அதனுடன் தொடர்புற்ற சுற்றுநிலையையும் (circumstances) ஆராய, உற்றுநோக்குதல் முக்கியமான தகவல்மூலம் ஆகும். இதன்மூலம் பிரச்சினைகள் தோன்றுகின்றன; கருதுகோட்கள் உருவாகின்றன. கருதுகோட்கள் போதியவையா என்றும் உற்று நோக்கைக் கொண்டே முடிவு செய்யலாம். இதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருவோம். மனிதர்கள் எவ்வகைச் செயல்கள் புரிகின்றனர், எப்படி அவற்றைச் செய்கின்றனர், ஏன் அவ்வாறு செய்கின்றனர் என்று சமூக உளவியலர் காண விரும்புகின்றனர். இவற்றுள் எவை? எப்படி? என்ற கேள்விகளுக்கு உற்றுநோக்கின் மூலம் தான் விடைகாணமுடியும். ஏன் இந்நடத்தை நிகழ்கிறது என்பதைத் தீர்ப்பதற்கு உளவியலர் கருதுகோட்கள் உருவாக்குகின்றனர். (எ...டு), இயல்புப் போக்குகள் நடத்தையைத் தீர்மானிக்கின்றன என்று கொள்ளலாம்; அல்லது மனிதன் பிறந்தபின் நடத்தைப் படிவங்களைக் கற்றுக்கொள்கிறான் என்று கருதலாம்.

இப்படி எதிரான கருதுகோட்களைச் சோதித்தறிய, பண்பாட்டில் வேறுபடும் குழுக்களை உற்று நோக்குவது தான் ஒரே முறை. பின்பற்றலுக்கு ஏதுவான நிபந்தனைகளைக் காண்பதும் உற்றுநோக்கு மூலமாகவே. இன்னும், குழந்தைக்குத் தன்னைப் பற்றிய எண்ணம் எப்படி வளர்கிறது, தனியாள் நடத்தைக்கும், சமூக நடத்தைக்கும் உரிய தரங்களை அது எப்படி உட்கொள்கின்றது என்றெல்லாம் அறிந்து கொள்ள வேண்டுமானால், குழந்தையின் விளையாட்டுக்களையும் செயல்களையும் உற்றுநோக்குவதோடு பெரியோர்களின் செயல்களையும் காணவேண்டும். தனியாள் பெற்றுள்ள மனித இயல்புக்கு அவர் பிற மனிதரோடு கொண்டுள்ள தொடர்பு எந்த அளவுக்குப் பொறுப்பாகும்? தனியாளின் ஆளுமை அவருக்கு இயல்பாய் அமைந்த கூறுகளின் விளைவா, அல்லது சூழ்நிலைக் கூறுகள் அதைப் பாதிக்கின்றனவா? கூட்டு (collective) நடத்தையின்

பல்வேறு படிவங்கள் யாவை? அவற்றின் கூறுகள் யாவை? இவை போன்ற கேள்விகளுக்கு உற்றுநோக்கின் துணையில்லாமல் போதிய விடை காணமுடியாது.

கள உற்றுநோக்கு (Field Observation)

உற்று நோக்கு இரு வகைப்படும். தமது பிரச்சினைக்கு ஏற்பவும், ஆயப்படும் தொகுதியின் தன்மைக்கு ஏற்பவும் அவற்றுள் ஒன்றையோ இரண்டையோ சமூக உளவியலர் தேர்ந்து கொள்கிறார். அவையாவன: கள உற்று நோக்கு, புற ஆய்வு உற்றுநோக்கு என்பனவாம்.

சாதாரண, இயற்கையான நிலைகளில் ஒன்றை உற்று நோக்குவது கள உற்றுநோக்காகும். சிலவகைப் பிரச்சினைகளுக்கு இது மிகவும் பொருத்தமானது: 'மனித நடத்தை உலகம் முழுவதும் எந்த அளவுக்கு ஒரு தன்மையானது? குழந்தையின் சமூக வளர்ச்சிப் பருவங்கள் யாவை? அதன் கூறுகள் யாவை? பண்பாடு எந்த அளவுக்கு ஆளுமையைத் தீர்மானிக்கிறது? கூட்டு நடத்தையின் பல்வேறு படிவங்கள் யாவை? அதன் கூறுகள் யாவை? தொழில் மயப் பரப்புகளிலும், நகரப்புறங்களிலும் கிராமப் பகுதிகளிலும் வாழும் மக்கள் தம் ஓய்வு நேரத்தை எப்படிச் செலவழிக்கின்றனர்? தலைமை எதனால் ஏற்படுகிறது? தலைமை வகைகளும், அவற்றின் விளைவுகளும் யாவை? குடும்பக் கட்டுப்பாடு, மதுவிலக்கு முதலிய திட்டங்களைப் பற்றி வேறுபட்ட சமயத்தினர், வகுப்பினர், நாட்டினர், ராஜ்யத்தினர், என்ன நினைக்கின்றனர்? இத்தகைய கேள்விகளுக்குக் களமுறை உற்றுநோக்கு மிகப் பயன்படுகிறது.

தமது பிரச்சினைக்கேற்ற நுண்முறைகளைச் சமூக உளவியலர் வகுத்துக்கொள்கிறார்கள். பேட்டி (interview) வினைநிரல் (questionnaire), வாழ்க்கை வரலாறு திரட்டல் முதலியன இத்தகைய நுண்முறைகள். சமூக உளவியலர் முன்னரே திட்டமிட்டுத் தரமிடப்பட்டமுறையில் பேட்டிகளை நிகழ்த்துகிறார். பேட்டி காண்பவர், பேட்டி காணப்படுபவரின் கூற்றுக்களைப் பதிவு செய்வதுடன், பேட்டியின் போது அவரது நடத்தையையும் கவனிக்கிறார். வினைநிரல் என்பது திட்டமாகச் சொல்லமைத்துச் சிந்தித்து வரிசைப்படுத்திய தோர் வினைப்பட்டியலாகும். இவ்வினைத் தொகுதியைத் தபால் மூலம் ஆட்களுக்கு அனுப்பலாம்; அல்லது நேரில் சென்று அவர்களிடம் கொடுக்கலாம். கவர்ச்சியை ஆய்தல்,

ஆளுமையை அளத்தல், எண்ணம், மனப்பான்மை, மனத் திடம் (morale) முதலியவற்றைப் பார்வையிடல் (survey) இத்தகைய ஆராய்ச்சிகளில் வினாநிரல் மிகவும் பயன்படுவ தாகும்.

சில எடுத்துக் காட்டுகளைக் கீழே தருதும்.

1. மக்கள் உம்மைப் பார்த்து நகைக்கிறார்கள் என்று நீர் அடிக்கடி எண்ணுவதுண்டா ?

2. நீர் இரவில் தீய கனாக்கள் காணுவதுண்டா ?

3. எப்பொழுதாவது தூக்கத்தில் நீர் நடந்து சென்ற துண்டா ?

4. நீர் அடிக்கடி வெட்கப்படுவதுண்டா ?

5. நீர் அடிக்கடி பகற்கனா காணுவதுண்டா ?

6. இரத்தத்தைக் கண்டு நீர் அஞ்சுவதுண்டா ?

இத்தகைய கேள்வி நிரல் தனியாளின் ஆளுமையை மதிப்பிடப்பயன்படுகிறது. இதனை ஆளுமைப்பட்டியல் (Rersonalitity inventory) என்கிறோம்.

குழந்தை வளர்ப்பிற்கும் பாதுகாப்பின்மை உணர்ச்சிக் கும் உடனியைபு (correlation) உண்டா என்று ஆய்வ தற்கு உளவியலர் பயன்படுத்தும் வினா நிரல் கீழ்க்கண்ட வகையைச் சாரும்.

1. நீ எவ்வளவு காலம் தாய்ப்பால் குடித்தாய் ?

2. எவ்வளவு காலம் உன்னைத் தாயார், தமக்கையர் முதலியோர் தூக்கியெடுத்து வளர்த்தனர் ?

3. உனது தாயார் உன் உடையையும், சிறப்பாக உள்ளுடையையும் பற்றி அதிகச் சிரத்தை காட்டிய துண்டா ?

4. உனது கழிவுக் கட்டுப்பாட்டுப் பயிற்சி (toilet training) மிகக் கண்டிப்பாக அமைந்ததா ?

5. உனக்கு நோய்கள் வருவதுண்டா ?

6. உன்னைக் கவலையோடு கவனிக்கிறார்களா ?

7. உனது பெற்றோர் செல்லுமிடமெல்லாம் நீயும் சென்றதுண்டா ?

8. நீ கேட்டதெல்லாம் உனக்குக் கிடைப்பதுண்டா ?

9. உனது பெற்றோர் 'இப்படிச் செய்யாதே' என்று எத்தனை தரம் சொன்னது உன்நினைவில் உள்ளது ?

தனியாளின் தன்முனைப்பின் (egoism) பாகையைச் (degree) சோதிப்பதற்குக் கீழ்க்கண்ட வினைநிரல் பயன்படும் ('ஆம்' என்னும் விடை எத்தனை தடவை வருகிறதென்று கணிக்கவேண்டும்).

1. உமக்கு அதிகமான தன்னம்பிக்கை உண்டா ?

2. நீர் அடிக்கடி உமது காரியங்களையும், உமது திட்டங்களையும் பற்றிப் பேசுவதுண்டா ?

3. உம்மோடு வாதாடுபவரை நீர் தீவிரமாக எதிர்ப்பதுண்டா ?

4. உமது வசதியையும் நலத்தையும் நீர்முதன்மையாகக் கருதுவதுண்டா ?

5. அதிகாரம் செய்வதையும், பிறரிடம் வேலை வாங்குவதையும் நீர் விரும்புகிறீரா ?

6. பயன் பெறுவதற்காக நீர் பிறருடன் தொடர்பு வைத்துக் கொள்வதுண்டா ?

7. உமது அறியாமையை ஒப்புக் கொள்வதற்குப் பதிலாக நீர் எல்லாம் தெரிந்தவராகக் காட்டிக் கொள்வதுண்டா ?

8. உமக்குப் பெருமை தரக்கூடியதாக நீர் உமது குடும்ப, சமூக, வியாபாரச் சுற்றுப்புறத்தைத் தேர்வதுண்டா ?

9. உம்மைவிட உயர்ந்த பொருளாதார, சமூக நிலையில் உள்ளவர்களுடன் நீர் நட்புறவு ஏற்படுத்திக் கொள்வதுண்டா ?

10. பிறருக்குப் 'பின் பாட்டுப் பாடுவதை' நீர் வெறுப்பதுண்டா ?

வினைநிரல் நுண்முறையில் ஒரு பெருங்குறைபாடு உளது. இதன்மூலம் கிடைக்கும் விடைகள் சொல்லளவின வாதலின், உண்மையான வாழ்க்கை நிலையில் பதிலளிப்போரின் நடத்தையைக் குறிப்பிடாதனவாக அமையலாம்.

சமூக உளவியலர் பயன்படுத்தும் நுண்முறைகளுள் சமூக அளவீட்டியல் (sociometry) மற்றொன்றாகும். ஒரு குழுவின் அமைப்பையும், அதிலுள்ள ஒவ்வொரு தனியாளின் ஏற்றத்தையும் அளக்கும் நுண்முறையே சமூக அளவீட்டியலாகும். 1934-இல் மொரினே (Dr. J. C. Moreno) கைதிகளைக் கொண்டு செய்தபுற ஆய்வுகளில், உறுப்பினருக்கிடையே, இயற்கையான பிணைப்பு உள்ள குழுக்களே அதிகப் பயனுள்ளவை என்று கண்டறிந்தார். பின்னர் நியூயார்க் ராஜ்ய பயிற்சிப் பள்ளியில் உள்ள பெண் பிள்ளைகளைக் கொண்டும் புற ஆய்வு இயற்றினர். அப் பெண்கள் திருப்தியற்ற நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து வந்தவர்கள், அல்லது பொருத்தக் கோளாறுடையவர்கள் (maladjusted); நியூயார்க் நீதி மன்றத்தால் அப்பள்ளிக்கு அனுப்பப்பட்டவர்கள். இப்பெண்கள் பல குடில்களில் வாழ்ந்தனர். ஒவ்வொரு குடிலுக்கும் ஒரு "குடில் தாய்" House Mother) உண்டு. இப்பெண்களுக்குள் சில ஈர்ப்பு, வெறுப்புப் படிவங்கள் இருப்பதை அவர் கண்டார். அவர்களுட் சிலர் 'நட்சத்திரங்களாகவும் (stars) வேறு சிலர் யாரும் விரும்பாத 'தனிமர்' (isolates) களாகவும் இருந்தனர். பெரும்பாலான பெண்கள் உடன் வாழும் பிற பெண்களையும், குடில் தாயையும் ஏற்கின்ற குழுக்களே நன்கு அமைந்தவை என்று அவர் கண்டார்.

இன்று சமூக அளவீட்டியல் பெரும்பாலான அமெரிக்கப் பள்ளிகளிலும், பயிற்சிக்கல்லூரிகளிலும் பயன்படுகிறது. வகுப்பிலுள்ள உளவியல் ஓட்டங்களைத் (currents) தெரிந்து கொள்வதற்கும், திருப்பி விடுவதற்கும் 'தனிமர்'

களைப் பற்றி அறிந்து அவர்களுக்குத் துணைபுரிவதற்கும், குழுவில் இன்னும் அதிகத் திரள்வு (chhesion) ஏற்படுத்துவதற்கும் இம்முறை பயன்படுகிறது. இருவழித் தேர்தல் (mutual choice) உட்குழு (cliques), நட்சத்திரங்கள், தனிமர்கள் பற்றிய ஆய்வு தொழில் துறையிலும் இக்காலத்தில் பயன்படுகிறது. மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்துத் தனிக் கவனம் செலுத்துவதற்கு இம்முறையை நம் கல்வியாளர் பயன்படுத்தினால் நல்லது.

பேட்டியிலும், வினாநிரல் முறையிலும் சில நுட்பமான பிரச்சினைகள் எழுவதுண்டு. 'தொகுதிக்கு' (Population) ஏற்ற 'பதம்' (sample) தெரிந்தெடுக்க வேண்டும். வினாநிரல், கணிநிரல் (scale) முதலியவற்றைச் சரிவரத் தயாரிக்க வேண்டும். இப்பிரச்சினைகளைப் பற்றிப் பல சமூக உளவியலர் ஆராய்ந்து வருகிறார்கள்.

கள உற்று நோக்காளர் புள்ளி இயல் (statistics) முறைகளைப் பயன்படுத்துவதுண்டு. கோட்பாட்டுப் பின்புலமற்ற புற ஆய்வு அறிவியலாகாதது போல, வெறும் புள்ளிவிவரத் திரட்டும் அறிவியலாகாது. ஆனால் சரிவரத் திரட்டி உரைக்கப் பெற்ற புள்ளி விவரங்கள் மிகவும் பயன்படுவன. தொத்து நோய்களுக்குக் காரணங்களையும், நோய்தீர் முறைகளின் பலனையும் சோதிப்பதற்குப் புள்ளி விவரங்கள் பயன்படுவது போல, சமூகவியலிலும் பல கோட்பாட்டு, நடைமுறைக் கேள்விகளுக்கு அவை பயன்படுகின்றன. இருநாடுகளுக்கிடையே, அல்லது இருமாகாணங்களுக்கிடையே அல்லது இரு சமயக் குழுக்களுக்கிடையே பெரும் அளவியல் விரைப்பு (tension) உளதா? உலகெங்கும் குமரப் பருவத்து பையன்களும் பெண்களும், 'நெருக்கடியான' நிலையில் வாழ்கின்றனரா? கருத்துப் பரப்புதற்கு வானொலி பயனுள்ள சாதனமாக அமைகிறதா? சாதி, சீதனம், சமயம் முதலிய முறைகளைப் பற்றி நமது மாணவர்களின் மனப்பான்மை யாது? இத்தகைய பல கேள்விகளுக்குத் தகுந்த விடையளிக்கப் புள்ளி இயல் முறை பயன்படும்.

புற ஆய்வு உற்றுநோக்கு (Experimental Observation)

கள உற்றுநோக்குக்கும், புற ஆய்வுக்கும் ஒரு பெரும் வேற்றுமை உண்டு. புற ஆய்வில் ஆய்வாளர் சில திட்ட வட்டமான கருதுகோட்களை மனத்துட் கொள்கிறார். இவற்

றிற் கேற்பச் சில கூறுகளை மாறுமல் கொண்டு வேறு சில வற்றை ஒரு நேரத்தில் ஒன்றுக வேறுபடுத்துகிறர். அதாவது, கட்டுப்படுத்திய, ஆய்கூட நிலைகளில் உற்று நோக்குவது புற ஆய்வாகும். இதன்மூலம் நம்பத்தகுந்த தகவல்கள் கிடைக்கின்றன. இம்முறையில் கருதுகோட்களை விரைவில் சரிபார்க்கலாம். சமூக உளவியலில் கூறப்படும் வழிமுறைகளின் பலனைச் சிறிய குழுக்களின் துணைகொண்டு அறிவதற்கும் இம்முறை பயன்படும். சில தலைசிறந்த சமூக உளவியற் புற ஆய்வுகளை இங்குக் குறிப்பிடுவோம். ஃபார்ட்லெட் (F. Bartlett) தமது இந்திய, ஆங்கில மாண வருக்கு ஒரு கதையைக் கூறிப் பின் அதைத் திருப்பிச் சொல்லச் சொன்னர். இந்திய மாணவர் கதையில் உள்ள இயற்கை மிஞ்சிய (supernatural) கூறுகள் உட்படக் கதை யைக் கூறினர். ஆங்கில மாணவர் இப்பகுதிகளை விட்டு விட்டனர். ஆகையால் தனியாளின் பண்பாட்டுப் பின் புலன் அவரது புலக்காட்சியைப் பாதிக்கிறது; அவர் கருத்துக்களை வெளிக்கொணருவதையும் பாதிக்கிறது, என்னும் கருதுகோளை இப்புற ஆய்வு வலியுறுத்துகிறது.

முதலாம் உலகப் போருக்குப்பின், ஆல்ப்போர்ட் சமூக வசதிப்பாட்டைப் (facilitation) பற்றி ஆராய்ச்சி செய்து, தனியாட்கள் ஒத்த வேலையை ஒருவருக்கொருவர் முன்னிலையில்-அதாவது உடன் செயல்படு (co-acting) குழுவில்-செய்தால் ஒவ்வொரு தொழிலாளியின் உற்பத்தி யும் பெருகுகிறது என்று கண்டறிந்தார். கருத்தேற்கு மையைப் (Suggestibility) பற்றிய புற ஆய்வுகளிலிருந்து, வல்லுநர்களின் புகழ்வன்மையும் (Prestige) பெரும் பான்மையோரின் கருத்தும் தனியாட்களின் நம்பிக்கை யைப் பாதிக்கின்றனவென்று தெரிந்தது.

ஷெரிஃப் (Sherif) 1935-ல் மற்றொரு முக்கிய புறஆய்வு இயற்றினர். அது புலக்காட்சியில் சமூகக் கூறின் பங்கைப் பற்றியது. பொருட்களின் புலக்காட்சி ஒரு காண்டல் அமைப்பால் (frame of reference) தீர்மானிக்கப்படுவது என்று: பினே (Binet) 1900-இல் கண்டார். அவர் தமது மாணவருக்குப் பல கோடுகளைக் காட்டி, தாம் கண்டபடி அதே நீளத்தில் அக்கோடுகளை வரையச் சொன்னர். அவற்றுள் ஒன்று முதல் ஐந்து வரையுள்ள கோடுகள் ஒன்றின் ஒன்று நீளமாக அமைந்தன. ஆனல் ஐந்துக்குப் பிந்திய கோடுகள் ஐந்தாம் கோட்டின் நீளத்திலேயே

அமைந்தன. ஆனால் மாணவர் ஐந்தைவிட ஆறினையும், ஆரும் கோட்டைவிட ஏழினையும், இவ்வாருகப்பின் வருபன வற்றை நீளமாக வரைந்தனர். முதல் ஐந்து கோடுகளும் ஒரு 'காண்டல் அமைப்பு', ஓர் எதிர்பார்ப்பு, தீர்ப்பினுக்கு ஓர் ஓரச்சார்பு அளித்தன. இதன் மூலம் பின்னையக் கோடு களின் புலக்காட்சி பாதிக்கப்பட்டது. நமது சமூக உலகத் திலும் இப்படிப்பட்ட காண்டல் அமைப்புக்கள் உள்ளன. இவை அமைவதில் சமூகக் கூறுகளுக்கு அதிகப் பங்கு உண்டு, என்று ஷெரிஃப் காட்டினார். ஓர் இருட்டறையில் அமைந்த ஓர் இயங்காத ஒளித்தானத்தை அவர் தூண்ட லாகப் பயன்படுத்தினர். இவ் ஆய்வில் பங்கெடுத்த ஆட் படுநர் (Subject) அப்புள்ளி ஏதேனும் ஒரு திசையை நோக்கிச் செல்வதாகக் கண்டனர். இவ் இயக்கத் திரிபுக் காட்சி தற்கருத்தேற்றமாகிய (auto-suggestion) அகவயக் கூறினுல் (subjective factor) ஏற்படுவது. தனியாக இவ் ஆய்வில் ஈடுபடும் ஆட்படுநர் ஒவ்வொருவரும் இவ்வியக்க அளவைப் பற்றி ஓர் எல்லை கற்பித்துக் கொள்கின்றனர். இத்(திரிபு) இயக்கத்தை மீண்டும் அளந்தால் அந்த அளவு அவரவருடைய எல்லைக்குள்ளாகவே அமையும். ஆனால் ஆட்படுநரை இருவர், மூவர், நால்வர் முதலான குழுக் களாக அமைத்து, குழுவிலுள்ள ஒவ்வொருவரும் அவ் வொளித்தானம் இயங்கும் திசையையும், அளவையும் பற்றித் தம்மதிப்பீட்டைப் பிறருக்கு எடுத்துக் கூறினுல் ஆட்படுநர் முன்னர் தாம் ஏற்படுத்திக் கொண்ட தனி எல்லைக் குள்ளேயே இருப்பதில்லை. அவர்கள் ஒரு குழுத்தரத்தை (group norm) ஏற்படுத்திக் கொள்கினறனர். ஒளியின் 'இயக்கத்தை' இவ்வாறு குழுவின் தன்மைக்கேற்பக் கட்டுப் படுத்திய எல்லைக்குள்ளாகவே வைத்து மதிப்பிடுகின்றனர். பிறருடைய எண்ணங்களையும் நடத்தையையும் பற்றிய அறிவு, தனியாட்களின் புகழ்வன்மை, எண்ணிக்கையின் வன்மை முதலிய சமூகக்கூறுகள் நமது தீர்ப்புக்களைப் பாதிக் கின்றன என்பது இவ் ஆய்வினுல் விளங்கும். அளவுகளைப் பற்றிய தீர்ப்புக்கள், பண்புகளைப் பற்றிய தீர்ப்புக்கள், அறத் தீர்ப்புக்கள், அழகு பற்றிய தீர்ப்புக்கள் - இவை அனைத் திற்கும் மேலே கூறிய கண்டுபிடிப்பு பொருந்தும்.

செயலாராய்ச்சி (action research) மற்றொரு புற ஆய்வு முறையாகும். செயலாராய்ச்சியில் ஒரு செயல் நிரலைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துகிறோம். பின் அதன் விளைவுகளை உற்று நோக்குகிறோம், அல்லது அளவிடு

கிறேம். எடுத்துக்காட்டாக, அமெரிக்க வெள்ளையரும் நீக்ரோவரும், அமெரிக்கரும் ரஷியரும், இந்துக்களும் முஸ்லிம்களும், குஜராத்தியரும் மகாராஷ்டிரரும் – இணைந்த சிறு குழு நிலையை அமைத்து அவர்கள் ஒன்றுக வாழ்ந்து, பொது இடர்ப்பாடுகளை எதிர்ப்பட்டு, மேற்கொள்ளுமாறு அமைக்கலாம். பொதுவான வேலைகளில் பங்கெடுக்க ஊக்குவதால் குழுவய முற்சார்புகளைக் (Group prejudices) குறைக்க முடியுமா? சொற்பொழிவு, புத்தகம், படம் முதலியவற்றின் மூலம் செய்யும் பிரசாரத்தை விட இம்முறை அதிகப்பயன் தருவதா? என்றெல்லாம் இம்முறையில் ஆராயலாம்.

ஆனால் ஆய்கூட உற்றுநோக்கில் குறைபாடுகள் உள்ளன. ஆய்கூட நிலை செயற்கையானது; ஆகையால் தனியாளின் துலங்கல் இயற்கையாகவும், தானுகத் தோன்றுவதாகவும் இருப்பது தடைப்படலாம். ஆகையால் நிலைமை கூடியவரை இயற்கையானதாகத் தோன்றும்படி அமைக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, இம்மூலநூலின் ஆசிரியர் தமது இடைநிலை வகுப்பு மாணவரின் உண்மை கூறும் பண்பைச் சோதிக்க விரும்பினர். அவர்களுடைய தேர்வு மதிப்பெண்களைக் கல்லூரிப் பதிவேடுகளில் எழுதி விடைத்தாட்களை அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்தாயிற்று. ஆனால் ஆசிரியர் மாணவரிடம் மதிப்பெண்களைக் குறித்துவைத்த தாள் காணுமற்போய் விட்டதாகச்சொல்லி, ஒவ்வொருவரும் எடுத்த மதிப்பெண்களை ஒரு சிறு தாளில் குறித்துத் தருமாறு கேட்டுக்கொண்டார். வகுப்பில் உள்ள 130 மாணவருள் நாற்பத்தைந்திற்குக் குறைந்த மதிப்பெண்கள் வாங்கிய நால்வர் முதல்வகுப்பு மதிப்பெண் பெற்றதாக எழுதினர். இப்படியே, ஆசிரியர் மாணவருக்கிடையேயுள்ள சமூக வகுப்பிடை மனப்பான்மைகளை (inter-communal attitudes) உண்மையானபடித் தெரிந்துகொள்ள வேண்டுமானால், வெவ்வேறு வகுப்பைச் சார்ந்த மாணவர், ஒரே படிப்புக்குழுவில் (tutorial group) வருமாறு அமைக்க வேண்டும். மாணவருக்கு இத்தகைய குழுமுறை ஆய்விற்காக ஏற்படுத்தப்பட்டது என்று தெரியக்கூடாது.

சோதனைகளைப் (Tests) பயன்படுத்தல்:

சமூக உளவியலர் பயன்படுத்தும் சோதனைகளை அகவயச் (subjective) சோதனைகள், புறவயச் (objetive)

சோதனைகள் என்று இருவகையாகப் பிரிக்கலாம். தனியாளின் நுண்ணறிவு, ஆற்றல்கள், கருத்தேற்குமை, பிடித்தது விடாமை, அவாவு நிலை (level of aspiration) சிந்தனையிலும் நடத்தையிலும் இறுக்கம் (rigidity) என்பவையெல்லாம் புறவயத் தொகுதிச் சோதனைகளால் அளக்கப்படுபவை. இச்சோதனைகளை உளவியல் மருத்துவமனைகளிலும், தொழின்முறை வழிகாட்டலிலும், தொழிலுக்கு ஆள் தேர்வதிலும் பயன்படுத்துகிறார்கள். சமூக உளவியலரும் இவற்றைப் பயன்படுத்துகிறார். வெவ்வேறு ஆளுமைக் கூறுகளைப் பொருத்தவரை மரபுநிலை, சூழ்நிலையின் பங்கு யாது? ஒரு தனியாளின் சமூக வகுப்பு அவரது கருத்தேற்குமையையும் அவாவு நிலையையும் பாதிக்கின்றதா? மேற்கூறிய கூறுகளில் இன அடிப்படையில் வேற்றுமைகள் உண்டா? இத்தகைய கேள்விகளுக்குப் புறவயச் சோதனைகள் பயன்படுகின்றன.

புறத்தெறி (Projective) சோதனைகளும், நுண்முறைகளும் அகவயத் தொகுதியினவாம். இவற்றைப் பயன்படுத்தும் உளவியலர் சோதிக்கப்படுபவரின் துலங்கல்களின் உரைகண்டு (interpret) பயன்படுத்துவதால் அவை அகவயத் தன்மையனவாம். தனியாளின் முழு ஆளுமையைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்வதற்குப் புறத்தெறி சோதனைகள் பயன்படுகின்றன. தனியாளின் நடத்தையை ஆளும் உள்ளத்தின் ஆழ்மட்டங்களை--அவரது நனவிலி (unconscious) மனப்பான்மைகளையும் புலக்காட்சிகளையும் அவர் புறத்தே எறிவதற்கு இச்சோதனைகள் வாய்ப்பளிக்கின்றன. இத்தகைய புறத்தெறி சோதனைகள் பல இயற்றப்பட்டுள்ளன. இன்னும் பலவற்றை ஆக்கித் தரமிட்டுக்கொண்டிருக்கின்றனர். ரோர்ஷாக் (Rorschach) என்பவர் பத்து மைத்தடங்களைத் (ink blots) தரப்படுத்தியுள்ளார். இவற்றைச் சோதனையுட்படுபவருக்குக் கொடுத்து அவர் அதில் எதைக் காண்கிறார் என்று கேட்பது முறையாகும். ஸ்டெர்ன் (Stern) முகிற்படங்களை இதற்காகப் பயன்படுத்தினர். மர்ரே (murray) என்பவர் 1935-ல் பொருளொடு புணர்த்தறி சோதனை (Thematic Apperception Test) இயற்றினர். இதில் சில படங்களை சோதிக்கப்படுபவருக்குக் காட்டி அதையொட்டி அவரை ஒரு கதை புனையச் சொல்வதுண்டு. சிமண்டு (symond) இயற்றிய படக்கதைச் சோதனை (Pictur) Story Test) T. A. T.-இன் ஒரு வேற்றமைப்பு (Variatione) ஆகும். இதில் 20 படங்கள் உள்ளன. இளங் குமரப்

பருவப் பையன்கள், பெண்கள் ஆகியோரின் ஆளுமையை ஆய்வதற்கு இது பயன்படுகிறது. குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் புறத்தெறி படச் சோதனை குழந்தையர் உட்புலச் சோதனை (C. A. T. or Children's Apperception Test) எனப்படும். மரேயின் படச் சோதனைகள் சோதிக்கப் படுபவரின் ஆளுமையையும் பிரச்சினைகளையும் பற்றி நமக்கு ஓரளவு தெரிவிக்கின்றன, என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு பின்வருமாறு: மரேயின் படங்களின் மாற்றியமைப்பு (adaptation) ஒன்றை ஆமதாபாத்திலுள்ள இரண்டு மில் தொழிலாளருக்கும், ஒரு கல்லூரிப் பெண்ணுக்கும் கொடுத் தனர். அப்படத்தில் ஒரு வயது முதிர்ந்த கிராமத்தாரும் ஒரு இளம்பெண்ணும் இருந்தனர்.

அப்படத்தைப் பார்த்து ஒரு மில் தொழிலாளர் கூறியது: "இவ்விருவரும் வயதில் முதிர்ந்தவர்கள்; கவலை மிகுந்த வர்கள். நமது பெண்ணுக்கு வயது அதிகமாகி விட்டது; அவளுக்கு மாப்பிள்ளை கிடைப்பது அரிது' என்று அத் தொழிலாளிகள் கூறுகிறார்கள். அஞ்சாதீர்கள், கடவுள் எல்லோரோடும் இருக்கிறார். அவளுடைய தலையில் எல்லாம் எழுதியிருக்கும்' என்று அந்த அம்மாள் கூறுகிறார்",

இரண்டாவது தொழிலாளர் உரைத்தது: "அந்த மனிதர் தந்தை; அந்தப் பெண் அவருடைய மகள்; 'உனக்குத் திருமணமாகி உன் மாமனார் வீட்டிற்கு நீ போகும்வரை நீ நெறி பிறழாமல் இருக்க வேண்டும்' என்று அவர் கோபத் தோடு சொல்கிறார். அந்தப் பெண், 'நான் ஒழுங்காகத் தான் இருக்கிறேன். உலகம் என்னைத் தொந்தரவு செய் கிறது' என்று சொல்கிறாள்."

அதே படத்தைப் பற்றிக் கல்லூரி மாணவியின் உரை: "தந்தை அவளிடம் திருமணத்தைப் பற்றிக் கூறியுள்ளார். அவள் நாணத்துடன் சிரிக்கிறாள்.. ஆனால் தந்தை கவலை யாக இருக்கிறார்."

இன்னும் பல புறத்தெறி நுண்முறைகள் தோற்று விக்கப்பட்டுள்ளன. விளையாட்டு, உளவியல் நாடகம் (psychodrama), சொற்புறத்தெறி சோதனைகள் (verbal Pro jective test) ஆகியவை மிகக் கவர்ச்சிகரமானவை. சொற் புறத்தெறி தோதனைகளில் சொல்-இயைபு (Word associa-tion), தன்-எண்ணம் முடித்தல் (selfidea completion)

கதை சொல்லல், கதை முடித்தல் முதலிய பகுதிகள் உள்ளன. சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் டி. இ. சண்முகம் அவர்கள் சென்னையிலுள்ள தமிழ் பேசும் பிள்ளைகளுக்கென்று இத்தகைய சோதனையொன்றை இயற்றி அதன்மூலம் நெறி பிறழ்ந்த, நெறி பிறழாத பையன்கள், பெண்கள் ஆகியோரின் தேவைகள், ஆளுமைக் கூறுகள், சூழ்நிலை வன்மைகள் ஆகியவற்றை ஒப்பியன் முறையில் ஆய்வதற்குப் பயன்படுத்தியுள்ளார். சோதிக்கப் படுபவரிடம் வெவ்வேறு நிலைமைகள் வரிசையாகக் கூறப் படும். அவை ஒவ்வொன்றையும் மையமாகக் கொண்டு அவர் ஒரு கதை கட்டவேண்டும் ஒவ்வொரு நிலைமையும் என்னென்ன நிகழ்ச்சிகளால் அமைந்தவை, அதிலுள்ள பாத்திரங்கள் அப்பொழுது என்னென்ன நினைக்கிறார்கள், உணர்கிறார்கள், அதன் முடிவு என்னவாகும் என்று அவர்கள் கூறவேண்டும். கடைசிச் சோதனையில் சோதிக்கப்படுபவர் ஒரு பையனைத் தலைவனாகக் கொண்டு ஒரு கதையைக் கோத்துச் சொல்ல வேண்டும். இதிற் சில பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சொற் புறத்தெறி சோதனை

1. மற்ற பையன்கள் விளையாடும்போது ஒரு பையன் மட்டும் ஒரு மூலையில் நின்று கொண்டிருக்கிறான்.

3. ஒரு பையன் கண்ணை மூடிக்கொண்டு படுக்கையில் படுத்திருக்கிறான். அவனருகில் ஒரு வயதிற் பெரிய மனிதர் உட்கார்ந்திருக்கிறார்.

4. ஆடையற்ற இரு பையன்களின் உருவம் இருட்டில் தெரிகிறது.

6. ஒரு பெண் புத்தகங்களைக் கையில் எடுத்துக் கொண்டு தனியே நடந்து செல்கிறாள். பையன்கள் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

7. சகோதரனும் சகோதரியும் ஒன்றாக இருக்கிறார்கள். தலை நரைத்த மனிதர் ஒருவர் அவர்களுக்குப் புறங் காட்டிக்கொண்டு சன்னல் அருகில் நிற்கிறார்.

8. ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார். ஒரு பையன் கவனிக்காமல் இருக்கிறான்.

13. ஒரு பையன் தயங்கிக் கொண்டு கோயிலுக்கு வெளியில் நிற்கிறான்.

14. அப்பாவும் மகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நிற்கின்றனர். தந்தையின் முகம் கடுமையாக இருக்கிறது. அம்மா அவர்கள் பக்கத்தில் நிற்கிறாள்.

16. ஒருபையன் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறான்.

19. ஒரு பிணத்தைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள். ஒரு பையன் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

20. ஒரு பையனைத் தலைவனாகக் கொண்டு ஒரு கதை புனைக.

சமூக உளவியல் தகவல்களும், இதனோடு தொடர்புள்ள துறைகளிலுள்ள கருத்துக்களும்:

உளவியலில் வெவ்வேறு துறைகளில் ஆய்வாளர் செய்துள்ள வேலை அவர்கள் சேர்த்துள்ள தகவல், அதன் மூலம் தோன்றியுள்ள கருத்துக்கள், இவையாவும் மனிதனையும், அவனது உள்ளத்தையும் நடத்தையையும் புரிந்து கொள்ள மிகவும் துணை புரிந்துள்ளன. குழந்தை உளவியல் பொது அல்லது தனியாள் உளவியல், ஒப்பியல் உளவியல், மருத்துவ உளவியல் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாம். பண்பாட்டு மனிதவியல் ஆய்வுகளும் சமூக உளவியல் வளர்வதற்குத் துணை புரிந்துள்ளன. கற்றல், புலக்காட்சி முதலிய ஆய்வுகளிலிருந்து தோன்றிய கருத்துக்களாவன:- சூழ்நிலையுடன் பொருத்தப்பாடு, ஊக்குவித்தல், தேவையை நிறைவேற்றல், ஆக்கநிலையுறுத்தல், காண்டல் அமைப்பு, பொறியமைப்புகளின் செயற்புரிவுத் தனியாட்சி (functional autonomy of mechanisms) முதலியவை. மனிதச் சமூக நடத்தையை விளக்குவதற்கும் இவை பயன்படுகின்றன. விலங்கு நடத்தையை ஆய்ந்தவர்கள் விலங்குகளின் சமூக நடத்தையைப் பற்றி விரிவான தகவல்கள் திரட்டியுள்ளார்கள். விலங்குகள் ஒன்றோடொன்று பல்வேறு வகைகளில் எதிர்வினை புரிகின்றன. அவை சமூக இடத்திற்காகப் போர் புரிகின்றன. அவை ஆதிக்கம் புரிகின்றன. சமூக வரிசைப்

படுத்தல் (ranking) அவற்றுள் உண்டு. திரும்பத் திரும்ப முறிவடைந்தால் அவை மனக்கோளாறடைகின்றன என் றெல்லாம் அவர்கள் கண்டுள்ளனர். விலங்கு உலகத்தில் வெவ்வேறு வகையான 'திருமண' வகைகள் உள்ளன. விலங்குகளையும் மனிதனையும் ஒப்பிட்டுப் படிப்பது மனிதச் சமூக நடத்தையின் அடித்தளத்தைப் பற்றி நாம் நன்கு அறிந்து கொள்வதற்கு உதவும். ஆகையால் சமூக உள வியலர் இம்முறையைப் பெரிதும் விரும்புகின்றனர்.

1910-க்குப் பின் குழந்தைகளின் உளவியலைப் பற்றிய ஆய்வு பெருகியுள்ளது. வாட்சன் (Watson), நியூமான் (Newman), பியாகே (Piaget), சூஸன் ஐஸக்ஸ் (Susan Isaacs), மெலானி கிலெய்ன் (Melanie Klein), அன்னு ஃபிராய்டு (Anna Freud), கரன் ஃஆர்னி (Raren Horney) இன்னும் பலர் இத்துறையின் முன்னணியில் உள்ளனர். குழந்தைகளின் இயல்பூக்க, மனவெழுச்சி அமைப்பைப் பலர் ஆராய்ந்துள்ளனர். குழந்தையின் அறிவு வளர்ச்சி, மொழி வளர்ச்சி, அற வளர்ச்சி, சமூக வளர்ச்சி ஆகிய வற்றை ஆய்ந்துள்ளனர். நுண்ணறிவிலும், ஆளுமையி லும் இயல்பு, வளர்ப்பு ஆகியவற்றின் பங்குகளைக் கூறு படுத்துள்ளனர்; குழந்தையின் ஆராய்ச்சிப் போக்கை ஒடுக்குவதால் அவனுடைய நுண்ணறிவு வளர்ச்சியிலும், ஆளிடைத் தொடர்புகளிலும் (interpersonal relationships) ஏற்படும் விளைவுகளை எடுத்துக் கூறியுள்ளனர். கூட்டு விளை யாட்டுகளிலும் சமூகத் தொடர்புகளிலும் குழந்தையின் சிந்தனை ஆய்வுச் செயல்களில் ஏற்படும் நல் விளைவுகளைக் கண்டுள்ளனர். ஃபிராய்டும் பிற உள்ளப் பாகுபடுப்பாளர் களும் குழந்தையைப் பற்றிய பெற்றோரின் மனப்பான் மையை யொட்டி நிகழ்த்திய ஆய்வுகளின் மூலம் குழந்தை வளர்ச்சியைப் பற்றிய நம் அறிவைப் பெருக்கியுள்ளனர். ஆகையால் சமூக உளவியலில் குழந்தை உளவியலும் ஒரு முக்கிய இயல் ஆகும் என்று கூறலாம்.

மருத்துவ உளவியலும், சிறப்பாக உள்ளப் பாகுபடுப் பியலும் (Psycho-analysis), முதிர்ந்தோரின் நனவிலி (unconscious) வாழ்க்கையைப் பற்றிக் கனத்திறமுறைப் பின் (dream interpretation) மூலமாகவும், கட்டிலி இயைபு (free association) முறை மூலமாகவும் ஆராய்ந்துள்ளனர். குழந்தைகளின் விளையாட்டுச் செயல்களை உற்று நோக்கி ஆய்ந்துள்ளனர். இவற்றின் மூலம் சமூக உளவியலுக்குப்

பெரிதும் உதவும் பல கருத்துக்கள் தோன்றியுள்ளன. (எ—டு), ஈடு செய்தல் (Compensation), புறத்தெறிதல், ஒன்றுதல் (identi fication), ஏதீடு (rationalization), இடப் பெயர்ச்சி (displacement), மீள்போக்கு (regression) முதலி யவை. வீர வணக்கம், தேசப் பூசல், இன முற்சார்பு, கும்பல் நடத்தை முதலியவற்றை விளக்குவதற்கு மேற் கூறிய கருத்துக்களைச் சமூக உளவியலர் பயன்படுத்துகிறர்.

சமூகவியலும் பண்பாட்டு மனிதவியலும்

சம்னெர் (Sumner), கூலீ (Cooley), ஆல்வெர்டெ (Alverdes) போன்ற சமூகவியலர் வகுத்த குழு வகைகளை யும், சமூக உளவியல் பயன்படுத்துகிறது. ஏனெனில் வெவ் வேறு வகையான மனிதச் சேர்க்கைகள் மனிதனின் மனத் தில் என்ன விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்று சமூக உளவியலார் ஆய்கின்றர். ஒவ்வொரு வகையான குழுவி லும் உள்ள உறுப்பினருக்கிடையேயுள்ள தொடர்பையும், ஒவ்வொரு உறுப்பினரும் குழுவில் ஏற்கும் வேடமும் பற்றிச் சமூகவியலர் ஆராய்கின்றர். சமூக உளவியலர் இத் தொடர்புகளின் உளவியல் அடிப்படையையும் அவற்றின் உளவியல் விளைவுகளையும் ஆய்கின்றர்.

மனிதவியலர் வெவ்வேறு பண்பாட்டுப் படிவங்களை விவரித்துள்ளனர். மார்கரெட் மீஃட் (Margaret mead), ரூத் ஃபெனிடிக்ட் (Ruth benedict), மாலினெஸ்கி (Malinowski) முதலியோரின் ஆராய்ச்சியின் மூலம், மனித இயல்பு உலகெங்கணும் ஒன்றுபோல் அமைவதில்லை, அது சமூகத்தாலும் பண்பாட்டாலும் உருப்பெறுவது என்று தெரிகிறது.

References

1. J. F. Brown Psychology and Social Order. p. 133.

2. Kretch and Crutchfield, Theory and Problems of Social Psyhhology.

3. குழு மனக்கருத்து
(The Concept of group mind)

சமூக உளவியல் தனியாளின் சமூக நடத்தையையும் குழுக்களின் கூட்ட நடத்தையையும் பற்றிப் படிக்கிறது இவற்றை விளக்குவதற்காக, குழுக்களை வெவ்வேறு வகையாகப் பிரிக்கிறது. (எ-டு). முதனிலை (primary), வழிநிலை (secondary) குழுக்கள்; திறந்த (open), அடைத்த (closed) குழுக்கள்: அமைவுற்ற (organised), அமைவற்ற (unorganised) குழுக்கள்; முதலியன. வெவ்வேறு குழுக்களில் மனநிலைகளும் கூட்டு நடத்தைப் படிவமும் வேறுபடுகின்றன. சமூக உளவியல் இவற்றை விளக்க முற்படுகிறது.

நிகழ்முறைகளை விளக்குவதற்குக் கருதுகோட்கள் தேவை. அறிவியல் முறை விளக்கம் போதியதாக அமைய வேண்டும். இத்துடன் அறிவியற் கருது கோட்கள் தேவையானவையாகவும், மெய்ப்பிக்கக் கூடியவையாகவும் இருக்கவேண்டும். இதனால்தான் அறிவியல் முறையைக் கைக்கொள்ளும் சமூக உளவியலர் கூட்டு வாழ்கையையும் நடத்தையையும் விளக்குவதற்குக் கூறும் கருத்துக்களும் விளக்கங்களும் காண்நிலை முறையில் ஏற்புடையவையாக அமையவேண்டும். தேவையற்ற, மெய்ப்பிக்க முடியாத கற்பிதங்களைச் சமூக உளவியலர் கொள்வதில்லை.

முற்காலத்து அறிஞர், குழுவிற்கென்று தனியாக மனம் தன்னறிவு, முயற்றி (will) உண்டென்று கருதினர். இதனைப் பொது முயற்றி, கூட்டுத் தன்னறிவு (Collective conscious), சமூக மனம், குழுமனம், என்று பலவாறு கூறினர். அறிவியல் மனப்பாங்கைச் சமூக உளவியலர் கொண்டபின் மேற்கூறிய கருத்துக்களைக் கைவிட வேண்டியதாயிற்று.

குழுமனக் கருத்தைக் கொள்ளும் பழைய அறிஞர் களுக்கும், காண் நிலைத் தேற்ற முறையைக் கொண்டுள்ள புதிய அறிவியலர்களுக்கும் இடையே எழும் கேள்விக ளாவன: கூட்டு வாழ்க்கையையும், கூட்டு நடத்தையை யும் செவ்வனே விளக்குவதற்கு மீத்தனி (over-individual) மனம் வேண்டுமா? இம்மனத்திற்குத் தனியான விதிகள் கொள்ள வேண்டுமா? அல்லது குழு இயங்கியல் (group dynamics) முறையில் இவற்றை விளக்க இயலுமா? அது நல்லதா? (குழு இயங்கியலாவது தனியாட்களுக்கிடையே யுள்ள இடைவினையை ஆய்வது. இம்முறையில் வெவ் வேறு நிலைமைகளில் வெவ்வேறு நடத்தைப் படிவங்கள் தோன்றுவதை விளக்கலாம்.) அறிவியற் சமூக உளவியல் இரண்டாவது முறையைக் கொள்ளுகிறது. ஏனெனில் வெவ்வேறு வகையான கூட்டு நடத்தையைப் பற்றி மெய்ப்பிக்கக் கூடிய கருதுகோட்களை உருவாக்க இது உதவுகிறது. காண்நிலை முறையில் ஆய்வது இம்முறையில் தான் இயலும். கூட்டு நனவு, பொது முயற்றி, குழுமனம் முதலிய கருத்துக்கள், ஆராய்ச்சிக்கு உதவாதவை என்று சமூக உளவியலர் கருதுகின்றனர்.

மேற்கூறிய கருத்துக்களை அரசியல் தத்துவம், மனித நூல் ஆகியவற்றின்மூலம் சமூக உளவியல் பெற்றது. சமூக அமைப்பு மனிதனது இயல்பு, நம்பிக்கைகள், மனப்பான் மைகள் ஆகியவற்றைப் பாதிக்கிறதென்பதை ஹெகல், கார்ல் மார்க்ஸ், அகஸ்ட்ஸ் காம்ட்டே ஆகியோர் வற்புறுத் தினர். ஃடார்வினின் படிமலர்ச்சிக் கொள்கையானது (1859) நாம் மனிதனை அவனுடைய சமூகப் பண்பாட்டுச் சூழ்நிலையோடு தொடர்புறுத்திப் படிக்கவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தியது. 1860-ல் ஸ்டெயின்த்தாலும், லாசரசும் **நாட்டவர் உளவியல்** (Folk Psychology) என்ற தொரு அறிவிதழ் (Journal) தொடங்கினர்; குழுமனங் களைப் பற்றிப் படிப்பதே இவ் இதழின் நோக்கம். வெவ் வேறு இனத்தினரின் உள்ளப் பண்புகளையே இவர்கள் குழுமனம் என்று கொண்டனர். உளவியலிலும், சமூக இயலி லும் தேர்ந்த உண்ட் (Wundt) என்பவர் 1900-இல் **நாட்டவர் உளவியல்** என்னும் நூல் இயற்றினர். அதில் பெரிய நாடுகளின் பண்புகளை எடுத்துரைத்தார். மக்களின் மொழி, புராணவியல் (mythology), நிறுவனங்கள் ஆகியவை தனிமனத்தையும் சிறு தொகுதியான மனங்களை யும் விட நிலைப்பேருனவை என்று அவர் வலியுறுத்தினர்.

ஆனால், சொல் மக்களின் மனத்தை மந்திர சக்தியைப் போன்று கட்டுப்படுத்துகிறது. சிந்தனையைத் தூண்டுவ துடன், சிந்தையைத் தடுக்கவும் செய்கிறது. குழுமனம் என்னும் கருத்துக்கு உருப்பொருள் கற்பித்து, ஒரு குழுவின் தனியாட்களுக்கு இருக்கும் தனிமனங்களுக்கு மேலாக மற்றொரு மனம் அமைந்துள்ளது என்று பலர் நினைக்கிறார் கள். உளவியலைப் பற்றிப் பேச முற்பட்ட சமூகவியலரும் அரசியல் தத்துவரும் கூட இப்படி நினைத்தனர். சமூக, அரசியல் நிறுவனங்களின் தோற்றத்தையும், வளர்ச்சியை யும் விளக்கவும், புரட்சிக்கும்பல்களின் நடத்தை போன்ற தரப்புறக் (abnormal) குழு நடத்தையை விளக்குவதற்கும் அவர்கள் குழு மனக்கருத்தைப் பயன்படுத்தினர்.

பொதுமுயற்றி என்னும் கருத்து. ரூஸோவின் (Rousseau 1712—1778) அரசியல் பற்றிய நூல்களில் பொதுமுயற்றி (General Will) என்னும் கருத்து காணப்படுகின்றது. இதிலிருந்து தான் குழுமனம் என்னும் கருத்து பிறந்தது. மனிதன் இயல்பிலேயே தன் நினைப்புள்ளவன் (egoistic), ஒரு காலத்தில் மனிதன் சமூகத்திற்கு முற்பட்ட நிலையில் வாழ்ந்தான், தற்காப்பை விரும்பி மக்கள் ஓர் ஒப்பந்தம் செய்து சமூகத்தை அமைத்துக் கொண்டார்கள், என்பது ரூஸோவின் கருத்து. ரூஸோ ஓர் அரசியல் தத்துவர். தனியாளின் சிறப்பின்பால் அவர் நம்பிக்கை கொண்டவர். தீவிர குடியாட்சிக் கொள்கைக்காக அவர் வாதாடினர். நடைமுறையில் குடியாட்சி பெரும்பான்மையோர் நலனையே ஆதாரமாகக் கொண்டு நடப்பதால், பெரும்பான்மையோர் தீர்ப்புக்கும் தனியாளின் (சிறுபான்மையோரின்) நலனுக்கும் மாறுபாடு ஏற்படக்கூடும் என்பதை அவர் உணர்ந்தார். குடியாட்சியிலுள்ள பெரும்பான்மையோர் ஆட்சி சிறுபான் மையோரின் அல்லது தனியாட்களின் நலனுக்கு முரணான தல்ல என்று காட்டக்கூடிய முறையில் அவர் இப்பிரச்சனை யைத் தீர்க்க முயன்றார். இதற்காகப் பொதுமுயற்றி என்னும் கருத்தைப் புனைந்தார். பொதுமுயற்றியைப் பற்றி அவரது விளக்கம் மறைபொருட்டன்மையது, கற்பனை மிகுந்தது. அது வருமாறு:-

ஒவ்வொரு தனியாளுக்கும் இரண்டு முயற்றிகள் உள்ளன. ஒன்று சொந்த (Private) முயற்றி, அது தனது சொந்த, அல்லது சிறுகுழுவின் நலத்தைக் கருதுவது. மற்றொன்று பொது முயற்றி ; அது பொது நலத்தைக் கருது

வது. பொதுமுயற்றி தன்னலமற்றது. ஆகையால் அது எப்பொழுதும் சரியாகவே செயல் புரியும். ஒரு தனியாள் தன்னிடத்தில் அம் முயற்றி இருப்பதை உணராமல் இருக்கலாம். ஆகையால் அதனை வெளிப்படுத்தாமல் இருக்கலாம். ஆயினும் அது எல்லோரிடத்தும் உள்ளது. அது சமூகத்தின் முயற்றி. சமூகம் ஒரு தனிப்பொருள் என்று ரூஸோ கருதினர். பொதுச் சமூகம் (the body politic) அறத்தன்மை வாய்ந்தது. அதற்கென்று ஒரு முயற்றி உண்டு. முழுத் தொகுதியையும் அதன் ஒவ்வொரு பாகங்களையும் அது பாதுகாக்க முற்படுகிறது. எல்லாச்சட்டங்களுக்கும் தோற்றுவாய் அதுதான். பொதுமுயற்றியானது பொதுத் தோற்றுவாயும், பொதுக்குறிக்கோளும் உடையது. அது மக்களுடைய குரலாகும். அது கடவுளின் குரலும் ஆகும். அது நிலையானது, மாறுதது, தூய்மையானது. சமுதாயம் கருதும் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு பொதுமுயற்றி உண்டு, என்று ரூஸோ கூறினர்.

ஹெகல் (Hegel, 1770-1831) தமது காலத்திலுள்ள தேசீயத் தலைமையை விளக்குவதற்கு மிகைப்பூதக் (metaphysical) கொள்கையைப் பயன்படுத்தினர். அண்டம் அனைத்தும் ஓர் எண்ணத்தின் அல்லது முழுமுதல்(Absolute) ஆன்மாவின் வெளிப்பாடு ஆகும். இம்முழுமையானது வரலாற்றின் வழியே வெளிப்படுகிறது. சமூக நிறுவனங்கள் எல்லாம் அதன் வெளிப்பாடுகளாவன. இவற்றுள் தலை சிறந்தது அரசு. ஜெர்மானிய தேச மனம் என்று ஒன்று உண்டு. ஜெர்மனியின் அரசும் அதன் அதிகாரிகளும் ஜெர்மானிய தேச மனத்தை எடுத்துக் கூறுகின்றனர், என்றெல்லாம் அவர் பகர்ந்தார்.

ஃபோசான்க்வே (Bosanquet) என்னும் அரசியல் தத்துவரும் அரசின் அதிகாரத்தை முழுமுதன்மைய மிகைப்பூதவியலைக் (Absolutistic metaphysics) கொண்டு ஆதரித்தார். நாம் எல்லோரும் முழுமுதன்மையின் தோற்றங்கள். ஆகையால் நமக்கு இரண்டு தன்னகங்கள் (selves) உள்ளன. ஒன்று, நாம் எல்லோரும் அறிந்த, வரையறைக்குட்பட்ட காண்நிலைத் தன்னகம் (empirical self), மற்றது, உண்மையான, முடிவான, எல்லோருக்கும் பொதுவான தன்னகம். இவற்றிற்கேற்ப நம்மில் இரண்டு முயற்றிகள் உள்ளன. ஒன்று சொந்த முயற்றி (personal will) ; மற்றது உண்மையான பொது முயற்றி. பின்னையது முழு முதன்மையின்

முயற்றியும் ஆகும். குடும்பம், கோயில், அரசு முதலிய சமூக நிறுவனங்களின் மூலம் அது பேசுகின்றது. அரசு, அற உலகம் முழுமைக்கும் அது பாதுகாப்பாளர் போன்றது. சாதாரணக் கடன்கள் அதற்குக் கிடையாது என்று அவர் கூறினர்.

திறனாய்வு. (criticism)

பொது முயற்றிக் கருத்தானது, அரசியல் வரலாற்றில் அழிவுக்கு அடிகோலியது. சமூக அறிவியல் வளர்ச்சியில் அது வறட்டு வாதமானது. பொது முயற்றிக் கருதுகோள், விதிவிளக்க விரித்துரைக்கும், காண்நிலை முறையில்மெய்ப்பிப் பதற்கும் பயன்படாதது. பூதவியலிலும் வானவியலிலும் பயனற்ற கருது கோட்கள் என்று நியூட்டன் கூறியவற்றோடு இதனையும் சேர்ப்பது தகும்.

இந்த எண்ணத்தை ஆதரித்த தத்துவர்கள் குழு மனத் தைத் தேசீய மனம் என்று கூறி, சிறு குழுக்களின் சிறப்பைக் குறைத்தனர். அரசுக்குக் கடவுட்டன்மை ஏற்றிக் கூறினர். அதன் செயல்கள், அனைத்திற்கும் நியாயம் கூறினர். தனி யாளையும், குடும்பம், சமுதாயம், கல்வி நிறுவனங்கள் முதலிய சிறு உயிர்ச்சாரக் (Vital) குழுக்களையும் குறைவாக மதிப்பிட்டனர். இதன் விளைவாக, போர்வெறித் தேசீயம் (militant nationalism) ஒரு மதமாகி விட்டது.

பொது முயற்றிக் கருத்து, தகவல்களால் (Facts) ஆதரிக்கப்படுவதில்லை. பொதுச்சபைகளில் நாம் காணும் வாக்கெடுப்பு எப்பொழுதும் பொது நன்மைக்கு இயைவதில்லை. சிலவேளைகளில் அது பெரும்பான்மை யோர் வாக்கினால் தீர்மானிக்கப்படுவது. வேறு சில வேளை களில் அது இருபான்மையோரும் ஓரளவு விட்டுக் கொடுப்பதால் ஏற்படுவது. அது எப்பொழுதும் தலை சிறந்த நடவடிக்கையாகவே இருக்க வேண்டும் என்ப தில்லை. மேலும் சமூகத்தின் நலனைப் பற்றி மக்களுக்குத் தெளிவான கருத்து உண்டென்று சொல்ல முடியாது. முயற்றி என்பது ஒரு நனவுடைச் செயன்முறை, ஒரு திட்ட வட்டமான நோக்கத்தை எய்துவதற்கான தீர்மானம் ஆகும். ஆகையால் பொதுச் சமூக நலனைப் பற்றியதொரு மங்கிய அவாவினை முயற்றி என்று கூறமுடியாது. மக்கள் அறியாமலே பொது நலனை முயல்வார்கள் என்று கூறுவது

பொருளற்றது. ஆளின் முயற்றியேயன்றி வேறு முயற்றி கிடையாது, 1 என்று ஜோட் (C. E. M. Joad) கூறியுள்ளார் சில தனியாட்களே சமூகத்திற்கு வேண்டிய நனவுடைத் தீர்மானங்கள் அனைத்தையும் செய்கிறார்கள். தன்னளவுள்ள எண்ணம் சமூகத்தில் இருந்தால், அது பொதுவானதல்ல ; சமூகத்தில் பொதுவான உளவியல் ஆற்றல்கள் செயல் புரிந்தால் அவை முயற்றியும் அல்ல, 2 என்று ஃகின்ஸ் பெர்க் கூறியுள்ளார். மேலும் பொது நலத்தில் அக்கரை யுடையவர்கள் என்று நாம் ஏற்கக்கூடிய சிலரும் மக்களுக்கு நல்லது யாது என்பதைப் பற்றி ஒருமித்த கருத்துடையவர் கள் அல்லர்.

ஆகையால் காண்நிலைச் சமூக உளவியலைப் பொருத்த வரையில், பொது முயற்றி என்னும் எண்ணத்தை மறை பொருட் கருத்து (mystical notion) 'கற்பனைச் சொன்மாலை' 'புராதன உயிர்க் கொள்கை, 'சமூகத்தை ஆளுருப்படுத்தல் (Personification), 'மிகைப்பூதவியலாகத் திரியும் கருத்து, என்று பலவாருகக் கூறி விடுத்தனர். சமூக முயற்றி முன்ன தாகவே அமைந்துள்ளதென்று சமூக உளவியலர் நம்புவ தில்லை. ஒரு வேளை அதை அமைக்கக் கூடும். அப்படி யானால் அதை உருவாக்கும் முறைகளை நாம் ஆராய வேண்டும். சமூக, அரசியற் செயன்முறைகளின் உளவியல் அடிப்படையை நாம் கூறுபடுத்திக் காணவேண்டும்.

கூட்ட நனவைப்பற்றிச் சமூகவியலர் கருத்து. கூட்ட நனவு (collective conscious) என்னும் கருத்தை வழங்கிய சமூக வியலர் எஸ்பினசும் (Espinas) ஃடர்க்கெய்மும் (Durkheim, 1858-1919) ஆவர். அவர்கள் இரு முக்கிய உண்மை களைக் கவனித்தனர். முதலாவதாக, சமூகக் குழுக்கள் வெறும் சேர்க்கைகளல்ல, அணுவுடைத்திரட்சிகளுமல்ல, அவற்றிற்கு உண்மையுண்டு, தொடர்ச்சியுண்டு, ஒருமை யுண்டு. நமது உள்ளார்ந்த உணர்ச்சியும், பிறர் நம்மை உள்பொருளாகக் கணித்து நம்மைப்பற்றிப் பேசுவதுமே நாம் உள்ளோம் என்று வலியுறுத்துபவை. அதுபோல சமூகக் குழுக்களும் உண்மையானவை. அவை வெறும் கற்பனைப்படைப்புக்களல்ல. நாம் ஒரு குடும்பத்தை ஒரு சமயத்தை, ஒரு தேசத்தைச் சார்ந்தவர்கள் என்ற உணர்ச்சி நமக்கு உண்டு. நாம் விரும்பினாலும், விரும்பா விட்டாலும், நம்மைத் திட்டமான குழுக்களைச் சார்ந்தவர் களாக நினைத்துப் பிறர் நம்மை நடத்துகிறார்கள். சார்பற்ற

உற்றுநோக்காளர்கள் நம் குழுக்களைப் பொதுப் பொருட்களாகக் கருதிப் பேசுகிறார்கள். சில குழுக்களைச் சார்ந்திருப்பதின் இன்னல்களையும் நாம் அனுபவிக்கின்றோம்.

இரண்டாவதாக, பண்பாட்டு முறையில் வேறுபட்ட பல்வேறு குழுக்கள் ஒவ்வொன்றினுள்ளும் வைத்துக் கோடல்கள், வழக்கங்கள், செந்நிலைகள், நிறுவன நடைமுறைகள் முதலிய நடத்தைக் கூறுகளில் சமூகவியலர் ஓரளவு ஒருமை கண்டுள்ளனர்.

இவ்வுண்மைகளை ஆராய்ந்த சமூகவியலர் சமூகத்திற்கு ஓர் உயிரியை (Organism) உவமையாகக் கொண்டனர். இவ் உவமையைப் பின்வருமாறு விரித்துக் கூறத்தொடங்கினர்; சமூகம் ஓர் உயிரி; உயிரியல் உயிரியைப் போலவே அது இயற்கையாகத் தோன்றுகிறது; தன் உறுப்பினர்களின் தேவைக்கேற்ப உள்ளிருந்து வளர்கிறது. (சமூக உறுப்பினர்கள் தாம் சமூக உயிரியின் இழைகளும் (tissues) உயிரறைகளும் (Cells) ஆவர்.) உயிரிகளைப் போலவே சமூகம் விரைவாக மாறுவதில்லை. அதை வலிந்து, விரைந்து மாற்ற முயன்றால் பெருந்தீங்கு விளையும். இறுதியாக, உயிரியைப்போல சமூகம் மாறும் நிலைகளுக்கேற்பத் தன்னைப் பொருத்திக் கொள்கிறது. இவ்வாறு பொருத்திக் கொள்ளும் போது வெவ்வேறு சமூக நிறுவனங்கள் உண்டாகின்றன.

எந்த நியதிகளைக் கொண்டு தனியாட்களை உள்ளோர் என்று கருதுகிறோமோ, அவற்றையே அடிப்படையாகக் கொண்டு சமூகக் குழுக்களையும் உள்ளன என்று தீர்க்க வேண்டும் என்று எஸ்பினஸ் வாதாடினார். தனியாள் தன்னனவு உள்ளவர், அவரது நடத்தையில் ஒவ்வுமை (consistency), திரட்சி (Coherence), ஒரு சீர்மை (Uniformity) அனைத்தும் உண்டு. சமூகக் குழுக்களும் தன்னளவுள்ளவை. அவற்றிற்கு மரபு (tradition) உண்டு. அவற்றின் பல்வேறு செயல்களும் ஒரு திரண்ட படிவத்தின் கூறுகள் ஆகும். ஆகையால் தனியாளுக்கு மனம் உள்ளது போல், சமூகத்திற்கும் மனம் உண்டு என்று எஸ்பினஸ் கூறினார். சமூகத்தின் எண்ணங்களையும் (ideas) உள் துடிப்புகளையும் (impulses) பற்றிப் பேசுவது நியாயமானதே. சமூகத்தின் உறுப்பினர் ஒருவருக்கொருவர் தமது எண்ணங்களையும் உள் துடிப்புக்களையும் உடம்படுத்திக் (communicate) கொள்கின்றனர். இவ் உடம்படுப்புதான் சமூக நனவின் பொருளாகும் என்று அவர் பகர்ந்தார்.

டர்க்கெய்மின் வாதம் பின்வருமாறு: தனியாள் மனமும் பல தனிப்பட்ட மனநிலைகளின் சேர்க்கையேயாகும். (இக் கருத்து அவர் காலத்தவராகிய உண்ட்டின் அணுவிய அமைப்பியல் (atomistic structural) உளவியலைப் பின் பற்றியது). சமூகத்தின் உறுப்பினர் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதால், அவர்களுடைய எண்ணங்கள் ஒன்று சேர்கின்றன. இவ்வாறு பொதுவான எண்ணங்களும் சாயல் களும் (images) கருத்துக்களும் எழுகின்றன. இவை தாம் உறுப்பினரின் நடத்தைக்கு அடிப்படையாகின்றன. இப் பொதுஎண்ணங்களை டர்க்கெய்ம் "கூட்டு முன்னிறுத்தங் கள்" (collective presentations) என்றார். தனியாளுக்கும் சமூகத்துக்கும் இடையேயுள்ள ஒப்பினையும் டர்க்கெய்ம் விரித்துக் கூறினர். தனியாளின் மனவாழ்க்கைக்கு உயி ரறைகள் அடிக்கூறுகள் (substrata) ஆவன. அதுபோல சமூகத்தின் உறுப்பினர் 'கூட்டு முன்னிருத்தங்களின், அடிக் கூறுகள் ஆவர். சமூக உறுப்பினருக்கிடையேயுள்ள உடம் படுப்பின் பங்கை டர்க்கெய்ம் வலியுறுத்தினர். 'பற்பல மனங்கள் தமது எண்ணங்களையும் பற்றுக்களையும் தொடர் புறுத்தி, திரட்டி ஒன்றுபடுத்தியுள்ளன. பற்பல தலைமுறை யாக மக்கள் தங்கள் அனுபவத்தையும் அறிவையும் திரட்டி யுள்ளனர். இவ்வாறு வெவ்வேறு இடங்களிலும் வெவ்வேறு தலைமுறைகளிலும் உள்ள மக்களின் பெரும் கூட்டுறவின் விளைவாகக் கூட்டு நனவு ஏற்படுகிறது' என்று அவர் கூறினர்.

சமூகக் குழுக்கள் மேற்கூறிய முறையில் உள்பொரு ளென்பதையும், உடம்படுப்பின் பங்கையும், இதன் விளை வாக வரும் பொது எண்ணங்களையும் நாம் ஒப்புக் கொள்ள லாம். ஆனால் சமூகம் ஓர் உயிரி என்னும் கருத்தை உருவக முறையில் ஏற்கலாமேயொழிய அதை அதிகம் வலியுறுத்தக் கூடாது. உடலின் உறுப்புக்கள் தனித்து வாழமுடியாதவை. சமூகத்தின் உறுப்பினருக்குத் தனி இயக்கம் உண்டு. மேலும் சமூகத்தின் நோக்கமாவது, அதன் தனி உறுப்பினர் தம் ஆற்றல்கள் அனைத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என் பதேயாம். தனியாட்களின் தேவைகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதாலேயே சமூகம் உள்ளது. ஸ்பென்சர் (Spencer) கூறியபடி, மனித உடல் ஓர் உரு (Concrete) உயிரி; சமூகம் பிரிந்தியங்கு (discrete) உயிரி. கடைசியாக, சமூகம் ஒருபொழுதும் முற்றிருமைப்பட்ட முழுமை ஆகாது. அதைப் பாகங்களாகப் பிரிக்கலாம். புதிய தொகுதிகள்

அமைக்கலாம்; இவ்வாருக அதை மாற்றியமைக்க முடியும். கூட்டுநனவைப் பற்றிய மற்றெரு குறையும் உண்டு. இக் கருத்தில் ஓர் அளவையியற் (logical) குழப்பம் உண்டு. மனச் செயன் முறைகள் (processes) தனி மனங்களிலேயே ஏற்படுகின்றன. சமூகம் முழுமைக்கும்என்று ஒரு பொது மனச் செயன் முறை கிடையாது. தனிச் செயன்முறைகளின் விளைவு கள் தாம் (எண்ணங்கள், மனப்பான்மைகள், தரங்கள் முதலி யன) பொதுவாகின்றன. உடம்படுப்பு (communication) முறையில் அவற்றைப் பகிர்ந்து கொள்கிறேம். ஆகையால் பொதுவான மனப்பொருளடக்கத்தைப் (contents) பற்றிப் பேச முடியாது. ஆகையால்தான், குழுமனவாதிகள் மனச் செயன்முறைகளுக்கும் மனப்பொருளடக்கத்துக்கும் உள்ள வேற்றுமையை உணரவில்லே என்று மாரிஸ் ஃகின்ஸ்பெர்க் கூறியுள்ளார்.

ஆனுல் மேற்கூறிய சமூகவியலரையும் நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் கூற்றினே நாம் எழுத் தளவில் எடுத்துக் கொள்ளக் கூடாது. அச்சமூகவியலரும் இக்கருத்துக்களே உருவகங்களாகவே பயன்படுத்தியிருக்கக் கூடும். தனியாட்கள் குழுக்களாக வாழ்கின்றனர். அவர்க ளிடையே இடைவினேயும் உடம்படுப்பும் உண்டு; குழுத் தரங்கள் இவ்வாறு அமைகின்றன; முன்னேற்றத் திட்டங் கள் உருவாகின்றன; நடத்தை நிறுவனப்படுகிறது;—இத் தகைய கருத்துக்களே அவர்கள் வலியுறுத்துகின்றனர். இவ் உண்மைகளே நாம் மறுக்க முடியாது. உடம்படுப்பு, இடை வினே, குழுத்தர வளர்ச்சி முதலிய கருத்துக்களேச் சமூகவிய லர் உளவியல் முறையில் பாகுபடுக்கவில்லே என்பதே சமூக உளவியலரின் குறைச்சாட்டிற்குக் காரணமாவது. இப்பாகு படுப்பு சமூக உளவியலுக்கு முக்கியமானது. ஆகையால் கூட்ட நனவுக் கருத்து சமூகவியலருக்கு வசதியானதொரு விவரிப்புக் கருத்தாக (descriptive concept) அமைந்த போதிலும், சமூக உளவியலருக்குப் பயன்படாததாகும்

சமூக உளவியலும் குழுமனமும் லிபான் (Le Bon, 1892) கூட்ட (Collective) அல்லது குழுமனம் (group mind) என் னும் கருத்தைத் துணேக்கொண்டு கும்பல் நடத்தையை விளக்க முயன்ருர். கும்பல் (The Crowd) என்ற தமது புத்த கத்தில் அவர் எழுதியதாவது: "பல தனியாட்கள் செயல் புரியும் நோக்கத்தோடு கும்பலாகக் கூடியிருக்கும்போது, அவர்கள் இவ்வாறு கூடியுள்ள காரணத்தால் மட்டுமே சில

புதிய உளவியற் பண்புக்கூறுகள் விளைகின்றன. ஏற்கனவே யுள்ள இனப்பண்புக் கூறுகளோடு இவை சேர்கின்றன. அவர்களுடைய நனவுடை ஆளுமை மாய்கிறது. ஒரு கூட்டு மனம் உருவாகிறது. இது தற்காலிகமானது. ஆனால் அதற்குத் தெளிவாக வரையறுக்கப்பட்ட பண்புகள் பல உள. கும்பலில் உள்ள தனியாட்கள் யாராக இருந்தாலும் சரி..... அவர்கள் குழுவாக மாறியுள்ள காரணத்தால் அவர்களிடம் ஒரு கூட்டுமனம் உருவாகின்றது. இதன் விளைவாக ஒவ்வொரு தனியாளும் குழுவில் உணர்வதும், சிந்திப்பதும், செயல் புரிவதும் தனி நிலையில் காணும் இச்செயல்களுக்கு மாறுக அமைகின்றன. கும்பல் என்பது ஓர் இடைக்கால (provisional) அமைப்பு; அது வேறுபட்ட மூலக் கூறுகளால் அமைவது. உடலில் உயிரறைகள் அமைந்துள்ளது போல் இக்கூறுகள் அந்த நேரத்தில் ஒன்றுகச் சேர்ந்துள்ளன."

மக்டூகலும் (W. McDougall) குழுமனம் (1920) என்ற புத்தகத்தில் இக்கருத்தைப் பயன் படுத்தினர். ஆனால் அவர் இதனைப் பயன்படுத்திய முறை முன்னைய முறையை விட ஏற்கத் தகுந்ததாகும். மக்டூகலும் சமூகத்தை ஆளுருப் படுத்தினர். ஆனால் அவர் ஆள் தனியியலிலும் (individuality) சர்வதேசக் கொள்கையிலும் நம்பிக்கை கொண்டதனால், தத்துவர்கள் அரசுக்குக் கடவுட்டன்மை கற்பித்ததை எதிர்த்தார்; தேசத்திற்கு ஓர் ஆன்மா, ஒரு மனம், ஒரு பண்பு உண்டு; இவை அமைப்பினால் (organization) ஏற்படுவன என்று கூறினர்; தேசத்தை ஓர் உயிரிக்கு ஒப்பிட்டு அவ் உவமையை விரித்துக் கூறினர். தேசத்தின் பல்வேறு நிறுவனங்கள்—அஞ்சல், தந்தி, உடல்நலத்துறைகள் முதலியவை—தேச உயிரியின் கை கால்களுக்கு ஒப்பானவை என்று அவர் கொண்டார். குழுமனம் என்னும் கருத்து நன்கு புரிந்து கொள்ளக் கூடியது, தள்ள வேண்டியதன்று என்று அவர் எண்ணினர். மனம் ஒரு சிக்கலான அமைப்பு, எளிய தொரு பொருளன்று; அது பல்வேறு மூலக்கூறுகளால் அமைந்ததென்று அவர் காலத்திலுள்ள பொதுவான கருத்தை அவரும் ஏற்றுக்கொண்டார். அவ் அமைப்பிலுள்ள கூறுகள்—தனியாளின் தேவைகளும் நோக்கங்களும்—முயற்றித் தன்மை வாய்ந்தவை (conative) என்பது அவரது கருத்து. அதற்கு ஆதாரமாக மருத்துவ ஆய்வுகளில் கூறப்படும் பிரிந்த (divided) உடன்—நனவுடை (co-conscious), மாறிவரும் (alternating) ஆளுமைகளை அவர்

எடுத்துக்காட்டினர். சமூகவியலரும் மனத்தின் அமைப்பியல் கொள்கையை ஆதரித்தனர்; சமூக மனத்தின் ஒருமையை அமைப்பியல் முறையில் விளக்கினர். கூலீ (C. H. Cooley) கூறியதாவது. "மனம் ஓர் உயிரிய (Organic) முழுமை யாகும். பல்லியத்தின் (Orchestra) இசையானது வேறு பட்ட, ஆனல் இணைந்த ஒலிகளால் அமைவது போல ஒத் துழைக்கும் தனியாட்டன்மைகளால் அது ஆவது.....சமூக மனத்தின் ஒருமையானது ஒத்துப் போவதனலல்ல, அமைப் பினலும் இருவழிப் பாதிப்பாலும் (reciprocal influnce) ஏற்படுவது. நடப்பன ஒவ்வொன்றும் மற்றெல்லாவற்றை யும் பாதிப்பதால் ஏற்படுவது"*. குழுமனமானது தனியாட் களின் தேவைகளையும் நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டதொரு அமைப்பு என்று மக்டூகல் கருதியதும் இக் கூற்றை வலியுறுத்துகிறது.

குழுமனக் கருத்தை மக்டூகல் வரையறுத்த முறை காண்நிலைச் சமூக உளவியல் வளர்ச்சிக்கு ஏதுவாக அமைந் தது. சமூகக் குழுக்களை நேரில் உற்றுநோக்கி, அவற்றின் அமைப்பிற்கான காரணிகளை அறிவதற்கு இக்கருத்து அடி கோலியது. அமைப்பியற் செயன்முறையை மக்டூகல் ஆயுங்கால் படை, தேசம் என்ற மிகச் சிக்கலான அமைப்புக் களையும் கும்பல் என்ற குறைந்த அமைப்பினையும் எடுத்துக் கொண்டார். இவ் ஆய்வின் விளைவாக குழுவிற்கு ஒரு மன வாழ்க்கை உண்டு. அது குழு உறுப்பினரின் மனவாழ்க்கை ஈட்டத்தை விட மிகையானது. தனியாள் வாழ்க்கை விதிகளேயன்றி குழு வாழ்க்கைக்கும் சில தனி விதிகள் உள்ளன, என்று அவர் கூறினர்.*

அண்மையில், காட்டெல் [R. B. Catell] குழு மனக் கருத்தை மற்றொரு வகையில் பயன்படுத்தினர். மருத்துவ உளவியலானது மனச்சான்று, சமயமாற்றம், இறை வணக்கம் முதலியவற்றை, இயற்கை முறையில் விளக்க முற்பட்டுச் சமய நம்பிக்கையைக் குறைத்தது. குழுமனக் கருத்து இந்த நம்பிக்கையை வலியுறுத்த உதவுகிறது. மக்டூகலின் வாதத்தைத் தொடர்ந்து இவர் மேலும் கூறுவது தனிமனம் என்று நாம் சொல்லும்பொழுது, தனியாள்

*இக்கருத்து பலரும் ஏற்பதொன்று. கிரெச்சும், கிரச்ஃபீல்டும் கூறுவது. "நாம் பழைய குழுமனக் கருத்தையும் அதன் இன்றைய பதிலீடுகளையும் தள்ள வேண்டும். ஆனல் தனியாளையல்ல, குழுவையே ஆய்வின் அடிப்படையாகக் கொண்டு குழு நடத்தை விதிகளை நாடக்கூடும், நாடவேண்டும். இத்தகைய குழு நடத்தை விதிகள், தனியாள் நடத்தை விதிகளை நிறைவு செய்வன.

உயிரோடிருக்கிறார் ; தூண்டலுக்கேற்பத் துலங்குகிறார் ; மனவெழுச்சிகளும் வேட்கைகளும் உடையார் ; சில காரியங்களை முயல்கிறார் , செய்கிறார் ; வெவ்வேறு செயல் வகைகளுக்கிடையே தகுந்ததைத் தீர்மானிக்கிறார் ; நினைவாற்றல் உடையார் ; ஆளுமைக்கு ஆதாரமான பல நிலையான பழக்கங்களும் பற்றுக்களும் உடையார் என்பவற்றையெல்லாம் நினைத்துக் கொள்கிறோம். நல்ல நிலையில் உள்ள ஒவ்வொரு குழுவும் குறிப்பிட்ட முடிவை நோக்கி ஒருமித்துச் செயற்படுகிறது ; புறம்பான தூண்டலுக் கேற்பத் துலங்குகிறது. மன வெழுச்சி உள்ளமைக்குச் சான்று பகர்கின்றது. தேச நடத்தையிலும் மனப்பழக்கத்தின் தனிக்கோலங்களையும் (idiosyncracies) நாட்டு மனப்பாங்கையும் காண்கிறோம். குழு நினைவானது (group memory) ஓரளவு தனி மனங்களிலும், ஓரளவு நூலகங்களிலும் அமைந்துள்ளது. தேசீய மரபுகள் மக்களின் நிலைத்த பற்றுக்களை வெளியிடுகின்றன. தனி மனங்களுட் பலவகைகள் உள்ளன போல், குழுமனங்களுக்குள்ளும் பல வகைகள் உள்ளன. பொதுக் குழுவின் (body politic) தேவைகளையும் ஓரளவு நிறைவேற்றும் வகையில் உந்துகளெல்லாம் அமைக்கப் பெறும் போது தான் இருவகை மனத்திற்கும் இசைந்த நிலை ஏற்படுகிறது. சாதாரணமாக நாம் பேசும் பொழுது குழுமனம் என்ற தொடரைப் பயில்வதால், அதற்கு இணையாக ஏதோ ஒன்று இருக்க வேண்டும். நாம் இல்லாததொன்றையும் கற்பித்துக் கூறவில்லை. தனியாளைப் போலவே பொருளும் தன்னுணர்வும் திரண்ட நிலையையே பற்றிக் கூறுகிறோம்.

முடிவாகச் சில கருத்துக்களைக் கூறுவாம். பொது முயற்றி என்னும் மிகைப் பூதக் கருத்து மறைபொருட்டன்மையது. அது விதி விளக்க விரித்துரைக்கும் மெய்ப்பித்தலுக்கும் பொருந்தாத கருதுகோளாகும். சமூக அல்லது கூட்டு நனவு என்னும் கருத்து சமூகவியலரது நோக்கத்திற்குப் பொருந்துவது. சமூகம் அமைக்கப்பட்டதோர் உறுப்பியம் (Organized Structure) என்னும் கருத்தைச் சுட்டுவது. குழுமனத்தைப் பற்றிப் பேசிய உளவியலரும் அமைப்புக் கருத்தையே மனத்திற் கொண்டனர். குழுமனம் என்னும் கருத்து உற்றுநோக்கலையும், ஆராய்ச்சியையும் தடுத்தால் அதைத் தள்ள வேண்டியது தான். ஆனால் மக்டூகலும் பிறரும் இக்கருத்தைப் பயன்படுத்திய முறை ஆராய்ச்சியைத் தடுக்கவில்லை. ஆகையால் சமூகத்திலுள்ள இருவழித் தொடர்புகளையும் அமைப்பின் காரணி

களையும் இதன் விளைவாகப் பெறும் குழுவின் மனவாழ்க்கை ஒருமையையும் பற்றி ஆய்வதற்கு இதனை பயன்படுத்தலாம்.

References.

1. C. E. M. Joad Guide to the philosophy of Morals and politics pp 508
2. Morris Ginsberg, The psychology of Society p. 57.
3. C. H. Cooley, Social Organization : A Study of the Larger Mind
4. W. McDuugall, Grop Mind. pp--11, 101.
5. Krech and crutchfiled, Theory and problems of Social psychology P. 21.
6. R. B. Catell, Psychology, and the Religious Quest-Ch VI

4. சமூக நடத்தையின் தனியியல் அடிப்படைகள்

(Individual Bases of Social Behaviou)

பொதுவாக, பிறப்புக்கு முன்பு ஒன்பது மாதம் வளர்ந்து, பின் மனிதக் குழந்தை பூதப்பொருளும் ஆட்களும்கொண்ட இவ்வுலகில் தோன்றுகிறது. மனித இனத்திற்கே உரிய உடலமைப்பை இயல்பாகவே கொண்டு அது பிறக்கிறது. இவ்வுடலமைப்பு, ஒரு திட்டமான முறையில் முதிர்ச்சியடையும் தன்மை வாய்ந்தது, உடம்பின் புறத்திலும் அகத்திலும் உள்ள போர்வைகளை (linings) அடுத்துள்ள நரம்பு முடிவுகள் பல்வேறு பொறிகள் ஆகின்றன. இவை பல்வேறு தூண்டல்களை உணர்ந்தறியக் கூடியவை. இப்பொறிகள் தூண்டப்பெற்றால் உடலில் மின்துடிப்புக்கள் (electric impulses) ஏற்படுகின்றன. இத்துடிப்புக்கள் வெவ்வேறு நரம்புகளின் வழியே சென்று தண்டு வடத்தை (Spinal Cord) யும், மூளையின் அடித்தளத்தையும் அடைகின்றன. அவற்றிலிருந்து தோன்றும் எதிர்த்துடிப்புக்கள் தசைகளுக்கும் சுரப்பிகளுக்கும் செல்ல, இவ்வுறுப்புக்கள் தம் செயலை ஆற்றுகின்றன. மூளைக்குச் செல்லும் துடிப்புக்கள் அங்கு ஒருமைப்படுகின்றன. இதன் விளைவாக மூளையினின்று செல்லும் வெளிச்செல் நரம்புகள் துடிப்புறுகின்றன. தண்டு வட, மூளையின் அடித்தள மட்டங்களில் ஏற்படும் துடிப்புக் கடத்தலால் (transmission) ஏற்படும் துலங்கல்கள் வெளிப்படையான நனவுக்குப் (explicit consciousness) புறம்பானவை. இத்துலங்கல்களைத் தன்னிகழ் (automatic) வினைகள் அல்லது மறிவினைகள் (reflex) என்னலாம். துடிப்புக்கள் தண்டுவடத்திலிருந்து மூளைப் புறணிக்கு (cortex) அனுப்பப்படுவதால் தோன்றும் துலங்கல்கள் வெளிப்படை

நனவுநிலையில் அமைப்வை. இதை வெளிப்படை நனவு என்பது ஏனென்றால் தண்டுவடமட்டத்தில்கூட ஓரளவு நனவு ஏற்படக்கூடும். ஆனால் இது மிகக் குறைத்த நனவே யாம். அம்மட்டத்திலுள்ள நனவு எத்தகையது என்று நாம் சரிவர அறிய முடியாது.

மூளை வெறும் கயத்தி (transmitter) மட்டுமன்று. அது தானே துடிப்புக்களைத் தோற்றுவிக்கவும் கூடும். மூளையானது எப்பொழுதும் செயற்பட்டுக்கொண்டிருக்கும் பெரிய உயிரறைப் பின்னல் (net work of cells) ஆகும் என்று மின் உடலியல் (electro-Physiology) ஆராய்ச்சிகள் மூலமாகத் தெரிகிறது. மனித நடத்தையைப் புரிந்து கொள்வதற்கு இக் கண்டு பிடிப்பு உதவுகிறது. மூளைச் செயற்பாட்டின் மொத்த ஒருமைப்பட்ட படிவம் மிகச் சிக்கலானது, எப்பொழுதும் மாறிக்கொண்டிருப்பது. ஆகையால் மூளையை அடிக்கூருகக் (substratum) கொண்ட நனவுமட்ட மன வாழ்க்கையும் மிகச் சிக்கலானது, மாறிக்கொண்டேயிருப்பது. இதனால் தான் தனியாளின் நடத்தையைத் திட்டமாக முன் கூறுவது மிக அரிதாகிறது.

மனித நடத்தையின் உள்ளார்ந்த அடிப்படை

மனிதனுடைய 'இயல்புத்தன்மை' அல்லது நடத்தையின் இயற்கை அடிப்படையைப் பற்றிய ஆராய்ச்சி எக்காலத்தும் பல ஆய்வாளரைக் கவர்ந்ததொன்றாகும். மனிதனுடைய நடத்தையை, துலங்கல்களுக்கு ஏற்ப ஒழுங்கற்ற முறையில் ஏற்படும் துலங்கல் தொடர்ச்சியாக மட்டும் கருத முடியாது, இக் கருத்துக்கு எதிரான பல உண்மைகள் நமக்குத் தெரியும். பிறந்த நாள் தொட்டு மனித நடத்தை செயல்களாகவே அமைகிறது. அவனுடைய துலங்கல்கள் பொருளற்றவையல்ல; அவை கோள் (goal) களுக்கு நேராக அமைபவை. குழந்தைகளிடத்தும், தாழ்ந்த விலங்குகளிடத்தும் இக்கோள்களைப் பற்றிய சிந்தனை, கற்பனை, நோக்கு ஆகியவை தெளிவாக அமைவதில்லை. குழந்தையின் மூளை வளர்ந்தக்கால், அனுபவங்கள் இருத்தப்படுகின்றன. சாயலுறுதலும் (imaging) எதிர்நோக்குதலும் இயலுகின்றன. செயல்கள் நோக்கத்தோடும் முயற்சியோடும் நடைபெறுகின்றன. ஆயினும், குழந்தைகளுக்கும், விலங்குகளுக்கும் கோள்-நோக்கிய (goal-directed) நடத்தை உண்டு என்பதை மறுக்க முடியாது. ஒரு செயலைத்

தொடர்ந்து செய்வதையும் இடையீடுபட்ட பணியை மீண்டும் எடுத்து முடிக்கும் பாங்கையும் அவைகளிடத்துக்காணலாம். இச்செயல்கள் கோள்-நோக்கிய அல்லது நோக்க முடைய நடத்தைக்கு அறிகுறியாகின்றன. கூடு கட்டத் தொடங்கிய குளவி தன் கூடு முற்றுப்பெறும்வரை ஓய்வதில்லை. குழந்தைகள் தாம் எடுத்துக்கொண்ட சிறிய பணிகளைச் செய்து முடிக்கின்றனர். பெரியவர்களும் இப்படியே செய்கின்றனர்.

கோள்-நோக்கிய நடத்தையை ஊக்கிய அல்லது ஊக்கம் பெற்ற (motivated) நடத்தை எனலாம். மனித நடத்தையின் இப்பகுதியை ஆராய்பவர்கள் எதிர்ப்படும் சில கேள்விகளாவன; மனித நடத்தையின் நெறி இயற்கையாலேயே எவ்வகையிலாவது தீர்மானிக்கப்பட்டுள்ளதா? மனிதன் சில குறிப்பிட்ட நிலைகளில் சிலவகை நடத்தைகளைத் தவிர்த்து வேறு சிலவற்றைக் கொள்ளும் தன்மையனாய் அமைந்துள்ளானா? அதாவது உள்ளார்ந்த செயற்-போக்குகள் அல்லது ஊக்கிகள் உள்ளனவா? அப்படியானால் அவை எத்தனை? அவற்றின் தன்மை யாது? உணவு, செல்வம், உடல் இன்பம், வலிமை, புகழ், புதிய அனுபவம், அறிவு ஆகியவற்றை மனிதன் நாடுகின்றான், தன் ஆற்றல்களை வெளிப்படுத்த முயற்சி செய்கிறான். இவற்றிற்கு அடிப்படை இயற்கையாக அமைந்ததா? உயிர் ஆற்றல் (elan vitale or libido) மனித உயிரிகளுள் அடைக்கப்பட்டு, இத்தகைய கோள்களை அடைவதற்காகச் செலவிடப்படுகிறதா? அல்லது மனிதனது நடத்தையின் நெறிப்பாட்டிற்கு சூழ் நிலைக் கூறுகளும் வளர்ப்புந்தான் காரணமா?

இத்தகைய உள்ளார்ந்த (innate) அல்லது இயல்புப் போக்குகளைத் (native tendencies) தேடுவது தேவையற்ற முயற்சி என்று சிலர் கூறுவர், ஒரு தனியாளின் அல்லது ஒரு குழுவின் நடத்தையைப் புரிந்துகொள்வதற்கு அவர்களுடைய நடத்தைகள், மனப்பான்மைகள், கவர்ச்சிகள், உணடித்தேவைகள், அந்தந்த நிலைமையின் தன்மை ஆகியவற்றைப் பற்றி மட்டும் நமக்குத் தெரிந்தால் போதும் என்று கூறுவர். ஆனால் அறிவியல் ஆராய்வுக்கத்தை இப்படிக் கட்டுப்படுத்திவிட முடியாது. மற்ற அறிவியலர்களைப் போலவே உளவியலரும் நிகழ்முறைகளைப் பரந்த முறையில் புரிந்துகொள்ள முயல்கிறார். நடத்தையின் முதல் அடிப்படையைக் காண முற்படுகிறார். இவ்வளவு தூரம்

தான் செல்லவேண்டும்; இதற்குமேல் போகக்கூடாது என்ற நியதி அறிவியலருக்குஇல்லை. நடத்தையின் முதல் அடிப்படையை விளக்கக் குழந்தையின் நடத்தையைப் பற்றிய அறிவு தேவைப்பட்டால் உளவியலர் இப்பகுதியைப் பற்றிப் படிக்கிறார். உயிரிகளின் தேவைகள் நடத்தையை விளக்குவதற்குத் தேவைப்பட்டால் இவற்றை மனித நடத்தையின் உந்துகள் (drives) என்று சொல்ல அவர் தயங்கமாட்டார். மனிதனுக்கும் விலங்குகளுக்கும் படி மலர்ச்சித் (evolution) தொடர்ச்சி இருப்பதால் அவர் சற்று அப்பால் சென்று மனித நடத்தையை விலங்கு நடத்தையோடு ஒப்பிடலாம். சில பரந்த செயல்வகைகள் மனிதனுக்கும், விலங்குகளுக்கும் பொதுவாக அமைந்தால் அவருடைய ஆராய்ச்சி பலன் தந்ததாகும்.

மனிதத் தன்மையின் இயற்கை அடிப்படையைப் பற்றிய ஆராய்ச்சி மிகக் கவர்ச்சிகரமாக அமைவதுடன், கல்விக்கும், சமூகப் புத்தமைப்பிற்கும், மிகப் பயன்படக் கூடியதும் ஆகிறது. மனிதனுக்கு இயல்பானது, அதாவது எங்கணும் பொதுவானது யாது? சூழ்நிலையாலும் பயிற்சியாலும் அமைவது, அதாவது இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப மாறுவது எவ்வளவு? என்று நாம் அறிதல் நலம். கலைஞனுக்குத் தன் ஊடகத்தின் (medium) தன்மையும் வரம்பும் தெரியவேண்டும்; அதுபோலவே மனிதனெடு செயலாற்ற முயல்பவர்களுக்கு மனித இயற்கையைப்பற்றித் தெரியவேண்டும்.

உயிரியத் (Organic) தேவைகளும் கல்லாமல் அமையும் நடத்தையும்.

மனிதன் ஓர் உயிரி (Organism): ஆற்றல்கள் எப்பொழுதும் செலவாகிக் கொண்டும், மீண்டும் வந்து சேர்ந்து கொண்டும் இருக்கும் ஒரு பண்டகசாலை (store house). செயல் உயிரிக்கு உள்ளாகவே அமைந்துள்ளது. இச் செயலில் ஒரு பகுதி உள்ளிருந்து தோன்றுவது; மற்றொரு பகுதி வெளித்தூண்டல்களுக்குத் துலங்கலாக அமைவது. செயல் உள்ளிருந்து தோன்றுவதென்பது வெறும் மறை பொருள் (mystical) தத்துவமன்று, அது தனிநிகழ்ச்சிகளால் ஆதாரம் பெற்றதோர் உண்மை. ஓர் உயிரி, தன்னையும் தன் உறுப்புக்களையும் செயற்படுத்திக்கொண்டே இருக்கின்றது. உயிரிகளின் படிமலர்ச்சியில் வாழ்க்கை

ஆற்றலானது சிக்கல் அளவில் வேறுபட்ட பல்வேறு அமைப்புக்களைப் படைத்துள்ளது. இத்தகைய உறுப்பியப் படிமலர்ச்சி (Structural evolution) முன்னேற்றத்திற்கேற்ப நினைவு நிலையிலும் முன்னேற்றம் ஏற்படுகிறது. தாவரங்களின் அறிவு நிலை மிகக்குறைந்தது. நமது நிலையினின்று மிகவும் அப்பாற்பட்டது; ஆதலால் அவற்றிற்கு மன வாழ்க்கை உண்டா என்பதே ஐயத்திற்கு இடமாகின்றது. தண்டுவடமற்ற தாழ்ந்த பிராணிகளும், தண்டுவடமுள்ள விலங்குகளும், மூளையுடைய விலங்குகளும் படிமலர்ச்சியின் உயர்ந்த படிகளில் உள்ளவை. மனித உயிரி முதிர்ச்சியடைவதற்குமுன் மேற்கூறிய நிலைகள் அனைத்தையும் மீட்டுணர்கின்றது (recapitulates). அரிஸ்டாட்டில் முன்பே கூறியதுபோல் இந்நிலைகள் அனைத்திலும்செயற்படுகின்றது. மனிதன் ஒரு சிந்திக்கும் தாவரம் (thinking vegetable), ஆயும் பிராணி (reasoning animal), தன்னறிவுள்ள இருப்பி (self-consious being), இவற்றிற்கெல்லாம் காரணம் அவனுடைய மிக வளர்ச்சியடைந்த மூளையாகும். பொருள் தெரிந்த புலக்காட்சி (meaningful perception), நினைவு, கற்பனை, வெற்றுநிலைப்படுத்தல் (abstraction), பயில்வு (application) ஆகிய அனைத்தும் அவனுக்குரிய செயல்கள். ஆகையால் நோக்கமுடைய 'கோள் நாடும் நடத்தை' என்று நாம் சிறப்பாகக் கூறும் நடத்தை அவனுக்கே உரியது.

மனவாழ்க்கை மட்டங்களை உயிரிகளின் படிமலர்ச்சி வளர்ச்சி மட்டங்களோடு இணைப்பதில் இரு நன்மைகள் உள்ளன. இதன் மூலம் உள்ளார்ந்த எண்ணக் கோட்பாட்டை ((theory of innate ideas) ஏற்காமலே விலங்குகளுக்கும், குழந்தைகளுக்கும் நோக்கமுடைய நடத்தை உண்டு என்னலாம். இதன் வாயிலாக ஆய்வாற்றலையும் (Reason), முயற்றியையும் (Will), இயற்கைய நோக்குடன் (naturalistic view) காணமுடியும். முன்னைய அறிஞர் இவற்றைத் தனி மனவன்மைகள் (faculties) என்றனர்.

உயிரி எப்பொழுதும் செயற்பட்டுக் கொண்டே இருக்கிறது. செயற்படுவதற்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கும் உரிய உந்து ஒன்று இருப்பதாகத் தெரிகின்றது. சாதாரணக் குழந்தைகளை உற்றுநோக்கியதிலிருந்தும் இதற்கு ஆதாரம் கிடைத்துள்ளது. ஆனால் செயலின் மூலம் சக்தி செலவாகிறது; சமநிலை (equilibrium) மாறுகிறது;

சேதப்பொருட்கள் தேங்குகின்றன. ஆகையால் அடிக்கடி உடலின் சமநிலையை நிலைநிறுத்தவேண்டிய தேவை (homeostasis) ஏற்படுகிறது. உணவு அல்லது நீர்மம் அருந்துவதன்மூலம் இத்தேவையை நிறைவேற்றலாம். ஓய்வு, தூக்கம், கழிவுப் பொருள் வெளியேற்றுதல் ஆகியவை இந்நிலையை அடைவதற்குத் தேவையாகின்றன. சமநிலைமீட்கும் உயிரியத் தேவைகள் நிறைவேற்றுவதற்காக மனிதன் உணவு, நீர், ஓய்வு முதலியவற்றை நாடுகின்றான். இச்செயல்கள் அனைத்தும் தற்காப்புக்கு உதவுகின்றன.

பால் முதிர்ச்சியடைந்தவுடன் புதியதொரு தேவை ஏற்படுகிறது. பாலியற் செயற்புரிவுகள் (Sexual functions) மூலம் காம இச்சைகள் நிறைவேற்ற வேண்டிய தேவை உண்டாகிறது. சாதாரணமாக அது ஒருவரை எதிர்பாலுக்கு நேராக உந்துகிறது. இ த ன் முடிவு இணைவிழைச்சு (Mating); இனவிருத்தி அதன்விளைவு, கருத்தரித்தபின், பெண்ணின் தனங்களின் செயற்பாடும் முதிர்ச்சியடைகிறது. குழந்தை பிறந்ததும் அதற்குப் பாலூட்டவேண்டிய தேவை ஏற்படுகிறது. ஆகையால் உயிரியலர் தற்காப்பையும் இனக்காப்பையும் இரண்டு அடிப்படை உந்துகள் என்று குறித்துள்ளனர். (தற்காப்பு உந்தையும் கூட இனக்காப் பி னு ள் அடக்கலாம். ஏனென்றால் இனவிருத்தியின் முடிவை எய்தியபின் தனியாள் உயிர்வாழ்க்கைப் போராட்டத்தில் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்வாங்குகிறார். புதிய தலைமுறை முன்னேறுகிறது. உயிரிய இருப்பு (Organic existence) உலகத்தைவிட்டு வெளியேறுவதற்குத் தனியாள் விரும்பாவிட்டாலும், இயற்கை அவரை நலிவுறுத்துகின்றது. அவருடைய உடலமைப்பின் அடிப்படையைச் சிதைக்கின்றது. ஒரு நாள் அவருடைய உடல் கட்டவிழ்கின்றது)

இனிமூளை என்னும் உறுப்பைப் பற்றிப் பார்க்கலாம். இது ஓர் வியத்தகு அமைப்பு. முற்றிலும் முதிர்ந்த மனித மூளை நமக்குப் புரியாதபடி அவ்வளவு சிக்கல்களை உடையது. மூளையுள்ள விலங்குக்கு மூளையின் ஆற்றலைப் பயன்படுத்தும் உந்தும் உண்டு. இவ்விலங்குகள் பசியும் தாகமும் இல்லாதபோதும் சுற்றித்திரிந்து தம் சுற்றுப்புறத்தைப்பற்றி தெரிந்து கொள்கின்றன. குழவிகள் (babies) தம்மைச் சுற்றியும் பார்க்கின்றன. பொருட்களையும், தம் கைகால்களையும் தொட்டுப் பார்க்கின்றன. இவற்றைத் தம் வ ா யி ல் வைத்துச் சுவைக்கின்றன. இவற்றை

அசைத்துப் பார்க்கின்றன. குழத்தைகள் புதிய விளையாட்டுக்களைப் படைத்துக் கொள்கின்றன ; புதியவற்றை நாடுகின்றன ; ஆராய்வுச் செயல்களைத் தோற்றுகின்றன. மனிதன் அறிவைத் திரட்டுகிருன்; தத்துவம் பேசுகிருன் ; ஊண், உடை, இணைவிழைச்சு முதலியவற்றை ஒரு கலையாக அமைக்கின்ருன். இவை அனைத்தும் மூளையைப் பயன்படுத்தும் உந்து உண்டென்பதற்கு ஆதாரமாகும். (ஆகையால் மனத்தின் 'உயர்' செயல்களுக்கு ஓர் உயிரிய(organic) அடிப்படை உண்டு. மனச் செயல்கள் வேறு, உயிரியச் செயல்கள் வேறு என்று பிரிப்பது போலித்தத்துவமாகும். நாம் அறிந்த மனச்செயல்கள் அனைத்தும் இதுவரை படிமலர்ந்துள்ள உயிரியப் பொருளின் செயலேயாகும். சிலர் மனத்தையும் உடலையும் இரு கூறுபடுத்திக் காண்கிருர்கள். ஆனல் இவற்றை ஒரே கோலின் இரு நுனிகளாகக் கருதுவது இன்னும் பொருத்தமுடையதாகும். நாம் கோலின் ஒரு நுனியை மட்டும் பிரித்தெடுத்துக்கொண்டு ஓடிவிடமுடியாது. எந்த நுனியைப் பிடிக்கலாம் என்று மட்டும் நாம் தேர்ந்துகொள்ளலாம். மூளையெனும் பொருள் நுனியைப் பிடித்தல் உகந்ததாகும். நம் திறன்களுக்கு இதுவே இயற்கையின் ஆதாரமாகின்றது. வாழ்க்கையின் ஆன்மீக நோக்கு தாவர, விலங்குச் செயல்களை மறுப்பதன்று. மூளையின் செயல்களாக அவற்றைக் கருதி ஒருமைப்படுத்திக் காண்டலே சிறந்தது.)

சுருங்கச் சொன்னல், பின்வரும் செயல்களைத் தேவைகளால் உந்தப்பட்டவையாகக் கருதலாம் : உணவு, நீர், ஓய்வு தேடுதல், கழிவுப் பொருளை வெளித் தள்ளுதல், இணை விழைச்சு, தன் குழந்தைக்குப் பாலூட்டி வளர்த்தல், துருவி ஆய்தல் (exploration) கையாடுதல் (manipulation) கட்டுதல் (Construction) இவைஅனைத்தும் உள்ளார்ந்தவை இயற்கையானவை, கல்லாதவை ; இவை எங்கும் பொதுவானவை. ஆகையால் இவற்றை எல்லா விலங்குகளிடத்தும் காணலாம் என்று எதிர்பார்க்கலாம். தனியாள் தானுகவும், பிறரிடமிருந்தும் கற்பது உண்மைதான். ஆனல் இத்தகைய கற்றலின் மூலம் தன் செயல்களைச் செவ்வனே செய்யப் பயில்கிருன். இச்செயல்களைச் செய்யும் போக்கு கல்லாமலே உள்ளது.

இயற்கையான செயற்போக்குகள் (Native action tendencies)

தேவைகளால் உந்தப் பெற்ற செயல்களைப் பார்த் தோம். சில நிலைமைகளில் வேறு சில வகை நடத்தையை யும் தனியாளிடம் காண்கிறோம். இத்தகைய நடத்தை வகைகள் விலங்குகளிடத்தும் உண்டு. மனிதனிடம் சிறிய வயதிலேயே இவற்றைத் தெளிவாகக் காணலாம். ஆகையால் அவை உள்ளார்ந்தவை என்று கருதுவது தகும். மேலும் கொடிய மனக் கோளாறு ஏற்பட்டு, சாதாரண வாழ்க்கையில் கற்றுக் கொண்டே கட்டுப்பாடுகள் தளர்ந்த போது இவை மிகைப்பட்டுத் தோன்றுவதுமுண்டு. அவை யாவன : அச்சம் தரும் நிலைகளிலும், தீங்கிழைக்கக் கூடிய தூண்டல்களிலும் தோன்றும் **தற்பாதுகாப்பு.** இது பின் வாங்குவதாலும், பிழைத்து ஓடுவதாலும் ஏற்படுவது ; இடைஞ்சல்களையும் தடங்கல்களையும் மேற்கொள்ள எதிர்த் துப் **போராடுதல் ;** பொருட்களைத் **திரட்டல் ;** (அணில்கள் கொட்டை தேவையில்லாதபோதும் அதைச் சேர்த்து வைக்கின்றன. குழந்தைகள் பொருட்களில் பண்டமாற்று மதிப்பை அறியுமுன்னே அவற்றைச் சேர்க்கின்றனர்) **தற்காட்டுதல்** (Self-display); இதனை வலிய விலங்குகளிடத் தும், குழந்தைகளிடத்தும் காணலாம். குழந்தைகள் தங்கள் இயற்கை ஆற்றலையும் பெற்ற திறனையும் உடைமையையும், வலிமையையும் எடுத்துக் காட்டுதலைக் காணலாம் ; பிறர் மேல் **ஆதிக்கம்** செலுத்தும் போக்கு : குழந்தைகள் தலைமைக் காகப் போராடுகிறார்கள். வலிய பையன் பொருள் ஆதாய மில்லாமலே மெலியனோடு சண்டைபோடுகிறான். விலங்கு களிடத்தும் இந்தப் போக்கு உண்டு. இத்தகைய நடத்தை வகைகளோடு கற்றல் கூறுகளும் கலப்பது உண்மை தான். ஆனால் இப்போக்குகளைக் கட்டுப்படுத்தவும், வெவ்வேறு வகையில் வெளியிடவுமே கற்றல் பயன்படுகிறது.

பிற கல்லாத ஊக்கக் கூறுகள்.

மேற்கூறிய தேவையால் உந்தப்பட்ட போக்குகளும், பிற செயற் போக்குகளும் தவிர, வேறு சில கல்லாத போக்கு களும் உள்ளன. சில சுவைகள், நாற்றங்கள், நிறங்கள், ஒலிகள், சந்தங்கள் (rhythms) முதலியவற்றை விரும்பு கிறோம் ; வேறு சிலவற்றை வெறுக்கிறோம். சமையல், வாசனைப் பொருள் செய்தல், வண்ண ஓவியம், இசை

முதலிய கலைகளுக்கு இவ்வியல்பான விருப்பு வெறுப்புக் களே அடிப்படையாகின்றன.

உயிரியல் — உளவியல் தேவைகள்.

மனிதக் குழவி பிறந்ததும் கையாலாகாதது (helpless); தாயையே சார்ந்துள்ளது. இவ்வாறே பல மாதங்கள் இருக் கிறது. தாயை அல்லது தாதியை நாடும் தேவையானது பல உளவியல் தேவைகளுக்கு அடிப்படையாகிறது. (எ-டு) உடனிருக்கை (company) சார்வு (belonging) எழுச்சியக் காப்பு (emotional Security) ஏற்பு (acceptance) பாராட்டு (approval) முதலியன. மனிதன் உயிரியல் முறையில் பிறரைச் சார்ந்திருப்பதால் இவை உண்டாகின்றன. இவற்றை இரண்டாம் படித் (Second Order) தேவைகள் என்னலாம்.

மனித நடத்தையைப் பற்றிய இயல்பியக் கோட்பாடுகள் : மக்டூகலின் ஃஆர்மிகக் (hormic) கொள்கை.

சமூக உளவியல் அறிமுகம் (1908) என்ற நூலில் மக்டூகல் ஓர் இயற்கைக் கோட்பாட்டை எடுத்துரைத்தார். அது மனிதருடைய நடத்தையையும், விலங்குகளின் நடத் தையையும், நோயும் நலனும் உட்பட்ட பல்வேறு நிலை களில் உற்று நோக்கியதை அடிப்படையாகக் கொண்டது, 1 விலங்குகள் முன்னைய அனுபவமோ, பயற்சியோ இல்லா மலே பல்வேறு செயல்களைச் செய்கின்றன. உணவு தேடுதல், கூடுகட்டுதல், ஆபத்திலிருந்து தம்மைப் பாது காத்தல், இணைவிழைச்சு, குழந்தைகளைப் பராமரித்தல் முதலியன கல்லாத செயல்கள். உயிரியலர் இவற்றை இயல் பூக்கச் செயல்கள் என்பர்.

இயல்பூக்கத்தைப் பற்றி முன்னைய உயிரியலர் கருத்து பின் வருமாறு: ஒவ்வொரு விலங்கினமும் ஓர் உடலமைப்பை மரபுவழிப் பெற்றுள்ளது. இவ் அமைப்பு அதன் நடத்தை யைத் தீர்மானிக்கிறது. இயல்பூக்கச் செயல் பொறித்தன் மையது ; நுண்ணறிவு கூடிய செயலன்று ; ஒரு வடிவமாக இறுகியது. ஓர் இனத்தின அனைத்தும் ஒரே வகைச் செயல் களை ஒரே முறையில் செய்கின்றன. ஒரு குளவிப் பூச்சு தன் கூட்டில் ஒரு வெட்டுக் கிளியை செயலறுத்துவைத்து அதன் மேல் முட்டையிட்டுப் பின் கூட்டை மூடப் போகும்

பொழுது, உற்று நோக்காளர் வெளியில் மற்றொரு வெட்டுக் கிளியை வைத்தால், அதைப் பர்ர்த்தவுடன் திரும்பவும் கூட்டைத் திறக்கிறது. அதை உள்ளே கொண்டுபோய் வைத்து வெட்டுக் கிளியை உள்ளே கண்டபின் கூட்டை மூடப் போகிறது. இப்படிப் பலமுறை செய்யுமாறு அதைத் தூண்ட முடியும். ஒரு வகைப் பெண் எலி கட்டும் பொருள் கிடைக்காத பொழுது தன்வாலையே பொருளாகக் கொண்டு கட்டுகிறது. பின் தனது முற்றுப் பெறாத கூட்டைக் கண்டு, அதனுள் தன் வாலை நுழைக்கப் பல மணி நேரம் செலவழிக்கிறது. இவற்றையெல்லாம் பார்த்த முன்னைய உயிரியலர், இயல்பூக்கம் மதியற்றது, குருட்டுத் தன்மையது என்றார்கள். இயல்பூக்கத்தையும், நுண்ணறி வையும் இரு கூறு படுத்தினர்கள். நுண்ணறிவு மனிதனுக் குத்தான் உண்டு என்றார்கள். மனித நடத்தையில் இறுக்கம் குன்றி, நெகிழ்ச்சி அதிகம் உளதாதலின் மனித னுக்கு இயல்பூக்கம் கிடையாது என்றார்கள்.

மக்டூகல் இக்கருத்தை இரு காரணங்களை ஆதாரமாகக் கொண்டு எதிர்த்தார். மனிதன் விலங்குகளினின்று படி மலர்ந்துள்ளதால் இத்தகைய இருகூறுபடுப்பு (dichotomy) முறை ஒவ்வாததாகும். மேலும் இயல்பூக்கச் செயல்களை முற்சார்பின்றி நன்கு உற்று நோக்கினால், தொடர்ச்சியை ஆதரிக்கும் உயிரியற் கருத்தே வலியுறும். முன்னைய உள வியலர் மனிதன் விலங்குகளினின்று முற்றும் வேறு பட்டவன் என்னும் சமயத் தத்துவத்தில் ஊறினவர்கள் : ஆகையால் அவர்களுடைய உற்று நோக்குக் கூட பாதிக்கப்பட்டது என்று மக்டூகல் குறிப்பிட்டார். விலங்கினங்களின் நடத் தையை நன்கு கவனித்தால் அவை நுண்ணறிவோடு கூடிய வை என்பது புலப்படும். விலங்கு நடத்தையும், **கோள்-நோக்கியது** (goal directed) கோளை அடையும் வரை செயல் நீடிக்கிறது ; முன்னைய அநுபவத்திற்கேற்ப செயலில் வேறு படுப்பும் (variation) மாற்றியமைப்பும் (modification) ஏற்படுகின்றன. ஆகவே கற்றல் நடைபெறுகிறது. ஆகை யால் மக்டூகல் இயல்பூக்க நடத்தையை உளவியல் நோக் குடன் எடுத்துரைத்தார் ; ஃஆர்மிகக் (hormic) கொள்கை * என்ற தொரு உயிர்சார (vitalistic) உளவியற் கோட்பாடு வகுத்தார்.

* Horme உயிரோடிருக்க முயறல் : ரோமர்கள் இதை Instinctus என்றனர்.

இயல்பூக்கத்தைப் பற்றிய மக்டூகலின் கருத்து பின்வருமாறு: இயல்பூக்கம் உறுப்பியத்தால் (Structure) தீர்மானிக்கப்பட்ட நடத்தைப் படிவமன்று. அது ஓர் உள்ளார்ந்த போக்கு. அது உள உடலியல் தன்மையது. அதன் வன்மையால் ஓர் உயிரி சிலவகைப் பொருட்களைப்புறக்கணித்து, வேறு சிலவற்றைக் கவனிக்கிறது; அதன் விளைவாக உயிரியுள் ஓர் எழுச்சி கிளர்கிறது; அப்பொருள்களுக்கு ஏற்ப உயிரி குறிப் பட்ட வகைகளால் துலங்குகிறது. இவ்வாறு வரையறுத்த பொருளில் மனிதனுக்கும் இயல் பூக்கங்கள் உள்ளன. அவைதாம் மனித நடத்தை அனைத்துக்கும் ஆதாரமாக அமைந்த இயல்புப் போக்குகள் ஆவன. அவை மனிதருள் எல்லா இனத்தவருக்கும் எக்காலத்தவருக்கும் பொதுவானவை. ஒருவேளை அவற்றின் வலிமை வெவ்வேறு இனத் தனியாட்களிடையே மாறுபடலாம். வெவ் வேறு பண்பாட்டு நிலையிலுள்ள சமூகச் சூழ்நிலையால் அவை எளிதாகத் தூண்டப்படலாம், அல்லது தடைப்படலாம். இவ் இயல்பூக்கங்கள் அல்லது செயற் போக்குகள் மனிதச் செயல் அனைத்திற்கும் மூல இயக்கிகளாகும். சிந்தனைத் தொடரெல்லாம் இயல்பூக்க முடிவுகளையே தொடர்ந்து செய்கிறது. உடற் செயல்களெல்லாம் இயல்பூக்க வன்மைகளால் தொடங்கி நடக்கின்றன; அல்லது இயல்பூக்க அடிப்படையாகப் பிறந்த பழக்கங்களால் நடைபெறுகின்றன. அஃகி அகன்ற அறிவுடையோரின் சிக்கலான மனச் செயற்பாடுகளெல்லாம் இயல்பூக்கத் தோட்டங்களுக்குக் கருவிகளாகவே அமைகின்றன; இன்பமும் துன்பமும் மக்களின் தேர்வையெல்லாம் வழி நடத்துகின்றன. மனிதனை இயக்கும் உள்துடிப்புகள் பல; இவற்றின் தன்மை நீண்டதொரு படிமலர்ச்சி முறையால் தீர்மானிக்கப் பட்டுள்ளது. 2 இயல்பூக்கங்களை ஒரு நீர்த் தேக்கத்தின் மதகுகளுக்கு ஒப்பிடலாம். இவற்றைத் திறப்பதன் மூலம் நீரைப் பல திக்குகளிலும் வெளியிடலாம். இயல்பூக்கங்கள் தகுந்த தூண்டல்களைத் திறவு கோலாகக் கொண்ட பூட்டுக்களைப் போல்வன.

மக்டுகல் 'instinct' (இயல்பூக்கம்) என்னும் சொல்லைப் பயன்படுத்திய முறையைப் பலர் எதிர்த்தனர். ஏனென்றால் உயிரியலர் இச்சொல்லை வேறுபொருளில் பயன்படுத்திவிட்டார்கள். இக்குழப்பத்தை தவிர்ப்பதற்காக மக்டுகல் இச் சொல்லை விட்டுவிட்டார். 1939-ம் ஆண்டில் 'propensity' (உந்தூக்கம்) என்ற சொல்லைப் பயன்படுத்தினர். மனிதனை உண்மையில் ஊக்குவிப்பவை இவ் உந்தூக்கங்களேயாம்.

அமைப்பினுல் தீர்மானிக்கப்பட்டுள்ள தனியாளின் ஆற்றல் கள் அனைத்தும் இவ் ஊக்கங்களுக்குத் தொண்டுபுரிபவை தாம் என்று கூறினர்.

ஒவ்வொரு உந்தூக்கத்தின் மையத்திலும் ஓர் எழுச்சி அமைந்துள்ளது என்று மக்டுகல் கூறினர். அச்சம். காமம், சினம், அன்பு முதலியனவற்றை ஊக்கிகள் என்று பொது உணர்வு (Common sense) கூறுகிறது. இக்கருத்தை மக்டூ கல் ஆதரிக்கிறார். ஓர் இயல்பூக்கத்தைத் தூண்டினுல் ஓர் எழுச்சியும் கிளர்கிறது. இவ் எழுச்சியே செயலைத் தொ டர்ந்து நடத்தத் துணை புரிகிறது. (எ-டு.) அச்சம் மாய்ந் தால் தனியாள் ஓடுவதில்லை.

எழுச்சிகளை, மூல (primary) எழுச்சிகள், கலப்பு (blended) எழுச்சிகள் என்று மக்டூகல் இரண்டு கூறுபடுத்தினர். ஒவ்வொரு உந்தூக்கத்துடனும் இணைந்து வருவது மூல எழுச்சியாகும். (எ.டு.) அச்சம், சினம், காமம், அன்பு, வெறுப்பு, செருக்கு முதலியன. ஒன்றிற்கு மேற்பட்ட உந் தூக்கங்களைத் தூண்டினுல் இவ் எழுச்சிகள் கலக்கின்றன. உட்கு (awe) நன்றியுணர்வு (gratitude) வியப்புணர்வு (admiration) இகழ்ச்சி (scorn) அழுக்காறு (envy) பொரு மை (jealousy) பழிவாங்கல் (revenge) வெட்கம் (shame) முதலியன கலப்பு எழுச்சிகளாம். மனிதனுடைய சமூக வாழ்கையில் இந்த எழுச்சிகள் முக்கிய இடம் பெறுகின்றன. மக்டூகல் பல சார்பெழுச்சிகளையும் (derived emotions) கூறினர். சார்பெழுச்சிகள் நினைவும், முன்னேக்கும் கூடியவை. நம்பிக்கை (belief), நல்லது கோடல் (hope), ஏமாற்றம் முதலியன சார்பெழுச்சிகள் ஆவன.

இயல்பூக்கக் கொள்கைப்படி ஆய்வையும் (Reason), முயற்றியையும் (will) நாம் எப்படி விளக்கமுடியும் ? ஆய் வும் முயற்றியும் மனிதனுடைய தனிச் சொத்து. மனிதனை விலங்குகளினின்று பிரிப்பவை இவை தாம் என்று பலர் கருதுவர். இயல்பூக்க கொள்கைப்படி இவை மனிதனுக்கு மட்டும் உரியவையல்ல,இவை சிறப்பு வன்மைகளுமல்ல. 'ஆய்வென்னும் உள்துடிப்பு இசைவு அல்லது ஒருமைப் பாட்டிற்காக ஏற்படும் ஒரு முயற்சியாகும். தன்னனவொடு கூடிய கோட்படுப்பு (theorising) தொடங்குவதற்கு முன்ன மே இது செயற்படுகிறது. உள்துடிப்புக்கள் வேறு, ஆய்வும் முயற்றியும் வேறு என்று சொல்லமுடியாது. இவற்றிலுள்ள

தத்துவம் ஒன்றேயாகும். முயற்றி என்பது முயற்சியின் (conation) உயர்ந்ததொரு வகையன்றி வேறன்று. முயற்றிச் செயலானது புதியதொரு தனிக்கூறினுல் ஏற்படுவதன்று; ஆழ்ந்த அடிப்படையுள்ள, நிலையான கவர்ச்சித் தொகுதியால் அது ஏற்படுவதாதக் கருதலாம். நமது முயலும் தன்மையின் தொகுப்பே முயற்றியாகும். 3 என்று ஃ கின்ஸ்பெர் ஃ க் ஃ ஆர்மிக உளவியற் கொள்கையைத் தொகுத்துக் கூறியுள்ளார். மனிதனுக்கும் விலங்கினுக்கும் உள்ள முயலும் சக்தியானது அதன் கோள்களை அறிவொடு கூடித் தொடர்கின்றது. விலங்குகளும் அனுபவத்தால் பயனடைகின்றன; ஓரளவு முன்னேக்குகின்றன. ஆனல் அவற்றின் மூளை வளர்ச்சி குன்றியது; அவற்றின் நினைவாற்றல் குறைவானது; மனிதனுக்குப் பரந்த தன்னறிவும், சிறந்த நினைவாற்றலும் நன்கு உருத்துலங்கிய காட்சித் திறனும் உண்டு. ஆகையால் மனித நடத்தை எண்ணித் துணிவது, நேராகச் செல்லாமல் நிறுத்துச் சிந்தித்துச் செல்வது, துண்டு படாமல் ஒருங்காக அமைவது. மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையே காணப்படும் பண்பியல் (qualitative) வேற்றுமைகள் இக்காரணத்தால் ஏற்படுவன.

சமூகத்தில் இயல்பூக்கம்

மக்டூகல் மனித இயல்பூக்கத்தைப் பலவாறு தொகுத்தார். அவர் கடைசியாகத் தொகுத்த பட்டியலில் பதினேழு இயல்பூக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள், அவர் சமூக வாழ்க்கைக்குச் சிறப்புடையன என்று கருதிய பன்னிரண்டு வருமாறு:—

இயல்பூக்கம்	எழுச்சி
1. ஒதுங்கூக்கம் (escape)	அச்சம்
2. அருவருப்பூக்கம் (repulsion)	வெறுப்பு (disgust)
3. ஆராய்வூக்கம் (curiosity)	வியப்பு (wonder)
4. போரூக்கம் (pugnacity)	சினம்
5. முதன்மையூக்கம் (slef-asser-tion)	தன்னெடுப்பு (elation)

6. பணிவூக்கம் (self-abasement or subjection) தன் ஞெடுக்கம் (negative self-feeling)

7. மகவூக்கம் (Parentalinstinct) அன்பு (tenderness)

8. பாலூக்கம் (Sex) காமம் (Lust)

9. உணவு தேடூக்கம் (food-seeking)

10. கூட்டூக்கம் (gregariousness)

11. திரட்டூக்கம் (acquisitiveness)

12. கட்டூக்கம் (constructiveness)

தோழமை நாடுதல், குழு அமைத்தல், நகரம் நாடிச் செல்லல், பாராட்டு வேட்கை முதலியவையெல்லாம் கூட்டூக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை, மக்டூகலின் வழியைப் பின்பற்றிய ட்ராட்டர் (Trotter, 1919) என்பவர் மனச்சான்று கூட்டூக்கத்தைச் சார்ந்து தோன்றியது என்பார். பாலூக்கம், தற்காப்பு, உணவுத் தேட்டம் ஆகியவை சமூக வாழ்க்கைக்கு அடிப்படையானவை என்று அவர் கருதினர். போர்கள் போரூக்கத்தால் ஏற்படுபவை. கோள் நாட்டத்திற்கு (பணம், பெண், நிலம் முதலியவற்றை நாடல்) இடையூறு ஏற்பட்டால் இவ்வூக்கம் தூண்டப்பெறுகிறது. ஈட்டலுக்கும் முதலாளித்துவத்துக்கும் ஓர் உள்ளார்ந்த அடிப்படை உண்டென்று கருதப்படுகிறது. அன்பு, ஒப்புரவு, நேர்மை முதலியவற்றிற்கு அடிப்படையாகவும், அறத்திற்குத் தாயாகவும் அமைவது மகவூக்கமும், பாதுகாக்கும் உள்துடிப்புமேயாம். அடிமை நிலையையும் புறக்குடியிருப்புக்களையும் (slums) அகற்றப்போராடுதல், அனைத்து இல்லம் நிறுவுதல், குழந்தைகளுக்கும், விலங்குகளுக்கும் ஏற்படும் கொடுமையைத் தடுக்கும் சங்கங்கள் ஏற்படுத்தல் ஆகியவையெல்லாம் இவ்வூக்கத்தினின்று பிறந்தவையேயாம். பாலூக்கமும், அதனோடு தொடர்ந்த பொருமையும் திருமணம் என்னும் நிறுவனம் ஏற்படக்காரணமாகின்றன. இதன் மூலம் பால்துடிப்பு கட்டுப்படுத்தப்படுகிறது. பாலூக்கம் வேறு சில காரணிகளோடு சேர்வதால் ஆடை அணிதல், காலக்கோலம் (fashions), படுதா (Purdah) முறை முதலியன ஏற்படுகின்றன. கவியும், கலையும் சமயத்தின்

உயரிய அனுபவங்களும் பால் சக்தியை அடிப்படையாகக் கொண்டவை. உணவும் பானமும் பல ஆசாரங்களின் மையமாக அமைகின்றன. மழை வந்தவிடத்தும், நல்ல அறுவடை உண்டானபோதும் ஏற்படும் மகிழ்ச்சி, குழு நடனங்கள் மூலமாகவும் விழாக்கள் மூலமாகவும் வெளிப்படுகிறது. இவற்றின் மூலம் சமூகம் திடநிலைப்படுகிறது, உணவும் பானமும் தோழமையை வளர்க்கும் பரிசில்களுக்கு ஆதாரமாகின்றன. தன்னெடுப்பின் மூலம் அரசியல், பொருளாதாரம், சமூகச் சீர்திருத்தம், அறிவியல், முதலியவற்றில் முன்னேற மக்கள் விழைகின்றனர். காலக்கோலம் புனைவதிலும் தன்னெடுப்பு பயன்படுகிறது.

ஃபிராய்டிய இயல்பூக்கக் கொள்கை

மக்டூகலின் இயல்பூக்கக் கொள்கை பரவி வரும் அதே காலத்தில் வியன்னாவில் ஃபிராய்டும் (Freud) ஓர் இயல்பியக் (nativistic) கோட்பாட்டின் மூலம் நடத்தையின் ஊக்கத்தை விளக்க முற்பட்டார். உளக்கோட்டத்தை ஆய்ந்து குணமாக்க அவர் எடுத்த முயற்சிகளின் விளைவாக இக் கொள்கை பிறந்தது. ஃபிராய்டு இயல்பூக்கங்களைச் சில தொகுதிகளாகப் பிரித்தார். உண்ணல், கழித்தல், தன்னெடுப்பு, அச்சம் ஆகியவை தன்மைய இயல்பூக்கங்கள் (ego instincts); உதட்டின்பம், ஆசன இன்பம் பாலுறுப்புக் கிளர்வின்பம், கையையும் காலையும் இசையுடன் இயக்கல் உடல் முழுவதையும் பார்த்து மகிழ்தல், உடலைக் காட்டி மகிழ்தல் முதலியன பால் ஊக்கங்களாவன. முதிர்ந்தோரின் இணைவிழைச்சுச் செயலில் இத்தகைய இன்பங்கள் அடங்கியுள்ளதால் ஃபிராய்டு இவற்றைப் பாலூக்கங்கள் என்றார். குழந்தைகள் இச்செயல்களில் ஈடுபடுவதால் பாலூக்கம் குழவிப் பருவத்திலேயே உள்ளது என்றார். அவரிடம் வந்த நோயாளிகள் பலரின் கற்பழிப்புப் பாவனையும் (seduction fantasies), குழவியப் பாலியன்மைக் (infantile sexuality) கருத்தை வலியுறுத்தியது. இன்னும் சாவூக்கம் (death instinct) என்று ஒன்று உளது. பொருட்களை, பிறரை அல்லது தன்னை அழிக்கவும், அதிகாரத்தை எதிர்த்துப் போராடவும் தூண்டுவது இந்த ஊக்கமே. போர்களையும் துன்புறுத்தலையும் பற்றி ஃபிராய்டு இயற்றிய ஆய்வு சாவூக்கத்தைப் பற்றி அவரது கொள்கையை வலியுறுத்தியது. வன்செயல் (aggression) உணர்ச்சியை அமுக்கி வைப்பது நல்லதல்ல,

அப்படிச் செய்தால் நோய் உண்டாகும், என்று அவர் கூறினர்.

தன்-மைய ஊக்கங்களும் பாலூக்கங்களும், ஆக்க, காப்புச் செயல்களுக்கு ஆதாரமாகின்றன. அவை மக்களை ஒன்றுகூட்டுகின்றன. ஈராஸ் (Eros) அல்லது காதல் மக்களைக் குடும்பமாகவும், சிறுகுடிகளாகவும் (Clans) இன்னும் பெரிய குழுக்களாயும் அமைத்துக் கட்டுகிறது. ஆனால் சாவூக்கம் மனிதருக்கும் குழுக்களுக்கும் இடையே எதிர்ப்பை உண்டாக்குகிறது. குடும்பத்திலும், வெளியிலும் உள்ள தலைவருக்கெதிரான புரட்சியைத் தூண்டுகிறது. இது நாகரிகத்திற்குத் தடங்கலாகிறது. இவ்வாறு மனித உள்ளத்தில் அன்பும் வெறுப்பும் ஒன்றோடொன்று போராடுகின்றன.

இனிக் குழந்தையின் உளப்-பாலியல் (psycho-sexual) வளர்ச்சியைப் பற்றி ஃபிராய்டு கூறியதைப் பார்ப்போம். இவ்வளர்ச்சி குழுவாழ்க்கை, ஆளுமைக் கூறுகள் முதலிய வற்றைப் பூற்றிய பிரச்சினைகளோடு தொடர்புள்ளது. குழந்தையின் முதற்பாலின்பம் அதன் உதடுகளையும் பிற உணர்ச்சிவயப்பகுதிகளையும் தூண்டுவதால் ஏற்படுகிறது. இதனைத் தற்காமம் (auto-erotism) என்னலாம். ஏறக்குறைய நான்கு வயதில் குழந்தை எதிர்பாற் பெற்றோர் மீது காதல் கொள்கிறது. தனது தந்தை இருப்பதால் தன் தாயை முற்றிலும் தனக்காகவே வைத்துக் கொள்ள முடியாது என்று பையன் காண்கிறான். ஆகையால் பையன் தன் தந்தையை வெறுக்கிறான். அவர் மறைவதை விரும்புகிறான். பாவனையில் அவர் சாவதைக் காண்கிறான். இது இடிப்பஸ் நிலையாகும். (Oedipus situation) இடிப்பஸ் என்ற கிரேக்கப் புராண வீரன் அறியாமலே தன் தந்தையைக் கொன்று தன் தாயை மணந்துகொண்டான். (பெண்பிள்ளை தன் தந்தையைக் காதலித்துத் தன் தாயை வெறுக்கிறாள். இது எலெக்ட்ரா (Electra) நிலையாகும்.) இடிப்பஸ் நிலையில் பையன் தன் தந்தையை வெறுத்த போதிலும் அவரது வலிமைக்கு அஞ்சுகிறான்; அவரை வியக்கிறான். ஆகையால் அவரைப் பற்றிய வெறுப்பை அவன் ஒடுக்க (repress) வேண்டியதாகிறது. அதே நேரத்தில் தந்தையோடு ஒன்றவும் (identify) செய்கிறான். ஆகையால் அவனுடைய வெறுப்பை அன்பாக மாற்றிக் காண்கிறான். இந்நிலையும் ஒன்றலும் சேர்வதால் அவனுக்குள் பிறக்கும் தந்தையின் கட்டளையாவது " தந்தையைப் போல் இரு, அவரை வெறுக்காதே, அவரது மனை

வியை விழையாதே'' என்பது. இது குழந்தையின் மனச் சான்று அல்லது மீமனம் (super-ego) ஆகிறது.

புராதன மனிதன் தன்வாழ்கையில் தாண்டிய அதே நிலைகளை தனியாள் தன் வாழ்க்கையில் அனுபவிக்கிறார். என்று ஃபிராய்டு குழு உளவியலும் தன் முன்னப்புப் பாகுபடுப்பும் (Group psychology and the Analysis of the Ego (என்ற நூலில் (1921) கூறியுள்ளார். புராதன மனிதன் இனக்குழுக்களாக (hordes) வாழ்ந்துவந்தான். குழுத் தலைவராகிய தந்தை தமது வலிமையைப் பயன்படுத்தி குழுவிலுள்ள வயது வந்த பெண்களையெல்லாம் தமக்குரிய காமப் பொருளாகக் கொண்டுவந்தார். தமது மகாரின் காமநோக்கினின்று அவர்களைப் பாதுகாக்கவேண்டிய தேவை அவருக்கு உண்டாகியது. அவருடைய மக்கள் அவரை வெறுத்தார்கள். அவரைக் கொன்று தின்ன விரும்பினர்கள். ஆனல் அதற்கு வேண்டிய துணிவு அவர்களுக்கு இல்லை. ஆகையால் தங்கள் வெறுப்பை அன்பாக மாற்றிக் கொண்டார்கள். (ஃபிராய்டின் கொள்கைப்படி, அன்பும், வெறுப்பும் ஒரே நிகழ்முறையின் இரு பக்கங்கள்). அவர்கள் தம் தந்தையை வியந்து அவருடைய தடைக் கட்டளை உளப்படுத்திக் (interiorised) கொண்டனர். (உன் தந்தையை வெறுக்காதே; உன் தாயை (சகோதரியையும் கூட) விழையாதே' என்பதே அத்தடைக்கட்டளை. இப்படியாக உட்கலப்பும் (incest), கிளைஞர்களுக்குள் திருமணமும்-அதாவது உள்மணமும் (endogamy), தந்தைக் கொலையைத் தடுக்கும் தபுநிலையும் (taboo), தோதுச் சின்னமும் (totem), அரசுப்பதவியும் தோன்றின. பாலூக்கத்தையும் தெறுப்பையும் இவ்வாறு கட்டுப்படுத்தியதால்தான், குழு வாழ்க்கையும், மனித வாழ்வும், நாகரிகமும் கைகூடியுள்ளன. பாலியல் (sexual) சக்தியை மனிதன் கட்டுப்படுத்திய பின் அதைத் தூய்மைப் படுத்த (sublimate) அதாவது சமூகத்திற்குத் தீங்கு விளைக்காத, சமூகத்தால் ஏற்பட்ட முறையில் வெளியிட முற்பட்டான். கவி, சமயம், அறிவியல் முதலியன இத்தகைய வழிகளாவன.

இனி, தனியாளின் உளப்பாலியல் (psycho-sexual) வளர்ச்சிக்குத் திரும்புவாம். ஆறுமுதல் பதினென்று அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் வரை பாலூக்கம் செயல் குன்றியுள்ளது. இளங்குமரப்பருவத்தில் உணர்ச்சிப் பகுதிகளின் இன்ப அவா திரும்புகிறது. இப்பருவத்தில் தன்பாலினர்

பற்றும் (homosexual attachment) ஏற்படுகிறது. கடைசியாக எதிர்பாற் (heterosexual) கவர்ச்சிநிலை எய்துகிறது. இப் பொழுது தனியாள் எதிர்பாலால் ஈர்க்கப்படுகிறார். பால் வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் தனியாளின் பாலுக்கத் திற்குப் போதிய நிறைவு கிட்டாமற் போகலாம்; அல்லது அவ்வூக்கம் ஒடுக்கப் பெறலாம். அத்தகைய நிலையில் பாற்சக்தி (லிபிடோ) நனவிலியில் தேங்கி நிற்கிறது. இது இருத்தம் (fixation) எனப்படும். இதனால் சில குறிப்பிட்ட ஆளுமைக் கூறுகள் வளர்கின்றன. தனியாள் தம் தேவை களை மறைமுக வழியில் நிறைவேற்ற முயலுகிறார். உதட்டுப் பசியில் இருத்தம் பெற்ற குழந்தை பொருள் ஈட்டும் மனிதனை வளரலாம். அல்லது புகைபிடித்தல், வெற்றிலை உண்ணல் முதலிய பழக்கங்களைக் கைக் கொள்ளலாம். குறிவயின் அல்லது ஆசன இருத்தம் (genital or anal fixation) உற்றவரிடம் மிகை மனச்சான்று, சிக்கனம், ஒழுங்கு வேட்கை, தன்னயப்பு முதலிய பண்புகள் வளர லாம்; நடிகர், பாடகர், ஆசிரியர் முதலிய தொழில்களை அவர் தேர்க்கூடும். தன்பால் நிலையில் நிறுத்தம் பெற்றவர் களும் 'பெண்களுக்கு மட்டும்' ஆண்களுக்கு மட்டும், என்று வரையிட்ட களிக் குழுக்கள் (clubs) அமைப்பர்.

தந்தையிடத்துள்ள வியப்பும் அன்புமே தலைமைக்கு அடிப்படையாகின்றன. அன்புத்தளை தலைவரையும், தொடர்பவரையும் பிணைக்கிறது. தலைவர் அவர்களுக்குத் தந்தை உரு (Father figure) ஆகிறார். அவர்களது அன்புச் சக்தி அவரைப் பொருளாகக் கொண்டிருக்கும் வரை அக்குழு ஒன்றுபட்டுள்ளது. தலைவரை இழந்த குழு சிதைகிறது. கிலிகொண்ட நடத்தை தொடர்கிறது.

இயல்பூக்க உளவியல் திறனாய்வு:—

முற்றுப் புறவயக் (Objective) கொள்கை விரும்பும் உளவியலர்கள் மேற்கூறிய பலவகையான இயல்பூக்கக் கொள்கைகளை எதிர்த்துள்ளனர். நடத்தைக் கொள்கை யரும், மனிதவியலரும், இவ்வாறு எதிர்த்தவர்களாவர். அவர்களது வாதம் பின்வறுமாறு: இயல்பூக்கக் கொள்கை வெறும் சொல்விளையாட்டேயாம். ஏனென்றால் 'மனிதன் போராக்கம் உடைமையால் போராடுகிறான்; தன்னெடுப்பு உடைமையால் ஆதிக்கம் செய்கிறான்; பாலுக்கத்தால் பால் தொடர்பு கொள்கிறான் என்றுதான் இக்கொள்கை

கூறுகிறது.' இது தகுந்த விளக்கமாகாது. உள்ளார்ந்த உந்துக் கருத்தானது. உயிர்ச்சாரக் கொள்கை (Vitalism) யைச் சார்ந்ததொரு தத்துவக் கருதுகோளாகும். இது உளவியல் மறை பொருண்மையையும் (Mysticism) மீ இயற்கையத்தையும் (Supernaturalism) புகுத்துகிறது. இது தொடர்ந்த ஆராய்ச்சிக்குத் தடையாயிருக்கிறது. மக்டூகல் உளவியலைக் காண நிலைப்படுத்த உதவியது. ஆனால் அவர் இத்திசையில் போதிய அளவு செல்லவில்லை. சிறு குழுவியின் மூலைப்புறவி வளராத நிலையில் தன் செயல்கள் எக்கோள்களை நோக்கி உள்ளார்ந்து திசைக்கப்படுகின்றன என்று அக்குழுவி எண்ணவே முடியாது. இயல்பூக்கவாதிகள் பலரும் தயாரித்த பட்டியல்கள் ஒன்றேடொன்று மாறுபட்டவை. இதைக் குறிப்பிட்டு ஃபாரிஸ் கூறியது: (F. Faris) இயல்பூக்கம் தகவலா, கருதுகோளா ? மேதைகள் பலர் மனித இயல்பின் அடிப்படைக் கூறு என்று தாம் கருதுவதைப் பற்றி இவ்வளவு தூரம் வேறுபடுவது எப்படி? ஒன்று, இரண்டு நான்கு, பதினென்று, நாற்பது என்று ஒவ்வொருவரும் இயல்பூக்கங்களை வகுக்கிறார்களே ! இது ஐயத்திற்கிடமாகிறது. பிரச்சினையைப் பற்றிய கொடுக்கப்பட்ட, ஏற்கப்பட்ட, காணக்கூடிய தகவல்களையே உண்மைகளாகக் கொள்ளவேண்டும். இயல்பூக்கத்தைக் கருதுகோளாகத்தான் கொள்ளக்கூடும்.

இனி மனிதவியலர் கூறுவதைப் பார்ப்போம். வெவ்வேறு பண்பாடுகளில் மனித நடத்தையும் வேறுபடுகிறது. மனிதச் சக்திகளைத் திசைக்கும் கோள்கள் (Goals) அங்கும் ஒன்றுபோல் இருப்பதில்லை. ஆகையால் இயல்பூக்கக் கோட்பாடுகூறுவதுபோல் மாறுத மனித இயல்பு என்று ஒன்று கிடையாது. சில புராதனச் சமூகங்களின் மக்கள் சண்டையிடுவது கிடையாது. வேறு சிலவற்றில் திரட்டூக்கம் காணப்படுவதில்லை. இன்னும் சில சமூகங்களில் தலைமை வேட்கை என்ற உருவத்தில் தன்னெடுப்பு தோன்றுவதில்லை. ஆண் ஆதிக்கம் செலுத்துகிறான், பெண் பணிகிறாள், என்று பலர் எண்ணுவதையும் பொய்ப்பிக்கும் சமூகங்கள் உள்ளன. ஆகையால் (பிளாட்டோ கூறியது போல்) மனித இயல்பு சமூகத்தால் விளைவது. மனித இயல்பு என்று சொல்வதை விட, மனித இயல்புகள் என்று சொல்வது பொருந்தும். சமூக அமைப்பை மாற்றுவதன் மூலம் மனித இயல்பை மாற்றமுடியும். "மனித இயல்பு ஒன்றல்ல, பல. எத்தனை பண்பாடுகள், சமூகங்கள் சமூகக்

குழுக்கள் உளவோ, அத்தனையாகும் மனித இயல்பும்,[4] என்று கிரெச்சும் கிரட்சுஃபீல்டும் கூறினர். மேல்நாட்டு நாகரிகத்தில் வளர்ந்த மனிதனின் உளவியலே மனித இனத்தின் ஒரே உளவியலாக இயல்பூக்கக் கோட்பாடு கொள்கிறது என்பது மனிதவியல் திறனாய்வின் சாரமாகும். மக்டூகல் தமது சமூக உளவியலின் 1948-ஆம் ஆண்டுப் பதிப்பில் போரூக்கம் எல்லாவிடத்தும் காணப்படுவதில்லை என்று ஒப்புக்கொண்டார். மேலும் அது பிற இயல்பூக்கங்களோடும் தொடர்புள்ளது, பிற ஊக்கங்களில் வெளிப்பாட்டிற்கு எதிர்ப்பு ஏற்பட்டால் போருக்கம் தூண்டப்பெறுகிறது, என்று அவர் கண்டார். ஃடோலார்டு (Dollard) கூறிய படி, முறிவு (frustration) வன்செயலின் முதற்காரணமாகும். மகவூக்கம் உண்டுகொல்? என்னும் ஐயத்தையும் மனிதவியலர் எழுப்பியுள்ளார். ஏனெனில் சில புராதனச் சமூகங்களில் சிசுக் கொலை நடைமுறையில் உள்ளது. பல பெண்கள் தாம் குழந்தை பெறுவது பிள்ளைப் பேற்று வேட்கையினால் அன்று; 'விளையாடுவதற்காக,' அல்லது 'கணவர் விரும்பியதால்', அல்லது 'சமூகம் பிள்ளையற்றவரை இகழ்வதால்', என்று பலவாறு கூறியுள்ளனர். ஆகவே தாய்மை நடத்தையை ஊக்குவது இயல்பூக்கத் தாய்மையுந்து என்பதைவிட, சமூக வலியுறுத்தலே என்பது பொருந்தும்.[5]

இயல்பூக்க உளவியற்றிறனாய்வின் மதிப்பீடு.

இயல்பூக்க உளவியலின் மறுப்பு வாதங்களைப் பார்த்தோம். இவற்றின் பயனாக, கல்லாத நடத்தையைப் பாகுபடுத்திக் காணவேண்டியதன் தேவை உளவியலருக்குப் புலப்பட்டது. ஆகையால் இயல்பூக்க நடத்தையைத் தூண்டும் உள் நிலைகளையும், வெளி நிலைகளையும் அவற்றின் நரம்பியல் (neural) அடிப்படையையும் பற்றிய ஆராய்ச்சி விரிவடைந்துள்ளது. 'இயல்பூக்கத்தைப் பற்றிய நமது அறிவைப் பெருக்க வேண்டுமானால், பெயரிடுவது மட்டும் போதாது. ஆராய வேண்டும் என்று மெய்யரும் (Maier) ஷநெய்ர்லாவும் (Schneirla) கூறியுள்ளது ஏற்கத் தக்கது. இவ்வாறு ஆராய்ந்ததில், பாலியல் நடத்தைக்கு ஃஆர்மோன்கள் (hormones) அடிப்படையாகின்றனவென்றும், தாயன்புக்கு உடற்கட்டு அடிப்படையாகிறதென்றும் புலப்பட்டன. இது ஒரு பெரிய முன்னேற்றமாகும்.

இயல்பூக்க மறுப்பாளர் மற்றொரு கருத்தையும் கூறி யுள்ளனர். மனித நடத்தையை மிகப் பொதுப்பட விளக் கினால் மட்டும் போதாது. அதை விரித்து விளக்க முயல வேண்டும். இந்நோக்கம் கைகூட வேண்டுமானால் மனித நடத்தையை வேறுபட்ட பூதச் சமூகச் சூழ்நிலைகளில் உற்றுநோக்க வேண்டும். அடிப்படைத் தேவைகளை ஆதாரமாகக் கொண்ட விளக்கம் மிகப் பொதுவானது. அது சமூக உளவியலருக்கு நடைமுறையில் பயன்படுவ தில்லை.

மேற்கூறிய மறுப்பு வாதங்களில் பயிலும் அவற்றின் உட்கருத்தும் பாராட்டற்பாலன. ஆனால் மறுப்பாளர் கூறும் வாதங்கள் அனைத்தையும் நாம் ஒப்புக் கொள்ள முடியாது. எடுத்துக் காட்டாக, குழவிகளுக்கும் விலங்கு களுக்கும் உளவியல் முறையில் நோக்கமுடைய நடத்தை கிடையாது என்று இவர்கள் கூறுகிறார்கள். ஆனால் படி மலர்ச்சி முறையில் இவற்றின் நரம்புத் தொகுதியின் சிக்கல் நிலைமையை மதிப்பிட்டால் இந்த அளவிற்கேற்ப இவற்றின் செயல் நனவு நிலையை அடையக்கூடும். லைப்னிஸ் (Leibniz) என்பவர், தூங்கும் மானதங்கள் (monads), விழித்திருக்கும் மானதங்கள், தன்னறிவுள்ள மானதங்கள் என்று உயிர்களை மூன்று கூறுகப் பிரித்தார். அரிஸ்டாட் டில், தாவர ஆன்மா, விலங்கு ஆன்மா, மனித ஆன்மா என்று முக்கூறுபடுத்தினர். மூளை வளர வளர, நடுநரம்புத் தொகுதியின் கீழ்மையங்கள் தடமுறைச் (routine) செயல் களைக் கவனிக்கின்றன, மூளை நனவுச் செயல்களை கவனிக் கிறது என்னலாம். கீழ் விலங்குகளுக்கும் சிலவகை நோக்க முடைய நனவு இருக்கக் கூடும். இத்தகைய நனவு மனித னுக்குத் திடீரெனத் தோன்றியது என்று நம்புதற்கரிய தாகும்.

இத்தகைய வாதம் ஓர் உயிர்ச்சாரக் (vitalistic) கருது கோள்தான்; இது தத்துவமேயன்றி அறிவியலன்று என்று பலர் கூறலாம். இத்தகைய மறுப்பு அறிவியலுக்கும் தத்து வத்துக்கும் உள்ள தொடர்பை அறியாததால் கூறப்படுவது. அறிவியலின் நோக்கம் அனுபவ உண்மைகளைக் கூடிய அளவு விவரமாக ஆய்ந்து மனித ஆராய்வுத் தேவையை நிறைவேற்றுவதேயாம். இதனால் தத்துவத்தை (இங்கு உயிர்ச்சாரக் கொள்கையைப்) புறக்கணிக்க வேண்டும் என் பதல்ல. உயிர்ச்சாரக் கொள்கை ஒரு தத்துவக் கருதுகோள்

ஆகும். அதைக் கொள்ளுவதும் தள்ளுவதும், அது தக வல்களை விளக்குவதற்குத் தேவையா அல்லவா என்பதைப் பொருத்தது. அறிவியல் ஆய்வைத் தடை செய்தால்தான் தத்துவக் கருதுகோட்களைத் தள்ளவேண்டும். உயிர்ச்சார்க் கருதுகோள் தகுந்த கருதுகோளாகத் தான் தெரிகிறது. இது நடத்தையின் ஊக்குவிப்பைப் பற்றிய காண்நிலை ஆய் வைத் தடுப்பதில்லை. உயிரியப் படிமலர்ச்சியையும், இன் னும் வளர வேண்டும், என்று விழையும் மனித உந்தையும் விளக்குவதற்கு உயிர்ச்சார்க் கருதுகோள் தேவைப்படு கிறது. இதன் அடிப்படையில் ஊக்குவித்தலைப் பற்றி ஆராய இயலும். உயிர்ச்சாரசக்தி செயல் புரியும் வகை யைக் காணலும் கூடும். உளவியல் காண்நிலை ஆய்வு, உள-உடல் உந்துகளைப் பற்றிய மிகப் பொதுப்பட்ட கருத் துடன் இயையக் கூடும், இயைய வேண்டும். பண்டைய உயிர்ச்சார்க் கொள்கைகள் மிகப் பொதுப்பட்டவையாய், பயனற்றவையாய் இருப்பின், அவற்றைத் திருத்திக் கொள் ளக்கூடும். அவ்வாறு திருத்திக் கொண்டுள்ள கொள்கை யையே இங்கு நிறுத்துகிறோம். தத்துவக் கருதுகோளும், அறிவியல் ஆராய்ச்சியும் எதிரிகளல்ல; பொதுமையே போதும். தனி நிகழ்ச்சி ஆராய்ச்சிகள் தேவையல்ல எனறு தத்துவம் கூறுத மட்டில் இவற்றிற்கிடையே எதிர்ப்பு ஏற்படத் தேவையில்லை. சிறந்த தத்துவ நெறி இப்படிக் கூறுவதில்லை. வெறும் அறிவியல் அறிவு பிரிந்து, அடை பட்டுக் கிடப்பது; உலகை ஒருமைப்படுத்திக் காண விரும் பும் மனிதத் தேவையை இது நிறைவேற்றுவதில்லை. இத் தேவையை நிறைவூட்டத் தத்துவம் தேவையாகிறது. தத்துவத்தின் வரலாற்றைப் படித்தால் காண்நிலை அறி வியல் வளருவதால், தத்துவக் கருதுகோட்கள் எழுந் துள்ளன, மாற்றியமைக்கவும் பட்டுள்ளன என்பது தெரிய வரும்.

சூழ்நிலை நோக்கினையே முற்றிலும் ஏற்பதும் அரி தாகும். தட்ப வெப்பநிலையும் தேவைகளை நிறைவேற்ற மூலப்பொருள் கிடைப்பதும் முக்கியமான நடத்தைத் தீர்வி கள் (determinants) ஆகின்றன. எடுத்துக்காட்டாக, ஓர் ஆய்வில் உயர்ந்த வெப்ப நிலையில் இருந்த எலிகள் பிஸ்கோத்துகளைச் சேர்த்து வைக்கவில்லை. குளிர்ந்த வெப்பநிலையில் வைத்திருந்த எலிகள் அவற்றைச் சேர்த்து வைத்தன. உயிரியல் தேவைகளை எளிதாக நிறைவேற்ற வசதியிருந்து, முறிவு ஏற்படும் நிலைகள் குறைவாக அமைந்

தால் வன்செயல் நடத்தை வளராமல் இருக்கலாம். ஆனால் இதற்கு மாறான தகவல்களையும் நம் மனத்திற் கொள்ள வேண்டும்: வீட்டில் வளர்க்கும் அணில்களும் திரட்டும் நடத்தையுடையன. திரட்டுவது இயல்பூக்கத் தன்மையது; ஏனென்றால் "அது மிக இளமையில் தோன்றுகிறது; அதைப் பயிற்றுவிப்பது அரிது"[6] என்று குழந்தை உற்று நோக்காளர் கூறுகிறார்கள். முதுகெலும்புடைய உயர்ந்த விலங்குகளும், புராதன மனிதனும், பல தலைமுறைகளாக ஏறக்குறைய நிலையான சூழ்நிலையமைப்பில் வாழ்ந்தால் பழக்கப்பட்ட சில நடத்தை வகைகள் மரபுவழிச் செயல் படும் முற்பாங்குகளாகிவிடக்கூடும். பெற்ற பண்புக் கூறுகளை இவ்வாறு கடத்துவது நிகழமுடியாததன்று.

ஃஆர்மிக உளவியல், மனித இனத்தின் மனமானது முன் வரையறுக்கப்பட்டது. (predetermined) என்று கொள்கிறது, என்று பலர் குறைகூறுவர். ஆனால் நாம் மேலே கூறிய வாதத்தின்படி பார்த்தால் இக்குறை எழுவதில்லை. ஒப்புமையாக உள்ளார்ந்த பண்புகளை நாம் ஏற்றுக் கொள்ளலாம். அதாவது குறிப்பிட்ட விதத்தில் செயலாற்றுவதற்கேற்ற முற்பாங்குகள் உள்ளன; தகுந்த நிலைகள் ஏற்பட்டால் இவை செயற்படுகின்றன என்று நாம் கொள்ளலாம். தன்னெடுப்பு, போரூக்கம், திரட்டூக்கம் முதலிய சில நடத்தை வகைகள் சில சமூகங்களில் காணப் படுவதில்லை என்பதால் மட்டும் அவை உள்ளார்ந்த பாங்குகளாயிருக்க முடியாது, என்பதற்கில்லை. மனிதனுடைய பூதச் சமூகச் சூழ்நிலை மாற்றப் பெற்று நீண்டகாலம் இம் மாறிய நிலையிலேயே இருக்குமானால் புதிய இனப் பழக்கங்கள் உண்டாகக்கூடும். எதிர்கால மனிதன் புதிய உந்தூக்கங்களை மரபுவழிப் பெறமுடியும், மனித இயல்பின் அடிப்படையை மாற்ற முடியும், என்ற நம்பிக்கை இக் கொள்கையில் உண்டு. நம் காலத்தில் புதிய சூழ்நிலையை இயற்றி நமக்குப் பின் வருபவர் இந்நிலையைத் தொடர்ந்து நிறுத்தினால் சில பாங்குகளை வளர்த்துப் பிறவற்றைத் தேய்க்க நாம் முயலக்கூடும்.

நடத்தையின் உள்ளார்ந்த அடிப்படையைப் பற்றிய முதன்மையை (Prepotent) மறுவினைக் கொள்கை.

ஆல்போர்ட் மனிதனுடைய கோள்நோக்கிய நடத்தை யின் உள்ளார்ந்த அடிப்படியை விளக்க முற்றிலும் காண்

நிலை முறையில் அமைந்த புறவயக்கோட்பாடு ஒன்றை வகுத்தார். அவருடைய வாதமாவது: இயல்பூக்கக் கோட்பாடு வளர்ச்சி முறையைத் தவறான பக்கத்திலிருந்து நோக்குகின்றது. அதாவது முற்றிலும் உருத்துலங்கிய (developed) செயலில் தொடங்குகிறது. அச்செயலைப் பின்னோக்கி ஆராய்கிறது. குழந்தையின் வாழ்க்கையில் மரபுவழிப்பெற்ற, நோக்கமுடைய, முற்றிலும் உள்ளிருந்து தீர்மானிக்கப்பட்ட வழியில் அச்செயல் வளர்கிறதா என்று காண முயல்கிறது.[7] ஒரு தனியாளின் வாழ்க்கையில் எது மரபு வழி வந்தது, எது பழக்கத்தால் அமைந்தது என்று சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் தனியாளின் வாழ்க்கை வரலாற்றை நாம் படிக்கவேண்டும். ஆகையால் வாழ்க்கையின் தொடக்கத்தில் புனிற்றிளங் குழந்தையின் உடைமையை(equipment)அடிப்படையாகக் கொண்டு நம் ஆய்வைத் தொடங்கவேண்டும். பின் தொடரும் செயல்களையெல்லாம் ஆராய்ந்தால் மனித அடிப்படைச் செயல்களின் மூலத்தைக் காணக்கூடும். 'இயல்பூக்கம்' என்ற சொல் நடத்தை வளர்ச்சியில் சமூகச் சூழ்நிலையின் பங்கைக் குறைத்துக் காட்டுவதால் அச்சொல்லை ஆல்ப்போர்ட் எதிர்த்தார்.

ஆல்ப்போர்ட் புனிற்றிளங்குழந்தையிடம் காணப்படும் மறிவினைச் செயல்களின் நின்று ஆராய்ச்சியைத் தொடங்குகிறார். குழந்தை உள்ளிருந்து அல்லது வெளியிருந்து தூண்டப்பெறும்போது இச்செயல்கள் நிகழ்கின்றன. இவை தனியாளைக் காப்பதற்கும் இனவிருத்திக்கும் உதவுகின்றன. இவற்றை ஆறு பெரும் தொகுதிகளாகப் பிரிக்கலாம். இவை முதன்மையுடையவை. அதாவது, இவற்றின் தூண்டலும் வேறு தூண்டல்களும் ஒரே நேரத்தில் தனியாளைத் தாக்கினால், இம்மறிவினைகளுக்கேற்பவே தனியாள் துலங்குவார். எடுத்துக் காட்டாக, தீடீரென்று உரத்ததோர் ஒலி கேட்டால் தனியாள் பிற தூண்டல்களைப் புறக்கணித்துப் பின்வாங்குதலாகிய துலங்கலில் ஈடுபடுவார். இதுபோலவே பசிமிகுந்த ஒருவர் பிற அலுவல்களை விடுத்துப் பசியைத் தீர்க்கவே நாடுவர். அதாவது முதன்மைய மறிவினைகள் கடப்பாட்டுத் தன்மையன(imperatives)இக்கட்டுப்பாட்டுத் தன்மையானது உயிரியல் தேவைகளை முன்னின்று நிறைவேற்றுவதற்கான இயற்கையின் முறையாகும்.

இந்த நோக்கின்படி மனிதக்குழவிக்கு முதலில் தன்னறிவோ, எய்தவேண்டிய திட்டமான கோள்களைப் பற்றிய

எண்ணமோ கிடையாது. ஆறு முதன்மைய மறிவினைகளே முதலில் உள்ளன. இவை மூல வலிமையில் அடிப்படை யானவை ; மேலும் வாழ்க்கை முழுவதிலும் பழக்கம் அமை வதையும் இவை கட்டுப்படுத்துகின்றன. குழந்தைகளும் முதிர்ந்தோரும் பழக்கமாகச் செய்யும் செயல்களெல்லாம் இந்த மூலமறிவினைகளை மாற்றியமைப்பதாலும், சீர்ப்படுத்து வதாலும், விரித்தமைப்பதாலுமே ஏற்படுகின்றன. இவ் ஆறு மறிவினைகளாவன : (1) முன்னேட்டமும் பின்வாங் கலும் (starting and withdrawal) (2) புறக்கணிப்பு (rejection) (3) போராட்டம் (struggle) (4) பசி (hunger) (5) உணர்ச்சிப்பகுதித் துலங்கல்கள் (sensitive zone responses) (6) பால் (sex). முதல் நாலு மறிவினைகளும் பிறப்பிலிருந்தே உள்ளன. உணர்ச்சிப் பகுதித் துலங்கல்கள் தொடக்கக் குழவிப் பருவத்தில் உண்டாகின்றன. பாலுக் கம் அதற்குரிய அமைப்புக்கள் வளர்ந்தபின் தோன்று கிறது.

முன்னேட்ட மறிவினைகள் நடத்தையைத் தூண்டுபவை: (எ - டு) தாங்கல் நீக்கம், உரத்த ஒலிகள், திடீரென்று விழுதல் அல்லது தள்ளுதல் முதலியன. குழவி, இதன் விளைவாகத் தலையை, கையை அல்லது காலை வெட்டி அசைக்கிறது. தீ போன்ற தீய தூண்டல்களுக்கெதிரே இசைவற்ற பின் வாங்கல் இயக்கங்கள் உள்ளமையை மிக இளவயதிலே காணலாம். துர்நாற்றம் முதலிய துர் தூண் டல்களால் கையும் காலும் இயங்குகின்றது. இவை குழவி யின் முதல் தூண்டல் புறக்கணிப்பு முயற்சிகளாம். குழவி யின் இயக்கங்களைக் கட்டுப்படுத்தினால் போராட்ட நடத் தைக்குரிய இயக்கம் எழுகின்றது. உதடு, கன்னம், பக்கங் கள், கழுத்துப்புறம் முதலிய உணர்ச்சிப்பகுதிகளைத் தூண்டி னால் இவ் இன்ப அனுபவத்தைத் தொடர உதவும் இயக்கங் கள் தோன்றுகின்றன. கடைசியாக இனவிருத்திச் சுரப்பி கள் வேலைசெய்யத் தொடங்கியதும் பாலியில் நடத்தை தோன்றுகிறது.

முதலில் இந்த மறிவினைத் துலங்கல்கள் மிகப் பொது மையாக அமைகின்றன ; மிக எளிய தூண்டல்களால் கிளர்கின்றன ; நாளடைவில் முதலதான எளிய தூண்ட லோடு இயைந்த பிற தூண்டல்களும் மறிவினையை எழுப்பு கின்றன. முதல் தூண்டலையோ, இயைந்த தூண்டலையோ ஒத்த தூண்டல்களும் பின் இம்மறிவினையைத் தூண்டு

கின்றன. இவ்வாறு மறிவினை நடத்தையின் உட்சொல் (afferent) கூறு மாற்றியமைக்கப் பெறுகிறது. இதனை ஆக்க நிலையுறுத்தல் (conditioning) எனகிறோம். முன்பு இணைதை ஒட்டுமையையும் (contiguity), ஒப்பையும் (similarity) அடிப்படையாகக் கொண்ட இயைபு விதி (Law of Association) என்றனர். எடுத்துக் காட்டாக, தீ சுடுவதால் குழந்தை முதலில் பின்வாங்குகிறது. பின்பு தீயைக் கண்டாலே பின்வாங்குகிறது. நாளடைவில் தாய் கத்துவதை அல்லது சொல்வதைக் கேட்டு, அல்லது அவள் முறைப்பதைப் பார்த்து குழந்தை தீ, பாம்பு, அழுக்கான பொருட்கள் முதலியவற்றினின்று பின்வாங்குகிறது. இவை தீயினின்று பின் வாங்கும் இயக்கத்தோடு இயைந்திருக்கக்கூடும். இன்னும் கொஞ்சக்காலம் சென்றால் தீயைப்பற்றிய எண்ணம் தோன்றினால் கூட தீயே தோன்றியதுபோலத் தனியாள் எதிர் வினையுறக்கூடும்.

மறிவினை நடத்தையின் வெளிச்செல் (efferent) கூறினையும் மாற்றியமைக்கமுடியும். உணவு, போராட்டம், புறக்கணிப்பு, பால் முதலான மறிவினைத் தொகுதிகளுள் மிகப்பயன்தருவன மட்டும் இருத்தவும் மீண்டும் இயக்கவும் பெறுகின்றன. இவ்வாறு சில நடத்தை வகைகள் பழக்கப்படுகின்றன. முதலில் தோன்றும் பரந்த, பொதுப்பட்ட துலங்கல்கள் சீர்ப்படுகின்றன, தனிச்சிறப் பெய்துகின்றன. எடுத்துக்காட்டாக, தனியாள் வளர வளர, போராட்ட நடத்தை வெவ்வேறு தனிப்பட்ட உருவில் தோன்றுகிறது. உணர்ச்சிப் பகுதிகளை வருடுதலால் ஏற்படும் அணுகல் மறிவினை, நாளடைவில் சீர்ப்பட்டுத் தொக்குநின்று தோன்றுகிறது. (எ-டு.) அணுகல் போன்றல், உதட்டை முன்னேக்கி அசைத்தல் முதலின.

சிக்கலான மனித நடத்தை வகைகள் அனைத்திற்கும் உள்ளார்ந்த அடிப்படையாக அமைவன இந்த ஆறு முதன்மைய மறிவினைகளுமே என்று ஆல்ப்போர்ட் கூறுவார். மனித நடத்தைச் சிக்கல்கள் அனைத்தும் இந்த ஆறு முதன்மைய மறிவினைகளின் மாற்றியமைப்புக்களேயாம். ஓடுதல், ஒதுங்குதல், மறைதல், அடக்கம், வெட்கம், ஆடை அணிதல், வீடுகட்டி வாழ்தல் முதலிய வெல்லாம் பின்வாங்குதல் என்னும் மறிவினை அநுபவத்தால் அடைந்துள்ள வேறுபாடுகளாகும். போர்புரிதல் இயல்பூக்கமன்று, அது எளிய போராட்ட மறிவினைகளிலிருந்து வளர்ந்ததே

யாகும். அருவருப்பும், துப்புரவும் புறக்கணிப்பு மறிவினைத் துலங்கலின் வடிவங்களேயாம். போட்டியும், பணிவும், வீரமும், காதலும், தாய்மையும், தந்தைமையும், ஆக்கச் செயல்களும் முதன்மைய மறிவினைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த பழக்கங்களேயாம்.

ஆல்ப்போர்ட்டின் கோட்பாடும் இயல்பூக்கக் கோட் பாட்டைப் போல் உயிரியற் பண்பினது. உயிரியின் முதன் மையத் தேவைகளை நிறைவேற்ற இயற்கை செய்துள்ள அமைப்பேமுதன்மைய மறிவினைகள்என்பதுஇக்கோட்பாடு. இதன்படி பழைய உயிரியலரின் 'இயல்பூக்கங்கள்' பின் கதவு வழியாக நுழைந்து விடுகின்றன என்று சிலர் கூறு கின்றனர். ஆனால், பழைய இயல்பூக்கங்களை, அவற்றின் இறுக்கத்தை நீக்கி இக்கோட்பாடு காண்கிறது என்பது சாலும். அனுபவமும் சமூகக்கூறுகளும் தனியாளின் நடத்தை வளர்ச்சியில் கொண்டுள்ள பங்கை வெறும் இயல்பூக்க உளவியல் வலியுறுத்துவதைவிட ஆல்ப்போர்ட் டின் கோட்பாடு அதிகம் வலியுறுத்துகிறது.

நடத்தையின் பெற்ற (acquired) அடிப்படை.

மனித நடத்தையின் உயிரியல் அடிப்படையைப் பற் றிப் பார்த்தோம். ஆனால் உயிரியல் தேவைகளும் அவற் றின் விளைவான துடிப்புக்களும் மக்களின் நடத்தையில் நாம் காணும் விவரங்களை விளக்குதற்குப் போதா. மனிதர் செய்யும் பல காரியங்களை உயிரியல் தேவைகளை மட்டும் கொண்டு விளக்கமுடியாது. நாளடைவில் உயிரியல் முறை யில் ஊக்கப்பெற்ற நடத்தை மிகவும் மாற்றியமைக்கப் படுகிறது. இந்த மாற்றியமைப்பு முறையில் சமூகக் கூறு கள் முக்கிய இடம் வகிக்கின்றன. எடுத்துக்காட்டாக, பொதுப்பட்ட உணவருந்தும் செயல் தனிப்படுகிறது, குறிப் பிட்ட முறைகளில் அமைகிறது. குறிப்பிட்ட விருப்புக்கள், வெறுப்புக்கள், தேர்தல்கள் அமைகின்றன. திரட்டுச் செயலைப் புதியது சேர்த்தலும், பயனுடையதைச் சேர்த் தலும் என்று இருவகையாகக் காணலாம். இந்நடத்தை நாளடைவில் குறிப்பிட்ட வகையான பொருட்களுக்கு நேராகத் திசைக்கப்படுகிறது. இப்படி வளர்ந்த திரட்டுச் செயல் ஒரு வெறியாகக் கூட மாறிவிடுவதுண்டு. தோழ மைத் தேவையிலும் பால்நிறைவுத் தேவையிலும் கூட விருப்புக்கள் அமைகின்றன. குறிப்பிட்ட ஆட்கள் மூலம்

இத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள விழைகிறோம். அதாவது பழக்கங்களும், மனப்பான்மைகளும் அமைகின்றன. தனித்த கவர்ச்சிகளும் வளர்கின்றன. மனிதனின் பல சக்திகள் திட்டவட்டமான வாழ்க்கைக் கோள்களைத் தொடர்ந்து செயலுறுகின்றன. பெற்ற நடத்தையின் அடிப்படையையும் அதற்குச் சமூகக் கூறு உளதாலுல் அதனையும் இனிப் படிப்போம்.

உணவு, ஒலி, வண்ணம் முதலியவற்றைப் பொருத்த வரையில் நமக்குச் சில விருப்புக்களும், வெறுப்புக்களும் உள்ளன. சில சுவைகளும் வண்ணங்களும், ஒலிகளும் எல்லா மனிதரும் இயல்பாகவே விரும்புபவை. வேறு சில விருப்புக்களை இப்படி இயல்பானவை என்று சொல்ல முடியாது. கசந்த காப்பியை நாம் விரும்புவதை எடுத்துக் கொள்வோம். இத்தகைய விருப்புக்கள் பன்முறை அனுபவத்தாலும், பழக்கத்தாலும் அமைபவை. சமூக வன்மையும் இதில் உண்டு. அதாவது உயிரியல் தேவைகள் மட்டும் தனியாளின் நடத்தையை முற்றிலும் விளக்கிவிட முடியாது. நடத்தையை ஊக்குவிப்பதில் அனுபவமும் முக்கிய இடம் பெறுகிறது. இயற்கையான உள்துடிப்புக்களைத் தடுக்கவும் திசைப்படுத்தவும் அனுபவம் உதவுகிறது. மேலும் தனியாளை அடிமைப்படுத்தும் பல பழக்கங்களும் அனுபவத்தால் அமைகின்றன. இப்பழக்கங்களுட் சில, தனியாளுக்குத் தீங்கு செய்பவை. இதனலும் தனியாள் எப்பொழுதும் உயிரியல் முறையில் சரியானவற்றையே செய்வதில்லை என்பது விளங்கும். உடலின் இயற்கை அறிவு எப்பொழுதும் தனியாளின் நடத்தைக்கு வழிகாட்டுவதில்லை. அருந்தகங்களில் சிலர் அறிந்து உண்ணுவதையும் சூலுற்ற பெண்கள் சில உணவுகளை விரும்புவதையும் உடலின் இயற்கை அறிவுடைமைக்கு ஆதாரமாகக் காட்டுவர். ஆனல் இதற்கு எதிர்மாறான நிகழ்ச்சிகளையும் நாம் காணலாம். குழந்தைகள் தாமே தேரும் உணவு சமன்படாததாக அமைவது நமக்குத் தெரியும். பெரியோரின் தேர்தலும் இப்படியே அமைவதுண்டு. புகையிலை, கஞ்சா, சாராயம் முதலியவற்றிற்கு மக்கள் அடிமைப்பட்டிருப்பதும் இதனை விளக்குகிறது. மானமுள்ள மனிதன் இரந்து உயிர்வாழ்வதை விட இறந்து படத் துணிவான். இஃதும், உயிரியல் ஊக்கிகளால் மட்டும் நடத்தை இயக்கப்படுவதில்லை என்பதை விளக்கும்.

மனப்பான்மைகளும் பற்றுக்களும் ஊக்கிகள் ஆதல்.

மனிதர்கள் அப்போதைய உள்துடிப்பை விட மனப்பான்மைகளாலும் பற்றுக்களாலும் இயக்கப்படுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். இம் மனப்பான்மைகளும் பற்றுக்களும் அனுபவத்தால் அமைவன. "ஒரு பொருளைப் பற்றிய எண்ணத்தைச் சுற்றி எழுச்சிப் பாங்குகள் அமைந்த தொகுதியே பற்று எனப்படும்" என்று மக்டூகல் கூறியுள்ளார். 'மனப்பான்மை நம்மைத் துலங்க ஆயத்தப்படுத்தி நமது அனுபவத்தைத் தீர்ப்பது; அதனோடு ஒட்டிய பொருட்களுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்ப நமது துலங்கல்களை ஊக்குவித்துத் திசைப்படுத்துவது', என்று ஆல்ப்போர்ட் வரையறுத்துள்ளார். பொருட்களைப் பற்றிய நமது நேரடி அனுபவத்தாலும் மறைமுக அனுபவத்தாலும் அவற்றின் பண்புகளை அறிந்து அவற்றிற்கேற்ப உணரவும் செயற்படவும் உதவும் பாங்கே மனப்பான்மையாகும்.[8] மனப்பான்மையாவது ஒரு பொருளைப் பற்றியதொரு வரையறையை மனத்திற்கொண்டு காலம் வரும்பொழுது அதற்கேற்பச் செயலாற்ற ஆயத்தமாக இருப்பதேயாம்.

மனப்பான்மைகள் நடத்தையின் முக்கியத் தீர்வுகள் ஆவன. 'மக்கள் ஒருவரையொருவர் பற்றிக் கற்பனையில் கொண்டுள்ள எண்ணமே சமூகத்தின் அடிப்படை உண்மையாகும்' என்று கூலீ கூறினர். பிறர் முன்னிலையில் கட்டுப்பாடு, போட்டி, ஒத்துழைப்பு, ஒத்துப் போதல் முதலியன பொதுவான சமூக மனப்பான்மைகள் ஆவன. இவை தவிரத் தனித்த மனப்பான்மைகளும் உள்ளன. தொழில்களையும், தொழிற் குழுக்களையும் பற்றி நமக்கு மனப்பான்மை உண்டு. நம்மைப்பற்றியே நமக்கு ஒரு மனப்பான்மை உண்டு. நம்மைப்பற்றி நாம் வியத்தலும் உண்டு; அல்லது நாம் ஒன்றுக்கும் உதவமாட்டோம் என்ற தாழ்வான எண்ணமும் உண்டு.

சில மனப்பான்மைகள் சொந்தமானவை (personal), அதாவது சொந்த அனுபவத்தைப் பொதுமைப்படுத்துவதால் ஏற்படுபவை. (எ-டு.) குழந்தை பூனைக்கு அஞ்சுதல், தந்தையைக் கட்டுப்பாட்டாளராகக் கருதுதல், ஆசிரியரை மதித்தல் முதலியன. சில மனப்பான்மைகளைப் பெற்றோரிடமிருந்தும் ஆசிரியரிடமிருந்தும் பெறுகிறோம். இவைபிறருடைய முன்மாதிரி, பெரியோர்க் கருத்தேற்குமை,

குழுக் கருத்தேற்குமை, தன் குழுப்பெருமை முதலியன வற்றுல் அமைகின்றன.

வாழ்க்கைக் கோள்களும் கவர்ச்சிகளும்.

நேரடியான, உயிரியற் சிறப்பு இல்லாத, பல காரியங் கள் நம்மைக் கவர்கின்றன. மேலும் சில நோக்கங்களையும் குறிக்கோள்களையும் முன்வைத்து நமது வாழ்க்கையின் பல கூறுகளையும் நாம் ஒழுங்குபடுத்துகிறோம். நாம் தேர்கின்ற வாழ்தொழிலும் (vocation), வாழ்க்கைத் திட்டமும் உயிரியல் தேவைகளுக்கு மிகவும் அப்பாற்பட்டவையா யிருக்கலாம். சமூகம் உயர்வாகக் கருதுவதாலும், பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள் விரும்புவதாலும் பலர் வாழ் தொழிலைத் தேர்ந்தெடுப்பதுண்டு.

உரையாடற் சுருக்கம்:

மனித நடத்தையின் ஊக்கிகள் மிகவும் சிக்கலானவை. உயிரியல் தேவைகளும் முதன்மையச் செயற்போக்குகளும் (மறிவினைகள் அல்லது இயல்பூக்கங்கள்) மிகவும் மாற்றி யமைக்கப்படக் கூடியவை. வாழ்க்கையில் பழக்கங்கள், விருப்புக்கள், வெறுப்புக்கள், மனப்பான்மைகள், பற்றுக்கள் முதலியவற்றை நாம் அமைத்துக் கொள்கிறோம். இவை நமது நடத்தையை ஆளுகின்றன. மனிதன் தன் தேவையை நிறைவேற்றுவதற்குப் பிற மனிதரைச் சார்ந் துள்ளான். இச்சார்பினுல் உளவியல் தேவைகள் எழு கின்றன. இவையும் உயிரியல் தேவைகளைப் போலவே வன்மையுள்ளவை. மனிதன் தோழமையை நாடுகிறன்; புறக்கணிப்பிற்கு அஞ்சுகிறன். இவற்றின் விளைவாக சமூகம் எதிர்பார்ப்பதற்கு ஒத்துப் போகும் மனப்பான்மை அவனிடம் வளர்கிறது. உயிரியல் தேவைக்காகச் செய்ய வேண்டாத பல காரியங்களை அவன் சமூகத்தை எதிர் பார்த்துச் செய்கிறன். தனது சொந்தத் தேவைக்கு மிகை யான உணவைச் சேர்க்கிறன்; உணவு இல்லாதவர் களோடு அதைப் பகிர்ந்து கொள்கிறன். அவனது சமூக அமைப்பு அவன் திருமணம் செய்து குழந்தைகளைப் பெற வேண்டும் என்று விரும்பினுல் அப்படியே செய்கிறன். குழந்தைபெற விரும்புதல் சமூகக் கூறுகளால் பாதிக்கப் படுவதொன்றென்று பலர் கூறியுள்ளனர். சூலுற்ற பெண் களை எல்லோரும் அன்புடன் கவனிக்கிறர்கள். சூலுறுத

பெண்ணை உலகம் தாழ்வாக மதிக்கிறது. இந்து சமுதாயத் தின் வரலாற்றில் ஒரு காலத்தில் 'நியோகம்' இன்றியமை யாததாக வற்புறுத்தப்பட்டது. இவையெல்லாம், குழந் தைப் பேற்று விருப்பைப் பொருத்தவரை உயிரியலுக்குப் புறம்பான ஊக்கி ஒன்று உண்டென்று காட்டுகின்றன. அண்மையில் பூனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. கோதுர்க்காரின் ஆய்வு ஒன்றில், மகாராட்டிரத்தின் வறுமை மிக்க பகுதியில் உள்ள சில மக்களைப் பேட்டி காண நேர்ந்தது. கிழத் தம்பதிகள் இருவர் தங்களுக்குக் குழந்தைகள் இல்லையென்று வருந்திக் கொண்டிருந்தார் கள். ஆய்வாளர் அவர்களிடம் இந்தப் பட்டினிக் காலத் தில் இன்னொரு உயிரையும் ஊட்டுவிக்க முடியாதே என்று சொல்லித் தம் வியப்பைத் தெரிவித்தார். அதற்கு அவர்கள் 'நாங்கள் பட்ட கடனை எங்களால் அடைக்க முடியாது. ஒரு மகன் பிறந்தால் அவனுவது அடைப்பான்' என்று சொன்னார்கள்.

1. W. Mc Dougall, Introduction to Social Psychology. p.13.
2. Ibid, p. 9.
3. Morris Ginsberg, The Psychology of Society.
4. Krech and Crutchfield, Theory and Problems of Social Psychology, p. 47.
5. N. L. Munn, Psychology, p. 214, also R. E Faris, Social Psychology p. 61.
6. Susan Isaacs, Social Development in Young Children.
7. F. H. Allport, Social Psychology, p. 81.
8. R. S. Woodworth, Psychology p. 384.

7. சமூக இடைவினை

(Social Interaction)

சமூகத் தூண்டுவிப்பு
(Social Stimulation)

சாதாரணமாக மனிதன் பிறரோடு ஒட்டி, உடம்படுத்திக் (Communicate) கொண்டிருக்கிறான். சூழ்நிலையைத் தூண்டுகிறான், சூழ்நிலையால் தூண்டப் பெறுகிறான், துலங்குகிறான், துலங்கலை ஏற்கிறான். அவனுடைய நடத்தையில் பெரும்பகுதி, சமூகப் பண்பு உடையது, சமூகத்தால் பொருள் பெறுவது. ஆட்களும், ஆட்களோடு தொடர்புள்ள பொருட்களும் அவனைத் தூண்டுகின்றனர். அவன் சமூகத்தில் தனியாக இருப்பதில்லை. முற்றிலும் தனிப்பட்டு வாழ்ந்தால் அவன் இயற்கை நிலையில் இருப்பான்; உயிரியல் மட்டத்திலேயே பிழைத்திருப்பான்; அவனுடைய நடத்தையில் கட்டுப்பாடும் சீரும் இருப்பதில்லை; பிறரைப் பற்றிய சிந்தனை அவனுக்கு இராது; கூட்டு வாழ்க்கை நிலை அனுக்குக் கைகூடாது. இப்படி வாழ்வது இயலுவதானால் கூட, நல்லதன்று.

தனியாள், சமூக உலகம் முழுவதுடனும் தொடர்பு கொள்வதில்லை. அவனுடைய சமூகக் கொடுத்தல் வாங்கல் எல்லை (range) பல காரணிகளைச் சார்ந்தது. அவனுடைய வயது, ஆற்றல், பயிற்சி, பழக்கங்கள், தொழில், ஏற்றம் முதலியனவெல்லாம் இவ் எல்லையைப் பாதிக்கின்றன. இலக்கியம், அறிவியல் முதலிய பண்பாடுகள் கொண்ட பரந்த உலகத்திற்குத் தற்குறிகள் புறம்பானவர்கள். ஓர் இனத்தையோ சமயத்தையோ, தொழிலையோ, சார்ந்த குழு பிற குழுக்களினின்று ஓரளவு தனிப்படுத்தப்பட்டுள்ளது.

பெரிய காரியங்களைச் சாதித்தவர்கள் பிறரினின்றும் ஓரளவு உளவியல் முறையில் தொலைவானவர்கள். புற மதிப்பையும் ஆன்மீக வளர்ச்சியையும் விழுமுபவர்கள் குறிப்பிட்ட கால அளவுக்குப் பிறரிடமிருந்து தம்மைப் பிரித்துக் கொள் கின்றனர். எனினும் தனியாள் பெரும்பாலான நேரம் பிறரோடு தொடர்பு கொண்டுள்ளார் என்பதை மறுக்க முடியாது. பிறர் நேரடியாக அவர் முன்னிலையில் இருக்க லாம்; அல்லது தூரத்தில் இருந்துகொண்டு பல்வேறு அறிவுடம்படுப்புச் சாதனங்கள் மூலம் அவரோடு தொடர்பு கொள்ளலாம்; அல்லது அவருடை சிந்தனையில் குடி கொண்டிருக்கலாம். இம்மூன்று வகைகளிலும் தனியாள் பிறரின் தொடர்பைப் பெறுகிறார்.

சமூகத் தூண்டல்.

பிற தனியாட்களுக்கு ஏற்பத் துலங்குதலைச் சமூக நடத்தை என்கிறோம். இதில் பிற தனியாட்கள் நேரான புலக்காட்சியிலோ, கற்பனையிலோ, தூண்டலாகிறார் கள். சமூகப் பொருண்மையுடன் பொருட்களுக்கு ஏற்பத் துலங்குவதையும் சமூக நடத்தையெனக் கொள்ள லாம். எடுத்துக் காட்டாக சாலைக்குறி விளக்குகளைப் பார்த்து நாம் மேலே செல்கிறோம், தேசக் கொடியை வணங்குகிறோம். இக்கொடி நம் நாட்டின் பெருமைக்கும் குறிக்கோளுக்கும் குறியீடாக அமைகிறது.

குழுவின் உறுப்பினர் நேரடித் தொடர்பு கொண்டுள்ள போது முதனிலைச் (Primary) சமூகத் தூண்டல் ஏற்படு கிறது. சைகைகள், முகத்தில் தோன்றும் மெய்ப்பாடுகள், நிற்கும் நிலை, அசைவுகள், வியப்பு, விளிகள், பேச்சு, நகைப்பு முதலியவை யெல்லாம் இதனுள் அடங்கும். உறுப்பினருக்கிடையே மறைமுகத் தொடர்பு உள்ளபோது வழிநிலைத் (Secondary) தூண்டல் ஏற்படுகிறது. தொலை வுடம்படுப்பு அனைத்தும் இதனுள் அடங்கும். இவ் இயலில் முதனிலைச் சமூகத் தூண்டலை ஆராய்வோம்.

சைகை: (Gestures)

உடலின் உறுப்பொன்றை இயக்க, மனத்தின் நிலை யைக் குறிப்பிடுவது சைகை எனப்படும். சைகைகள் நுட்ப மான உள்ளுறை மொழியாகும். ஊமையர்கள் பேச்சிற்குப்

பதிலாகச் சைகையை பயன்படுத்துகிறார்கள். பொதுவாக மக்கள் பேச்சுக்கு வலிமை கொடுப்பதற்காக இதைப் பயன் படுத்துகிறார்கள். பேசும்பொழுது நாம் நினையாமல் செய்யும் சைகைகள், நம் தெரிந்தெடுத்த சொற்களைவிட நமது உண்மைக் கருத்தை வெளிப்படுத்துகின்றன. சைகைகளின் தூண்டற்பயனை இரு உண்மைகளால் காணலாம். முதலா வதாக ஒருவரது முயற்சியற்ற சைகைகளை உற்றுக் கவனித் தால் அவரை நாம் நன்கு புரிந்து கொள்ளமுடியும். இரண் டாவதாக ஒருவருடைய சைகைகளைக் கவனித்தே நாம் அவரை முதலில் மதிப்பிடுகிறோம். ஒருவர் முகத்தில் சிரிப் பைத் தோற்றி இனிமையாகப் பேசலாம். ஆனல் அவர் எதிர்பாராத புருவ அசைவு, அல்லது கையியக்கம், அல் லது முகக்குறிப்பு அவரது 'நெஞ்சம் கடுத்தது' காட்டி விடலாம்.

சைகைகளை ஆல்ப்போர்ட் ஆறுவகைப்படுத்துகிறார். அவையாவன: (1) எழுச்சிச் (Emotional) சைகை (2) சுட் டுச் சைகை (Demonstrative) (3) ஓவியச் (Graphic) சைகை (4) குறியீட்டுச் (Symbolic) சைகை (5) பழக்கச் சைகை (6) தன்னுளம் சுட்டும் (Autisbic) சைகை.

உள்ளங்கையை மூடி உயரத்தூக்குதல், மேசையைத் தட்டுதல், சினத்தால் கீழ் உதட்டைக் கடித்தல், மகிழ்ச்சி யால் கைகொட்டுதல் முதலியன **எழுச்சிச் சைகைகளாவன.**

ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு, அல்லது ஆளுக்கு, அல் லது நிலைமைக்கு நேராக மற்றொருவரின் கவனத்தை ஈர்ப் பதற்காக இயற்றும் இயக்கம் **சுட்டுச் சைகையாகும்.** (எ-டு) விரலால் சுட்டல், தலையை வெடுக்கென அசைத்துச் சுட்டல், கண்ணுல் அப்பொருளை நோக்கிச்சுட்டல்.

ஒரு பொருளை அல்லது ஆளை நடித்து, அல்லது கை யால் வடித்துக் காட்டுவது **ஓவியச் சைகையாகும்.** குழந்தை கள் ஒரு பொருளின் அளவைத் தங்கள் கைகளின் இயக் கத்தால் காட்ட முயல்கின்றனர். பெரியவர்களும் மற்றொரு வர் பருமனுய் இருப்பதையோ,அசைவின்றி நடப்பதையோ, தம் கைகளால் அல்லது உடலியக்கத்தால் காட்டமுயல் வதைக் கண்டிருப்போம்.

மேற்கூறிய மூன்றுவகைச் சைகைகளும் சமூக வாழ்க்கையில் மிக முக்கியமானவை. பிறருடைய சைகைகளை நாம் புரிந்து கொள்வதற்கேற்ப நாம் நமது எதிர்வினைகளை அமைத்துக் கொள்கிறோம். நாம் அறிந்தும் அறியாமலும் செய்யும் சைகைகள் நமது பேச்சிற்கும் அறிவுடம்படுப்பிற்கும் உயிரளிக்கின்றன.

அருவக் கருத்துக்களையும் வெற்றுப் பொருட்களையும் உடம்படுக்க நாம் குறியீட்டுச் **சைகைகளைப்** பயன்படுத்துகிறோம். எடுத்துக் காட்டாக, இந்திய நடனத்தில் கைவிரல்களைப் பல்வேறு விதமாகப் பிடித்து முத்திரைப் பொருட்கள் உண்டாக்குகிறோம். இறைவணக்கத்தில் நாம் ஏற்கும் பற்பல நிலைகளும், ஒருவருக்கொருவர் கைகூப்பியும், பிற வகையிலும் வணக்கம் தெரிவித்தலும் குறியீட்டுச் சைகைகளே. வடமொழி நூல்களில் கடவுளர், அரசர், விலங்குகள், ஆறுகள் முதலியவற்றிற்குரிய குறியீடுகள் விளக்கப்பட்டுள்ளன.*

பலர் குறிப்பிட்ட சைகைகளைப் **பழக்கப்படுத்திக்** கொள்கிறார்கள். இச்சைகைகள் அவர்களுக்குரிய சிறப்புப் பண்புக்கூறுகளாக அமைகின்றன. சிலர் தம் கைகளைப் பின்னல் கட்டிக் கொண்டே பேசுவார்கள். வேறு சிலர் இரு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு பேசுவார்கள் இப்பழக்கச் சைகைகள் எழுச்சியைக் கடத்துவனவல்ல. புதியவர்களுக்கு இவை அறிவுடம்படுப்பவையுமல்ல. ஆனல் நெருங்கிப் பழகினவர்களுக்கு இவற்றின் பொருள் புலப்படும். அவர்கள் இச் சைகைகளை அவருடைய மனத்தின் நிலைக்கும் எழுச்சி நிலைக்கும் அறிகுறியாகக் கொள்வர். அதற்கேற்ப நடந்துகொள்வர்.

சில சைகைகள் நமது உளப் போராட்டங்களை நம்மை அறியாமலே வெளியிடுவன. இவற்றைத் **தன்னுளம் சுட்டும் சைகைகள்** என்னலாம். பெரிய எழுச்சிப் போராட்டத்தில் உழலும்போது, அல்லது ஒரு சிக்கலான அறிவுவயப் பிரச்சினையைத் தீர்க்க முயலும்போது நாம் நமது நகங்களைக் கடிக்கிறோம், உதட்டை மடிக்கிறோம், கால்களை அங்குமிங்கும் அசைக்கிறோம். இத்தகைய நிலைகள் நமது அமைதியின்மையைக் காட்டுகின்றன. இவற்றிற்குச் சமூகத் தூண்

*சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையிலும், அடியார்க்கு நல்லார் உரை மேற்கோளிலும் இத்தகைய குறியீடுகள் காணலாம்

டற்பயனும் உண்டு. இவற்றைப் பார்ப்பவர் இவற்றுல் அலைக்கப் (Annoy) படக்கூடும், அல்லது நகைக்கக் கூடும். சைகை இயற்றுபவருடன் உரையாடுவதா அல்லது அப்படியே விட்டுவிடுவதா என்றெல்லாம் பார்ப்பவர் நினைக்கக்கூடும்.

முகத்தின் மூலம் எழுச்சி வெளிப்பாடு.*

முகத்தின் மூலம் ஏற்படும் எழுச்சி வெளிப்பாடு மிகவும் முக்கியமானது. சிறு குழந்தை பெற்றேரின் முகக் குறிப்பைக் கண்டு அதற்கேற்பத் துலங்குகிறது. மாணவர் ஆசிரியரின் முகக்குறிப்பிலுள்ள சிறிய மாறுதல்களையும் கவனித்து அவற்றிற்கேற்ப நடந்து கொள்கிறார்கள். முக வெளிப்பபாடு ஒருவரின் மொத்த மன நிலையைப்பற்றித் தெரிவிக்கிறது. வெளிப்பாடு இயல்பாக இருந்தால்தான் முகக் குறிப்பு உண்மை நிலையைப் புலப்படுத்தக்கூடும். முகக் குறிப்பும் பேச்சின் ஒரு கூருகக் கருதக்கூடிய அளவு முக்கியமானது. ஒருவர் சொல்லுவதை அப்படியே எடுத்துக் கொள்ளவேண்டுமா அல்லது வேறு விதமாகப் பொருள் கொள்ளவேண்டுமா என்று காட்டுவதும் முகக் குறிப்பே. முக வெளிப்பாட்டைப் பின்வருமாறு வகுக்கலாம்:— (1) வலியும்துன்பமும் குறிப்பன (2) விபப்பும் அச்சமும் குறிப்பன (3) சினம் குறிப்பன (4) அருவருப்புக் குறிப்பன (5) இன்பம் குறிப்பன (6) நம்பிக்கை, ஐயம், உறுதி, கையாலாகாமை முதலிய அறிவூட்டிய (Intellectualised) எழுச்சிகள் குறிப்பன.

தலை, மேற்கை, கைகள், உடல் முதலியவற்றின் நிறுக்கை நிலையாலும், இயக்கத்தாலும் எழுச்சிகளை வெளிப் படுத்தலாம்.

நிறுக்கை நிலை (Posturve)

கைகால்களும், உடலும், செயற்படும் வகையை நிறுத்துநிலை அல்லது நிறுக்கை என்கிறோம். உடலின் ஈர்ப்புமையக்கோட்டுநிலையினின்று உடலின் விலக்கத்தைக் கொண்டு நிறுக்கை நிலைகளை வேறு பிரித்தறியலாம். உடல் சமநிலையில் நிற்கலாம், அல்லது கொஞ்சம் தெளிந்திருக்கலாம், மிகவும் வளைந்திருக்கலாம், மூன்று வளைவுகள் கூட

*திருக்குறள் 'குறிப்புணர்தல்' என்னும் அதிகாரத்தைக் காண்க.

அடைந்திருக்கலாம். இந்திய நடனநூலார் நான்கு மடிவு களைப் (bhavas) பற்றிக் கூறியுள்ளனர். ஒருவருடைய தசைகள் செயற்படுவதற்கு ஆயத்தமாயிருக்கின்றனவா அல்லவா என்பதையெல்லாம் காட்டுவது நிறுக்கைநிலை. இதனுல் தசைகளின் இறுக்கம் (Tone) பிறருக்குத் தெரி கிறது. இது பிறரைப் பாதிக்கிறது. அதிக இறுக்கம் வலி மையையும் ஆற்றலையும் காட்டுகிறது. பிறருக்கு இத்தசை யியக்கமே கட்டளையிடுகிறது.

பேச்சும் மொழியும்:

சொல்லும் சொற்களும், எழுதும் எழுத்தும் மொழியின் கூறுகள் ஆவன. பேசுவோர் அல்லது எழுதுவோர் பிறருக்குக் கடத்த விரும்பும் பொருள் சொற்களால் குறி யிடப்பட்டுள்ளது.

.பேச்சுக்கு மூலமான ஊக்கி யாது என்பது பற்றி உளவியலர் வாதித்துள்ளனர். தௌலெஸ் (Thouless) முதலான சில உற்றுநோக்காளர், குழந்தையின் தொடக்கப் பேச்சு, அது காண்பவற்றையும் செய்பவற்றையும் பற்றிய தோர் உரையாகும்; அது பிறருக்கு ஆணையிடுவதாகவோ, பிறரைக் கட்டுப்படுத்த முயல்வதாகவோ அமைவதில்லை யென்று கூறியுள்ளனர். 1. ஆல்ப்போர்ட் முதலானவர் கள், சொற்களின் முதனிலை ஊக்கியாவது பிறரிடமிருந்து குழந்தை துலங்கல் பிறப்பிக்க விரும்புவதேயாம் என்று கூறியுள்ளனர். குழந்தையின் பேச்சு பல வேண்டுகோள் களும் முறையீடுகளும் ஆணைகளும் கொண்டது; தனது தேவைகளைப் பிறர் கவனிக்கவேண்டும் என்பதற்காக ஏற்படுவது. அறிவுடம்படுத்தல் விருப்பம் பிந்தித் தோன்றுவது.

நாம் மேற்கூறியவற்றுள் எந்த நோக்கினைக் கடைப் பிடித்தாலும் சரி, ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. அதாவது, பேச்சு ஒரு சமூக நிகழ்ச்சி என்பதேயாம். அதனுல்தான் பேச்சு சமூக உளவியலரைக் கவர்ந்துள் ளது. மொழியின் மூலம் பேசுபவருக்கும் கேட்பவருக்கும் இடையே, எழுதுபவருக்கும் படிப்பவருக்கும் இடையே, ஓர் இடைவினை ஏற்படுகிறது. அது கேட்பவரை (அல்லது படிப்பவரைத்) தூண்டுகிறது; அணுகுவதற்கோ, ஒத் துழைப்பதற்கோ, விலகுவதற்கோ, எதிர்ப்பதற்கோ

அவரைத் தூண்டுகிறது. சொற்கள் வன்மையான சமூகத் தூண்டல்கள் என்பது எக்காலத்தவரும் அறிந்தது. சொல்லம்பு, வில்லம்பு போன்றது. வில்லை விட்டுப் பாய்ந்தபின் அம்பைத் திருப்பி இழுக்கமுடியாது. சமூக வினைவுகளைப் பொறுத்தவரை பேச்சு உடற்செயல்களைப் போன்றது. ஒருவன் தன் சிந்தனைகளையும் எழுச்சிகளையும் தனக்குள்ளே அடக்கிக் கொள்ளும் வரை அவன் பிறரைக் கிளருவதில்லை. அவன் தன் எண்ணங்களை வெளியிட்ட வுடன் பிறரைப் பாதிக்கிறான். நமது முன்னோர் செயல் தூய்மை, சொல் தூய்மை, மனத்தூய்மை, என்று வரிசைப் படுத்தி வெளிப்பாட்டை மூன்றும் உட்பாட்டைப் பின்னும் வைத்தது இதைக் கருதியே போலும். இதனால்தான் சொற்கட்டினையும், சொல்வன்மையையும் சிறப்பித்துக் கூறுகிறோம். சொற்கள் மனத்தைக் கவர்வன; வெறுப்பை யும் எதிர்ப்பையும் தூண்டுவன; பிறருடைய வாழ்க்கையை யும் பாதிப்பன.

பண்டைய கிரேக்கக் குடியாட்சி அரசுகளில் சட்ட மன்றங்களும் நடுவர் குழுவும் (Jurymen) இருந்தன. சொல்வன்மையின் சிறப்பை அவர்கள் அறிந்திருந்தனர். கல்வியில் சொற்பயிற்சி முக்கிய இடம் பெற்றது. வட மொழிப் புலவரான தண்டி சொல்லாட்சிச் சிறப்பைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் : "சொல்லைத் தகுந்தபடிப் பயன்படுத்தினால் மொழி பாற்பசுவைப் போல் பயன் தருவது. தகாதபடிப் பயன்படுத்தினால் சொல்பவர் எருதைப் போன்று மந்தமானவர் என்று அச்சொல் கூறிவிடும்" அதாவது, சொல் சமூகத்தைக் கட்டுப்படுத் தற்குரியதோர் வன்மையுள்ள கருவியாகும்.*

சொல்லின் பயன்களை ஆராயும்போது, வாய்ச்சொல் லுக்கும் எழுது சொல்லுக்கும் உள்ள வேற்றுமையை மனத் திற்கொள்ளுதல் நலம். ஒவ்வொன்றிற்கும் சில தனிச் சிறப்புக்கள் உள்ளன. இவற்றை ஆராய்வோம்.

சொற்களுக்கு வைத்துக்கோடற் பொருண்மை உளது. ஆனால் பேசுபவருக்கும் கேட்பவருக்கும் இடையே எப்

*"ஆக்கமுங் கேடும் அதனால் வருவதால்
காத்தோம்பல் சொல்லின் கட் சோர்வு.
விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

முதலிய வள்ளுவர் வாய்மொழிகளையும் காண்க.

பொழுதும் அகராதிப் பொருளே கடத்தப்படுவதில்லை. கேட்போர் காணும் 'உளவியற் பொருண்மை' பல காரணி களைப் பொருத்தது. அது கேட்பவரின் அறிவையும், பேசு வோரின் மனநிலையையும் சார்ந்தது. எடுத்துக் காட்டாக, ஒரு மங்கை நல்லாள் தூரத்தில் தன் காதலன் வருவதைக் கண்டு ஒரு கொம்பில் சாய்ந்து கொண்டு 'எனக்குக் களைப்பாக இருக்கிறது. உங்களோடு இனி நடந்து வர முடியாது' என்று தன் தோழியரிடம் கூறுகிறாள். அவர்களும் அவள் சொல்லின் உட்பொருளையும், அவள் நிலையையும் புரிந்துகொண்டு அப்பாற் செல்லுகிறார்கள். பேச்சிற்குப் பொருள் அளிக்கும் வேறு பல கூறுகள் உள்ளன. 'தொனி' அவற்றுள் மிகவும் முக்கியமானது. நம் நாட்டு மொழிவல்லார் பலர் இதனைப் பற்றிக் குறிப்பிட் டுள்ளனர். ஒருவருடைய குரலின் தொனி அவருடைய மனவெழுச்சி நிலையைக் காட்டுகிறது. இதன் மூலம் அவர் பேசும் சொல்லின் அகராதிப் பொருள் மாறிவிடுகிறது. சில வேளைகளில் முற்றிலும் எதிரான பொருள்கூட இதன் மூலம் பெறப்படுகிறது. எடுத்துக்காட்டாக 'நன்றி' 'உன்னைக் காதலிக்கிறேன்' 'கழுதை' என்பவற்றை எடுத்துக் கொள் வோம். 'நன்றி' என்பது உண்மையாகவே நன்றியறிந்து கூறுவதாகலாம், அல்லது வழக்காற்று முறையில் உணர்ச்சி யின்றிக் கூறலாம், அல்லது 'போதும், நிறுத்து' என்ற பொருள்படக் கூறலாம். 'காதலிக்கிறேன்' என்பது உண்மையான தூய உழுவலன்பிலிருந்து வெறும் துன் புறுத்து வேட்கை (sadism) வரை பல உணர்ச்சிகளுள் எதையும் குறிக்கலாம். 'கழுதை' என்னும் சொல் அன்பு மிகுதியைக் குறிக்கும்படி சிலர் பயன்படுத்துவதுண்டு. ஒரு நடுநிலைச் சொல்லை நாம் சொல்லும் முறையில் அறப் பொருள் தோன்றும்படி செய்யலாம். சாதாரணமாக வைத்துக் கொண்டுள்ள பொருளின் எதிர்மறைப் பொருள் தொனிக்கும்படி கூட ஒரு சொல்லை ஒலிக்க முடியும். முகத்தைச் சுளித்துக் கொண்டு 'நன்று செய்தாய்' என்று ஒரு குழந்தையிடம் கூறினால் அது 'தீது செய்தாய்' என்ற உட்பொருளையே ஏற்கும். இப்படியே ஒழுங்காகச் சொல் லிக்கொண்டு வந்தால் குழந்தை 'நன்று' என்ற சொல்லைத் 'தவிர்க்க வேண்டியது' என்ற பொருளில் புரிந்து கொள்ளும்.

பேசுவோரின் சிறப்பான பேச்சுப் படிவத்தில் வேறு சில கூறுகளும் உள. அவை குரற்பண்பு, உச்சரிப்பு,

வேகம், சொற்களஞ்சிய எளிமை முதலியன. கேட்போர் இவை அனைத்திற்கும் எதிர்வினையுறுகிறார். பேசுவோரின் சொல்லாட்சி, சொற்கோப்பு, பேச்சு அழுத்தம், குரல் முதலியவற்றைக் கொண்டு அவரது அறிவாற்றல், அறப் பண்புகள், ஆளுமை, அமைப்பு முதலியவற்றைக் கேட் போர் மதிப்பிடக்கூடும். அவரது நீண்ட அரிய சொற்கள் ஒருவேளை அச்சம், தாழ்வுணர்ச்சி அல்லது அறியாமையை மறைக்கப் பயன்படலாம். உளவியலர்கள் பயன்படுத்தும் கடுஞ்சொற்கள் கேட்போர் மனத்தில் சில வேளைகளில் எதிர்ப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றன. சொல் அழுத்த மும் வேகமும் ஒருவருடைய எழுச்சித் திடத்தையும், ஆன்ம ஆழத்தையும் உணர்த்தக்கூடும். ஒருவர் சொற் களைத் தவருக உச்சரித்தால் அவரைப் பற்றி மிக நல்லெண்ணம் உண்டாவதில்லை.

குரலின் பண்பும் (quality) ஏற்றத்தாழ்வும் (pitch) முக்கியமானவை. மிக ஆழ்ந்த குரலையும் 'கிரீச்'சென்ற உச்சக் குரலையும் மக்கள் விரும்புவதில்லை. காமசாத்திரம் இயற்றியவர், ஒரு பெண்ணின் குரற்பண்புக்கும், அவளு டைய ஆளுமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்று கூறியுள்ளார். குரற்பண்புக்கும் ஆளுமைக்கும் தொடர்பு உண்டா என்னும் கருதுகோளைச் சோதிக்க ஆல்ப்போர்ட் டும் காண்ட்ரில்லும் ஒரு புற ஆய்வு செய்தனர். ஒரே கட்டுரையைத் தட்டெழுதி (Typed) பதினெட்டுப் பேரைப் படிக்கச் சொன்னார்கள். பின் அதை ஒலி பரப்பினார்கள். கேட்போரிடம் (1) ஒரு வாழ்தொழிற் (vocations) பட்டி யல், (2) மேலோங்கல்-பணிவுச் (Ascendance-Submission) சோதனையில் கிடைத்த மதிப்பெண்கள், (3) அகமுக-புற முகச் (Introversion extra-version) சோதனை மதிப்பெண் கள், (4) பல புகைப்படங்கள்—ஆகியவற்றைக் கொடுத்து இத்தகவல்களை அவர்கள் கேட்ட குரலுக்குரியவருக்கேற் பப் பொருத்தச் சொன்னார்கள். பலர் குரலைக் கேட்டுப் பிற தகவல்களைச் சரியாகத் தீர்ப்பிட்டு விட்டார்கள்.

ஒருவருடைய சொற்களஞ்சியம், வாக்கிய அமைப்பு, திசைச் சொல் வழக்காறு, (dialect) உச்சரிப்பு, சைகைக ளெல்லாம் அவருடைய மொத்தப் பேச்சுப் படிவமாகும். கேட்பவர்கள் இடக்கர் அல்லது தப்பு என்று எண்ணும் சொற்கள் பலவற்றைப் பேசினாலும், அவர்கள் பழக்கப் பட்டதற்கு அதிகமாகச் சைகை காட்டினாலும், கேட்போ

ரின் கவனம் கலையும். திசைப் பேச்சுப் பேசுபவரின் பண்பாட்டையோ அல்லது பண்பாட்டின் உட்கூறினையோ காட்டும்: கேட்பவர்களுடைய குழு மனப்பான்மையைக் கிளறும்.

நாம் பயன்படுத்தும் பெயரெச்சங்களும், கேட்போருடைய புலக்காட்சியைப் பாதித்து அவர்களது மனப்பான்மைகளைத் தீர்மானிக்கின்றன. சில தொடர்கள் முத்திரைகளாக (labels) அமைகின்றன. "கண்ணுடி எச்சரிக்கை" "நாய்கள் ஜாக்கிரதை!" முதலியன இத்தகையன. நமது சொற்கள் பொருட்களை வகுத்துக் கூறுவதற்கும் பயன்படுகின்றன. 'நாகரிகமுள்ள', 'நாகரிகமற்ற', 'புராதன', 'இடைக்கால', 'பண்டைய', 'ஃபாஸிஸ்டு', 'கம்யூனிஸ்டு', 'சர்வாதிகாரி' முதலிய சொற்கள் மனப்பான்மைகளைத் தூண்டுவன.

முகஅமைப்பு (Physiognomy)

ஒருவர் அமைதியாக, குறிப்பான மனவெழுச்சிகளை வெளியிடாமல் இருக்கும்போதே அவருடைய முகபாவம் ஒன்று உண்டு. இதை முக அமைப்பு என்கிறோம். இவை தசைகளின் இறுக்கத்தைக் காட்டுகின்றன. பழக்கமாகிவிட்ட முகக் குறிப்புகளும், முகத்தைச் சுருக்கத்திற்குச் செங்கோணத்தில் விழும் குழிகளும் முக்கியமானவை. நாம் ஒருவருடைய முகத் தோற்றத்தைக் கண்டே அவரை விரும்புவது அல்லது வெறுப்பது உண்டு. ஆனால் முகத் தோற்றத்தைக் கொண்டு ஒருவருடைய சீல அமைப்பை மதிப்பிடுவது தவருகும். இவ்விரண்டு கூறுகளுக்கும் குறிப்பிடத்தக்க உடனியைபு கிடையாது.

நகை (laughter) ஒரு சமூகத் தூண்டலாதல்.

நகை ஒரு சமூகத் தூண்டலும், சமூகத் துலங்கலுமாகும். இங்கு அதன் சமூகத் தூண்டற் பயனைப் பற்றிப் படிப்போம். நகை பிறரைப் பல வகைகளில் பாதிக்கிறது. **பிறரைப்பார்த்து** நகைப்பது ஒருவகை. இளிவந்தவற்றை (The ludicrous), வேடிக்கையானவற்றை, ஒன்றுடொன்று ஒவ்வாதவற்றைக் கண்டு நாம் நகைக்கிறோம். வேடிக்கையான உடை, நெளிவற்ற (stiff) இயக்கம், இசைவற்ற இயக்கம், ஒருவரது பேதைமைச் சொற்கள், முதலியவற்

றைக் கண்டு நாம் நகைப்பதுண்டு. இது குறைகாட்டும் நகை. நாம் ஒருவரிடமிருந்து வேறு வகையான நடத்தையை எதிர்பார்க்கிறோமென்று இது காட்டுகிறது. இதைக் கண்டு அவர் தம் வழிகளைத் திருத்திக்கொள்ள முயல்கிறார். நகை ஒரு சமூகக் கட்டுப்பாட்டுக் கருவியாக விளங்குகிறதென்று ஃபெர்க்சன் கூறியுள்ளார். நகைக்கப்படுபவரை அது திருத்துகிறது.

நகையின் மற்றொருவகை **பிறரோடு** நகைத்தல். இதற்கும் சமூகத் தூண்டல் மதிப்பு உண்டு. இது தோழமை உணர்ச்சியை உண்டாக்குகிறது ; சமூகத்தினைவலுப்படுத்துகிறது. இருவர் ஒன்றுக நகைப்பது, அவர்கள் ஒரு காரியத்தை ஒரே நோக்கோடு பார்க்கிறார்கள் என்று காட்டுகிறது. இருவரும் ஒரே குழுவிற்குச் சொந்தமானவர்கள் என்பதை வலியுறுத்துகின்றது. நம்மோடு பயணம் செய்யும் ஒருவரோடு நாம் ஒரு விகடத்தைப் பகிர்ந்து கொண்டால், அல்லது ஒரு நிகழ்ச்சியைக் கண்டு இருவரும் ஒருங்கே நகைத்தால், நமக்குள் நட்பு ஏற்படுகிறது. களிப்பு மனப்பான்மை நல்லெண்ணத்திற்குத் திறவுகோலாகும் என்று ஃபொகார்டஸ் கூறியுள்ளார். சமூகத்தைத் தூண்டுவிப்பதற்கு இவை மிகவும் பயன்படுகின்றன. இதை அறிந்த பொதுப் பேச்சாளர் பலர் தமது பேச்சுக்களை நகைச்சுவைக் கதைகளோடு தொடங்குகிறார்கள். பேச்சின் இடையிலும் விகடத் துணுக்குகளை எடுத்து வீசுகிறார்கள். இம்முறையில் கேட்போர் புறச் சடங்குகளைக் களைகின்றனர். அத்துடன் குறைகாணும் மனப்பான்மையையும் நீக்கி விடுகின்றனர். நகையின் மூலம் கேட்போரிடையேயும் இடைத்தூண்டல் உண்டாகிறது. ஆகையால் குறைகாணும் மனப்பான்மை நீங்கி கும்பல் போலும் மனப்பான்மை வந்தெய்துகிறது.

தூண்டல் மதிப்புள்ள வேறு நகைகளும் உள. எடுத்துக் காட்டாக, வென்றோனின் இகழ்ச்சி நகை, தோற்றோன் தன்னைச் சிறியவனாக உணரச் செய்கிறது. இதன் விளைவாக அவன் மனத்தில் கசப்பும், வெறுப்பும் தோன்றும். அகத்துள் நடுங்கிக் கொண்டிருப்பவன் தன் மேலதிகாரி முன் புறத்துப் பொய்த்து நகைப்பது அவரது தன்மதிப்பைத் தூண்டலாம், அல்லது எரிச்சலை உண்டுபண்ணலாம். சில சமயங்களில் தாழ்வு மனப்பான்மையை மறைப்பதற்காக உரத்த நகை தோன்றலாம். புதிய புடைவை கட்டிக்கொண்

டிருக்கும் ஒரு பெண் பிறர் கவனத்தை ஈர்ப்பதற்காகவே உரத்து நகைக்கக்கூடும்.

சமூக இடைவினை வகைகள்:

தனியாட்களுக்குள்ளும் குழுக்களுக்குள்ளும் ஏற்படும் இடைவினையை நான்கு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். தனியாட்களும் (குழுக்களும்) ஒத்துழைக்கின்றனர், போட்டியிடுகின்றனர், சில வேளை போராடுகின்றனர், சில வேளைகளில் விட்டுக் கொடுப்பதும் தன்வயமாக்குவதும் உண்டு. சமூகவியலரும் சமூக உளவியலரும் இவ்வகைச் சமூக இடைவினைகளை ஆய்கின்றனர்.

ஒத்துழைப்பு: (Co-operation)

ஒத்துழைப்பின் சாரமாவது, தனியாட்களிடையே (அல்லது குழுக்களிடையே) ஒரு பொது நோக்கம் உளது; இந்த நோக்கம் நிறைவேறுவதற்காக அவர்கள் தங்கள் நடத்தையைப் பொருத்திக் கொள்ள வேண்டியதிருக்கிறது. படையெடுப்பவர்களை அல்லது கொடுங்கோல் மன்னரை எதிர்ப்பதற்கு மக்கள் ஒன்றுகத் திரள்கின்றனர்; கோயில்களும் பொது நிலையங்களும் கட்டுவதற்கு மக்கள் ஒத்துழைக்கின்றனர்; பயிர்களை வளர்க்கக் குடியானவர் ஒன்று சேர்கின்றனர்; நெசவாளியின் மனைவி நெசவில் தன் கணவனுக்குத் துணைபுரிகிறாள்; பெண்கள் தம் தாயாருக்கு அல்லது மாமியாருக்குச் சமையல் வேலையில் உதவி செய்கிறார்கள்; கணவன் தன் மனைவிக்குப் பலவகையில் துணை செய்கிறான். கூட்டு விவசாயம், உற்பத்தியாளர் சங்கம், சமூக ஊழியர் கூட்டம், நாட்டின் இன்னலைக் களையக் குடிகளின் திரட்டு முயற்சி முதலியவை பெரிய அளவில் அமையும் ஒத்துழைப்புச் செயல்கள். இவ்வாறு செய்யும் வேலை அளவில் மிக்கது, தரத்தில் உயர்ந்தது, இதன் மூலம் உளவியற்பயனும் உண்டு. ஒத்துழைப்பின் மூலம் மக்களிடையே இருவழித் தொடர்புணர்ச்சி ஏற்படுகிறது. அன்பும் நேழமையும் சுரக்கின்றன. மூன்று மாணவர் ஒரு படிப்புக்குழுவாக அமைந்து ஒருவர் படிக்க, ஒருவர் சுருக்கம் எழுத, ஒருவர் உரையாடற்கேள்விகளை எழுப்பினால் அவர்கள் குறைந்த கால அளவில் திறம்படப் படிப்பதுடன், தாங்கள் ஒருவருக்கொருவர் சொந்த மானவர்கள் என்ற உணர்ச்சியும் பெறுவர்.

அமைவுற்ற சமூக வாழ்க்கையிலெல்லாம் ஒத்துழைப்பு இன்றியமையாத கூறாக அமைந்துள்ளது.

மனிதன் இயல்பாகவே போட்டியிடுபவனா ? என்பது சமூகவியலரையும் உளவியலரையும் கவர்ந்துள்ள ஒரு முக்கிய பிரச்சினை. அப்படியானால் அவனுடைய ஒத்துழைப்பெல்லாம் போட்டி மனப்பான்மையைப் பண்பாடு கட்டுப்படுத்துவதால்தான் ஏற்படுகிறதென்றாகும். உயிரணுக்களையும் (Cell), விலங்குகளையும், குழந்தைகளையும், முதியோரையும் உற்றுநோக்கியதில் ஒத்துழைப்பிற்கும் இயல்பான அடிப்படை ஒன்று உளது என்று தெரிந்தது. உயிரணுக்கள் இரண்டாகப் பிரிந்த பின்னும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன, அவற்றிடையே தானாய் இயங்கும் இருவழித் தொடர்பு உண்டு என்று உயிரியலர் கூறுகிறார்கள். உயர்ந்த விலங்குகளுக்கு ஒன்றொன்றின் தொடர்பு தேவையாகிறதுபோல் தோன்றுகிறது. மனிதன் உடனுறைவை (Company) விரும்புகிறான், தனிமைக்கு அஞ்சுகிறான், உடம்படுப்பை விரும்புகிறான். மனிதனுக்கும் விலங்குகளுக்கும் ஒருவகைப் புராதன ஒத்துணர்வு (Primitive sympathy) உண்டு. இதன் மூலம் ஒன்றுதல் இயலுகிறது. இதை ஒத்துழைப்பின் அடிப்படை என்று கூறுவது பொருந்தும். தேவையான பொருட்கள் போதிய அளவில் கிடைக்காமற் போனால்தான் ஒத்துழைப்பு நீங்கிப் போட்டி தோன்றுகிறது.

போட்டி (competition)

ஒரே கோள் (Goal) நோக்கி ஒன்றிற்கு மேற்பட்ட தனியாட்களோ, குழுக்களோ விரைந்து தொடர்வது போட்டி எனப்படும். பணம், சமூக ஏற்றம், புகழ், செல்வாக்கு, வலிமை, பிறர்மீது ஆதிக்கம் முதலியவை இத்தகைய கோள்களாம். மேற்கூறிய பொருட்களின் அளவு வரை (limit) யுடையது. ஆகையால் அவற்றிற் காகப் போட்டியிடுகிறோம். உடல்நலம், கலையின்பம், உள்நிறைவு, முதலியவற்றிற்காக மக்கள் போட்டியிடுவதில்லை. பிறரிடமிருந்து பறிக்காமலே இவற்றை அவர்கள் கொள்ள முடியும். பெரிய நகரங்களிலேயன்றி, பொதுவாக சூரிய வெளிச்சத்திற்காகவும், சுத்தக் காற்றிற்காகவும் நாம் போட்டியிடுவதில்லை.

வெவ்வேறு பண்பாடுகளில் வெவ்வேறு பொருட்கள் உயர்வாக மதிக்கப்படுகின்றன ; அவற்றிற்காகப் போட்டியிடும் முறைகளும் வேறுபடுகின்றன.

ஒரே பொருளை இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் தொடர்வது பிறருடைய முயற்சியைத் தானாகவே தடுக்கும்.

போட்டியினால் நன்மையும் உண்டு. அது தனியாளைத் தூண்டுவிக்கிறது. ஒரு பொருளை அவர் தனக்கே தனி உரிமையாகக் கொண்டுள்ளபோது வெளியிடாத ஆற்றல் களையெல்லாம் போட்டி வெளிக்கொணர்கிறது. போட்டியின் மூலம் தனியாள் தன்னாய்வு செய்கிறார். தாம் எதை நன்றாய்ச் செய்யமுடியும், எவ்வளவு நன்றாய்ச் செய்ய முடியும் என்று கண்டுபிடிக்கிறார். ஈ. ஏ. ராஸ் கூறியுள்ள படி சமூக உலகில் ஒவ்வொரு தனியாளுக்கும் அவரவரது இடத்தைப் பகிர்ந்து கொடுப்பது போட்டியேயாகும். போட்டி ஒரு முற்போக்குச் சக்தியாகும் ; அது நிறைவேற்று கிறது ; அழிக்கவேண்டும் என்பது அதன் இன்றியமையாப் பண்பன்று.

போட்டியைப் பற்றிப் பல புற ஆய்வுகள் உள. அவை பெரும்பாலும் குழந்தைகளையும், பல்கலைக்கழக மாணவரை யும் ஆட்படுத்தி இயற்றியவை. இவற்றின் மூலம் தெரிந்தது என்னவென்றால் சமமானவர்களிடையே ஏற்படும் போட்டி பொதுவாக, செயலை விரைவுபடுத்துகிறது ; வேலையின் தரத்தை உயர்த்துகிறது. போட்டியிடுபவர் தம்மால் இயன்ற அளவுக்கு நன்றாக வேலை செய்கின்றனர். பொது வாக என்று மேலே கூறியதற்குக் காரணம் என்னவென்றால் அறிவாற்றல் அல்லது சுவையாற்றல் தேவைப்படும் செயல் களில் போட்டியின் மூலம் தரம் குறைகிறது. உணர்ச்சி யைக் கிளறுவதாலும், போட்டியிடுவோரின்மீது பாதிக் கவனம் செல்வதாலும் திருத்தம் குறைகிறது, வேலைத்தரம் குன்றுகிறது.

கல்வியாளரும், தொழில் உரிமையாளரும் போட்டி மனப்பான்மையை மாணவரிடத்தும் தொழிலாளிகளிடத் தும் ஏற்படுத்தி வேலையை முன்னேற்ற முயலுகின்றனர். அளவிலும் தரத்திலும் உயர்ந்த வேலையைப் பாராட்டுவதா லும் விளம்பரப்படுத்துவதாலும் எல்லோரையும் நன்கு வேலை செய்யத் தூண்ட முனைகின்றனர்.

மனிதன் இயற்கையாவே போட்டியிடும் தன்மை உடையவனு ? இல்லையென்றே தோன்றுகிறது. போட்டி இயல்பூக்கம் உண்டானுல் ஆறுமாதக் குழந்தையின் பந்தை மற்றொரு குழந்தை பறிக்கும்போது, முதற் குழந்தை அதைத் தடுக்க முயல வேண்டும். ஆனுல் அது அப்படிச் செய்வதில்லை. அது பந்தை விட்டுவிட்டுப் புரண்டு அழுகிறது. மனிதரும் பொருள்கள் குறைந்த அளவில் கிடைக்கும்போதுதான் போட்டியிடுகிருர்கள். இதிலிருந்தும் போட்டி நடத்தை, கொடுக்கப்பட்ட நிலைமையினுல் ஏற்படுகிறதேயன்றி, ஓர் இயல்பூக்கத்தாலன்று என்பது தெளிவாகும்.

போராட்டம். (Conflict) போராட்டம் போட்டியினின்றும் வேறுபட்டது. இது எதிர்ப்பின் "தீய பக்கத்தை" எடுத்துக் காட்டுகிறது. போட்டி ஒரு பந்தய ஓட்டம்; போராட்டம் ஒரு சண்டை. போராட்டத்தின் சாரம் இதுதான் : இதில் ஒரு தனியாள் (அல்லது குழு) ஒரு பொருளை விரும்புகிருர், மற்றொரு தனியாள் (அல்லது குழு) அப்பொருளை எய்த முயன்றுல் அம்முயற்சியைத் தடுக்க முற்படுகிருர். போராட்டம் ஓர் அழித்தல் முறை எதிர்ப்பாகும். அதன் மூலம் ஆக்க விளைவு ஏற்படுவதில்லை. போராடுபவர்களின் சக்தியையும், செல்வத்தையும் அது உண்டு விடுகிறது. இரு விவசாயிகள் சண்டையிட்டுத் தங்கள் காலத்தையும் பணத்தையும் நீதிமன்ற நடவடிக்கையில் செலவிடுகின்றனர். இரு உற்பத்தியாளர் ஒருவரையொருவர் முறியடிப்பற்காகப் பொருட்களின் விலையைக் குறைத்துக்கொண்டு போய்க் கடைசியில் இருவரும் திவாலாகிவிடுகிருர்கள்; இரண்டு தேசங்கள்போரில் தம் மக்களையும் பொருளையும் இறைத்துப் பாழ்படுகின்றன. அறத்துறையிலும் போராட்டம் தனியாளைக் கீழ்ப்படுத்துகிறது. அது சினத்தையும் வெறுப்பையும் விளைக்கிறது. விரைவில் முடிவடையாத போராட்டம் இருசாராரையும் களைப்பாக்குறது, திணற வைக்கிறது ; தோல்வியை நினைத்து இருவரும் அஞ்சுகின்றனர். இவ்வாறு அறநிலை சீர்குலைகிறது. போராடும் கட்சிகள் நேர்மையைக் கையாளுவதில்லை. போர் அறத்தையும் மீறுகின்றனர்; போரில் அனைத்தும் நேர்தான் என்று கூறிக் கொள்ளுகிருர்கள்.

குழந்தைகள் இருவர் ஒரே விளையாட்டுப் பொருளைப் பற்றிக்கொண்டு, பின் ஒருவரையொருவர் அடித்துக் கொள்

கின்றனர். காவலர் சட்டத்தைக் காப்பாற்ற முயல்கிறார்; கலகக்காரர் அதைத் தடுக்க முற்படுகிறார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும், முன்தலைமுறைக்கும் பின்தலைமுறைக்கும், இடையே போராட்டம் ஏற்படுவதுண்டு. இனங்கள், தேசங்கள், வகுப்புகள், சாதிகள், சமயக்குழுக்கள், இவற்றிற்கிடையேயும் போராட்டம் ஏற்படுகிறது. ஆணினம் பெண்ணின் பொருளாதாரத் தற்சார்பையும், இயங்குரிமையையும் தடுக்க முயல்வதால் இருசாராருக்குமிடையே போர் ஏற்பட்டதுண்டு. தொழிலாளர் முதலாளிகளின் ஊதியத்தில் பங்கு கேட்டால், நலன்கள் மோதுகின்றன. போராட்டம் மூள்கிறது. அடிமை நாடுகள் ஆளும் நாட்டினருடன் சண்டையிட்டுள்ளன. நீக்ரோக்கள் தமது பொருளாதார, சமூக நிலைகளை முன்னேற்ற முயலும்போது வெள்ளையரோடு சண்டையிட வேண்டியிருக்கிறது.

போராட்ட நடத்தையைப் பற்றி மேலே கூறியது நமக்கு மனக்கலக்கத்தை உண்டாக்கலாம். ஆனல் ராஸ் 'எதிர்ப்பின் இடைத்தடை' (interference of opposition) யைப்பற்றிக் கூறியிருப்பது நோக்கத்தக்கது.[2] "ஒவ்வொரு வகைப் போராட்டமும் பிறவகைப் போராட்டங்களை இடை நின்று தடுக்கிறது; போராட்டப் பிளவுக்கோடு ஒன்று பட்டால் மட்டும் இவ்வாறு நடப்பதில்லை". "போராட்டங்களின் எண்ணிக்கை உயர்ந்தால், அவற்றல் ஏற்படும் தனித்தனி அபாயம் குறைகிறது" என்று அவர் கூறியுள்ளார். கணவனிடம் மனைவி சம உரிமை கேட்டுப் போராடுகிறள்; அப்போது வேலைக்காரியும் சம உரிமை கொண்டாடத் தொடங்கினல், அல்லது அண்டை வீட்டோடு சண்டை தொடங்கினல், முதற்சண்டை குறைகிறது. இரண்டு தேசங்கள் போர் புரியும்பொழுது உலகத் தொழிலாளருக்கும், முதலாளிகளுக்குமிடையே போர் மூண்டால் முதற்போரின் வன்மை குன்றும். இந்தியாவில் ராஜ்யங்களுக்கிடையே அரசியற் பூசல் ஏற்பட்டபோது ராஜ்யங்களுக்குள்ளேயுள்ள சாதிப் பூசல் அதைக் குறைத்துள்ளது.

விட்டுக் கொடுத்தல் (Accommodation)

போராடும் கட்சிகள் ஓரளவு விட்டுக்கொடுத்துச் சந்து செய்து கொள்வதுண்டு. போராடும் கட்சியினர் போரின் மூலம் ஆகாறைவிடப் போகாறு அதிகம் என்று கண்டால் இத்தகைய பொருத்தப்பாடு ஏற்படக்கூடும்.[3]

வேற்றுமைகளை விட்டுக்கொடுத்துத் தீர்த்துக்கொள்வதில் பலவகைகள் உள்ளன. மூன்றாவது கட்சியின் நுழைவால் விட்டுக்கொடுத்தல் ஏற்படலாம்; அல்லது வலிய கட்சி மெலிய கட்சியை நலிவதால் இணக்கம் ஏற்படலாம். அல்லது இரண்டு கட்சிகளும் உடன்பாடு செய்து கொள்ளலாம். தாமாகவே இணங்கிப் போகும்போது கொடுத்தலும் எடுத்தலும் உண்டு. முடிவு பெறுத போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதால் சக்தியும், பொருளும் வீணாகச் செலவாகின்றன என்று இரு கட்சிகளும் உணர்ந்து கொள்கின்றன.

வலிந்து பெற்ற ஒப்பந்தத்தை விட, உடன்பாட்டையும் விட, தாமே ஏற்றுக்கொள்ளும் இருவழிப் பொருத்தப்பாடு நல்லது. வலிந்த ஒப்பந்தத்தில் மெலியார் வலியாருக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதிருக்கிறது. இது விருப்பமில்லாமலே ஏற்படக்கூடும். உள்ளான எதிர்ப்பு இன்னும் மிஞ்சலாம். இத்தகைய விட்டுக்கொடுப்பு தற்காலிகமானதே. உடன்பாட்டில் கூட இரு கட்சிக்காரரும் ஏதோ ஒன்றைப் பறிகொடுத்தது போல நினைக்கக்கூடும்.

விட்டுக்கொடுப்பதில் சிறந்த முறை பொறையுடைமையும், பிறரது சிந்தனையை முறையைத் தன்வயமாக்கலுமாம் (assimilation). இந்தியப் பண்பாட்டு வரலாற்றில் இதற்குப் பல காட்டுக்கள் காணலாம். ஆரியர்கள் தாம் புதிதாகக் குடிகொண்ட நாட்டுமக்களின் சின்னங்களையும், மந்திரப்பழக்கங்களையும், தெய்வங்களையும் தம் வயப்படுத்திக் கொண்டனர். வேத காலத்தில் வேதச் சார்பினர் தம் எதிரிகளைப் பிராமணத் துவேஷிகள், தேவர்த்தூற்றிகள் என்று வசைத்தனர். எதிரிகளும், பிராமணர்களைத் தவளைகள் என்று கூறி இழித்தனர். வேதப் பிராமணர் சமயச் சடங்குகட்கும், பலிகளுக்கும் சிறப்பிடம் அளித்தனர். சிந்தனை நெறியினர் அறிவு வழியைச் சிறப்பித்தனர். ஆரண்ய காலத்தில் ஓர் உடன்பாடு ஏற்பட்டு ஆசிரம முறை தோன்றியது. உபநிடத காலத்தில் செயல் நெறியானது அறிவு நெறியுள் அடங்கிவிட்டது.

1. R. H. Thouless, General and Social Psychology
2. E A. Ross, Principles of Sociology, p. 201
3. Ibid, p. 195.

6. சமூக இடைவினை (தொடர்ச்சி)

சமூகத் துலங்கல்கள் (Social Responses)

இவ் இயலில் சமூக இடைவினையின் சில முக்கியக் கூறுகளைப் பற்றிப் படிப்போம். அவை, கருத்தேற்றம் (suggestion), பின்பற்றல் (imitation), ஒத்துணர்வு (sympathy), ஒன்றுதல் (identification), புறத்தெறிதல் (projection), இடப்பெயர்ச்சி (dis-placement), வசதியளித்தல் (facilitation), உள்தடை (inhibition) என்பனவாம். கருத்தேற்றம், ஒன்றுதல், புறத்தெறிதல், இடப்பெயர்ச்சி ஆகியவை மருத்துவ உளவியல் தந்த கருத்துக்களாம்.

கருத்தேற்றமும், பின்பற்றலும், ஒத்துணர்வும் முறையே சிந்தனை, செயல், எழுச்சி ஆகிய கூறுகளுக்குரியவை. ஒரு தனியாளின் தீர்ப்புக்களும், நம்பிக்கைகளும் புகழ்வன்மை மிக்க பெரியோரிடமிருந்தும், பிறரிடமிருந்தும் ஏற்கப்படுகின்றன. இது கருத்தேற்றம் எனப்படும். பிறர் செய்வதைப் பார்த்து அப்படியே செய்வது பின்பற்றலாகும். பிறருடைய மெய்ப்பாடுகளைக் கண்டு அதே மனவெழுச்சியை நாமும் அனுபவிப்பது ஒத்துணர்வு எனப்படும். பிறரிடமிருந்து கருத்தை அல்லது நம்பிக்கையை ஏற்பது கருத்தேற்றம்; இயக்கச் செயலை ஏற்பது பின்பற்றல்; எழுச்சியை ஏற்பது ஒத்துணர்வு. ஆகையால் இவை அனைத்தையும் சமூகக் கடத்தம் (induction) என்னலாம்.[1] இவையெல்லாம் சமூக நடத்தைப் போக்குகள் ஆவன. பழைய உளவியலரும் நடத்தையைப் பற்றித் தாம் கண்ட தகவல்களை இவ்வாறு வகுத்து ஆய்ந்தனர். ஆனால் அவர்கள் நிகழ்முறையைப் பாகுபடுத்தி ஆயவில்லை. கருத்தேற்றம் மனித

இயல்பின் அடிப்படைப் பண்பாகும் என்று லிபான் கூறினர். டார்டே, பின்பற்றலை முக்கியமானதாகக் கருதினர்; சமூக நடத்தை அனைத்தையும் பின்பற்றலையும் அடிப்படையாகக் கொண்டு விளக்க முயன்றார். கருத்தேற்றமும் பின்பற்றலும் ஒத்துணர்வும் இயல்பான பொதுப் போக்குகள் என்று மக்டூகல் கருதினர்.

மேற்கூறிய தலைப்புக்களால் குறிக்கப்பட்டுள்ள நடத்தையைப் பாகுபடுத்தி ஆய்வதில் சமூக உளவியலர் ஈடுபட்டுள்ளார்கள். இதன் மூலம் இவ்வகை நடத்தைகள் எந்தெந்த நிலைகளில் ஏற்படுகின்றனவென்று ஆராய முயலுகின்றனர். தற்காலச் சமூக உளவியலர் கேட்கும் சில கேள்விகளாவன :—யார், யாரிடம் கருத்தேற்கின்றனர்? எப்பொழுது? யார் யாரைப் பின்பற்றுகிறார்? எப்பொழுது? ஏன்? முதலியன.

கருத்தேற்றமும், கருத்தேற்குமையும்.

இச் சொற்களுக்கு ஒரு நுண்பொருள் உளது. சிந்தித்து ஆராயாமல் பிறரிடமிருந்து ஏற்கும் ஒரு கூற்றினை 'கருத்தீடு' என்கிறோம். பிறர் கூற்றை ஆராயாமல் ஏற்றுக் கொள்ளும் பண்பு கருத்தேற்குமை (Suggestibility) எனப்படும். கருத்தேற்றம் நிகழும்போது கருத்தேற்போரின் சிந்தனைத் திறன் நிறுத்தி வைக்கப்படுகிறது. அல்லது தடைப்படுகிறது.

அறிதுயிலில் (hypontism) கருத்தேற்குமை உச்ச நிலையில் உள்ளது. அறிதுயிலை ஆராய்ந்தால் கருத்தேற்றத்தின் இயல்பும் காரணிகளும் தெரியவரும். அறிதுயில் தூக்கத்தைப் போன்றது. ஆனால் இது உண்மையான துயில் நிலையன்று. ஆட்படுநர், அறிதுயிற்றுநர் (hypnotist) இருப்பதையும் அவருடைய சொற்களையும் அறிகிறார்; அறிதுயிற்றுநர் (hypnotist) சொல்வதையெல்லாம் நம்புகிறார்; அவருடைய 'கருத்தீடுகளை ஏற்கிறார். அறிதுயிற்றுநர் ஆட்படுநரை ஓர் அமைதியான அறையில் வசதியாக அமர்த்துகிறார்; வேறெந்தத் தூண்டலும் அவருடைய கவனத்தையும் சிந்தனையையும் ஈர்க்காதபடி அமைக்கிறார்; அவரை, சுவரில் உள்ள ஒரு புள்ளியின்பால் அல்லது தமது கூற்றுக்கள்பால் மனதை ஒருமைப்படுத்தச் சொல்கிறார்; தாம் சொல்வதைத் தவிர மற்றெந்தக் கருத்தும்

ஆட்படுநர் மனத்துள் வராதபடி, அவருடைய கவன எல்லையை மையப்படுத்திக் கொண்டு வருகிறார். இந்நிலை எய்தியதும் அறிதுயிற்றுநரின் கருத்துக்களனைத்தையும் ஆட்படுநர் ஏற்கிறார். அவருடைய புகழ்வன்மை ஆட்படுநர்பால் பணிவு மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. இந்த மனவெழுச்சி நிலையால் அவருடைய சிந்தனையும் திறனுய்வாற்றலும் தடைப்படுகின்றன. 'நீ தூங்கப்போகிறாய்,' 'நீ தூங்கப்போகிறாய்' என்பது போன்ற ஒரு தொடரை அறிதுயிற்றுநர் திரும்பத் திரும்பச் சொல்கிறார்; தாம் சொல்வதின் உண்மையை ஆராய்வதற்கு ஆட்படுநருக்கு அவர் நேரம் கொடுப்பதில்லை. இவ்வாறு ஒரு தொடரைப் பன்முறை கூறல், பிறதூண்டல் நீக்கம், ஆட்படுநரது பணிவு, அறிதுயிற்றுநரது புகழ்வன்மை இவை அனைத்தும் சேர்வதால் ஆட்படுநரின் கவன எல்லை குறுகித் திறனுய்வாற்றல் நீங்குகிறது. ஆட்படுநருடைய சாதாரண ஆளுமை அப்போது இயங்குவதில்லை. அவருடைய அப்போதைய மன நிலை, மனவாழ்க்கையின் மற்றப் பகுதிகளினின்றும் பிரிந்து நிற்கிறது. ஆகையால் ஆட்படுநர், அறிதுயிற்றுநர் சொல்வதையெல்லாம் நம்பி அவருடைய கட்டளைப்படி நடந்து கொள்கிறார்; அவர் கற்பனை செய்விப்பதையெல்லாம் உண்மை நிகழ்ச்சிபோல் காண்கிறார். இத்தகைய கருத்தேற்றம் தற்கருத்தேற்றம் (auto-suggestion) ஆகிறது. தன்னறிவுக்குத் தசையியக்கக்கூறும் உளதாதலின் இக் கருத்தேற்றம் செயல் வழிப்படுகிறது.

கருத்தேற்குமையின் காரணிகளைக் கண்டுபிடிப்பதற்குப் பல புற ஆய்வுகள் இயற்றப்பட்டுள்ளன. மேற்கூறிய கருத்தேகுற்மைப் பாகுபாட்டிற்கு இம்முறையிலும் ஆதாரம் கிடைத்துள்ளது. குழந்தைகள் முதிர்ந்தோரைவிட அதிகமாகக் கருத்தேற்கின்றனர். இது இயல்புதான். குழந்தைகளின் அனுபவம் குறைவானது. அவர்களுடைய திறனுய்வு ஆற்றலும் வளர்ச்சி குன்றியது. ஆகையால், பெரியோர் சொல்வதை அவர்கள் அதிகமாக ஆராய்ந்து பார்ப்பதில்லை. குழந்தைகள் அறிவிலும் உடல் வளர்ச்சியிலும் குறைந்தவர்கள் என்பது அவர்களுக்கே தெரியும். பெரியவர்கள் அறிவிலும், ஆற்றலிலும் உயர்ந்தவர்கள் என்னும் எண்ணம் அவர்கள் மனத்தில் உண்டு. ஆகையால் பெரியோர்கள் சொல்வதைக் குழந்தைகள் பணிவோடு ஏற்றுக் கொள்கிறார்கள். குழந்தைகள் பெரியோர் கூறும் விடைகளை அளவையியல் (logic) முறையில்

ஆராய்வதைப் பெரியோர் ஊக்குவதுமில்லை. பையன்களை விடப் பெண்கள் அதிகம் கருத்தேற்கக்கூடும். ஏனென்றால் அவர்களை வளர்க்கும் முறை பையன்களை வளர்க்கும் முறையினின்றும் வேறுபட்டது. பையன்களுடைய ஆராய்ச்சிக்கு இடம் கொடுக்கிற அளவு பெண்களுக்குக் கொடுப்பதில்லை. அறிவாற்றலைப் பயன்படுத்தும் வாய்ப்பும் பெண்களுக்குக் குறைவாகவே கிடைக்கிறது. நம் நாட்டில் பெரும்பாகத்தில் பெண்களைப் பண்டைய முறையிலே வளர்க்கிறார்கள். பிறர் கருத்தை ஏற்கும் பழக்கம் அவர்களுக்கு இளமையிலேயே அமைகிறது. அப்பழக்கம் பள்ளியிலும், கல்லூரியிலும் அவர்களைத் தொடர்கிறது. ஆசிரியர் சொல்வதை அவர்கள் அப்படியே குறிப்பெடுத்துக்கொள்கின்றனர்; ஐயக் கேள்விகள் அதிகம் கேட்பதில்லை. திருமணமான பின்னும் பல பெண்கள் இப்பழக்கத்தை விடுவதில்லை; தங்கள் கணவர் சொல்வதை அப்படியே நம்புவதுண்டு.

கருத்தேற்குமையை உண்டாக்கும் கூறுகளில் புகழ்வன்மை (prestige) முக்கியமானதொன்று என்பது புற ஆய்வுகளின் மூலம் தெரிகிறது. ஒரு புற ஆய்வில் கல்லூரி மாணவர் பாராட்டிய ஓர் ஓவியம் கடைத்தரக் கலைஞர் இயற்றியதென்று (பொய்யாக) அவர்களுக்குக் கூறப்பட்டது. உடனே அவர்கள் தங்கள் தீர்ப்பைத் திருத்திக் கொண்டார்கள். இப்படியே அவர்கள் மட்டமானதென்று மதித்ததோர் ஓவியம் தலையாய கலைஞரால் இயற்றப்பட்டது என்று (பொய்யாகக்) கூறியதும் அதன் தரமீடு உயர்ந்தது. மற்றொரு புற ஆய்வில் ஒரே ஒலிப்பதிவு இரு குழுக்கள் முன் இசைக்கப்பட்டன. ஒரு குழு மாணவரிடம் அது ஒரு பெரிய இசைக்கருவூலம் என்று கூறப்பட்டது. மற்ற குழுவில் அது ஒரு கருவூலத்தின் தழுவல் என்று கூறப்பட்டது. முதற்குழு இசையைப் பாராட்டியது. இரண்டாவது குழு குற்றங் கண்டுபிடித்தது.

பெரும்பாலானவர் எண்ணத்திற்கும் 'புகழ்வன்மை' உளது. பெரும்பாலானவர் நினைக்கிறபடியே நினைப்பதற்கு மக்கள் விரும்புகிறார்கள். இதற்கேற்பத் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்கின்றனர். இவ்வாறு திரள் (mass) எண்ணத்தை ஏற்பதை மந்தைக் கருத்தேற்றம் (herd suggestion) என்பர். வல்லுநர்கள் அல்லது பெரும்பாலானவர்களின் கருத்தை எதிர்ப்பதற்குரிய அறிவும் பயிற்சியும்

நமக்கு இல்லாததால் வல்லுநர்ப் புகழ்வன்மையும், தொகைப் புகழ்வன்மையும் (prestige of number) ஏற்படு கின்றன; மேலும் வல்லுநர் ஒரு துறையில் பெற்ற புகழ் வன்மையை நாம் பொதுமைப்படுத்தி எத்துறையிலும் காண்கிறோம்.

நம் பெற்றோருக்கு நாம் அளிக்கும் கீழ்ப்படிதலையும் மதிப்பையும் நம்மைவிட வலிமையிலும் ஏற்றத்திலும் உயர்ந்த பிறருக்கும் அளிக்கிறோம். தொகைப்புகழ் வன் மையும் பிறரோடு ஒட்ட ஒழுக வேண்டிய தேவையால் ஏற்படுகிறது. நாம் சிறு குழந்தைகளாக இருக்கும்போது பெரிய காரியங்களைச் சமாளிக்கவும் எதிர்க்கவும் முடியாத நிலையில் இருந்தோம்; இந்தப் பணிவுநிலையால்தான் நாம் நம்மிற் பெரியவர் அல்லது அதிகமானவரின் எண்ணத் திற்குப் பணிகிறோம் என்று ஆல்போர்ட் கூறுகிறார். ஆனால் இக்கருத்து முற்றிலும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. புராதன மனிதன் இனக்குழு (horde) நிலையில் வாழ்ந்தான். இதன் மூலம் மனித இயல்பில் நிலையான மாற்றம் ஏற்பட் டுள்ளது. பெரியோர் கருத்தை ஏற்பது இனக்குழுவின் தந்தைபால் மக்கள் கொண்ட மனப்பான்மையைப் போன் றது என்று ஃபிராய்டு கூறுகிறார்.

மனவெழுச்சி கருத்தேற்குமையை மிகைப்படுத்துகிறது, சிந்தனையாற்றலைக் குறைக்கிறது என்று நமக்குத் தெரியும். மனவெழுச்சி வந்துற்ற போது நம் அறிவை இழக்கிறோம். காதல் குருடானது என்பது ஒரு முதுமொழி. காதலன் தன் காதலியிடத்து எந்தெந்தப் பண்புகளைக் காணவிரும்பு கிறானே அவற்றையே காண்கிறான். சந்தேகத்திலும் சினத்தி லும் சிக்குண்ட இயாகோ ஓதெல்லோவின் கருத்தீட்டை நம்புகிறான். அந்தோனி, "ஃபுரூட்ஸ் ஓர் உயர் நலப்பண் பாளன்" என்று எதிர்மறைக் கருத்தேற்றி வெஞ்சினக் கும்பலின் (mob) தீர்ப்பைத் திருப்புகிறான்.

கருத்தேற்றத்திற்கு வேறு சில காரணங்களும் உள. தம்மைப் பற்றித் திட்டமான நோக்கு அற்றவர்கள் - அதா வது நன்கமைந்த தன் மதிப்புப் பற்று இல்லாதவர்கள் - பிறரைவிட எளிதாகக் கருத்தேற்கின்றனர். மேலும் அற நம்பிக்கையில் ஆழ்ந்து வேரூன்றுதவர்கள், அறக்கடைப் பிடியுள்ளவர்களைவிட அதிகமாகக் கருத்தேற்பர். அறக் கடைப்பிடியுள்ளவர்கள் தம் அற உணர்விற்கெதிரான கருத்தை ஏற்கமாட்டார்கள்.

சமூக வாழ்க்கையில் கருத்தேற்குமையின் பங்கு.

வீட்டிலும் பள்ளியிலும் குழந்தையைப் பயிற்றுவிப்பதில் கருத்தேற்குமை பயன்படுகிறது. மேலும் விற்பனையிலும், மருத்துவத்திலும், பிரசாரத்திலும், கும்பல் நடத்தை, கலகக்கூட்டம், புத்துயிர்ச்சிக் கூட்டங்கள் முதலிய தரப்புறக் (abnormal) கூட்ட நடத்தையிலும் கருத்தேற்குமையைக் காணலாம். குழந்தை தன் பெற்றோரும் ஆசிரியரும் கூறும் கருத்தை ஏற்கிறது. இதன் மூலம் தக்கது தகாதது, நல்லது அல்லது, கடவுள், பிற குழுக்கள் இவற்றையெல்லாம் பற்றிக் குழந்தை கருத்து உருவாக்கிக் கொள்கிறது. நாம் வைத்துக் கொண்டுள்ள அறத்தொகுதியை வலியுறுத்துவது கருத்தேற்குமையே. வீட்டிலும் பள்ளியிலும் நாம் அளிக்கும் பயிற்சி, குழந்தையின் கருத்தேற்குமையால் அமைவதேயாகும். 'எல்லோரும் அப்படித்தான் செய்கிறார்கள், ஒருவரும் இப்படிச் செய்வதில்லை' என்றெல்லாம் கூறிப் பெற்றோர் தொகைப் புகழ்வன்மையைப் பயன்படுத்துகிறார்கள். பள்ளியிலும், கல்லூரியிலும் உள்ள மாணவர் தாங்கள் படிக்கவேண்டிய புத்தகத்தில் எழுதியிருப்பதை ஆராயாமல் ஏற்றுக் கொள்வதுண்டு. மதிப்பிற்குரிய ஆசிரியர் (அவர் ஒருவேளை தலைப்பாகை அணிந்தவராக இருக்கலாம்) கூறுவதை, 'சித்திரப்பாவையின் அத்தக அடங்கி செவி வாயாக நெஞ்சு களனாக' ஏற்றுக் கொள்வதுண்டு. வியாபாரத்தில், விளம்பரம் செய்வோர் புகழ்வன்மைக் கருத்தீட்டைத் திரும்பத் திரும்பச் சொல்வதுண்டு. எடுத்துக் காட்டாக, 'செல்வச் சீமாட்டிகள் எம் பொருட்களையே அணிகிறார்கள்', 'உங்கள் அபிமான நட்சத்திரம் விரும்பும் சோப்பு இதுதான்' என்னும் தொடர்களை நாம் அடிக்கடிக் கேட்பதுண்டு. திறமையுள்ள விற்பனையாளர் வாங்குவோரைப் பேச்சின் மூலம் பிணித்துவிடுகிறார். ஏலம் போடுகிறவர்கள் சிலர் முதலில் விலையுயர்ந்த பொருட்களைக் குறைந்த விலையில் விற்று நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்கின்றனர்; பின் மட்டமான சரக்கை விற்று நல்ல பணம் சம்பாதிக்கிறார்கள். கலைச் சுவையிலும் கூட நாம் நமது தீர்ப்பைப் புறத்தே வைத்துவிட்டு பெரும்பாலானவர் எண்ணத்தை அல்லது உயர்ந்தோர் குழு அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்கிறோம். தாஜ்மகாலின் அழகைச் சுவைப்பவர்களுக்குள்ளும் பலர், எல்லாரும் அவ்வாறு சொல்லுகிறார்கள் என்பதனாலேயே அதனில் பேரெழிலைக் காண்கின்றனர். தானாகச் சிந்திப்பதற்குக் கொஞ்சம் தைரியம்

வேண்டும். சமயத்திலும், நீண்ட காலப் புகழ்வன்மையி னுலேயே பல மக்கள் மறைகள் கூறுவதை ஏற்கின்றனர். மனமாற்றம் ஏற்படுவதற்காகக் கூட்டியுள்ள கூட்டங்களில் பிரசங்கம் செய்பவர் மனத்தைக் கவரக்கூடிய மேலங்கிகள் அணிந்து எழுச்சியூட்டக்கூடிய வகையில் பேசுகிறார். கடவுளின் அன்பையும் நரகத்தின் கொடுமையையும் எடுத் துரைக்கிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களைக் கூட்டத் தவர் பாடுகிறார்கள். திரட் கருத்தீடும் இங்கு இடம் பெறு கிறது. எழுப்புதற்கூட்டப் பிரசங்கியார், " பாருங்கள் ! அதோ வருகிறார்கள்! மனந்திரும்புகிற பாவியின் இடத்தை நோக்கி அவர்கள் வருகிறார்கள். நீயும் வா. கடவுள் உன் னையும் அழைக்கிறார் " என்று சொல்கிறார். அவர்கள் வந்து விடுகிறார்கள். அரசியல் பிரசாரகரும் கருத்தேற்றத்தைப் பயன்படுத்துகிறார்.

குழந்தைகள் எளிதிற் கருத்தேற்கின்றனர். ஆகையால் ஆசிரியர் சமய போதனையைப் பொருத்த வரையில் மிகவும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். இளம்பருவத் தில் ஏற்ற கருத்துக்கள் மிக வலிமையுள்ளவை. இவை நனவடி நிலையிலிருந்து கொண்டு, ஒருவரை வாழ்நாள் முழுவதும் பாதிக்கின்றன. ஆகையால் பெற்றோரும் ஆசிரி யரும் குழந்தையின் மனத்திற் புகுத்தும் கருத்துக்களும் நம்பிக்கைகளும் பிற்காலத்தில் ஏற்படக் கூடிய திறனாய்வுச் சோதனையைத் தாங்கக் கூடியவையாக இருக்கவேண்டும். இப்படிச் செய்ய முடியாவிட்டால், சமய போதனையே அளிக்காமல் இருப்பது நல்லது. இளமையில் ஏற்ற சமய நம்பிக்கைகளுக்கும், சிந்தனை கலந்த ஆய்விற்கும் இடையே போராட்டம் ஏற்பட்டால் மனவெழுச்சிக் குழப் பங்கள், கவலை, பீடிப்பு, குற்ற உணர்ச்சி அனைத்தும் ஏற்பட லாம்; அல்லது குமரப் பருவத்தினன் நாத்திகனாக மாறிவிட லாம்.

பிற குழுக்களைப் பற்றியும் பெரியோர் தெரிந்தும் தெரியாமலும் குழந்தைகளிடம் பலவகை மனப்பான்மை களை உண்டாக்கி விடுகிறார்கள். குழந்தைகள் பண்பாடற்ற 'வரம்பு மனிதராக' (marginalmen) வளருவதை விட ஒரு பண்பாட்டில் வேரூன்றி வளருவது நல்லது. ஆனால் பண் பாட்டில் வேரூன்றுவது வேறு ; பிற பண்பாடுகளைப் பற்றிய முற்சார்பு மனப்பான்மை பெறுவது வேறு. இத்தகைய முற்சார்பு ((prejudice) நல்லதன்று.

பின்பற்றல் (Imitation)

குழந்தைகள் பிற குழந்தைகளையும் பெரியோரையும் பின்பற்றுகிறார்கள். முதிர்ந்தோர் பிற முதிர்ந்தோரைப் பின்பற்றுகிறார்கள். பின்பற்றுதலாவது, பிறருடைய செய்கை, உடை, இயக்கம், பேச்சு முதலியவற்றைப் பார்த்து அப்படியே செய்வது.

முன்பு ஃபால்டுவின் (Baldwin), ஃபேகாட் (Bagehot, 1873), டார்டே (1902), ராஸ் (1908) ஆகியோர் பின்பற்றலை விளக்கக் கருத்தாகப் (explanatory concept) பயன்படுத்தினர். "பின்பற்றலே சமூகமாகும்" என்று ஃபேகாட் கூறினர். சமூகம் இன்று இருக்கும் நிலையும், இனி ஆகும் நிலையும் மனிதனுடைய பின்பற்றற் போக்கினாலேயே ஆவன; உடையிலும், இலக்கியத்திலும் அரசியல் நடத்தையிலும் நாம் காணும் காலக்கோலங்களெல்லாம் பின்பற்றலினாலேயே பரவுகின்றன; அறச் சமயப் பழக்கங்களை மக்கள் வைத்துக்கொள்வதெல்லாம் பின்பற்றலினால் தான். வழக்கமாக அமையும் நடத்தையும் பின்பற்றல் மூலம்தான் அமைகிறது என்று ஃபேகாட் கூறினர். டார்டே ஒரு சிறந்த சட்ட அறிஞர். மனிதன் குற்றவாளியாகவும் நல்லவனாகவும் ஆவது வளர்ப்புமுறையினாலேயே என்று அவர் தம் தொழில்துறை அனுபவத்தில் கண்டார். **பின்பற்றல் விதிகள்** (1903) என்ற தம் நூலில் அவர் தம் கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார். மக்கள் வாழ்க்கை நிலைகளுக்கேற்பத் தம்மைப் பொருத்திக் கொள்ளும்போது புதியவற்றைப் புனைகின்றனர். இவற்றைப் பிறர் பின்பற்றுகிறார்கள். இம்முறையில் சமூக நடத்தை அனைத்தையும் விளக்கலாம். அண்டம் அனைத்திலும் உள்ள பின்பற்றல் தத்துவத்தின் ஒரு படிவமே மனிதப் பின்பற்றலாகும். பின்பற்றல் என்பது பன்முறை இயக்கமேயாம். ஒலி அலைகளின் தன்மையும், மனித இனம் மரபில் பெற்ற பல அமைப்புகளும், பின்பற்றல் தத்துவத்தின் வெளிப்பாடுகள். பெரியோருடைய சொற்களையும் செயலையும் குழந்தை பார்த்துச் சொல்வதையும் செய்வதையும் காண்கிறோம். சிறப்பாக வாழும் வழி சிலரால் கண்டுபிடிக்கப்படுகிறது; அவர்கள் காலத்தில் பலரால் பின்பற்றப்படுகிறது; பின் வரும் தலைமுறையினரால் பின்பற்றப்படுகிறது. வாழ்க்கை நிலைமைகள் மாறும்போது புதிதான வாழும் முறைகள் கண்டு பிடிக்கப்படுகின்றன; இவையும் பின்பற்றலாலேயே பரவுகின்றன.

இவற்றையெல்லாம் விளகிக் கூறியபின் டார்டே பின்பற்றல் நடத்தையைப் பற்றிய பொதுமை விதிகள் வகுத்தார். இவற்றை ஈ. ஏ. ராஸும் மக்டூகலும் பின்னர் விரித்துரைத்தனர்.

முன்னைய அறிஞர் பின்பற்றல் என்னும் கருத்தைப் பயன்படுத்திய வகையில் பல குறைகள் உள்ளன. முதலாவதாக, அதற்கு அவர்கள் திட்டமான பொருள் அளிக்கவில்லை. நனவற்ற, தெரியாமற்செய்யும், முதனிலைப் பின்பற்றலுக்கும், நனவுள்ள, தெரிந்து செய்யும், பொதுமைப்படுத்திய பின்பற்றலுக்கும் உள்ள வேற்றுமையை அவர்கள் குறிப்பிடவில்லை. எடுத்துக் காட்டாக, ஒருசார், தாய் சிரிப்பதைப் பார்த்துக் குழவி சிரிப்பதையும் பிறர் கொட்டாவி விடுவதைப் பார்த்து அது கொட்டாவி விடுவதையும், மற்றொருசார், தந்தை காலணிகள் அணிவதைப் பார்த்துக் குழந்தை அப்படிச் செய்ய முயல்வதையும், தந்தையைப் போல் நடக்கவும் படிக்கவும் முற்படுவதையும் முதிர்ந்தோர் பிறருடைய உடை, அணிகலன், பேச்சு முதலிய வற்றைப் பின்பற்றுவதையும் அவர்கள் ஒன்றுகவே வகைப்படுத்தினர்.

இரண்டாவதாக, முன்னைய அறிஞருட் சிலர் பின்பற்றல் நிகழ்ச்சியைப் பாகுபடுத்தி ஆய்வதற்குப் பதிலாக, பின்பற்றலென்று ஓர் இயல்பூக்கம் கொண்டனர். தெரியாமல் செய்யும் பின்பற்றலையும் தெரிந்து பின்பற்றுவதையும் அவர்கள் வேறுபடுத்தவில்லை. இப்பொழுது இவ் விருவகைகளையும் பிரித்தறிகின்றோம். முன்னைய வகைப் பின்பற்றலுக்குக் காரணம் காண முயல்கின்றோம். தெரிந்து செய்யும் பின்பற்றலைப் பொருத்த வரையில் 'யார் யாரைப் பின்பற்றுகிறார் ? ஏன் ?' என்றெல்லாம் ஆராய்கிறோம்.

தெரியாமற் பின்பற்றல் :

தாய் சிரித்தால் குழந்தையும் சிரிக்கிறது; அவள் அழுவதைக் கண்டால் குழந்தை முகத்திலும் அழுகை தோன்றுகிறது. கால்பந்து ஆட்டம் பார்த்துக் கொண்டிருக்கும் சுவைஞர் விளையாட்டைப் பார்த்துக்கொண்டே தாமும் அறியாமல் எதையாவது உதைத்து விடுகிறார். இசைக்கச்சேரி பார்த்துக் கொண்டிருக்கும் சுவைஞர் பாகவதர் தலையையும் கையையும் ஆட்டுவது போலவே தாமும் செய்கிறார். இது

தெரியாத நனவற்ற முதனிலைப் பின்பற்றலாகும். அதனை ஒத்தியக்கம் (empathy) அல்லது புராதன ஒத்துணர்வு (primitive sympathy) என்பர். தெரியாமற் பின்பற்றலை மக்டூகல் பின்வருமாறு விளக்குகிறார் :—ஒரே இனத்தைச் சேர்ந்த தனி உயிர்களுக்கு ஒத்த உயிரியல் அமைப்பு உண்டு; ஆகையால் ஒரு வகை நடத்தையை அவ்வினத்தவர் ஒருவரிடம் கண்டால் காண்பவரிடமும் அந்நடத்தை பிறக்கிறது. ஆனால் இப்பொதுமை எல்லா இடத்தும் பொருந்தாது. ஒரு குழவியைத் தாய் சீராட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் பிற பெண்களுக்கெல்லாம் அதே உணர்ச்சிதான் உண்டாகவேண்டும் என்பதில்லை. இதைப் பார்க்கும் பெண்ணும் அக்குழவிபால் அன்பு கொண்டவளானால் ஓரளவு அந்த உணர்ச்சி உண்டாகலாம். வெகுண்டோன் ஒருவனைக் காண்கிறோம். அவன் வெகுளும் அதே பொருளைப் பற்றி நமக்கும் சினம் இருந்தாலொழிய நாம் வெகுள்வதில்லை. ஆகையால் மக்டூகலின் விளக்கம் போதுவதாகாது; மிகவும் பொதுமையானது.

தெரியாமற் பின்பற்றுதலை இன்றைய உளவியலர் பின்வருமாறு விளக்குவர். உற்று நோக்குபவர் மிக்க கவர்ச்சியுடன் கவனித்தால் ஒன்றுதல் (identification) ஏற்படுகிறது. கவனிக்கப்பட்டவர் பங்கைக் கவனிப்பவரும் ஏற்கிறார். இவர் மற்றவர் ஆகிறார். நனவிற்குத் தசைக் கூறும் உளதாதலின், உற்றுக்காண்பவர் மற்றவரின் நடத்தையையும் பின்பற்றுகிறார். நனவுக்குத் தசைக் கூறு உண்டென்பதைக் கீழ்க்கண்ட எடுத்துக் காட்டுகளினால் விளக்கலாம். ஒருவர் பேசுவதைக் கேட்டால் நம்மிடத்தும் உள்ளார்ந்த குரலியக்கங்கள் ஏற்படுகின்றன. பேசுவோர் தமது வாக்கியத்தின் கடைசிச் சொல்லைச் சொல்லாமல் நிறுத்தினால் கேட்பவர் அதைச் சொல்லி முடிக்கிறார். கணவன் மேடை மேல் நின்று நடுங்கிக் கொண்டிருந்தால் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மனைவியும் மெய்விதிர்க்கிறாள்.

தெரிந்து பின்பற்றல் :

தெரிந்து பின்பற்றுவதை விளக்குதற்கும் ஒரு பின்பற்றல் இயல்பூக்கம் கொள்ளவேண்டுவதில்லை. ஏனென்றால் அது திட்டவட்டமான தன்மையன்று. பின்பற்றல் இயல்பூக்கமானால், எல்லோரும், எல்லோரையும், எப்பொழுதும், எக்காரியங்களிலும் பின்பற்றுவார்கள். ஆகையால்; பின்

பற்றல் மனித இயல்பின் முழுமுதல் தத்துவமன்று. பின்பற்றல் நடத்தை சில குறிப்பிட்ட நிலைகளில்தான் ஏற்படுகிறது. நாகரிக மனிதன் புராதன மனிதனைப் பின்பற்றுவதில்லை. மேற்பாலவர் கீழ்ப் பாலவரைப் பின்பற்றுவதில்லை. தம் மரபுச் செல்வத்தைப் பற்றிப் பெருமைப்படுகிறவர்கள் இத் தகைய மரபு அற்றவர்களைப் பின்பற்றுவது கிடையாது. பின்பற்றுவதால் தேவைகள் நிறைவேறுவதானால்தான் மக்கள் பிறரைப் பின்பற்றுவார்கள். குழந்தைகள், பெரியோரைப் போலவே வலிமை, பேறுகள், சலுகைகள் பெற விரும்புகிறார்கள். இதனால் தான் அவர்கள் பெரியோரைப் பின்பற்றுகிறார்கள். பெரியோர்களும் பிறருடைய காலக் கோல (fashion) முறையைப் பின்பற்றுகிறார்கள். இதன் மூலம் பிறருடைய பாராட்டைப் பெறுவதுடன், வாழ்க்கைச் சலிப்பும் மாறுகிறது. இரண்டாவதாக, தடைக் கூறுகள் (inhibiting factors) இல்லாதபோது பின்பற்றல் நடை பெறுகிறது. தன்னையோ தன் குலத்தையோ பெரிதாகக் கருதுபவன் பின்பற்றல் துடிப்பைக் கட்டுப்படுத்துகிறான். ஆனால் இக்காலத்தில் ஒருவர் மேற்கூறியவாறல்லாது பிற குலங்களில், பிற இனங்களில் காணும் நடத்தையையும் பின் பற்றுகிறார்கள். அது ஏனென்றால் இப்பொழுது நம் தேவைகள், கவர்ச்சிகள், கோள்கள் எல்லாம் மாறிவிட்டன. வகுப்பு மனப்பான்மையும், மரபுகளும் மக்களை முன்போல் பிணிப்பதில்லை. நாம் ஒரு மென்மையச் (fluid) சமூகத்தின் உறுப்பினராகிறோம்.

பின்பற்றல் விதிகள் : (The Laws of Imitation)

பின்பற்றலைப் பற்றிய நான்கு பொதுமை விதிகளை டார்டே வகுத்தார். அவற்றை மக்டூகல் விரித்துரைத்தார்.

அவையாவன :

(1) பின்பற்றல் மேலதினின்று கீழதற்குச் செல்கிறது.

(2) பின்பற்றல் உள்ளானதினின்று வெளியானதிற்குச் செல்கிறது.

(3) சிந்தனை முறைகளைவிட செய்யும் முறைகள் நெடுங் காலம் நீடிக்கின்றன.

(4) பின்பற்றல் படிப்பெருக்கமுறையில் (geometric progression) பெருகுகிறது.

இனி இவ்விதிகளை விவரிப்போம்.

முதலாவதாக, யார் யாரைப் பின்பற்றுகிறார்கள் என்பது ஆராய்ச்சி. புகழை விரும்புவோர், ஏற்கனவே புகழ்வன்மையுடையவர்களைப் பின்பற்றுகிறார்கள். அரசரும் அரசியரும் பிரபுக்களுக்கு மாதிரியாக அமைகிறார்கள்; பொதுமக்கள் பிரபுக்களை மாதிரியாகக் கொள்கிறார்கள். நாட்டு மக்கள் நகர மக்களின் நடையுடை பாவனை, பேச்சு, மனையமைப்பு, ஒப்பனை முதலியவற்றைப் பின்பற்றுகிறார்கள். கீழ்வகுப்பினர் மேல் வகுப்பினரின் நிறுவன நடத்தையைப் (institutional behaviour) பின்பற்றுகிறார்கள். 1891-ம் ஆண்டுவரை இந்துக்களில் கீழ்சாதி எனப்படுபவர் பிராமணர்களுடைய பழக்கங்களாகிய குழந்தைத் திருமணத்தையும், கைம்பெண் திருமணத்தடையையும் கையாண்டனர். இதன் மூலம் குலச்சீர்த்தியையும் பொதுமக்களுடைய நன்மதிப்பையும் பெற முயன்றனர். ஆங்கிலேயர் நம்மை ஆண்டு வந்த காலத்தில் அவர்களை உயர்ந்தவர்களாகக் கருதி அவர்களுடைய வாழ்க்கை வழிகளையும் எண்ணங்களையும் பின்பற்றி வந்தோம். அவர்களுடைய ஆடை, உண்ணும் முறை, இலக்கிய வடிவங்கள் ஆகியவற்றையெல்லாம் பின்பற்றினோம். புகழ்வன்மை பெறுவதற்காகவே இப்படிச் செய்தோம். இவற்றுல் ஏற்படும் வசதி, பயன் முதலியவையெல்லாம் பின்னர்க் கண்டவை; ஓரளவு ஏதிடுகளும் (rationalizations) ஆம்.

இவ்வகைப் பின்பற்றலைப் பொருத்தவரை மக்டூகல் மற்றொரு உண்மையையும் எடுத்துக் கூறுகிறார். ஒரு நாட்டின் தலைநகரங்களும், அரசவைகளும், செல்வந்தரும் இச் செயலில் முக்கிய இடம் வகிக்கின்றனர். கலை, சமயம், அறிவியல், வாழ்க்கைவழி முதலியவற்றிலெல்லாம் இக்குழுவினர் புதிய கருத்துக்களை முதலில் ஏற்றுக் கொண்டு அவற்றைப் பரப்பத் துணைபுரிகின்றனர். வெவ்வேறு குழுவினருக்கிடையே இசைவை (harmony) முன்னேற்றவும் குலைக்கவும் உதவுபவை பெரிய நகரங்களே. ஒற்றுமையும் பகைமையும் இங்குதான் முதலில் தொடங்குகின்றன; பின் அவை நாட்டின் பிறபகுதிகளுக்குப் பரவுகின்றன.

இரண்டாவது பின்பற்றல் விதியின்படி, மக்கள் முதலில் ஏற்பது பிறருடைய எண்ணங்கள், நம்பிக்கைகள், குறிக்

கோள்கள், தத்துவங்கள் முதலியவற்றையே; பின்னர் அவர்கள் தங்கள் நடத்தையை மாற்றியமைத்துக் கொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக, மேல்நாட்டவருடன் நாம் கொண்ட தொடர்பின் விளைவாக திருமண வயது முதலில் கொள்கையளவில் உயர்த்தப்பட்டது; பின் நடைமுறையில் உயர்ந்தது. குடியாட்சி முறை அரசாங்கத்தை முதலில் குறிக்கோளாக ஏற்றுக் கொண்டோம். பின்னர் நமது நாட்டின் அரசியலமைப்பே திருத்தியமைக்கப் பெற்றது.

மூன்றுவது பின்பற்றல் விதியாவது, சிந்தனை முறைகளை விட செய்யும் முறைகள் விடாப்பிடியாக நிலை நிற்கின்றன என்பதாம். எண்ணங்களைவிட பழக்கங்கள் உறுதியாக நிற்கின்றன. இதனால்தான் நாம் எண்ணங்களில் பரந்த மனப்பான்மை யுடையவராயிருந்தாலும் குறுகிய பரம்பரைப் பழக்கங்களை விடுவதில்லை. எடுத்துக்காட்டாக, பண்டைய எகிப்தியர் இறந்தவர்களின் கல்லறைகளில் கல்லாலான ஆயுதங்களை வைப்பதுண்டு. இப்பழக்கம் இன்று வரை நிலவுகிறது. இறந்த ஆன்மாக்கள் அடுத்த உலகத்திற்குப் போவதற்குத் துணையாக செருப்பும், குடையும் பாத்திரங்களும் தேவைப்படுகின்றன என்று படித்த இந்துக்கள் இன்று நம்புவதில்லை. எனினும் இப்பொருட்களைப் புரோகிதருக்குக் கொடுக்கும் வழக்கம் இன்றும் உளது. இந்து மாப்பிள்ளை இன்றும் சமஸ்கிருத மந்திரத்தை ஓதுகிறார்; அதன் பொருள் அவருக்குத் தெரியாமலே இருக்கலாம். ஒரே கடவுளைத்தான் நாங்கள் வணங்குகிறோம் என்று சொல்பவர்கள் பலர் நடைமுறையில் பல கடவுள் வணக்கம் செய்கின்றனர். இந்தியாவில் தத்துவக் கொள்கைகள் மாறிக் கொண்டே வருகின்றன; ஆனால் பழைய தெய்வங்களும் பூசனை முறைகளும் மாறாமல் நிலைத்து நிற்கின்றன; கிறித்துவ மதத்தையும் முகம்மதிய மதத்தையும் தழுவிய பல இந்துக்கள் இந்துத் திருமணச் சடங்குகள் பலவற்றைப் பின்பற்றுகிறார்கள். மெக்காவுக்குப் பயணம் செய்யும் முஸ்லீம் யாத்திரையாளர்கள் நிறைவேற்றும் சமயச் சடங்குகள் பல முகமது நபிக்கு முற்பட்ட காலத்திற்குரியவை. இதற்குக் காரணம் என்ன? மிகச் சிறிய வயதிலேயே வழக்கங்களையும், வைத்துக் கோடல்களையும், ஒத்துப்போகும் பழக்கத்தையும் நாம் பெற்றுவிடுகிறோம். இப்பழக்கங்கள் நம்மில் நன்றாக ஊறிவிடுகின்றன. இவற்றை விட்டுவிடுவது மிகவும் அரிதாகிறது.[4] இன்னும் பண்டைப் பழக்கங்களில் சமூகப்பொருண்மை மறைந்து விட்டபோதிலும் அப்பழக்கங்

களின் புறவடிவம் நிலைநிற்கிறது. இதற்குக் காரணம், அவை பொதுத் தேவைகளை நிறைவேற்றுவிடினும் தனித் தேவைகளை (individual needs) நிறைவேற்றுவதேயாம். முற்காலத்தில் ஊரில் பெரியவர்களைத் திருமணங்களுக்கு அழைத்ததற்கு ஒரு காரணம் அவர்கள் அச்சடங்கிற்குச் சாட்சிகளாக வேண்டும் என்பதாம். இன்று அழைப்போரின் செல்வத்தைக் காண்பதற்காகப் பெரியவர்கள் அழைக்கப்படுகிறார்கள். கலியாண மாப்பிள்ளை வீட்டார் உள்ளூராராக இருந்தாலும் அவர்களை ஊரின் வாசலில் வரவேற்கும் பழக்கம் இன்றும் உண்டு. உபநயனச் சடங்கைப் பலர் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இப்பழக்கங்களையெல்லாம் மேற்கூறியவாறு விளக்கலாம்.

வழக்கங்களை மேற்கொள்ளுவதால் நாம் போற்றும் பழமையோடு தொடர்பு கொள்ளுகிறோம். அவற்றைப் புறக்கணிப்பதைச் சமூகம் ஒப்புவதில்லை. கட்டின்றிச் சிந்திப்பவர்கூட இந்நிலைக்கு அஞ்சவேண்டியதிருக்கிறது.

நான்காவது பின்பற்றல் விதி படிப்பெருக்க முறையில் புதிய கருத்துக்களும் வாழ்க்கை முறைகளும் பரவுகிறதைப் பற்றிக் கூறுகிறது. ஒருவர் செய்வதைப் பார்த்துச் சிலர் அப்படியே செய்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்து வேறு சிலர் அப்படிச் செய்கின்றனர். இப்படியே பின்பற்றல் சிறக்கிறது. ஒரு பகுதியில் மக்கள்தொகை மிக நெருக்கமாக இருந்தால் பின்பற்றல் மிக விரைவாகப் பரவுகிறது. எடுத்துக்காட்டாக: ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வருமுன் இந்தியாவின் வெவ்வேறு பாகங்களுக்கிடையேயுள்ள தொடர்பு குறைவாகவே இருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் தனித்ததொரு வாழ்க்கைமுறை இருந்தது. பின் ரயில் மார்க்கத்தின் மூலம் நாடு முழுவதும் நேரடித் தொடர்பு ஏற்பட்டது. மிகக்குறைந்த காலத்தில் புதிய எண்ணங்களும் காலக்கோலங்களும் பெரும்பகுதிகளுக்குப் பரவின. இதன் மூலம் இந்தியப் பண்பாடு ஒரு தன்மைத்தாயிற்று.

சமூக வாழ்க்கையில் பின்பற்றலின் பங்கு :

தெரியாமல் பின்பற்றுவதற்கும் தெரிந்து பின்பற்றுவதற்கும் இடையேயுள்ள வேற்றுமையைப் பற்றி முன்னரே குறிப்பிட்டோம். பிறரை மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவதற்குத் தெரியாமற் பின்பற்றலே அடிப்படையாகும்.

வைத்துக் கோடற் சைகைகள், சொற்களஞ்சியம், பேச்சின் கூறுகள், இன்னும் பல பயனுள்ள செயல்கள் இவற்றை யெல்லாம் குழந்தை தெரியாமல் பின்பற்றிக் கற்கிறது. சமூகத்தன்மை பெறல் என்னும் இயலில் இதனைப்பற்றி விவரமாய்க் காண்போம். இறைவணக்கத்தின்போது வைத்துக் கொண்டுள்ள நிறுக்கை நிலைகளையும் (Postures) வணக்கச் செயல்களையும் குழந்தைகள் பின்பற்றுகிறார்கள்; பின் இவற்றை வாழ்நாள் முழுவதும் செய்கிறார்கள். நிறுக்கைகள் அவற்றிற்கேற்ற மனவெழுச்சி நிலையையும் அனுபவிக்கத் தூண்டுகின்றன. ஆதலால் குழந்தைகள் சமய உணர்ச்சியுடையவர்களாக வளரவேண்டும் என்று விரும்பும் பெற்றோர், குழந்தைகள் தாமாகவே பின்பற்றக்கூடிய செயல்கள் மூலம் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறார்கள்.[5] பெரியோரும் தாம் தொடர்பு கொண்டுள்ள பிற நாட்டவரின் செயல்களை அறியாமல் பின்பற்றுகிறார்கள். மாணவர் தாம் மதிக்கும் ஆசிரியரையும் தலைவரையும் நடிகரையும் தெரியாமலே பின்பற்றுகிறார்கள்.

தெரிந்து பின்பற்றுதல் திட்டமான தேவைகளை அடிப்படையாகக் கொண்டது. பாராட்டு (Approval), ஏற்றம், அறிமுகம் பெறல் (Recognition) முதலியவை பொதுவான உளவியல் தேவைகள் ஆவன. இத்தகைய தேவைகளை நிறைவேற்றக்கூடிய செயல்களைத் தனியாள் பிறரிடமிருந்து பின்பற்றுகிறார். இப்படிப் பின்பற்றி அவர் முன்னேறுகிறார். நாளடைவில் இப்படிப் பின்பற்றிய நடத்தை பழக்கப்படுகிறது. இவ்வாறு பின்பற்றல் ஓர் நிலைப்படுத்தும், பாதுகாக்கும் காரணியாகிறது. சமூகத்தின் உறுப்பினர் அனைவரும் ஒரே வகையாக நடப்பதற்கும் இது பயன்படுகிறது. இதன் விளைவாக ஒத்துழைப்பு பிறக்கிறது. நிலைமைகள் மாறும்போது புதிய வாழ்க்கை முறைகளும் எண்ணங்களும் தோன்றுகின்றன; இவையும் பின்பற்றல் வாயிலாகப் பரவி அனைவருக்கும் பொதுவாகின்றன.

ஒத்துணர்வு (Sympathy).

பிறர் ஏதேனுமொரு மனவெழுச்சியை வெளிப்படுத்தின விடத்து அதைப் பார்க்கிறவரிடத்தும் அதே மனவெழுச்சி தோன்றுவது ஒத்துணர்வு எனப்படும். சிறிய வயதில் காணப்படும் ஒத்துணர்வு இவ்வகையினதே. வாழ்நாள் முழுவதும் பிறருடைய மெய்ப்பாடுகளை உள்ளே ஏற்று

அப்படியே துலங்கும் பண்பு நமக்கு உண்டு. ஒரு குழந்தை அழுதால் அதைப்பார்க்கும் மற்றொரு குழந்தையும் அழுகிறது; ஒருவர் கையறுநிலையைக் கண்டால் நமக்கும் அவலம் பிறக்கிறது; கிலிப்பிடித்தவரின் முகத்தைப் பார்த்தால் நம் மனத்திலும் அச்சம் தோன்றுகிறது. சிரிப்பும் தொத்தும் தன்மையது.

மக்டூகல் இதனைப் பின்வருமாறு விளக்குகிறார். உள்ளத் தெழுச்சி இருவகைகளில் கிளரப்பெறுகிறது. அதாவது அவ்வெழுச்சிக்குரிய பொருளைக் காண்பதாலும், அவ்வெழுச்சி மெய்ப்பாடுகளைப் பிறரிடத்துக் காண்பதாலும் தூண்டப்பெறுகிறது. இவற்றுள் பின்னர்க் கூறியது ஒத்துணர்வால் தூண்டப்பெற்ற எழுச்சியாகும். ஒரே இனத்தைச் சேர்ந்த உயிரிகளின் உடலமைப்பு ஒன்றுபோல் அமைந்துள்ளதால் எழுச்சி இவ்வாறு தூண்டப்பெறுகிறது. இம்முறையில் இதனை ஓர் உள்ளார்ந்த பொறியமைப்பு என்றே மக்டூகல் கருதினார். இதற்குக் கூடிவாழ் விலங்குகளின் வாழ்க்கையிலிருந்து அவர் பல ஆதாரங்கள் கொடுத்தார். எடுத்துக் காட்டாக, விலங்குகளின் வெருவுக்குரலும் (Fear cries), நாய்களின் ஆக்கிரமக் குரைப்பும் தொத்திப் பரவுவன. ஆனால் இதற்கு மாறான சில உண்மைகளும் உள்ளன. வெகுண்ட மனிதரைப் பார்க்கும்போதெல்லாம் நாம் வெகுள்வதில்லை. ஆசிரியரின் உற்சாகம் எப்பொழுதும் மாணவரைப் பற்றுவதில்லை. வெறிக்கும்பலில் உள்ள எல்லோரும் தம் அறிவை இழப்பதில்லை. இதைப்பற்றிய சில புற ஆய்வுக் கண்டுபிடிப்புகளும் உள்ளன. லாண்டிஸ் (Landis) தமது மாணவருக்குப் பல மனவெழுச்சி மெய்ப்பாடுகளைப் படத்தில் காட்டி அவ்வவ் எழுச்சிகளைக் குறிப்பிடச் சொன்னார். அவர்களால் அவ் எழுச்சிகளைப் பிரித்தறிய முடியவில்லை. சிலர் வியப்பின் வெளிப்பாட்டை அச்சமென்று கொண்டனர். ஆனால் அப்படத்திற்குரிய நிலைமையையோ, பின்னணியையோ விளக்கிய பின் ஆட்படுநர் எழுச்சியைச் சரியாகக் குறிப்பிட்டனர். ஆதலால் ஒத்துணர்வு அதற்குரிய பழைய நினைவுகளை நம் மனத்தில் மீண்டும் வரவழைப்பதாலேயே ஏற்படுகிறது என்று பல அறிஞர் கருதுகின்றனர். "உன் துன்பத்தை நான் உணர முடியும்; ஏனென்றால் நானும் இத்தகைய துன்பத்தை அனுபவித்தேன்" என்று அவர்கள் ஒத்துணர்வு வாய்ப்பாடு கூறுவர். குழந்தைகள் பிறருடைய வீங்கிய அல்லது உடைந்த கையைக் கண்டு நடுங்குவதில்லை. இதுவும்

மேற்கூறிய கருத்துக்கு ஆதாரமாகும். நாம் முன்னர் அனுபவித்த சில எழுச்சிகளை, குறிப்பிட்ட கூக்குரல், சொற்கள் சைகைகள், முகவெளிப்பாடுகள் முதலியவற்றோடு இயைத்துள்ளோம். இவ்வாறு இயைத்துள்ள தூண்டல்கள் தோன்றினால் இவற்றிற்குரிய பழைய உணர்ச்சிகள் எழுகின்றன. அதாவது பிறருடைய எழுச்சி வெளிப்பாட்டைக் கண்டு மற்றொருவரிடத்தும் அவ்வெழுச்சி தோன்றப்பெறுமுன் அவரே அதனை அனுபவித்திருக்க வேண்டும். இரண்டாவதாக, தூண்டுபவர் இருக்கும் நிலைமையின் தன்மையை அவர் அறியவேண்டும்.[7] தூண்டுபவர் அந்நிலையைப் பற்றி எத்தகைய கவர்ச்சி கொண்டுள்ளாரோ, அதனையே தூண்டப்படுபவரும் பெற வேண்டும். அப்பொழுதுதான் பிறருடைய சினம், அச்சம், உற்சாகம் முதலியனவற்றை ஒருவர் ஒத்துணர்வு மூலம் பகிரமுடியும்.

ஒத்துணர்வின் சமூகச் சிறப்பு :

ஒத்துணர்வினால் மட்டும் பிறர் (நலங்)கருதும் நடத்தை ஏற்பட்டுவிடும் என்று சொல்ல முடியாது, ஒருவர் ஒத்துணர்வின் மூலம் பிறர் துன்பத்தைப் பெறலாம் ; ஆனால் அதைத் தீர்க்க ஒன்றும் செய்யாமலே இருந்துவிடலாம். ஆனால் ஒத்துணர்வு செயற்படுமானால் அது சமூக வாழ்க்கையில் ஓர் உயிர்ச்சக்தியாகும். அது நம்மைச் சுற்றிவாழும் பிறமக்களுடன் நம்மை இணைக்கிறது. ஒத்துணர்வால் தூண்டப்பெற்ற எழுச்சிகளின் மூலம் நாம் பிறருடைய உணர்ச்சிகளையும் ஊக்கிகளையும் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது, மற்றொருவருடன் உணர்தல் **அவர் ஆதல்** ஆகும். இதனால் அவர் இருக்கும் நிலை அவருக்கு என்ன பொருட்படுகிறதென்று நாம் அறியலாம். இவ்வாறு புரிந்துகொள்வதால் பொறையுடைமையும், விட்டுக்கொடுக்கும், மனப்பான்மையும் உண்டாகின்றன. அறிவொடு கூடிய ஒத்துழைப்பும் ஒத்துணர்வினால் ஏற்படுகிறது. இப்போக்கினைச் சரிவர வளர்க்கக் கல்வி முயலவேண்டும். வெவ்வேறு குழுக்களிடையேயுள்ள சமூகத் தொலைவைக் குறைக்க முயல்பவர்களும் ஒத்துணர்வைச் சரிவரப் பயன்படுத்தவேண்டும்.

நகை (Laughter)

நகை திட்டவட்டமானதொரு சமூகத் துலங்கல் ஆகும். அதற்குச் சமூகப் பொருண்மை உண்டு. வெவ்வேறு நகை

வகைகளையும், அவற்றை உண்டாக்கும் நிலைமைகளையும் பற்றிப் பார்க்கலாம். மிக நெருக்கடியாகத் தோன்றுகின்ற நிலை திடீரென்று சாதாரணமாகிவிட்டால் நகை தோன்றலாம். எடுத்துக்காட்டாக ஒரு குழந்தையிடம் பொய்ச் சினத்தோடு பேசிக் கொண்டு இருந்து விட்டு மெல்ல நகைத்தால் குழந்தை வெடித்துச் சிரிக்கிறது. காண்ட் (Kant) இத்த கைய நிலைகளைப் பொதுமைப்படுத்தி, 'தொலைந்த எதிர் பார்ப்புகளே' (Defeated expectations) நகையின் காரண மாவன என்றார். தற்பெருமையுள்ள மனிதர் இகழ்ச்சி தோன்ற நகைப்பதுண்டு. தன்னெடுப்புணர்ச்சியே நகையின் அடிப் படை என்று ஃஆப்ஸ் (Hobbes) கூறினர் ஒருவருடைய மதிப் பான தோற்றத்திற்கும் அவருடைய நடத்தைக்கும் முரண் பாடு தோன்றினால் நாம் நகைக்கிறோம். அச்சத்தினால் நகை ஏற்படுவதுண்டு; பெரியவர்கள் முன்னால் ஏற்படும் உள்நடுக் கத்தை மறைப்பதற்காகவும் மக்கள் நகைப்பதுண்டு.

பலவகையான நகைகளையெல்லாம் மூன்றாக வகுக்க லாம்: (1) பிறரைப் பார்த்து நகைத்தல் (2) பிறரோடு நகைத்தல் (3) பல்வேறு நகைகள்.

இகழ்ச்சி, வேடிக்கை, ஒவ்வாமை ஆகியவற்றால் ஏற் படும் நகை **பிறரைப்பார்த்து நகைத்தலாம்.** எடுத்துக் காட் டாக, நெட்டையான கணவன் மிகக்குள்ளமான மனைவியுடன் நடந்து செல்லுதல், படாடோபமான அதிகாரியொருவர் பறந்துவிட்ட தமது தொப்பியைப் பிடிக்க ஓடுதல், இசை வற்ற, இறுக்கமான இயக்கம் இவைபோன்ற நிகழ்ச்சிகள் நம்மைச் சிரிக்க வைக்கின்றன. ஒரு விகடத்துணுக்கை ஒரு நண்பரிடம் கூறிச் சிரித்தல், கீச்சுச் கீச்சுக் காட்டிக் குழந் தையைச் சிரிப்பூட்டல் முதலியவை **பிறரொடு நகைத்தலாகும்.** அச்சத்தால் சிரிப்பது, வென்றோனின் செருக்கு நகை, தமது துன்பத்தை எண்ணி நகைத்து நம் வீழ்ச்சியை மாற்ற முயலுதல் முதலியவை வேறுபட்ட **பலவகை நகைகளாவன.**

நகையை ஒரு துலங்கலாகக் கருதினால் அதற்குப் பிறர் முன்னிலை தேவையாகிறது. நாம் ஒரு நகைச் சுவைக் கதையைப் படித்தோ அல்லது ஒரு வேடிக்கையான நிகழ்ச் சியை நினைத்தோ, தனிமையில் சிரிக்கும்போது கூட நம் மனத்தை உள்நோக்கி ஆராய்ந்தால் பிறர் ஒருவரைக் கற் பனையில் முன்னிலைப்படுத்திக் கொள்வது தெரியும். நமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேறு யாராவது இருந்தால்

நல்லதென்று நினைக்கிறோம். பிறர் முன்னிலைத் தொடர் பின்றி நகை இல்லை. பலர் நம்மோடு இருந்தால் உரக்கச் சிரிக்கிறோம், நீண்ட காலம் சிரிக்கிறோம். 'பல்லாரொடு நகைத்தால் பல்கும் மகிழ்ச்சி' என்கிறோம். பிறரிடம் ஒவ்வாத அல்லது வேடிக்கையான நடத்தையைக் கண்டால் அவர்களைப் பார்த்து நகைக்கிறோம். சிலவேளைகளில் நகையானது நாம் நேரடியாகக் கூற விரும்பாத பாராட்டு மறுப்பு, வன்செயல், பகைமை முதலியவற்றைக் குறிக்கிறது. நாம் விரும்பாதவர்களைப் பற்றி நாம் விகடம் செய்கிறோம் என்பது ஆய்ந்தால் விளங்கும்.

இனி மனவாழ்க்கையின் எளிய பொறியமைப்பைப் பற்றிப் பார்ப்போம்.

ஒன்றுதல் (Identification).

மற்றொரு பொருளோடு நமக்கு ஏற்படும் மனவெழுச்சித் தளையே ஒன்றுதல் எனப்படும். மற்றொருவரோடு நாம் ஒன்றினால், அவருடைய பண்புகள், செயல்கள், சாதனைகள் முதலியவற்றை நமக்கு மாற்றிக் கொள்கிறோம். நம்மிடம் இப்பண்புகள் உள்ளதுபோன்ற உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. நமது தன்முனைப்பின் எல்லை இதன்மூலம் விரிவடைகிறது.

ஒன்றுதல் (தாதாத்மியம்) சாதாரணமாக நிகழ்வதொன்று. சமூகப்புற (nonsocial) நிலையில் நமது கருவிகள், புத்தகங்கள் சொத்து முதலியவற்றோடு நாம் ஒன்றுகிறோம். இவற்றை இழந்துவிட்டால் நமது தன்னகம் (self) குறுகியது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. நாம் சிறியவர்களாகிவிட்டதுபோல் நமக்குத் தோன்றுகிறது.

இந்தியத் தத்துவர்கள் ஒன்றுதற்கருத்தை மிகைப்பூதப் பொருளில் பயன்படுத்தியுள்ளார்கள். ஆன்மா பூதங்களின் ஈட்டமாகிய உடம்போடு தன்னை ஒன்றுபடுத்திக் கொள்கிறது; உடம்புக்கு நேர்வதெல்லாம் தனக்கே நேர்கிறது என்னும் மயக்கத்தில் ஆழ்ந்துள்ளது என்று கூறுகிறார்கள்.

சமூகநிலையில் குழந்தைகளிடத்தும் ஒன்றுதலைக் காண்கிறோம். அவர்கள் தாங்கள் வளர்க்கும் பிராணிகளோடும், விளையாட்டுத் தோழரோடும் ஒன்றுபடுகிறார்கள். தாங்கள்

விரும்பி வளர்க்கும் பிராணிகளைப் புறக்கணிப்பது தங்களைப் புறங்கணிப்பதாகும் என்றுநினைக்கிறார்கள். தங்கள் நண்பர்களைப் பாராட்டுவது தங்களது நல்ல தன்னகத்தைப் பாராட்டுவதாகக் கொள்ளுகிறார்கள். வலிமை குன்றிய குழந்தைகள் தம் நண்பர்கள் விளையாடுவதைக் கண்டு களிக்கிறார்கள்; அவர்கள் விளையாடுவதையும், சண்டையிடுவதையும் தூண்டிவிட்டுப் பார்க்கிறார்கள், அப்படிப் பார்க்கும்போது தாங்களே அச்செயல்களில் ஈடுபடுவது போன்ற உணர்ச்சி அவர்களுக்கு உண்டாகிறது. குழந்தைகள் தம் பெற்றோரின் பெருமையை எடுத்துக் கூறி அதன் மூலம் தாங்கள் பிறரை விட உயர்ந்தவர்கள் என்று மெய்ப்பிக்க முயலுகிறார்கள். இவ்வாறு பிறருடைய சாதனைகளை அவர்கள் அகத்தேற்கிறார்கள் (introject). அவர்கள் பிறர் ஆகிறார்கள். பிள்ளைகள் கதை படிக்கும்பொழுதும் கேட்கும்பொழுதும் கூட ஒன்றுதல் நடைபெறுகிறது. கதை வளர வளர அவர்கள் தலைவனாகவும், தலைவியாகவும், வில்லனாகவும் மாறிமாறி வேடந்தாங்குகிறார்கள். அவர்களுடைய முகபாவம் மாறி வருதைப் பார்த்தால் இது தெற்றென விளங்கும்.

பெரியோர் வாழ்க்கையிலும் ஒன்றுதல் இடம் பெறுகிறது. தம் குழந்தைகள் பெரிதாக எதையாவது சாதித்து விட்டால் பெற்றோர் பெருமிதமடைகிறார்கள் *, நம் தலைவரோடு நாம் ஒன்றுபடுகிறோம். அவர்களுடைய பெருமையைக் கண்டு நாமும் பெருமைப் படுகிறோம். மக்கள் தம் முடைய தாழ்வுணர்ச்சியைப் போக்கிக் கொள்வதற்காகத் தங்கள் முன்னோருடைய புகழை எடுத்துப் பேசுகிறார்கள். இத்தகைய பேச்சும், வலியற்ற குழந்தை பிறரைச் சண்டையிடத் தூண்டிப் பார்ப்பதும், ஒன்றுதலுக்கும் ஈடுசெய்தலுக்கும் ஒருங்கே எடுத்துக்காட்டுகளாகின்றன.

சாதாரணமான ஒன்றுதலும், ஈடுசெய்தலை அடிப்படையாகக்கொண்ட ஒன்றுதலும் சமூக வாழ்க்கையில் மிக முக்கியமான இடம் வகிக்கின்றன. குழந்தை தாய்ப்பாலை உண்கிற அக்காலத்திலேயே ஒன்றுதல் தொடங்குகிறது. உயிரியல் ஒன்றுதலின் மற்றொரு வடிவமே மன ஒன்றுதல் போலும். தாய் துன்புற்றால் குழந்தையும் துன்புறுகிறது. குழந்தை தந்தையிடம் ஒட்டி வளர்ந்தால் தந்தையைப்

* 'தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.' முதலிய வள்ளுவர் கூற்றுக்களையும் காண்க.

பற்றியும் இத்தகைய உணர்ச்சிகள் பெறுகின்றது. இத்தகைய ஒன்றுதல் மூலம் பெற்ரோரின் பொருட் செல்வமும் குழந்தையின் பெருமைக்குக் காரணமாகிறது. இன்னும் சில காலம் கழித்து குழந்தை பெற்ரோரின் பொது எண்ணங்களை உட்படுத்திக் கொள்கிறது. இவ்வாறு மனச்சான்று அல்லது மீமனம் (super - ego) அமைகிறது. ஒன்றுதலின் மூலம் குடும்பத்திலும், விளையாட்டுக் குழுவிலும், பள்ளியிலும், மாநிலத்திலும், தேசத்திலும், ' நாம் எனும் உணர்ச்சி ' உண்டாகிறது. குழந்தைப் பருவத்திலும் பிற்காலத்திலும் நாம் வீரர் என்று நினைப்பவர்களின் சாதனைகள் நம் சாதனைகளாகின்றன. அவர்களது இழிவு நமது இழிவாகிறது. இம்முறையில் குழு அறிவு, குழு உணர்ச்சி குழுப் பற்றுறுதி முதலியவை ஆழ்ந்து வலியுறுகின்றன.

பொருள்வயப்படுத்தல் : (Objectification).

நம்மிடத்தில் உள்ளதொரு போக்கினைப் பிறர் வெளிப்படுத்தக்கண்டு நிறைவுபெறுதல் பொருள்வயப்படுத்தலாகும். நடனமாட விழையும் நொண்டியொருவன் பிறர் நடனமாடுவதைக் கண்டு நிறைவு பெறுகிறான். மணமாகாத ஒருவர் வெள்ளித்திரையில் காதல் காட்சியைக் கண்டு மகிழ்கிறார். நாகரீக மனிதன் தனது வன்செயற் பண்பையும், போரூக்கத்தையும் ஊட்டுவதற்காகக் குத்துச் சண்டை பார்க்கப் போகிறான், போர்ச் செய்தியைப் படிக்கிறான். மக்களின் நன்மதிப்பைப் பெற்ற மனிதர் தெருவில் நின்று அங்கு நடக்கும் சண்டையைப் பார்க்கிறார். தகாத செயல்களைச் செய்யாமலே, செயலின்பம் பெறுவதற்குப் பொருள் வயப்படுத்தல் துணைபுரிகிறது.

புறத்தெறிதல் : (Projection).

ஒரு பொருளையோ ஓர் ஆளையோ திரையாகப் பாவித்து அவர்மீது நமது மனநிலைகளை எறிதல் புறத்தெறிதல் எனப்படும். புறத்தெறிபவர் தமது சொந்தப் பண்புகள், விருப்பங்கள், மனப்பான்மைகள் குறைகள் முதலியவைற்றை அறியாமலே பிறர்பால் சார்த்துகிறார். பொதுவாக நாம் பிறருடைய நிறுக்கைநிலை, முகபாவம், சைகை, சொற்கள் முதலியவற்றைக் கண்டு அவற்றிற்கேற்பத் துலங்குகிறோம் என்று நினைக்கிறோம். இது ஓரளவுதான் உண்மையாகும். நாம் இத்தூண்டல்களின் உரைகண்டு (interpret) அதற்கேற்ப

எதிர்வினை செய்கிறோம். அந்த நேரத்தில் உள்ள நமது மன நிலை நமது தூண்டல் உரைப்பைப் (interpretation) பாதிக்கிறது. நாம் இருப்பதுபோலவே நாம் பிறரைக் காண்கிறோம். நமது பெரும்பாலும் நனவிலி - விருப்பங்கள், தேவைகள், எழுச்சி வன்மைகள் முதலியவற்றைப் பிறரிடத்துக் காண்கிறோம்.* மகாபாரதத்தில் துரியோதனன் தனது கெட்ட குணங்களையே பிறர்பால் சார்த்தியதால் உலகில் நல்லவர்களே இல்லையென்று கூறினன்.

இலக்கியத் திறனாய்வாளரும் புறத்தெறிதலின் விளைவைக் கண்டுள்ளனர். திறனாய்வு திறனாய்வாளரின் தன்மையை வெளிப்படுத்துகிறதென்று கூறப்பட்டுள்ளது.

நமது அவலநிலையை ஒரு வீட்டின் மேல் சார்த்தி அவ்இல்லம் அவலக் காட்சியளிக்கிறது என்று கூறுகிறோம்.** ஓர் உருவத்தின் தோற்றத்தின்பால் நமது உள்ளார்ந்த அனுபவத்தைச் சார்த்தி, 'அது அழகிய உருவம்' என்கிறோம். ஒரு குழந்தை தன் தனிமையைத் தன் பொம்மையின்பால் சார்த்தி அதை அன்பாய் நடத்துகிறது. தன்னையே வியக்கும் மனிதன், பிறரும் தன்னை வியக்கிறார்களென்று எண்ணி, அதற்கேற்ப நடந்து கொள்ளுகிறான். ஒரு காரியத்தைச் செய்ய அடக்கமுடியாத ஆவல் உள்ள மனிதன் பிறரும் அப்படிச் செய்யவே விரும்புகிறார்கள் என்று எண்ணித் தன் செயலைத் துணிந்து செய்கிறான். கும்பலில் உள்ள மனிதர் தமது துடிப்புக்களைப் பிறர்மேல் சார்த்தி பிறரும் அப்படிச் செய்கிறார்கள் என்று எண்ணித் தம் துடிப்புக்களை வெளிப்படுத்துகிறார்.

புறத்தெறிதலென்பது ஓர் எளிய சாதாரண நிகழ்முறை. ஆனால் அது சிலவேளைகளில் ஓர் எதிரான்றற் பொறியமைப்

* 'நோக்குவவெல்லாம் அவையே போறல்' என்ற தொல்காப்பிய மெய்ப்பாட்டையும் காண்க.

** தற்குறிப்பேற்றம் எனப்படும் அணியும் புறத்தெறிதலின் வகையாகும் கைகேயியின்கொடிய செயலுக்குப் பின் பொழுது புலர்வதை,

> '' சேணுலாவிய நாளெலாம் உயிர் ஒன்று போல்வன செய்து பின்
> ஏணுலாவிய தோளினுள் இடம் எய்த ஒன்றும் இரங்கிலா
> வாணிலா நகை மாதராள் செயல்கண்டு மைந்தர் முன் நிற்கவும்
> நாணிலாள் என ஏகினாள், நளிர் கங்குலாகிய நங்கையே ''

முதலிய பல தற்குறிப்பேற்றங்களைக் கொண்டு கம்பர் வரிணிக்கிறார்.

பாகி (defence mechanism) விடுகிறது. பற்றுள்ளம், சந்தேகம், இழிகுணம், பேராசை உள்ள மனிதர் பிறரும் அப்படியே இருப்பர் என்று எண்ணுவதுண்டு. தம்மிடம் இருப்பதை நேருக்கு நேர் கண்டு சமாளிக்க முடியாத குறைகளைப் பிறர் பால் சார்த்துவது எளிது. குற்றம் கண்டுபிடிக்கும் பழக்கம் பெரும்பாலும் புறத்தெறிதலை அடிப்படையாகக் கொண்டது. தமது அற உணர்ச்சிக்கும் உயிரியல் துடிப்புக்களுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டைச் சரிவர அறியாதவர்கள் இத்துடிப்புக்களைப் பிறரிடம் கண்டு அவர்களைக் குறை கூறுகிறார்கள். இத்தகைய குற்றச்சாட்டு எதிரூன்றற் பொறியமைப்பேயாம். நமக்குள்ளே நாம் காண அஞ்சும் தன்மைகளைப் பிறர்மேல் ஏற்றிக் குறைகூறுவது எளிது. இதன் மூலம் தற்குற்றச்சாட்டையும், தற்குறைகாண்டலையும் தவிர்த்துக் கொள்ளுகிறோம்.

மேலும் புறத்தெறிதல் மூலம் புரளிப்பேச்சின் (rumour) தோற்ற வளர்ச்சி, காலக் கோலங்கள் பரவுதல், குழுவின் முற்சார்பு, குழுச்சந்தேகம், குழுப்பகைமை முதலியவற்றையும் நாம் புரிந்துகொள்ளமுடிகிறது.

ரோர்ஷாக்கின் மைத்தடச் சோதனை (Rorschach's Ink blot test), மர்ரே (Murray), சிமண்டு (Symond) ஆகியோரின் பொருளொடு புணர்ந்தறி சோதனை (Thematic Apperception Test) முதலியவற்றின் மூலம் புலக்காட்சியிலும் புறத்தெறிவு இடம் பெறுகிறதென்று அறிகிறோம்.

இடப்பெயர்ச்சி (Displacement).

'தாய்மேலுள்ள கோபத்தை மனைவியின் மீது தீர்த்துக் கொண்டானும்' என்ற பொருள்பட இந்திய மொழிகளில் பழமொழிகள் உள்ளன. இதைத்தான் உளவியலர் இடப்பெயர்ச்சி என்று கூறுகிறார்கள். ஒரு பொருளால் அல்லது ஆளால் தூண்டப்பெறும் மனவெழுச்சி அந்தப் பொருளை அல்லது ஆளைநோக்கிச் செலவிடப்படவேண்டும்; ஆனால் அது கைகூடாதபொழுது அது மற்றொரு பொருளுக்கு நேராகத் திரும்புகிறது. இதுதான் இடப்பெயர்ச்சியாகும். சிறு பிள்ளைகள் தம்பெற்றோர் மீது கோபங்கொண்டால் அவர்களை அடிக்க அல்லது கடிக்க முற்படலாம். ஆனால் இப்படிச் செய்ய அஞ்சினால், அல்லது செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டால் தங்களுடைய தம்பி தங்கையரை அடிக்கிறார்கள்,

கடிக்கிறார்கள். அஃதும் முடியாவிட்டால் அவர்கள் தங்களையே அடித்துக் கொள்ளுகிறார்கள். தன் வதைப்பும், தற்கொலையும் இடம் பெயர்ந்த வன்செயலுணர்வின் விளைவுகள். அதிகாரி எழுத்தரைச் சினந்தால் எழுத்தர் வீட்டில் வந்து தம் மனைவியை வெகுள்வார். இடப்பெயர்ச்சியின் மூலம் மனவெழுச்சிக் கழிவு (discharge) ஏற்படுகிறது. இதன் மூலம் தனியாளுக்குச் சமநிலை ஏற்படுகிறது. பின் அவர் பிறருடன் சாதாரணத் தொடர்பு கொள்ள முடிகிறது. ஒடுக்கிய எழுச்சி இயற்கைப்புற (Unnatural) நடத்தைக்குக் காரணமாகிறது. நமது சினத்திற்குப் பலியாக ஒரு பொருள் கிடைத்தபின் அன்புநிலை மீள்கிறது. 'நம்மை ஒட்டியவர்பாலுள்ள பகை, ஒட்டாதவருக்கு நேராகத் திரும்பிய பின், நம்மை ஒட்டியவர்பால் மெய்யன்பு செலுத்த முடிகிறது.[8] ஒருவரையொருவர் வெறுக்கும் இருவருக்குப் பொதுவான பகைஞர் எதிர்ப்பட்டால் அவ்விருவருக்கும் இடையே நட்புத் தோன்றுகிறது. அனைத்துலக அரசியலிலும் இத்தகைய நிலைகளை நாம் காணலாம்.

இடப்பெயர்ச்சியின் பயனைப் பெற்றேரும் அரசாங்கத்தினரும் உணரவேண்டும். குழந்தைகளின் சினத்தைப் பெற்றோர் முற்றிலும் அடக்கக் கூடாது; குடிகளின் கோபத்தை அரசாங்கத்தினரும் முற்ற அடக்குதல் நல்லதன்று. எழுச்சிகளுக்கு நேரடியாகவோ, இடப்பெயர்ச்சி மூலமாகவோ வெளிப்பாடு அளிப்பது அவசியம். ஆனால் இடப்பெயர்ச்சியை எச்சரிகையுடன் பயன்படுத்தவேண்டும். தலைவர்களும், சர்வாதிகாரிகளும் தங்கள் குடிகளின் வெறுப்பைப் பிறநாடுகளின் பால் திருப்பி விடுவதுண்டு. இப்படியே பெரும்பான்மையினரைச் சிறு பான்மையினருக்கு எதிராகத் திருப்பி விடுவதும் தகாதது.

சமூக இடைவினையில் வசதியளிப்பும் (facilitation) **தடையும்** (inhibition).

இருவரோ, அதற்கு மேற்பட்டவரோ ஒருவர் முன்னிலையில் ஒருவர் இருந்து வேலை செய்தால் செயல்வேகம் மிகைப்படுகிறது. சுறுசுறுப்பும் ஊக்கமும் உண்டாகின்றன. இது அன்றாட வாழ்க்கையில் நாம் காணக்கூடிய உண்மை. புற ஆய்வுகளும் இம்முடிபினை வற்புறுத்துகின்றன. இதனைச் **சமூக முற்படுப்பு** (social increment) அல்லது **வசதியளிப்பு** என்னலாம். உயிரியல் மட்டத்திலுங்கூட இந்நிகழ்முறை

யைக் காணலாம். ஒரே கரைசலில் வைத்திருக்கும் உயிரணுக்கள் மிக விரைவாகப் பெருகுகின்றன. உடன்-செயல் புரியும் (co-acting) குழுக்களிலுள்ள எறும்புகள் அதிகத் துணிக்கைகளைத் திரட்டுகின்றன. குழுச் சூழ்நிலையில் அதிகம் உண்கிறோம், அதிகம் பேசுகிறோம், அதிகம் சிரிக்கிறோம், அதிகமாக உழைக்கிறோம்.

சமூக வசதியளிப்பைப் பற்றி ஆல்ப்போர்ட் சில கவர்ச்சிகரமான புற ஆய்வுகள் இயற்றியுள்ளார். அவர் தமது மாணவருக்குச் சில கடமைகள் அளித்தார். (a) மூன்று நிமிட நேரம் தமக்குத் தோன்றும் தொடர்பற்ற சொற்களையெல்லாம் எழுதுதல். (b) மூன்று நிமிட நேரத்தில் தமக்குத் தோன்றும் சொற்களுள் மூன்றுவிட்ட சொற்களையெல்லாம் எழுதுதல்; (c) சில கூற்றுக்களைப் பொய்ப்பிக்கக் கூடிய வாதங்களை ஐந்து நிமிட நேரம் எழுதுதல். (d) ஒரு பகுதியிலுள்ள உயிரெழுத்துக்களையெல்லாம் குறித்தல். (e) இரண்டு தான எண்களை இரண்டுதான எண்களால் பெருக்கல். மாணவரைப் போட்டியிட வேண்டாம் என்றே ஆல்ப்போர்ட் கூறினர். ஆயினும் இச்செயல்களைத் தனியாகச் செய்த மாணவரைவிட மற்றவர் முன்னிலையில் (அதாவது உடன் செயல்புரியும் குழுவில்) வேலைசெய்யும் மாணவர் நன்றாக வேலை செய்தனர், அதிகச் சொற்கள் எழுதினர், அதிகமான எண்களைப் பெருக்கினர், பல உயிரெழுத்துக்களைக் குறித்தனர். இவ்வாறு உடன் செயல்புரி குழுவில் செயல் விரைவடைகிறது, உற்பத்தி மிகைப்படுகிறது. இதை ஆல்ப்போர்ட் பின்வருமாறு விளக்குகிறார். பிறர் முன்னிலையில் அதிகமான தூண்டுதல் ஏற்படுகிறது. ஏற்கனவே செயல் புரியும் நரம்புப்பாதைகளில் அதிகமான துடிப்புக்கள் செயற்படுகின்றன. இதன் மூலம் செயல் விரைகிறது, வலியுறுத்தப் பெறுகிறது. பிறர் நம்முடன் வேலை செய்வதால் முதலிலிருந்தே நாமும் விரைந்து வேலைசெய்கிறோம். கவலைப்புக்கள் (distractions) ஏற்பட்டாலும் அவற்றை இம்முறையில் ஈடு செய்யமுடிகிறது. உடன்-செயல்புரி நிலையில் போட்டி மனப்பான்மை எழுகிறதென்று டாஷியல் (Dashiell, 1930) புற ஆய்வுகளின் மூலம் மெய்ப்பித்தார். ஆகையால் ஆல்ப்போர்ட்டின் அளவில் வசதியளிப்புக் கருத்து (quantitative concert of facilitation) மட்டும் போதாது என்று நியூக்கோம்ப் கூறினர். குழுவில் புதிய தரங்கள் ஏற்படுகின்றன. இவற்றை அனைவரும் பகிர்ந்து கொள்கின்றனர். குழுவின் உறுப்பினர் தூண்டலைப் புதிய வகைகளில் புலன்காண்கின்ற

னர், ஆகையால் வெவ்வேறு விதமாகத் துலங்குகின்றனர் என்று அவர் எடுத்துரைத்தார்.

உடன்-செயல்புரி குழுவில் வேகமும் வேலை அளவும் அதிகரித்த போதிலும் வேலைத்தரம் குறைகிறது. மனச்செயல்கள் தடைப்படுவதாலேயே இவ்வாறு நடக்கிறது. திருத்தமும் தரமான வேலையும் வேண்டுமானால் கருத்தைத் தொடர்ந்து ஒருமையப்படுத்தவேண்டும். உடன்-செயல்புரி குழுத் தூண்டல் இத்தகைய ஒருமையத்தைத் (concentration) தடுக்கிறது. போட்டியால் ஏற்படும் மனவெழுச்சியின் மூலம் அறிவுச் செயல்கள் தடைப்படுகின்றன. பிறர் நம் வேலையைப் புகழவோ இகழவோ கூடும் என்னும் எண்ணமும் சிந்தனையைத் தடைப்படுத்துகிறது. நாம் தனியாக இருக்கும்பொழுது நம்மால் திருத்தமாகவும், முறையாகவும் சிந்திக்க முடியும். ஆல்ப்போர்ட்டின் புற ஆய்வுகளும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. குழுவில் வேலை செய்த மாணவர் ஒரு கூற்றைப் பொய்ப்பிக்க அதிகமாக வாதங்கள் எடுத்துக் கூறினர்; ஆனால் சிறந்த வாதங்கள் எடுத்துக் கூறவில்லை.

தொழிற்சாலைகளிலும் பள்ளியிலும் நடைபெறும் வேலையைப்பற்றிப் புரிந்துகொள்ளவும் கும்பல் நடத்தையை விளக்கவும் சமூகவசதியளிப்பும், தடையும் துணைபுரிகின்றன. வகுப்பறை நிலையை எடுத்துக் கொள்வோம். மாணவரை எவ்வாறு வகுப்பது? அறிவுசார் வேலைகளுக்கு வகுப்பு சிறியதாக இருக்கவேண்டும். செய்யுள் நயம் பாராட்டல் போன்ற எழுச்சிச் செயல்களுக்கு வகுப்பு பெரிதாயிருத்தல் நலம். மட்டமான மாணவரை மையத்தில் இருத்துதல் நலம். சுற்றியுள்ள மாணவர் வேலை செய்வதைப்பார்த்து இவர்கள் தூண்டப்பெறுவார்கள்.

உடன்-செயலில் மெல்லச் செல்பவர் விரைகின்றனர்; விரைந்து செல்லக் கூடியவர்கள் வேகம் குறைகிறது. இம்மையப் போக்கு குழுத்தரத்தை நோக்கிச் செல்வதால் ஏற்படுகிறது. உடன்செயல்புரியும் வேலையாட்களிடத்து மட்டுமின்றி, உடன் தீர்ப்பவரின் (co-judging individuals) எண்ணங்களிலும் இம் மையம்நாடு போக்கினைக் காணலாம். ஒரு பொருளின் எடையைச் சில தனியாட்கள் தனியே இருந்து மதிப்பிட்டால் அவர்கள் தீர்ப்புகள் மிக வேறுபடும். ஆனால் அவர்கள் ஒருவர் முன்னிலையில் ஒருவர் இருந்து,

தீர்த்துத் தம் தீர்ப்பைப் பிறருக்குச் சொல்லாவிட்டால் கூட, பிறர் முன்னிலையில் இருப்பதால் மட்டுமே முன்னர்க் காணப் பட்ட வேற்றுமை குறையும்.

References.

1. R. H. Thouless, General and Social Psychology.
2. R. H. Thouless, Psychology of Religion. P. 23.
3. Julius Jolly, Hindu Laws and Customs P. 97.
4. J. B. Pratt, The Religious Consciousness P. 86.
5. Ibid.
6. W. Mc Dougall, Social Psychology.
7. F. H. Allport, Social Psychology, P. 236
8. S. Issacs, Social Development in Young Children.

7. சமூக அமைப்பும் குழுக்களும்

எறும்பையும் தேனீயையும் போல மனிதனும் ஒரு சமூகம்வாழ் (Societary) பிராணியாவான். விலங்கினங்கள் நீரை நாடியும், காற்றின் போக்கிற்கிணங்கியும், உணவை நாடியும் ஓர் இடத்திற் கூடலாம். ஆனல் இவ்வாறு கூடியபின் பொதுவாக அவை பிரிவதில்லை. இது ஒருவகைச் சமூக இயங்கிலித்தன்மை (Inertia) ஆகும். ஒன்றையொன்று பொறுக்கும் தன்மையும் குழுவில் உண்டு. கூடிவாழ் விலங்குகளுக்கு உடம்படுத்தும் (Communicating) ஆற்றலும் அவாவும் உண்டு. ஒன்றிற்கொன்று உதவிசெய்யும் பண்பும் அவற்றிற்கு உண்டு. ஆகையால் குழுவாழ்க்கை உந்து உயிரியற் குறிப்புடைமையுள்ளது. குளிர் குருதி விலங்குகள் (Cold-blooded animals) குழுவில் வாழ்ந்தால் அவற்றை வெப்பமாற்றம் எளிதிற் பாதிப்பதில்லை; அவற்றைக் கொல்வதும் எளிதல்ல என்று ஆலீ (W. C. Allee) கூறியுள்ளார். விந்துக்கள் (Spermatozoa) பலவாகத் திரண்டிருந்தால் அவற்றின் உயிர்வளம் அதிகக் காலம் இருப்பதுண்டு. ஒன்றுக வாழும் புரோட்டோசோவா (Protozoa) மிகவிரைவாகப் பல்கிப் பெருகுகின்றன. விலங்குகள் உண்பதையும் உயிர்ப்பதையும் (breathing) கூடக் குழுவாழ்க்கை முன்னேற்றுகிறது.

மனிதன் எப்பொழுதும் சமூகப் பிராணியாகவே வாழ்ந்து வந்துள்ளான். குடும்பம், சிறுகுடி (Clan), இனக்குழு (Tribe), சமுதாயம் முதலிய இயற்கைக் குழுக்களிலும், தானுக முயன்று அமைத்த செயற்கைக் குழுக்களிலும் உறுப்பினனுக அவன் வாழ்ந்து வந்துள்ளான். பிறந்தபொழுது அவன் கையாலாகாதவன்; இந்நிலை அவனைத் தன் தாயோடு இணைக்கிறது. அவளுடைய தாய்மை உந்து

அவனைத் தன் குழுவியோடு இணைக்கிறது. இத்தொடர்பு பல்வேறு உளவியல் தேவைகளுக்கும் அடிப்படையாகிறது. இத்தேவைகளே சமூக வாழ்க்கையைத் தாங்கி நிற்கின்றன.

குழுக்களும் அவற்றின் வகைகளும்.

மனிதப் பெருஞ் சமூகத்தில் பல்வேறு வகையான குழுக்கள் உள்ளன. இவை உளவியல் முறையில் மிக முக்கியமானவை. தனியாட்களின் சிந்தனைகள், மனப்பான்மைகள், செயல்களையெல்லாம் புரிந்துகொள்ள வேண்டுமானால் அவர்கள் உறுப்பினராகும் குழுக்களின் அமைப்பையும் செயல்களையும் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். மனிதன் வெவ்வேறு குழுக்களில் வெவ்வேறு வேடம் தாங்குகிறான், வெவ்வேறு விதமாக நடந்துகொள்ளுகிறான். குடும்பத்தில் அவன் புறமுறைமையின்றி (Informal) நடந்து கொள்ளுகிறான். ஆனால் சிந்தனைக் குழுவிலும் (Committee) அவையிலும் (Audience), பாராளுமன்றத்திலும் அவன் மதிப்புடன் நடந்து கொள்ளுகிறான். மனிதன் குழுவில் உறுப்பினனாவதால் வெவ்வேறு வகையான குழு வன்மைகளும் (Group pressures) சமூகக் கட்டுப்பாடுகளும் அவனைப் பாதிக்கின்றன. வெவ்வேறு குழுக்களில் வெவ்வேறு வகையான சமூக வன்மைகள் உண்டு. குடும்பத்திலும் கிராமச் சமுதாயத்திலும் தனியாள் நேரடியாக, உடனடியாக, புறமுறைமையின்றிக் கட்டுப்படுத்துபவர் அவருடைய பெற்றோரும், மூத்தோரும், கிராமப் பஞ்சாயத்தினரும் ஆவர். ஆனால் குடிமகன், திருச்சபை உறுப்பினர், தொழிற்சங்க அங்கத்தினர் என்ற முறையில் அவர் தெளிவாக வகுக்கப்பட்ட விதிகளாலும் ஒழுங்கு முறைகளாலும் கட்டுப்படுகிறார். பொது மக்களுள் ஒருவர் என்ற முறையில் பல்வேறு மூலங்களினின்று எழும் கருத்துப் பரவலால் அவருடைய மனப்பான்மைகளும் எண்ணங்களும் பாதிக்கப்படுகின்றன.

உளவியற் குழு.

தனியாட்கள் கூடும்போதெல்லாம் உளவியற் குழு அமைந்து விடுவதில்லை. பூதவியல் அண்மையைக்கொண்டு மட்டும் உளவியற் குழுவை வரையறுத்துவிடமுடியாது. ஓர் அறையில் பல குழந்தைகள் பிறரைக் கவனியாது தத்தம் விளையாட்டுப் பொருட்களுடன் தாமே விளையாடிக் கொண்

டிருந்தால் அவர்களை ஓர் உளவியற் குழு என்று சொல்ல முடியாது. புகைவண்டிப் பெட்டியில் அவரவர் மட்டில் எதையோ படித்துக் கொண்டு செல்லும் பிரயாணிகளையும் உளவியற் குழு எனலாகாது. ஆனல் மேற்கூறிய குழந்தைகளோ, பிரயாணிகளோ ஒருவரையொருவர் அறிந்து தொடர்பு கொண்டால் உளவியற்குழு உருவாகிறது. குழு என்பது ஓரளவு பிரித்தறியக்கூடிய தனியாள் தொகுதி. அதன் உறுப்பினரிடத்துத் தாம் ஒன்றுகச்சார்ந்தவர்கள் என்ற உணர்ச்சியும் உண்டு; ஓரின உணர்ச்சியும் (Conciousness of kind) உண்டு. இவ் உணர்ச்சியால் அவர்களது நடத்தை தீர்மானிக்கப்படுகிறது. சில தனியாட்கள் ஒருவரையொருவர் பாதுகாக்க முன்வந்தால் அல்லது ஒருவரை இகழ்ந்தவிடத்து அனைவரும் சினந்தால் அவர்கள் ஒரு குழுவாக அமைந்துள்ளனர் என்று அறியலாம். இவ் அக வயக் காரணியே குழுவின் உண்மை நியதியாகும். இடத்தால் அண்மை, தொழில் ஒப்பு, வருமான ஒப்பு, ஏற்ற ஒப்பு முதலியவற்றைச் சிலர் நியதிகளாகக் கொள்வர். ஆனல் இட அண்மை குழு உருவாதற்கேற்ற நிலைமையை அமைக்கிறதேயன்றி, குழுவை உருவாக்கும் நியதியாகும் என்று சொல்ல முடியாது. ஏனெனில் ஒரு சமயத்தையோ, சாதியையோ அரசியற் கட்சியையோ சேர்ந்தவர்களெல்லாரும் ஒரே நிலப்பரப்பில் வாழ்வதில்லை. ஆயினும் தாங்கள் ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள் என்னும் உணர்ச்சியாலேயே அவர்கள் குழுவாகிறார்கள். ஒத்த தொழில், ஒத்த வருமானம், ஒத்த ஏற்றம் முதலியனவும் இவ்வாறே குழு உணர்ச்சிக்கு ஏதுவாகின்றன. மேற்கூறிய பிளவுகள் குழுக்களை வகைப்படுத்துவதற்கு ஏதுவாகலாம். ஆனல் வகுப்புக்கள் அனைத்தும் குழுக்கள் ஆகமாட்டா என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். ஒத்த வருமானம், தொழில் முதலியவற்றை உடையவர்கள் ஒருவர்பால் ஒருவர் அக்கறை கொண்டு, தாம் ஒத்தவர்கள் என்று உணர்ச்சி கொண்டால்தான் அவர்கள் ஒரு குழு ஆவர். இட அண்மையைப் போலவே, தொழில் ஒப்பும் வருமான ஒப்பும் ஏதுக்காரணிகளாகத்தான் இருக்கமுடியும். அவை இருந்தால்தான் குழு அமையவேண்டும் என்பதில்லை. வருமான, தொழில் ஒப்பு இல்லாமலே குழு அமையமுடியும்; இத்தகைய ஒப்பு இருந்தும் குழு அமையாமல் இருக்கமுடியும்.

ஒரு குழுவினர் தாம் ஒருவரையொருவர் சார்ந்தவர் என்பதைக் காட்டும் சொல் 'நாம்' என்பது. 'ஏம்' 'ஓம்'

என்னும் விகுதிகளாலும் இதனை அறியலாம். அந்தணரேம், அறிவரேம், தொழிலாளராகிய நாம் முதலாளிகளாகிய நாம் என்றுகூறுபவர் தம் உளவியற் குழுவைக் குறிப்பிடுகிறார்கள். நாம் என்னும் சொல், குழு உணர்ச்சியைக் குறிப்பிடுகிறது; பொதுநோக்கங்களும் தரங்களும் உளவென்று காட்டுகிறது; ஒற்றுமை உணர்ச்சியை வெளியிடுகிறது; ஒருவருக்கொருவர் உதவிசெய்ய ஆயத்தமாயுள்ளார்கள் என்று தெரிவிக்கிறது.

குழுக்களின் வகைகள் :

தோற்ற முறைப்படி குழுக்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவைதாம், **இயற்கைக்** (natural) குழுக்கள், **செயற்கைக்** (artificial) குழுக்கள் எனப்படும். அவற்றைத் **தற்செயலாக** (accidental) அமைந்தவை, **நோக்கமுடன்** (purposive) அமைக்கப்பட்டவை என்றும் வகுக்கலாம். குழுவின் உறுப்பினருக்கு எந்த அளவு உள்நிறைவு கிடைக்கிறதென்பதைக் கொண்டு பார்த்தால் **முற்று அடங்கல்** (totally inclusive), **சற்று அடங்கல்** (partially inclusive) என்று குழுக்களைப் பிரிக்கலாம். உறுப்பினருக்கிடையேயுள்ள தொடர்பை அடிப்படையாகக் கொண்டும் குழுக்களை வகுக்கலாம். இம் முறையில் **முதனிலை** (primary), **வழிநிலை** (secondary) குழுக்களைப் பிரித்தறிகிறோம். சில குழுக்கள் தற்காலிகமானவை. வேறு சில, நிலையானவை. வெளியாருக்கு அளிக்கப்படும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு **திறந்த** (open), **மூடிய** (closed), **ஓரளவு திறந்த** (partially open) குழுக்கள் என்று வகுக்கலாம்.

மேற் கூறிய குழு வகைகள் ஒன்றையொன்று விலக்குவனவல்ல. ஒரே குழு பல்வேறு வகைகளில் இடம் பெறக் கூடும். எடுத்துக்காட்டாக, குடும்பம் ஓர் இயற்கையான, சற்று அடங்கலுள்ள, முதனிலைக் குழுவாகும்.

சில குழுக்கள் உயிரியல் தேவைகளை நிறைவிக்கத் தோன்றியவை; நோக்கத்தைப் பற்றிய தெளிந்த அறிவின்றியே இவை அமையக்கூடும். இவற்றைக் **இயற்கைக்** குழுக்கள் என்னலாம். குடும்பம், சமுதாயம், ஒத்த வயதினர் குழு முதலியவை இயற்கைக் குழுக்கள். பொழுதுபோக்கு, வியாபாரம், கல்வி முதலிய நோக்கங்களை அடைவதற்காக மக்கள் அமைத்துக் கொள்ளும் சங்கங்களும் (associations) அமைப்புக்களும் (organizations) **செயற்கைக்** குழுக்களாம்.

மக்டூகல் குழுக்களைத் **தாமாக அமைந்தவை, நோக்கத் தோடு அமைக்கப்பட்டவை** என்று பிரித்தார். புகைவண்டிப் பெட்டிகளிலும்கப்பல்களிலும் செல்லும் மக்கள் தற்செயலான உளவியற் குழுக்கள் ஆகிறார்கள். அவர்களுக்கு இடையே யுள்ள சில பொதுக் கூறுகளை விரைவில் அவர்கள் கண்டு கொள்வதால் அவர்களை உளவியற்குழு என்று சொல்ல லாம். புகை வண்டிப் பெட்டியில் செல்லும் பிரயாணிகள் புதிதாகப் பெட்டியில் ஏற முயலுகிறவர்களை ஒன்று சேர்ந்து எதிர்க்கிறார்கள். நீண்ட பயணங்களில் வழியில் இறங்கி விட்டவரை நினைத்து இரங்குகிறார்கள். திட்டவட்டமான நோக்கத்துடன் அமைக்கப்பட்ட குழுக்கள் நோக்கமுடைக் குழுக்களாம். மக்டூகல் இயற்கைக் குழுக்களையும், செயற் கைக் குழுக்களையும் நோக்கக் குழுக்களின் உட்பிரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

உறுப்பினரின் கவர்ச்சிகள் அனைத்தையும் ஈர்க்கும் குழு முற்று அடங்கற் குழு எனப்படும். தனியாள் தன் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டாத குழு சற்று அடங்கற் குழுவாகும். இவ்வாறு வகுப்பதற்குத் தனியாள் குழுவிற் காகச் செலவழிக்கும் நேரத்தை மட்டும் கவனித்தால் போதாது. அவர் குழுவோடு எந்த அளவுக்குத்தம்மை ஒன்றுபடுத்துகிறார் என்பதும் முக்கியம். இப்படிப் பார்த் தால் கிராமச் சமுதாயம் ஒரு முற்று அடங்கற் குழுவாகும். ஏனெனில் கிராமத்தார் தம் வாழ்க்கையில் எல்லாப் பாகங் களையும் கிராம மக்கட் குழுவுடனே செலவழிக்கிறார். குடும்பம் சற்று அடங்கற்குழுவாகும்; ஏனென்றால் ஒரு மனி தனுக்குத்தன் குடும்பத்திற்குப் புறம்பான பல கவர்ச்சிகளும் பற்றுறுதிகளும் (loyalties) உள்ளன.

உறுப்பினருக்கிடையேயுள்ள தொடர்புப் படிவம் நெடுங்காலம் நீடித்தால் அது ஒப்புமையாக நிலையான குழுவாகும். குடும்பம், கிராமச் சமுதாயம், திருச்சபை (Church), தேசம் முதலியன இத்தகைய நிலையான குழுக் கள் ஆவன. கும்பல்களும் புகைவண்டிப் பெட்டிக் குழுக் களும் தற்காலிகமானவை.

உடன் செயல்புரி (Co-acting) குழுக்களும் இடைச்செயல்புரி (interacting) குழுக்களும்.

பல தனியாட்கள் ஒரே முடிவைத் தனித்தனியே தொடர்ந்து செயல் புரிந்தால் அவர்களை ஓர் **உடன் செயல்புரி**

குழு என்று சொல்லலாம்.[2] ஆனால் அவர்கள் பொதுவான ஒரு முடிபைத் தொடர்ந்து ஒருவருக்கொருவர் பொருத்தப் பட்டு வேலை செய்தால் அவர்கள் ஓர் இடைச்செயல்புரி குழு ஆவர். (ஒரு தொழிற்சாலையில் தனித்தனியே தம் தம் வேலையைச் செய்யும் தொழிலாளர் உடன் செயல்புரி குழு ஆவர்.) உரையாடற்குழு, பாராளுமன்றம், விளை-யாட்டுக் குழு முதலியவை இடைச் செயல்புரி குழுக்களாவன.

திறந்த, மூடிய குழுக்கள்

சில குழுக்கள் எளிதாகப் புதிய உறுப்பினரை ஏற்றுக் கொள்கின்றனர் என்று ஆல்வெர்டெ (Alverdes) குறிப்பிட் டார். இவை திறந்த குழுக்களாம். சில குழுக்கள் புதிய உறுப்பினரை அவ்வளவு எளிதாக ஏற்றுக்கொள்வதில்லை. மேசோனிக் (Masonic) குழு, இரகசியச் சங்கங்கள், பிற சமயத்தினரை மதம் மாறினாலும் ஏற்காத சமயக்குழுக்கள் முதலியவை இவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றை மூடிய குழுக்கள் எனலாம். நன்கு அமைக்கப்பட்ட குழுக்களெல் லாம், ஓரளவு மூடிய குழுக்கள்தாம் என்பதை நாம் கவ னிக்க வேண்டும்.

முதனிலைக்குழுக்களும் வழிநிலைக்குழுக்களும்

உறுப்பினர்களுக்கிடையேயுள்ள தொடர்பினை அடிப் படையாகக் கொண்டுகூலி(Colley)குழுக்களை முதனிலை வழி நிலைக் குழுக்களாகப் பிரித்தார். முதனிலைக் குழுவின் உறுப் பினர் நேரடியான முகம்புகு (face to face) தொடர்புள்ளவர். கிராமச் சமுதாயம், குடும்பம், ஒத்த வயதினர்க்குழு முதலி யவை முதனிலைக் குழுக்களாவன. முதனிலைக் குழுவின் உறுபினர் ஒருவரோடொருவர் நெருங்கிய தொடர்புடையவர் ஒருவரோடொருவர் ஒத்துழைப்பவர், ஒருவருக்கொருவர் எழுச்சிச் சார்புடையவர். வழிநிலைக் குழுவினருக்கிடையே நேரடித் தொடர்பு கிடையாது. அவர்கள் மறைமுகமாகவே ஒருவரையொருவர் பாதிக்கின்றனர். பல்வேறு உடம்படுப்பு வாயில்கள் மூலம் அவர்கள் செயல்புரிகின்றனர். அரசியல் கட்சிகள், தொழிலாளர் ஐக்கிய சங்கங்கள், தேசங்கள் முதலியவை வழிநிலைக் குழுக்களாம். இத்தகைய குழுக் களில் எழுச்சிப் பிணைப்புக்கள் இருப்பதில்லை; இருந்தாலும்; முதனிலைக் குழுக்களில் இருப்பதுபோல் அவ்வளவு இறுக்க மாக அமைவதில்லை.

முதனிலைக் குழுக்கள் இயற்கையாகவே அமைந்துவிடுகின்றன. அவற்றின் அமைப்பில் புறமுறைமை (formality) குறைவு. இக்குழுக்களின் பழக்கங்கள், உணர்ச்சிகள், ஒத்துணர்வுகள், சிறப்புப் பிறழ்வுகள் (idiosyncracies) முதலியவை பெரும்பாலும் அவற்றின் தலைவர், முக்கிய உறுப்பினர் ஆகியோரின் சொந்தப் பண்புகளால் அமைபவை. வழிநிலைக் குழுக்கள் தெரிந்து அமைக்கப்படுபவை குடும்பத்தில் வேலைப்பாகுபாடும், பொறுப்புப் பங்கீடும் பொதுவாக அனைவரும் தெரிந்து ஆய்வதால் அல்ல, இயற்கையாகவே அமைகின்றன. ஆனால் தொழிற் சங்கம் முதலிய வழிநிலைக் குழுக்களில் அலுவலர்களையும் தலைமை வரிசையையும் தீர்மானிப்பதற்குப் புறமுறையில் வரைந்த சங்க அமைப்பு ஒன்று உளது.

முதனிலைக் குழுக்கள் உளவியல் வன்மை மிக்கவை. தனியாள் சமூகத்தன்மை பெறுவதும், அவருடைய சீலமும் ஆளுமையும் உருவாவதும் இவற்றின் மூலம்தான். குடும்பம் சமுதாயம், ஒத்த வயதுக் குழு முதலிய குழுக்கள் தனியாளைப் பயிற்றுவிக்கும் நிலையங்கள் ஆவன. அவருடைய மனப்பான்மைகள், பழக்கங்கள், பொருத்தப்பட்டு இணக்கம், தன்னேக்கு (self-view), பற்றுக்கள், விழுமியங்கள் (valves) முதலியவற்றிற்கு அடிப்படையாவனவும் முதனிலைக் குழுக்கள்தாம். இவற்றில்தான் பண்பாட்டு வித்து கிடந்து முளைத்து விளைகிறது. முதனிலைக் குழுக்களின் உறுப்பினரிடத்து ஒருவர்பால் ஒருவருக்கு நம்பிக்கைஉண்டு. தாங்கள் அனைவரும் அடிப்படையில் சமமானவர் என்ற உறுதியும் உண்டு. இதனால் அவர்களுக்குள் அதிகப்படியான ஒத்துழைப்பு ஏற்படுகிறது. உறுப்பினருக்கிடையேயுள்ள தொடர்பு புறமுறை சாராததாகவும் நெருங்கியதாகவும் இருப்பதால் நடத்தையை நேரடியாகவும் திறமையுடனும் கட்டுப்படுத்தமுடிகிறது. இன்றியமையாத உளவியல் தேவைகளைக் கொண்டே குழு இயங்கக்கூடுமாதலால் சட்டங்களும், ஒழுங்கு முறைகளும் கொண்ட புதுமுறைக் கட்டுப்பாடுகள் இங்குத் தேவையில்லை.

அமைப்பு : (Organization)

சமூக வாழ்க்கை நாளடைவில் அமைக்கப்பெறும் தன்மையது. தனியாட்களுக்குப் பொதுத் தேவைகளும் பொதுக்கவர்ச்சிகளும் உள்ளமையே அமைப்பு ஏற்படக்

காரணமாகிறது. சிலவேளைகளில் அமைப்பு இயற்கையாகவும் நனவின்றியும் ஏற்படுகிறது; வேறு சில வேளைகளில் அமைப்பு நனவுடன் கூடிய நோக்கத்தால் தோன்றுகிறது. குடும்பமும், சமுதாயமும் முதல்வகையில் அமைபவை. திருச்சபை, அரசு, சங்கங்கள், களிக்குழுக்கள் முதலியன இரண்டாம் வகையில் அமைகின்றன. பல்வேறு வகையான இக் குழுக்களின் மூலம் உணவு, இனவிருத்தி, சிறுவர் கல்வி, தனியாளுக்கும் குழுவுக்கும் பாதுகாப்பு, உடம்படுப்பு, சமயம், தேவைப்படுவோருக்கு உதவி செய்தல், முதலிய அடிப்படைத் தேவைகள் நிறைவிக்கப்படுகின்றன.

தேவைகளும் அக்கறைகளும் பொதுவாக அமையும்போது அமைப்புக்கள் தோன்றுகின்றன என்று பார்த்தோம். தனியாட்களின் தேவைகள் ஒன்றேடொன்று பின்னிக் கொண்டிருப்பதாலும் அமைப்பு தோன்றலாம். இத்தகைய கூட்டு நோக்கங்கள் மக்களைப் பிணைக்கின்றன. எடுத்துக் காட்டாக, உணவும், உறையுள் போன்ற பொதுத் தேவைகளும், சமூகத்தை நிலைநிறுத்தலாகிய கூட்டுத் தேவையும் அமைப்பிற்கு அடிப்படையாகின்றன. சமூக வாழ்க்கை அமைப்பின் நோக்கத்தைப் பற்றி உறுப்பினர் அனைவரும் அறிந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. இத்தகைய நோக்கம் நனவுடன் கூடியும் அமையலாம், நனவின்றியும் அமையலாம், நோக்கம் யாதாயினும் சரி, அதை எய்தும் வகையில் உறுப்பினர் தம் நடத்தையைப் பொருத்திக் கொள்கின்றனர்; வேலையைப் பிரித்துக் கொள்கின்றனர். அவர்களுக்கிடையே சில தொடர்புகளும் ஏற்படுகின்றன. இத்தொடர்புகள் உட்படையாகவோ (implicit), வெளிப்படையாகவோ, அனைவராலும் அறியப்படுவன. இவ்வாறு சமூக வாழ்க்கை அமைக்கப்பெறுகிறது.

தனியாட்களின் அக்கறைகள் ஒன்றுவதாலும் அவர்கள் அமைப்பினை ஏற்படுத்திக் கொள்வதுண்டு. யாத்திரையர் பயண அமைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர்; வணிகர் சங்கங்களும், பொருள்கொள்வோர் சங்கங்களும் அமைக்கப்பெறுகின்றன; தொழிலாளர் சங்கங்கள் தோன்றுகின்றன. இத்தகைய அமைப்புக்களில் உள்ள உறுப்பினருக்குத் தனித்த அக்கறைகளும் உள்ளன; ஆனால் இவற்றையும் எய்துவதற்குக் கூட்டுச் செயல் தேவை என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். பொதுவான பற்றுக்களும், சமூகக் குறிக்கோண்மையும் (idealism) அமைப்புக்கள் ஏற்

படத் தூண்டலாகின்றன: கல்வியாளர் சங்கங்கள், சமூக நலக் குழுக்கள் முதலியவை இவ்வாறு தோன்றுகின்றன.

அமைப்புற்ற குழுக்களில் சில உறுப்பினர் திட்டம் வகுக்கின்றனர், கொள்கைகளைத் தீர்மானிக்கின்றனர். பிறர் அத்திட்டங்களைச் செயற்படுத்துகின்றனர். குழுக்கள் சிறியனவாகவும், அவற்றின் உறுப்பினர் அனைவரும் திறமையுடையவராகவும் இருந்தால் எல்லோரும் கொள்கையாக்குவதிலும், திட்டம் வகுப்பதிலும் பங்கெடுக்கக் கூடும். ஆனால் பெரிய குழுக்களில் இவ்வேலைகளைத் தகுந்தவர்களே செய்கிறார்கள் (அல்லது செய்யவேண்டும்). தலைமை இவ்வாறு தோன்றிச் சிறக்கிறது.

அமைப்பின் மூலம் பல நன்மைகள் விளைகின்றன. உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் உள்ள தனித்திறமை, அறிவு, ஆற்றல் முதலியவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்த அமைப்பு உதவுகிறது; ஒரே காரியத்தை இருவர் செய்வதைத் தடுக்க முடிகிறது; வீண்முயற்சி குறைகிறது; பல்வேறு விதமான முயற்சிகள் ஒரே திட்டத்தின் மூலம் இணைகின்றன. கூட்டு மனப்பான்மை விளைகிறது. ஆகையால் தனியாட்கள் தனித்து வேலை செய்வதைவிட கூட்டு நிலையில் நன்முக வேலை செய்கின்றனர்.

அமைப்பின் நிறுவனக் கூறுகள் (Institutional aspects of -Organization)

தொடர்ந்து நிலைநிற்கும் சமூகங்களில் அனுபவத்திலிருந்து சில உண்மைகள் தெரிகின்றன. சமூகம் நிலை நிற்கவேண்டுமானால் அவை சில செயற்கடன்கள் புரிய வேண்டும். இச்சமூகத்த (societal) செயற்புரிவுகளாவன (functions): உணவு ஈட்டல் அல்லது உற்பத்தி செய்தல், சமூகம் தொடர்ந்து நீடிப்பதற்குத் தேவையான இனவிருத்தி, பண்பாட்டுச் செல்வத்தைக் கடத்துதற்கும் இளைஞரைச் சமூக வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வதற்கும் வேண்டிய கல்வி, சமய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், பொது மக்கள் உடல்நலனைப் பாதுகாத்தல், உயிரையும் பொருளையும் காத்தல், திக்கற்றவர்களுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் உதவி செய்தல், பொழுதுபோக்கு முதலியன. இத்தகைய கூட்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக வாழ்க்கை குறிப்பிட்ட படிவங்களாக அமைகிறது. சமூகத்

தத்துவம் அல்லது குறிக்கோள் தொகுதி (Idology) உருவாகிறது. இதற்கேற்ப மக்கள் சில வாழ்க்கை நிலைமைகளை அனுபவிக்கின்றனர். சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்கின்றனர். இச்சமூக அமைப்புப் படிவங்கள் திடநிலைப் பட்டால் அவை சமூக நிறுவனங்கள் ஆகின்றன. திருமணம், குடும்பம், வீட்டுவளர்ப்பு, பள்ளிப்படிப்பு, புறமுறைச் சமயம், பொதுவேலைகள் முதலியவை நிறுவனங்களாம். நிறுவனங்கள் அமைவதால்தான் நடத்தை ஒருபடித்தாகிறது. சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தனியாளின் விடுதலை கட்டுப்படுத்தப் படுகிறது; சமூகத்தின் நீண்டகால நலனை எண்ணி ஒவ்வொருவரும் வகிக்கவேண்டிய சமூக அங்கங்களின் (roles) விளைவால் உறுப்பினருக்கிடையே தொடர்பு ஏற்படுகிறது. நிலைப்பட்ட சமூகத்தின் உறுப்பினர், தாம் ஏன் குறிப்பிட்ட வகையில் நடந்து கொள்கிறோம், என்பதை வினவுவதில்லை. முன்னோர் வகுத்த வழியே, அல்லது நிறுவனம் விதித்த வகையில் அவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

நிறுவன வாழ்க்கையில் மற்றுமொரு சிறப்புக்கூறு உளது. வயதுக்கும், பாலுக்கும், மரபுவழி ஏற்றத்திற்கும் (hereditary status) ஏற்ப ஒவ்வொரு உறுப்பினரும் வகிக்க வேண்டிய அங்கத்திற்கிணங்க அவர்கள் தெரியாமலும் தெரிந்தும் பயிற்றுவிக்கப் படுகிறார்கள். புறமுறைக் கல்வியினால் தான் இப்பயிற்சி ஏற்படவேண்டும் என்பதல்ல. குழு வாழ்க்கையில் பங்கு எடுப்பதாலேயே உறுப்பினர் இப்பயிற்சி பெறக்கூடும். எடுத்துக் காட்டாக, பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு முதலிய நிகழ்ச்சிகளோடு ஒட்டிக் குடும்பத்தில் நடக்கும் எல்லாச் செயல்களையும் சடங்குகளையும் குழந்தைகள் பார்க்கின்றனர்; அவற்றில் பங்கும் கொள்கின்றனர். பள்ளியிலும், கல்லூரியிலும் மாணவர் பல்வேறு செயல்களில் பங்கு கொள்கின்றனர்; இச்செயல்களும் கல்லூரி பள்ளி வாழ்க்கைகளின் இன்றியமையாத பாகங்கள் ஆகின்றன.

அமைப்பின் காரணிகள் :

சில குழுக்கள் அமைப்பில் குறைந்தவை. வேறு சில மிகையாக அமைக்கப் பெற்றவை. படை, மருத்துவச்சாலை, தீயணைக்கும் படை, ஆயுட் சேமநிதிச் சங்கம் முதலியவை மிகையாக அமைக்கப்பெற்ற குழுக்கள். இத்தகைய

அமைப்பில் உறுப்பினருக்கிடையேயுள்ள தொடர்பு திட்ட வட்டமாக வரையறுக்கப்பட்டது, தரப்படுத்தப்பட்டது, உறுப்பினர் அனைவராலும் ஏற்கப்படுவது. இத்தகைய மிகநிலை அமைப்பின் காரணிகளைப் பற்றி மக்டூகல் குழு மனம் என்ற நூலில் கூறியுள்ளார். அவையாவன :

1. குழுவானது புறமுறைத்தொடர்ச்சி **அல்லது பொருள் வயத்தொடர்ச்சி** (formal or material continuity) உடையதாயிருக்கவேண்டும். சில குழுக்களில் பழைய உறுப்பினர் நீங்கிப் புதிய உறுப்பினர் சேர்ந்துகொண்டே இருப்பார்கள். ஆனால் உறுப்பினருக் கிடையேயுள்ள தொடர்பு தரப்பட்ட முறையிலேயே இருக்கும். இத்தகைய குழுவானது புறமுறைத் தொடர்ச்சியுள்ளது என்னலாம். சில குழுக்களில் அதே உறுப்பினர் தொடர்ந்து நிலைப்பதுண்டு. இது பொருள்வயத் தொடர்ச்சி எனப்படும். உரையாடற் குழுக்களும் தனிப்பட்ட களிக் குழுக்களும் அவற்றிலுள்ள உறுப்பினர் ஒன்றுகூடும் வசதி உள்ளவரை இருந்து, அவர்கள் பிரிந்தபின் மாய்வதுண்டு. இவை பொருள்வயத் தொடர்ச்சியுள்ள குழுக்கள். இதனெதிர், கல்லூரிகளும் பாராளுமன்றங்களும் புறமுறைத் தொடர்ச்சி உடையவை. இவற்றின் உறுப்பினர் மாறுகிறார்கள்; ஆனால் அவற்றின் வடிவமும் செயலும் மாறுமல் நிலைக்கின்றன.

2. குழுவின் உறுப்பினருக்குத் தாம் ஒன்று சேர்ந்ததன் **நோக்கத்தைப் பற்றிய தெளிவான எண்ணம்** தேவை. தாங்கள் செய்யவேண்டிய செயல், தம் ஆற்றல், பொறுப்பு முதலியவற்றைப் பற்றி அவர்கள் அறியவேண்டும். உறுப்பினர்களுக்குக் குழு செய்யவேண்டியவற்றைப் பற்றித் தெரியாவிட்டால், அல்லது தம் ஆற்றலைப்பற்றித் தவருன கருத்துக்கள் இருந்தால், அக்குழு நன்கு இணைந்ததாக, நன்கு அமைந்ததாக இருக்கமுடியாது.

3. ஒருகுழுவுக்கும்மற்றொருகுழுவுக்கும்இடையேயுள்ள **இடைவினையும்** குழுஅமைப்பிற்கு உதவுகிறது. இத்தகைய இடைவினை மூலம் குழுவினர் தம்நிலை என்ன என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுகிறார்கள்; இதன் மூலம் குழுப் பற்று வளர்கிறது. ஒரு தேசம் போரில் ஈடுபடும்போது இத்தகைய குழுப்பற்றுக்கள் வளர்வதைக் காணலாம்.

4. குழுவிற்கு மரபு இருத்தல் வேண்டும். தனியாட்கள் புதிய வழிகள் வகுப்பதையும், தம் சொந்தக் கவர்ச்சி

கட்கேற்ப மாறுதல்கள் அமைப்பதையும் மரபுகள் தடுக்கின்றன.

5. ஒவ்வொரு உறுப்பினரும் ஏற்கவேண்டிய பங்கைத் தெளிவாக வரையறுக்கவேண்டும். இதன் மூலம் அலுவல்கள் தனித்துறைவழிச் சிறக்கின்றன.

குழு ஒற்றுமைக் காரணிகள் :

குழு ஒற்றுமையை நோக்குநிலையாகக் கொண்டும் இக்காரணிகளை ஆராயலாம். இதன் மூலம் நாம் அறிவன : கவர்ச்சிகளும் நோக்கங்களும் பொதுவாதலாலும், மனப்பான்மைகளும், பற்றுக்களும் குழுத்தரங்களும் ஒத்தலினாலுமே குழு ஒற்றுமைப்படுகிறது. இவற்றின் மூலம் நடத்தையும் நோக்கும் ஒற்றுமைப்படுகின்றன. இவ் ஒருமையே கூட்டுறவு நடத்தைக்கு அடிப்படையாகிறது. பொது நோக்கங்கள் தெளிவாக வரையறுக்கப்படுவது குழு ஒற்றுமைக்கு மற்றொரு காரணியாகும்; இத்தகைய வரையறுப்பின் மூலம் ஒவ்வொரு உறுப்பினரும் குழுவில் தம் பங்கு யாது, அப்பங்கு ஏன் தமக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று புரிந்துகொள்ளக்கூடும். குழு ஒன்றுமைக்கு வேறுசில காரணிகளும் உள்ளன. உறுப்பினருக்குக் குழு உணர்ச்சி வேண்டும். அவர்கள் அக்குழுவின் உறுப்பினராக இருப்பதைப் பற்றிப் பெருமை கொள்ளவேண்டும். குழுவின்பால் அவர்கள் மதிப்புக் கொண்டிருக்கவேண்டும். குழுப் பெருமை வாயிலாகத் தோழமையுணர்ச்சி பிறக்கிறது. இதிலிருந்து பற்றுறுதி தோன்றித் தனியாட்களை எழுச்சி முறையில் பிணைக்கிறது. கடமையுணர்ச்சியும் குழுவிற்காகத் தியாகம் செய்யும் விருப்பமும் இதினின்று பிறக்கின்றன. தம் குழுவிற்கும், பிற குழுக்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமை தெரிவதும் நல்லது. இதன் மூலம் நாமெனும் உணர்ச்சி வலுவடைகிறது. இரு குழுக்களிடையே போட்டி அல்லது எதிர்ப்பு இருந்தால் இவ்வுணர்ச்சி வலுக்கிறது. குழு உணர்ச்சியும் குழுப்பற்றுறுதியும் செயற்படுகின்றன. இத்தகைய போட்டி ஏற்படும் பொழுது, குழுவினுள் குடிகொண்டிருக்கும் சமூக-எதிர் (unsocial) மனவெழுச்சிகள் இடம் பெயர்கின்றன. தங்கள் எதிரிகளை வெறுப்பதால் குழுவின் உறுப்பினர் ஒருவரையொருவர் விரும்ப முற்படுகின்றனர்.

தலைமையும் குழு ஒற்றுமைக்கு ஒரு காரணியாகும். குழுவின் உறுப்பினருடைய சக்திகளுக்குப் பொதுவான நெறியைக் காட்டுவதும் குழுவினுள்ளேயுள்ள வேற்றுமை களைச் சந்து செய்வதும் தலைமைப் பண்பாகும்.

கிராமச் சமுதாயம் – ஒரு முதனிலைக் குழு :

சமூக உளவியல் இலக்கியத்தில் சமுதாயம் என்னும் சொல் இயற்கையாக எழுந்ததொரு குழுவைக் குறிக்கும். நனவொடு கூடி, வேண்டுமென்று புற ஒழுங்கு முறையில் அமைத்த சங்கங்கள் (associations) போன்ற குழக்களி னின்றும் இது வேறுபட்டது. சமுதாயம் என்பது ஒரு சிறிய முகம்புகு (face-to-face group) குழு; ஒட்டிய நிலப் பரப்பில் வாழ்வது; வாழ வழிசெய்தல், வாழ்க் கையையும் உரிமைகளையும் பாதுகாத்தல், கல்வி, பொழுது போக்கு, சமயம், வறியவருக்கு உதவுதல் முதலிய வாழ்க் கைத் தேவைகளை நிறைவேற்ற ஒன்றுகச் செயல்புரிவது. சமுதாயம் ஒரே தொகுதியாகச் செயல்புரிகிறது. தனி உறுப்பினர் தம் வாழ்க்கை முழுவதையும் சமுதாயத்தில் வாழ்கிறார். அவருடைய சமூகத் தொடர்புகளெல்லாம் அதனுள்ளே ஏற்படுகின்றன. சமுதாயத்தின் வாழ்க்கைப் படிவங்கள் அவருடைய உயிரியல் தேவைகளையும் உள வியல் தேவைகளையும் நிறைவேற்றுகின்றன. எடுத்துக் காட்டாக, கிராமச் சமுதாயத்தினர் தம்முள்ளேயே திரு மணமும் செய்துகொள்கின்றனர். அவர்களுடைய நண் பர்களும் அச்சமுதாயத்தினரே. சுருங்கக் கூறின், சமுதா யம் ஒரு முற்று அடங்கற் குழுவாகும். (totally inclusive group)

உளவியல் முறையில் பார்த்தால், உறுப்பினரின் நடத்தை சொந்தக் கவர்ச்சிகளால் ஆவதை விட, குழு மனப்பான்மைகளாலும், குழுப் பற்றுக்களாலும் அதிகமா கக் கட்டுப்படுகிறது. நகரத்தின் தொழில்மய வாழ்க்கை யால் பாதிக்கப்படாத கிராமங்களில் சமுதாய வாழ்க்கைப் படிவத்தை இன்னும் காணலாம். இக்கிராமச் சமுதாயங் கள் இயற்கையாக வளர்ந்தவை, சமுதாய ஒப்பந்தத்தால் ஏற்பட்டவையல்ல. அவற்றின் வாழ்க்கை அமைவுடையது. ஆனால் இந்த அமைப்பானது வேண்டுமென்ற, தெரிந்த திட்டத்தால் வந்ததன்று. சுற்றத்தின் ஒட்டும், தொழிலின் இடைச் சார்பும் சமுதாயத்தினரை ஒன்றுகப் பிணைக்கின்

றன. கிராமச் சமுதாயத்தின் உறுப்பினர் ஒருவரோடொ ருவர் நேரடியான, நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். இதன்மூலம் மன்வெழுச்சிசார்ந்த பிணைப்பு ஏற்படுகிறது. கிராமச் சமுதாயத்தினரிடையே திடமான ஒற்றுமை உணர்ச்சி உண்டு. வெளியார் ஊருக்கு வந்தால் அவர் ஊரில் வாழ்க்கைத் தொடர்புகளைக் கெடுத்து விடுவாரோ என்று சந்தேகப்படுகிறார்கள். கிராமச் சமுதாயத்தின் நெருங்கிய உறவைப் பலவகைகளில் காணலாம். வயதான தொழிலாளர் ஒருவரை ஊரிலுள்ள செல்வந்தர் மகனும் 'தாத்தா' என்றுதான் அழைக்கிறான். தொழில் வேற்று மைகளைப் பாராது எல்லோரும் ஒருவருக்கொருவர் துணை புரிகிறார்கள். ஒரு குடும்பத்தில் கலியாணம் நடந்தால் எல்லோரும் வந்து உதவி செய்கிறார்கள். பொதுவாகத் திருமணத் தொடர்புகள் பத்து மைல் சுற்றளவிற்குள்ளேயே நடைபெறுகின்றன.

சமுதாயத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் மற்றவர் செய் யும்காரியங்களை அன்பும் ஆராய்வும் கலந்துநோக்குகிறார்கள். நேரடியாகவும் புறமுறையின்றியும் தங்கள் பாராட்டையும் குறைகளையும் உடனடியாகத் தெரிவிக்கிறார்கள். ஆகையால் சமுதாயம் மிகவன்மையுள்ளதோர் சமூகக் கட்டுப்பாட்டுக் கருவியாகிறது. சமுதாயத்தின் வைத்துக்கோடல்கள், வழக் கங்கள், செந்நிலைகள் (mores) முதலியவற்றை மீறி உறுப் பினர் எதுவும் செய்யத் துணிவதில்லை. அப்படிச் செய் தால் அவர்கள் புறம்பாக்கப்படுவார்கள், பட்டினிக்குட்படு வார்கள், உடல் வதை கூட செய்யப்படுவார்கள்.

சமுதாய வாழ்க்கையின் பண்புக் கூறுகளை ஆராய்ந்த வர்கள் சமுதாயத்தை ஓர் உயிரிக்கு ஒப்பிட்டுள்ளனர். சிலர் இந்த உவமையை விரித்து, சமுதாயத்திலுள்ள தனி யாட்கள் உயிரியின் உயிரணுக்களைப் போன்றவர்கள், உயிரியைப் போலவே சமுதாயமும் மாறும், சூழ்நிலைக் கேற்ப அது தன்னைப் பொருத்திக் கொள்கிறது, உடலின் செயல்களைப் போலவே சமூகப் பிரச்சினைகளும் இடைத் தொடர்புடையவை என்று கூறியுள்ளனர். ஆனால் இந்த உவமையை வெகுதூரம் கொண்டு செல்லக் கூடாது. உடலின் உயிரணுக்களுக்குப் பூதநிலைத் தொடுமை (Physical Contact) உண்டு ; சமுதாய உறுப்பினரின் தொடர்பு இத்தகையதன்று. இரண்டாவதாக, உடலின் உயிரணுக்களில் தான்தொடங்காற்றலை (initiative) நாம்

காண்பதில்லை. சமுதாய உறுப்பினரிடையே இப்பண்பைக் காண்கிறோம். மூன்றாவதாக, சமுதாயத்தில் போராடும் உட்குழுக்கள் தோன்றுவதுண்டு; அப்பொழுது சில தனியாட்களை அடக்குவதன் மூலம் சமுதாய ஒற்றுமை நிலை நிறுத்தப்படுகிறது.

தொகுத்துக் கூறின், கிராமச் சமுதாயம் ஒரு முதனிலைக் குழு; ஒப்புமையாக நிலையானது; உறுப்பினரின் எல்லாக் கவர்ச்சிகளையும் தொடர்புகளையும் உள்ளடக்குவது. அது ஒரு மூடியகுழு. வெளியார் வந்து குழுவின் வாழ்க்கைப் படிவத்தைக் கலத்தால் குழுவினர் அதைப் பொறுப்பதில்லை. வெளியார் வருவதானால் அடிமைகளாகவோ, விருந்தினராகவோ தான் வரமுடியும். ஃபூடின் (Dr. Boodin) சமுதாயங்களை நாகரிகத்தின் உண்மையான அற அலகுகள் (True moral units of civilization) என்று கூறியுள்ளார். இவற்றின் மூலம் தான் தனியாளின் நடத்தை நேரடியாகக் கட்டுப்படுத்தப்படுகிறது, அவருடைய பற்றுக்கள் அமைகின்றன, குழுத்தரங்களுக்கு ஒத்துப் போகும் மனப்பான்மை உண்டாகிறது.

ஆனால் இத்தகைய சமுதாயம் விரைவாக மறைந்து வருகிறது. அதன் அலுவல்களையும் (functions) இழந்து வருகிறது. அண்டைப் பகுதிகளோடு அதிகத் தொடர்பு ஏற்பட்டுள்ளதே இதற்குக் காரணம். மனிதன் இயங்கும் எல்லை விரிவடைந்துள்ளது. அவன் உள்ளத்தில் புதிய விழுமியங்கள் (Values) குடி கொண்டுள்ளன. வியாபாரமும் தொழிலும் மையப்பட்டுள்ளன. பொருளாதார அரசியல் மாறுதல்கள் பலவற்றின் விளைவாக, சமூகத்தின் படிவம் (pattern) மாறிவருகிறது. மக்களுக்குப் பல்வேறு வகையான கவர்ச்சிகள் உள்ளன. இவற்றையெல்லாம் பழைய சமுதாய வாழ்க்கை முறையில் நிறைவித்துக் கொள்ள முடியாது. இதற்காக மக்கள் வெவ்வேறு வகையான சங்கங்கள் அமைத்துக்கொள்கின்றனர்.

சங்கங்கள் (Associations) சங்கங்களுக்கும், சமுதாயங்களுக்கும் உள்ள வேற்றுமையை டானிஸ் (Tonnies) பின் வருமாறு விளக்குகிறார். சமுதாயங்கள் இயற்கையாக அமைந்த குழுக்கள் என்று பார்த்தோம். ஆனால் சங்கங்கள் பெரும்பாலும் வேண்டுமென்றே அமைத்தவை. சங்கங்களுக்கு குறிப்பிட்ட நோக்கங்களும் முடிவுகளும் உண்டு.

சங்கம் ஒரு அக்கறை அறிந்த குழு (interest - conscious group.) அவ் அக்கறைகளைப் பெறுவதற்காக உறுப்பினர் சில முறைகளைத் தெரிந்து கையாளுகிறார்கள். சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் உள்ளன. சங்க உறுப்பினருடைய நடத்தை புறமுறையில் (formal) அமைந்தது. உரிமைகளையும் எதிர் - உரிமைகளையும் (counter-claims) பற்றி அவர்களுக்குத் தெரியும். போட்டி, பேரம் பேசுதல், இரு வழி விட்டுக் கொடுப்பு அனைத்தும் சங்கத்தில் உள்ளன. இங்கு தொடர்புகள் புறமுறை நீங்கி நட்புறவால் அமைவது குறைவு, பெரும்பாலும் ஒப்பந்த முறையிலே (contractual) அமைகின்றன. மனப்பான்மைகளையும் பற்றுக்களையும்விட அக்கறைகளே உறுப்பினரின் நடத்தையை ஆளுகின்றன. சங்கங்கள் சற்று அடங்கற் குழுக்கள், (partially inclusive groups) சமுதாயங்கள் முற்று அடங்கற்குழுகள் என்னும் வேற்றுமையை மக்கைவர் (Maclver) எடுத்துக் கூறியுள்ளார். சமூகப் படிமலர்ச்சி முறையில் மனிதனுடைய அக்கறைகள் பல்திறப்படுகின்றன. ஆகையால் வாழ்க்கையின் சமுதாயப்படிவம் மாய்ந்து சங்கப்படிவம் தோன்றுகிறது.

வகுப்புக்கள் (classes)

ஒவ்வொரு சமூகத்திலும் பல்வேறு வகுப்புக்கள் உள்ளன. செல்வர்களும் இடைநிலை வகுப்பினரும் வறியவர்களும் சமூகத்தில் உள்ளனர். தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமூக வகுப்புக்களும் உள்ளன. ஒரு சமூக வகுப்பின் உறுப்பினர் தாம் அனைவரும் சமமானவர் என்றும், வேறு வகுப்பில் உள்ளவர்கள் உயர்ந்தவர்கள் அல்லது தாழ்ந்தவர்கள் என்றும் எண்ணுகிறார்கள். புறவய (Objective) நியதிகளைக் கொண்டும், அகவய (Subjective) நியதிகளைக் கொண்டும் வகுப்புக்களை வரையறுக்கலாம். பொருளாதார ஏற்றமும் தொழில் ஒப்புமையும் புறவய நியதிகள், ஒரு தனி வகுப்பிற்குத் தாம் உரியவர் என்ற உணர்ச்சியும், அறிவும் அகவயநியதிகள். உறுப்பினருக்குள்ளே பொதுவான விழுமியத் தொகுதி (Common set of values) உடைமையும் வகுப்பை வரையறுக்க உதவும் மற்றொரு நியதியாகும்.

இந்த நியதிகளை நம் நாட்டிற்கும் பொருத்தி இந்தியாவில் இப்பொழுது வகுப்பு அமைப்பு உண்டா என்று கேட்

கலாம். இதற்கு உண்டென்றும் பதிலளிக்கலாம், இல்லையென்றும் பதிலிறுக்கலாம். நமது பதில் நாம் எந்த நியதியைப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தது. இந்தியாவில் செல்வர்கள் உளர், இடைநிலை வகுப்பார் உளர், வறியர்களும் உளர். மூவகுப்பினரும் தம் நிலையை உணர்ந்தவர்கள். ஆனால் முன்னைக் காலத்தைப் போலல்லாது இன்று அனைவரும் ஏறக்குறைய ஒரே விழுமியத் தொகுதியைக் கொள்ளுகிறார்கள். எடுத்துக்காட்டாக, முற்காலத்தில் பிராமணர்கள் பொருளைவிட அறிவையே விழுமியதாகக் கொண்டார்கள். ஆனால் இன்று அவர்கள் பணத்தை விழுமியதாகக் கொண்டு அதற்காகப் பிற வகுப்பாரோடு போட்டியிடுகிறார்கள். பிராமணர்கள் அறிவை அன்று மதித்தது போல இன்று அனைவரும் அறிவை விழுப்பொருளாகக் கொள்கிறார்கள்.* தொழில் முறையிலும் வகுப்பு வேற்றுமைகள் மறைந்து வருகின்றன. இன்று யாரும் எந்தத் தொழிலும் செய்யலாம். ஆனால் வகுப்பு உணர்ச்சி இன்றும் இருக்கிறது. இல்லையென்றால் பிராமணர்கள் மாநாடு கூடி தாங்கள் தம் 'பிராமணத்துவத்தைக்' காப்பதற்காக பிற தொழில்களை (காலணி செய்தல் பால் விற்பனைத் தொழில் முதலியவற்றையும் கூட) செய்யத் தயங்க வேண்டியதில்லை என்று ஏன் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும் !

சாதிகள் (Castes)

குழு வேற்றுமைகள் இறுகும்போது சாதிகள் தோன்றுகின்றன. நம் நாட்டில் ஒரு சாதியார் பிற சாதியாருடன் விருந்துண்ணவும், திருமணக் கலப்புக் கொள்ளவும் மறுப்பது இந்த இறுக்கத்தைக் (rigidity) காட்டுகிறது. வெவ்வேறு சாதியர் உடனிருந்து விருந்துண்ணத் தடை ஏற்பட்டது, ஒருவேளை புறத்தூய்மை காரணமாக இருக்கலாம். சைவ உணவு உண்டு 'துப்புரவான' தொழில் புரிபவர், தோட்டிகளையும், புலால் உண்ணும் தோல் தொழிலாளரையும் சற்று தொலைவிலேயே வைத்திருக்க விரும்பலாம். இத்தகைய துப்புரவு நோக்கம் இவ்வேறுபாடுகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது என்பதைப் பின்வரும் உண்மைகளாலும் காணலாம்.[I] 'மேல் சாதியினர்' தாழ்ந்த வகுப்பினருடன் சமைக்காத உணவைப் பகிர்ந்துகொள்ள மறுப்பதில்லை. சமைத்த உணவையே அவர்கள் இவ்வாறு பகிர்ந்து

★ தமிழ்நாட்டில் அறிவு ஒரு சாதியாருக்குத்தான் சொந்தம் என்ற கட்டுப்பாடு என்றும் இருந்ததாகத் தெரியவில்லை.

கொள்வதில்லை. இரண்டாவதாக, சமூகச் சமத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்ளும் படித்த உயர்சாதியினர் களிக் குழுவிலோ, கல்லூரி உணவு விடுதியிலோ பிறரோடு சேர்ந்து உண்ண மறுப்பதில்லை. ஆனால் தாழ்ந்த சாதியினர் வீடு துப்புரவற்ற காட்சியளித்தால் அவரது வீட்டில் சாப்பிட மறுக்கிறார்.

இந்தியாவில் முதலில் நிறமும் (வருணம்), இனமும், தொழிலும் வகுப்பு வேற்றுமைக்கு அடிப்படைகளாக அமைந்தன. இந்தியாவின் கருநிறப் பழங்குடிகள், திராவிடர், திபெத்திலிருந்து வந்த மஞ்சள் நிற மங்கோலியர், பின் நாட்டின்மேற் படையெடுத்துவந்து இங்கேயே தங்கி விட்ட ஆரியர், கிரேக்கர், பாரசீகர் ஆகியவர் தனித்தனி வகுப்புக்களாக அமைந்தனர். அவர்கள் ஒரு சிக்கலான சமூகத்தின் உட்கூறுகளாக ஒருவருக்கொருவர் அருகில் வாழ்கிறார்கள். ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனிப் பண்பாடு உண்டு. அக்குழுக்களுக்கிடையேயுள்ள தொழில் வேற்றுமை சாதி வேற்றுமைக்கு ஆதாரமானது. நாளடைவில் நிறத்தால் வேறுபட்ட குழுக்களிடையேயுள்ள பண்பாட்டு வேற்றுமையும் அக்குழுக்களுக்குள்ளே யுள்ள தொழில் வேற்றுமையும் சேர்ந்ததால் இறுக்கலான விலக்கல் முறை (exclusion) ஏற்பட்டு வகுப்புக்களுக்கிடையே சமூகத் தொலைவு (social distance) தோன்றியது. (இவ் விலக்கல்முறை அலுவல் சார்ந்தது (functional); வெறுப்பினாலோ, முற்சார்பினாலோ ஏற்பட்டதன்று. இதனால்தான் இந்தியச் சாதிமுறை விறைப்பு (tension) இன்றிப் பல நூற்றாண்டுகள் இருந்து வந்துள்ளது). இவ்வாறு பண்பாட்டிலும் தொழிலிலும் வேறுபட்ட குழுக்கள் கலந்து மணம்செய்து கொள்ள விரும்பவில்லை. கடந்த சில நூற்றாண்டுகளில் மேலும் பல கிளைச்சாதிகள் ஏற்பட்டுள்ளன. காத்திரி சாதியில் ஃபாஜாஜ் என்னும் கிளைச்சாதி தோன்றியுள்ளது. காத்திரிகளுள்ளும், ஃபனியருள்ளும் ஃ'காந்தி' என்னும் சாதி தோன்றியது. கர்ஹத பிராமணர் நிலப்பரப்பு அடிப்படையில் தோன்றிய கிளைச்சாதியினர்.

சாதி என்பது இந்தியாவில்மட்டும் நிகழ்வதொன்றன்று. அதனை உலகெங்கும் காணலாம். உடன் உண்ணத்தடையும், கலப்பு மணத்தடையும்சாதியின் அறிகுறிகள் என்று கொண்டால் முஸ்லீம்களிடையும் சாதியைக் காணலாம். சையதர், மோகுவர், பட்டாணியர், ஷெய்க்கர் ஆகியோர் தம்தம் குழுக்

களைப் பற்றிப் பெருமை கொள்வதுண்டு. அவர்கள் பிற குழுக்களோடு கலப்பு மணம் செய்ய விரும்புவதில்லை. அவர்களுக்குள்ளும் காமின்கள் (கீழ்ப்பிறப்பினர்) என்று கூறப்படுபவர் உளர். இவர்களுக்கு நில உடைமை உரிமை கிடையாது.[3]

மேல்நாடுகளிலும் நிறவேறுபாடு என்ற வடிவத்தில் சாதியைக் காணலாம். தென் அமெரிக்காவில் முதலில் நீக்ரோக்கள் கடினக் கழிப்பதற்காக வேலை செய்யச் சென்றவர்கள். பின் அவர்கள் சட்டத்தின்படி அடிமைகளானார்கள். இவ்வாறு அங்கும் சாதிமுறை வளர்ந்துள்ளது. நீக்ரோக்கள் வெள்ளையரை மணம் செய்து கொள்ளமுடியாது ; அவர்களோடு நெருங்கிய சமூகத் தொடர்பு கொள்ளமுடியாது ; வெள்ளையர்முன் தம்மைத் தாழ்வாகத் கருதிக் கொள்ள வேண்டியிருக்கிறது. நீக்ரோக்களுக்கு உரிமைகளும் வாய்ப்புக்களும் மிகக்குறைவு. அமெரிக்கச் சாதிமுறையை ஆதரிக்கச் சில கோட்பாடுகளும் எழுந்துள்ளன. நீக்ரோ இனம் இயல்பாகவே தாழ்ந்தது, உயர்ந்த பண்பாட்டு நிலையை அடையக் கூடாதது, நீக்ரோக்களும் வெள்ளையரும் கலப்பு மணம் செய்தால் வெள்ளையருடைய பண்பாடும் வாழ்க்கையும் குலைந்துவிடும் என்றெல்லாம் கூறியுள்ளனர்.

இந்தியச் சாதி முறையும், பண்பாட்டு வேற்றுமைகளினாலும் தொழின்முறை வேற்றுமைகளினாலும் மட்டும் தோன்றி, பொருளாதார வேற்றுமைகளையும் பண்பாட்டு வேற்றுமைகளையும் மட்டும் காட்டுவதாக அமைந்ததனால் அதில் தீது ஒன்றும் இல்லை. அது உழைப்பைப் பங்கிட்டுக் கொள்ளும் ஒரு சாதனம் ஆகும். ஒவ்வொரு குழுவும் ஒரு குறிப்பிட்ட வகையில் நன்கு வளர அதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கும். சாதிகள் ஒருவரையொருவர் பொறுக்க, நம்ப, பாராட்ட இதில் வாய்ப்பு இருந்தது. ஒவ்வொரு சாதிக்கும், சட்டங்கள், கட்டுப்பாடுகள், பழக்கங்கள், சமயநம்பிக்கைகள் இருந்தன. ஒவ்வொரு சாதிக்கும் சாதிப் பெருமை இருந்தது. ஆகையால் குழுஇடைத் தொடர்பைப் பொறுத்தவரை சாதிமுறை இந்திய மக்களை ஒரு பன்முகச் சமூகத்தின் (multiple society) உட்கூறுகளாக, குழுப் பூசலின்றி வாழ வழி செய்தது.

சமூக அடுக்கமைப்பு(Social Stratification)

சமூகத்தில் பல காரணங்களால் அடுக்கமைப்பு ஏற்படுகிறது. வென்றவர்கள் தோற்றவர்களைத் தாழ்த்தித் தம்

உயர்வை நிலைநிறுத்த முயல்கிறார்கள். தொழில்களும் மரபு வழித் தொடர்ந்து வருகின்றன. ஒரு தொழில் வகுப்பினர் வேறு தொழில் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. தொழில் தொடர்ச்சியை நிலைநிறுத்தும் பொருட்டு கலப்புமணம் தடுக்கப்படுகிறது. தொழில்கள், 'உயர்ந்தவை' 'தாழ்ந்தவை' என்று பிரிக்கப்படுகின்றன. ஒருவருடைய சமூக ஏற்றம் அவருடைய தொழிலால் தீர்மானிக்கப்படுகிறது.

இத்தகைய மேல்-கீழ் வேற்றுமையை எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டு, சாதி வகுப்புக்களுக்கிடையேயுள்ள நடத்தையையும் அதற்கேற்ப அமைத்துக் கொண்டதால் சமூக அடுக்கமைப்பு உண்டானதாகும். இத்தகைய சமூக அடுக்கமைப்புக்கு இந்தியா சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆதிகாலத்தில் இந்தியாவின்மேல் படையெடுத்துப் பல பகுதிகளை வென்று இங்குத் தங்கி விட்ட மக்களைத் தோற்றவர்கள் உயர்ந்தவர்களாக மதித்து, அதற்கேற்ப நடந்து கொண்டார்கள். மக்கள் இடம் பெயர்ந்து வேற்றிடத்தில் குடியேறி வாழ்ந்ததுமுண்டு. இப்படி இடம் பெயர்ந்தவர்கள் தங்கள் பண்பாட்டுத் தனித் தன்மையையும் தங்கள் சொந்தத் தொழிலையும் மாற்றிக் கொள்ளவில்லை. இதன் மூலம் ஒரே நிலப்பரப்பில் தொழிலாலும் பண்பாட்டாலும் வேறுபட்ட பல குழுக்கள் வாழ நேர்ந்தது. நாளடைவில் சில தொழில்கள் உயர்ந்தனவென்றும் வேறு சில தாழ்ந்தனவென்றும் மக்கள் கருதலாயினர்.

இப்படி அடுக்கமைந்த சமூகத்தில் பல தீய வழக்கங்கள் தோன்றுதல் இயற்கையே. இந்தியாவிலும் இப்படியே நடந்தது. தாழ்ந்த வகுப்பினர் இழிந்த நிலையில் இருத்தப் பட்டனர். நெடுங்காலம் அவர்களுக்கு முன்னேறும் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டதால் அவர்கள் தாங்கள் இதைவிட வேருன, உயர்ந்த வாழ்க்கை வாழமுடியும் என்றுகூட எண்ணிப் பார்க்க முடியாத நிலைக்கு வந்துவிட்டனர். "புறச்சாதியினர் (outcastes) பொதுவாகத் தம் இழிநிலையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. தாங்கள் உயரமுடியும் என்று அவர்கள் நம்புவதில்லை. நாம் தாழ்ந்தவர், நாம் ஏன் சுத்தமாக இருக்கவேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். தாங்கள் பிறரை நம்பியே வாழவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். பிறரைச் சார்ந்தே வாழவேண்டுமென்றே கடவுள் தங்களைப் படைத்தார் என்று அவர்கள் நினைக்கிறார்கள்" என்று ஃபிலிப்ஸ் கூறியுள்ளார்.

அடுக்கமைந்த சமூகத்தில் உயர் வகுப்பினர் தம் உயர்வை நிலைநிறுத்தப் பல வழிகளைக் கையாளுகிறார்கள். அவர்கள் கலப்பு மணங்களைத் தடுக்கிறார்கள்; கீழ் வகுப்பினருக்குக் குறைந்த சம்பளம் கொடுத்து அவர்கள் பொருளாதார நிலையைக் குறைக்கிறார்கள்; தாழ்ந்த வகுப்பினர் செய்யும் செயல்களைத் தம் வகுப்பினர் செய்யக் கூடாதென்று தடுக்கிறார்கள்; தாழ்ந்தவகுப்பினர் உயர்ந்த வகுப்பினரைப் போல் நடந்து கொள்ளக்கூடாது என்று விதிக்கிறார்கள்.

மனு என்னும் பண்டைய இந்தியப் பிராமண நீதி நூலார் வகுத்துள்ளவிதிகளைப் பார்த்தால் இது தெற்றென விளங்கும். "சண்டாளரும் சுவப்பச்சரும் நகரத்திற்கு வெளியின்தான் தங்கவேண்டும். அவர்கள் முழுமையான பாத்திரங்களைப் பயன்படுத்தக்கூடாது. இறந்தவர்களின் ஆடைகளையே அவர்கள் அணிந்துகொள்ள வேண்டும். துருப்பிடித்த இரும்பே அவர்களுக்கு அணிகலனுக வேண்டும். அவர்களுக்கு உடைந்த பானைத் துண்டிலேயே உணவு அளிக்க வேண்டும். கையால் கொடுக்கலாகாது. இரவில் அவர்கள் நகரத்திற்குள் நடமாடலாகாது".

தாழ்த்தப்பட்ட மக்கள் துப்புரவற்றவர்கள் என்ற எண்ணத்தால் அவர்கள் இப்படி விதித்தனர்போலும். ஆனல் மேல் வகுப்பினர் அவர்களுக்கு நன்முறையைக் கற்பித்து அவர்களை முன்னேற்ற எதுவும்செய்யவில்லை. கீழ்ச் சாதியினர் கற்பதையும் பிராமணர் தடுத்து வந்துள்ளனர். அவர்கள் வேதங்களைக் கற்கக் கூடாதிருந்தது. அவர்கள் உயர்வதற்கு முயற்சி செய்தால் அதற்கும் தடை இருந்தது. பண்டைக்காலத்து விசுவாமித்திரர் கதையானது கீழ்ச்சாதியார் உயர்வதற்கு முயற்சி செய்ததைக் காட்டுகிறது. அவருடைய தவத்தைக் குலைக்க மேனகையை அனுப்பியதும், வசிட்டர் அவரைப் பிரம்மரிஷியாக ஏற்கத் தயங்கியதும், உயர்வகுப்பார் இம்முயற்சியை எங்ஙனம் எதிர்த்தனர் என்பதைக் காட்டுகின்றன. இன்றுகூட ஒரு பிராமணப் பையனை வேறுசாதிப்பெண் திருமணம்செய்து கொள்வதற்கு எவ்வளவோ எதிர்ப்பு உண்டு. ஓர் அரிஜனப் பெண் செல்வச்சீமாட்டியைப் போல் நடந்துகொண்டால் அதைப் பார்த்துப் பிறர் இளிவரல் தோன்ற நகைப்பதுண்டு. சாதியின் மற்றொரு விளைவையும் நாம் காணலாம். பீஷ்வாக்கள் காலத்தில் காயஸ்தர்கள் தம் குலத்துக் கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வதை எதிர்த்துப் போராடினர்; இதற்

குக் காரணம் பிராமணர் தம் சாதியில் கைம்பெண் மறுமணத்தைத் தடுத்ததேயாம்.

ஆங்கில அரசாட்சியிலும் பிராமணர்கள் கீழ்வகுப்பாரின் தொழில்களை நாடாமல், அரசாங்க அலுவல்களில் புகுந்து தம் தனித்தன்மையை நிலைநிறுத்த முயன்றனர்.

அடுக்கமைந்த சமூகத்தில் உட்குழுக்களினுள்ளே ஏற்படும் தொடர்புக்கு எதிராகக் கட்டுப்பாடு கிடையாது. அடுக்கமைந்த குழுவில் தனித்தன்மையும் (individualism) போட்டியும் கிடையாது என்று சில அறிஞர் எடுத்துக் கூறியுள்ளனர். ஒவ்வொரு தனியாளுக்கும் தன் ஏற்றம் முடிவாக அமைந்தது என்று தெரியும். ஆகையால் வெளி வேடத்தாலும் பகட்டினாலும் பயனில்லை[5].

ஆளுமையின் முழு வளர்ச்சியைப் பொறுத்தவரை சாதி முறையில் நன்மைகளும் உள்ளன; தீமைகளும் உள்ளன. நன்மைகளாவன: தனியாளின் ஏற்றம் இயங்கக்கூடாதது, (immobile) இறுக்கமாக அமைந்தது, முடிவானது; ஆகையால் போட்டியும் அதன் விளைவாக வரும் காப்பின்மை (insecurity) தோன்றுவதில்லை. வீண் செருக்குக்கும் இம்முறையில் அதிக இடமில்லை. ஒவ்வொரு குழுவினுள்ளும் அதிகத் திரண்மை (cohesion) ஏற்படுகிறது. இனி இவற்றுல் ஏற்படும் தீமைகள் சிலவற்றையும் குறிப்பிடலாம். ஒரு வகுப்பினர் பிற வகுப்பினரின் வாழ்க்கை முறையைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பில்லாமற் போகிறது. இதன் விளைவாக, அவர்கள் குறைந்த அளவிலேயே தூண்டப் பெறுகிறார்கள். தங்கள் ஆற்றல்கள் அனைத்தையும் வெளியிடுவதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. இரண்டாவதாக மேல்-கீழ் வேற்றுமை இருப்பதால் கீழ்வகுப்பினர் தம் உண்மையான எழுச்சிகளையும், உணர்ச்சிகளையும் மறைத்துக் கொள்கின்றனர். மேலோரிடத்தும் கீழோரிடத்தும் சமன்படா ஆளுமை வளர்ச்சி ஏற்படுகிறது என்று ஈ. ஏ. ராஸ் கூறியுள்ளார். மேலோர் கீழோரை மக்களாகவோ, முடிபு குறித்தவர்களாகவோ (ends) கருதுவதில்லை, கருவிகளாகவே கருதுகிறார்கள்.

குழு அமைப்புக் குலைவு (Group disorganization)

குழுவின் உறுப்பினர் பலபடித்தவராக (heterogeneous) அமைந்தால், வெவ்வேறு தனியாட்கள் வெவ்வேறு

தேவைகளாலும் நோக்கங்களாலும் ஊக்குவிக்கப்பட்டால், கவர்ச்சிகள் வேறுபட்டால், ஆளியல் விடுதலையிலும் தனியாள் உரிமையிலும் அதிக அழுத்தம் (emphasis) ஏற்பட்டால், ஒருவரையொருவர் நம்பாவிட்டால், குழுவானது அமைப்புக்குலைவை ஏறிட்டு நிற்கிறது. சமூக வாழ்க்கையின் திடநிலை (stability) கலங்குகிறது. தனியாட்களிடையே பொருத்தப்பாட்டுப் பிறழ்வு (maladjustment) ஏற்படுகிறது.

மேற்கூறிய நிலைகள் பெரும்அளவில் ஏற்பட்டு, குழு இயற்றவேண்டிய காரியங்களை இயற்ற முடியாமற் போனால் குழு அமைப்பு குலைகிறது. சமூகம் முழுவதிலும் இது ஏற்பட்டால் அதைச் சமூக அமைப்புக் குலைவு என்கிறோம். இதனைச் சமூக நோயியல் (Social pathology) என்றும் கூறுவர். (ஆனால் இந்நிலை இன்றியமையாத மாறுதல்களின் விளைவாகவே வரக்கூடும். அது ஒரு நோய்நிலையல்ல என்று நியுமேயர் (Neumeyer) கூறுவார்.[6] சமூக நோயியல் என்பது தகுந்த தொடரன்று என்பது அவர் கருத்து.) தொழில் நுட்ப மாறுதல்கள் ஏற்படும்போது இத்தகைய நிலைஎழக்கூடும். இதன் விளைவாக, சமூகத்தின் பொருளாதாரப்படிவம் மாறுகிறது ; சமூக நிறுவனங்களும் மாறுகின்றன; பெரும்பாலான மக்கள் தங்கள் வயது பால், தொழில், மற்றும் சமூக நிலைக்கேற்பத் தாங்கள் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யமுடியாமற் போகக்கூடும்.

திரட்சமூகம் (Mass Society)

சமுதாய வகை அமைப்பில் குருதியாலும், (blood), நிலத்தாலும், தொழிலாலும்உறுப்பினர் பிணைக்கப்பட்டுள்ளனர். சமூகப் பொறுப்பும் குழு உணர்ச்சியும் இத்தகைய அமைப்பில் அதிகம். ஆனால் நாகரிக வளர்ச்சியில் புதிய தேவைகளுக்கேற்பத் தாம் விரும்பி அமைக்கும் செயற்கையான குழுக்கள் பல அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக மக்கள் வேறெங்கும் பெறமுடியாத இன்பத்தைப் பெறுவதற்காக களிக்குழு (clubs) அமைத்துக் கொள்கிறார்கள். தொழிலாளர் தம் நலனைப் பாதுகாக்கச் சங்கங்கள் அமைக்கின்றனர்; கலைஞர் கலைச்சுற்றம் (art circles) அமைக்கின்றனர்; அறிவியலர் பேரவைகள் அமைத்துக் கொள்கின்றனர்.

தற்கால மனிதன் ஒரே காலத்தில் பல குழுக்களில் உறுப்பினனாக இருக்கிறான். ஆகையால் மக்டூகல் அவனைப்

'பன்முகக்குழு நனவினன்' (multiple group-consciousness) என்கிறார்.

பழைய சமூக உறுப்பியத்தைக் (structure) குலைப்பதற்கு முக்கிய காரணமானது தொழிற்புரட்சியாகும். மக்கள் தொழிலை நாடி நாட்டுப்புறத்தைவிட்டு நகரத்தை நோக்கிப் பெயர்ந்தனர், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு நகரங்களில் வாழநேர்ந்தது. ஆகையால் அண்டைமை (neighbourhood) உணர்ச்சி குன்றியுள்ளது. கூட்டுக் குடும்ப முறை மறைந்து வருகிறது. சமூகத் தன்மை பெறலும் குறைந்துள்ளது. மேலும் தொழில் மயமான சமூகத்தில் வேறுபட்ட ஆற்றல்களும் திறமைகளும் உள்ள மனிதர் தேவை. ஆகையால் தனித்துறைச் சிறப்புள்ள தொழிற்பாகுபாடு (specialized division of labour) உண்டாகிறது. ஒரேகுடும்பத்திலும் ஒரேஅண்டைமையிலும் உள்ள உறுப்பினர் வெவ்வேறு வகையான வேலைகளுக்குச் செல்கின்றனர். பழைய பரம்பரைத் தொழிற் குழுக்கள் மறைந்து வருகின்றன. புதிய தொழிற்குழுக்கள் தோன்றி வருகின்றன. மேலும் தனியார் முதலாளித்துவத்தில் முதலாளிகளின் நலனும், சம்பளத்தொழிலாளர் நலனும் மோதுகின்றன. இந்நலன்களைப் பாதுகாப்பதற்காக வர்த்தகச் சங்கங்களும் (trade unions) உழைப்பாளர் சங்கங்களும் (labour unions) அமைக்கப்படுகின்றன. மேலும் வாழ்க்கை மிகவும் சிக்கலாகி விட்டது. நமது தேவைகளை நிறை வேற்ற நமக்கு மிகப்பலருடைய உதவி வேண்டியதிருக்கிறது. ஆகையால் தனியாட்களுக்கிடையேயுள்ள இருவழித் தொடர்புகளை அரசு (state) அதிகமதிகமாகக் கட்டுப்படுத்த வேண்டியதிருக்கிறது. கிம்பால் யங் (Kimball Young) கூறியுள்ளபடி சமூகம் சமுதாயப் படிவ (community pattern) நிலையை விட்டு, திரட்சமூகநிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது.[7] சங்கங்கள், பொது மக்கட் சமூகம், உலக அமைப்புக்கள் முதலியவற்றில் நாம் உறுப்பினராகி வருகிறோம்.

உளவியன் முறையில் இம்மாறுதல் மிகவும் முக்கியமானது. குடும்ப வாழ்க்கை நிலையான இடம் வகித்த பழைய முறையில் தனியாள் நிறைவான சமூகத்தன்மை பெற்றார். இப்பொழுது அந்நிலை மாறிவிட்டது. இன்று, தனியாளை ஒரு திட்டமான சமூக இடத்திற்கென்றே ஆயத்தப்படுத்துவதில்லை, ஆயத்தப்படுத்த முடிவதுமில்லை.

ஏனென்றால் அவர் பிற்காலத்தில் எந்தத் தொழில் புரிவார், என்ன இடம் வகிப்பார் என்று சொல்ல முடியாது. மேலும் தற்கால வாழ்க்கையில் மனிதன் புற ஆசாரக் கவிநிலையில் (formal atmosphere)வாழ்கிறான் பண்டையநெருங்கியநட்பு றவுகுறைந்துவிட்டது. கும்பல் நிறைந்த நகரத்தின்நடுவிலே மனிதன் தனிப்பட்ட உணர்ச்சியோடு வாழ்கிறான். குடும்பம், சமுதாயம் போன்ற முதனிலைக் குழுக்களின் உறுப்பினர் ஒருவர்பால் ஒருவர் அக்கறை கொண்டுள்ளனர். திரட்சமூகத்தில் தான் எத்தனை பேருக்காக வாழ்கிறான் என்று ஒரு மனிதனுக்குத் தெரியாது.

———

References :

1. W. C. Allee, The Social Life of Animals, p. 55.
2. F. H. Allport, Social Psychology.
3. K. Mashruwalla, Group Prejudices in India.
4. Arnold Rose, Social Problems.
5. Dr. Halmos, quoted by J. A. C. Brown, in Social psychology of Industy.
6. Neumeyar, Social Problems and the Changing Society.
7. K. Young, Handbook of Social Psychology.

———

8. தனியார் சமூகத்தன்மை பெறல்

(Socialization of the Individual)

ஒருவாருகப் பார்த்தால் நம்மை விலங்குகளினின்றும் பிரித்தறிய உதவும் நடத்தைப் பண்புகள் நாம் பெற்றவை யேயாம் (acquired). நம்மை விலங்குகளினின்றும் பிரித் துக்காட்டுவது நமது உடலுருவம் மட்டுமன்று, நமது நடத் தைப்பண்புகளுமாம். தன்நனவு, பிறரொடு உடம்படுப்பு (communication), உள்துடிப்புக் கட்டுப்பாடு, சமூகக் குழுவின் தரத்திற்கு ஒத்துப்போகும் நடத்தை முதலிய வற்றை மனிதன் சாதாரணமாக வளர்த்துக் கொள்கிருன். மேற்கூறிய நடத்தைக் கூறுகள் சமூக ஊடாட்டத்தால் ஏற்படுபவை. பிறருடைய முன்மாதிரி, பிறரொடு தொடர்பு, பிறரால் ஏற்படும் கட்டுப்பாடு முதலியவை இல்லாவிட்டால் குழந்தையிடம் உண்மையான மனிதத்தன்மை வளராது; குழந்தை பேசக் கற்றுக் கொள்ளாது; மனிதனுக்கே உரித் தாகிய உள்துடிப்பு ஒருங்கமைப்பும் (organizatian of im-pulses,) இச்சையடக்கமும் அவன் வளர்ந்த பின்னும் அவனிடம் அமையா.

அமலா, கமலா என்ற இரு ஓனாய்ப் பெண்களைக் காட்டு வாழ்க்கையிலிருந்து மீட்டபோது அவர்களிடம் மனிதருக்குரிய உணர்ச்சி, சுவை, நடை, பேச்சு ஒன்றும் இல்லாதிருந்தது. இவர்களின் வரலாறும் சமூகத்தன்மை மனிதத் தொடர்பினுல் ஏற்படுவது என்னும் உண்மையை வலியுறுத்துகிறது. ஆனுல் இவ்வரலாற்றைக் கட்டுப்படுத் திய உற்றுநோக்கு என்று சொல்லமுடியாது என்று சில அறிஞர் கூறுவர். ஆயின், சமூகத்தினின்று பிரிக்கப் பட்டுத் தனிப்படுத்தப்பட்டு மனிதராலேயே வளர்க்கப்பட் டவரின் வரலாறுகளும் உள்ளன. அன்னு, இசபெல்லா

என்ற இரு புறவொழுக்கத்துப் பிறந்த குழந்தைகள் பிறப்பி லிருந்தே தனிப்படுத்தப்பட்டு, நட்புறவும் கவனமும் போத னையும் இன்றித் தனி அறைகளில் வைத்து வளர்க்கப்பட்ட னர்.[1] இக்குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டபோது, அவர் களிடம் மனித நடத்தையின் சிறப்புப் பண்புகள் ஒன்றும் அமைந்திருக்கவில்லை. அவர்களை வளர்ப்பு இல்லங்களுக் கும் பள்ளிகளுக்கும் அனுப்பியபின்னரே மனித நடத்தைப் படிவம் ஓரளவு அவர்களிடம் தோன்றியது. சமூக வாழ்க் கையில் பங்கெடுக்க முடியாமற் போன வயதானவர்களின் வரலாறுகளும் மேற்கூறிய முடிபுகளை வலியுறுத்துகின்றன. சமூகத் தொடர்புகளை இழந்துவிட்ட பெரியோர்களும் தங்கள் மனிதப் பண்புகள் பலவற்றை இழந்து விடுகிறார் கள். வாழ்க்கையின் எந்த நிலையிலும் அதிகமான தனி மைப்பாடு (isolation) ஏற்பட்டால், அமைந்த நடத்தை கெடுகிறது. 1821-ல் நியூயார்க்கில் எண்பது கைதிகளுக் குத் தனிச் சிறைக் காப்புத் தண்டனை அளிக்கப்பட்டது. ஓராண்டு முடிவில் ஐவர் மாண்டனர்; ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்; ஒருவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது; மற்றவர்கள் மிகவும் துன்புற்ற அவல நிலை எய்தி னர். இங்கிலாந்தில் தனியாகச் சிறை வைக்கப்பட்ட கைதிகளுள் பைத்திய விகிதம் (பொது விகிதத்தை விடப்) பதின்மடங்கு அதிகரித்தது. தனித்துவாழ் கைதிகள் சமூக எண்ணத்தைப் (social opinion) பற்றிக் கவலைப் படுவ தில்லை. அவர்கள் கோட்டிகள் (eccentric) ஆகிறார்கள். பலர் தம் விடுதலையைப் பற்றிக் கூடக் கவலையுறுவதில்லை. தனிமையில் நெடுங்காலம் வதிந்துள்ள இடையர்கள் தம் சமூகத்தன்மையையும் பேச்சுத் திறனையும் இழக்கின்றனர். தாமாகவே உலகின் நீங்கிய துறவிகளிடத்தும் இத்தகைய பண்புகளைக் காணலாம்.

மிகச் சிறிய வயதிலிருந்தே மனத்தனிமை ஏற்பட்டால் அதன் விளைவுகள் இன்னும் சீர்கேடாக அமைகின்றன. மனிதத்தன்மை பெறும் முறை இதன் மூலம் தடைப் படுகிறது. ஒரு பண்பாட்டில் நீடித்து வாழாததால் ஏற்படும் தனிமையும் இத்தகைய விளைவுகளை உண்டாக்குகிறது. நாடோடிகள், வரம்பு மனிதர் (marginal men) விலங்கு போல் வாழும் இரவலர் முதலியவரைக் கவனித்தால் இவ் வுண்மை புலனாகும்.

சமூகத்தன்மை பெறும் முறை: (The Socializing Process)

உயிரியத் தேவைகளை நிறைவேற்றவும், வாழ்க்கையின் பொதுவான நிலைமைகளைச் சமாளிக்கவும் பிறரொடு உரிய முறையில் நடந்து கொள்ளவும், பிறரொடு பேச்சாலும் சைகையாலும் உடம்படுக்கவும், எழுச்சிகளை வெளிப்படுத்தவும், ஒவ்வொரு பண்பாட்டிலும், பண்பாட்டு உட்பிரிவிலும் சில (conventional) வைத்துக் கோடல் முறைகள் உள்ளன. சமூகத்தின் வைத்துக்கோடல் முறைகளுக் கேற்பத் தனியாள் இணங்கிப் போகாவிட்டால், குழு வாழ்க்கையில் அவர் சரியாகப் பங்கெடுத்துக் கொள்ள முடியாது. அவரால் பிறரொடு ஒத்துழைக்க முடியாது. தமது சமூகத்தில் அவர் ஓர் உண்மையான உறுப்பினராக முடியாது. சமூகத்தோடு இணங்கிப் போகும் ஓர் உண்மையான உறுப்பினரும் சமூகக் குழுவின் தரத்தைப் புறக்கணித்தால் தம் நிலையை இழக்க நேரிடும்.

தனியாள் சமூகத்தின் வைத்துக்கோடற் படிவ நடத்தையை (conventional patterns of behaviour) ஏற்றுக் கொள்ளும் முறையைச் சமூகத்தன்மை பெறல் என்னலாம். அது பிறரொடு இடைவினை இயற்றுவதாலும், அவர்களது தொடர்பால் பண்பாட்டில் கலந்து கொள்வதாலும் ஏற்படுகிறது. சமூகத் தன்மை பெறுவதில் பல முறைகள் உள்ளன. அவை ஒருங்கே நடைபெறுவன. உண்மையுணர்வு பெறல், தன்னைப் பற்றிய எண்ணம் பெறல், மொழியைக் கற்றுக் கொள்ளல், பயன்படும் செயல்களைக் கற்றுக் கொள்ளல், வாழ்க்கையில் வகிக்க வேண்டிய பல்வேறு அங்கங்களுக் கேற்ப ஆயத்தம் செய்து கொள்ளல் ஆகியவை சமூகத் தன்மை பெறுவதன் கூறுகளாம்.

தனியாளின் வாழ்க்கை சமூக முறையில் அமைவது சமூகத்தன்மை பெறுவதாலேயாம். இச்செயல் பிறந்த வுடனேயே தொடங்குகிறது. குழந்தைமை (childhood) இச்செயல் நடைபெறுவதற்கு முக்கியமானதொரு பருவமாகும். மிகச் சிறிய வயதிலேயே குழந்தையிடம் உண்மையைப் பற்றிய உணர்வு ஏற்படுகிறது; தன்னைப் பற்றிய எண்ணம் வளர்கிறது; சைகையாலும் சொற்களாலும் அமைந்த இடுகுறி மொழியறிவு உண்டாகிறது; நடத்தையின் ஊக்கிகளும் சமூகத்தன்மை பெறுகின்றன. குழந்தையின் விருப்புக்களும் வெறுப்புக்களும், மனப்பான்மைகளும்,

சமூகத்தின் வன்மையாலேயே அமைகின்றன. சமூக எதிர்பார்ப்புகளாலும் அவன் ஊக்குவிக்கப்படுகிறான்.

சமூகத்தன்மை பெறுவதில் முதனிலைக் குழுக்களின் பங்கு:

குடும்பமும், சம வயதுக் குழுக்களும், பள்ளியும், தனியாளைச் சமூகத்தன்மைப்படுத்த மிகவும் பயன்படுவன. இவற்றுள், காலத்தால் முந்தியதும் மிக இன்றியமையாததும் குடும்பமாகும். அது தனியாளை அறவழிப்படுத்துகிறது. அவருடைய சிந்தனைகளும், எழுச்சிகளும், செயல்களும் குடும்பத்திலே உருவாகின்றன. ஒழுக்கத்தின் அடிப்படையும் வீட்டில்தான் அமைகிறது. உண்ணுவதிலும், குடிப்பதிலும், பேசுவதிலும் எழுச்சிகளை வெளியிடுவதிலும் 'சரியான' முறைகளைக் கற்பிப்பது முதனிலைக் குழுக்களே. குடும்பமானது குழுப் பண்பாட்டைக் குழந்தைபால் ஏற்றி, அவன் பெரியவனபின் எதிர்ப்படக்கூடிய பல்வேறு நிலைகளுக்கு அவனை ஆயத்தப்படுத்துகிறது. குழுவின் சமய நம்பிக்கைகளைக் குழந்தைகளுக்கு ஊட்டுவதும் குடும்பம்தான். குழந்தை தன் தேவைகளை உடனே நிறைவேற்றுமல் தள்ளிப் போடுவதற்கும் நல்ல பெற்றோர் துணை புரிகின்றனர்; 'இன்றல்ல, நாளைக்குப் பார்க்கலாம்' என்று சொல்லுகிறார்கள். குழந்தையின் மனப்பான்மைகளும் குடும்பத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றன. முதலில், 'உன்னுடைய வெல்லாம் என்னுடைய' என்னும் மனப்பான்மை காணப்படுகிறது. பின்பு இந்நிலை மாறி, 'என்னுடையவை உனக்கும் சொந்தமாகும்' என்னும் மனப்பான்மை வளர்கிறது. குழந்தை தற்சார்பைக் (self-reliance) கற்பதும் குடும்பத்திலேயே; உயர்ந்தோர், ஒத்தோர், தாழ்ந்தோர் என்னும் முச்சாராருக்கும் ஏற்ப வெவ்வேறு வகையில் நடந்து கொள்ளக் கற்பதும் இங்குதான். அவன் வெவ்வேறு வேளைகளில் வெவ்வேறு வகையாக நடக்கவும் இங்குக் கற்றுக்கொள்கிறான். இப்படிப் பல்வேறு வேடங்கள் தாங்குவதற்கு வேண்டிய பயிற்சியைக் குடும்பம் குழந்தைக்கு அளிக்கிறது.

ஒத்த வயதுக் குழுவும் மிக முக்கியமானதாகும். அது ஒரு சமூகக் கண்ணாடியாகும். (social mirror) ஒருவருடைய நடத்தையை நேரடியாகவும், வெளிப்படையாகவும் திறனாய்வது இக்குழுவே, சமூகம் ஏற்கும் நடத்தை

வகைகளைத் தெரிந்து கொள்வதற்கு இத்தகைய திறனுய்வு தேவையாகிறது. தன்னைப்பற்றிப்போதிய அளவு உணர்ந்து கொள்வதற்கும் சம வயதினரோடு பழகுதல் அவசியம். சம வயதுத் தோழரினின்று நெடுங்காலம் பிரிக்கப்பட்டால் தரப் பிறழ்வுகள் (abnormalities) ஏற்படக் கூடும். தம்மையே மிகவும் வியந்து கொள்பவரையும், தம்மைப் பிறர் துன்புறுத்த முனைகின்றனர் என்று கற்பனை செய்து கொண்டிருப்பவர்களையும் ஆய்ந்ததில் அவர்கள் ஒத்த வயதுத் தோழரோடு உறவாடாமல், பெற்ருரின் புகழ்ச்சியிலும், புத்தகப் படிப்பிலுமே இளமையைக் கழித்தனர் என்று தெரியவந்தது. ஒத்த வயதினருடன் பழகுவதால் குழந்தை ஆற்றல்களையும் வரம்புகளையும் தெரிந்து கொண்டு, தன்னைப்பற்றித் திடமான, சமநிலையான நோக்குக் கொள்ள முடிகிறது.

பள்ளியும் பொதுவாகக் குழுப் பண்பாட்டு முறையிலேயே குழந்தையைப் பயிற்றுவித்து, வீட்டில் பெற்ற பயிற்சியைத் தொடர்ந்து ஆற்றுகிறது.

சமூகத் தன்மைப் படுத்தலின் (Socialization) **காரணிகள் :**

கருத்தேற்றம், (Suggestion) பின்பற்றல், ஒத்துணர்வு ஆகிய தொடக்கநிலை எதிர்வினைகள் சமூகத்தன்மை பெறுவதற்கு (Socialization) ஏதுவாகின்றன. குழந்தை அறியாமலே பெரியவர்களைப் பின்பற்றுகிறது; முயன்று தவறிச் செயல் புரிகிறது. சமூகம் இச்செயல்களைத் தேர்கிறது. இதன்மூலம் வைத்துக் கோடற் சைகைகள் பேச்சு, செயல் முறைகளெல்லாம் குழந்தையிடத்து அமைகின்றன. கருத்தேற்றத்தின் மூலம் குழந்தை ஏற்கனவே உருவான நம்பிக்கைகளையும் மனப்பான்மைகளையும் பெறுகிறது. குழந்தைகளின் அனுபவம் குறுகியது; அவர்களுடைய திறனுய்வுச் சிறந்தனையாற்றலும் குறைந்தது. ஆகையால் அவர்கள் எளிதில் கருத்தேற்கின்றனர். பெரியவர்களும் உயர்ந்தவர்களும் கூறுவதையெல்லாம் ஏற்றுக் கொள்கின்றனர். புத்தகத்தில் கண்ட கூற்றுக்களையெல்லாம் நம்புகின்றனர். பெற்ருருக்கும் இது தெரியும். ஆகையால் அவர்கள் குழந்தைகளிடம் எது நல்லது எது கெட்டது என்று தைரியமாக எடுத்துச் சொல்கின்றனர். நல்ல பிள்ளைகளெல்லாம் இப்படிச் செய்கிருர்கள், என்று சொல்லி உலகப் பொதுமைக்கு ஒத்துப் போகப் பழக்குகின்றனர்.

தம் சமூகத்தின் பண்பாட்டை எடுத்துக் காட்டும் புத்தகங்களையே அவர்கள் குழந்தைகளிடம் கொடுக்கின்றனர். இவ்வாறு சமூகத்தன்மை பெறுவதை அவர்கள் விரைவாக்குகின்றனர்.

புராதன ஒத்துணர்வின் (Primitive sympathy) மூலம் தனியாள் பிறருடைய எழுச்சிகளையும் ஊக்கிகளையும் புரிந்து கொள்ள முடிகிறது. பெரியோரின் புற ஆசாரங்கள் குழந்தைகளுக்குக் கிடையா. வகுப்பு, நிறம் முதலிய வேற்றுமை வேலிகளும் அவர்களுக்கு இல்லை. பெரியோருடைய முன்மாதிரியாலும், போதனைகளாலும் பண்பாட்டுப் புகுத்தலாலும் (Indoctrination) பாதிக்கப்படுமுன் குழந்தைகள் பிறருடைய துன்பங்களைப்பற்றிய உணர்ச்சிமிக்கவர்களாக இருக்கிறார்கள். புராதன ஒத்துணர்வின் மூலம் ஒருவகையான ஒன்றுதல் (identification) ஏற்படுகிறது. தன்முனைப்பின் (ego) எல்லைகள் அகல்கின்றன. மேலும் ஒத்த எழுச்சியின் மூலம் ஒத்த நடத்தை ஏற்படுகிறது. கடத்திய (induced) எழுச்சிகள் அவற்றைத் தோற்றுவித்த நிலைமைகளோடு இயைகின்றன. இதன்மூலம் குறிப்பிட்ட நிலைகளில் குறிப்பிட்டவாறு துலங்குவதற்குத் தனியாட்கள் கற்றுக் கொள்கின்றனர்.

இவ்வாறு ஒருபடித்தான நடத்தை ஏற்படுகின்றது. இவ் ஒருபடித்தன்மை (uniformity) குழு வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

புற முறைசாரா (informal) சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் சமூகத் தன்மை பெறல் :

முதனிலைக் குழுக்களின் கற்றலுக்கு ஏதுவான முயல்தலும் (trial), தவறுதலும், (error) சமூகத்தால் தேர்தலும் (Social Selection) நடைபெறுகின்றன. இம்முறையில் வெகுமதிகளும் தண்டனைகளும் முக்கிய இடம் பெறுகின்றன. ஆனால் இவ்வெகுமதிகளும் தண்டனைகளும் தரப்படுத்தப்பட்டவையல்ல (unstanderdized). புறமுறைசாராமலே அவை அளிக்கப்படுகின்றன. மிட்டாய் அல்லது விளையாட்டுச் சாமான் வாங்கிக் கொடுத்தல், முதுகில் தட்டிக் கொடுத்தல், புன்சிரிப்பு முதலியவை குடும்பத்தில் வெகுமதிகளாக அமைகின்றன. ஒத்த வயதுக் குழுவில் பாராட்டும், புகழ்ச் சொற்களும் வெகுமதியாகின்றன. அடி-

சினந்த நோக்கு, புறக்கணிப்பு, அன்பை அகற்றல் முதலியன குடும்பத்தில் தண்டனைகளாகின்றன. அண்டைமை முதலான குழுக்களில் கொடுக்கப்படும் தண்டனைகளாவன, உடல் அலைப்பு, அச்சுறுத்தல், இகழ்தல், நெருங்கிய உறவை அகற்றல், புறமுறையான தொடர்புமட்டும் கொள்ளல் முதலியன ; சில சமயங்களில் குழுவினின்று ஒருவரை அப்புறப்படுத்திவிடுவதுமுண்டு. மேற்கூறிய புறமுறைசாரா வெகுமதிகளும் தண்டனைகளும் மிகவும் வலிய சமூகக் கட்டுப்பாடுகளாம்.

குழந்தைகள் விரைவில் தகுந்த நடத்தை முறைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று குடும்பத்திலுள்ள பெரியவர்கள் விரும்பி, சமூகத்தன்மை பெறும் முறையை வேகமாக, தெரிந்து முன்னேற்றுகிறார்கள். குழந்தைகளுடைய சமூக நடத்தையைக் கவனித்து, அதைத் திருத்துவதற்காகத் தண்டனைகளையும் வெகுமதிகளையும் கையாளுகிறார்கள். பிற முதனிலைக் குழுக்களும் இவ்வாறே தனியாளின் நடத்தையைக் கட்டுப்படுத்துகின்றன. வெகுமதியும் தண்டனையும் தனியாளின் அடிப்படை உளவியல் தேவைகளான பாசம் (affection), ஏற்பு (acceptance), ஏற்றம் (status) முதலியவற்றை ஆதாரமாகக் கொள்வதால் பயன்தருகின்றன. புறக்கணிப்புக்கு அனைவரும் அஞ்சுகின்றனர். தாய் குழந்தையை வெளியே விரட்டுவதாகவோ, அல்லது விடுதிக்கு அனுப்புவதாகவோ, அச்சுறுத்தினால், குழந்தையானது 'அம்மா, உங்களிடத்திலிருந்து என்னை அனுப்பிவிடாதீர்கள் ; நான் இனி நல்ல பிள்ளையாக நடந்து கொள்கிறேன்' என்று சொல்கிறது.

இனி, இக்கட்டுப் பாட்டிற்குப் பயன்படும் வெவ்வேறு வகையான தண்டனைகளின் குறை நிறைகளைப் பற்றிச் சிறிது கூறுவாம். பொதுவாகக் கூறுமிடத்து, தனியாளின் அடிப்படைத் தேவைகளான எழுச்சிக் காப்புணர்ச்சி (emotional security), ஏற்பு, தன் மதிப்புப் பற்று முதலியவற்றை முறியடிக்கக் கூடிய தண்டனை கொடுக்கக் கூடாது. இதன்மூலம் ஆளுமையின் அடிப்படையே தகர்ந்து விடும். தனக்குச் சொந்தமானவர் யாரும் இல்லை, தனக்குக் குழுவில் இடமே இல்லை என்று எண்ணும் நிலைக்கு ஒருவரை விடக் கூடாது. இம்முறையில் பார்த்தால் கொடிய உடலுறு தண்டனையும், குழுவினின்று அப்புறப்படுத்துவதும் விரும்பத்தகாதவை. கொடிய உடலுறு தண்டனையின்

மூலம் மற்றொரு தீங்கும் விளைகிறது. குழந்தைகள் தண்டனை யச்சத்தைப் பொறுமைப்படுத்தித் தம் உள்துடிப்புக்களைத் தடை செய்ய முற்படுகிறார்கள். இதன்மூலம் ஒத்தும் மறுத்தும் வாழும்முறை (yes-but style of life), வளர்கிறது. முதல் ஐந்து ஆண்டுகளில் குழந்தைக்குத் தேவையானது குறைவற்ற பாசமாகும். உடல் தண்டனை, பெற்றோரின் எண்ணத்தின்படி குறைவானதாக இருந்தாலும் குழந்தையின் தன்னெடுப்பை முறியடிக்கக் கூடியது. ஐந்து முதல் பத்து வயது வரையுள்ள பருவத்தில் தேவைப்பட்டால் தண்டனையளிக்கலாம். இப்பருவத்தில் குழந்தை பாவனையுலகை விட்டு வெளியேறி விடுகிறான். தண்டனையின் பொருளைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையை அடைகிறான். ஆனால் முதல் ஐந்து ஆண்டுகளில் தண்டனை எதிர்பாராத அதிர்ச்சியாக, தன்மீது கொண்டுள்ள அன்பிற்கு ஓர் அடியாகத் தோன்றுகிறது. தற்காதலிற் பட்ட இப்புண் (Narcissistic wound) நிலையான வடுவை விட்டுச் செல்லக் கூடும். மிகச் சிறிய வயதில் விழும் அடிகள் குழந்தையின் ஆளுமைக்கு நிலையான தீங்கு விளைவிக்கக் கூடும் என்பதைப் பெற்றோரும் ஆசிரியரும் நினைவிற் கொள்ள வேண்டும். மிகச் சிறிய வயதில் அளிக்கப்படும் தண்டனைகள் குழந்தையின் காப்புணர்ச்சியைக் குலைத்து அதை ஒரு பிரச்சினைக் குழந்தையாக மாற்றக்கூடும்[2] என்று நீல் (A. S. Neill) இத்துறையில் தாம் கண்ட அனுபவத்திலிருந்து கூறுகிறார்.

ஏளனம் (ridicule) உடல் தண்டனையைப் போல் அவ்வளவு தீங்கு தருவதன்று. அது ஒரு சமூகக் கண்ணாடி போன்றது. ஆனால் இதையும் மிகையாகப் பயன்படுத்தக் கூடாது. தொடர்ந்த எள்ளல் தீங்கு தரும். அதன்மூலம் தன்னெடுப்பு மிக்கவரிடம் எதிர்ப்பும், எதற்கும் கவலைப் படாத மனப்பான்மையும் வளரும். மென்மையான தன்மையுடையவரிடம் தாழ்வு மனப்பான்மை உண்டாகும்.

அறியாத பெற்றோர் குழந்தைகளிடத்துக் குற்ற மனப்பான்மையையும் உண்டாக்கி விடுகின்றனர். குழந்தைகளுடைய செயலைக் கண்டு வருந்துவதாக, ஆச்சரியப்படுவதாக, அதிர்ச்சியடைந்ததாகக் காட்டிக் கொள்கின்றனர். தீயவை தீண்டக் கூடாதென்னும் கருத்தை வலியுறுத்தச் செயற்கையான தொனியில் பேசுகின்றனர். இத்தகைய நடத்துதல் மூலம் குழந்தை தன் குற்றம் மிகப் பெரிதென்று

உணர ஏதுவாகிறது. இத்தகைய உணர்ச்சி அவ்வளவு நல்லதன்று; ஏனென்றால் அறவழி பிறழ்ந்து விட்டோம் என்ற எண்ணம் குழந்தையின் மனத்தில் கவலையை உண்டாக்குகிறது. இவ்வுணர்ச்சி பொதுமைப்பட்டால் வெளிப்பாட்டு (expressive) ஆளுமை வளர்வதற்குப் பதிலாக, கட்டுப்பட்ட நடத்தையே தோன்றும்.

வெகுமதி முறை தண்டனை முறையைவிடச் சிறந்தது. தடுப்பிகளை (deterrents) விட இயக்கிகள் (incentives) சிறந்தவை. தண்டனைகள் பின்வாங்கச் செய்கின்றன. வெகுமதிகள் தனியாளின் தன்முனைப்பை முன்னேறத் தூண்டுகின்றன. வெகுமதிகள் பொருளாலும் (material) சொல்லாலும் (verbal), குறியாலும் (symbolic) அமையலாம்.

சமூகத்தன்மை பெறுவதற்கு வேறு முறைகளும் உள்ளன. முன்மாதிரியைக் கொண்டே குழந்தை பல காரியங்களைக் கற்கிறது. போதனையைவிட முன்மாதிரியே சிறந்தது. ஒரு காரியத்தைச் செய்யக் கூடாதென்று குழந்தைக்குப் போதித்து விட்டு, பெற்றோர் அதே காரியத்தைச் செய்வது தகாது. வீட்டிற்கு வெளியேயும், குழந்தைக்குத் தவறான முன்மாதிரிகள் அமையாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். தொகைப் புகழ்வன்மைக் (prestige of numbers) கருத்தேற்குமையைப் பயன்படுத்தலாம். குழந்தை ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமானால், 'எல்லோரும் இப்படித்தான் செய்கிறார்கள்' என்று அறிவுள்ள பெற்றோர் கூறுவதுண்டு. மேற்கூறிய 'எண்ணிக்கை' கற்பனையாகவே இருந்தாலும் பயன் தரும் ஆற்றலுடையது. குழந்தைகள் பெற்றோரிடம் 'ஒருவரும் இப்படிச் செய்வதில்லையா?' என்று கேட்பதிலிருந்து இவ்வுண்மை விளங்கும்.

குழந்தைகளைச் சமூகத்தன்மைப்படுத்துவதற்குக் கதைகளும் சிறந்த கருவிகளாக அமைகின்றன. குழந்தை ஒரு கதையைக் கேட்டுக் கொண்டிருக்கும்போது அதன் முகத்தில் அச்சம், உவகை முதலிய எழுச்சிகள் வெளிப்படுவதைக் காணலாம். இது ஒன்றுதல் (identification) என்னும் மனச்செயலால் ஏற்படுகிறது. இத்தன்மையை நன்முகப் பயன்படுத்த வேண்டும். பல குடும்பங்களில் குழந்தைகள் தாத்தாவையும் பாட்டியையும் சுற்றி உட்

கார்ந்து கதை கேட்பதைக் காணலாம். கதைகள் மூலம் குழந்தைகளுக்கு நல்ல மாதிரிகளை அமைக்கலாம்.

தனியாள் சமூகத்தன்மை பெறுவதில் உள்ள முக்கியக் கூறுகளைப் பற்றி இனி பார்க்கலாம்.

உண்மை உணர்வு (Sense of Reality) முதலில் குழந்தையின் சிந்தனையும் நடத்தையும் தன்விருப்ப நிலையில் (autistic) உள்ளது. உண்மை நிலையைக் குழந்தை கவனிப்பதில்லை; சமூக வழக்கங்களையும் உணர்வதில்லை; தனது தேவைகளை உடனே நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறது. எல்லா வகையிலும் குழந்தை சமூகத்திற்கு முற்பட்ட, அறத்திற்கு முற்பட்ட நிலையில் இருக்கிறது. ஆனால் பிறந்த இரண்டொரு ஆண்டுகளில் குழந்தை பாவனை நிலையை விட்டு வாழ்க்கையின் கடினமான உண்மைகளை எதிர்ப்பட வேண்டியதிருக்கிறது. இவ் வுண்மை உணர்வு ஏற்படாவிட்டால் குழந்தை பிறருக்கும் வாழ்க்கை நிலைமைகளுக்கும் ஏற்பத் தன்னைப் பொருத்திக் கொள்ள மாட்டான்.

முதலில், வாழ்க்கையின் உண்மைகளைக் குழந்தை உணர்வதே யில்லை. தன் வாழ்க்கையை ஆளும் சமூக அமைப்பு ஒன்று உண்டென்று அதற்குத் தெரியாது. கற்பனையுலகுக்கும், உண்மையுலகுக்கும் உள்ள வேற்றுமை அதற்குத் தெரிவதில்லை. பொருட்கள் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறதோ, அப்படியே அவை இருக்கின்றன என்று எண்ணிக்கொண்டு அதற்கேற்பச் செயல் புரிகிறது. முதல் ஆண்டில் இன்பக் கொள்கையே (pleasure principle) குழந்தையை ஆள்கிறது. அதன் நடத்தை முற்றிலும் தன்மையமானது (ego-centric). பொருட்களும் ஆட்களும் கொண்ட உலகு தனது இன்பத்திற்காகவே அமைந்துள்ளதென்று சிறிய குழந்தை நினைக்கிறது. பிறரை அது ஆட்களாகக் கருதாமல் கருவிகளாகவே கருதுகிறது. ஆனால், தன் தாயின் கவனம் தனக்கு மட்டும் உரியதன்று என்று அது விரைவில் தெரிந்து கொள்கிறது. பிறர் தனக்கு இன்பம் நல்கும் கருவிகள் மட்டும் அல்லர் என்று அறிந்து கொள்கிறது. தோல்வியையும், முறிவையும் ஏற்றுக்கொண்டு பிறர் எண்ணும் வழியிலேயே பிறரோடு தொடர்பு கொள்ளத் தொடங்குகிறது. இன்பக் கொள்கையுடன் உண்மைக்

கொள்கையும் (reality principle) வந்து சேர்கிறது. குழந்தை உள்துடிப்புக்களை அடக்கிக் கொள்கிறது; தேவைகளை உடனே நிறைவேற்றுமல் தள்ளிப் போடுகிறது; பிறரைப் பற்றி எண்ணக் (other - mindedness) கற்றுக் கொள்கிறது. முதலில் தோன்றும் பிறர் பற்றிய எண்ணம் முழுமையானதன்று. தன்னலத்தாலேயே இது முதலில் தூண்டப்படுகிறது. ஆனால் இத்தன்னலம் சற்று அறிவுத் தூலக்கம் பெற்றது. பிறருக்காகவே பிறர்பால் அக்கறை கொள்ளுதலும் 'என்னுடையதெல்லாம் உன்னுடையது மாகும்' என்னும் மனப்பான்மையும் சற்றுப் பிந்தியே தோன்றுகின்றன. குழந்தைகள் வளர வளர அவர் களுடைய காப்புணர்ச்சி, ஏற்பு, பாராட்டு ஆகிய தேவை கள் நனவு நிலைக்கு வருகின்றன. ஆகையால் அவர்கள் பிறர் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கவனிக் கிறார்கள். சமூக எதிர்பார்ப்புகளுக்குப் பணிந்து நடக்கும் மனப்பான்மை அவர்களிடம் வளர்கிறது. பிற்காலத்தில், சமுதாயத்தின் வழக்கங்கள், செந்நிலைகள் (moves). அரசுச் சட்டங்கள் முதலியவற்றிற்கு ஒத்துப் போதலுக்கு அடிப் படையாவதும் இந்தப் பணிவு மனப்பான்மையே.

தனியாளின் வளர்ச்சியின் இந்தக் கூறு மிகவும் முக்கியமானது. சமூகத்தன்மை பெறுவதன் சாரமே இது தான் என்று சிலர் எண்ணுகிறார்கள். மனித நலத்தை முன்னிட்டு மக்கள் நிலையான நடத்தையைக் கற்றுக் கொள்ளல், அதன்மூலம் சமூகத் தற்கட்டுப்பாடு, சமூகப் பொறுப்பு, இசைந்த ஆளுமை ஆகியவை ஏற்படும் செயன் முறையே சமூகத்தன்மை பெறல்' என்று ஃபொகார்டஸ் வரையறுத்துள்ளார். ஒன்றுகச் சேர்ந்தவர்களுக்குள் 'நாம்' என்னும் உணர்ச்சியும், ஒன்றுகச் செயல்படும் ஆற்றலும் விருப்பமும் வளர்வதே சமூகத்தன்மை பெறுவதாகும் என்று ராஸ் வரையறுத்துள்ளார்.

குழுவின் மொழியைக் கற்றுக் கொள்ளல்: முதலாவதாக, சைகை மொழியைப் பற்றிப் படிக்கலாம். தெரிந்தோ, தெரியாமலோ நாம் பல சைகைகளை உண்டாக்குகிறோம். இவை நமது தேவைகளையோ, எழுச்சிகளையோ, மனப் பான்மைகளையோ குறிப்பிடுவனவாகப் பிறர் கொள்ளுகிறார் கள். இப்படிப் பார்த்தால் சைகை மிகவும் நுட்பமான தொரு மொழியாகிறது. ஒரு கண்வெட்டு, முகவெளிப்பாட் டில் தோன்றும் ஒரு நுண்ணிய மாறுதல், கை இயக்கம்,

நிறுக்கை (posture) மாறுதல் முதலியவை நாம் மிகவும் தேர்ந்து சொல்லும் சொற்களை விடத் திட்டமாக நமது சிந்தனைகளையும் மனப்பான்மைகளையும் வெளிப்படுத்துவன.

சில சைகைகள் பேச்சிற்குப் **பதிலீடாகின்றன.** எடுத்துக்காட்டாக, 'தெரியாது' என்பதற்கு அறிகுறியாகத் தோளை நெளிக்கிறோம். பெண்கள் தம் உதட்டைப் பிதுக்கித் தாம் ஒன்றை ஒப்புக் கொள்வதில்லை என்று தெரிவிப்பதுண்டு. சில சைகைகள் பேச்சை **நிறைவிப்பன** (supplementary). இச்செயலும் மிகவும் முக்கியமானது. ஏனென்றால், நாம் சொல்வதைப் புரிந்து கொள்வதற்குப் பிறர் நம்மைப் பார்க்க வேண்டியதிருக்கிறது. சில புராதனச் சமூக மக்கள், நாம் வெளிச்சத்தில் போய் அவன் என்ன சொல்கிறான் என்று பார்ப்போம்' என்று சொல்வதுண்டு.

நமது சைகையின் குறிப்பிடுமை (significance) பெரும்பாலும் நாம் வைத்துக் கொண்டதாலேயே ஏற்படுவது. பல சைகைகளுக்கு உள்ளார்ந்த பொருள் கிடையாது. அத்தகைய பொருள் இருந்தால் அப்பொருள் உலகெங்கும் ஒன்றாகவே இருக்க வேண்டும்; ஒவ்வொரு சமூகத்திலும் ஒரே சைகை ஒரே பொருளைக் குறிப்பிட வேண்டும். ஆனால் உலகின் நடைமுறை வேறு. நம் சைகைகள் பல வெளி நாட்டவருக்குப் புரிவதில்லை. பெருவிரலைக் கீழே சுட்டிக் காட்டினால் 'கொஞ்சம் தண்ணீர் ஊற்றுக' என்பது நம்மிடையே வழங்கும் பொருள். மேல் நாட்டில் இதே சைகை 'உன் எதிரியை மேற்கொள்' என்று பொருள்படும். குழந்தைகளுக்கு முதலில் நமது சைகைகள் புரிவதில்லை என்பதும் மேற்கூறிய கருத்தை வலியுறுத்தும். 'அமைதியாக இரு' என்னும் பொருள்பட விரலை உதட்டில் வைத்துக் கொண்டு குழந்தையைப் பார்த்தால் குழந்தை அதைப் பொருட்படுத்தாமல் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது. ஓர் அடியுடன் அல்லது அதட்டலுடன் இயைந்த பின்தான் இந்த அமைதிச் சைகை பொருள் பெறுகிறது.

குழந்தையின் உடம்படுப்புச் (Communicative) சைகைகளும் கற்பதாலேயே நிலைபெறுகின்றன. வலி, வசதிக் குறைவு, இன்பம் முதலியவற்றின் விளைவாகக் குழந்தை பலவிதக் கூப்பாடுகளை (cries) எழுப்புகிறது. அத்துடன் சில இயக்கங்களையும் உண்டாக்குகிறது. இதற்

கேற்பத் தாய் ஓர் ஒழுங்கான முறையில் பதிற் செயல் இயற்றுகிறுள். ஆகையால் குழந்தை, தன் கூப்பாட்டிற் கும், இயக்கத்திற்கும் பொருள் உண்டு என்று அறிந்து கொள்கிறது. பின் எழுச்சி வெளிப்பாட்டில் சில முறை களை உடம்படுப்புச் சாதனங்களாக இயற்றிப் பார்க்கிறது. எந்தக் கூப்பாடுகளும் இயக்கங்களும் பிறரிடமிருந்து பதில் பெறுகின்றனவோ அவற்றை இருத்திக் கொள்கிறது. முயன்று தவறும் முறையை இன்னும் தொடர்ந்து இயற்றி இச் சைகைகளை இன்னும் திட்டவட்டமாக்குகிறது. இவ் வாறு சமூகம் வைத்துக் கொண்ட பொருள்படச் சைகை இயற்றத் தொடங்குகிறது.

இனி பேசும் மொழியைப் பற்றி ஆராய்வோம். குழந் தையின் முதல் வாய் ஒலிக்கும், மழலைக்கும் (babbling) பொருள் கிடையாது. ஆனல் அவற்றிற்கு விரைவில் உடம்படுப்புப் பொருள் வந்து சேர்கிறது. அம்முறை பின் வருமாறு: குழந்தையின் குரலுக்கு ஏற்ப அருகிலுள்ளோர் துலங்குகிறுர்கள். எடுத்துக்காட்டாக, தாய் குழந்தையை அணுகி அதன் தேவையை நிறைவேற்றுகிறுள். இவ்வாறு தன் குரலொலியால் பிறரைத் தூண்ட முடியுமென்றும், அவ்வொலிக்குப் பொருள் உண்டென்றும் குழந்தை அறிந்து கொள்கிறது. பின் குழந்தை விளையாட்டாகப் பல குர லொலிகளை ஒன்று சேர்க்கிறது; இவ் வேறுபட்ட ஒலிச் சேர்க்கைகளைச் சொல்லிப் பார்க்கிறது. இவற்றுட் சில ஒலிச் சேர்க்கைகள் நாம் சரியென்று வைத்துக் கொண்ட மொழியின் சொற்களைப் போன்று அமைகின்றன. உடனே பெற்ருேர் அதையே திரும்பத் திரும்பச் சொல்லுமாறு குழந்தையைத் தூண்டுகின்றனர். இவ்வாறு, பேசும் மொழியிலுள்ள சிறு சொற்களஞ்சியத்தைக் குழந்தை பெறு கிறது. நாளடைவில் இச் 'சொற்கள் குறிப்பிட்ட பொருட் களோடும், நிலைமைகளோடும் தொடர்பு பெற்று, வைத்துக் கோடற் பொருள் (Conventional connotation) பெறுகின் றன. பின் குழந்தை வாக்கியங்கள் அமைக்கிறது. இச் செயல் தெரியாமல் பின்பற்றுவதாலும், 'உள்ளார்ந்த கற்றல்' மூலமும் (latent learning) * நடைபெறுகிறது.

* உள்ளார்ந்த கற்றலைப் பின்வரும் எடுத்துக் காட்டினுல் விளக்கலாம். சிறிய வயதில் தம் மூதாதையர் இலத்தீன் செய்யுட்களைப் படிக்கக் கேட்ட குழந்தை கள் பிற்காலத்தில் எளிதாக அம்மொழியைக் கற்றுக் கொள்கிறுர்கள். இதற்குக் காரணம் நாம் ஒன்றைக் கவனிக்கும்போது அதற்கேற்ப உள்ளார்ந்த தசை இயக் கங்கள் இயற்றுகிறேம். ஒரு பொருளைக் கவனிப்பவர் அப்பொருள் ஆகிறுர். இவ்வாறு அதைத் தெரிந்து கொள்கிறுர். இந்தியத் தத்துவத்திலுள்ள விருத்தியைக் கொள்கையும் இதே உண்மையைக் கூறுகிறது.

குழந்தை பிறருடைய பேச்சு இயக்கங்களைக் கவனித்து, தெரியாமலே அவற்றைப் பின்பற்றுகிறது. பெரியோர் சொல்லும் வாக்கியங்களைக் குழந்தைகள் முணுமுணுப்பதை நாம் பார்த்திருப்போம். இவ்வாறு பேச்சுப் பழக்கங்கள் அமைகின்றன. உள்ளார்ந்த கற்றல் நடைபெறுகிறது. பின், உற்றுநோக்கிப் பின்பற்றுவதன் மூலம் பல புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் பொருளற்ற முறையில் திரும்பச் சொல்கிறது. இத்தகைய கிளிப்பிள்ளை பாடம் சில வேளைகளில் சங்கடமாக இருக்கும். ஆனால், நிலைமைக்குப் பொருத்தமானவற்றையே சொல்லுமாறு பெரியவர்கள் குழந்தைகளைப் பயிற்றுவிக்கிறார்கள்.

சொற்களைத் தவிர வேறு சில கூறுகளும் பேச்சின் பொருண்மையைத் (Meaning) தீர்மானிக்கின்றன. குரலின் ஏற்றத்தாழ்வு, அழுத்தம், தொனி, இடைவெளி முதலியன இத்தகைய கூறுகளாம். இப்பேச்சுக் கூறுகள் வழங்குவதாலும், வைத்துக் கொள்வதாலும் பொருண்மை பெறுகின்றன. மேற்கூறியவாறே குழந்தைகள் இவற்றையும் கற்றுக் கொள்கின்றன.

திறமைகளைக் (Skills) கற்றுக்கொள்ளல் :

உள்ளார்ந்த கற்றல் மூலமும் தெரியாமற் பின்பற்றுவதன்மூலமும் பல பயனுள்ள செயல்களைக் கற்றுக் கொள்கிறோம். உற்றுநோக்கு மூலம் பெண்கள் (பையன்களுங் கூட) சமையல், துவைத்தல் போன்ற செயல்களைக் கொஞ்சம் கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் தங்கள் பெற்றோரையும் பெரியோரையும் தெரியாமலே பின்பற்றுகின்றனர். குழந்தைகள் செய்யும் பல செயல்களுள் சிலவற்றைப் பெற்றோர் பாராட்டுகிறார்கள். பிறவற்றை அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. இத்தகைய சமூகத் தேர்தலின் மூலம் குழந்தைகள் சரியான செயல்களைக் கற்றுக் கொள்கிறார்கள். குழந்தைகள் பிறரைப் பார்த்துச் செய்யும் பல்வேறு செயல்களுள்ளும், அவர்களுடைய வயதிற்கும் பாலுக்கும் பொருத்தமான செயல்களையே பெரியோர் செய்யத் தூண்டுகின்றனர். ஒரு சிறு பெண் குழந்தை உதட்டுச்சாயம் பூச முயன்றால் அதைத் திட்டுகிறார்கள். ஆனால் தாயைப் பின்பற்றி வீட்டு வேலை செய்தால் அதைப் பாராட்டுகிறார்கள்.

குழந்தை பலரைத் தனக்கு முன்மாதிரியாகக் கொண்டு அவர்களைப் பின்பற்றுகிறது. இது மிகவும் நல்லது. குழந்தை தன் தாயை மட்டும் பின்பற்றுவது வாழ்க்கைக்குப் போதிய ஆயத்தமாகாது. வயதிற்குத் தக்கபடி குழந்தையின் முன்மாதிரிகள் மாறிக்கொண்டு வரவேண்டும். கூட்டுக் குடும்பத்தில் முன்மாதிரியாகப் பல்வேறு வயதுள்ள பிள்ளைகள் அமைகிறார்கள். இக்காலச் சிறிய குடும்பங்களில் இந்த வசதி இல்லாததால் குழந்தைகள் தம் குடும்பத்திற்கு வெளியிலிருந்தும் முன்மாதிரிகளைத் தேர்ந்து கொள்ள வேண்டியதிருக்கிறது.

பாவனையும் சமூக அங்கம் வகிக்கக் கற்றலும் : (Make-believe- and role learning)

சமூகத்தில் ஒருவர் பூணும் வேடம் அல்லது அவர் வகிக்கும் அங்கம் சமூக எதிர்பார்ப்பைப் (expectation) பொறுத்தது. தனியாள் பிற்காலத்தில் என்ன இடம் வகிக்க வேண்டுமோ அதற்கேற்பப் பயிற்றுவிக்கப்படுகிறார். ஒவ்வொரு சமூகத்திலும் பெண்ணின் இடம் ஆணின் இடத்தினின்றும் வேறுபட்டது. வேலைப்பாகுபாடு பாலை ஆதாரமாகக் கொண்டும் வகுக்கப்பட்டுள்ளது. பல சமூகங்களில் பெண்ணின் முக்கியமான வேலை வீட்டு வேலையேயாகும். அவள் வெளியே சென்று அதிக வேலை செய்வதில்லை. பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்று சொல்லிக் கொள்ளும் முன்னேற்றமடைந்த சமூகங்களில் கூட மனையியல் பாடம் பெண்களுக்கே உரியதாகக் கருதப்படுகிறது. ஒரு பையன் மனையியல் பாடம் எடுத்துப் படிக்க விரும்பினால் அது வேடிக்கையாக இருக்கும். பாலை அடிப்படையாகக் கொண்டு அங்கங்கள் அளிக்கப்படும் சமூகங்களில் பையன்களும் பெண்களும் வெவ்வேறு விதமான ஆடை அணிகின்றனர். ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பின் பையன்கள் பெண்களோடு சேர்ந்து விளையாடினால் பிறர் ஏளனம் செய்கிறார்கள். பையன்கள் திறந்த வெளிச் செயலில் அதிகமாக ஈடுபடுகிறார்கள். லாப்பியரும் (La Piere) ஃபார்ன்ஸ்வொர்த்தும் (Farnsworth)[4] கூறியபடி, பையன்கள் வெளி விளையாட்டுக்களிலும் கூட்டாளிக் குழுக்களிலும் (gangs) ஈடுபடுவதால் அவர்களிடம் கூட்டு மனப்பான்மை நன்கு வளர்கிறது. அவர்களுடைய போட்டிச் செயல்களும் வன்செயலுணர்ச்சியும் (aggression) ஒரு படிவமாக அமைகின்றன. அவர்கள் பெருந்தன்மையோடு

போட்டியிடுகிறார்கள். ஆனால் பெண்கள், சமையல், தையல் போன்ற தனித்த வேலைக்காகவும் அடங்கி நடக்க வேண்டிய வீட்டு அங்கத்திற்காகவும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். ஆகையால் போட்டி அறமும் சமநிலைப் பொருத்தப்பாடும் கற்பதற்கு அவர்களுக்குப் போதிய வாய்ப்பு கிடையாது. ஆகையால் அவர்களுடைய போட்டிச்செயலும் வன்செயல் நடத்தையும் ஒரு படிவமாக அமைவதில்லை (unpatterned). கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்து தனிக்குடித்தனம் நடத்தவேண்டும் என்று பெண் தன் கணவனைத் தூண்டுவதும் இதனாலேயே போலும்.

குழந்தைகள் வளர வளர வேறு பலரும் அவர்களுக்கு முன் மாதிரிகளாக அமைகின்றனர். கதையில் படித்த தலைவர் தலைவியர், தங்கள் குடும்பதிலும், ஊரிலும், நாட்டிலும் வாழ்ந்து வரலாற்றுப் புகழ்பெற்ற பெரியோர் எல்லோரும் குழந்தைகளுக்கு முன்மாதிரிகள் ஆகக்கூடும். குழந்தைகள் இத் தலைவர்களைக் கற்பனை செய்து அவர்களைப் பின்பற்றித் தம் நடத்தையை அமைக்க முயல்கின்றனர். இதிலும் சமூகத் தேர்தல் இடம் பெறுகின்றது. வரலாறு எழுதுபவர் ஒருவனைத் தலைவனாகவும் மற்றொருவனை வில்லனாகவும் சித்திரிக்கிறார். பெற்றோரும் தம் குடும்ப வரலாற்றை எடுத்துக் கூறும்போது தாங்கள் எவர்களை வியக்கிறார்கள் என்பதையெல்லாம் காட்டி விடுகிறார்கள். கதையில் வரும் பாத்திரங்களெல்லாம் குழந்தைகளுக்கு மாதிரிகளாக அமைகின்றனர். இந்நூல் ஆசிரியர் தம் மகளுக்குக் கதை சொல்லும்போது அவள் இடைமறித்து 'அவர் நல்லவரா? கெட்டவரா?' என்று கேட்பாள். ஆசிரியர் தெளிவான பதில் சொல்லாவிட்டால் அவள் விடமாட்டாள். 'அவரை நீங்கள் விரும்புகிறீர்களா? திட்டமாகச் சொல்லுங்கள்' என்பாள்.

தனியாளின் தன்னகத்தின் சமூகப் பண்பு
(Social Character of the Individual's Self)

குழந்தை பிறரொடு இடைவினை (interaction) இயற்றுவதன் பயனாக அதன்தன்னகம் (self) உருவாகிறது. அதில் இரண்டு கூறுகள் அடங்கியுள்ளன. (1) தான் பொருட்களினின்றும் பிற ஆட்களினின்றும் வேறுபட்டிருப்பதைக் குழந்தை உணரத் தொடங்குகிறது; (2) குழந்தை தன்னை மதிப்பிட்டுக் கொள்கிறது.

குழந்தை முதலில் தன்னைப் பற்றி எண்ணும்போது தாயையும் தனது பாகங்களுள் ஒன்றாகவே வைத்துக் கொள்கிறான். தனது உறுப்புக்களோடு விளையாடுவது போலவே தாயின் மார்பு, முடி, மூக்கு, கண் முதலிய வற்றோடும் விளையாடுகிறான். ஆனால் சிறிது காலம் கழித்து, தாய் அடிக்கடி தன்னை விட்டு அப்புறம் சென்று விடுகிறாள் என்றும், தனது உடலுக்குட்பட்ட தன்னகம் ஒரு தனித்த பொருள் என்றும் காண்கிறான். இந்த வரையறை தன் உடலின் மேல் பரப்பில் அமைகிறதென்று காண்கிறான். தாயின் உடல் தன் உடலின் வேறாகப் பிரிந்து செல்வதைப் பார்க்கிறான். மேலும் தன் உடலுறுப்புக்களினின்றும், அவற்றின் மூலமாகவும் வரும் அனுபவங்கள் தன்னோடு நெருங்கிய தொடர்புள்ளனவாக இருப்பதைக் கண்டுகொள் கிறான். பிறர் தன்னிடம் தனித்ததொரு முறையில் பேசு வதையும் நடந்து கொள்வதையும் நோக்குகிறான். இக் கண்டுபிடிப்பு அவன் தன்னைக் குறிப்பிட்டுப் பேசும் முறை யில் வெளியாகிறது: 'யார் இதைச் செய்தார்கள்?' என்று கேட்டால் சுரேஷ் என்னும் குழந்தை, 'சுரேஷ் செய்தான்' என்பான். இன்னும் கொஞ்ச காலம் கழித்து, 'நான் செய் தேன்' என்பான். தான் ஒரு தனியாள் என்று கண்டு கொண்டான் என்பதை இப்பதில் காட்டுகிறது.

குழந்தை தன்னையே மதிப்பிட்டுக் கொள்கிறான். இந்த மதிப்பும் சமூகத்தால் தீர்மானிக்கப்படுவது. பிறர் அவனை நடத்தும் விதமும், பிறர் அவனை மதிக்கும் விதமும் அவ னுடைய தன்னெண்ணத்தைத் தீர்மானிக்கின்றன. உவில் லியம் ஜேம்ஸ் தன்னகத்தின் சமூகத்தன்மையைப் பின் வருமாறு விளக்குகிறார்: 'ஒரு மனிதன் சமூகத்தில், 'எனது' என்பதெல்லாம், அவனுடைய தோழர் அவனை அறிந்து கொள்ளும் வகையைப் பொறுத்தது.....பார்க்கப்போனால் ஒரு மனிதனை அறிந்து கொண்டு, அவனைப் பற்றிய சாய லைத் தம் மனத்தில் இருத்துபவர்கள் எத்தனை பேர்கள் உண்டோ, அத்தனை தன்னகங்கள் அந்த மனிதனுக்கு உண்டு.' தன்னைப் பற்றிப் பிறர் என்ன எண்ணுகிறார்கள் என்றுஅவன் எண்ணுகிறானே அது அவனுடைய நடத்தை யில் வெளியாகிறது. ஒரு தனியாள் தன் தன்னகத்தை நோக்கும் வகையைக் கூலீ என்பவர் 'கண்ணாடித் தன்ன கம்' (looking-glass self) என்று கூறியுள்ளார். ஒவ்வொரு மனிதனும் பிறர் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைச் சரிவர அறிந்து கொள்கிறான், அல்லது கற்பனை

செய்து கொள்கிறான்; இந்த எண்ணம் அவனுடைய தன் னோக்கையும் (self-view), எடுப்பையும் (bearing,) நடத் தையையும் தீர்மானிக்கிறது. 'நமது தன் மதிப்பும், தன்னம் பிக்கையும் பிறர் நம்மைப் பற்றி நன்றாக எண்ணுகிறார்கள் என்ற எண்ணத்தைப் பொறுத்தது; உலகு ஈரமற்றது, அயன்மையுடையது என்று நாம் கொண்டால் இவை முறிந்து போகின்றன, என்று கூலி கூறியுள்ளார். நாம் ஒன்றுக்கும் உதவாதவர்கள் அல்லர் என்று நம் அறிவு கூறலாம்; ஆனால் பிறர் இக்கருத்தை ஒத்துக்கொள்ளா விட்டால் நமது நம்பிக்கையும் தன் மதிப்பும் ஆட்டம் கொடுக்கின்றன. பிறர் நம்மை மதித்துச் செய்யும் செயல் களெல்லாம் நம் தன்னகத்தை ரப்பர் பலூன்போல் ஊது கின்றன.

ஊக்கிகள் (motives) **சமூகத்தன்மை பெறல்:**

மக்களாகிய நாமும் விலங்குகளைப் போலவே நமது உயிரியத் (organic) தேவைகளை நிறைவேற்ற விழை கின்றோம். ஆனால் நாம் அவற்றை நிறைவேற்ற முயலும் முறை விலங்குகளின் முறையினின்றும் வேறுபட்டது. இவ் வேறுபாடு சமூகப் பாதிப்பினால் ஏற்படுவது. மேலும் உயிரியல் (biological) தேவைகளினின்றும் மிகத் தொலைவு பட்ட பல தேவைகளையும் நாம் நாடுகிறோம். இதற்குக் காரணம், நாம் வரையறுக்கப்பட்ட சமூக நிறுவனங்கள் கொண்ட சமூகத்தில் வாழ்வதேயாம். சமூகத்தில் உறுப் பினராக இருப்பதால் நம் உயிரியல் ஊக்கிகள் பலவகை களில் மாற்றியமைக்கப்படுகின்றன. நமது உள்துடிப்புக் கள் மடைமாறுகின்றன, தடம் மாறுகின்றன, பொதுமைப் படுகின்றன. புதிய கவர்ச்சிகளும் தோன்றுகின்றன.

மடை மாற்றம் (canalization)

தண்ணீர் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதற்காக நாம் மடை கட்டிக் கால்வாய் வெட்டுகிறோம். அதுபோலவே, நமது உள் துடிப்புக்களையும் கட்டுப்படுத்தி ஒரு வழியே செலுத்த வேண்டும் என்று சமூக அறம் கூறுகிறது. எடுத்துக் காட்டாக, பாலுறக்கம் எதிர்பாலரி டத்தே செலுத்தப்பட வேண்டும். ஒரு ஆள் எத்தனை பெண்களை மணந்து கொள்ளலாம் என்பதற்கும் கட்டுப் பாடு உண்டு. அது போலவே திரட்டுக்கமும் கட்டுப்

படுத்தப்படுகிறது. நாம் சில பொருட்களைச் சேர்க்கலாம், வேறு சிலவற்றை வரையறையின்றிச் சேர்க்க முடியாது. திருடுதல், கடன் வாங்குதல், பிறரை அச்சுறுத்தி ஈட்டுதல் முதலியன தவருகக் கருதப்படுகின்றன. இந்து சமூகத்தில் கலியாண மாப்பிள்ளை 'நான் என் சமூக, பொருளாதார, பாலியல் நடத்தையில் வரம்பு இகந்தனவற்றைச் செய்ய மாட்டேன்' என்று சூள் உரைப்பதும் மடை மாற்றதிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

தடமாற்றம் (Deflection)

ஓர் உள்துடிப்பைத் தடம்மாற்றுவதாவது, சக்தியை ஒரு செயலில் விட்டு அதனெடு சம்பந்தப்படாத மற்றொரு பதிலீட்டுச் (substitute) செயலில் செலுத்துவதாகும். இப் பதிலீட்டுச் செயல் சமூகம் ஒப்புக் கொள்வதாக இருந்தால் இத்தடமாற்றத்தைத் **தூய்மைப்படுத்தல்** (sublimation) என லாம். எடுத்துக்காட்டாக, அகப் பொருட் செய்யுள், சமய பக்தி, இசை ஆர்வம் முதலியவற்றின் மூலம் காதல் உந்து தூய்மைப்படுகிறது. குழந்தையில்லாத கைம்பெண், அனு தையர் விடுதி அல்லது குழவிப் பூங்கா நடத்துவதன் மூலம் தன் தாய்மை ஊக்கத்தைத் தூய்மைப்படுத்தலாம்.

ஒரு செயல் ஏதேனும் ஓர் ஊக்கத்தின் தடம் மாறிய வெளிப்பாடா என்று கண்டுகொள்வது அரிதன்று. குறி யீட்டுத் தன்மை வாய்ந்த (symbolic) செயல்கள் தடம் மாறியனவாக இருக்கக் கூடும். ஒரு மனிதன் உடல் ஒறுப் பைச் (mortification of the flesh) சாதித்தும் போதித்தும் வந்தால், அவன் தன்னிடத்துள்ள முறிவுற்ற வல்வினையைத் (frustrated aggression) தடம் மாற்றுகிருன் என்று ஐயுற லாம். பக்தன் ஒருவன் காதல் நெறியில் ஆண்டவனை அணுகினால், அதைக் காதல் உந்தின் தடமாற்றமாகக் கருதலாம். நமது ஊகம் சரிதானா என்று பார்க்க வேண்டு மானால், நாம் நினைக்கும் ஊக்கத்தின் இயல்பான வெளிப் பாடு கிடைத்தபின் மேற்கூறிய செய்கை குறைகிறதா அல்லது மறைகிறதா என்று பார்க்கவேண்டும்.

மனவெழுச்சி வெளிப்பாட்டைச் சமூகம் பாதித்தல்

மனவெழுச்சியில் உயிரி முழுவதும் கிளர்ந்த நிலையில் இருக்கிறது. தன்னியக்க (autonomous) நரம்புத் தொகுதி

தூண்டுவதால் உயிர்ச்சார (vital) உறுப்புக்களின் செயல் மாறுபடுகிறது; முக வெளிப்பாடு மாறுகிறது; வெளியான உடல் சார்ந்த நடத்தையும் இதைத் தொடர்ந்து ஏற்படக் கூடும். சினம் வந்தபோது பற்களைக் கடிக்கிறோம், கையை மடக்குகிறோம், சிலவேளை உறுமுகிறோம். அச்சமுற்ற மனிதன் பொதுவாகவோ, குறிப்பிட்ட முறையிலோ, பின் வாங்குகிறான். அருவருப்பை, துப்புவது போன்ற உதட்ட சைவாலும், தலையை ஆட்டுவதாலும் வெளியிடுகிறோம். மனவெழுச்சி நிலையில் முகத்திலும் உடலிலும் தோன்றும் இயக்கங்கள், விலங்குகளான நமது முன்னோருக்கு உயிரி யல் முறையில் பயன்பட்டமையால் இன்னும் மறையாமல் நிற்கின்றன என்று ஃபிராய்டின் கூறினார். எடுத்துக்காட் டாக, துர்நாற்றப் பொருட்களை விலக்குவதற்காக விலங்கு மூக்குத் துவாரங்களை அடைக்கின்றன. நாம் இந்த விலங் குப் பழக்கத்தை மரபுவழிப் பெற்றுள்ளோம் என்று ஃபிராய் டின் கூறினார். அச்சமுற்றபோது விலங்குகளின் மூக்குத் துவாரங்கள் விரிவடைகின்றன. இதன் மூலம் அது அதிக மான மூச்சு எடுக்க முடிகிறது. நாமும் இவ்வாறே செய் கிறோம். மேலும் விலங்குகள் தம் பற்களைக் கொண்டு எதிரிகளைத் தாக்குகின்றன. நாமும் வெகுண்டபோது கடிக்கப்போவது போல் பல்லைக் காட்டுகிறோம். இதனால் தான் எழுச்சியோடு தொடர்ந்த உயிரியற் பயனுள்ள பழக் கங்களை நாம் விலங்குகளிடமிருந்து பெற்றுள்ளோம் என்று ஃபிராய்டின் கூறினார். ஆனால் இத்தகைய பண்புக் கடத்தற் கொள்கையைப் பல அறிஞர் ஏற்றுக் கொள்வதில்லை. முதிர்ந்தோரின் மனவெழுச்சி வெளிப்பாடுகள் குழந்தைப் பருவ எழுச்சி வெளிப்பாட்டுப் படிவத்தின் விளைவுகளாகும்' என்று அவர்கள் கொள்வர். இதைப் பற்றி இங்கு ஆராய வேண்டியதில்லை. குழந்தையின் எழுச்சி நடத்தையை முன்வலிமைய (prepotent) மறிவினைகளின் செயலென்று கொண்டால், அம் முன்வலிமைய மறிவினைகளின் வரலாற் றைப் பற்றியும் நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது என் பதை மட்டும் இங்கு கூறி விடுவோம். மனவெழுச்சி நிலை களில் இயற்கையான சில துலங்கல்கள் உள்ளன. என் பதில் ஐயமில்லை. அதே சமயத்தில் மனவெழுச்சி வெளிப் பாடுகள் சமூக வைத்துக்கோடலால் பெரிதும் மாறுதல் அடைகின்றன. எழுச்சி வெளிப்பாடு முற்றிலும் கற்பதா லேயே, அதாவது சமூக வைத்துக்கோடலின் வன்மையா லேயே அமைகிறது, என்று லான்டிஸ் (Landis) கூறிய தையும் நாம் ஒப்புக் கொள்ள முடியாது. இவர், பண்பாட்

டின் பங்கையும் வைத்துக்கோடலின் பங்கையும் மிகுத்துக் கூறுகிறார். மனவெழுச்சி வெளிப்பாடு முற்றிலும் பண்பாட்டினால் அமைவது என்று அவர் கூறினார். ஆயின் பண்பாடுதானே இவற்றைத் தொடக்குவித்தது? என்னும் கேள்வியும் எழும். இகழ்ச்சியைக் குறிக்கப் புருவத்தைத் தூக்குவதாகச் சமூகம் வைத்துக் கொண்டதால் எல்லோரும் இம்முறையைக் கையாளுகிறார்கள்; வெவ்வேறு பண்பாடுகளில் மக்கள் தங்கள் மகிழ்ச்சியை வெவ்வேறு வகையில் வெளிப்படுத்துகிறார்கள் என்று அவர் கூறினார். சிலர் கை தட்டுகிறார்கள், சிலர் சிரிக்கிறார்கள், இக்கருத்தை லான்டிஸ் புற ஆய்வுகளின் மூலம் மெய்ப்பித்தார். ஓர் ஆய்வில் பல ஆட்களிடத்து, குறிப்பிட்ட எழுச்சிகளை ஊட்டினார். ஆனால் எழுச்சிக்கும் வெளிப்பாட்டு முறைக்கும் உடனியைபு இருக்கவேண்டிய அவசியமில்லையென்று காட்டினார். மற்றொரு ஆய்வில் சில மாணவரின் மனவெழுச்சி வெளிப்பாடுகளைப் படம் பிடித்து, பிற மாணவரை அவ்வெழுச்சிகளைக் குறிப்பிடுமாறு கூறினார். மாணவர் தாம் அந்தந்த வெளிப்பாடுகளை இயற்றுவதுபோல் கற்பனை செய்து பார்த்தும் எழுச்சிகளைக் சரியாகக் கூறமுடியவில்லை. அச்சத்தை உவகை என்று சொல்லக்கூடிய அளவுக்குத் தீர்ப்பு வேறுபட்டது. ஆகையால் மாணவர் தம் சமூகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட வெளிப்பாடுகளையே அடிப்படையாகக் கொண்டு எழுச்சியைத் தீர்ப்பிட முற்பட்டனர் என்று லான்டிஸ் கண்டார்.

வைத்துக்கோடல் முக்கியமானதானாலும், அதனால் வெளிப்பாடுகளை உண்டாக்க முடியாது. இயற்கையாக அமைந்த வெளிப்பாடுகளுள் சிலவற்றைத் தேரவும் இருத்தவுமே முடியும். பண்பாட்டு வேற்றுமைகள் பல இருப்பதும் எழுச்சி வெளிப்பாட்டில் எங்கும் ஒன்றுகத் தோன்றும் சில படிவங்கள் இருப்பதும் இக்கருத்தை வலியுறுத்தும். அதாவது எழுச்சிக்கு ஒரு பொதுமொழி உண்டு. (நகைத்தல், அழுதல், உவகை வெளிப்பாடு, வெறுப்பு வெளிப்பாடு முதலியவற்றைப் பொறுத்தவரை நம் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள வேற்றுமைகளை ஆராய்வது பயன்தரும்.)

லான்டிஸின் கோட்பாட்டில் ஓரளவு உண்மை உண்டு. அதாவது மனவெழுச்சி வெளிப்பாட்டில் சமூகக் கூறுகளுக்கும் பங்கு உண்டு என்பதேயாம். ஒரு நிலைமையில் எந்த எழுச்சி தோன்றும், அது எவ்வாறு வெளிப்படும் என்

பதைத் தீர்மானிப்பது குழுவின் பண்பாடேயாகும். எடுத்துக்காட்டாக, நெருங்கியவர் ஒருவர் இறந்துவிட்டால் அழுவதே இயற்கை என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் சில குழுக்களில் இறப்பு, அதுவும் முதியவர் சாவு இரங்கற் குரியதன்று ; ஏனெனில் இறந்தவர் ஆண்டவனுக்கு அருகில் சென்றுள்ளார். 'நான் பெருநகருக்குச் செல்கிறேன் ; எனது வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று துக்காராம் மொழிந்தார். 'நான் போகும் வேளை வந்தது, அன்புச் சொற்களை அறைகூவுங்கள்' என்று தாகூர் கீதாஞ்சலியில் இயம்பியுள்ளார். சீக்கியர்களும் பிறரும் தம் சொந்த இழப்பிற்காக இரங்காமல் இறந்த ஆன்மாவிற்காக வேண்டுதல் செய்கிறார்கள். எழுச்சி வெளிப்பாட்டிலும் சமூக வைத்துக் கோடலின் வன்மையைக் காணலாம். குழந்தை வளர வளர, தன் எழுச்சி வெளிப்பாடுகளை மட்டுப்படுத்தவும், ஆசாரத்திற்காகப் பொய்யான எழுச்சியை வெளிக்காட்டவும் கற்றுக் கொள்கிறான். சினம், நாணம், வியப்பு முதலியவற்றைக் காட்டுவதற்கு வைத்துக்கோடன் முறைகள் உள்ளன. இவற்றை நடிகர் மேடையிலும் திரையிலும் நன்றாகச் சித்திரிக்கின்றனர். சில நடிகர் இவற்றில் சில முன்னேற்றத்தையும் உண்டாக்குகிறார்கள். பிறர் அதைப் பின்பற்றுகிறார்கள். குழந்தைகள் மனவெழுச்சியில் வைத்துக்கோடல் மொழியைக் கண்டு அதைப் பயில்கிறார்கள். விஷ்ணு தர்மோத்தர புராணத்தில் இயற்கையான (கல்லாத) மனவெழுச்சி வெளிப்பாடுகளையும், நடிகர் தங்கள் முகத்தாலும், குரலாலும், நிலையாலும் எழுச்சிகளைத் தோற்றும் முறையையும் பற்றிக் கூறப்பட்டுள்ளது. 7 எழுச்சிகள் முகத்திலும், சைகையிலும் குரலிலும் தோன்றுவதைப் பற்றிய குறிப்பான ஆய்வுகள் நம் நாட்டில் நெடுங்காலத்திற்கு முன்னரே இயற்றப்பட்டுள்ளன ; இன்றைய மேல்நாட்டு ஆய்வுகளுக்கு இவை முன்னோடிகளாக அமைந்துள்ளன.

புலக்காட்சியைச் சமூகம் பாதித்தல் :

தனியாளின் பல கூறுகளைச் சமூகம் பாதிப்பதால் அவர் சமூகத்தன்மை பெறுகிறார் என்று மேலே பார்த்தோம். இனி புலக்காட்சியைச் சமூகம் பாதிக்கும் வகையைப் பற்றிப் பார்ப்போம். நமது புலக்காட்சியும் சமூகக் கூறுகளினின்றும் நீங்கியதன்று. புலன்காணும் ஆற்றலோடுதான் நாம் உலகில் தோன்றுகிறோம். காணும் பொருளினுள் ஏதேனும்

ஒரு பொருண்மையைக் (meaning) காண்பதே புலக்காட்சி யாகும். இத்தகைய பொருண்மை அளிப்பு நாம் அப்பொருளை எப்படிக் காணப் பயிற்றுவிக்கப்படுகிறோம் என்பதைப் பொறுத்தது. ஒரு பசு அல்லது காளையை ஒரு வைதீக இந்து காணும் முறை வேறு, பிறர் காணும் முறை வேறு. வயலை அல்லது பருவநிலையைக் கிராமத்தார் காணும் நோக்கு வேறு, நகரத்தார் காணும் நோக்கு வேறு. ஒரு சீமாட்டியும் ஒரு தொழிலாளிப் பெண்ணும் தம் குழந்தை களைக் காணும் முறை வேறுபடுகின்றது.

சமூக, பண்பாட்டுக் கூறுகள் புலக்காட்சியைப் பாதிக் கும் வகையை மெய்ப்பிக்க இரண்டு புற ஆய்வுகளைப் பார்க்க லாம். ஓர் ஆய்வில் சில அமெரிக்க வெள்ளையர் குழந்தை களிடம் தம் வீட்டிற்கும் ரயில் நிலையத்திற்கும் இடையே யுள்ள வீடுகள் எத்தனை என்று கூறுமாறு கேட்டனர். அப் பிள்ளைகள் நீக்ரோக்களின் வீடுகளை எண்ணவில்லை. அவை அவர்களுக்கு மனிதரின் வீடுகளாகப் புலன்பட வில்லை. மற்றொரு புற ஆய்வில், பணத்தைப் பெரிதும் மதிக் கும் குழுவைச் சேர்ந்தவர்கள் அதிகப் பெறுமானமுள்ள முத்திரைகள் குறைந்த மதிப்புள்ள முத்திரைகளை விடப் பெரியவை என்று கருதினர். பேராசிரியர் ஃபார்ட்லெட் இயற்றிய புற ஆய்வில் ஆங்கில மாணவர் ஒரு கதையி லுள்ள இயற்கை மிஞ்சிய (supernatural) கூறுகளை விட்டு விட்டதையும் இந்திய மாணவர் அவற்றையும் சேர்த்துச் சொன்னதையும் பற்றி முன்னரே பார்த்தோம். அக்கதை இரு சாராருக்கும் வெவ்வேறு வகையில் புலனையது.

References

1. R. E. S. Faris, Social Psychology. P. 343.
2. A. S. Neill, Hearts Not Heads in the School.
3. Bogardus, Fundamentals of Sociology. P. 57.
4. La Piere and Farns worth, Social Psychology, P. 107
5. C. H. Cooley, Human Nature and the Social Order.
6. F. H. Allport, Social Psychology.
7. Vishnudharmottara Purana 24-12-24-12.

———

9. ஆளுமை
(Personality)

சமூக உளவியலில் சமூக இடைவினை எவ்வளவு முக்கியமோ, ஆளுமையும் அவ்வளவு முக்கியமானது. ஏனென்றால் சமூக இடைவினையால்தான் ஆளுமை அமைகிறது. இரு ஆட்களுக்கிடையேயுள்ள இடைவினையின் தன்மை அவர்களுடைய ஆளுமையாலும் அவர்கள் இருக்கும் சுற்று நிலையாலும் (circumstances) அமைகிறது. இன்றையச் சமூக உளவியலர் ஆளுமைப் பிரச்சினையைப் பற்றி அதிக அக்கறை கொண்டுள்ளனர்; ஏனெனில் பிறக்கும்பொழுதே ஆளுமை அமைந்திருப்பதில்லை. அது வளர்ச்சியாலும், அடைவினாலும் (achievement) அமைகிறது. முன்னமைத்த (prefabricated) ஒரு வீட்டின் பாகங்களைப் போல ஆளுமையின் பல கூறுகளை ஒன்று சேர்த்தால் மட்டும் ஆளுமையைப் படைத்துவிட முடியாது. ஆளுமைக் கூறுகள் தனியாளின் இயல்பான உயிரியல் ஆற்றல்களுக்கும் அவருடைய சமூகப் பண்பாட்டுச் சூழ்நிலைக்கும் ஏற்படும் இடைவினையினாலேயே உருத்துலங்குகின்றன (develop). ஆளுமை வளர்வதற்குப் பல ஆண்டுகள் ஆகின்றன. ஐம்பதில் 'வளையாத' ஆளுமை ஓரளவு நிலையாக இருக்குமென்றாலும் அது முற்றிலும் மாறுத நிலையை ஒருபோதும் அடைவதில்லை. ஆளுமையைப் பற்றிப் படிப்பதால் நாம் நம்மையும், பிறரையும் புரிந்து கொள்ள முடிகிறது. ஒருவரின் ஆளுமையப் பற்றி அறிந்தால் அவர் ஒரு குறிப்பிட்ட நிலையில் எப்படி நடந்து கொள்வார் என்று ஓரளவு முற்கூறமுடியும். ஒரு குழுவில் உள்ள பொது ஆளுமைப் படிவத்தை நாம் அறிந்தால் அக்குழுவின் கூட்டு நடத்தையையும் முற்கூற முடியும்.

தற்காலத்தில் ஆளுமை ஆய்வைத் தொடங்கிய உளவியலருள் யானே (Janet) மார்ட்டன் பிரின்ஸ் (Morton Prince), ஃபிராய்டு, ஆட்லர், யுங் முதலியவர் களைக் குறிப்பிடலாம். இவர்கள் மருத்துவர்களானதால் நடைமுறை (practical) நோக்கினைச் சிறப்பாகக் கொண் டார்கள். தங்கள் நோயாளிகளின் கோளாற்றைக் கண்டு பிடித்து அவர்களை சமநிலைக்குக் கொண்டுவருவதே அவர் களுடைய நோக்கம். இதற்காக அவர்கள் நோயாளிகளின் நடத்தையின் உள்ளான இயங்கியலை (dynamics) ஆய்ந் தனர்; மனித ஊக்குவிப்பு (motivation) எப்படித் தொடங் குகிறது, எப்படி வளர்கிறது என்று ஆய்ந்தனர்.

ஆளுமை என்றால் என்ன?

'Personality' என்னும் ஆங்கிலச் சொல் முகமூடி என்று பொருள்படும். 'Persona' என்னும் சொல்லினின்று பிறந்தது. பண்டைக் காலத்தில் நடிகர் முகமூடி அணிந்து கொண்டு நடிப்பதற்கு இரு காரணங்கள் இருந்தன. முதலாவதாக அவர் தலைவனாக நடிக்கிறாரா அல்லது வில்லனாக நடிக்கிறாரா என்று காட்டுவதற்கு பயன்பட்டது. இரண்டாவதாக, தாம் பேசுவது தொலைவில் கேட்பதற்குப் பயன்படும் ஒலிபெருக்கியை மறைத்து வைப்பதற்கும் இது உதவியது.

ஆகவே இச்சொல் வரலாற்றைப் பார்த்தால் ஆளுமை என்பது ஒருவர் பூணும் 'வேடம்', அவர் வகிக்கும் 'அங்கம்', பிறர் அவரைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பதே யாகும். இப்படிப் பார்த்தால், ஒருவர் எப்படித் தோன்று கிறார், எப்படிப் பிறரைப் பாதிக்கிறார், எப்படிப் பிறரைத் தூண்டுகிறார் என்னும் சமூகத் தூண்டல் மதிப்பே (social stimulus value) ஆளுமையாகும். ஆனால் இது மிகவும் புறம்பான நோக்கமாகும். ஒரு மனிதன் பூணும் வேடங் களுக்கும் ஒரு மனிதன் உண்மையாகவே **எப்படிப்பட்டவன்** என்பதற்கும் உள்ள வேற்றுமையை நாம் காணவேண்டும்.[1] நெஞ்சில் அவலம் நிறைந்த ஒருவர் சுற்றுநிலையின் வன்மை யால் நகைச்சுவை மன்னரென்று பெயர் வாங்க முடியும். ஒரு மனிதன் கணவனாகவும், தந்தையாகவும், தலைவராகவும், பின்பற்றுபவராகவும், பல அங்கங்களை நன்கு வகிக்கக் கூடும். ஆனால் இவற்றின் மூலம் அவர் தம் ஆளுமையின் ஒரு பாகத்தையே வெளிபடுத்தக் கூடும். ஒரு மனிதனுடைய

பெயர்ப்பேற்றை(reputaion) நாம் ஆளுமை என்றுகொள்ளக் கூடாது[2], என்று ஆல்ப்போர்ட் கூறியுள்ளார். ஒரு மனிதன் சமூகத்தில் அதிகமாகப் பங்கு கொள்ளாதவராக இருந்தும் உண்மையாகவே பண்பட்டவராக இருக்கக் கூடும். மேலும் மனத்தில் ஈகைப் பண்பு இன்றியே ஒருவர் பிச்சைக்காரனுக்கு ஒரு காசு கொடுக்கலாம். ஆகையால் ஒரு வகையான பெயர் பெற்றவரை நாம் அத்தகைய ஆளுமை உடையவர் என்று கொள்ளக் கூடாது. அப்படியே பெயர் பெருதவர்களும் ஆளுமை அற்றவர்கள் அல்லர். தனியாளின் சமூகத் தூண்டல் மதிப்பையும் ஆளுமையையும்முற்றும் ஒத்தவையல்ல என்று கருதுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஒருவர்க்கு முன்பாகப் பிறர் துலங்கும் வகை துலங்குபவருடைய ஆளுமை அமைப்பையும் பொறுத்தது. சிலர் அமைதியான பாங்குடையவரைப் பொறுப்பர்; சிலர் இப்பாங்கினரை நாடுவர்; வேறு சிலர் இத்தகையவர்களை விரும்புவதில்லை. கடைசியாக ஒரு தனியாள் பிறருக்கு எப்படித் தோன்றுகிறாரோ அதுதான் ஆளுமையென்றால் ஒரே ஆளுக்குப் பல ஆளுமைகளுண்டு என்று சொல்லவேண்டும். ஏனென்றால் அவர் பலருக்குப் பலவிதமாகத் தோன்றுகிறார். ஆகையால் ஆளுமையின் உள்ளார்ந்த நோக்கு தேவைப்படுகிறது. ஒருவர் எப்படித் தோன்றுகிறார்? என்பதல்ல, அவர் யார்? எத்தன்மையர்? என்பதே ஆளுமை என்று கொள்ளவேண்டும்.

தனியாள் யார்?

இக்கேள்விக்கு விடையளிப்பதற்கு முதற்படியாக, தனியாளின் **பண்புக் கூறுகளை**ப் (Characteristics) பார்க்க வேண்டும். ஒரு தனியாள் வழக்கமாக அல்லது தொடர்ந்து சிந்திக்கும், உணரும், செயற்படும் வகையைப் பண்புக்கூறு என்கிறோம். ஒரு மனிதர் ஒரோவழி வெகுண்டால், இந்நிகழ்ச்சியைக் கொண்டு நாம் அவரை மதிப்பிடுவதில்லை; அவர் கோபக்காரர் என்று நாம் சொல்வதில்லை. என்றாவது ஒருநாள் ஒருவர் மெதுவாக உலாவிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் அவர் மடிமையுள்ளவர் என்று நாம் சொல்வதில்லை. ஒருவர் தமது வேலைக்காரருக்குக் கட்டளையிடுவதைக் கேட்டுவிட்டு அவர் மேலோங்கு (dominating) மனப்பாங்குள்ளவர் என்றும் நாம் கூறுவதில்லை. ஒரு நடத்தைமுறை நிலையாக அமைந்துவிட்டால், தனியாள் அதனைத் தொடர்ந்து தோற்றினால், அதனைப் பண்புக்கூறு

என்கிறோம். எடுத்துக் காட்டாக, ஒரு மனிதன் தான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருந்தால் அவனுக்குத் தாழ்மை உணர்ச்சி உண்டு என்று சொல்கிறோம். ஒருவன் எப்பொழுதும் பிறரின் நோக்கங்களை ஐயுற்றால் அவனைச் சந்தேகி என்று சொல் கிறோம். ஒருவன் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண் டிருந்தால் அவனைச் சண்டைக்காரன் என்று தீர்க்கிறோம்.

ஆனால் மேற்கூறிய பண்புக்கூறுகளைக் கூட்டுவதால் மட்டும் ஆளுமை ஆகிவிடாது. ஆளுமையானது இக் கூறுகளின் தனிச்சிறப்புள்ள அமைப்பேயாகும். (characteristic organization) மேலோங்கலும் உடைமையும் மிக யாக உடைய இருவருள் ஒருவர் உடைமைத் தேவையை நிறைவேற்ற மேலோங்கலைப் பயன்படுத்தலாம்; அடுத் தவர் மேலோங்கலைப் பெருக்குவதற்காக உடைமையை வளர்க்கலாம். ஆகையால் இப் பண்புக்கூறுகள் ஒன்றோ டொன்று தொடர்பு கொண்டுள்ள படிவத்தை, ஃகெஸ்ட் டால்ட்டையே (Gestalt) ஆளுமை என்னலாம். ஆளுமை வெறும் பொறித்தன்மை வாய்ந்த சேர்க்கையன்று. அதன் கூறுகள் ஒருங்கே கிடப்பவை மட்டுமல்ல. ஆளுமையின் கூறுகள் அனைத்தும் ஒருமைப்பட்ட முழுமையாகக் கலக் கின்றன; இம்முழுமைக்கு ஒரு தனிச்சிறப்புப் பண்பு உண்டு. தனியாளின் சிந்தனை வகைகள், வாழ்க்கை நிலைமைகளுக்குப் பொருத்திக் கொள்ளல், மனவெழுச்சி எதிர்வினைகள், ஆகிய அனைத்தின் சிக்கலான அமைப்பே ஆளுமை ஆகும்.

ஆளுமை தனிச்சிறப்புடையது. தற் செயலாக ஏற்பட்ட இரண்டொரு உற்றுநோக்குகளைக் கொண்டு ஒருவரின் ஆளுமையைத் தீர்க்கக் கூடாது. அவருடைய அமைந்த பாங்கினைக் (settled disposition) காணவேண்டும். இத்த கைய அமைந்த பாங்குகள்தாம் மன உறுப்பியத்தை (structure) அமைக்கின்றன; பொருட்களுக்கும் ஆட்களுக் கும் நேரான நடத்தையைத் தீர்மானிக்கின்றன. ஆளுமை அமைப்பில் சில மனப்பான்மைகள் அல்லது பற்றுக்கள் மேலோங்கி நிற்கின்றன.

ஆளுமைக் கூறுகள் (Traits or Dimensions):

ஒருவருடைய ஆளுமையை விவரிப்பதற்குப் பல பண்புகளைக் கூறுகிறோம். இவை ஒவ்வொன்றும் அவரு

டைய நிலையான கூறுகளைக் குறிப்பிடுகின்றன. ஒருவர் நுண்ணறிவுள்ளவர், கலைச்சுவையுள்ளவர், சீர்மை, விரைவு, முற்கிளர்ச்சி (impulsiveness), உணர்ச்சி, மேலோங்கல், விடாமுயற்சி, ஆசை, தன்னறிவு, முதலியவை உடையவர் என்று சொல்கிறோம்; அல்லது ஒருவர் மந்தமான, கலை யுணர்வற்ற, மடித்தன்மையுள்ள (slow) இயக்க எழிலற்ற, கட்டுப்பட்ட, சுரணையற்ற, பணிந்த, நிலையற்ற, (fickle), ஊக்கமற்ற உட்காட்சியற்ற மனிதர் என்கிறோம். இத்தகைய அடைமொழிகள் ஒருவர் வழக்கமாகச் சிந்திக்கும், உணரும், முயலும், செயல்புரியும் வகைகளைக் குறிப்பிடுகின்றன. அளவீட்டைப் (measurement) பற்றிச் சிந்திக்கும் உளவி யலர் இவற்றை அளவுக்கூறுகள் (dimensions) என்கின் றனர். ஏனெனில் இப்பண்புக் கூறுகள் ஒவ்வொன்றிலும் அளவு (degree) வேற்றுமை உண்டு. ஒரு தனியாள் புற முகத்தை (extroversion)விட அகமுகம் அதிகம் உடையர், அமைதியைவிட கிளர்ச்சி மிக்கார் (excitable), தரநிலையை விட (normal) உளக்கோட்டம் மிக்கார் (neurotic), சமூகத் தன்மையைவிட தனிமையை விரும்புவர், என்று சொல் கிறோம். நீளம், வெப்பநிலை விரைவு முதலியவற்றை, அடி, டிகிரி, மணிக்கு இத்தனை மைல்கள் முதலிய வைத்துக் கோடல் அலகுகள் (units) கொண்டு அளப்பதுபோல் இங்கும் சில அளவுகோல்கள் அமைக்கிறோம். அவற்றை மும்முனை (three-point), நான்முனை, ஐம்முனை, எழுமுனை என்று பலவகையாக அமைக்கலாம். தனியாள் தம்மையே இவ் அளவுகோல் கொண்டு தரமிடலாம் (rate); அல்லது பிறரைக் கொண்டு ஒருவரைத் தரமிடலாம். ஒருவருடைய மனவெழுச்சிக் கட்டுப்பாட்டை நான்முனை அளவுகோல் கொண்டு பின்வருமாறு தரமிடலாம்.

மிக எளிதாகக் கிளர்ச்சி யடைபவர்	பொதுவாகச் சமநிலை யுடையவர்	மிகச் சமநிலை யுடையவர்	கிளர்ச்சி யற்றவர்

திட்டமாகவே உண்மையுள்ளவர்	உண்மையாக இருக்க முயன்றும் தவறுகிறார்	திட்டமாகவே உண்மையற்றவர்

திட்டமாகவே உண்மையாக இருக்க திட்டமாகவே
உண்மையுள்ளவர் முயன்றும் தவறுகிறார் உண்மையற்றவர்

உளவியலர் இத்தகைய அளவுகோல்கள் தயாரிக்கின் றனர். இவ்வளவுகோல் ஒவ்வொரு ஆளின் இடமும்

யாதென்று தீர்மானிக்கப் பல நடுவர்கள் துணைபுரி கின்றனர்.

ஆளுமைப் பண்புகளை வெவ்வேறு அறிஞர் வெவ்வேறு முறையில் வகுக்கின்றனர். இத்தலைப்புக்களை ஆளுமையின் முதன்மைய அளவுக் கூறுகள் (Principal dimensions) என்னலாம். எடுத்துக் காட்டாக, காட்ஸ்ஷும் ஷாக்கும் (Katz & Schanck) ஆளுமையின் முதன்மைய அளவுக் கூறு களைப் பின்வருமாறு வகுத்துள்ளனர்.

(1) ஆற்றல்கள் (abilities)—நுண்ணறிவும் தனியாற் றல்களும்)

(2) இயங்குமை (motility)

(3) மனப்பாங்கு (temperament)

(4) பண்புக்கூறுகள் (traits)

(5) பிறரைப் பற்றிய மனப்பான்மை

(6) தன்னைப் பற்றிய மனப்பான்மை.

ஆல்ப்போர்ட் கூறும் முதன்மைய அளவுக் கூறுக ளாவன: நுண்ணறிவு இயங்குமை (motility), மனப் பாங்கு, தன்–வெளிப்பாடு, சமூகத் தன்மை என்பனவாம். இனி இவற்றை விளக்குவாம்.

இயற்கையாற்றலும் (capacities) **ஆற்றலும்** (abilities):

இயற்கை வைப்பின் (endowment) பயனாக ஒருவன் செய்யக்கூடியவற்றை இயற்கையாற்றல் என்கிறோம். எதிர் மறையாகப் பார்த்தால், தனியாளின் செயலுக்கு வரம்பு கட்டும் உடலியற் கூறுகள் இயற்கையாற்றல் ஆவன.[3]

இயற்கையாற்றலை ஒருவர் பயன்படுத்தும்போது அவருக்கு ஒன்றைச் செய்யும் ஆற்றல் அல்லது திறன் இருப்பதைக் காண்கிறோம். இயற்கையாற்றலின் வெளிப் பாடே ஆற்றல் ஆகும். ஓர் ஆற்றல் சிறு வயதிலேயே தோன்றினால் அதை நாட்டம் அல்லது தனித்திறன்

(aptitude) என்கிறோம். எடுத்துக் காட்டாக, ஒரு குழந்தை வண்ணங்களை விரும்பி அவற்றை நன்கு பயன்படுத்தினால் அதற்குக் கலையாற்றல் உண்டென்று கூறுகிறோம். குழந்தை மெக்கானோ வடிவங்களை நன்கு அமைத்தால் அதற்குப் பொறியாற்றல் உண்டென்று கூறுகிறோம். ஆகையால்தான் ஒருவருடைய தனியாற்றல்களைக் கண்டுபிடிப்பதற்கு அவருடை இன்றைய கவர்ச்சிகளை ஆய்வதுடன் அவருடைய குழந்தைமைப் பதிவுகளையும் பார்க்கிறோம்.[4]

ஆற்றல்களை நுண்ணறிவாற்றல், இயங்காற்றல் என்று இருவகையாகப் பிரிக்கலாம்.

நுண்ணறிவு (Intelligence)

நுண்ணறிவு ஒரு கூட்டுப் பெயர். பல ஆற்றல்களின் தொகுதியே நுண்ணறிவாகும். அனுபவக் கூறுகளை ஒருமைப்படுத்தும் ஆற்றலே நுண்ணறிவாகும் என்று எபிங்ஹாஸ் (Ebbinghaus) பொதுவாக வரையறுத்தார். நினைத்தல், ஆய்தல், ஒப்பிடுதல், புரிந்து கொள்ளல், எண் கருத்தைப் பயன்படுத்தல், பொது அறிவு பெறல் முதலிய அனுபவக்கூறுகளை ஒருமைப்படுத்துவதே நுண்ணறிவு என்று ஃபினே கொண்டார். புதிய பிரச்சினைகளுக்கும், வாழ்க்கை நிலைகளுக்கும் பொருத்திக் கொள்ளும் ஆற்றல், என்று அதனை ஸ்டெர்ன் (Stern) வரையறுத்தார். 'நோக்கமொடு செயலாற்றவும், ஆய்ந்து சிந்திக்கவும், சூழ்நிலையொடு திறம்படச் செயலாற்றவும் உதவும் முழுமையான ஆற்றலே நுண்ணறிவு' என்று வெக்ஸ்லெர் (Wechsler) வரையறுத்தார். காரியங்களைத் தொடர்பு படுத்தல், முடிபு உய்த்தல் (drawing inferences) சொற்களின் பொருண்மை தெரிதல். கணக்குப் பிரச்சினைகளை விடுவித்தல் முதலிய ஆற்றல்கள் இதனுள் அடங்கியுள்ளன.

கவர்ச்சி, வெற்றிபெறும் வேட்கை, விடாமுயற்சி, முதலியவற்றையும் நுண்ணறிவுக் கூறுகளாகக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர் கூறுவர். நுண்ணறிவு கலந்த நடத்தையில் இக்கூறுகளும் கலந்திருப்பினும், இவற்றை வேருகப் பிரித்து ஆளுமைக் கூறுபடுப்பில் (analysis) தனியாகக் காட்டலாம்.

நினைவாற்றல், கற்றல், உற்றுநோக்கல், ஒரு நிலைமையின் குறிப்பறிதல், திட்டம் வகுத்தல், நெருக்கடி நிலையில்

சரியான தீர்ப்புக் கோடல், ஆட்களுக்கும், சட்டத்திற்கும் ஏற்பப் பொருத்திக் கொள்ளல், கணக்கு, இசை முதலிய வற்றிற்குரிய தனியாற்றல்கள் - இவை அனைத்தையும் ஆல்ப்போர்ட் நுண்ணறிவினுள் அடக்குகிறார்.

இயங்காற்றல் (motility)

தூண்டலுக்கேற்ப விரைந்தோ, மடிந்தோ செயலாற்றுதல் அல்லது எதிர்வினைக்காலம் (reaction time) இயக்கங்களை ஒருங்கிணைத்தல் (co-ordination), விரைவு, திறமை, நடை (style), தானே தோற்றுதல் (spontaneity) மீக்கூர்வு (Intensity), சுறுசுறுப்பு, முற்கிளர்ச்சி (impulsiveness) அல்லது நின்று சிந்தித்துச் செயல்புரிதல், ஒருநிலைத்தாதல் (steadiness) அல்லது தள்ளாடுதல்–இவை அனைத்தும் இயங்காற்றலுள் அடங்குவன. இப்பண்புக் கூறுகள் சமூகத்தில் முக்கியமானவை. இவற்றின் வன்மை பிறரைப் பாதிக்கிறது. பிறர் ஒருவருக்கேற்ப நடந்துகொள்வதும் இவற்றின் வன்மையாலேயே. இவ்வாறு இயங்காற்றல் சமூகத் தூண்டலாகிறது. இசைவற்ற, மடிந்த இயக்கம் உள்ளவர் பிறரிடமிருந்து நல்ல துலங்கலைத் தூண்டுவதில்லை. சுறுசுறுப்பும் இசைவும் உடையர் நல்ல துலங்கல்களைத் தூண்டுகிறார். தொழிலுக்கு ஆட்கள் நேர்ந்தெடுக்கும்போது தொழிலமர்த்துபவர்கள் ஆளுமையின் இக் கூறினையும் மனத்திற் கொள்ளுகிறார்கள்.

தன் வெளிப்பாடு (self-expression)

இத்தலைப்பினுள்ளும் பல கூறுகள் அடங்குவன. அவைதாம்.

அகமுகம் (introversion)—புறமுகம் (extroversion)
மேலோங்கல் (ascendance)—பணிதல் (submisson)
விரிவு (expansiveness) —குவிவு (reclusivenes)
கட்டில்லா வெளிப்பாடு—ஒதுக்கம் (reservedness)
கவர்ச்சிகளின் எல்லை. மேலோங்கும் கவர்ச்சிகள், கவர்ச்சிகளை எய்தும் வேட்கை, அவாவு நிலை (level of aspiration) முதலியன.

தம் நோக்குகளையும், எழுச்சிகளையும், விருப்பங்களையும் வெளியிடும் அளவிலும் மக்களுக்குள் வேற்றுமையுண்டு.

அவற்றை வெளியிடும் முறையிலும் வேற்றுமையுண்டு. சிலர் செயலிவிட சிந்தனையை விரும்புகின்றனர்; சிலர் தம் ஆசைகளைக் கட்டுப்படுத்துகின்றனர்; வேறு சிலர் இப்படிச் செய்வதில்லை. சிலர் தலைமைதாங்க விரும்பு கின்றனர். வேறு சிலர் நின்று நோக்கினால் போதும் என்று எண்ணுகின்றனர். சிலர் சில கவர்ச்சிகளைத் தேர்ந்து கொண்டு தனித்துறை வல்லுநர்களாகின்றனர். சிலர் தாம் எடுத்துக்கொண்ட செயலில் தம் ஆற்றல்கள் அனைத் தையும் ஒருமையப்படுத்தி என்ன தடங்கல்கள், தோல்வி கள் வந்தாலும் எதிர்த்து நிற்கின்றனர். காந்தியடிகள், தீண்டாமை, இந்து முஸ்லீம் ஒற்றுமை முதலிய குறிக்கோள் களுக்காக இவ்வாறு போராடினார். நம் பிரதம மந்திரி நேரு சமயச்சார்பற்ற அரசும், பஞ்ச சீலமும் கைகூடுவதற்காக விடாது உழைக்கின்றார். சிலர் தமது ஆற்றலை உணராத தால் உழைக்கும் உந்து இல்லாதிருக்கிறார்கள்; வேறு சில ருக்குப் புகழ் அவா அல்லது ஆற்றல் இல்லாதிருக்கிறது. சிலர் தடங்கல்களைக் கண்டு பணிகிறார்கள். தோல்வி வந்த விடத்து ஈடுசெய்தலும் (compensation) ஏதீடும் (rationalization) அவர்களுக்கு வழக்கமானது. ஒருவர் ஓரிடத்தில் தோல்வி அல்லது எதிர்ப்பு ஏற்பட்டால் அவ்வாறு எதிர்ப்பு ஏற்படாது என்று அவர் எண்ணும் மற்றோர் இடத்தில் தம் ஆற்றலைச் செலுத்தி வெற்றி பெற்று மனச்சாந்திபெறல் ஏதீடு ஆகும். ஏதீடு (ஏது = காரணம்; ஈடு = இட்டுக் கொள்ளல்) என்பது தமது செயல்களையும், தோல்விகளையும் விளக்கக் காரணம் கற்பித்தல் ஆகும். ஒரு வேலைக்கு முயன்று அது கிடைக்காவிடில், அது மோச மான வேலை என்று சொல்லிக் கொள்ளுதல், 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்று எட்டாத திராட்சைப் பழத்தை நரி வருணித்தல் முதலியன ஏதீட்டிற்கு எடுத்துக் காட்டு களாகும்.

மேற்கூறிய பல பண்புக் கூறுகளை அகமுகம்-புறமுகம் என்ற அளவுக் கூறினுள்ளும் அடக்கலாம். அகமுகர் (introverts) மென்மையுள்ளம் படைத்தவர் (tender-minded), அமைதியானவர், ஒதுங்கிப் போகிறவர், வளைந்து கொடுக்காதவர், சட்டத்தாலும் குறிக்கோளாலும் வாழ்ப வர், சுரணை உடையவர், தன்-திறனுய்வுள்ளவர் (self critical), எழுச்சிகளை எளிதில் வெளிக்காட்டாதவர், பகற்கனவு காண்பவர். அவர் செயலிவிடச் சிந்தனையை விரும்புகிறார், காரியங்களை நிறுத்திச் செய்கிறார், கற்பனை

செய்கிறார், தம் உள்துடிப்புகளையும் எழுச்சிகளையும், அடக்கிக் கொள்கிறார். ஆனல் புறமுகர் (extraverts) வன்மையுள்ளம் படைத்தவர் (tough-minded), உண்மையுலக நோக்குடையவர், நன்றகப் பேசுபவர், கட்டுப்பாடு குறைந்தவர், சமூகத் தன்மையுடையவர், பிறரை நம்புகிறவர், நடைமுறைச் சிறப்புடையவர் (practical), எளிதில் தம்மைப் பொருத்திக் கொள்பவர், குறை கூறலைப் பற்றி அதிக உணர்ச்சியற்றவர், முற்கிளர்ச்சியுடையவர், தன்னுய்வு அதிகம் இல்லாதவர்.

ஓரளவு அகமும் நல்லது ; ஒரு மனிதன் தன்னைத் திறனுயவும் முன்னேற்றிக்கொள்ளவும் அது துணடுகிறது. ஓரளவு புறமுகமும் தேவையானது; சமூகத்தோடு போதிய அளவு ஒட்ட ஒழுக அது உதவுகிறது.

மேலோங்கல் (Dominance) தன்னம்பிக்கை பணிதல் :

பொதுவான, திடமான, வலுவான, உடற்கட்டுள்ளவர்கள் மேலோங்குபவர்களாக இருப்பர். ஆனல் பெரிய அறிவாளி கூட நலிந்த உடலமைப்புள்ளவரானல் நேரடித் தொடர்புகளில் பணிவுள்ளவராக இருக்கக்கூடும். ஆனல் இவற்றிற்கு விதிவிலக்குகள் உள்ளன.

விரிவும் (expansion) குவிவும் (redlusion):

விரிவுள்ள மனிதர் தம் சொந்தக் கருத்தையும் சாதனைகளையும் எப்பொழுதும் எடுத்துக் கூறுகிறர். 'நான் நினைப்பதாவது,' 'என் எண்ணமாவது', ' நான் எப்பொழுதும் இதைத்தான் விரும்புகிறேன்' என்று தன்னைப் பற்றிச்சொல்லிக்கொண்டே இருப்பார்.இப்படிப்பட்ட மனிதர் தம் குணத்தையும் குறைகளையும் எளிதில் வெளிக்காட்டிவிடுவார். ஆனல் குவிவுள்ளவர் பேசும்பொழுது தம் ஆளுமையை முன்னணிக்குக் கொண்டு வரமாட்டார். ஆள்சார்பற்ற (impersonal) முறையில் அவர் பேசுவார்.

மனப்பாங்கு (temperament) :

தனியாளின் மனவெழுச்சி நடத்தையின் பல கூறுகள் இதனுள் அடங்குகின்றன. உணர்ச்சிநிலை வேறுபடும் (frequency) அளவும் நிகழ்வும் இதில் ஓர் அம்சமாகும். சிலர் மிகக் கிளர்ந்த எழுச்சி நிலையில் நெடுநேரம் இருப்

பார்கள்; வேறு சிலர் விரைவில் தணிந்துவிடுவார்கள். சிலர் எழுச்சியின் மலர்நிலைக்குப்பின் (elation) கூம்புதல் (depression) நிலையை அடைகின்றனர்.

எழுச்சியின் **அகலம்** (breadth) மற்றொரு கூறாகும். தனியாளின் எழுச்சியைச் தாண்டக்கூடிய பொருட்கள், நிலைகள் ஆகியவற்றின் எல்லையே (range) எழுச்சி அகலம் எனப்படும். அது தன்னியக்க நரம்புத் தொகுதியின் உணர்ச்சித் தன்மையைப் பொறுத்தது. மிகக் குறைந்த தன்னியக்க வாயிற்படி (autonomic threshold) உண்டா னால் எழுச்சி அகலம் அதிகமாகிறது. இது ஒருவருக்கு இயற்கைக் குறையாகிறது.

மனவெழுச்சி வாழ்க்கையின் மற்றொரு பகுதி. அதன் **ஆழம்** அல்லது **வலிமை** ஆகும். இது மேற்பரப்பு நிலையி னின்றும் (superficiality) மாறுபட்டது.[5] மனப்பாங்கின் மற்றொரு கூறு ஒருவருக்குத் தனிச்சிறப்பாக உள்ள உட் பாட்டு நீட்சி (mood) ஆகும்; மகிழ்ச்சி, கவலை, அச்சம், முதலியன மக்களிடம் நீண்டு காணப்படுதல் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

எள்ளும் பண்பு (snobbishness), முனியும் பண்பு (cynicism), மீ உணர்ச்சி நிலை (over-sensitiveness), தன் னைக் குறை கூறல், ஐயமுறல் முதலியவற்றையும் ஆல்ப் போர்ட் மனப்பாங்கு ஆராய்ச்சியுள் அடக்குவார். கிரஷ்மர் (Kretschmer) பல பித்தர்களை ஆராய்ந்ததன் பயனாக இரு அடிப்படையான எழுச்சிப் படிவங்களைக் குறிப்பிட் பிட்டார். அவர்கள், **மலர்-கூம்பலர்** (cyclothymic) **நிலைத்து ஒதுங்குநர்** (schizophrenic) ஆவர். மலர்-கூம்பலர் அடிக் கடி மன நிலை மாறுகின்றனர். நிலைத்து ஒதுங்குநர் இப்படி எழுச்சி நிலை மாறுவதில்லை. மேலும் அவர்கள் ஒதுங்கி நிற் கின்றனர். சிரெஷ்மரும் ஷெல்டனும் (Sheldon) உடல மைப்பு வகையையும் மனப்பாங்கையும் தொடர்புறுத்தினர். இதைப் பற்றி பின்னர் காண்போம்.

நாம் எப்படிப்பட்டவர்கள் என்ற முறையிலும் பிறர் நம்மை எப்படி நோக்குகிறார்கள் என்ற முறையிலும் மனப் பாங்கு மிகவும் முக்கியமானது. நாம் பிற மக்களையும் பொருட்களையும், நிலைமைகளையும் நோக்கும் முறையையும் நம் நடத்தை வகையையும் மனப்பாங்கு பாதிக்கிறது. அதே

சமயத்தில் பிறர் நம்மிடம் நடந்துகொள்ளும் வகையும் நமது மனப்பாங்கைப் பொறுத்தது. அவல மனப்பாங்குள்ள மக்களைப் பிறர் அணுகத் தயங்குகின்றனர்.

பண்புக்கூறுகள் (traits)

குறுகிய முறையில் பார்த்தால் தனியாள் சூழ்நிலை யோடு ஒட்ட ஒழுகும் முறையைக் காட்டும் தனிச்சிறப் புள்ள எதிர்வினைகளைப் பண்புக்கூறுகள் என்னலாம். பண்புக்கூறென்பது ஒரு பொதுமைப்பட்ட செயற்போக்கா கும் (action tendency). அது பொருந்தும் நிலைகளிலும் பொருந்தாத நிலைகளிலும் வெளிப்படக் கூடும்.

அகமுகம், புறமுகம், மேலோங்கல், பணிதல், விடா முயற்சி முதலியவை பண்புக்கூறுகள் ஆவன. அகமுகப் புற முகப்பண்புகளைப் பற்றி ஏற்கனவே பார்த்தோம். ஆனால் ஒவ் வொருவரும் ஓரளவு அகமுகராகவும், ஓரளவு புறமுகராக வும் அதாவது இருமுகராக (ambiverts) இருக்கிறோம். இது மிகவும் நல்லது. அகமுகம் மிகுந்தால் செயலுக்குப் பதிலாக எண்ணம் தலைதூக்கும்; பகற்கனவு மிகும். இதுவும் மிகுந்தால் பாவனைக்கும் உண்மைக்கும் உள்ள வேற்றுமை மாயும். தனி யாள் உண்மை உலகத் தொடர்பை விடுத்து, இத்தொடர்பு தேவைப்படாத செயல்களை நாடுவார். உணர்ச்சி மிக்க வர்களும், தண்டனையையும், தொடர்ந்த இகழ்ச்சியையும் குழந்தைப் பருவத்தில் அனுபவித்தவர்களும் அகமுகர்க ளாகக் கூடும்.

மேலோங்கல்-பணிவு (ascendance–submission)

இப்பண்புகள் ஒருவர் பிறரை நடத்தும் வகையைக் குறிக்கின்றன. பேச்சிலும், உரையாட்டிலும், விளையாட் டிலும் பிற சமூகநிலைமைகளிலும் தலைமைதாங்கும் அல்லது ஆதிக்கம் செலுத்தும் போக்கு மேலோங்கல் எனப்படும். புறவயர் பொதுவாக மேலோங்கும் பண்பும் உடையவராக இருப்பர். மேலோங்கும் பண்பினர் தம் தலைமையை நிலை நிறுத்தப் பல முறைகளையும் உடல் வலுவந்தம், மிரட்டல், அச்சுறுத்தல், சூழ்ச்சி முதலிய அனைத்தையும் — கையாளு வர். தம்மைப் பின்பற்ற வேண்டியவர்களையே முதலில் பின்பற்றி, பின் அவர்களுக்குத் தலைமை தாங்க முயலுவர்.

மனப்பான்மைகள் (attitudes)

மனப்பான்மை என்பது நரம்பும் மனமும் ஆயத்தமாயிருக்கும் நிலை. அது ஒருவனுடைய அனுபவத்தினின்றும் முளைப்பது. மனப்பான்மையானது சொல்லிலும் செயலிலும் வெளிப்படுகிறது. தன் வெளிப்பாடு ஒரு முக்கிய மனப்பான்மையாகும்; தன் வெளிப்பாட்டில் விரிவு–குவிவும் அடங்கிய-கட்டில்லா வெளிப்பாடும், கவர்ச்சி எல்லையும், அவற்றை எய்தும் வேட்கையும், அவாவு நிலையும், தன்னைப் பற்றிய உட்காட்சியும் அடங்கியுள்ளன. தம் நோக்குகள், வேட்கைகள், எழுச்சிகள் முதலியவற்றை வெளிப்படுத்தும் விடுதலை அளவிலும், தம் உள்துடிப்புக்களையும் ஆசையையும் மேலோங்கிய கவர்ச்சிகளையும் அடக்கும் அளவிலும், தனியாட்களுக்குள் வேற்றுமை உண்டு. சிலர் உயர்ந்த அவாவு நிலையை ஏற்படுத்திக் கொள்கின்றனர்; தம் ஆற்றல்களுக்கும், வாய்ப்புக்களுக்கும், முன் அனுபவத்திற்கும் ஏற்ப அதை மாற்றிக் கொள்வதில்லை.

உட்காட்சி (insight) என்பது தனது இயற்கை ஆற்றல்கள், ஆற்றல்கள், வரம்புகள் முதலியவற்றை அறிவதாகும். இதைத் 'தன்னை அறிதல்' என்றும் கூறலாம். தன்னைப் புறவய (objective) முறையில் காணும் ஆற்றலும் இதுதான். இவ் ஆற்றல் வெவ்வேறு ஆட்களுக்கு வெவ்வேறு அளவில் உள்ளது. சிலருக்கு இவ் ஆற்றல் கிடையாது. இது தனியாள் பிறரொடு கொண்டுள்ள தொடர்புக்கும், அவருடைய மன நலத்திற்கும் மிகவும் தேவையானது. ஒருவருக்குத் தமது ஆற்றல்களும் வரம்புகளும் தெரிந்திருத்தல் நலம். தாம் எதைச் செய்ய முடியும், எதைச் செய்ய முடியாது என்று கூறுவது இப்பண்புதான். தமது செயல்களுக்குரிய உண்மையான ஊக்கிகளைத் தெரிந்து கொள்வதும் நல்லது. தமது ஆற்றல்களை மிகுத்துக் காண்பவர் உயர்ந்த அவாவு—நிலை உடையவர் ஆவார். பிறரிடமிருந்து பாராட்டையும் வேறு மரியாதைகளையும் அவர் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் அவருக்கு அத்தகைய மரியாதை அளிப்பதில்லை. ஆகையால் அவர் சமூகத்தையும் வாழ்க்கையையும் கசந்து கொள்கிறார். அவர் பிறரைக் குற்றம் சாட்டுகிறார். பிறர் அவரைக் குறை கூறுகிறார்கள். இந்நிலை மாறி மாறி வளர்ந்து கொண்டே போகிறது. பின் அவர் உலகிலிருந்து விலகி, ஒரு பாவனை உலகம் அமைத்து, அதில் தலைவராக அரசாளுகிறார். இப்பழக்கம் நீடித்தால்

அவர் தமது உண்மை உணர்வையும், மனநலத்தையும் இழக்கக் கூடும். தம்மைக் குறைவாக மதிப்பிடுபவரும் தமக்கு ஊறு விளைவித்துக் கொள்ளக்கூடும். அவர் தாம் சாதிக்கக் கூடிய காரியங்களையும் தொடங்குவதற்கு அஞ்சுவார். இவர் செய்யக்கூடும், செய்யவேண்டும் என்று மற்றவர்கள் கருதும் பொறுப்புக்களையும் தட்டிக் கழிப்பார். இதற்குச் சாக்காகத் தமக்கு ஏதாவது ஊனம் இருக்கக் கூடாதா என்றும் விரும்புவார். இவ்விருப்பம் கைகூடுதலும் உண்டு.

சமூகத் தன்மை (sociality)

இது ஒரு முக்கியமான பண்புக்கூறு ஆகும். பிறர் தம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ அதற்கேற்ப எதிர்பெய்து நிற்றலை (responsiveness) இது குறிக்கிறது. சிலர் பிறருடைய புகழ்ச்சியையும் குறைக் கூற்றையும் பற்றி அதிக உணர்ச்சியுடையவர்கள், சிலர் ஓரளவு உணர்ச்சியுடையவர்கள்; சிலர் இவற்றைப் பொருட்படுத்துவதே கிடையாது. சமூகப் பாராட்டுக்கும், பாராட்டு மறுப்புக்கும் (disapproval) ஓரளவு எதிர்பெய்து நிற்றல் அவசியம். ஒருவர் சமூகத் தன்மை பெறும் ஆற்றல் இப்பண்பைப் பொறுத்தது. பிறர் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாத மனிதன் குழுத்தரத்தினின்று விலகி நிற்பான். சமூகத்தில் அவன் வகிக்க வேண்டிய அங்கத்தை வகிக்க மாட்டான். சமூக வாழ்க்கைக்குத் தேவையான முதிர்ச்சியடைய மாட்டான். தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்வான். சமூகத்தினின்றும் விலகி ஒருவன் முழுமையாக வாழமுடியாது என்னும் அறிவு சமூக முதிர்ச்சிக்குத் தேவை. சமூக முதிர்ச்சியில் இருவழித் தொடர்பு உண்டு. சமூக முதிர்ச்சியுள்ள மனிதர் தன்-மையமுடையவரல்லர்; பிறரைக் கருவிகளாகக் கருதாமல், அவர்களை ஆட்களாக, கருத்தாக்களாகக் கருதுவார்.

மரபுநிலை-சூழ்நிலையும், ஆளுமையும்.

தனியாட்கள் இயற்கைப் பண்புகளின் மலர்ச்சியால் மட்டும் தாம் இருக்கும் நிலையை அடைந்துவிடுகிறார்கள் என்று நாம் இப்பொழுது நம்புவதில்லை; மனம் ஒரு வெற்றுத் தாள், அதில் எதையும் எழுதலாம் என்றும் நாம் கொள்வதில்லை. ஆளுமைப் படிவத்தில் நாம் காணும் தனியாள்

வேற்றுமையை மரபு நிலையால் அல்லது சூழ்நிலையால் மட்டும் விளக்க முடியாது. பண்டைய இருகூறுபடுப்பை (dichotomy) இன்று அறிஞர் ஏற்பதில்லை. ஆளுமை மரபுநிலையால் தீர்மானிக்கப்படுவதா? சூழ்நிலையால் உண்டாவதா? என்று நாம் கேட்பதில்லை. மரபுநிலை சூழ் நிலைமூலம் வேலைசெய்கிறது. சூழ்நிலைமரபுநிலையை ஆதார மாகக் கொண்டு செயலாற்றுகிறது. ஆகையால் சூழ்நிலை எவ்வாறு மரபுநிலையை மாற்றியமைக்கிறது? என்று வினவுதல் தகும்.

ஆளுமைவளர்ச்சியில் உயிரில்கூறுகளுக்கு முக்கிய இடம் உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை. பிறந்து சில வாரங்கள் ஆவதற்குள் குழவியிடத்து இயங்காற்றலிலும், மனப்பாங்கிலும் சில தனிப்பண்புகளைக் காண்கிறோம். இப்பண்புகளின் அடிப்படையாக நாம் அக்குழந்தையின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிச் சிலவற்றை முற்கூறமுடியும்; ஆகையால் இப்பண்புகளை ஆளுமையின் அறிகுறிகளாகக் கொள்ளலாம். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்ற பழமொழி இதனை வற்புறுத்துகிறது. இத்தகைய பழமொழிகள் மராத்தியிலும் பிறமொழிகளிலும் உள்ளன. தனியாளின் உயிரியல் அமைப்பு ஒரு முற்பாங்குறுத்தும் (pre-disposing) கூறாகும். இதன் பயனாக அவர் சில வழிகளில் உருத்துலங்குகிறார் (develop); வேறு சில வழிகளில் வளர்வதில்லை. உயிரியல் அமைப்பு ஆளுமைவளர்ச்சியின் பொதுத் திசையைத் தீர்மானிக்கிறது; வளர்ச்சியின் பொதுவரம்புகளையும் தீர்மானிக்கிறது.

எடுத்துக் காட்டாக நுண்ணறிவைப் பார்ப்போம். புலன் காணும் ஆற்றலும், மனத்தில் இருத்தும் ஆற்றலும், நினைவாற்றலும், அனுபவத்தால் பயன்பெறும் ஆற்றலும் இதனுள் அடங்கும். நுண்ணறிவு ஈவைப் (I. Q.) பொருத்தவரை மக்களிடையே தனிவேற்றுமை உண்டு. மக்களை முட்டாள்கள் (idiots) மூடர்கள் (imbeciles) பேதையர் (morons) சாதாரண நுண்ணறிவுடையோர், மிகத் திறனுடையோர், மேதையர் (geniuses) என்று வகுக்கலாம். மந்த புத்தியுள்ளவர்களுடைய குடும்ப வரலாறுகளை ஆய்ந்ததில் அவர்களுடைய உறவினர்களுள் முக்கால் பங்கு மக்கள் மந்தமாகவே இருக்கின்றனர் என்று தெரிகிறது. இதில் மரபுநிலை பங்கு கொள்கிறது என்று எண்ண வேண்டியிருக்கிறது. இதைப் பற்றிய ஆராய்ச்சிகளுள் ஃடக்டேலின்

(Degdule) மந்த மனத்தாரின் வமிசக் கொடி (genealogy) ஆய்வும், மேதைகளின் குடும்பங்களையும் இரட்டையர்களையும் (twins) பற்றி ஃகால்ட்டன் செய்த ஆய்வும், மீத்திறக் குழந்தைகளைப் பற்றிய டெர்மானின் ஆய்வும் குறிப்பிடத் தக்கவை. காலிக்காக் (Kallikak) குடும்ப வரலாறு நமக்கு மிகவும் பயன்படுவது. இத்தகைய தகவல்கள் புற ஆய்வின் மூலம் கிடைப்பதில்லை. காலிக்காக் இரண்டு பெண்களை மணந்துகொண்டார். ஒரு பெண் தரநிலையில் (normal) உள்ளவள்; மற்றவள் மந்தப் புத்தியுடையவள். தரநிலைப் பெண்மூலம் அவன் பெற்ற குழந்தைகளும் தரநிலைக் குழந்தைகளாகவே இருந்தனர். மந்தப் பெண்ணின் குழந்தைகள் மனக்குறைவுடையவராய் இருந்தனர். வேறு ஆய்வுகளில் குழந்தைகளின் நுண்ணறிவுக்கும் அவர்களுடைய பெற்றோர் மற்றும் வளர்ப்புப் பெற்றோரின் நுண்ணறிவுக்கும் உள்ள உடனியைபை (Correlation) ஒப்பிட்டுள்ளனர். வெவ்வேறு குடும்பங்களில் வளர்ந்த இரட்டையர்களைப் பற்றிப் படித்துள்ளனர். மனிதர்களை இத்தகைய புற ஆய்வு முறைக்கு உட்படுத்துவது அரிதாகையால் எலிகளைக் கொண்டு மக்டூகல் புற ஆய்வு இயற்றினர். ஒள்ளிய (Bright) எலிகள் ஒள்ளிய எலிகளோடு புணர்வதன் மூலமும் வெள்ளிய (Dull) எலிகள் வெள்ளிய எலிகளோடு புணர்வதன் மூலமும், எட்டாவது தலைமுறையில் ஒள்ளிய எலி வகுப்பொன்றும் வெள்ளிய எலி வகுப்பொன்றும் உண்டாக்கினர்.

மேற்கூறிய உயிரியல் வன்மைக்கு மனப்பாங்கும் (temperament) எடுத்துக் காட்டாகும். உடலமைப்பின்படி மக்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். மனப்பாங்கிலும் அப்படியே மூன்றாகப் பிரிக்கலாம். இவ்விரண்டு வகுப்புகளுக்கும் உடனியையு உண்டென்று அறிஞர் கண்டுள்ளனர். பண்டைய ஃகீரிஸில் ஃஇப்பாக்கிரேட்டஸ் (Hippocrates) இத்தகைய உடனியைபைக் கண்டார். மனிதரிடத்து மேலோங்கியுள்ள உடலியல்-உளவியற் கூறுகளுக்கு நான்குவகை நீர்மங்களே (humours) காரணம் என்று அவர் கொண்டார். குருதி (blood) கபம் (phlegm) மஞ்சட்பித்தம் (yellow bile) கரும்பித்தம் (black bile) ஆகியவை அந்நீர்மங்களாம். குருதியில் வலியர் தன்னம்பிக்கையும், சுறுசுறுப்பும் உடையர். இவர்கள் சிரிமுக (sanguine) மனப்பாங்கினர் கபம் அதிகமுள்ளவர் தூக்கமும் மடியுமுடையர்; அதாவது 'தூங்கு மூஞ்சி' (phlegmatic)

மனப்பான்மையினர் ஆவர். மஞ்சட்பித்தம் மிகுந்தவர் முன் கோபமும் முற்கிளர்ச்சியும் உள்ளவர்; அதாவது சிடு மூஞ்சி (Choleric) மனப்பாங்கினர் ஆவர். கரும்பித்தம் மிக்கவர் அவலமிகுந்தவர்; இவர்களே 'அழுமூஞ்சிகள், (melancholic) என்னலாம். இந்திய அறிஞர் வகுத்த சாங் கிய தத்துவத்திலும் இத்தகைய உடல்–மனப்பாங்கு உடனி யைபு அடங்கியுள்ளது. மனித ஆளுமையில் மூன்று உடல் மனக்கூறுகள் உண்டென்று இத்தத்துவம் கூறுகி றது. அவை சத்துவம், ராஜசம், தாமசம் என்பவையாம். இம்மூன்று கூறுகளும் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு அள வில் அமைந்துள்ளன. இவ்வமைப்பிற்கேற்ப ஒருவருடைய அறிவுக்கூறுகளும், மனப்பாங்குக் கூறுகளும், அறப்பண்பு களும், வேட்கைகளும், செயற்பண்புகளும் அமைகின்றன. ஆயுர்த வேத மருத்துவ முறையிலும் இக்கருத்துப் பயன் படுகிறது. அண்மைக் காலத்தில் உடற் கட்டுக்கும் (body build) மனப் பண்புகளுக்கும் உடனியைபு உண்டென்று கிரெஷ்மர் காட்ட முயன்றுள்ளார். உடற்கட்டுக்கும், அற நெறிப் பிறழ்வுக்கும் (delinquency) நேர் உடனியைபு உண் டென்று ஷெல்டன் கூறுகிறார். உடற்கட்டு வகைகளுக்கும் தொழில் வகைகளுக்கும் தொடர்பு உண்டென்று ஈ.ஹூட் டன் (E. A. Hooton) குறிப்பிடுகிறார், மன உடல் உடனி யைப் பற்றி அறிஞர் மற்றும் பல உண்மைகளைக் கண்டுள் ளனர்.

திடமான, வலிமையுள்ள, திரண்டு உருண்ட, குள்ள மான மனிதர் எழுச்சி ஏற்றமும் இறக்கமும் கொண்டவர். தம் வேட்கைகளை உள்ளுக்குள்ளே அடக்கி வைத்துக் கொள்ளாவதர், புற உலக உண்மை நோக்குடையவர், நல் லுணவும் வசதியும் விரும்புபவர் என்றும்; நல்ல தசைய மைப்பு, எலும்பமைப்பு, பூட்டமைப்பு, குறுகிய இடை உடையவர் பொதுவாகச் சக்தி வாய்ந்தவர்கள், சுறுசுறுப் புள்ளவர், தற்சார்திப்புள்ளவர் என்றும்; ஒல்லியான, வலு வற்ற, நீண்டவிரலுள்ள, கூர்மையான முனைகளுள்ள மனிதர் வெட்கமுள்ளவர்கள், தனிமையை விரும்புபவர்கள் எழுச்சிச் சார்பு குறைந்தவர்கள், எளிதில் கவனம் கலைபவர் கள், வாழ்க்கையில் குறிக்கோள் நோக்குடையவர்கள், ஒடுக்கும் மனப்பான்மையுடையவர்கள் என்றும் இத்த கைய ஆராய்ச்சிகள் காட்டுகின்றன.

தனியாளின் உடற்கட்டானது வயதினாலும், உணவினா லும், பயிற்சியினாலும், நோயினாலும், மாறுதலடைகிற

தென்று நாம் அறிவோம். ஆயினும் பொதுவான உற்று நோக்குகளையும் மருத்துவ உளவியற் கண்டு பிடிப்புகளையும் நாம் புறக்கணிக்க முடியாது. உடற்கட்டினைத் தீர்மானிக்கும் அதே மரபு நிலைக் கூறுகள் மனப்பாங்கையும் தீர்மானிக்கின்றன என்று கொள்ளுதல் பொருந்தும். நாளமில் சுரப்பிகள் (ductless or endocrine glands) உடற் கட்டினையும் மனப்பாங்கையும் தீர்மானிக்கின்றன. எடுத்துக்காட்டாக, தைராய்டு சுரப்பி போதிய அளவு அயோடின் கொண்ட ஃஆர்மோனைச் சுரக்காவிட்டால் தனியாள் மெதுவாகவும் சோம்பலுடனும் செயலாற்றுவார்.[6] ஆனால் இச் சுரப்பி மிகையாகச் செயற்பட்டால் அவர் அமைதியற்று கவலையுற்றுச் செயற்படுவார். பரத்தைராய்டு சுரப்பிகள் அதிகம் வேலை செய்தால் தனியாள் மிக அமைதியாக இருப்பார். இவை குறைந்து செயற்பட்டால் அவர் சமநிலையற்று எளிதில் கிளரும் தன்மை பெறுவார்.

ஆளுமையில் உடலமைப்புக்குக் கூறுகளுக்குப் பங்கு உண்டென்பதற்கு மற்றொரு சான்றும் உண்டு சிலவகை மனக் கோளாறுகள் ஒரு குடும்பத்தில் பலரிடம் காணப்படுகின்றன. சிலவகை மூட்டாள்தனமும் ஒரே குடும்பத்தில் அதிகமாகக் காணப்படுவதுண்டு.

மரபுநிலை மற்றொரு வகையிலும் ஆளுமையைப் பாதிக்கிறது. ஒருவர் மரபு நிலையால் பெற்ற தம் உடற்குறைகளையும் ஊக்கங்களையும் அறிந்திருப்பது அவருடைய நடத்தையைப் பாதிக்கிறது. எடுத்துக்காட்டாக, மிகவும் பருமனனவர்களும், எளிதில் இரத்தம் வடியும் தன்மையுடவர்களும் தம் செயற்பாட்டைக் குறைத்துக் கொள்ளுகிறார்கள். அச்சமும், தன்னம்பிக்கைக் குறைவும், வெட்கமும் உடையவர்களாகிறார்கள். உடல் நலிந்த, சக்தியற்ற மக்கள் சமூகத் தொடர்புகளிலும் முன்னக் குறை (handicap) வுடையவர்களாகிறார்கள்; அடங்கி உணர்ச்சி வயப்பட்டுப் பகற்கனவு காண்பவர்களாகிறார்கள். இவ்வாறு உடலமைப்பும் மனப்பாங்கும் ஒருவருடைய மனப்பான்மையையும் பொருத்தப் பாட்டையும் பாதிக்கின்றன. ஆகையால் 'ஒத்த உடலமைப்பும் மனப்பாங்கும் உள்ளவர்கள் ஒத்த வாழ்க்கை அனுபவங்களுக்குட்பட்டு, ஒத்த ஆளுமையை வளர்த்துக்கொள்ளக் கூடும் என்னும் கோட்பாட்டிற்கு ஆதாரம் உள்ளது.[8]

இனி சூழ்நிலையைப் பற்றிப் பார்ப்போம். மரபு நிலையும், சூழ்நிலையும் ஊடாடுகின்றன. இவற்றின் பிணைவால்

தான் ஆளுமை உருவாகிறது. இயல்பு வளர்ப்புடன் சேர்கிறது. உயிரியல் கூறுகள் அமைந்துள்ள பொதுவான வரம்புகளுக்குட்பட்டு சூழ்நிலை தன் பங்குச் செயலை ஆற்றுகிறது. உண்ணும் உணவு, பயிற்சி, பள்ளியிலும், வீட்டிலும், வெளியிலும் நடத்தப்படும் முறை, பெறும் வாய்ப்புக்கள் ஆகிய அனைத்தும் சூழ்நிலையுள் அடங்குவன. தனியாள் பெறும் சமூக, பண்பாட்டுப் பாதிப்புக்களும் சூழ்நிலையாலேயாம். இவை நேரடியான மக்கள் தொடர்பாலும், இலக்கியம், கலை முதலிய மறைமுகத் தொடர்புகளாலும் ஏற்படுபவை.

நுண்ணறிவையும் மனப்பாங்கையும் சூழ்நிலையொடு தொடர்பு படுத்தியும் ஆராயலாம். நல்ல சூழ்நிலையில் நு. ஈ. (I. Q.) 5 முதல் 10 புள்ளிகள் வரை உயர்கிறது. குழந்தையின் ஆராய்வும் எழுச்சிகளும் ஒடுக்கப்பட்டால் நுண்ணறிவு நிலை ஒப்புமையாகக் குறைந்த மட்டத்திலேயே இருக்கிறது. மனப்பாங்கும் ஓரளவு சூழ்நிலையால் பாதிக்கப்படுவது. குழந்தைப் பருவத்திலும் பிற்காலத்திலும் ஒருவர் பெறும் அனுபவங்கள் அவரைப் புறமுக நிலைக்கோ அகமுக நிலைக்கோ இழுத்துச் செல்லலாம். தொடர்ந்த மன முறிவு குழந்தையை மிகவும் பணிவுடையவனாக்கலாம், அல்லது முன்கோபமுள்ளவனாக்கலாம்,

முக்கியமான விசை நிலைமைகள் :

சில நிலைமைகள் ஆளுமை அமைப்பிற்கு மிகவும் முக்கியமானவை. இவற்றை ஸ்ப்ராட்((Sprott) விசை நிலைமைகள் (key situations) என்று விவரித்தார். குழவிப் பருவம், வீட்டில் செலவிடும் குழந்தைப் பருவம், பள்ளி வாழ்க்கை, குமரப்பருவம், திருமணவாழ்க்கை, தொழில் முதலியன இத்தகைய நிலைமைகளாவன.

வாழ்க்கையின் **தொடக்க ஆண்டுகளில்** ஆளுமையின் அடிப்படை அமைப்பு தீர்மானிக்கப்படுகிறது. ஆகையால் இவ் ஆண்டுகள் மிகவும் முக்கியமானவை. அறிவுடைய பெற்றோர் இவ் உண்மையை உணர்வர். இந்தியாவில் குழந்தையைக் கடவுளின் அருட்கொடையாகக் கருதுகிறோம்; விளையும் பயிருக்கு ஒப்பிடுகிறோம். இளம்பருவத்தில் அமையும் உறுப்பிய (organic) இயக்க (motor) அல்லது வல்கலையும் அறிவு வாழ்க்கையைப் பற்றிய பழக்கங்களையும்

எழுச்சிப் பழக்கங்களையும் பிற்காலத்தில் முறிப்பது அரிது. உளப்பாகுபாட்டு ஆய்வுகளும் முதல் ஐந்து ஆண்டுகளின் சிறப்பை வலியுறுத்துகின்றன. இப்பருவம் குடும்பத்திலும், சமவயதுக் குழுக்களுடனும் செலவிடப்படுகிறது. இவ்விரு குழுக்களும் மிக வன்மையுள்ள சமூகக் கட்டுப்பாட்டுக் கருவிகளாகின்றன. ஒன்றுதலின் மூலமும், தெரியாமற் பின்பற்றுவதாலும், குழந்தை தன் பெற்றோரின் சிந்தனையையும், பேச்சையும், நடத்தையையும் மாதிரியாகக் கொள்கிறது. குழந்தைக்குக் கருத்தேற்குமை (suggestibility) அதிகம் உள்ளதாலும் பெற்றோருடைய பாராட்டு, பாராட்டு மறுப்பு, வெகுமதி, தண்டனை முதலியவற்றைப் பற்றி அதிக உணர்ச்சி உடைமையாலும் குழந்தை தன் பெற்றோருடைய கட்டளைகள், எண்ணங்கள், மனப்பான்மைகள் முதலியவற்றை உட்படுத்துகிறது (internalizes). இத்துடன் அவனுடைய சொந்த அனுபவங்களின் விளைவாக அவனுடைய சொந்த மனப்பான்மைகளும் பற்றுக்களும் வளர்கின்றன. இவை அனைத்தினாலும், அவனுடைய அடிப்படைக் குண அமைப்பும் வாழ்க்கை நடையும் அமைகின்றன. இவை வாழ்க்கையின் பிற்காலத்தில் நிலைநிற்கின்றன.[10]. **குழந்தையைப் பற்றிய உளப்பாகுபாட்டு ஆய்வு** (The psycho-analytic study of the child) என்ற நூலில் ஆஞ்ஃபிராய்டு ஒரு முக்கிய கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். தாயுடன் கொண்டுள்ள உள்நிறைவு அனுபவங்கள் குழந்தையுடைய முதல் அன்புத் தொடர்புக்கு ஆதாரமாகின்றன. இது அவனுடைய மனத்தில் ஆழமாகப் பதிகிறது. பின் பிறரோடு கொள்ளும் அன்புத் தொடர்புக்கும் இது ஆதாரமாகிறது. ஆனால் தாய் குழந்தையைச் சரிவர நடத்தாவிட்டால் இம்முதல் அன்புத் தொடர்பு சரியாக வளர்வதில்லை, குழந்தையின் காப்புணர்ச்சி பாதிக்கப் படுகிறது. பெரியவனான பின்னும் அவனில் நிலைத்த அன்பு ஊன்றுவதில்லை.

குழந்தையின் மனச்சான்று வளர்ச்சியையும் பெரும்பாலும் இயற்கைய (naturalistic) முறையில் விளக்க முடியும். மனித உள்ளத்தை ஃபிராய்டு மூன்று பாகங்களாகப் பிரிக்கிறார். அவை தாம், இயற்கையான, அறநெறிப்படாத உள்துடிப்புக்கள் அல்லது **இ:து** (id) கட்டுப்படுத்தும், தணிக்கை செய்யும் பகுதி அல்லது **தன் முனைப்பு** (ego) விழுமியங்கள் (values) உயர்தரங்கள், ஒழுங்கு படுத்தும் கொள்கைகள் அல்லது **மீமனம்** (super-ego) ஆகியவை. மீமனம்தான்

மனச்சான்றுகும். அதனுள் அடங்கியுள்ள விழுமியங்களும் ஒழுங்கு படுத்தும் கொள்கைகளும் நாம் சிறிய வயதிலேயே பெரியவர்களிடமிருந்து அறியாமலே பெற்றுக்கொண்டவை. மீமனத்தில் உடன்பாட்டுக் கட்டளைகளும் எதிர்மறைக் கட்டளைகளும் ஆளின் மிஞ்சிய (super personal) அதிகாரத்தின் குரல், எதிர்த்துக் கேட்காமல் கீழ்ப்படிய வேண்டிய சார்பற்ற கட்டுப்பாடு (categorical imperative) ஆகும். ஆளுமையின் இந்த மேல் மாடியைத் தாங்குவது தனியாளின் உயிரியல் – உளவியல் தேவைகள் தாம். குழந்தை உணவுக்கும், பாதுகாப்பிற்கும், சுக அனுபவத்திற்கும் பிறரைச் சார்ந்திருக்கிறது. இதன் விளைவாக உடனுறைவு (compass) சார்வு, (belonging) ஏற்பு, (acceptance) பாராட்டு, (approval) ஏற்றம் (status) முதலியவன்மையுள்ள உளவியல் தேவைகள் பிறக்கின்றன. இத் தேவைகளால் ஆளப்படுவதால் குழந்தை தன் பெற்றோரும் பிறரும் இயற்றும் கட்டுப்பாட்டிற்குப் பணிந்து போகிறுன். நடத்தையின் வைத்துக்கோடல் தரத்திற்கு ஒத்துப்போகிறுன். பிறர் தன்னைப் பற்றி என்ன எண்ணுவார்கள் என்னும் உணர்ச்சி இருப்பதால், தன்னிடம் சமூகம் என்ன எதிர்பார்க்கிறதோ அதைச் செய்யக் கற்றுக்கொள்கிறுன்.

குழந்தையின் சார்வுத் தேவை உளவியல் தேவைகள் அனைத்துள்ளும் மிக வலிது. குழந்தையிடம் கட்டின்றி, ஓரச்சார்பின்றி, நிபந்தனையின்றி, தொடர்ந்து அன்பு செலுத்தாவிடில் அவன் பெற்றோரிடமிருந்து கவனமும் பாதுகாப்பும் பெற விரும்பத்தகாத முறைகளைக் கையாளுவான். பின் இம்முறைகளைப் பிறரிடத்தும் பயன்படுத்துவான். எடுத்துக் காட்டாக, பிறருடைய அன்பைப் பெறுவதற்காக அவன் நோய் இருப்பதாகப் பாசாங்கு செய்வான்; அல்லது நோயை விரும்புவான். இதன் விளைவாக உண்மையாகவே உள்ளத்தோற்ற (psychogenic) நோய் அவனுக்கு உண்டாகலாம். அவனுடைய பிற தேவைகள் நிறைவேறுமற்போனலும் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படக்கூடும். தன் தேவைகளைப் பெறுவதற்காக அவன் வன்செயல், சிணுங்குதல் போன்ற முறைகளைக் கையாளலாம்; அல்லது பகற்கனவு கண்டு உலக உண்மைகளினின்றும் ஒதுங்கலாம். இத்தகைய நடவடிக்கைகள் பழக்கங்களாக மாறி, அவன் பெரியவனான பின்னும் அவனிடத்து நிலைத்து நிற்கக்கூடும். தார்ண்டைக் கூறிய 'பயன்விதி' (Law of effect) சமூகக் கற்றலில் இடம் பெறுகிறது. நன்கு பயன் தரும் நடத்தை

முறைகள் ஊன்றி நிற்கின்றன. பின்னைய அனுபவங்களும் குண அமைப்பை ஓரளவு மாற்றியமைக்கின்றன. ஆனால் முதலில் ஏற்பட்ட அமைப்புக்களை அழிக்க அவற்றால் முடியாது.

தொடக்க ஆண்டுகளில் செயல் புரியும் பிற ஆளுமைத் தீர்விகளாவன: (determinants) குடும்பத்திலுள்ள உளவியற் கவிநிலை (climate) குடும்பத்திலுள்ள பெரியவர்கள் தொகை, குழந்தையின் பிறப்பு வரிசை ஆகியவை. மணவாழ்க்கையில் இன்பம்காணுத தாய் தன்பாசம் அனைத்தையும் குழந்தைபால் செலுத்துகிறாள். இதனால் குழந்தை தாயுடன் ஒட்டிக்கொண்டு அவளையே சார்ந்து நிற்க ஏதுவாகிறது. பெற்றோர் பிரச்சினைப் பெற்றோரானால் குழந்தையும் பிரச்சினைக் குழந்தை (problem child) ஆகிறது. வீட்டில் அடிக்கடி வெளிப்படையான சண்டை நடந்தால் குழந்தையின் காப்புணர்ச்சி குலைகிறது. மிகையான ஒழுங்கு முறை, ஒடுக்கம், செயற்கட்டுப்பாடு முதலியவற்றின் பயனாகக் குழந்தையிடம் அச்சமும் கவலையும் வளர்கின்றன. இதன்மூலம் எதிர்மறை மனப்பான்மையும் பெரியோரைப் பற்றிய நனவிலி எதிர்ப்பும் உண்டாகின்றன. ஆனால் மிகையான சீராட்டும் செல்ல வளர்ப்பும் கூட தீயவைதாம். இதன் மூலம் குழந்தையிடத்து கெடுபிடி (ehacting) மனப்பான்மையும் தன்மைய மனப்பான்மையும் வளர்கின்றன. பிற்காலத்தில் வாழ்க்கை அவனுடைய விருப்பத்திற்கிணங்க நடக்காவிட்டால் அவன் வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி நிலைத்துஒதுங்குநன் (schizophrenic) ஆகக் கூடும். குடும்பத்தில் அவன் தன்னைக் காணும் முறை மிகவும் முக்கியமானது; பிற்கால வாழ்க்கையிலும் அது அவனைப் பின்தொடர்கிறது.

குழந்தை பெறும் ஒழுங்கு முறைப் பயிற்சியும் மிகவும் முக்கியமானது. ஏளன முறையை அதிகமாகக் கையாண்டால் குழந்தையிடத்துத் தன் உணர்வும் (self consciousness) தன் திறனுய்வும் பெருகும். இதன் மூதலம் அவனுடைய தன்முனைப்பு முறிந்து விடவும் கூடும்.

குடும்ப மக்கட்டொகையும் குறிப்பிடதக்கதொரு காரணியாகும். கூட்டுக் குடும்பத்தில் பெற்றோருக்குக் குழந்தையிடம் தனியுரிமை கிடையாது. பெற்றோர் வெகுண்டால் குழந்தை தன் பெரியதந்தை முதலியவரிடம் ஓடி

விடுகிறது. இவ்வாறு அதன் காப்புணர்ச்சியும் சார்வுத் தேவையும் பாதுகாக்கப்படுகின்றன. குடும்பத்தில் பல குழந்தைகள் இருந்தால் குழந்தையின் கூட்டுறவுப் பொருத் தப்பாடு நன்கு வளர்கிறது.

குழந்தையின் பிறப்பு வரிசை, குழந்தை தன் தாயிட மிருந்து பெறும் கவனத்தின் அளவையும் தன்மையையும் ஓரளவு தீர்மானிக்கிறது. ஒரு பிள்ளையைப் பிற பிள்ளைகள் நடத்தும் வகையும் பிறப்பு வரிசையைப் பொறுத்தது. குடும் பத்தில் மூத்த, இடையிலுள்ள, இளைய பிள்ளைகளின் உள வியலையும், இடை மருமகளின் உளவியலையும் ஒப்பியன் முறையில் படிப்பது கவர்ச்சி தரும் ஆய்வாகும்.

பள்ளிவாழ்க்கை பெரும்பாலும் குடும்ப வாழ்க்கையின் விரிவுப் பதிப்பு போன்றது. பள்ளியானது குழந்தையின் தான்தொடங்காற்றலையும் தன்வெளிப்பாட்டையும் தூண்டு விக்கலாம், அல்லது இவற்றை நறுக்கலாம். பள்ளியிலும் குழந்தையானது துணை, வழிகாட்டு, திட்டு, தண்டனை ஏளனம் அனைத்தையும் அனுபவிக்கிறது. சில பள்ளி கள் மாணவருக்குத் தனிப்பட்ட மதிப்புக் கொடுத்து அவர் களுடைய அடைவுகளை (Achivements) விளம்பரம் செய்யலாம்; வேறு சில பள்ளிகள் வகுப்பின் கூட்டு அடைவுகளையே சிறப்பிக்கலாம். முதன்முறையில் போட் யும், இரண்டாம் முறையில் ஒத்துழைப்பும் வளர்கின்றன. கடைசியாக, ஆசிரியரின் ஆளுமையும் முக்கியமானது. அது மாணவனுக்குச் சிறந்த முன்மாதிரியாக அமைகிறது.

குமரப் பருவம் (Adolescence):

குமரப்பருவம் இரண்டவது விசைப்பருவம் ஆகும். இப்பருவத்தில் உடல்வளர்ச்சி விரைகிறது; அறிவாற்றல் உச்சநிலையடைகிறது; புதியவற்றின்பால் நாட்டம் ஏற்படு கிறது; எழுச்சியிலும் நிலையின்மை (instability) ஏற்படுகி கிறது; இதற்குச் சுரப்பிகளில் ஏற்படும் விரைந்த மாறுதல் கள் காரணமாக இருக்கக் கூடும். குமரப்பருவத்தில் பல முரண்பாடுகள் தோன்றுகின்றன. இப்பருவத்தில் தன் முனைப்பு உள்ளது. அதே நேரத்தில் தியாகமும், பக்தியும் காணப்படுகின்றன. குடும்பத்திற்கு வெளியிலும் பல ஒட்டுக்கள் (attachments) ஏற்படுகின்றன; அவை அடிக் கடி முறியவும் செய்கின்றன. பையனுக்குக் கூட்டாளிக் குழுக்களைப் (gangs) பற்றிய பற்றுறுதி உண்டு; அதே

வேளையில் அடிக்கடித் தனிமை வேட்கையும் தோன்றுகிறது. குடும்பத்திற்கு வெளியே குமரப்பருவத்தினின்று ஒரு தலைவனை ஏற்றுக் கொள்கிறான். ஆனால் வீட்டில் அவன் ஒரு புரட்சிக்காரனைக இருக்கிறான். இப்பருவத்தில் பால் ஆராய்வு மீண்டும் தோன்றுகிறது. எதிர்பால் கவர்ச்சி ஏற்படுகிறது. கடைசியாக,பலவகையான பொறுப்புக்களில் பங்கெடுப்பதாலும், இலக்கியத்தைப் படிப்பதாலும் குமரப் பருவத்தினன் சமூகப் பண்பாட்டுச் செல்வத்தை முற்றிலும் பெற்றுக் கொள்கிறான்.

இளங்குமரத்தினன் உடல்சார்ந்த, அறிவு சார்ந்த, எழுச்சி சார்ந்த வாழ்க்கையில் புதியவை தேடுகிறான். இத் தேட்டத்தில் காணும் வெற்றி தோல்வியும், அவனுடைய ஆள்சார் (personal) தொடர்புகளும் அவனுடைய குறிக் கோட்களை அமைப்பதில் பெரும் இடம் வகிக்கின்றன.

திருமணமும் இல்வாழ்க்கையும்

ஹெகல் என்னும் ஜெர்மானியத் தத்துவர், 'ஒரு மனி தன் திருமணம் செய்யும்பொழுது வாழ்க்கைக் கணக்கை முடித்துக் கொள்கிறான்' என்று சொன்னார். சர் ஆலிவர் லாட்ஜ் திருமணத்தை வாழ்க்கையின் மூன்று பெரும் புதி யன தேட்டச் செயல்களுள் (adventures) ஒன்றுகக் கூறி னார்; பிற இரு செயல்களும், பிறப்பும் இறப்பும் ஆவன. ஆளுமை வளர்ச்சியைப் பொறுத்தவரை இது மிகவும் முக்கி யமான நிகழ்ச்சியாகும். நாகரிகம் பெற்ற சமூகத்தில் திரு மணமானது ஆணையும் பெண்ணையும் ஓர் ஒப்பந்தத்திற் குட்படுத்துகிறது. இது அவர்கள் இருவரையும் பாதிப்ப தோடு சமூகத்தையும் பாதிக்கிறது. திருமணம் செய்பவர் கள் வாலிபப்பருவத்தில் இல்லுறை இன்பத்தையும், இரு வழிப்பாராட்டையும், எதிர்பார்க்கிறார்கள். பிற்காலத்தில் அன்பு கலந்த தோழமையையும் வழிகாட்டினையும், துணையையும், எதிர் பார்க்கிறார்கள். சமூகம் இத்தம் பதிகளிடமிருந்து விருந்தோம்பல், ஈகை, மக்கட்பேறு முதலிய கடமைகளை எதிர்பார்க்கிறது. ஆகையால் கணவ னும் மனைவியும் ஒத்த பண்பாடும், ஒத்த கல்வியும், ஒத்த அடிப்படை விழுமியங்களும், உணவு, பொழுதுபோக்கு முதலிய தேவைகளைப் பற்றிய ஒத்த பழக்கங்களும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். அடிப்படை வேற்றுமைகள் இவர்களுக்கிடையே ஏற்பட்டால் மண

வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. மிஞ்சிப் போனால் அது ஒரு விட்டுக்கொடுத்தல் அமைப்பேயாகிறது.

தொழில் (Occupation)

நாம் செய்யும் தொழில் நம்மிடம் பல பழக்கங்களை வளர்க்கிறதென்று உவில்லியம் ஜேம்ஸ் கூறியுள்ளார். ஆகையால் ஆளுமைத் தீர்விகளுள் (determinants) தொழில் முக்கிய மானதொன்றாகும். வழக்கறிஞருக்கே தனிச் சிறப்பாக அமையும் பழக்கங்களும் பேச்சும் உண்டு. அப்படியே மற்ற தொழில்களுக்கும் உண்டு. தொழில் மற்றொரு வகையிலும் ஆளுமைச் சிறப்புடையது. எல்லோருக்கும், வேலை கிடைப்பதில்லை. வேலையில் அமர்பவர்கள் எல்லாரும் தமது கவர்ச்சிக்கும், தனியாற்றலுக்கும் ஏற்ற வேலையில் அமர்வதில்லை. வேலையின்மையாலும் விரும்பாத வேலையாலும் பல தீய விளைவுகள் ஏற்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் வேலை தேவை. ஏனென்றால் அதன் மூலம் ஒருவர் முதிர்ச்சியடைகிறார். வேலையில்லாதவருக்கு உள் நிறைவு இல்லை; அவர் மனம்குவிந்த நிலையில் இருக்கிறார். வாழ்க்கை அவருக்குப் பொருளற்றுக் காணப்படுகிறது. இது அவருடைய எழுச்சி வாழ்க்கைக்கு ஊறு விளைவிக்கிறது. தொழிலின் மூலம் கிடைக்கும் பொருளாதார வருமானமும் முக்கியமானதுதான். இவ்வருமானத்தைக் கொண்டுதான் ஒருவர் தம் சமூகக் கடமைகள் பலவற்றை நிறைவேற்ற முடியும். ஆயினும் பொருளாதார வருமானத்தை விட, தொழிலின் மூலம் பெறும் உள்நிறைவே (job satisfation) முக்கியமானது.

உளநோயுடை (psycho-pathic) ஆளுமையும் நெறி பிறழ்வும் (delinquency):

சிலர் அறிவாற்றலில் பொதுத்தரத்திலும் (normal) உயர் நிலையிலும் உள்ளார்கள். ஆனால் சீர்மை (decency) வாய்மை, பிறர் நிலை காணல், தன்னடக்கம் முதலிய குணங்கள் அவர்களிடம் இருப்பதில்லை. எழுச்சிக்கூறில் அவர்கள் பின்னடைந்துள்ளார்கள். அவர்களை உள்நோயுடை அல்லது சமூக நோயுடை ஆளுமை உள்ளவர்கள் என்னலாம். பொதுவாக, சிறு வயதில் இவர்கள் எளிதில் கிளர்பவர்களாகவும், எளிதின் மலர்ந்து கூம்புபவராகவும், முயற்சியும் முன்னேற்ற அவாவும் இல்லாதவர்களாகவும், சிறிய

காரணத்தையும் முன்னிட்டு ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்கு மாறுபவர்களுமாக இருந்தவர்களாவர். உள நோயுடை ஆளுமையர் பொதுவாகச் செயற் காட்டு மிக்க வர்கள் (demonstrative) ஆவர். பாசமும் மனவெழுச்சிச் சார்பும் அவர்களிடம் உண்டு. அவர்கள் எளிதில் கருத் தேற்பர்; பீடிப்புகளுக்கு (addictions) உள்ளாவர்; காம நெறி பிறழ்வும் சூதாடும் வேட்கையும் அவர்களுக்கு உண்டு; தாழ்வு மனப்பான்மையும் குற்ற உணர்ச்சியும் அவர்களிடம் காணப்படுவதுண்டு.

உளநோயுடை நடத்தையின் காரணங்களைப் பற்றி நாம் இன்னும் திட்டமான அறிவு பெறவில்லை. மரபுநிலை அமைப்பும் பிற உயிரியக் கூறுகளும் ஒரு வேளை அதற்குக் காரணிகளாகலாம். அதே நேரத்தில் தவருன வளர்ப்பும் தகுதியற்ற சூழ்நிலையும் ஓரளவு காரணமாகலாம்.குழந்தைப் பருவத்தில் தனியாள் தான் விரும்பியதைப் பெறுவதற் காக வன் செயல் முறையைக் கையாடியிருந்தால், அல்லது ஒருவரும் அவரைக் கட்டுப்படுத்த முடியாதபடி எழுச்சிவெளிப்பாட்டு நடத்தை இயற்றியிருந்தால், அல்லது அளவுக்கு மிஞ்சியோ, மிகக் குறைவாகவோ அன்பு செலுத்தப்பெற்றிருந்தால் அல்லது தடங்கல்களை எதிர்த் தோ வாழ்ந்திருந்தால் அவர் இம்முறைகளையும் மனப் பான்மைகளையும் குடும்பத்திற்கு வெளியேகாணும் சமூக நடத்தையிலும் கொண்டு செல்லக் கூடும். குழந்தைமைப் பயிற்சியும் சமூகச் சூழ்நிலையும் ஆளுமையின் முக்கியத் தீர்விகள் என்பது குற்றத்தின் அடிப்படை ஆய்வுகளிலிருந் தும் தெரிகிறது.

ஒழுக்கம் (Character)

ஒழுக்கம் என்ற சொல் அறப்பண்பினைக் குறிக்கிறது; சமூகத் தரங்களுக்கு ஒத்து நடக்கும் நடத்தை வகையைக் குறிப்பிடுகிறது.

ஒழுக்கம் என்பது 'முற்றிலும் அமைந்த முயற்றித் (completely fashioned will) திட்டமாகத் தேர்ந்தெடுக்கும் பழக்கம்' என்பது உளவியல் வரையறையாகும். 'வன்மை யான ஒழுக்கம் உள்ளவர் சூழ்நிலையைத் துணிந்து எதிர்த்து நிற்கிறர். தீர்மானமும் நம்பிக்கையும் கொண்ட உள்ளான உலகத்தில் வாழ்கிறர்' என்று மர்ஃபி கூறியுள்ளார்.

ஒழுக்கம் ஒரு பழக்கமாதலாலும், சமூகப் பண்பாட்டுக் கூறு பழக்கம் அமைய உதவுவதாலும் இக்கூறு ஒழுக்க அமைப்பிலும் முக்கிய இடம் பெறுகிறது.

திட்டமாகத் தேர்ந்தெடுக்கும் பழக்கம் என்று நாம் மேலே கூறியது முக்கியமானது. ஒவ்வுமையும் (consistency) ஒரு படித்தன்மையும் (uniformity) ஒழுக்கத்தின் சாரம் ஆவன. தனது அந்நேர உளதுடிப்புக்களுக்கு அடிபணி பவனுக்கு ஒழுக்கம் குறைவு. ஆனால் தனக்கு வேண்டியது யாது என்று தெளிவாக அறிந்து (கோள்கள் சமூகத்திற்கு நல்லவாயினும், அல்லவாயினும்) தனது சக்திகளையெல் லாம் தன் கோள்களினால் ஆண்டு தனது உடனடி உள்து டிப்புக்களை அடக்கி, தன்னம்பிக்கை கொண்டு, இன்பத் தைத் துறக்க ஆயத்தமாக இருப்பவனுக்கு ஒழுக்கம் உண்டு.

தனது உள் துடிப்புக்களைக் உடனே நிறைவேற்றிக் கொள்ளாமல் சமூகத் தரங்களுக்குக் கட்டுப்படுபவனுக்கு நல்லொழுக்கம் உண்டென்று கூறலாம். ஆனால் திட்ட மான முயற்றிப் பழக்கங்கள் (habits of will) அமைந்தும், கோள்கள் (goals) சமூகத்திற்கு எதிரானவையாக இருந் தால் அவனுக்குத் தீய ஒழுக்கமே உளதாகும்.

பண்பாடும் ஆளுமையும் :

மரபு நிலையும் சூழ் நிலையும் ஊடாடுவதன் விளைவாக ஒவ்வொரு தனியாளும் ஒரு தனிச் சிறப்புள்ள ஆளுமை வளர்த்துக்கொள்கிறான். ஆனால் இத் தனி வேற்றுமை களுக்கு ஊடே சில பரந்த ஆளுமை வகைகளும் உள் ளன. ஆளுமைக்கும் பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பினை லும் இவ்வகைகள் பாதிக்கப்படுகின்றன. பண்பாடு மாறும் தன்மையுடையது. உலகின் பற்பல பாகங்களி லுள்ள மக்கள் கொள்ளும் வாழ்க்கைப் படிவம், நிறுவனங் கள், வழக்கங்கள் எல்லாம் அவர்களுடைய பொருள்வயச் (materials) சூழ்நிலையையும் அறிவு முன்னேற்றத்தையும் பொறுத்தது.

ஆளுமையின் எல்லைகளை உயிரியல் முறையிலும் குறிக் கலாம். பண்பாட்டு முறையிலும் குறிக்கலாம். ஆளுமை என்பது தனியாளின் பற்பல மனப்பான்மைகள், பற்றுக்கள்

ஆகியவற்றின் அமைப்பு : இவற்றைப் பண்பாடு பெரிதும் பாதிக்கிறது ஆளுமையின் பொதுக் கோலம் (design) தனியாளின் பண் பாட்டினுலே அமைகிறது. ஆளுமை என்பது பண்பாட்டின் அகவயப்(subjective) பக்கம் ஆகும். ஒருவகையாகப் பார்த்தால் ஒவ்வொரு பண்பாட்டிற்கும் உரிய ஆளுமை உண்டு. ஆனல் இந்த ஆளுமை காலத்திற்கேற்ப மாறுகிறது.[12] மரபு நிலை ஆளுமைக்கு மூலப் பொருள் ஆகிறது; பண்பாடு கோலம் அமைக்கிறது; குடும்பம் அதனை உருவாக்கும் தொழிலாளியாகிறது; பெற்ருர் சமூகத்தின் பண்பாட்டைக் குழந்தைக்கு எடுத்து அளிக்கிருர்கள்.

வெவ்வேறு பண்பாடுகளைப் படித்ததிலிருந்து ஒவ்வொரு பண்பாட்டிற்கும் உரிய பொதுவான ஆளுமை வகை உண்டென்று தெரிகிறது. ஏனெனில் ஆளுமை வெளிப்படும் வகைகளைப் பண்பாடு விதிக்கிறது. எடுத்துக் காட்டாக ஃபியூடலிசப்(Feudalism) பண்பாட்டில் அடிமைகளுக்கும் வேலைக்காரருக்கும் தம் ஆற்றல்கள் அனைத்தையும் வெளிப்படுத்தும் வாய்ப்பு கிடையாது; வாணிகச் சமூகத்தில் அழகுணர் வெளிப்பாடுகள், அறிவியல் ஆய்வு, புற ஆய்வு மனப்பான்மை முதலியவை கீழ்ப்படுத்தப்படுகின்றன. [13] ஆளுமைக் கூறுகளின் வேறுபடுப்பு எல்லையையும் (range of variation) பண்பாடு மட்டுப்படுத்துகிறது. மேலும் சில சமூகங்களில் உள்ள வாழ்க்கை நிலைமைகளின் விளைவாகச் சில பண்பாட்டுக் கூறுகள் வளர்வதேயில்லை. மீட் (Mead) இயற்றிய பல சமூக ஆய்வுகளிலிருந்து சமூகங்களுக்கிடையேயுள்ள ஆளுமைப் படிவ வேற்றுமையும் அவை ஏன் வேறுபடுகின்றன என்பதும் தெரிய வருகிறது. நியூ கினியாவிலுள்ள அரப்பேஷ் மலைவாழ்நர், நியூ மெக்ஸிகோவிலுள்ள ஸுனி (zuni) இந்தியர் ஆகியோரின் வாழ்க்கையை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம்.

அரப்பேஷியர் அலைந்து திரியும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள். வேட்டையாடுதல், வியாபாரம், விவசாயம் முதலிய தொழில்கள் மூலம் வாழ்க்கையை ஒருவாறு நடத்துகிருர்கள். அவர்களுடைய நாடு மலைப் பாங்குள்ளதாதலாலும், அவர்களிடத்திலிருந்து கொள்ளை யடிக்கக் கூடிய பொருள் அதிகம் இல்லாததாலும், அவர்கள் மேல் எவரும் படையெடுக்கவில்லை. மேலும் உணவு திரட்டுவதற்காக

அவர்கள் கூட்டுச் செயலில் ஈடுபடத் தேவையில்லை ஆகையால் தரமடைந்த (standardized) குழு வாழ்க்கை அவர்களிடத்துக் காணப்பட வில்லை. அவர்களுடைய தொடர்புகள் பெரும்பாலும் நேர்முகமாக ஆட்களிடையே அமைவன. நிறுவனப்பட்ட தொடர்பு அவர்களிடம் இல்லை. இக்காரணங்களின் விளைவாக, அரப்பேஷியர் போட்டி யற்று வாழ்கிறார்கள். அவர்களுடைய தன் முனைப்பு சரி யான வளர்ச்சி அடைவதில்லை. அவர்களுக்குள் தலைமை வாய்ப்பு இல்லை. தலைமைப் பதவிக்கு வெகுமதியும் கிடை யாது. ஆதிக்கம் செலுத்தும் அவா குறைவாகக் காணப்படு கிறது. ஆகையால் அரப் பேஷியர் அடக்கமுள்ளவராக, அமைதி நாடுபவராக, ஆசையற்றவராக புறமுறை சாராத வராக இருக்கிறார்.

நியூமெக்ஸிகோவிலுள்ள ஸுனி இந்தியர் விவசாயமும் ஆடு மேய்ப்பதும் தொழிலாகக் கொண்டவர்கள். இவ்விரு தொழில்களையும் அவர்கள் கூட்டுறவு முறையில் நடத்துகி றார்கள். குழுவின் உறுப்பினர் ஒத்துழைத்து வீடு கட்டுகி றார்கள். இச் சமூகத்தில் போட்டி மனப்பான்மையை யாரும் ஊக்குவதில்லை. மக்கள் தங்கள் ஏற்றத்திற்கும் (status) அங்கத்திற்கும் (roles) ஏற்ப சமூகம் எதிர்பார்க் கும் கடமைகளைச் செய்கிறார்கள். சமூக வாழ்க்கையொழுக் குப் படிவத்தை முறிக்க முயல்பவரைப் பிறர் ஏளனம் செய்து வெட்கப்படுத்துகின்றனர். ஸுனி சமூகத்தில் தன் முனைப்பும் (egoism) தனித்துவமும் (individualism) ஒடுக் கப்படுகின்றன. தன்னலங் கருதாமை உயர்வாக மதிக்கப் படுகிறது.

ஜப்பானியர், மேற்குக் கடற்கரைப் பக்கத்திலுள்ள இந் தியர், உள் நாட்டிலுள்ள இந்தியர் முதலியவர்களின் ஆளு மைத் திறத்தை இவ்வாறு விளக்கலாம். இந்தியாவின் வெவ்வேறு பாகங்களிலுள்ள மக்களின் ஆளுமைப் படி வத்தை இம்முறையில் ஆராய்வது சிறப்புடையதாகும்.

இனி குழந்தைமையிலும் குமரப் பருவத்திலும் பண் பாட்டின் பங்கினைப் பற்றிக் காண்போம்.

சில நாகரிகம் குறைந்த சமூகங்களில் தாய் நின்று கொண்டு அல்லது நடந்துகொண்டு குழந்தைக்குப் பாலூட் டுகிறாள். இந்தியாவிலுள்ள ராபரி (Rabbaries), பில் (Bhils)

இனத்தைச் சேர்ந்தவர்கள் இதற்கு எடுத்துக்காட்டாவர். இம்முறையில் குழந்தைக்கு முழு நிறைவு கிடைப்பதில்லை. குழந்தை தாயின் மார்பில் இன்னும் கொஞ்சநேரம் இருக்க விரும்புகிறது. இச்சமூகங்களில் மக்களிடம் காணப்படும் வன்செயற் பண்பு இதன் விளைவாகவே ஏற்பட்டிருக்கக் கூடும் என்று சில மனிதவியலர் கூறுகிறார்கள். இக்கூற்றினை ஏற்குமுன் நாம் தனியாள் வரலாறுகளைத் திரட்ட வேண்டும். வளர்ச்சி முறையை உற்று நோக்கவேண்டும். சில சமூகங்களில் குழந்தை தொடர்ச்சியாகத் தாயின் கவனம் பெறுவதில்லை. இவ்வாறு விட்டுவிட்டுப் பெறும் கவனத்தாலும், உயிரியத் தேவைகளை நிறை வேற்றுவதைப் பற்றிய திட்டமின்மையாலும், எழுச்சியை ஒழுங்காக நிறைவிக்கும் தொடர்பின்மையாலும் குழந்தையிடம் கவலை, ஐயம், நம்பிக்கையின்மை முதலிய பண்புகள் தோன்றுகின்றன என்று உளப்பாகுபாட்டறிஞர் கூறுகின்றனர். இக் கருத்தையும் கருதுகோளாகவே கொண்டு கூர்ந்து ஆராய வேண்டும். இந்தியக் கூட்டுக் குடும்பங்களில் வளரும் குழந்தைகளிடம் இப்பண்புகள் பொதுவாகக் காணப்படுவதில்லை என்பதையும் நாம் கருத வேண்டும். அன்புகலந்த அரவணைப்பும், கவனமும் தொடர்ந்து பெறும் குழந்தைகள் திட நம்பிக்கையும், காப்புணர்ச்சியும் உள்ளவர்களாகிறார்கள் என்பது வெள்ளிடை மலை. இப்படி வளர்க்கப்பட்ட குழந்தைகளுக்குத் தம் மதிப்பைப் பற்றிய உணர்வும் உண்டாகக் கூடும். சில சமூகங்களில் குழந்தையை இரண்டொரு மாதங்களுக்குத் துணிகளில் சுற்றி வளர்க்கிறார்கள். இதன் மூலம் இயக்க உந்து தடைப்படுகிறது. வன்செயல் உணர்ச்சி இவ்வாறு உள்தடைப்பட்டால் அதன் விளைவுகள் நீடித்துத் தோன்றக் கூடும். இவ்வாறே படுக்கையை ஈரமாக்குவதற்காகத் தண்டிக்கப்படும் குழந்தைகள் அச்சம், நடுக்கம், கவலை முதலிய மனப்பான்மைகளை வளர்த்துக் கொள்ளக்கூடும்; அல்லது பிடிவாதம், புறத்தூய்மை வெறி முதலிய பண்புகளுடையவர்களாகக் கூடும்.

சிறிய வயதிலே குழந்தை தன் தவறுகளுக்காக அடியும் உதையும் பெற்றால், அதன் ஆளுமைக்கு ஊறு விளையக் கூடும். குழந்தையின் வலிமை உணர்ச்சியும், காப்புணர்ச்சியும் கெட்டு, வளர்ச்சியில் உளக்கோட்டம் ஏற்படக் கூடும். [14] குழந்தையைப் பால் மறத்தும் (weaning) வயதும், வகையும் சமூகத்திற்கேற்ப மாறுகிறது. இந்தியத் தாயர் இன்னும் குழந்தைப்பற்றுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

ஆனால் பல மேல்நாட்டுத் தாயருக்கு இப்பண்பு உண்டென்று சொல்ல முடியாது. [15] அமெரிக்கா முதலிய மேல் நாடுகளில் குழந்தையை வலிந்து பால் மறத்துகிறார்கள் என்பது புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. [16] வலிந்து பால் மறத்தப்பட்ட குழந்தை வாய் மையப்பட்டுப் (orally centred) பிற்காலத்தில் எதையேனும் மெல்லுதல், புகை பிடித்தல் முதலிய வகைகளில் உதட்டுத் தூண்டலே விரும்பக்கூடும் என்று உளப் பாகுபாட்டு அறிஞர் கூறுகின்றனர். உளவியற் 'பால்மறப்பிலும்', குழந்தை தன்னைக் கவனித்துக்கொள்ளக்கூடிய நிலை எய்துமுன் அதைப் பிரித்துவிட்டால் நடுக்கமும் கவலையும் கொண்ட ஆளுமை வளரக்கூடும். இதற்கு மாறுக நெடுங்காலம் குழந்தையோடு ஒட்டிக்கொண்டிருப்பதும் நல்லதல்ல. இப்படிச் செய்தால் குழந்தை தாயுடன் இருத்தம் (fixation) பெறக்கூடும். ஒத்த வயதுக் குழுவினரொடு பங்கெடுக்கும் அடுத்த நிலையை அடைவது தடைப்படலாம். பிற்காலத்தில் தன்னம்பிக்கையோடு பிறருக்கேற்பப் பொருத்திக் கொள்ளுதல், திருமணம் செய்தல், இசைந்த மண வாழ்க்கை வாழ்தல் முதலிய வற்றிலும் இடர்ப்பாடு தோன்றக்கூடும்.

அமெரிக்க மாதிரிகளை நாம் அவசரப்பட்டுப் பின்பற்று முன் திருமதி மர்ஃபி இந்தியக் குழந்தை வளர்ப்பு முறையைப் பற்றிக் கூறியிருப்பதைப் பார்க்கலாம். இந்தியக் குழந்தை ஏற்புணர்ச்சியோடு வளர்க்கப்படுகிறது. பலரோடு பழகும் வாய்ப்பு அதற்குக் கிடைக்கிறது. குழவிகள் இரண்டு ஆண்டுகளுக்காவது சீராட்டி வளர்க்கப்படுகிறார்கள். திட்டமான கழிவுக் கட்டுப்பாடு இங்குக்கிடையாது. இதற்காகத் தண்டனையும், வற்புறுத்தலும் கிடையாது. வளரும் குழந்தை முதிர்ந்தோரைக் கவனித்து அவர்களிடமிருந்து பலவற்றைக் கற்கிறது. இந்தியப் பெற்றோர் வெளியே செல்லும்போது குழந்தையை வீட்டில் விட்டுச் செல்வதில்லை. குழந்தையைத் தாய், அக்காள், அண்ணன் முதலிய அனைவரும் இடுப்பில் தூக்கி வைத்துக் கொள்கின்றனர். "இத்தகைய இடைவிடாத நெருங்கிய தொடர்பும், பங்கெடுப்பும், சிறந்த பயன் தரும் இயக்க அனுபவங்களாகின்றன. (இந்தியக்) குழந்தை பிறரொடு நெருங்கிய, உடல் தொடர்பு கொண்டுள்ளதால் உள்ளுணர்வொடு பிறரை அறியவும், உணரவும், புரிந்துகொள்ளவும் செய்கிறது. நம் (மேல்நாட்டுக்) குழந்தைகளோ, விளையாட்டுப் பொருட்களோடு நெடுநேரம் செலவழிப்பதால் பொருட்

களின் பொறியமைப்பைப் புரிந்துகொள்கிறது.'' இந்தியக் குழந்தைகளை இரண்டு ஆண்டுகள் வரை எடுத்துச் செல்கின்றனர். குறிப்பிட்ட காலத்தில் நிற்கவேண்டும், நடக்க வேண்டும் என்று குழந்தையை வற்புறுத்துவதில்லை. இதற்கு மாறுக, அமெரிக்காவில் குழந்தை கூடியவரைவில் நிற்கவும், நடக்கவும் வற்புறுத்தப்படுகிறது. இத்திறன்கள் விழுமியங்களாகக் (values) கருதப்படுகின்றன. மேலும் இந்தியக் கிராம வீடுகளில் கடிகாரம், எந்திரங்கள், ரேடியோக்களெல்லாம் இருப்பதில்லை. ஆகையால் 'அதைத் தொடாதே' என்றெல்லாம் தடைக் கட்டளைகள் அளிக்கத் தேவையில்லை. '' மனமுறிவு, பிறரது வற்புறுப்பு, அதிகாரத்தோடு போராடுதல் முதலிய நிலைகளை இந்தியக் குழந்தை அதிகமாக எதிர்ப்படுவதில்லை''.

திருமதி மர்ஃபி தமது அமெரிக்க வாசகருக்குக் கூறுவது: ''இத்தகைய நெளிவு, அன்றுடக் குடும்ப வாழ்க்கைப் படிவத்தில் குழந்தைகளை ஏற்பது, எல்லாப் பருவ மக்களும் பிற வயதினரின் செயல்களில் எளிதாகப் பங்கு கொள்ளல் முதலியவற்றை நாமும் கையாளக்கூடும். வாழ்க்கைத் தரத்தைப் பற்றி நாம் அதிகம் பேசுகிறோம். ஆனல் அவர்கள் (இந்தியர்) தம் குழந்தைகளை ஏற்கும் வகையைப் பார்த்து, கூடி வாழும் தரத்தைப் பற்றி நாம் கற்றுக்கொள்ள முடியும்.''

இனி, ஆளுமையில் பால் வேற்றுமைகளைப் பண்பாடு எவ்வாறு பாதிக்கிறதென்று பார்க்கலாம். சில சமூகங்களில் பெண் குழந்தை பிறப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியன்று; ஏனென்றால் அது பொருளாதாரப் போகாறு (liability) ஆகும். குஜராத்தின் சில பகுதிகளில் பெண் திருமணமாகி மாமனூர் வீட்டிற்குப் போனபிறகு கூட அவளுடைய பெற்றோர் அவளுக்கு ஆடைநல்க வேண்டியதிருக்கிறது. சில பகுதிகளில் அவளுடைய சடலத்தை மறைக்கும் இறுதித் துணிகூடப் பெற்றோர் வீட்டிலிருந்தே வரவேண்டும். ஓர் ஏழை மில் தொழிலாளி, 'எனது மகள் இறந்துவிட்டாள், அவளுடைய மாமன் மாமியர் அவளுடைய சடலத்தை மறைக்கும் துணியை நான் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். என்னிடம் பணமில்லை' என்று இந்நூலாசிரியரிடம் அழுது கொண்டு சொன்னர். இத்தகைய நிலையில் தங்கள்குடும்பத்தில் தாங்கள் வரவேற்பின்றியே நுழைந்தவர்கள் என்று பெண்கள் கருதுவதில் வியப்

பில்லை. அவர்கள் ஓர் உளவியன் முதற் குறைவோடு (handicap) வாழ்கிறார்கள்.

மனிதவியலர் மற்றொரு குறிப்பையும் எடுத்துக் காட்டு கிறார்கள். முற்காலத்தில் ஆணின் ஆளுமை பெண்ணின் ஆளுமையினின்றும் வேறுபட்டதென்று எண்ணினார்கள் உலகெங்கும் மனிதன் 'ஆண்மை' யுடையவன், ஆள்பவன் என்றும் பெண் பேணுபவள், அடங்கிப் போகிறவள் என் றும் கருதி வந்தனர். ஆனால் பெண் உயிரியல் முறையில் தாழ்ந்தவள் என்னும் கருத்தை இப்பொழுது அனைவரும் ஏற்றுக் கொள்வதில்லை. ஆண் ஆளுமையும், பெண் ஆளு மையும் பண்பாட்டின் விளைவுகள் என்று நாம் கருதுகிறோம். சில சமூகங்களில் ஆண்கள் பணிவும் அடக்கமும் உள்ளவர்கள், பெண்கள் முன் நிற்பவர்கள் என்பதை ரூத் ஃபெனிடிக்ட் குறிப்பிட்டுள்ளார். அஸ்ஸாமிலுள்ள காசியர் (Khasis) மரபில் மனிதனுக்குத் தன் மனைவியின்மீதும் பிள்ளைகள்மீதும் அதிகாரம் கிடையாது. கலியாணத்திற்கு முன் அவன் தன் தாய்க்காக உழைக்க வேண்டும்; திருமணத்தின்பின் தன் மனைவிக்காக உழைக்கவேண்டும். தன் மனைவியின் முகம் கோணுமல் அவன் நடந்துகொள்ள வேண்டும். அவள் தன் நண்பர்களைப் பார்ப்பதற்காகச் சுற்றி வருவதற்குள், அவன் சமையல் செய்து, விட்டைச் சுத்தம்செய்து, குழந்தைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டும். இவர்களுக்குள் பெண்பாற் கொள்கையே (Feminine Principle) உயர்ந்தது. நல்லவை, பெரியவை யெல்லாம் பெண்பாலாகக் கருதப்படுகின்றன. காசியப் பெண்ணுக்கு இயங்குரிமையும் சிந்தையுரிமையும் உண்டு. அயலவருடன் பழகுவதில் பெண்தான் முந்திக் கொள் கிறாள்.[18]

பண்பாட்டின் பங்கைக் குமரப்பருவத்துடனும் தொடர் புறுத்திப் படிக்கலாம். குமரப் பருவத்தினர் ஒரு நெருக்கடி யான பருவத்தில் உள்ளார்கள் என்பது பொதுவான நம் பிக்கையாகும். ஒரு காலத்தில் மனிதன் தன் பழைய நிலையைத் தாண்டி இனப் படிமலர்ச்சி முறையில் முன்னே றியபோது இத்தகைய இன நெருக்கடிப் பருவம் ஒன்று இருந்தது; தனி மனிதனும் அந்நிலையில் மீண்டும் வாழ் கிறான் என்று ஸ்டான்லி ஃஆல் (Stanley Hall) கூறினார். இந்நெருக்கடி நிலை உடலில் மாறுதல்களால் ஏற்படுகிற தென்று சில அறிஞர் கருதுகின்றனர். புராதனச் சமூகங்

களில் குமரப் பருவத்தினர் வாழ்க்கையில் இத்தகைய நெருக்கடி ஏற்படுவதில்லை என்று மனிதவியலர் எடுத்துக் காட்டுகின்றனர். இந்திய கிராமச் சமூகத்திலுள்ள குமரரிடத்து இன்றும் இந்நெருக்கடி நிலையைக் காண்பது அரிது. ஆகையால் இந்நிலை ஏற்படுவதற்குச் சூழ்நிலையே பெரும்பாலும் காரணமாக அமைகிறது எனல் பொருத்தமாகும். பண்பாட்டுப் படிவமும் இதில் பெரும் பங்கு கொள்கிறது. திருமணத்திற்கு முன் ஆண்-பெண் தொடர்பு அனுமதிக்கப்படும் சங்கங்ககளில் மனவெழுச்சிக் குலைவு ஏற்படுவதில்லை என்று மாலுனேஸ்கி (Malinowski) கண்டார். இந்தியாவில் மக்கள் இளம் வயதில் மணம் செய்து கொண்டபோது இப்போது மேல் நாட்டில் நாம் காணும் நெருக்கடி நிலை இருந்ததில்லை. குமரனிடத்து தன்னம்பிக்கையின்மையும் பாலியற் பிரச்சினைகளும் இல்லை. சிறிய வயதிலிருந்தே அவன் குடும்பத்தின் பொறுப்பான வேலைகளில் ஈடுபட்டான். ஏற்பும், அறிமுகமும், ஏற்றமும் இளமையிலே பெற்றான். திருமணம், சமுதாய விருந்துகள் முதலியவற்றில் தன் குடும்பத்தின் சார்பில் பங்கெடுத்துக் கொண்டனர். இக் கொண்டாட்டங்களில் அவனுக்கு எளிய, விரும்பத்தக்க சமூகக் கடன்கள் அளிக்கப்பட்டன. அவன் பதினெறு வயது எய்தியதும் பெற்றோர் அவனைத் தமக்குச் சமமாகப் பாவித்தனர். இந்தியாவில் குழந்தைகளைத் தனியான முறையில் வளர்ப்பதில்லை. அவர்களுக்கென்று தனி ஒழுங்கு நெறி கிடையாது. பாலியல் வாழ்க்கையிலும், திருமணம் செய்து கொள்வதைப் பற்றி இளம் இந்தியர் அதிகமாக அஞ்சுவதில்லை. திருமணத்தைப் பற்றிய எண்ணம் அவர்களுக்குப் பழக்கப்படாததன்று. ஆனால் இப்பொழுது இந்நிலை மாறிக்கொண்டு வருகிறது. பெரும்பாலான தொழில்கள் மரபுவழி வருவதில்லை. நகரத்திலுள்ள இந்திய வாலிபன் தன் கல்வியை முடித்து அதை அடிப்படையாகக் கொண்டு ஒரு வேலை தேட வேண்டியதிருக்கிறது. பொதுவாக வேலை கிடைத்த பின் தான் அவன் திருமணம் செய்துகொள்ள முடியும். ஆனால் இயற்கையானது மனிதன் இயற்றியுள்ள இந்த மாறுதல்களை மதிப்பதில்லை. இயற்கை இதற்காகக் காத்திருப்பதுமில்லை. பின் குமரப் பவத்தில் எதிர்பாற் கவர்ச்சி தோன்றுகிறது. மனிதன் தான் வைத்துக் கொண்ட விதிகளின் விளைவாகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு காத்திருக்கும் பருவத்தில் காலைக்கவி, முதிராத் தத்துவம், பகற்கனவு முதலியவை மனத்தில் இடம் பெறுகின்றன. திருமண வேட்கை நிறை

வேருததால் ஒரு மாணவி மிகத் தெளிவான பகற்கனவுகண்டு தனக்குள்ளே பேசிக்கொள்ளும் பழக்கம் உடையவளானாள். தனிமையாக இருப்பதற்கும் இவள் அஞ்சினாள். இப்பருவத்தினரைச் சமூகம் மதியற்ற முறையில் நடத்தினால் இடர்ப்பாடுகள் மிகும். பால், குமரப் பருவத்தினருக்கு இழிந்தது, வாலிபருக்கு ஏதமுடையது, பிற்கால வாழ்க்கைக்கு இன்பமானது, என்று பலர் கருதுவதுண்டு.

பண்பாட்டையும் ஆளுமையையும் தொடர்புறுத்திப் படிப்பதில் நமக்கு ஒரு முக்கியமான பாடம் உளது. உளவியல் என்பது பெரும்பாலும் மேல்நாட்டு நாகரிகத்தின் உளவியலாகவே அமைந்துள்ளதால், அந்நாகரிகம் மனித இயல்பையும் தன் நிலையிலேயே வைத்து விளக்குகிறது.[19] ஆனால் பண்பாட்டு ஆய்வு முறையின் பயனாக வேறு வகையான நடத்தைகளையும் நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

பண்பாட்டையும் ஆளுமையையும் மற்றும் ஒரு நிலையில் நின்று காணமுடியும். தரநிலை (normal) நடத்தைக்கும் தரப்புற (abnormal) நடத்தைக்கும் உள்ள வேற்றுமை யாது என்று நாம் கேட்பதுண்டு. ஆனால் தரங்களும் தர நிலைகளும் பண்பாட்டிற்குப் பண்பாடு வேறுபடுகின்றன. பண்பாடு இயல்பூக்க உந்துகளை அடக்கி அதன் மூலம் நிலைபெறுகிறது. ஆகையால் பண்பாட்டில் எப்பொழுதும் உளக்கோட்டத்திற்கு இடம் உண்டு. ஆனால் இவ் அடக்கத்தின் முறையும் அளவும், எந்த உந்துகள் அடக்கப்படுகின்றன என்பதும் சமூகத்திற்குச் சமூகம் மாறுபடுகின்றன. ஆகையால் மனமுறிவின் தன்மையும், உளக்கோட்டத்தின் வகைகளும் வெவ்வேறு சமூகங்களில் வெவ்வேறு வயைாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, பொருளாதார ஏற்றத்தால் மக்கள் புகழ்வன்மை பெறும் சமூகங்களில், போட்டி ஊக்கப்படுகிறது. மலர்தல்—கூம்பற் கோளாறு இங்கு அதிகமாகிறது. லான்டிஸும் பேஜும் (Landis and Page) இயற்றிய **இயற்கைச் சமூகமும் மன நோயும்** என்ற நூலில் இதற்கு ஆதாரமான புள்ளி விவரங்களைக் காணலாம். மலர்தல்-கூம்பற் கோளாறு சமூகத்தின் உயர்நிலைக் குடும்பங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. ரஷியாவைவிட அமெரிக்காவில் இது அதிகம். அமெரிக்கச் சமூகத்திலுள்ள முரண்பாடுகள் உளக்கோட்ட ஆளுமை வளர்வதற்கு ஏற்ற நிலமாகின்றன என்று கரென் ஃஆர்னி (Kaoren Horney) கூறியுள்ளார். போட்டி வியாபாரத் தொழுகையும் பிறர் நலனைக்

கருதும் பண்பும் ஒருங்கே நிலவுவது இத்தகைய தொரு முரண்பாடாகும். லிண்ட் (R.Lynd) வேறு பல முரண் பாடுகளை எடுத்துக் கூறுகிறார். (எ - டு), கோட்பாட்டள வில் சரியென்று கருதப்படுபவை நடைமுறையில் தவருகக் கருதப்படுதல், திடநிலைமைக்கும் (stability) மாறுதலுக்கும் இடையேயுள்ள முரண்பாடு. மக்களாட்சித் தத்துவத்திற் கும், 'தகுந்த ஆட்களைத் தெரிந்து கொள்வதற்கும்' உள்ள முரண்பாடு முதலியன.

ஆருமையை ஆயும் முறைகள்:

ஒருவருடைய ஆருமையை நன்கு அறிந்து கொள்ள வேண்டுமானால் பல கூறுகளை ஆராயவேண்டும். அவரு டைய கூறுகள் ஒவ்வொன்றையும் பற்றிப் படிப்பதுடன் ஆளின் முழுமையையும் காணவேண்டும். இதற்காக அவ ருடைய வாழ்க்கை வரலாற்றை மருத்துவப்பதிவுகளிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டும். பேட்டியின் மூலம் அவரு டைய சமூக-பொருளாதாரப் பின்னணியை அறிந்துகொள் ளவேண்டும். அவருடைய இப்போதைய நடத்தை, தேவை கள், பிரச்சினைகள் முதலிய வற்வற்றையும் நாம் காண வேண்டும். அவருடைய கோள்களுக்கேற்ப அவருடைய நடத்தை எப்படி அமைகிறது என்பதையும் ஆராயவேண் டும். அவர் எழுதியவற்றின் பொருளடக்கத்தையும் நடை யையும் நாம் ஆயக்கூடும்.

தனியாளைப் பிறரொடு ஒப்பிட்டு அவருக்கு ஓர் இடம் அளிக்கலாம். இதற்கு ஆற்றல், கவர்ச்சி, ஆளுமை முதலி யவற்றைப் பற்றிய சோதனைகள் பயன்படுகின்றன. ஆளுமை ஆய்வின் அளவுசார் (quantitative) முறைகளைப் பற்றி இனிப் பார்ப்போம். வாழ்க்கை நிலைமைச் சோதனைகள் (Life Situation Tests), செய்கைச் (Performance) சோத னைகள், எழுதற் (paper and pencil) சோதனைகள், வினா நிரல்கள், புறத்தெறி சோதனைகள், தரமிடு நிரல்கள் (rating scales) முதலியன உள்ளன.

ஆளுமைக் கூறுகளை 'மிகையா, குறைவா' என்ற முறையில்தான் அளவிடமுடியும். ஒரு கூறினை அளவிடும் போது அதைப் பொதுப் பாங்காகக் கொள்ளக்கூடாது; குறிப்பிட்ட நிலைமைகளில் அது செயலாற்றுவதையே கவ னிக்கவேண்டும். இப்படிக் குறிப்பிட்ட நிலைகளில் நடத்

தையைக் காண்பதால் ஒருவர் நாய்க்கோ. இருட்டுக்கோ அஞ்சுதல், தமக்குக் கீழ்ப்பட்டவர்களிடத்துக் காட்டும் வன்செயல் நடத்தை, சமூகச் செயல்களில் தான் தொடங் காற்றல், அறிவுசார் செயல்களில் தலைமை, முதலியவற்றை அறியலாம். இப்படி ஒருவருடைய பாங்குகளை (dispositions) அளந்தால் அவருடைய நடத்தையை முற்கூறமுடியும்.[20]

தரமிடு நிரல் முறையில் பல கேள்விகள் அமைக்க லாம். இவற்றைக் கொண்டு ஒருவர் தம்மையோ, பிற ரையோ தரமிடலாம். தன் தர மீட்டில் (self-rating) சில குறைகள் உள்ளன. சமூகம் ஒப்புகின்ற (approve) நடத் தைகளில் ஒருவர் தம்மை மிகைத்தரமிடக்கூடும். தம்மைப் பற்றிய எல்லாத்தகவல்களையும் அவர் கூருமல் இருக்கலாம். தம் பெயர் கூருமல் தரமிட்டவிடத்தும் இக்குறைகள் காணப்பட்டுள்ளன. பிறர்த் தரமீட்டுமுறையில், ஒருவரை நன்கு அறிந்து பல நிலைகளிலும் அவரை உற்று நோக்கிய மற்றொருவரைத் தரமிடச் சொல்லுகிறேம். தரமிடு முறை யில் கூறுகளை அளப்பது எப்படி என்பதற்குச் சில எடுத் துக்காட்டுகள் அளிப்போம்.

எழுச்சி முதிர்வையும் (Emotional Maturity) பொருத்தப் பாட்டுப் பாகையையும் (Degree of Adjustment) அளத்தல் :

இதற்கென்று ஏற்படுத்தப்பட்ட சோதனைகளுள் ஒன்று பிரெஸ்ஸீ சோதனை (Pressey's X—O Test) இதில் வரிசை வரிசையாகப் பல சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆட்படுநர் இன்னுதாகக் கருதும் சொற்களை அடித்து விட வேண்டும். ஒவ்வொரு வரிசையிலும் மிக இன்னுதாகக் கருதும் சொல்லையும் குறிக்க வேண்டும். (எ-டு).

உரிஞ்சு, இழிகுணம், தின்னு, அழகற்ற, கருப்பு.

அல்லது ஒவ்வொரு வரிசையிலும் அவர் தவறு என்று நினைக்கும் சொல்லை அடித்து விடச் சொல்லலாம்.

(1) இரத்தல், ஆணையிடல், புகை பிடித்தல், காதலித்தல், உமிழ்தல்.

(2) அழுக்கு, சோம்பேறித்தனம், தன்னியப்பு, சுரணை, பண் பாடின்மை.

ஒருவர் எத்தனை சொற்களை அடித்து விடுகிறார் என்பதைக் கொண்டு அவருடைய எழுச்சிப் பாங்கை அறியலாம். அவர் சொற்களினின்று மிகவும் வேறுபட்டால் அவர் கோட்டி (Eccentric) அல்லது பொருத்தக் கோளாறு உள்ளவர். வேறு சில சோதனை வகைகளையும் பார்க்கலாம்:

நீர் தன்னெடுப்புள்ளவரா, தன்னெடுக்கம் உள்ளவரா ? [21]

கீழ்க்கண்ட தேர்வுச் செயல்களுள் எதை நீர் நிகழக் கூடியது (likely) என்று கருதுகிறீர்?

1. ஒருவன் ஒரு கூட்டத்தில் பேசப் போகும்பொழுது தன் மேலதிகாரியையும் அழைத்துச் சென்றான். காரணம்:

அ. அவனுக்கு ஆதரவு தேடிக்கொள்ள.

ஆ. தன் மேலதிகாரியிடத்து அவன் பெருமதிப்புக் கொண்டிருந்ததால்.

இ. தன் முக்கியத்தைப் பற்றி அவன் பிறரிடம் காட்டிக் கொள்ள விரும்புவதால்.

(அ. பணிவையும், இ. தன்னெடுப்பையும் குறிக்கும்)

2. தம்கீழ் வேலை செய்பவர்களை வெகுள்வது.

அ. பொதுவாகத் தவறாகும்.

ஆ. அவர்களிடம் வேலை வாங்குவதற்கு அவசியமாகும்.

இ. நல் ஆசாரமாகாது.

ஈ. பொதுவாக, பயன் தருவது.

ஆ அல்லது இ-யைத் தேர்ந்தெடுப்பவர் தன்னெடுப்புள்ளவர்

உமக்குச் சார்புப் பாங்கு (dependent disposition) உண்டா ? [22]

1. தாமாக ஒன்றைச் செய்யாமல் பிறருடைய அறிவுரையை நாடல் அ. இயற்கையானது (2) ஆ. பொதுவாக, அறிவுடைமையது (1) இ. வலியின்மையைக் காட்டுவது (o)

2. கடவுளைப் பற்றிய சிறந்த கருத்து, அவரை ஓர் ஆளாகக் கருதி அ. துன்பம் வந்தவிடத்து அவரை நாடுதல் (2) ஆ. அவரை அளவற்ற அறிவுடையவராகக் கருதல் (1); இ. உலகத்தைப் படைத்தவராகக் கருதல் (0)

3. மருத்துவர் ஒன்றும் செய்யா விட்டால் கூட அவரை அழைப்பது அ. வறிதே காத்திருப்பதை விட நல்லது (0) ஆ. நம்பிக்கையூட்டுவது (2).

(ஒவ்வொரு கிளை விடைக்கும் பின் பிறைக் கோடுகளில் மதிப் பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மதிப்பெண் இரண்டு சார்புப் பாங்கைக் குறிக்கும்.)

உமக்குச் சமூக நுண்ணறிவு உண்டா?

(அ) நீர் பெயர்களையும் முகங்களையும் நினைவில் இருத்திக் கொண்டால், (ஆ) சமூக நிலைமைகளில் சரியான தீர்ப்புச் செய்தால், (இ) பேசுபவரின் மன நிலையைச் சரியாகத் தீர்த்தால், (ஈ) மனித நடத்தையை நீர் சரியாக உற்று நோக்கினால், (உ) உமக்கு நகைச்சுவை உண்டானால், உமக்குச் சமூக நுண்ணறிவு உண்டு. கீழ்க்கண்ட கேள்விகள் மூலம் நீர் உம்மைச் சோதித்துக் கொள்ளலாம்.

அ. உமது இளம்பெண் நண்பரை நீர் தேநீர் அருந்த உம் வீட்டிற்கு அழைத்துள்ளீர். ஆனால் இதை உம் தாயாரிடம் சொல்ல மறந்து விட்டதால் அவர்கள் வெளியே சென்று விட்டார்கள். சமையற்காரியும் வீட்டில் இல்லை. நீர் அருந்தகத்திலிருந்து தேநீர் வரவழைப்பீரா? அல்லது உம் நண்பரின் துணைகொண்டு தேநீர் தயாரிப்பீரா?

ஆ. (i) பெரும்பாலான மக்கள் தம் குறைகளை வெளிப்படையாகக் கூறுவதைப் பாராட்டுகிறார்கள். இது மெய்யா? பொய்யா? (விடை. பொய்)

(ii) எதிரிகளாக வாழும் இருவருடன் நாம் நண்பராக நிலைத்து வாழ்வதற்குச் சிறந்த முறை அவர்களை ஒன்று சேர்க்க முயல வேண்டும். இது மெய்யா? பொய்யா?

(விடை பொய்)

கட்டுப்படுத்திய நாட்குறிப்பு முறையைத் தன்தரமீட்டுக்குப் பயன்படுத்தல்.

இம்முறையை வாசகர் அனைவரும் பயன்படுத்தலாம். நாம் செய்யவேண்டுவதெல்லாம் நமது நடத்தை வகைகள்

ஒவ்வொன்றையும் தொடர்ந்து பதிவு செய்யவேண்டியது தான். எடுத்துக்காட்டாக தமது சின நடத்தையை நாம் பின்வருமாறு பதிவு செய்யலாம்.

சினத்தைத் தூண்டிய நிகழ்ச்சி	அப்பொழுது தான் இருந்த உடல் நிலையும் மன நிலையும்	எவ்வளவு நேரம் சினம் இருந்தது	நான் என்ன செய்ய இருந்தேன்	நான் என்ன செய்தேன்

பிறர் தரமிடல்

ஒவ்வொரு கூறினையும் மும்முனை, ஐம்முனை அல்லது எழுமுனை நிரலைப் பயன்படுத்தலாம். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பல நடுவர் (Judges) ஒருவரைத் தரமிட வேண்டும். சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:—

தான் தொடங்காற்றல் (Initiative) **ஐம்முனை நிரல்**

அதிகத் தூண்டல் தேவை	தூண்டல் தேவை	சிலவேளை தூண்டல் தேவை	சொன்னால் அதிக வேலை செய்கிறார்	அதிக வேலையைத் தாமே நாடிச் செய்கிறார்.

தலைமை (Leadership) **நான்முனை நிரல்**

பிற்றை நிலையர் தலைமையைவிட்டு விலகுகிறார்	தலைமை தாங்க முயல்கிறார். ஆனால் வெற்றி பெறுவ தில்லை	பொதுவாகத் தலைமையில் வெற்றி காண்கிறார்	முன்னேறும் தலைவர்

சமூக மனப்பான்மை (Social attitude) **ஐம்முனை நிரல்**

சமூக எதிர்த் தன்மையர்	தன் மையம் உள்ளவர்	திட்டமான மனப் பான்மை கிடையாது	பொதுவாகப் பிறர் நலம் கருதுபவர்	பிறர் நலம் பேணும் பண்பு அதி கம் உள்ளவர்.

எழுச்சிக் கட்டுப்பாடு (Emotional control) **நான்முனை நிரல்**

மிக எளிதாகக் கிளர்கிறார் அல் லது கூம்புகிறார்	பொதுவாகச் சமநிலையுள்ளவர்	மிகச் சமநிலை யுள்ளவர்	கிளர்த்தற் கரியார்.

புறத்தெறி நுண்முறைகள் (Projective techniques)

ஆளுமையை முழுமையாக அளத்தற்கு உதவும் சில முறைகள் உள்ளன. இவை புறத்தெறி நுண்முறைகள் எனப் படுவன. இவற்றுள் ரோர்ஷாக்கின் மைத்தடச்சோதனை (Rorschach's Ink Blot Test) மிக நுண்ணியதொரு முறையாகும். மற்றொன்று மரேயின் T. A. T. யாகும். இதனை இரண்டாம் இயலில் விளக்கியுள்ளோம். இங்கு வேறு இரண்டு சோதனைகளைப் பற்றிப் பார்ப்போம்: (1) வாக்கியம் நிரப்புதல். (2) தன்-எண்ணம் நிரப்புதல்.

வாக்கியம் நிரப்புதல் (Sentence Completion):

1950-இல் அகமதாபாத்தில் தொழிற்பூசல் ஆராய்ச்சிக்காகப் பின்வரும் வாக்கியப் பட்டியலை இந்நூலாசிரியர் குஜராத்தில் மொழி பெயர்த்து மில் தொழிலாளருக்கு அளிக்க நேர்ந்தது. அத்தொழிலாளர் ஒவ்வொரு வாக்கியத்தையும் நிரப்ப வேண்டும். இதற்காக அவர்கள் மனத்தில் தோன்றும் முதற் சொல்லைப் பயன்படுத்த வேண்டும். அவர்கள் விரும்பக்கூடிய வேறு கருத்துக்கள் தோன்றுவதற்காகக் காத்திருக்கக் கூடாது.

1. நான் தலைவராகக் கருதுபவர்———
2. நான் பெருமைப்படும் நிலைமை———
3. நான் நம்பி எதிர்பார்ப்பது———
4. நான் நிகழும் என்று அஞ்சுவது———
5. நான் விரும்பும் ஆள் இப்படிப்பட்டவர்———
6. என் வேலையில் நான் இதைச் செய்ய விரும்புகிறேன்——
7. என்னை வெகுள்விக்கும் நிலைமை———
8. குழந்தையாக இருக்கும்போது நான் இன்புற்று அனுபவித்தது———
9. என் குடும்பத்துடன் கூடி நான் மகிழும் ஒரு காரியம்——
10. நான் இரங்குவது———

11. வயதானவர்களிடம் நான் விரும்பாத ஒரு காரியம்———

12. என்னை மகிழ்விக்கும் ஒரு காரியம் ——

13. என் குடும்பத்தில் நான் மிகவும் விரும்பியவர்———

14. என்னைப் பிடிவாதத்தில் ஆழ்த்தும் நிலைமை ———

15. நான் அன்பு கூர்வது ———

16. நான் வெட்கப்படும் நிலைமை———

தன்-ஏண்ணம் நிரப்புதற் சோதனை (Self-idea Completion Test):

ஷார் (S. Shor)-இன் தன்-எண்ணம் நிரப்பற் சோதனையிலிருந்து எடுத்த கீழ்க்கண்ட வாக்கியங்களைத் திருமணமாகாத ஒரு தென்னிந்தியர் நிரப்பினர். நிரப்பிய சில வாக்கியங்கள் பின்வருவாறு:

* நான் தெரிய விரும்புவது———என் நண்பனுடைய நல் வாழ்வு.

* என்னை அலைப்பது———எனது நல்நண்பன் என்னைப் பற்றிப் புறங்கூறுகிறான் என்று அறிவது.

நான் உயர்வுள்ளுவது———முழுமனத்துடன் முயன்று உழைப்பது.

பிறர் பொதுவாக முயல்வது———தங்கள் இடர்களைச் சரி செய்தல்

* எனக்குப் புதிராக இருப்பது———என்னைப் பற்றி இழித்துப் பேசுவது.

வாழ்க்கையில் எனது ஆசை———செல்வந்தனாகி உதவி பெறற்குரிய ஏழைகளுக்கு உதவி செய்வது.

* மிகவும் அபாயமான காரியம்———இரட்டை நாவுள்ள நண்பன்.

என்னிடம் உள்ள ஒரே குறை——விரைவில் வெகுள்தல்.

* நான் வெறுப்பவர்———நயவஞ்சகர்.

நான் எப்பொழுதும் நினைப்பது——— என் வியாபாரத்தையும் என் தாயையும்.

என் தாய் நோய்வாய்ப்பட்டால்———அவள் குணமடையும் வரை நான் கவலைப்படுவேன்.

எனக்கு விளங்காதது———எனக்கு ஏன் சினம் வருகிறது என்பது.

நான் விரும்பாதது———எனது நேர்மையையும் உண்மையையும் பிறர் நம்பாதிருப்பது.

* என்ற குறிப்பிட்ட வாக்கியங்கள் மிகவும் குறிப்புடையவை. அம்மனிதரின் எழுச்சிப் பிரச்சினைகளை அவை காட்டுகின்றன.

References.

1. Katz and Schanck — Social Psychology, p. 390.
2. G. W. Allport, Personality.
3. Katz and Schanck, Social Psychology. p. 418.
4. Bingham, Aptitude and Aptitude testing.
5. F. H. Allport, Social Psychology.
6. Page, Abnormal Psychology. p. 69.
7. Dunn and Dobzhansky, Heredity, Race and Society. p. 33.
8. Page, Abnormal Psychology.
9. Melanie Klein.
10. Karen Horney, New Ways in Psycho-analysis.
11. Kimball Young, Social Psychology.

12. J. C. A. Brown, The Social Psychology of Industry. p. 62.

13. Katz and Schanck, Social Psychology p. 527.

14. E. P. Farrow, Self Analysis.

15. J. A. Dubois, Hindu Manners, Customs and Ceremonies. p. 593.

16. G. Murphy, Historical Introduction to Modern Psychology. p. 323.

17. Mrs. L. Murphy in The Minds of Men. 58.

18. P. C. Jain in The Illustrated Weekly of India. Feb. 1956.

19. Ruth Benedict, quoted by Reinhardt in Social Psychology. p. 240.

20. Murphy and Newcomb, Experimental Social Psychology, pp. 782.-802.

21. R. B. Catteell, A Guide to Mental Testing.

22. Ibid.

10. சமூகக் கட்டுப்பாடு

(Social control)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமூகவியலர் பல வகையான சமூகங்களைப் பற்றி ஆய்ந்தனர். சமூகம் நிலைத்து நிற்பது எதனால்? வாழ்க்கை எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகிறது? எப்படிக் கட்டுப்படுத்தப்படுகிறது? முதலிய வினாக்களை அவர்கள் எழுப்பினர்கள். சமூக அமைப்பை நிலைநிறுத்துவதில் சமயம், அறம், அறிவு முதலியவற்றின் பங்கு யாது என்பதைப் பற்றிக் காம்ட்டே ஆராய்ந்தார். கூட்டக் குறியீடுகள் (collective symbols) விழுமியங்கள், எண்ணங்கள், குறிக்கோட்கள் ஆகியவை வெவ்வேறு வகைச் சமூகங்களில் புரியும் செயலை ஃடர்க்கெய்ம் ஆராய்ந்தார். இவ்வாறு சமூகவியலில் ஒரு புதிய துறை தோன்றியது. இருபதாம் நூற்றாண்டில் இதைச் சமூகக் கட்டுப்பாடு அல்லது சமூகக் கட்டுப்படுப்பு என்றனர்.

சமூகச் செயன்முறைகளில் நிலைத்து நிற்கும் (conservative) அமிசம் ஒன்று உண்டென்று பல சமூகவியலர் கண்டனர். சமூகத்தை மாறாது நிலைநிறுத்தும் வன்மைகளை அவர்கள் கவனித்துப் படித்தனர். நாட்டவர் வழி (folkways), வழக்காறு (usage), ஆசாரங்கள் (manners), வழக்கங்கள் (customs), செந்நிலைகள் (mores), முதலியவற்றின் வன்மையை அவர்கள் உணர்ந்தனர். இவைசமூகத்திற்கு மிகவும் பயன்படுபவை. நடத்தையின் நிறுவன வழிகள் (institutional ways of behaviour) இவற்றினின்று தோன்றுகின்றன. ஆனால் குறிக்கோள் நோக்குடைய சமூகவியலர் சமூக முன்னேற்றத்தைச் சிறப்பிக்கின்றனர். 'சமூகம் இடைவிடாது தன்னை ஆக்கிக்கொண்டே இருக்கும் நிகழ்முறையே' சமூக முன்னேற்றமாகும். ஃகிடிங்ஸ், ஃஆப்

ஃஅவுஸ், எல்வுட், கூலீ ஆகியோர் இக்குறிக்கோட் குழுவைச் சேர்ந்தவர்கள். சமூகக் கட்டுப்பாட்டைப் பற்றி அவர்கள் கருதிய பிரச்சினைகளாவன. 'சமூகம் எப்படி இடைவிடாது தன்னை ஆக்கிக் கொள்கிறது?' 'சமூக முன்னேற்றத்திற்குக் காரணமாகும் வன்மைகள் யாவை? முதலியன. சமூக முன்னேற்றத்தில் ஆன்மீகக்கூறு ஒன்று உளது, அதை நாம் புறக்கணிக்க முடியாது, என்று அவர்கள் கூறுவர். நாட்டவர் வழிகள், வழக்கங்கள் முதலியவற்றுல் மட்டும் சமூகச் செயன்முறைகள் அனைத்தையும் விளக்க முடியாது, என்று அவர்கள் வாதிப்பர். சமூகத்தின் உறுப்பினரிடத்து ஆன்மீக உணர்வு உண்டு. தன்னலங்கருதாத எழுச்சிகளும் மனிதருடைய நனவுடன் கூடிய நோக்கங்களும் செயற்படுகின்றன. மனிதனுடைய ஆன்மீக உணர்ச்சியையும், தன்னலமற்ற எழுச்சிகளையும் அடிப்படையாகக் கொண்டு சமூக அமைப்பைப் பற்றிய புதுக்கருத்துக்களும், புதிய விழுமியங்களும், குறிக்கோட்களும் உருவாகின்றன; பயன்கருதாத செந்நிலைகள் தோன்றுகின்றன. இப்போதுள்ள செந்நிலைகளை எதிர்த்து மக்கள் போராடுகின்றனர். நிறுவன நடைமுறைகள் மாற்றியமைக்கப்படுகின்றன. சமூகச் சீர்திருத்தங்கள் வகுக்கப்படுகின்றன. ஆகையால் சமூகவியலில் குறிக்கோட் குழுவினர், அறம், சமயம், கல்வி, கலை, அறிவு, சட்டம் முதலியவற்றைச் சமூக வாழ்க்கையின் சீர்திருத்த வன்மைகள் என்று கொண்டு அவற்றை வற்புறுத்துகின்றனர்.

இவ்வாறு, சமூகக் கட்டுப்பாட்டுக் கருத்து முதலில் சமூகவியலில் தோன்றியதென்பது தெற்றென விளங்கும். சமூகக்கட்டுப்பாடு என்ற தலைப்பில் சமூக நிலைநிறுத்தத்தையும், முன்னேற்றத்தையும்பற்றிய உண்மைகளையும், இவற்றிற் குரிய காரணிகளையும் சமூகவியலர் ஆராய்ந்துள்ளனர். சில சமூகவியலர் சமூகக் கட்டுப்பாட்டுப் பிரச்சினைக்கு ஓர் உளவியல் திருப்பம் அளித்துள்ளனர். இவர்களுள் பார்க், ஃபர்கெஸ் (Park and Burgess) யூபாங்க் (Eubank) ஃபார்னுட் (L. L. Bernard) லான்டிஸ் (Landis) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இவர்கள் தனியாளை முன்னணியில் கொண்டு இப்பிரச்சினையை ஆய்ந்தனர். ஏனென்றுல் சமூக ஒழுங்கமைப்புக்குக் கட்டுப்பட்டு அதைக் காப்பதற்குத் துணை புரிபவர் தனியாட்களே; புதிய விழுமியத் தொகுதிகளைப் பின்பற்றிச் சமூக முன்னேற்றத்திற்கு அடிகோலுபவர்களும் தனியாட்களே ஆவர்.

'நாம் சமூகமென்று கூறும் நிலையான கூட்டமைப்புடன் தனியாட்கள் எவ்வாறு ஒத்துழைக்கத் தூண்டப்படுகிறார்கள் என்று சமூகவியலர் ஆராய வேண்டும், என்று பார்க்கும் ஃபர்கசும் கூறியது சமூகவியல் நோக்கிலிருந்து சமூக உளவியல் நோக்கிற்கு ஏற்பட்ட திருப்பத்தை எடுத்துக் காட்டுகிறது.

சமூக வன்மைகளும் மனித இயல்பும் என்ற பொருள்பற்றிச் சமூகவியலர் ஆராய வேண்டும் என்பது சில அறிஞருடைய கருத்து. யூபாங்க்கும் இக்கருத்துடையவர். ஓர் ஆள் அல்லது ஒரு குழு மற்றொரு குழு அல்லது ஆளின் நடத்தையையோ, சிந்தனையையோ, உணர்ச்சியையோ மாற்றியமைப்பதற்காகப் பயன்படுத்தும், வன்மை அல்லது வற்புறுப்பே (constraint) சமூகக் கட்டுப்பாடு ஆகும். இதன் மூலம் தனியாட்கள் குழுவுடன் இசைந்த நிலையை எய்துகிறார்கள் என்று அவர் கூறினர். ஓர் ஆள் அல்லது குழுவின் பால் தூண்டல்களைச் செலுத்தி பொருத்தப்பாட்டை ஏற்படுத்தும் முறையே சமூகக் கட்டுப்பாடாகும் என்று ஃபெர்னர்டு கூறினர். சமூக உறுப்பினரைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் சாதனங்களையும் அவர் ஆராய்ந்தார். 'தனியாளைக் குழுப் பொறுப்புடையவராக்கல், சமூக அமைப்பை ஆக்கி நிலைநிறுத்தல், சமூகத்தன்மைப்படுத்தி மனித ஆளுமையை உருவாக்கல், இன்னும் சிறந்த சமூக ஒழுங்கமைப்பை நிலைநிறுத்தல் முதலிய சமூகச் செயன்முறைகளே சமூகக் கட்டுப்பாடாவன, என்று லான்டிஸ் கூறியுள்ளார்.

சமூகக் கட்டுப்பாட்டை உளவியல் நோக்குநிலையில் நின்று ஆய வேண்டுமானால் சமூகத்தின் உறுப்பினர் உட்படும் வன்மைகளை ஆராய வேண்டும்.இவ் ஆய்வில் எழும் பிரச்சினைகளாவன : (1) வெவ்வேறு வகையான சமூகக் கட்டுப்பாடுகள், (எ-டு) சமூக மரபுநிலை, அறம், கல்வி, அறிவு, சட்டம் ; (2) சமூகக் கட்டுப்பாடு செயற்படும் வகை; (3) சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனங்களும் நுண்முறைகளும்.

சமூகக் கட்டுப்பாட்டைப் பற்றிய சமூக எதிர்பார்ப்பு :

தனியாள், தனது நடத்தையை ஒழுங்குபடுத்தும் சமூக வன்மைகளைத் தெரிந்துகொள்வதுகூட அரிது. தான் விடுதலையுடன் வாழ்கிறான், செயற்படுகிறான் என்றே அவன் நினைக்கிறான். ஆனால் அவனுடைய நடத்தையைச் சமூகம்

ஒப்புக் கொள்ளாதபோது அவன் சமூக எதிர்பார்ப்பின் வன்மையை உணர்ந்து கொள்கிறான்.

சமூக எதிர்பார்ப்புகளின் அடிப்படையை இருவகைப் படுத்தலாம். முதலாவதாக, நாட்டவர் வழி, வழக்காறு, வழக்கங்கள் முதலிய சமூக மரபுகள் உள்ளன. இவற்றைச் சமூக மரபுநிலை என்பர். இரண்டாவதாக, சில நிறுவப்பட்ட நடத்தைவகைகள் சமூகத்தை நிலைநிறுத்த உதவுவதால் நிலைபெறுகின்றன. இவையும் மரபின் உட்கூறுகளேயாவன.

சமூகக் கட்டுப்பாட்டுச் செயலிகள் :*

சமூகக் கட்டுப்பாடு பல்வேறு செயலிகள் (agents) மூலம் நடைபெறுகிறது. சில சமூகங்களில் குடும்பம் ஏறக் குறைய எல்லாச் சமூக அலுவல்களையும் (இனவிருத்தி, அரசியல், பொருளாதாரம், சமயம், கல்வி ஆகியவற்றை) இயற்றுகிறது. இச்சமூகங்களில் தாய் அல்லது தந்தை சமூகக் கட்டுப்பாட்டின் முக்கியச் செயலி ஆகிறார். தாய் வழிஉரிமைச் சமூகத்தில் தாயும், தந்தைஉரிமைச் சமூகத்தில் தந்தையும் இவ்வாறு செயலாற்றுகின்றனர். ஆனால் வரலாற்றின் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு சமூகங்களில், இச்சமூக அலுவல்கள் பலவற்றைத் தனித்துறைச் சிறப்புள்ள வேறு செயலிகள் அரசு, திருச்சபை, கல்வி நிறுவனங்கள் முதலியன இயற்றுகின்றன. வரலாற்றின் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு செயலிகள் ஓங்கி நிற்கின்றன.

சமூகக் கட்டுப்பாட்டுச் செயலிகளுள், குடும்பத்திலுள்ள பெரியோர், சமயகுரவர், ஆசிரியர், கற்ற பண்டிதர், உயர் வகுப்பினர், தொழிற்சங்கங்கள், அரசு, சட்டம் ஆகிய முக்கியச் செயலிகளைக் குறிப்பிடல் சாலும். சமூக வாழ்க்கை பல்வேறு படிமலர்ச்சி நிலைகளைக் கடந்து வந்துள்ளது. அதன் அமைப்புப் படிவங்கள் சிக்கலானவை, வேறுபடுபவை. வெவ்வேறு வரலாற்றுக் காலங்களில் வெவ்வேறு வகையான சமூகத் தளைகள் (social bonds) தோன்றி மேலோங்கி நிற்கின்றன. குருதிக் கிளைமை (blood relationship) முக்கிய சமூகத் தளையாக இருந்த

* சமூகக் கட்டுப்பாட்டு வகைகளுக்கும், செயலிகளுக்கும் உள்ள வேற்றுமையை சில சமூக உளவியலர் திட்டமாக வரையறுத்திலர். கூலீ சமூகக் கட்டுப்பாட்டு வகைகளாகக் கூறுவனவற்றை ஃபொகார்டஸ் சமூகக் கட்டுப்பாட்டுச் செயலிகளாகக் கூறுகிறார்.

காலத்தில் குடும்பம் சமூகக் கட்டுப்பாட்டின் தலைமையாக அமைந்தது. சமய அனுபவச் சமுதாயம் சமூகத் தளையான போது திருச்சபை வலிமையுள்ள சமூகக் கட்டுப்பாட்டுச் செயலியானது. பொருளாதார இடைச்சார்புள்ள (interdependence) சமூகத்தில் பொருளையும், உயிரையும், பொருளாதாரக் குழுக்களையும் பாதுகாக்கும் தேவை எழுகிறது. இங்கு அரசும் அதின் சட்டங்களுங் சிறப்பெய்துகின்றன. இன்றையச் சமூகத்தில் சட்டம் சார்ந்த அரசும், சமுதாயமும் அதிகமதிகமான கட்டுப்பாட்டு அலுவல்களை (functions) மேற்கொள்கின்றன. திருச்சபையுங் குடும்பமும் அலுவல் குறைந்துள்ளன. சட்டவியல் தத்துவர் இந்நிலையின் குறையை எடுத்துக் கூறியுள்ளனர். 'சட்டத்திற்கும் நலிவு உண்டு; சமயம், அறம், கல்வி ஆகியவற்றின் துணை சட்டத்திற்குத் தேவை' என்று பவுண்டு (R. Pound) எடுத்துக் கூறினர்.[1]

சமூகக் கட்டுப்பாட்டு வகைகள் :

இத்தொடரைப் பலர் பல பொருட்களில் பயில்கின்றனர். சிலர், கட்டுப்படுத்தும் செயலிக்கும், கட்டுப்படுகிற தனியாள் அல்லது குழுவுக்கும் இடையேயுள்ள தொடர்பை மனத்திற்கொண்டு சமூகக் கட்டுப்பாட்டை ஆராய்ந்துள்ளனர். இவர்கள் நேரடிச் சமூகக் கட்டுப்பாடு, மறைமுகக் கட்டுப்பாடு என்று அதனை வகுத்துள்ளனர். குடும்பத்தினரும், ஆசிரியரும், சமுதாயத்தினரும் பயிற்றும் வன்மை நேரடிக் கட்டுப்பாடாகும். அரசின் கட்டுப்பாடு மறைமுகமானதாகும். மானீம் (Mannheim) முதலிய சில அறிஞர் பூத நிலைமைகளாலும் சமூக நிலைமைகளாலும், மீண்டும் மீண்டும் ஏற்படும் வன்மைகளைக் (recurrent pressures) குறிப்பிட இத்தொடரைப் பயன்படுத்தினர்.[2]

ஆனால் கூர்ந்து நோக்கினால் இவ்வாறு நேரடிக் கட்டுப்பாடு, மறைமுகக் கட்டுப்பாடு என்று பிரிப்பது முழு முடிவானது (absolute) என்று கொள்ளமுடியாது. ஏனென்றால் மறைமுகக் கட்டுப்பாடும் கடைசியாக அருகிலுள்ள தனியாட்களாலேயே நேரடியாக நிலைநிறுத்தப் பெறுகிறது.

சிலர் கட்டுப்பாட்டினை **புறமுறை சாராதது** (informal) **புறமுறை சார்ந்தது** (formal) என்று வகுப்பர். அவர்கள், கட்டுப்பாடு செயற்படும் வகையை மனத்திற் கொள்ளுகின்

றனர். குடும்பம், சமுதாயம் போன்ற முதனிலைக் குழுக்களில் கட்டுப்பாடு புதுமுறை சாராதது; அதாவது அருகிலுள்ளவர் தனியாளின் நடத்தையை நேரடியாக, உடனடியாக, தரப்படுத்தாத முறையில் பாராட்டுகிறார்கள், கண்டிக்கிறார்கள், தண்டிக்கிறார்கள். ஆனால் குடும்பத்தையும் சமுதாயத்தையும் தாண்டிய சமூக அமைப்புக்களில் நடத்தை நிறுவப்பட்டுள்ளது; சமூகத் தரத்திற்கு ஒத்துப் போவதை வற்புறுத்துவதற்குத் திட்டவட்டமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன; மீறுதல்களுக்குத் திட்டமான தண்டனைகள் உள்ளன. இவ்வாறு கட்டுப்பாடு புறமுறை சார்ந்ததாகிறது.

சில அறிஞர் **தந்தைமைக்** (paternal) கட்டுப்பாடு, **குடியாட்சிக்** (democratic) கட்டுப்பாடு என்று வகுக்கின்றனர். குடும்பத்தில் தந்தை பட்டறையில் தொழில் தலைவர், தொழிற்சாலையில் முதலாளி, நாட்டில் மன்னர், சமயத்தில் குருக்கள் ஆகியோர் தந்தைமைக் கட்டுப்பாட்டினை இயற்றுகின்றனர். ஆனால் இக்காலத்தில் தனியாளின் தந்தைமைக் கட்டுப்படுப்பு குறைந்து மக்களாட்சிக் கட்டுப்படுப்பு அதிகரித்து வருகிறது.

சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் :

சமூக உளவியல் நோக்கின்படி, தனியாட்களைக் கூட்டு வாழ்க்கையில் ஒத்துழைக்கத் தூண்டுவிக்கும் செயன்முறையே சமூகக் கட்டுப்பாடு எனப்படும் என்று பார்த்தோம். சமூக உறுப்பினர்மீது உளவியல் வன்மைகள் செலுத்தப்படுகின்றன. சமூகத்தில் அப்போதுள்ள படிவத்திற்கு ஒத்துப்போகும் வகையில் உறுப்பினர் தங்கள் உள்துடிப்புகளையும், சிந்தனைகளையும், உணர்ச்சிகளையும், எதிர்வினைகளையும் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இதற்காகப் பயன்படும் சாதனங்கள், உளவியல் முறையில் கவனிக்கற்பாலன. குடும்பம், சமுதாயம், திருச்சபை, பள்ளி, அரசு முதலிய நிறுவனங்கள் பல்வேறு முறைகளையும் நுண்முறைகளையும் கையாள்கின்றன. லம்லி (F. E. Lumley) இவற்றை இரண்டாக வகைப்படுத்துகின்றார்.

(1) **தூண்டும் முறைகள் :** வெகுமதிகள், புகழ்ச்சி, மன்றாடல் (cajolery), முகத்துதி, நம்பச்செய்தல் (persuasion), கட்சிக் கூப்பாடுகள் (slogans), விளம்பரம், கல்வி முதலி

யன நம்மை அதிகமாகவும் நன்முகவும் செயல்புரியத் தூண்டுகின்றன.

(2) **ஒடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும் முறைகள்:** (எ-டு) அவர் (gossip), மறைவசை (satire), பெயர் சூட்டல், நகை, ஏளனம், குறைக்கூற்று, அச்சுறுத்தல், கருத்துப் பரப்பல், தண்டனை ஆகியவை.

ஃபெர்னர்டு, சமூகக் கட்டுப்பாட்டை (1) **அழித்தல்** வகை (exploitative) (2) **ஆக்கல்** வகை (constructive) என்று வகுத்துள்ளார். உடல் அலைப்பு, உடலச் சுறுத்தம், அற அச்சுறுத்தம், தண்டனை, பழி வாங்கல், கரவு (fraud) முறைகள், சரிக் கட்டுதல் (manipulations), உட்சூழ்ச்சி (intrigues), செய்தித் தணிக்கை (censorship), ஒடுக்குதல் முதலியவை தனியாளின் உடல் நலிவையும் உள்ள எளிமை யையும் அறியாமையையும் பயன்படுத்தும் கட்டுப்பாட்டு வகைகள். புரட்சி, அறப்போர்முறை, படைப்படுத்தல் (regimentation), சமய நம்பிக்கைகள், சமயப் பழக்கங்கள், அறமுறைக் கட்டுப்பாடுகள், வழக்கங்கள், வைத்துக் கோடல், சட்டம், கல்வி, சமூகச் சீர்திருத்தம் முதலியவை ஆக்கச் சாதனங்களாவன.

கிம்பால் யங்கும், ஃபொகார்டசும் **உடன்பாட்டுக்** (positive) கட்டுப்பாடுகள், **எதிர்மறைக்** (negative) கட்டுப்பாடு கள் என்று வகுத்தது பெரும்பாலும் லம்லீயின் வகுப்பு முறையைப் போன்றது. கட்டுப்பாட்டை தூண்டுவித்து (induce) இயற்றினால் அது உடன்பாட்டு முறையாகும். தண்டனை எதிர்மறைக் கட்டுப்பாடாகும். தூண்டுவிப்பு உடலியல் வகையாக அமையலாம். முதுகைத் தட்டிக் கொடுப்பது இவ்வகையைச் சாரும். ஒருவரைப் புகழ்வது சொல்வகைத் தூண்டுவிப்பாகும். குறியீட்டு முறையிலும் ஒருவரைத் தூண்டுவிக்கலாம். திருச்சபையும், அரசும், மக்களும்அளிக்கும் பட்டங்கள் இவ்வகையினவே. குழுப் பெருமையையும், குடிமை யுணர்ச்சியையும் பயன்படுத்து வதும் இவ்வகைக் கட்டுப்பாடேயாகும். உடன்பாட்டு அல்லது ஆக்கமுறைக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை தூண் டப்பெறுகிறது, கவர்ச்சி எழுகிறது, உற்சாகம் உண்டா கிறது, முன்னேற்றம் ஏற்பட வழி இருக்கிறது. ஆனால் தண்டனை அடக்கு முறையாகும். அது 'செய்யாதே' என்று சொல்லுகிறது, அலகோல், சிறைகாப்பு முதலியன உட

லியல் தண்டனைகள்; அன்பை அகற்றல், சமுதாயப் புறக் கணிப்பு, முதலியன மற்றொரு வகையின. திட்டுதல், ஏளனம், குறைக்கூற்று முதலியவைசொல்முறைத் தண்டனை கள்; நரகம், இறந்த பின்னும் தொடரும் தெய்வம் முதலியன திருச்சபை பயன்படுத்தும் கட்டுப்பாட்டு முறைகள்.

உடலல் (non-physical) அல்லது உளவியல் தண்டனை களுட் கொடியவை சமுதாயப் புறக்கணிப்பு (ex-communication), தனிச் சிறைகாப்பு முதலியன. சமுதாயப் புறக் கணிப்பு ஒருவரை உலகத்திற்கு மாண்டவராகச் செய்கிறது. நீண்ட தனிச் சிறைகாப்பு மனிதத் தன்மையைப் போக்கு கிறது.

எவ்வகைக் கட்டுப்பாடு சிறந்தது — வெகுமதியா, தண்டனையா ? — என்பது ஒரு முக்கிய நடைமுறைப் பிரச் னையாகும். விலங்குக் கற்றற் புற ஆய்வுகளிலிருந்து வெகு மதியே சிறந்தது என்று தெரிகிறது. ஆனல் இருமுறை களையும் தகுந்த முறையில் சேர்த்துப் பயன்படுத்தினல் இன்னும் நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன. குழந்தை வளர்ப்பு அனுபவமும் . இம்முடிபுகளை வலியுறுத்துகிறது. ஆனல் ஒத்துப்போதலை (conformity) விட ஆக்க வளர்ச் சியே (creativity) சிறந்தது என்று நாம் கருதினல் உடன் பாட்டுக் கட்டுப்பாட்டு முறையையே பயன்படுத்தவேண் டும். தண்டனையின் மூலம் மறைந்த எதிர்ப்பும் போலி நடிப் பும் வளரக்கூடும், அல்லது தேங்கிய (stagnant) நடத்தை யும் சமூக - எதிர் நடத்தையும் வளரக்கூடும்.[3]

சமூகமரபுநிலை (Social Heredity)

ஒரு சமூகக் குழுவின் பண்பாட்டைக் கடத்தித் தனியாள் மனத்தில் இருத்துபவர் பெற்றோர், ஆசிரியர், அண்டையர், குருக்கள் முதலானேர். ஆனல் இவர்களும் பண்பாட்டுக் கூறுகளை முந்திய தலைமுறையினரிடமிருந்து பெறுகின்றனர். இம்முறையில் ஒரு சமூகக் குழு வரலாற்றுத் தொடர்ச்சியை யும் காலத்தில் ஒருமையையும் பெறுகிறது. இப்படித் தலை முறை தலைமுறையாகக் கடத்தப்படும் பண்பாடு சமூக மரபு நிலையெனப்படும். இது உயிரியன் மரபுநிலையினின்றும் வேறுபட்டது. உயிரியன் மரபுநிலை பெற்றோரிடமிருந்து பெற்ற குரோமோசோம்களில் அடங்கியுள்ளது. அது உள்

ளார்ந்த உடலியற் கடத்தன் முறையால் ஆவது. தனியாளை என்றும் தொடரும் உடல் ஆற்றல்களும் மன ஆற்றல்களும் ஓரளவு உயிரியன் மரபுநிலையால் ஆவன. அமைப்பு, மொழி, வழக்கம், சமயம் நிறுவன நடைமுறைகள், கலை, அறிவியல், புதுப் புனைவுகள், இலக்கியம், தத்துவம் முதலியன சமூக மரபுநிலை ஆவன. பூதச் சூழ்நிலை, சமூக வாழ்க்கை, சமய அனுபவம் முதலியவற்றைப் பொறுத்தவரை முந்திய தலை முறையினரின் திரண்ட பொருத்தப்பாட்டு அனுபவமே சமூக மரபுநிலையாகும். இது வெளியாகக் கடத்தப்படு கிறது. ஒருவர் தம் தேவைகளை எவ்வாறு நிறைவிக்க முயல்வார் என்பது பயிற்சியையும் பண்பாட்டுக் கவிநிலை யின் வன்மையையும் பொறுத்தது. இவ்வாறு வரலாற்றுத் தொடர்ச்சியுள்ள சமூகக் குழுவின் உறுப்பினரனைவருக் குள்ளும் நடத்தையொருமை காணப்படுகிறது.

சமூக மரபுநிலை மனிதனுக்கு மட்டும் உரியதன்று. விலங்கு உலகிலும் இதனைக் காணலாம். இளம் கானரிப் (canary) பறவை முந்திய தலைமுறையிடமிருந்து தன் பாட லைக் கற்றுக்கொள்கிறது. ஆனால் மனிதனுடைய சமூக மரபுச் செல்வம் மிகுந்தது, நீடித்து நிற்பது. கலை கைத் தொழிற் புனைவுகள், சமயப்புற (secular) வழக்கங்கள், சமய நடைமுறைகள், அறிவியல், தத்துவம் முதலியவை, திட்ட மான மனித அடைவுகள், ஆவன. செயல்களை விரித்தியற் றும் பழக்கம் விலங்குகளுக்கு இல்லை. சடங்குகளும், தப நிலைகளும் (taboos) அவைகளிடம் கிடையா. மனிதனிடம் இவை உள்ளன, மனிதன் இவற்றைக் காத்து, தன் அடைவுகளைப் பின் தலைமுறையினருக்குக் கடத்துகிறான். மொழியும் கலைச்செல்வங்களும் இதற்குப் பயன்படுவன.

சமூக மரபுநிலையைப் பொதுவாக 'மரபு' என்று குறிப் பிடுகிறோம். சமூகம் ஒத்துக்கொள்ளும் எண்ணங்கள், பேச்சு வகைகள், விதிப்பு வழக்காறுகள் (prescriptive usages), தத்துவ நம்பிக்கைகள், கலை நடைமுறைகள் முதலியவை மரபின் கூறுகள் ஆவன. இவை குழுவில் தலைமுறை தலை முறையாகக் கடந்து செல்கின்றன.

மரபு ஒரு பெரும் நிலைநிறுத்த வன்மையாகும். வாழ்க் கையின் பலதுறைகளில் நம்பிக்கையும் நடைமுறைகளும் தொடர்ந்து வருவதற்கு மரபு உதவுகிறது. மரபுணர்ச்சி சமூகத்தின் உறுப்பினரை அழுத்துகிறது; ஆகையால் அவர்

கள் புதிய எண்ணங்களையும் நடத்தை வகைகளையும் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். வாழ்க்கை நிலைமைகள் மாறும்போது புதிய வாழ்முறைகளைச் செய்து பார்க்கிறோம். வேறு குழுக்களுடன் கலக்கும்போது வழக்கங்களும் கலந்து புது உருவடைகின்றன. ஆனால் இந்நிலையிலும் கூட சில பண்டைய வழக்கங்களைப் புறவகையிலாவது விடாமல் கொள்கிறோம். புதிய முறைகள் பழைய வாழ்க்கைப் படிவத்தோடு இணைந்தமைகின்றன.

உருவாகிக் கொண்டிருக்கும் சமூகங்களில் மரபு கிடையாது; நிலையான சிந்தனைப் பழக்கங்களும் செயற் பழக்கங்களும் இங்கு இல்லை. பண்டைய மரபு நிலவி வரும் சமூகங்களில் நிலைநிற்கும் (conservative) தன்மை அதிகம். ஏனென்றால் புதிய வாழ்க்கை வழிகளைக் கொள்ள வேண்டுமானால் நெடுங்காலம் நிலவி வந்த பழக்கங்களைக் கைவிட வேண்டும். புதிய பொருத்தப்பாட்டு முயற்சிகளில் ஏதம் (risk) உண்டு. மரபுணர்ச்சி அதனை உடையவர்களுக்கு நன்மை பயப்பது' என்று மாரிஸ் ஃகின்ஸ்பெர்க் கூறியுள்ளார்.[4] முதலாவதாக அவர்கள் தாங்கள் ஒரு குழு என்னும் திட்டமான உணர்ச்சியுள்ளவர்கள். அவர்களது தன்முனைப்பு நன்கு வளர்ந்துள்ளது. தனிச் சிறப்புணர்ச்சியும், முதிர்ச்சியுணர்வும் அவர்களிடம் உண்டு. புதிய நிலைமைகளும், பிரச்சினைகளும் தோன்றினால் அவர்கள் தாங்களாகவே சிந்தித்து, தங்கள் முறையிலேயே அவற்றை விடுவிக்கின்றனர். பிறர் கண்ட விடைகளை அவர்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் எளிதில் சமநிலை இழப்பதில்லை. அவர்கள் அதிர்ச்சிகளை எளிதாக உட்கொள்கின்றனர்; புதிய நிலைமைகளுக்கு எளிதாகப் பொருத்திக் கொள்கின்றனர். புதுமைவலையில் அவர்கள் எளிதாக விழுவதில்லை. அவர்களும் மாறுவதுண்டு. ஆனால் பழையதைப்புறக்கணித்துப் புதியதை அவர்கள் அப்படியே பின்பற்றுவதில்லை. தன்வயமாக்கல் (assimilation) முறையையே அவர்கள் கையாளுகிறார்கள். இதற்கு மாறாக, மரபற்ற மக்களுக்கு, தம் முன்வாழ்ந்த மக்களோடு தொடர்பு கிடையாது. அவர்கள் உள்ளிருந்து வளர்வதற்குப் பதிலாகப் பிறரைப் பின்பற்றுகிறார்கள், அல்லது கடன் வாங்குகிறார்கள். அவர்களுக்குத் தனிச் சிறப்புடைய பண்பாடு கிடையாது. பிறர் இயற்றி வைத்த எண்ணங்களை அவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்களிடம் தன்னம்பிக்கை, முறை, ஆழம் முதலியவை குறைவு. மரபு அமைந்திருந்து சில வழிகளில் முறிந்து,

வேறு மரபுகள் திடமாக அமையாத சமூகங்களுக்கும் மேற் கூறியவை பொருந்தும். எடுத்துக்காட்டாக, இந்தியராகிய நாம் தத்துவம், சமயம், கலை முதலிய துறைகளில் முதிர்ந்த வர்கள் என்று எண்ணுகிறோம். அதே நேரத்தில் மேல்நாட் டுப் பாணியில் அமைந்த அறிவியல் மனப்பான்மையையும் நாம் உட்கொண்டு வருகிறோம். ஆனால் அதை முழுமையாக ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நாம் அதை நயப்பதில்லை. அரசியல் வாழ்க்கையிலும் நமது பழைய மரபுகள் மறைந்து விட்டன. புதிய மக்களாட்சி மரபு இன்னும் நிலையாக ஊன்ற வில்லை. ஆகையால் அரசியலில் முதிர்ச்சியற்ற மக்களைப் போல் நாம் சில வேளைகளில் நடந்து கொள்வதுண்டு.

சமூக மரபுநிலையின் கூறுகள் எப்படி நம்மைக் கட்டுப் படுத்துகின்றன என்று இனிச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

நாட்டவர் வழிகள் (folkways)

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் ஒவ்வொரு சமு தாயமும் பூதச் சூழ்நிலையோடு பொருத்திக் கொள்ளவும், பிழைப்பதற்கும் பூசலைத் தவிர்த்து ஒத்துழைப்பைப் பெருக் கும் நடக்கை (conduct) முறைகளை வளர்ப்பதற்கும் முயன்று கொண்டிருக்கிறது. இவ்வாறு சில நடைமுறைகள் (practices) தோன்றுகின்றன. அவையாவன : உணவை விளைத்துத் தயாரித்துக் காத்து, உண்டல்; தன்னையும் குழுவையும் பாதுகாத்துக் கொள்ளல்; சொல்லாலும், செய லாலும் உடம்படுக்கும் முறைகள்; மரியாதை செலுத்தும் முறைகள்; விருந்தோம்பல் வகைகள்; உடலை அணிவித் தல்; திருமணமும், குடும்ப அமைப்பும்; குழந்தைப் பரா மரிப்பு முதலிய பல துறைகளைச் சார்ந்தவை. இவற்றின் திறத்தால் வாழ்க்கை பெரும்பாலும் திடநிலைப்படுகிறது. இவை சமூக மரபின் ஒரு பாகமாகக் கடத்தப்படுகின்றன. இந்நடைமுறைகள் சமுதாயத்திற்குப் பொதுவானவை ; ஆகையால் இவற்றை நாட்டவர் வழிகள் என்கிறோம். இவை சமூகத்தின் வழக்கங்களும் பழக்கங்களும் ஆவன. 'இவை பின்வரும் சந்ததியாருக்குக் கட்டுப்பாடு (impera-tives) ஆகின்றன. இவற்றிற்கு வலிமையுள்ளபோது, இவை தனியாளையும் சமூகச் செயல்களையும் பெரிதும் கட்டுப் படுத்துகின்றன. என்று ஸம்னர் (Summner) கூறுகின்றார். நாட்டவர் வழிகள் அனுபவத்தும் அறிந்த புற ஆய்வாலும் ஆய்ந்த திட்டத்தாலும் அமைவதில்லை. பொதுவாக குழு

முயன்று தவறிச் செய்யும் செயல்களின் விளைவாக அவை ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டாக, புராதன மக்களின் போர் முறையும் கொள்ளை முறையும் நாட்டவர்கள் வழிகளேயாம். வெவ்வேறு தட்பவெப்ப நிலைகளில் தலையணி அணிதல், காலணி பூணல், வெவ்வேறு உடை வகைகள் இவையெல்லாம் நாட்டவர் வழிகள் ஆவன. ஒருவேளை பனியினின்றும், சூரிய வெப்பத்தினின்றும் நம்மைக் காப்பதற்காகத் தலையணி கண்டுபிடிக்கப் பட்டிருக்கக் கூடும்; சில வேளைகளில் எதிரியின் தாக்குதலினின்று தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் தலையணி ஏற்பட்டிருக்கக் கூடும். காலடியைப் பாதுகாப்பதற்காகக் காலணிகள் பூணயப்பட்டன. முற்காலத்தில் இந்தியாவின் சில பாகங்களில் உணவு சமைக்கும்போது மக்கள் ஈர ஆடை அல்லது பட்டாடை அணிந்து கொள்வர். ஈரத் துணியும் பட்டாடையும் தீயின் அருகில் ஏற்படக்கூடிய ஏதத்தைக் குறைக்கின்றன. கைகுலுக்கும் பழக்கம், கைகூப்பி வணங்கும் இந்தியப் பழக்கம் முதலியவை ஒரு காலத்தில் குறிப்பிடத்தக்க நாட்டவர் வழக்கமாகத் தோன்றியவை. ஒரு வேளை நாம் எதிர்ப்படுபவரிடம் நமது பகையின்மையைத் தெரிவித்துக் கொள்வதற்கு இவை அறிகுறியாகத் தோன்றியிருக்கக்கூடும். ஒருவரை, திருவாளர், திருவாட்டி, அம்மா, ஐயா, என்றெல்லாம் அடை கொடுத்து அழைப்பது சமூகத்தில் மிகவும் மதிக்கப்படும் ஒரு நாட்டவர் வழியாகும். இந்நடத்தை வகைகள், உலகத்தோடு ஒட்டி வாழும் முயற்சியால் ஏற்படும் இக்கண்டு பிடிப்புகள், குழு வாழ்க்கைப் படிவத்தில் நன்கு பின்னி விடுகின்றன. அவை மாறுகின்றன. ஆனால் மெதுவாகவே மாறுகின்றன. பொதுவாக அவற்றை விடுத்து வேறு பொருத்தப்பாட்டு முறைகளைக் கண்டுபிடிக்கும் தேவை ஏற்படுவதில்லை. தனியாட்கள் இவ்வழிகளுக்கு ஒத்துப் போகின்றனர். இவ்வாறு அவர்கள் நடத்தை சமூகத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.

நாட்டவர் வழியில் அடங்கியுள்ள சமூகக் கட்டுப்பாடு நனவற்றது ; தானாக நடைபெறுவது. இதில், தான் ஒரு காரியத்தைச் செய்யப் பிறரால் வற்புறுத்தப்படுகிறான் என்ற நனவு உணர்ச்சி தனியாளுக்குக் கிடையாது. இக்கட்டுப்பாடு அமைவற்றது ; புறமுறை சாராதது. சமுதாயத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் நாட்டவர் வழியைப் பின்பற்றுகிறார்களா என்பதைப் பார்ப்பதற்கு ஒரு தனி அமைப்புத் தேவையில்லை. நாட்டவர்வழியை விட்டு விலகுபவரை

நோக்கிச் சமூகம் நகைத்து அத்துடன் விட்டு விடுகிறது. ஏனென்றுல் பல நாட்டவர்வழிகள் மக்களுடைய கூட்டுத் தேவைகளுடன் நெருங்கிய தொடர்புடையனவல்ல. ஆகையால் நாட்டவர் வழியை மீறுபவனைச் சமூக அமைதியைக் குலைப்பவனுக மக்கள் கருதுவதில்லை : சமுதாயக் கண்டனத்துக்கும் சமூகப் புறக்கணிப்புக்கும் உட்படுத்துவதில்லை.

நாளடைவில் சமூகம் சில நாட்டவர்வழிகளின் நன்மையை நனவுடன் உணர்கிறது. அவற்றைப் பின்பற்றுவதால் சில விழுமியங்கள் பெறலாம் என்று காண்கிறது. ஆகையால் சமூக வாழ்க்கை சிந்தனை நிலையை அடையும்போது சில நாட்டவர்வழிகள் முடிவாக நிலை பெற்று அறப் பொருண்மையும் பெறுகின்றன. இவற்றை மீறுபவன் கண்டிக்கப்படுகிறுன் ; சமுதாயத்திற்குத் தகாத உறுப்பினனுகக் கருதப்படுகிறுன். எடுத்துக் காட்டாக ஒரு மங்கையைப் புறமுறை அடைமொழியின்றிப் பெயரை மட்டும் கூறி அழைப்பது, ஒருவருக்குரிய மரியாதை விகுதிகளை விட்டு விடுதல் முதலியவை மிகவும் நுட்பக் குறிப்புடையனவாகக் கருதப்படுகின்றன.

செந்நிலைகள் : (Mores)

சில நாட்டவர்வழிகள் கடப்பாட்டுத் தன்மை பெறுகின்றன என்று பார்த்தோம். இவ்வாறு அதிகக் கட்டுப்பாட்டுத் தன்மை பெற்றவை செந்நிலைகள் ஆகின்றன. நிலைநிறுத்தப் பெற்றநாட்டவர்வழிகளுடன் நலத்தத்துவமும் (philosophy of welfare) சேர்ந்தால் அவை செந்நிலைகள் ஆகின்றன. இவற்றின் அடிப்படையாக, சரி, தப்பு என்னும் தீர்ப்புக்களும் தோன்றுகின்றன. பழக்கப்பட்ட, தானுக இயங்கும் நடத்தை வகைகள் நல்லனவாகக் கருதப்படுகின்றன. இவற்றிற்கு இடையூறு செய்தல் தீயதாகக் கருதப்படுகிறது. குழுவில் நடைமுறையில் உள்ளவை செந்நிலைகளாகின்றன. இவற்றைப் பின்பற்றுவது அற நடத்தையாகிறது. இந்நடத்தை வகைகள் சமூக நலத்திற்கு நல்லவையென்று கருதப்படுகின்றன. விழுமிய உணர்வு மக்களுக்குத் தோன்றும்பொழுது நல்லது, தீயது, சரி, தவறு முதலிய எண்ணங்கள் எழுகின்றன. மனிதன் கூட்டு நல்வாழ்வையும், சமூக நோக்கங்களையும், சமுகக் கடன்களையும் பற்றிச் சிந்திக்கிறுன். மனிதன் சமூகத்தின் உறுப்பினுகச் செயற்பட வேண்டுமானுல் அவனுடைய நடத்தையில் சில கட்டுப்

பாடுகள் தேவையாகின்றன. சில உடம்பாட்டுச் செயல் களும் சமூகக் கடன்களாக வரையப்படுகின்றன. இவ்வாறு செய்யத்தக்கவை,செய்யத்தகாதவை செய்ய வேண்டுபவை, செய்யக் கூடாதவையெல்லாம் மக்களின் செந்நிலைகள் ஆகின்றன. சமூக அமைப்புநிலையோடு தொடர்புற்றபோது, சில நாட்டவர் வழிகள் செந்நிலைகள் ஆக உயர்கின்றன. எடுத்துக்காட்டாக வைதீக இந்தியப் பெண்கள் தெருவில் நடந்து செல்லும்போது தங்கள் கூந்தலைப் பிறர் பார்க்காமல் புடைவையால் மூடிக்கொண்டு செல்கின்றனர். இப்பழக்கம் ஒரு காலத்தில் நாட்டவர் வழியாகவே தொடங்கியிருக்க வேண்டும். தெருவில் நடக்கும்பொழுது தலையைச் சூரிய வெப்பத்திலிருந்து பாதுகாப்பதற்கும் தலை மயிரைத் தூசி படாமல் காப்பதற்கும் தலையை மூடுதல் பயன்பட்டது. பிற்காலத்தில் இப்பழக்கம் பாலொடு தொடர்புற்றது. பெண்பாலர் தலைமயிரை புறத்துக் காட்டுவது தீயது, தவறு என்று கருதப்பட்டது. ஒருவேளை விலைமாதர் தம் கூந்தல் அழகைப் பிறருக்குக் காட்டி மக்களின் கவனத்தை ஈர்ப்ப தால் இது தவருகக் கருதப்பட்டிருக்கக் கூடும். மற்றும் சில எடுத்துக் காட்டுகளைக் காண்போம். முற்காலத்தில் பிராமணர் பால் விற்பது தவறென்று கருதப் பட்டது. விற்பதையே தொழிலாகக் கொண்டவரின் பிழைப்பை இது கெடுக்கும் என்பதற்காக இச்செந்நிலை ஏற் பட்டிருக்கக்கூடும். சாதிக் கலப்புமணம் தடுக்கப்பட்டதை யும் இவ்வாறு விளக்கலாம். சமூக அமைப்பு தொழிற்பாகு பாட்டாலும், பரம்பரைத் தொழிலாலும் அமைந்த காலத்தில் கலப்பு மணம் சமூக வாழ்க்கையைக் குலைத்து விடக்கூடும் என்னும் அச்சம் இருந்திருக்கக் கூடும். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நம் நாட்டில் பசுக்கொலை தடுக்கப்பட்டதும் இயற்கையே. திருமணம் இன்றியமை யாத தேவை என்று எண்ணிய காலத்தில் திருமண இணைப் பைக் குலைக்கக் கூடிய ஒன்றையும் செய்ய மக்கள் துணிய மாட்டார்கள். அத்துடன் கணவன் மனைவியின் தலைவன், அவளுடைய அறநெறியின் காவலன் என்று மக்கள் எண் ணியதால் அவன் அவளை துன்புறுத்துகிறான் என்று நினைத் தாலும் யாரும் அதைத் தடுக்க முன்வர மாட்டார்கள். அப்படிச் செய்தால் சமுதாயத்தில் ஏளனமும் கண்டனமும் தான் அவர்கள் பெறும் வெகுமதியாகும்.

செந்நிலைகளை மீறினால் உடனடியான, வலிய, பொது மக்கட் கண்டனம் பிறக்கும். இது, உடல் தண்டனை, அலர்

(gossip), பொருளாதார மறியல், சமூகப் புறக்கணிப்பு முத லிய பல வகைகளில் வெளிப்படக்கூடும். ஆகையால் குழு வின் உறுப்பினர் செந்நிலைகளை மீற அஞ்சுகின்றனர். இதில் ஓரளவு வலுவந்தம் (coercion) அடங்கியுள்ளது. ஆனால் இவ்வலுவந்தம் புறமுறை சாராதது. ஏனெனில், எதிர் மறைக் கட்டளைகளல்ல; இவற்றை மீறுவதற்குத் திட்டமான தண்டனைகள் கிடையாது. இவைகள் சட்டங்கள் அல்ல. செந்நிலைகள் எழுதாத அறநெறிகள் ஆவன. செந்நிலைகள் இயற்றும் கட்டுப்பாடு நேரிடையானது, தானாக எழுவது, புறமுறை சாராதது, அமைப்பற்றது. அரசுச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவன அமைப்பு அமைந் திருப்பது போல் இவற்றிற்கு அமைப்பு இல்லை. இவற்றிற் காகப் பொது மக்கள் எண்ணத்தைத் திரட்டி அமைப்பதற் குத் தேவையும் இல்லை. 'குழுவின் அல்லது சமுதாயத்தின் உறுப்பினர் தம் குழுவிலுள்ள பிறரோடு இனிது உறையும் நிலையில் இருப்பதற்குத் தேவையான நடத்தை வகைகளை செந்நிலைகள்' என்று காட்சும் ஷாங்க்கும் (Katz and Schanck) கூறியுள்ளனர்.

அறநெறி (Morals)

மனிதனிடம் அறக்கடனைப் பற்றிய உணர்ச்சி உண்டு அவன் சமூக நலத்திற்கு நல்லதென்று நினைக்கும் சில வாழ்க்கை வழிகளைத் தெரிந்து, சிந்தித்துக் கைக்கொள்ளு கிறான். இன்னும் ஒரு படி சென்று அண்டத்தில் தன் இடத்தையும், முழு முதற் பொருளொடு தன் தொடர்பையும், ஊழையும் பற்றிச் சிந்திக்கிறான். இந்நம்பிக்கைகளையும், தொலை நோக்குகளையும் கொண்டு தன்னுடைய சொந்த வாழ்க்கையையும் சமூக வாழ்க்கை யையும் ஒழுங்குபடுத்துகிறான். சமூக உணர்வு, தத்துவ உணர்வு, சமய உணர்வு என்னும் மூவகை உணர்வு களின் மூலம் தான் இயல்பாக விரும்பும் பொருளை விடுத்து விரும்பத்தக்க இறுதிப் பொருளை (shreyas) நாடுகிறான். விரும்புகிறவற்றை (desired) விரும்பத் தக்கவை (desirable) என்று கருதாமல், விரும்பத்தக்கவற்றை விரும்புகிறான். ஒரு தனியாள் அல்லது சமூகத்தினர் அறிந்த ஒத்துக் கொண்டு, ஏற்றுக்கொண்டுள்ள வாழ்க்கை வழிகள் அவருடைய அற நெறியாகின்றன. சமூக நலத்தை மட்டும் பார்த்தால் வெவ் வேறு சமூகங்களில் வெவ்வேறு அறநெறிகள் உள்ளன. இவை ஒரு குழுவில் முழுமுடிவுடையவை (absolute)

ஆனல் குழுவின் நிலைக்கு இயைந்தவை. மக்கள் சமய, தத்துவச் சிந்தனையின் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்போது அறவியல் ஒப்புமை (ethical relativism) குறைகிறது. மனித வரலாற்றில் மனிதர் அடிக்கடி சில விழுமியங்களை முழு முடிவுடையனவாகக் கொண்டு வாழ்க்கை நடத்த முயன்றுள்ளனர். (இம்முயற்சியில் தவறியுமுள்ளனர்). இவ்விழுமியங்கள் வாழ்க்கையின் முழுமையையும், ஆழ்ந்த உண்மையையும் பற்றி அவர்கள் சிந்தித்ததால் தோன்றியவை. கொல்லாமை, உண்மை, நீதி, சமத்துவம், அன்பு முதலியன இத்தகைய விழுமியங்களாவன.

வழக்கங்களைப் பற்றிய உளவியல் ஆய்வு:

வழக்காறுகள் சமூகத்தின் எழுதாத சட்டத் தொகுதிகள் ஆகின்றன. அவை குழுவின் ஒரு படிவ (universal) நடத்தையைக் குறிக்கின்றன. அவற்றை மீறுவது தகாததென்று கருதப்படுகிறது. சில வழக்கங்கள் பயனை அடிப்படையாகக் கொண்டவை; முன் மாதிரியாலும் பயிற்சியாலும் தலைமுறை தலைமுறையாகக் கடந்து வருபவை. இவை திரும்பத்திரும்பத் தோன்றும் நடத்தைப் பிரச்சினைகளோடு பொருத்தி, காலத்தாற் சோதிக்கப்பட்டவை; ஆகையால் அவைகள் மாறுமல் நிற்கின்றன. இவற்றின் பயனைக் புதிய தலைமுறையினர் புதிய விடைகளைக் காண வேண்டிய தேவை இல்லாமற் போய்விடுகிறது. இவ்வாறு வைத்துக் கோடல்களும், வழக்கங்களும் சமூகத்திற்கு அவசியமாகின்றன. பெரியவர்கள் அறைக்குள் நுழையும்போது இளையவர்கள் தம் இருக்கையினின்று எழுவதும், பெரியவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வணக்கம் செலுத்துவதும், வழக்கமாகிவிட்டன. குழந்தை பிறந்தால் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் இனிப்பு வழங்குவது நம் நாட்டு வழக்கம். அவர்களும் குழந்தைக்கும் தாய்க்கும் சிறிய வெகுமதிகள் கொண்டு வருவது பழைய வழக்கம். குஜராத்தில் விருந்தினருக்கு முதலில் குடிக்கத் தண்ணீர் கொடுப்பது வழக்கம். கோடைக்காலத்தில் குஜராத்திற்குச் சென்றவர்கள் இவ்வழக்கத்தின் பயனை உணர்வர். இழவு வீட்டில் சென்று கேட்டு வருவதும் உளவியற் பயனுடையதாகும்; உற்ருரை இழந்த குடும்பத்தினரின் அவலம் இவ்வாறு பகிரப்படுகிறது.

சில வழக்கங்கள் மீ நம்பிக்கைகளையும் (superstitions) சமய நம்பிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டவை.

பிறப்பு, பூப்பு, திருமணம், சூலுறவு, இறப்பு முதலிய நிகழ்ச்சி களில் செய்யும் சடங்குகள் இவ்வகையின. இத்தகைய பழக்கங்களுக்குப் பழமை வன்மையும், உளவியற் கவர்ச்சி யும் உள்ளமையால் இவை பல நூற்றாண்டுகள் நிலைநிற் கின்றன.

சில வழக்கங்கள் நாம் பிறரிடம் இனிமையாக நடந்து கொள்ள வேண்டும் என்னும் விருப்பினால் அமைவன. ஆங்கிலேயர் பிரிந்து செல்பவரிடம் 'good bye' என்று சொல்லுகிறார்கள். நாம் போகிறவர்களை 'வருகிறீர்களா ?' என்று கேட்கிறோம்.

வழக்கங்கள் சமூக உறுப்பினரைப் பொதுக் குறியீடு களாலும் பொதுச் சமயத்தாலும், பொது விழுமியங்களாலும் கட்டுப்படுத்துகின்றன. வழக்கங்களின் வலிமை பெரிது. இவற்றைக் கொடுங்கோல் மன்னருக்கும், அடக்குமுறை வல்ல ஆசிரியருக்கும், நீதிபதிகளுக்கும் ஒப்பிடுகின்றனர். ஃஎரடோட்டஸ் கூறும் கதை ஒன்றில் ஃடாரியஸ் மன்னன் கிரேக்கரைப் பார்த்து, 'நீங்கள் எவ்வளவு பணம் கொடுத் தால் உங்கள் மூதாதையரின் பிணங்களை உண்பீர்கள்' என்றார். அவர்கள் 'எப்படியும் இதற்குச் சம்மதிக்க மாட் டோம்' என்றார்கள். பின் (கதையில் வரும்) இந்தியரைப் பார்த்து 'நீங்கள் என்ன கொடுத்தால் உங்கள் முந்தையரின் பிணங்களை எரிக்கச் சம்மதிப்பீர்கள் ?' என்றார். அவர்களும் 'சம்மதிக்கவே மாட்டோம்' என்றார்கள். பின் ஃஎர டோட்டஸ் கூறும் முடிவாவது : 'உலகிலுள்ள வழக்கங்களை யெல்லாம் மக்கள் முன் வைத்து அவர்களைத் தேரச் சொன் னால், தாங்கள் எவற்றைப் பயின்றுள்ளார்களோ, அவற் றையே அவர்கள் தேர்வார்கள். இவ்வாறு வைத்துக் கோடல் மக்களின் மன்னன் ஆகிறது' என்பதே. வழக்கங் களின் நிலை பேற்றிற்கும் வன்மைக்கும் பல காரணங்கள் உள்ளன. சில வழக்கங்கள் அன்றாடப் பிரச்சினைகளுக்கு அனுபவத்தில் கண்ட விடைகள் ஆவன. ஆகையால் அவற்றை விடுத்து மீண்டும் சோதனை செய்வதற்கு மக்கள் விரும்புவதில்லை. சில வழக்கங்கள் ஆழ்ந்த சமூகப் பொருண் மையுடையவை. இவை விழுமிய உணர்ச்சிகளினின்று தோன்றியவை. வேறு சில வழக்கங்கள் சமய நடைமுறை களையும் அச்சத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. இதனால்தான் இவை நிலைத்து நிற்கின்றன.

வழக்கத்திற்கும் சட்டத்திற்கும் உள்ள தொடர்பு :

மொழியின் வழக்காற்றைத் தொகுத்து இலக்கணம் அமைப்பது போல் நடைமுறையிலுள்ள வழக்கங்களைத் தொகுத்துச் சட்டம் பெரும்பாலும் அமைக்கப்படுகிறது. சட்டம் ஒருபடித்தாயிருப்பதற்காக (uniform) வழக்கத்தையும், வழக்காற்றையும் தாண்டிச் சென்றாலும், வழக்கமும் சட்டத்தோடு இயைந்து ஆட்சியில் இடம் பெறுகிறது. வழக்கம் சார்ந்த சட்டம், சட்டவியலின் ஒரு முக்கியத் துறையாகக் கருதப்பட்டு வந்துள்ளது. கிளைப் பண்பாடுகளையும் வழக்காறுகளின் வன்மையையும் சட்டம் வகுப்பவர் எப்பொழுதும் மனத்திற்கொண்டு வந்துள்ளனர். இந்துக்களின் தர்ம சாத்திரம் (சமயச் சட்டம்) கைம்பெண் மறுமணத்தைக் கூட அனுமதிப்பதில்லை ; ஆனால் அர்த்தசாத்திரம் (நடைமுறைச் சட்டம்) திருமண முறிப்பைக் கூட (அது வழக்கத்தில் இருந்த காரணத்தால்) அனுமதிக்கிறது. புறமணம் (exogamy) அதாவது ஒருவர் தம் கோத்திரத்திற்கு வெளியே மணம் செய்து கொள்வது ஒரு காலத்தில் யாவரும் கொண்ட வழக்கமாய் இருந்ததால், சட்டமாகியது. சவர்ண மணத்தை எல்லோரும் பின்பற்றவில்லை. ஆகையால் அனுலோம, பிரதிலோம மணங்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. முஸ்லிம் சட்டத்திலும், 'வழக்கம் சட்டத்திற்குள் புகுந்து அதை அரித்துள்ளது'.[5]

வழக்கமும் காலக்கோலமும் : (customs and fashions)

தம் சமூகத்தில் எது வழக்கம் என்னும் அறிவு தனியாளின் விடுதலை வேட்கையையும் புதிது நாடும் பண்பையும் வரம்புக்குட்படுத்துகிறது. வழக்கத்திற்குக் காலத்தால் பெறும் புகழ்வன்மை உள்ளது. ஆகையால் அது பையவே மாறுகிறது. சில தனியாட்கள் தம் சொந்தத் தேவைகளை நிறைவிக்க மரபை எதிர்க்கும் புனைவுகளை-காலக் கோலங்களைப்-பயன்படுத்துகின்றனர். ஆனால் வழக்கம் விதிக்கும் தகுதிவரம்பைத் தாண்டிக் காலக்கோலமும் செல்வதில்லை.

நிறுவனப்பட்ட சமூகக் கட்டுப்பாடு (Institutionalized social control)

ஒரு முன்னேறும் சமூகத்தை நிலைநிறுத்துவதற்கோ, அதன் தேர்ந்த விழுமியங்களைப் பாதுகாப்பதற்கோ முக்கியமென்று கருதப்படும் செயல்களின் கட்டமைப்பே (frame work) நிறுவனம் எனப்படும். ஆகவே நிறுவனம் இருக்க

வேண்டுமானால் ஒரு கருத்தும், அதனோடு இயைந்த உறுப்பியமும் (structure) அமையவேண்டும். சமூகம் மையவிழுமியங்கள் (central values) என்று கருதுவனவற்றைச் சுற்றி அமைந்த செயற்படிவமே நிறுவனமாகும். அதைப் புறவயப்பட்ட (objectified) சமூக நோக்கம் என்று சொல்லலாம். எடுத்துக்காட்டாக, குழந்தையைத் தாய் அல்லது தாயும் தந்தையும் நன்கு பாதுகாக்க வேண்டும்; பாலியற் சக்தியை ஆற்றுப்படுத்த வேண்டும்; பாலியற் பொருமை தவிர்க்கப்பட வேண்டும். இக்கருத்துக்களை மையமாகக் கொண்டு திருமணம், குடும்பம் ஆகிய நிறுவனங்கள் தோன்றியுள்ளன. வெவ்வேறு தொழிற் குழுக்கள் கூடி வாழ வேண்டும், ஒத்துழைக்க வேண்டும் என்னும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சாதி முறை நிறுவப்பட்டது. மனிதச் சக்திக்கு மிஞ்சிய வல்லமை ஒன்று உண்டு, அதனோடு நாம் தொடர்பு கொள்ள வேண்டும் என்னும் கருத்தை மையமாகக் கொண்டு தோன்றியது. தனியாளுக்கு உரிமை உண்டு, அதைப் பாதுகாக்க வேண்டும் என்னும் கருத்துக்கள் சட்டத்திற்கு மையமாக அமைபவை. பாதுகாப்பு முதலிய கூட்டுத் தேவைகள் அரசு ஓர் அரசியல் நிறுவனமாக அமைவதற்கு அடிகோலியவை. ஒவ்வொரு நிறுவனத்தையும் ஆதரிக்கும் வகையில் ஓர் எண்ணத் தொகுதியும் நம்பிக்கைகளும் உள்ளன; அவற்றைச் சுற்றி ஒரு நுட்ப அறிவுக் களஞ்சியமும் வளர்கிறது; அவற்றின் தோற்றத்தைப் பற்றிய கதைகளும் எழுகின்றன. இவைதாம் அந்நிறுவனத்தின் குறிக்கோள் தொகுதி (ideology) ஆகும். நிறுவனம் ஏற்பட்டபின் சமூகத்தின் உறுப்பினருடைய நடத்தை தரப்படுகிறது; நடத்தை ஒரு வார்ப்பாக அமைகிறது; உறுப்பினர் நிறுவன நடத்தைக்கு ஒத்துப் போகிறார்களா என்று பார்ப்பதற்குக் குழுவும் அதன் தலைவரும் வழி வகுக்கின்றனர்; நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன; தனியாள் சில குறிப்பிட்ட நிலைகளைக் கடந்து செல்ல வேண்டியதிருக்கிறது. நிறுவனச் சமூகக் கட்டுப்பாடு இவ்வாறு அமைவுற்றதாகும். இக்கட்டுப்பாடு மற்றொரு வகையிலும் அமைவுற்றதாகும். இதில் முதியோரும், குருக்களும், பிறரும் அதிகாரம் படைத்தவர்கள். நிறுவனத்தின் குறிக்கோள் தொகுதியைப் பற்றித் தனியாட்களை அறிவுறுத்துவதும், தனியாட்களின் நடத்தை ஒருபடித்தாக அமைகிறதா என்று மேற்பார்ப்பதும் இவர்கள் கொள்ளும் கடமைகள். நிறுவன நடைமுறைகளை மீறினால் அதற்குத் தண்டனைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

நிறுவனப்பட்ட சமூக வாழ்க்கையை ஓர் எடுத்துக் காட்டினுல் விளக்கலாம். இந்து சமுதாயத்தில் வாழ்க்கை நான்கு புருடார்த்த நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சமூகத்தை நிலை நிறுத்துவதே இவற்றின் மையக் கருத் தாகும். இந்து ஒருவன் செல்வத்தை ஈட்டவும், குடும்ப வாழ்க்கை நடத்தவும் எதிர்பார்க்கப்படுகிருன். ஆனல் தன் இறுதிக் கோளாகிய வீடு அல்லது ஆன்ம விடுதலையை அவன் மறந்து விடலாகாது. அவன் அறிவையும் கலை களையும் பயில வேண்டும்; இவை அவனுடைய ஆன்ம வாழ்க்கைக்கும், நடைமுறை வாழ்க்கைக்கும் பயன் படுவன. அவன் திருமணம் செய்து தன் முன்னேராகிய 'தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இயற்றும் பொன்போற் புதல்வர்ப்' பெற்றுச் சமூகம் தொடர்ந்து நிலை பெறும்படிச் செய்ய வேன்டும். 'விருந்தோம்பி வேளாண்மை' செய்யும் பொருட்டு 'அவன் இருந்தோம்பி இல்வாழ' வேண்டும். அவனுடைய செல்வத்தில் ஒரு பங்கை ஈகைக்காகச் செல விட வேண்டும். விருந்தோம்பலும் ஈகையும் நற்பண்புகள் மட்டுமல்ல, இவை ஒருவருடைய கடமைகள் ஆகின்றன. சமூகத்தில் ஒருவருக்கும் உணவு, உடை, உறையுள் இல் லாமற் போகக் கூடாது என்பதற்காகவே இக்கடன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியக் குழந்தையின் பயிற்சி யில் இச்சமூக உணர்வு இளமையிலிருந்தே இடம் பெறு கிறது. தனியாளின் இன்பத்திற்கு முதல் இடம் அளிக்கப் படுவதில்லை. எடுத்துக்காட்டாக, மணமான பெண் தன் கணவனுடைய கூட்டுக் குடும்பத்துள் நுழைகிருள். ஆகை யால் ஒரு நல்ல மருமகளாகவும், மைத்துனியாகவும், தர்யா கவும் இடம் வகிக்கும்படி அவளுடைய பெற்ருர் அவளைப் பயிற்றுவிக்க வேண்டும். இவ்வாறு தனியாள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட நிலைமைகளுக்குட்படுவது நிறுவனக் கட்டுப்பாட்டின் பண்பாகும்.

ஆனல் தனியாள் தான் செய்ய நேரும் ஒவ்வொரு செய லுக்கும் உள்ள சமூகப் பொருண்மையை அறிந்திருப்ப தில்லை. பொதுவாக அவர் செயலாற்றும்போது அச் செயலால் தாம் பெறும் சொந்த மதிப்புணர்வையே துய்க் கிருர். எடுத்துக்காட்டாக, பூணூல் அணியப் போகும் பையன் இச்செயலில் தனக்குக் கிடைக்கும் சொந்தச் சிறப் பையே பெரிதாக மதிக்கிருன். தாயோடு அமர்ந்து அவன் இனி உண்பதில்லை. அவன் தந்தையின் அருகில் அமர் கிருன். அவர், அவனுக்கு உபநயனம் செய்விக்கிருர்.

இதுவரை வெறுமையாக இருந்த அவனுடைய இடையைச் சுற்றி ஒரு துணியைக் கட்டுகிறர். இவற்றிற்கெல்லாம் ஆழ்ந்த சமூகக் குறிப்பிடுமை (significance) உண்டு. அவன் தாயினின்றும் உளவியன் மறப்புப் (psychological weaning) பெற்றுள்ளான். குடும்பத்தின் மரபை ஏற்றுத் தன் குலப் பெயரைச் சொல்லுகிறன். பால் முதிர்ச்சியை எதிர்பார்த்து ஒரு துணி அவன் இடையைச் சுற்றிக் கட்டப்படுகிறது.

சமயம் இயற்றும் கட்டுப்பாடு :

புராதன காலந்தொடங்கி இன்று வரை சமய உணர்ச்சி மனிதனுடைய சொந்த நடத்தையையும், ஆளிடைத் (inter-personal) தொடர்புள்ள நடத்தையையும் கட்டுப் படுத்தும் வன்மையுள்ள சாதனமாக அமைந்துள்ளது. மனி தன் மனித வன்மைக்கு மிஞ்சிய ஒரு மெய்ப்பொருள் உண் டென்றும், தான் அதைச் சார்ந்தே வாழமுடியும் என்றும் நம்புகிறன். இதுதான் சமயத்தின் சாரம் ஆகும். நம்பிக்கை நடத்தையைத் தீர்மானிக்கிறது. ஆகையால் மனிதன் அண் டத்தின் இறுதி ஆற்றலாகிய மெய்ப்பொருளுடன் தொடர்பு கொள்ள முயல்கிறன். இம்மெய்ப்பொருளை மக்கள் எப்படிக் கருதுகிறர்கள் என்பதைப் பொறுத்து, சமயப் பழக்கங்களும் மாறுகின்றன. அறிவியல் உணராத புராதன மனிதன் மனித விதியையும் அண்டத்தையும் பல சக்திகள் கட்டுப் படுத்துகின்றன என்று கொண்டான். மனித வாழ்க்கையை ஆளும் ஒவ்வொரு நிகழ் முறைக்கும் ஒரு சக்தியை அவன் காரணமாகக் கொண்டான். புயல், வெள்ளம், அறுவடை, பஞ்சம், நோய், படையெடுப்பு, வெற்றி, தோல்வி, பிறப்பு, இறப்பு முதலியவை யாவும் பல தெய்வங்களின் செயல்கள் என்று கொண்டான். இத்தெய்வங்களுக்கு மனித உணர்ச் சியும் வேகமும் ஏற்றிக் கொண்டான்; இவற்றின் வன்மைக்கு அஞ்சினன் ; அவற்றைச் சாந்தி செய்ய எண்ணினன் ; அவை பயந்த நன்மைக்காக அவற்றிற்கு நன்றி செலுத்தி னன் ; இயற்கையின் வலிய நிகழ் முறைகளையும், பிறப்பு, பூப்பு, இறப்பு முதலிய நிகழ்ச்சிகளையும் கண்டு வியப்பும், உட்கும் (awe) எய்தினன். இந்நிகழ்ச்சிகளெல்லாம் சமூக வாழ்க்கையில் மிக முக்கியமானவை யாதலால், இவற்றுல் எழும் எழுச்சிகளில் சமுதாயத்தினர் எல்லோரும் பங்கு கொண்டனர். ஆகையால் கூட்டுக் கிளர்ச்சிச் செயல்கள் தோன்றின. அறுவடைக்குப் பின் வரும் சமுதாய நடனங்

கள், கூட்டு வணக்கம், சடங்குகள், விழாக்கள் எல்லாம் இத்தகு செயல்கள். இவ்வாறு தனிப்பண்பாடுகள் (cults) பல தோன்றுகின்றன. இவையெல்லாம் சமுதாயத்தின் முக்கியமான நோக்கங்களைச் சுற்றி அமைந்தவை. புராதன மனிதன் உண்மையான தனியாள் வாழ்க்கை வாழ்ந்தான் என்று சொல்ல முடியாது. சமுதாயப் பற்று அவனுடைய நடத்தையையும் சிந்தனையையும் ஆண்டது.

> 'நாம் ஒன்றுகூடி நம்மைப் பாதுகாத்துக் கொள்வோமாக,
>
> நம் இன்பத்தை நாம் பகிர்ந்து கொள்வோமாக;
>
> ஒன்றுகூடி நம் வீரத்தைக் காட்டுவோமாக.'

என்று உபநிடதப் பரவலும் இக்குழுமையத் தன்மையைக் காட்டுகிறது. இத்தனிப் பண்பாட்டு நடைமுறைகள் மரபின் மூலம் தனியாள் வாழ்க்கையோடு இரண்டறக் கலக்கின்றன. சமூகக் குறிப்பிடுமை உள்ளமையால் அவை வழக்கமாகின்றன. இவ்வாறு சமயம் மனிதனைக் கடவுளுடன் சேர்த்துக் கட்டும் நம்பிக்கைகளும், நடைமுறைகளும் ஆவது மட்டுமின்றி, மக்களை ஒன்று சேர்த்து சமூக ஒழுங்கமைப்பை நிலைநிறுத்தவும் செய்கிறது.

சமய வழக்கங்கள் நிலைத்து நிற்பதற்கு வேறு சில காரணிகளும் உள்ளன. பூத, உயிரிய நிகழ்முறைகளைச் சுற்றியுள்ள அடிப்படையான மறை பொருண்மை (mystery) ஒவ்வொரு தலைமுறையிலும் மனிதனுடைய சிந்தனையைக் கவர்ந்துள்ளது. ஆகையால் சமயத் தனிப் பண்பாட்டுப் பழக்கங்கள் மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்று நிற்கின்றன. மேலும், மனிதன் சடங்குகளையும், கிளர்ச்சியையும் விரும்புகிறான். கூட்டுச் சமயச் சடங்குகளும், விழாக்களும் இவ்வேட்கையை நிறைவிக்கின்றன. சமூகச் சடங்கில் பங்கு கொள்வதால் மனிதன் பெரிதும் விரும்பும் சமூகத் திடநிலைமையும் (solidarity) ஏற்படுகிறது. கடைசியாக, சமூகப் பழக்கங்களின் மாறுத்தன்மை, பழமையின் புகழ் வன்மை, ஒத்துப் போகும் வேட்கை முதலியவையெல்லாம் இப்பழக்கங்கள் நிலைப்பதற்குத் துணை புரிகின்றன.

ஆனால் சமூகம் வெறும் மூ நம்பிக்கைகளும் (superstitious) மூடப் பழக்கங்களுமே கொண்டதன்று. அற உணர்ச்

சியைப் போலவே சமய உணர்ச்சியும் படிமலர்ந்துள்ளது. காணுப் பொருளுடன் மனிதன் கொண்டுள்ள தொடர்பு நாளடைவில் சீரும் செப்பமும் பெற்றுள்ளது. தனியாளுக்கும் சமூகத்துக்கும் பயன்படும் உண்மையான ஆன்ம விழுமியங்கள் தோன்றியுள்ளன. எடுத்துக்காட்டாக, உலகப் பெருஞ் சமயங்கள் அனைத்திலும் ஆழ்ந்த ஆன்ம விழுமியங்கள் அடங்கியுள்ளன. இவ்விழுமியங்களை எய்துவதற்கு உதவும் நடத்தை நெறிகளும் வகுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இந்து மதத்தின் அறப்பகுதியை ஆய்ந்தால் தனியாளின் ஆன்ம வளர்ச்சிக்கும், சமூகத்தின் நலத்திற்கும் பயன்படும் பல கொள்கைகள் உள்ளன. பிற பெருஞ் சமயங்களிலும் இத்தகைய கொள்கைகளைக் காணலாம். புத்த மதம் கொல்லாமையைத் தலைவிழுமியமாகக் கொள்கிறது. சைன மதம் கூறும் கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, ஈட்டாமை, புலனடக்கம் முதலிய குறிக்கோட்களைப் பல்லாயிரம் மக்கள் பின்பற்றியுள்ளார்கள். எபிரேய நெட்டிமையார்கள் (தீர்க்கதரிசிகள்) பழைய நம்பிக்கைகளைத் தகர்த்து ஒரே கடவுள் உண்டு, அவர் மக்களிடமிருந்து சீர்மையையும் (Right), நன்மையையும் (Good) எதிர்பார்க்கிறார் என்ற கருத்தைப் புகட்டிச் சமயத்தைச் சீர்திருத்தினர்கள். இதிலிருந்து உடன்பாடு விதிகளும், எதிர்மறை விதிகளும் கொண்ட பத்துக் கட்டளைகள் தோன்றின. இவை மனிதனுக்கு அளிக்கப்பட்ட கடவுளின் வாக்குகள். இவையே யூத மதத்தின் இயங்கியற் சமூக அறம் ஆவன. எபிரேயரின் பழைய ஏற்பாடு கிறிஸ்தவ மறையின் முதல் பகுதியாகும்.

இஸ்லாம் மதமும் எபிரேய மதத்தைப் பின்னணியாகக் கொண்டே தோன்றியது. இச்சமயம் அல்லா என்னும் ஒரே தெய்வ நம்பிக்கை கொண்டது. மனிதன் நல்லவனுகவே உண்டாக்கப்பட்டான்; வானத்திலும் பூமியிலும் உள்ள எல்லாப் பொருட்களும் மனிதனுக்காகவே படைக்கப்பட்டவை; மனிதன் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே படைக்கப்பட்டான்; அவனுக்குக் கட்டிலி முயற்றி (free will) கிடையாது. இத்தகைய நம்பிக்கைகள் முகம்மதியருடைய வாழ்க்கை நோக்கைப் பாதிக்கின்றன. இவற்றை 'இன்பம் சார்ந்த ஊழ்வினைக் கொள்கை' (hedonistic fatalism) என்னலாம். அல்லாவை நம்புபவர்கள் எல்லோரும் உடன் பிறப்பாளர் ஆவர். நிறம், இனம், ஏற்றம் முதலிய வேற்றுமைகள் கடவுள் முன் கிடையா என்னும் நம்பிக்கையும் அவர்களுக்கு உண்டு. மசூதியில் அரசனும் ஆண்டி

யும், செல்வரும் வறியரும், ஆள்பவரும் குடிமக்களும் ஒன்றுகவே நிற்கின்றனர். பணத்தை வட்டிக்குக் கொடுக்கக் கூடாதென்றும், உலோபிக்கு பரதீசு கிடையாதென்றும் குர்-ஆன் கூறுகிறது.

உலகப் பெரும் சமயங்களின் விதிகள் வன்மையுள்ள சமூகக் கட்டுப்பாடுகளாகப் பணியாற்றி வந்துள்ளன. இன்று சமயம் பின்னணிக்குச் சென்று கொண்டிருக்கிறது. அதற்குப் பதிலாகச் சட்டம் சமூக ஒழுங்கு விதிப்பில் பெரும் இடம் வகிக்கிறது. சட்டத்திற்குச் சமயத்தின் துணை தேவையாகிறதென்று ரோஸ்கோ பவுண்டு (Roscoe Pound) போன்ற தலை சிறந்த சட்டவியலர் கூறியுள்ளனர். சட்டத்திற்குக் கல்வியின் துணையும் தேவையாகிறது.

அரசும், சட்டத்தால் ஏற்படும் கட்டுப்பாடும் :

பிற சமூக (நிறுவனங்களைப் போலவே அரசும் ஒரு புற வயப்படுத்திய கூட்டு) நோக்கமாகும் (objectified collective purpose) அரசை ஒரு நிறுவனத் தொகுதி என்னலாம். அரசின் மூலம் சமூகம் உறுப்பினரைப் பரந்த முறையில் கட்டுப்படுத்துகிறது. அரசின் மூலம் ஒரு நிலப் பரப்பிலுள்ள மக்கள் ஒரே மைய வன்மைக்குட்படுகிறார்கள். சில பொதுவான தேவைகளை அவர்கள் உணர்வதாலும், சில வாழ்க்கை நிலைகளை ஏற்படுத்த வேண்டியதிருப்பதாலும், சமூக வாழ்க்கையின் பல கூறுகளையும் ஒன்றுபடுத்த வேண்டியதிருப்பதாலும் அரசு தோன்றுகிறது. சமூக நிறுவனங்கள் எல்லாவற்றுள்ளும் மிகப் பெரியதும், பரந்து பட்டதும், வன்மை மிக்கதும் அரசேயாகும். அலுவலர்க் குழு, சட்டசபை, செயற்குழு அமைப்பு, நீதி வழங்கும் அமைப்பு, காவலர் படை, போர்ப்படை முதலிய அங்கங்களை உடையது அரசு.

அரசு பல்வேறு செயல்கள் புரிகிறது. மக்களுடைய சொந்த உடைமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய பிற உரிமைகளை நிலைநிறுத்தவும், இயற்கை வளத்தைக் காக்கவும் அது சட்டங்கள் இயற்றுகிறது. அச்சட்டங்களைக் குடிமக்களுக்கு எடுத்து வழங்குகிறது. குடிமக்களைப் பாதுகாப்பதற்காகக் காவற்படை உளது, கூட்டுப் பாதுகாப்பிற்காகப் போர்ப் படையும் உளது. இன்னும் போக்குவரத்து, செய்தி உடம்படுப்பு, கல்வி, உடல் நலம், நீர்ப்பாசனம் முதலிய பல பொதுத் தொண்டுகளையும் அரசு இயற்றுகிறது.

தனியாட்கள் தங்கள் ஒப்பந்தங்களை மீறுது காப்பதற்காக நீதித்துறை உள்ளது. இன்றைய அரசு, கலையையும் இலக்கியத்தையும் வளர்ப்பதற்காகத் தேசியக் கலைக்கூடம் அமைக்கிறது; கண்காட்சிகளும், நூலகங்களும் நிறுவுகிறது; கலைஞரையும் எழுத்தாளரையும் புரக்கிறது. இவ்வாறு அரசு தனியாள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் தொடுகிறது. அதன் சட்டங்கள், நீதிமன்றங்கள், சட்ட சபைகள், காவலர் படைகள், பொதுத் கொண்டு அலுவலகங்கள் ஆகியவை எல்லாம் ஒரு பரந்த சமூகத் திட்டத்தின் பகுதிகள் ஆகின்றன.

ஒருவர் தனியாள் என்ற முறையில் மட்டும் வாழாமல் அரசின் குடியாகவே வாழ்வதால் அவருடைய நடத்தை படைப்படுகிறது (regimented.) இது இரண்டு வகைகளில் ஏற்படலாம். தனியாள் அரசின் சமூக நோக்கங்களை அறிந்திருந்தால், அவர் தெரிந்திருந்தே இந்நிலைக்கு உட்படலாம். அவர் அறியாதவராக இருந்தால் அவர் அச்சத்தினுல் இந்நிலைக்கு உட்படலாம். அரசின் சட்டங்கள் மக்களுடைய பொதுத் தேவைகளை நிறைக்கவில்லை என்று தனியாள் எண்ணினுல், அல்லது சமுதாயத்தின் திரண்ட எண்ணங்களை அது குறிக்கவில்லை என்று நினைத்தால், அவர் புரட்சி செய்து சிறைத் தண்டனையையும் வரவேற்கலாம்; அல்லது அச்சத்தினுல் பணிந்து போகலாம். ஆனுல் அச்சத்தினுல் பெறும் விருப்பமற்ற பணிவு நெடுங்காலம் நிலைத்து நிற்பதில்லை. ஆகையால் அரசின் சட்டங்கள் குடிமக்கள் விரும்பிக் கீழ்ப்படியும் வகையில் அமைய வேண்டும். அவை சமூக மரபுக்கு ஒத்திருக்க வேண்டும்; முதனிலைக் குழுப்பற்றுறுதிகளை எதிர்ப்பனவாக இருக்கக் கூடாது. ஏனென்ருல் நேரடிப் பற்றுறுதிகள் மறைமுகமான அருவப் பற்றுறுதிகளைவிட வலியவை.

அரசும் அதன் சட்டங்களும் புறமுறை சார்ந்த, நனவுள்ள, எண்ணித் துணிந்த, அமைந்த கட்டுப்பாடுகள் ஆவன. இவை முதனிலைக் குழுக்களின் புறமுறை சாராத வன்மைகளினின்றும் வேறுபட்டவை. மனிதன் தனக்கு அருகிலுள்ள சிலரின் பாராட்டையும் பாராட்டு மறுப்பையும் மட்டும் வைத்து வாழ்பவன் அல்லன். வழக்கங்கள் புறமுறை சாராமல் மனிதனைக் கட்டுப்படுத்துகின்றன; அரசு புறமுறையில் கட்டுப்படுத்துகிறது. ஆனுல் வழக்கங்களோடு அரசுச் சட்டங்கள் தொடர்புள்ளனவாக அமைய

வேண்டும். பல சட்டங்கள் மக்களின் கூட்டு நலனைக் கருதும் வழக்கங்களை ஆதாரமாகக் கொண்டவை. பொதுவாக, சட்டம் பழைய பழக்கங்களை எதிர்த்துச் செல்வது அரிது. ஆனால் பல துணைப்பண்பாடுகளையுடைய பல குழுக்கள் ஒரே அரசாட்சிக்குள் வரும்போது இம்முழுத் தொகுதியிலும் நடத்தையை ஒருபடித்தாக்க வேண்டிய திருக்கிறது. இதற்காக இயற்றும் சட்டங்கள் சில துணைக் குழுக்களின் வழக்கங்களினின்றும் வேறுபட்டனவாக இருக்கக் கூடும். ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகளிலும் முதலில் சமூக எண்ணங்களை மாற்றியமைத்துப் பின்னரே சட்டம் வகுக்கப்படுகிறது. இச்சட்டங்கள் பொதுவாக அனுமதிக்கும் வழக்கங்களையே தடுக்கின்றன; கடப்பாட்டு வழக்கங்களுக்கு எதிராக நிற்பதில்லை. எடுத்துக் காட்டாக, இந்துக்களுள் பலதார மணம் அண்மையில் அருகி விட்டது. மேலும் அது ஒரு கடப்பாட்டு, உடன்பாட்டு வழக்கமாக இருந்ததில்லை. ஆகையால் ஒருதார மணச்சட்டம் வந்தபோது அதற்கு அதிக எதிர்ப்பு இல்லை. ஆனால் ஓர் உடன்பாட்டு வழக்கத்தை, சமூகத்தின் பொது எண்ணத்தை, அற, ஆன்மீக வாழ்க்கையொடு இயைந்த தொரு பழக்கத்தைச் சட்டம் எதிர்த்தால், அச்சட்டம் மீறப்படக்கூடும், மதிப்பிழக்கவும் கூடும். குழந்தை மணத் தடைச் சட்டம் இவ்வாறு மீறப்பட்டது.

காலக்கோலம், காலப்பாணி, காலக்கோட்டம்—நிறுவனப்படாத சமூகக் கட்டுப்பாடுகள் :

காலக்கோலம் (fashion) என்பது, வழக்கத்தினின்று ஏற்படும் சிறிய மாறுபாடுடைய ஒரு புதுப் புனைவு ஆகும். இது சமூகத்தில் கொஞ்ச காலம் பொதுவாகப் பின்பற்றப்படுகிறது; பின் சாதாரணமாகி விடுகிறது. பின் புதுமையுடன் இயைந்த உளவியற் சிறப்பை இழக்கிறது. இதற்குப் பின் அது மறைந்து விடக்கூடும். அல்லது அதிலுள்ள வசதிப் பயனுக்காகவே மக்கள் அதைப் பயன்படுத்தக்கூடும். அப்படியானால் அது நிலைபெற்று, மக்கள் வாழ்க்கையில் நிலையான இடம் பெறக் கூடும். மேலே கூறப்பட்ட மாறுதல் மிகச் சிறியதாகவும், நிலைபேறு குறைந்ததாகவும் இருந்தால் அதைக் **காலப்பாணி** (fad) என்னலாம். இத்தகைய ஒரு சிறிய மேற்பரப்பான மாறுதலைப் பின்பற்றி மக்கள் அளவுக்கு மிஞ்சிக் காலத்தையும் சக்தியையும் செலவழித்தால் அதைக் **காலக்கோட்டம்** (craze) என்கிறோம்.

இனி இவற்றை எடுத்துக் காட்டுவோம். மாணவர் திரைப் படங்களினின்றும் வேறு மூலங்களினின்றும் சில தொடர் களையும் பேச்சுப் பாணிகளையும் கொஞ்ச காலம் ஒரு கோலமாகக் கொள்வதுண்டு. ஃபுஷ் ஷர்ட்டுகள் நம் நாட்டில் காலக்கோலமாக வந்தன; ஆனல் வசதியின் பயனுக அவை நிலேத்து நிற்கின்றன. சிறிது காலம் அலங் கோலமான படங்கள் உள்ள ஃபுஷ் ஷர்ட்டுகளேக் கூட சிலர் அணிந்தனர். அகலக்கறையும் மாறுவண்ணமும் உள்ள புடைவைகள் இன்றையக் காலக் கோட்டங்கள் ஆவன. கூந்தற் புனேவிலும், பிரிமணை போன்ற பொய்க் கூந்தல்கள் இடம் பெறுகின்றன. புதுமைப் பித்துள்ள நகரப் பெண்கள் குதிரைவால், துடைப்பக்கட்டை போன்ற கூந்தற் புனேவு களேயும் கையாளுகிருர்கள். அணிகலன்களில் காலக்கோலம் மாறுவதால் பொற்கொல்லர் தொழில் சிறக்கிறது. பழைய கீழ்த்திசைக் கோலங்கள் மாறிச் சிறிது காலம் வடிவ கணிதப் படிவங்கள் இடம் பெற்றன. இப்பொழுது மீண்டும் பழைய தசாவதாரக் கோலங்கள் சிறக்கின்றன. முற்காலத்தில் பெண்கள் அணிந்த அட்டியல் இன்று அவர்களுக்குக் கழுத்தை இறுக்குவது போல் தோன்றுகிறது. கட்டிட அமைப்பிலும், வேயா மாடங்கள்தான் இன்றைய கோல மாவன. ஆனல் வீட்டினுள் கீழ்த்திசை முறைகள் மீண்டும் தோன்றுகின்றன. களியாட்டங்களிலும் இத்தகைய கோல மாறுதலேக் காணலாம்.

காலக்கோலத்தை ஆராய்பவர் சில உண்மைகளேக் கண்டுள்ளனர். காலக் கோலங்கள் விரைவில் மாயும், குறுகி வாழும் நடத்தைப் படிவங்கள் ஆவன. ஆனல் அவை பல தனியாட்கள் பின்பற்றும் அளவுக்கு நிலேத்து நிற்கின்றன. இரண்டாவதாக உடுத்தல், கூந்தற் புனேவு, கட்டிட் அமைப்பு, பொழுதுபோக்கு, பேச்சு, அணிகலன் அணிதல் முதலிய செயல்களில், நிறுவப்பட்ட முறைகளி னின்று சிலர் வேறுபடுகிறார்கள். இவ்வேறுபாட்டை எல்லாச் சமூகங்களிலும் எல்லாக் காலங்களிலும் காணலாம். மக்கள் எப்பொழுதும் ஓரளவு புதுமை நாடுகிறார்கள். வெளி நாட்டுப் பண்பாடுகளின் வன்மைக்கு அதிகமாக உட்பட்ட சமூகங்களில் நிலேத்த பண்பாட்டைக் காண்பது அரிது. இச்சமூகங்களில் காலக்கோலம் எளிதாகத் தோன்றிப் பரவு கிறது. பழைய செந்நிலேகள் மறைந்து புதிய நிறுவன வழிகள் தோன்றுத இடைக்காலங்களில் காலக்கோலங்கள் எளி தாகப் பரவுகின்றன. ஒரு காலத்தில் பரவியிருந்து பின்

மறைந்து விட்ட காலக்கோலங்கள் சில ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தோன்றுகின்றன. இவ்வாறு சுழற்சி மாறுதல் விதி (Law of cyclic changes) காலக் கோலங்களைக் கட்டுப்படுத்துகின்றன. உடை, கூந்தற்புனைவு, அணி கலன் முதலியவற்றில் இச்சுழற்சியைத் தெளிவாகக் காண லாம். நம் நாட்டில் சட்டைக்கை நீளம் மாறி மாறி வருவதைக் காணலாம். பெண்களின் முழு உடற்சட்டை சில ஆண்டு களுக்கு முன் காலக்கோட்டமாக இருந்தது. அந்நிலை இப் பொழுது மாறிவிட்டது. பாட்டி காலத்துச் சோளிகள் இப்பொழுது சீர்குறைவாகத் தெரிவதில்லை; முழு உடற் சட்டை மீண்டும் தோன்றும், மீண்டும் மறையும் என்று நாம் இப்பொழுதே முற்கூறலாம். அட்டியற் கோலங்களும் இவ்வாறே மாறியுள்ளன. கூந்தற்புனைவும் இப்படியே மாறி வருகிறது. இப்படிப்பட்ட வேறுபடுப்புகளுக்கு ஒரு வரையறையுண்டு. கூந்தலை நீளமாகவோ, குட்டை யாகவோ அமைக்கலாம். (அதை நெற்றிக்கு முன் அமைக் காமல் சமூகம் காப்பதாக!). மனித உடல் உறுப்பியம் (structure) வரையறையுள்ளது; அதில் ஏற்படக் கூடிய வேறுபடுப்புகளுக்கு ஓர் எல்லையுண்டு. ஆகையால்தான் சுழற்சி மாறுதல்கள் ஏற்படுகின்றனவென்று கிம்பால் யங் கூறியுள்ளார். இதனால்தான் புதுமை வேட்கை பழமையை நாடுகிறது. கட்டிடக் கலையிலும் சுழற்சி மாறுதல் உண்டு. ஆனால் இத்துறையில் சுழற்சி மெதுவாகவே ஏற்படுகிறது. ஏனென்றால் பொருளாதார நிலை விரைந்த மாறுதல்களுக்கு இடம் தருவதில்லை.

காலக்கோலம் ஒரு குறிப்பிட்ட சமூக உறுப்பினரின் புதுப்புனைவு அன்று. அது மற்றொரு சமூகத்தினரைப் பின் பற்றுவதால் தோன்றலாம். உயர்குலப் பெண்கள் மிகப் புதிய நடை என்று கொள்வது கீழ்க்குலப் பெண்கள் விட்டு விட்ட மிகப் பழைய நடையாக இருக்கக் கூடும். இன்றை யப் புதுச் சமூகப் பெண்களின் முதுகற்ற சோளி மேல்நாடு களினின்று பின்பற்றியது. ஆனால் ரப்பாரிகளும், குஜராத் தின் பால்காரிகளும் தொன்று தொட்டு அணிந்து வரும் அன்றாட ஆடை இது.

காலக்கோலத்தின் ஊக்கிகள் :

காலக்கோலத்தின் உளவியல் அலுவல் யாது? காலக் கோல நடத்தையின் ஊக்கிகள் யாவை?

சில வேளைகளில் காலக்கோலம் விரும்புபவரே தம் ஊக்கிகளை எடுத்துக் கூறக் கூடும். 'பிறர் பொருமைப்பட வேண்டும் என்று நான் காலக்கோலம் பூணுகிறேன்' என்று அவர் சொல்லக்கூடும். பம்பாயில் ஒரு பெண் ஆகஸ்டு 15-ம் நாள் ஊதா நிற ஆடை அணிந்திருந்தாள். அதற்குக் காரணம் "அது வரவேற்கும் நிறம்" என்று சொன்னாள். பிறருடைய கவனத்தை ஈர்ப்பது காலக்கோலத்தின் முக்கிய ஊக்கிகளுள் ஒன்றாகும். கவனத்தை ஈர்க்கும் வேட்கையும், மிகச் சிக்கலான உளவியல் ஊக்கிகளால் அமைவது. புதிய அனுபவமும், தனிச் சிறப்பை விரும்புவதும் காலக்கோலத்தைத் தூண்டுவன. உடைக் கோலத்திலும் அணிகலக் கோலத்திலும் இளமைத் தோற்ற வேட்கை இடம் பெறுகிறது. சில வேளைகளில் உடலியற் குறைக்கு அல்லது உளவியல் தாழ்மையுணர்ச்சிக்கு ஈடு செய்வதற்காக இக் கோலங்களை மக்கள் கொள்வதுமுண்டு. நாம் பாராட்டும் ஆட்களைப் பின்பற்றுவதாலும் இச்செயல்கள் ஏற்படுவதுண்டு. காலத்தோடு இசைந்து போகும் ஊக்கமும் காலக் கோலம் பரவுதற்குத் துணை புரிகிறது.

ஆனால் மிகச் சிலரே தம் உண்மையான ஊக்கிகளை உணர்ந்து அவற்றை வெளியிடத் துணிவர். பொதுவாக மக்கள் ஏதிடுகின்றனர், காரணம் கற்பிக்கின்றனர், வழக்கத்தை மாற்றுவதற்கு அவர்கள் பற்பல காரணங்களைப் பூணந்து கூறுகின்றனர். 1938-இல் பல மகாராட்டிரப் பெண்கள் பதினெட்டு முழப் புடவைக்குப் பதிலாகப் பத்து முழப் புடவைகள் அணிவதை ஆதரித்தனர். சிறிய புடவைகள் சிக்கனமாகவும் வசதியாகவும் இருக்கின்றன என்று சொன்னார்கள். குங்குமம் அணியாத சிலர் அது தோலுக்குத் தீங்கு விளைப்பது என்று சொன்னார்கள். இக் 'காரணங்களை' நம்ப முடியாது. இவை ஒரு வாலிபன், பணத்தையும் காலத்தையும் மிச்சப்படுத்துவதற்காகத் தாடி வளர்க்கிறேன் என்று சொல்வது போல்வன. இவற்றின் ஊக்கிகள் சிக்கலானவை. ஒருவேளை அவர் பிறரது கவனத்தை ஈர்க்க விரும்பலாம். அல்லது பிறரைப் பற்றிச் சட்டை செய்யாதது போல் காட்ட முயலலாம். அல்லது ஏதேனும் தாழ்வுணர்ச்சிக்கு ஈடு செய்ய முயற்சி செய்யலாம்.

கருத்தேற்குமையாலும், ஒத்துப்போகும் வேட்கையாலும் காலக்கோலங்கள் பரவுகின்றன. விளம்பரம் செய்வோர் இதை உணர்ந்து, முதலில் தம் சரக்கை உயர் வகுப்பி

னரிடம் பரப்ப முயல்கின்றனர். பிறர் உயர்ந்தோரைப் பின் பற்ற முற்படுவர். இப்படிப் பெரும்பாலவர் ஒரு காரியத் தைச் செய்தால் மற்றவர்களும் காலத்தோடு இசைந்து போக முயல்வர்.

மேற்கூறிய தனிச்சிறப்பு அல்லது தனித்தன்மை வேட் கைக்கும் ஒத்துப்போகும் வேட்கைக்கும் முரண்பாடு உளது. மக்டூகல் கூறுவது போல், பின்பற்றலும், எதிர்ப் பின்பற்ற லும் (contra-imitation) ஒருங்கே நிகழ்கின்றன. பெரும் பாலான மக்கள் ஒரு காலக்கோலத்தை ஏற்றுக்கொண்ட பின் தனியாட்கள் புதிய கோலத்தை விரும்புகின்றனர். மற் றொரு உண்மையையும் நாம் கவனிக்க வேண்டும். காலக் கோலங்கள் வழக்காற்றினின்று மட்டுக்கு மிஞ்சி வேறுபடுவ தில்லை. ஓர் அம்மையார் புடவை தேர்ந்தெடுக்கப் போனர் கள். ஒரு புடவையை 'எவரும் அணிவதில்லை' யென்று தள்ளி விட்டார்கள். மற்றொரு புடவையை 'எல்லோரும் அணிகிறார்கள்' என்று சொல்லித் தள்ளி விட்டார்களாம்.

இவ்வாறு பின்பற்றலும் எதிர்ப்பின் பற்றலும் இணைவ தால் காலக் கோலங்கள் மாறிக்கொண்டே வருகின்றன. ஒரு கோலத்தை ஏறக்குறைய எல்லோரும் பின்பற்றியபின் சில தனியாட்கள் தங்களை வேறுபடுத்திக் காட்டுவ தற்காகப் புதிதாக ஏதேனும் செய்கிறார்கள். ஆனால் காலக்கோலத்திற்கு வரம்பு உண்டு. நற்சுவையுணர்வைச் சிதைக்கும் வகையில் பெரிய மாறுதல்கள் ஏற்படுவதில்லை. பண்பாட்டில் வேரூன்றுதவர்கள்தாம் காலக்கோலத்தில் அளவுக்கு மிஞ்சிச் செல்லத் துணிவர்.

References

1. Gurvitch, Twentieth Century Sociology.
2. Mannheim, Man and Society.
3. Bogardus, Social Psychology. p. 504.
4. Morries Ginsberg, The Psychology of Society
5. A. A. A. Fyzee, Group Prejudices in India.

6. Hetherington and Muirhead, Social Purpose. p. 225.

(For exhaustive treatment of the problem of social control, see L. L. Bernard, Social Control 1939).

F. E. Lumley, The Means of Social Control (1925).

P. H. Landis, Social Control (1939).

11 சமூகக் கட்டுப்பாடு (தொடர்ச்சி)

கருத்துப் பரப்பலும் பொதுமக்கள் எண்ணமும் :

(Propaganda and Public Opinion)

ஓர் ஆள் அல்லது ஒரு குழு பிறருடைய எண்ணங்களையும் மனப்பான்மைகளையும் பாதிப்பதற்காகச் செய்யும் முறையான முயற்சியே கருத்துப் பரப்பல் (Propaganda) எனப்படும். மக்கள் கொள்ளக் கூடிய பல நம்பிக்கைகளுள் ஒன்றையே ஏற்கவும், பலவகைச் செயல்களை விடுத்து வேறு சில வகைகளில் செயற்படவும் அது அவர்களைத் தூண்டுகிறது. கருத்துப் பரப்புவர் தம்மை அல்லது தமது (தத்துவ, சமய, சமூக, அரசியல்) கருத்துக்களை அல்லது தம் வியாபாரச் சரக்குகளை அறிமுகப்படுத்துகிறார். தம் காரியம் கைகூடுவதற்காகக் கருத்தேற்றத்தைப் பயன்படுத்துகிறார். ஃடூப்' (Doob) கருத்துப் பரப்பலைப் பின்வருமாறு வரையறுக்கிறார். "அக்கறையுள்ள தனியாள் (அல்லது தனியாட்கள்) பிற ஆட்கள் அல்லது குழுக்களின் மனப்பான்மையைக் கருத்தேற்றத்தால் பாதித்து, இதன் விளைவாக அவர்கள் நடத்தையைக் கட்டுப்படுத்தும் முறையான முயற்சியே கருத்துப் பரப்பலாகும்."[1]

கருத்துப் பரப்புவதில் செய்தி அறிவிப்பு அடங்கியுள்ளது ஆனால் செய்தி அறிவிப்பது மட்டும் கருத்துப் பரப்பல் ஆகிவிடாது. ஒரு குறிப் பிட்ட நோக்கத்தோடு செய்தி அறிவிப்பது கருத்துப் பரப்பல் ஆகும். கருத்துப் பரப்புகிறவருடைய நோக்கத்திற் கேற்ப அவர் அளிக்கும் செய்தியின் தன்மையும் அளவும் அமையும். சில வேளைகளில் உண்மைச் செய்தி அறிவிக்

கப்படுகிறது. வேறு சில வேளைகளில் செய்தி திரித்துக் கூறப்படுகிறது. முழு உண்மையைக் கொடுக்காமலும் கருத்தைப் பரப்புவதுண்டு. உண்மைகளில் தமக்குச் சாதக மானவற்றைக் கருத்துப் பரப்புபவர் தேர்ந்து கூறுகிறார். இத்தகைய அரை உண்மை பொய்க்குச் சமமானது. மேலும், செய்தி கூறுவது கேட்போருக்காகவா அல்லது அறிவிப்பவருக்காகவா என்னும் கேள்வியும் உளது. கேட்பவருக்காகக் கொடுக்கப்படும் அறிவிப்பு ஒருவகைப் பொதுக் கல்வியாகும். சொல்பவர் நலனுக்காக அமையும் அறிவிப்புதான் இழிந்த பொருளில் பயிலும் கருத்துப் பரப்பல் ஆகும்.

கருத்துப் பரப்பல் வகைகள் :

விரிவாகப் பார்த்தால், அரசியற் பேச்சு, எழுத்து, சமய போதனை, விளம்பரம் முதலிய அனைத்தும், கல்வியுங்கூட, கருத்துப் பரப்பலுள் அடங்கும். பொதுவாக மக்கள் கல்வியையும் கருத்துப் பரப்பலையும் வேறுபடுத்துகிறார்கள். கல்வியை வரவேற்கிறார்கள், ஆனால் கருத்துப் பரப்பல் தீயதென்று எண்ணுகிறார்கள். பொதுவாக, கல்வியென்றால், அறிவு வளர்ச்சி, தற்சிந்தனை முன்னேற்றம், ஆராய்வு முறையென்று நாம் நினைப்பதே இதற்குக் காரணம். ஆனால் கருத்துப் பரப்பலில் தன்னலக்காரர் மக்களிடம் கருத்துப் புகுத்துகிறார்கள், மக்களை எழுச்சி வயப்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறோம். ஆனால் கோட்பாட்டு முறையில் பார்த்தால் கருத்துப் பரப்பலையும் கல்வியையும் வேறுபடுத்துவது அரிது. முதலாவதாக, இரண்டிலும்; பிறருடைய நம்பிக்கைகளையும், மனபான்மைகளையும் பாதிப்பது, தனியாட்களை ஒரு குறிப்பிட்ட நோக்கு நிலைக்கு மாற்றுவது, நிலைமை ஏற்படும்பொழுது குறிப்பிட்ட வகைகளில் மக்களைச் செயல் புரியத் தூண்டுவது, முதலியவையே நோக்கமாக உள்ளன. இரண்டாவதாக, கல்வியினின்று, கருத்துப் பரப்பலை முற்றிலும் நீக்குவது அரிது. கல்வியாளர்கள் தம் பண்பட்டிலுள்ள அப்போதைய விழுமியங்களை அல்லது தம் சமூகத்தில் வளர்க்க வேண்டிய விழுமியங்களை மாணவர் மனத்தில் விதைக்க முயலுகிறார்கள்.[2] அமெரிக்கப் பள்ளிகளில் மாணவரிடத்தில் தேசீய உணர்ச்சி, மக்களாட்சி நிறுவனங்களைப் பற்றிய நம்பிக்கை, பொதுவான அற விழுமியங்கள் முதலியவற்றையும், அத்துடன் போட்டி மனப்பான்மையையும் வளர்க்க முயலுகிறோம் என்று சொல்

லுகிறார்கள். இந்தியாவிலும் ஆசிரியர் எக்காலத்திலும் சில அடிப்படை விழுமியங்களைப் போற்றி வந்துள்ளனர். அதே வேளையில் காலத்திற்கேற்ப விழுமியங்களை ஓரளவு மாற்றியும் உள்ளனர். தானே சிந்தித்தல், தானே தீர்த்து முடிவு கட்டல், பிறர் நலம் கருதுதல், பிறர் கருத்துப் பொறுத்தல், பற்றற்றுத் தன் கடமையைச் செய்தல் முதலியவை பண்டைய இந்தியக் கல்வியின் குறிக்கோள்கள் ஆயின. இந்திய வரலாற்றின் சில காலங்களில் வீரத் தற்காப்பு முக்கிய இடம் பெற்றது. இக்காலத்தில் அகிம்சை, சமாதான உடனுறைவு, உயர்ந்த பொருளியல் வாழ்க்கை, அரசியல் வாழ்க்கையில் சமயச் சார்பறுத்தல் முதலிய குறிக்கோள்கள் இடம் பெற்று வருகின்றன.

கல்வியின் முறை கருத்துப் பரப்பல் முறையினின்றும் முற்றும் வேறுபட்டதில்லை. கருத்தேற்றம் கருத்துப் பரப்புவதின் மூல அடிப்படையாகிறது, கல்வியும் இம்முறையை முற்றும் விலக்குவதில்லை. ஆசிரியருடைய புகழ்வன்மை அவருடைய உறுதியான குரல், ஒரு கூற்றை மீண்டும் மீண்டும் வலியுறுத்தல், புத்தகம் விதித்தல் முதலியவற்றின் பயனுக, மாணவன் புத்தகமும், ஆசிருயரும் கூறுவதைக் கருத்தேற்கிறான். மாணவனுடைய நம்பிக்கைகளும் மனப்பான்மைகளும் இவ்வாறு உருவாக்கப்படுகின்றன. உளவியல் அறிவும் திட்டமான நம்பிக்கைகளும் உடைய ஆசிரியர் கருத்தேற்குமையைத் தெரிந்து பயன்படுத்துகிறார்.

ஆகையால் கருத்துப்பரப்பல் அனைத்தும் தீயதன்று கருத்துப் பரப்புகிறவர் முழு உண்மையையும் மக்கள் முன்நிறுத்தினால் அது பொது மக்களின் எண்ணத்தைப் பயிற்றுவிப்பதாகும். இதுபோலவே கல்வி என்ற பெயரில் நடப்பதெல்லாம் நல்லதென்று சொல்ல முடியாது. கல்வியை ஆள்பவர்கள் தங்கள் சொந்த நலனுக்காக அதைப் பயன்படுத்தக் கூடும். ஆகையால் கல்வியையும் கருத்துப் பரப்பலையும் பொதுவாக நாம் வேறுபடுத்துவது கோட்பாட்டு முறைக்கு ஒவ்வாதது.[3] ஓர் அரசியற் போக்கைப் பாராட்டுகிறவர்கள் அது பொது மக்களுக்குக் கல்வி புகட்டும் முயற்சி என்று சொல்வார்கள். அதை எதிர்ப்பவர்கள் அது வெறும் கருத்துப் பரப்பல் என்பார்கள். விளம்பரம் செய்பவர்கள் தாங்கள் பொருள் கொள்வோர்க்குச் சிறந்த வாழ்க்கை முறைகளைப் புகட்டுகிறதாகச் சொல்வார்கள். விளம்பரத்தை நம்பாதவர்கள் அது வெறும் வியாபாரப் பிரசாரம் என்பர்.

இற்றைக் காலத்தில் மக்களுடைய நம்பிக்கைகளையும், மனப்பான்மைகளையும், செயல்களையும் கட்டுப்படுத்துவதற்குக் கருத்துப் பரப்பல் பெரிதும் பயன்படுகிறது. தொழில்மயப்படுத்தலின் பயனாக உலகின் பல பாகங்களில் கிராமச் சமுதாய வாழ்க்கைப் படிவம் மறைந்து விட்டது; பிற பாகங்களிலும் அது மறைந்து வருகிறது; உற்பத்தி முறையங்கள் மாறிவிட்டன. கிராமத்தார் நகரங்களுக்குச் சென்றுள்ளனர். மரபு வழித் தொழில்கள் மறைந்துவிட்டன; புதுவகைத் திறமைகள் தேவைப்படுகின்றன; இத்திறன்களைப் பயிலவும் பயன்படுத்தவும் வசதியுள்ள இடங்களுக்கு மக்கள் செல்கின்றனர். கிம்பால் யங் கூறுகிறபடி நாம் ஒரு 'திரட்சமூகம்' (mass society) அல்லது பொது மக்கட் சமூகம் ஆகி வருகிறோம். ஆகையால் சமூக இயக்கம் அதிகமாகிறது. ஏற்கனவே அமைந்த நடத்தை நிலைகள் இன்மையால் உளவியல் நிலையின்மை (psychological instability) ஏற்படுகிறது. கிராமச் சமுதாயத்தில் நேரடித் தொடர்பால் ஏற்பட்டிருந்த உளவியல் வேலிகளும் தடைகளும் இவற்றால் வரும் உடனடிக் கட்டுப்பாடுகளும் இப்பொழுது செயல் புரிவதில்லை. நாட்டவர் வழிகளும் வழக்கங்களும் சீர்குலைந்து விட்டன. போக்குவரவுச் சாதனங்களின் பயனாகப் பன்முகக் கவர்ச்சிகள் தோன்றியுள்ளன. இக் கவர்ச்சிகளைக் கிராமச் சமுதாய வாழ்க்கைப் படிவத்தில் நிறைவித்துக் கொள்ள முடியாது. கருத்துப் பரப்பலின் மூலம் புதிய விழுமியங்களை வளர்க்கவும், புதிய கவர்ச்சிகளை உண்டாக்கவும், புதிய வாழ்க்கை வழிகளைக் கற்பிக்கவும் முடிகிறது. பழைய புற முறை சாராத, நேரடிக் கட்டுப்பாட்டிற்குப் பதிலாக, தொலைவிலிருந்து மக்களைக் கட்டுப்படுத்த வேண்டியதிருக்கிறது. பெரும் திரளான மக்களிடத்து நம்பிக்கை ஒருமையையும் ஒத்த மனப்பான்மையையும் வளர்க்க, கருத்துப் பரப்பல் உதவுகிறது. செய்தித் தாள், வானொலி, பேசும் படங்கள் முதலிய தொலைவுடம்படுப்புச் சாதனங்களின் துணை கொண்டு இடத்தால் பிரிந்துள்ள மக்களுடைய நம்பிக்கையையும் நடத்தையையும் கட்டுப்படுத்த முடிகிறது. கிராமச் சமுதாயத்தில் பெரும்பாலவரின் உடனடிப் பாராட்டு, மூத்தோரின் புகழ் வன்மை முதலியவை சமூகத்தைக் கட்டுப்படுத்துகின்றன. திரட்சமூகத்தில், அல்லது பொது மக்கட் சமூகத்தில் இவை பயன்படுவதில்லை. இங்கு பொதுமக்கட் குழுக்கள், எண்ணங்கள், மனப்பான்மைகள், செயல்கள் – அனைத்திலும் வேறுபாடு உண்டு. ஆகையால் பேச்சு, திரள் கூட்டங்கள், ஊர்வலம், கண்காட்சி முதலிய

தொலைவுடம்படுப்பு முறைகளையே பயன்படுத்த வேண்டியதிருக்கிறது.

கருத்துப்பரப்பல் கால மாறுதலால் ஏற்பட்டதென்பது விளம்பர நிகழ் முறையைப் பார்த்தாலும் தெரிய வரும். முதலாளிச் சமூகம் தோன்றியுள்ளதால் பொருள் கொள்வோரின் பழக்கங்களை மாற்றும் முயற்சி நடைபெறுகிறது. பழைய மரபுவழிச் சமூகத்தில், தனியாளுடைய விருப்பங்கள் குறிப்பிட்ட வரம்பிற்குள் அமைந்தவை. மேலும் இவ்விருப்பங்களை நிறைவிப்பதற்கு வீட்டுப் பொருளாதாரம் அல்லது ஊர்ப் பொருளாதாரமே போதும். ஆனால் தொழில் மயப் பொருளாதாரம் வந்தபின் பொருள் கொள்ளும் பழக்கங்கள் மாறியுள்ளன; விருப்பங்கள் பல்கியுள்ளன; தொழிலில் போட்டி ஏற்படுகிறது; தொழிலதிபர் விளம்பரம் மூலம் புதிய வேட்கைகளைத் தூண்ட முயலுகிறார்கள். பெரிய தொழில் நிறுவனங்கள் தேவைப் பொருளைத் தரப்படுத்தித் தம் வருமானத்தைப் பெருக்க முயற்சி செய்கிறார்கள். இவ்வாறு விளம்பரத் திறமைகள் தோன்றியுள்ளன.

கருத்துப் பரப்பும் நுண்முறைகள்:

கருத்துப் பரப்புபவர் பல நுண்முறைகளைக் கையாளுகிறார். இவை அறிதுயிற்றுநரின் (hypnotist) நுண்முறையை ஒத்தவை. மீக்கருத்தேற்குமையை (hyper-suggestibility) இவை அடிப்படையாகக் கொண்டவை. மக்களின் நெஞ்சைக் கவர்ந்தால், அறிவு எளிதாக நம் வயப்படும்; ஏதேனும் ஓர் எழுச்சியைத் தூண்டிவிட்டால் தீர்ப்புத் திறன் குறையும்; இத்தகைய கொள்கைகளைக் கையாண்டு தாம் கொடுப்பவற்றை மக்கள் திறனாயாமல் ஏற்கும் நிலையை அவர் ஏற்படுத்த முயலுகிறார்.

கருத்தேற்றத்தைப் பற்றிய புதிய புற ஆய்வுகளிலிருந்து நாம் சில உண்மைகளை அறிகிறோம். ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் அல்லது நம்ப வேண்டும் என்னும்தேவை மக்கள் மனத்தில் மேலோங்கி நிற்கும்போது, அவர்களுடைய கவனம் குறுகிய எல்லையில் மையப்படும்போது, போட்டியிடும் எண்ணங்கள் மனத்தினின்று அகற்றப்படும் போது, அவர்களுடைய பணிவுணர்ச்சி கிளரப்படும்போது, மக்கள் மீக்கருத்தேற்குமை உடையவர்களாகிறார்கள். இந்நிலையில் அவர்களுடைய திறனாய்வுச் சிந்தனை தடைப்படுகி

றது. அவர்கள் சில வழிகளை விடுத்து வேறு சில வழிகளில் செயல்புரியத் தூண்டப்படுகிறார்கள்.

கருத்துப்பரப்பல் ஒருவகையாகப் பார்த்தால் திரள்-அறிதுயிலாகும் (mass hypnotism). ஆகையால் அறிதுயிற்றுநரின் நுண்முறையை அறிவது, இம்முறையையும் புரிந்து கொள்ளத் துணை புரியும்.

முதலாவதாக, அறிதுயிற்றுநருக்குப் **புகழ்வன்மை** உளது. இது ஆட்படுநர் மனத்தில் **பணிவு மனப்பான்மையை** ஏற்படுத்துகிறது. அறிதுயிற்றுநரின் மேலங்கி, இப்புகழ்வன்மையை மிகுத்துக் காட்டுகிறது. ஆட்படுநரின் **கவன எல்லையைக் குறுக்குவதற்காக** அவர் ஓர் அமைதியான அறையில் அமர்த்தப்படுகிறார். அறிதுயிற்றுநர் அவரை நோக்கி 'உமக்கு உறக்கம் வருகிறது' என்பது போன்ற ஒரு தொடரைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். இத்தகைய **மீள்பயில்வும்** கவன எல்லையைக் குறைக்கிறது. ஆட்படுநர் ஒரு நிலைத்த புள்ளியையே பார்த்துக் கொண்டிருக்கிறார். பிறவற்றை நினைப்பதற்கு அவருக்கு வாய்ப்பும் நேரமும் கொடுக்கப்படுவதில்லை. இவ்வாறு, ஒப்புமையான **பிரிவுநிலை** (dissociation) ஏற்படுகிறது. அறிதுயிற்றுநரின் கருத்தீடு ஆட்படுநரின் நனவை ஆளுகிறது. வேறு போட்டி எண்ணங்கள் இடம் பெறுவதில்லை. மூளையின் புலனுணர்ச்சிப் பகுதியும் செய்கைப் பகுதியும் மையத் தூண்டலால் கிளர்கின்றன. ஆகையால் ஆட்படுநர் இல்பொருள் காண்கிறார் (hallucinates), அறிதுயிற்றுநரின் கருத்தீடுகளை ஏற்று அவற்றிற் கேற்ப நடக்கிறார்.

அரசியல், சமயம், வணிகம் முதலிய துறைகளிலும் கருத்துப் பரப்புநர் மக்களுடைய மனத்தைத் தம் வயப்படுத்தித் தம் எண்ணங்களை அவர்களிடத்துத் தூண்ட விரும்புகின்றனர். அரசியற் கருத்துப் பரப்புநர் மக்கள் தம் திட்டத்தையும், குறிக்கோளையும் நயக்க வேண்டும் என்று விரும்புகிறார். சமயப் பரப்புநரும் இவ்வாறே விழைகின்றார். வணிகப் பரப்புநர் (விளம்பரம் செய்வோர்) தம் பொருளே உயர்ந்தது, சிக்கனமானது, ஏற்றம் தருவது என்று மக்கள் எண்ண வேண்டும், பிற பொருட்கள் தாழ்ந்தன என்று நினைக்க வேண்டும் என்று விரும்புகிறார். அவர் பிற பொருட்களை வெளிப்படையாகத் தூற்ற முடியாது. ஆனால் மறைமுகமான வழியில் பிறவற்றைப் பழிக்கிறார். நாடக ஆசிரி

யரின் முறையைக் கையாளுகிறார். கருத்துப் பரப்புநர் தம் உற்பத்திப் பொருளை (அல்லது நம்பிக்கைப் பொருளை) நாடகத் தலைவனுகவும், பிற பொருட்களை வில்லனுகவும் வரைந்து காட்டுகிறார்.[1] எடுத்துக்காட்டாக, தாம் அளிப்பவற்றை விடுத்துப் பிற பொருட்களை நாடுவது மக்களின் விழுமியங்களை—காப்பு, உணவு, செல்வம், உடல்நலம், அழகு, ஏற்றம் முதலியவற்றை—எய்தப் பயன்படா என்று கூறி, அவர்கள் மனத்தை மாற்ற முயல்கிறார். சமய எழுச்சி வல்லார் நரக அச்சத்தை ஊட்டிக் கேட்போர் மனத்தைத் திருப்புகிறார். இப்படியே வணிகப் பரப்பாளரும் 'இத்தனை பேர் எம் சரக்கைப் பயன்படுத்தி நன்மை பெற்றுள்ளார்கள், நீங்களும் அப்படியே செய்யுங்கள்' என்கிறார்.

கருத்துப் பரப்புநரின் முறைகள் பல. அவர் ஒன்றைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார். புகழ்வன்மையைப் பயன்படுத்துகிறார். மக்களுடைய பல ஊக்கிகளைத் தூண்டுகிறார்.

மீள் பயில்வு (Repetition)

அறிதுயிற்றுநரைப் போலவே கருத்துப் பரப்புநரும் தம் கூற்றுக்களைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார். கேட்போரின் கவனத்தை ஓர் எண்ணத்தை நோக்கி மையப்படுத்துகிறார். ஒரு கூற்றினை இருபது தடவை சொன்னுல் அது உண்மையாகி விடுகிறதென்று அவருக்குத் தெரியும். அரசியற் பரப்பாளர் தம் கருத்தைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்; பிரசார உற்சாகமுள்ள ஆசிரியர் தம் எண்ணங்களை மாணவர் மனத்திலே இடித்துப் புகுத்துகிறார்; விளம்பரம் செய்பவரும் இப்படியே செய்கிறார்.

புகழ்வன்மைக் கருத்தேற்றம்: ஆனுல் திரும்பத் திரும்பச் சொல்வதுமட்டும் போதாது. ஆகையால் புகழ்வன்மையையும் சேர்த்துப் பயன்படுத்த வேண்டியதிருக்கிறது. கருத்துப் பரப்புநர் மக்கள் மனத்தைக் கவர்ந்துள்ள தலைவர்களின் பெயரைப் பயன்படுத்துகிறார். காந்தியடிகளின் பெயரை அரசியல் தலைவரும், சமூகச் சீர்திருத்தக்காரரும், விளம்பரக் காரரும்கூட பயன்படுத்துகிறார்கள்: திரைப்படத் தொடக்க; விழாவிற்கு முதன்மந்திரிகளை அழைத்துத் தலைமை தாங்கச் சொல்கிறார்கள்; சினிமா நடிகரின் பெயரை இணைத்து, வாசனை எண்ணெய், சோப்பு, பற்பசை முதலியவற்றை விளம்பரப்படுத்துகிறார்கள்; 'பூவொடு சேர்ந்த நாரும் மணம் பெறும்' என்னும் கருத்தைப் பயன்படுத்துகிறார்கள்;

பெரியவர்களுடைய நற்சான்றை (testimonial) எடுத்துக் கூறுகிறார்கள்; முரசறை முறையையும் (bandwagon device) கையாளுகிறார்கள்; தொகைப் புகழ்வன்மையையும் (prestige of numbers) பயன்படுத்துகிறார்கள்; எல்லோரும் இதைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லி, ஊரொடு ஒத்து வாழும் மனப்பான்மையைக் கிளர்கிறார்கள். அரசியல் கிளர்ச்சிக்காரர் பலரிடமிருந்து கையெழுத்துப் பெறுகிறார்; ஊர்வலம் நடத்திச் செல்லுகிறார்; வெவ்வேறு ஊர்களில் தீர்மானம் நிறைவேற்றுகிறார். சமயப் பரப்பாளர் ஏற்கனவே மனம் மாறியவர்களின் தொகையை எடுத்துக் கூறி பிறரையும் தூண்டுகிறார். திரைப்படத் தயாரிப்பாளர், தம் படம் ஐம்பத்திரண்டாவது வாரமாக ஓடுகிறது, தியேட்டரில் இடம் இல்லை என்று சொல்கிறார். 'இலட்சக்கணக்கான அழகிய பெண்கள் இந்த முகப்பசையைப் பயன்படுத்துகிறார்கள்' என்ற தொடர்களை நாம் நாள்தோறும் வானொலியில் கேட்கலாம்.

ஊக்கிகளைத் தூண்டல்.

ஒரு கருத்தை அல்லது சரக்கைப் பரப்ப வேண்டிய சமூகத்தில் மேலோங்கி நிற்கும் மனப்பான்மைகள் அல்லது ஊக்கிக்களைக் கருத்துப் பரப்புநர் பயன்படுத்துகிறார். பற்பசை விளம்பரத்தில் சொத்தைப் பற்களின் துர்நாற்றத்தை எடுத்துக்காட்டி, அதற்கு மாறுக ஓர் இளம் பெண்ணின் 'மக்லீனுல் சுத்தம் பண்ணப்பட்ட முல்லைப் பற்களையும்' சித்திரிக்கிறார்கள். எல்லா விளம்பரங்களிலும் ஏதேனும் ஓர் ஊக்கம் கிளரப்படும்; பின் கருத்தீடு தொடரும். துணி உற்பத்தியாளர்கள் ஆளுமை ஊக்கியைப் பயன்படுத்துகிறார்கள். 'ஆடை ஆளை ஆக்குகிறது, நாங்கள் ஆடையை உண்டாக்குகிறோம்' என்று சொல்கிறார்கள். முகப்பசை விளம்பரத்தில் 'உங்கள் முகத்தையும் அழகாக வைத்துக் கொள்ள முடியும்' என்று சொல்லி போட்டியையும், பாலூட்டத்தையும் தூண்டுகிறார்கள்.

கருத்துப் பரப்புநர் தம் தூண்டல்களை மிக எளியனவாக அமைக்க முயலுகிறார். செய்தித்தாள் விளம்பரங்களில் படங்கள், கேலிச் சித்திரங்கள், குறியீடுகள் முதலியவற்றைப் பயன்படுத்துகிறார். வானொலி விளம்பரத்தில் நோயின் அறிகுறிகள் கூறப்படுகின்றன. வானொலியில் ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்கிறது, அதற்கு விளக்

கெண்ணெய் தேவைப்படுகிறது. ஒரு ஆஸ்துமா நோயாளி இருமுகிறார், அவருக்கு 'மெண்டேக்கோ' கொடுக்க வேண்டும். அரசியற் கருத்துப் பரப்பலில் செருக்கு, வெறுப்பு, காப்புணர்ச்சி முதலியவற்றைத் தூண்டி விடு கிறார்கள்.

கருத்துப் பரப்பலுக்குட்படும் மக்கள் மனத்தில் போட்டி யிடும் பிற எண்ணங்களும் மனப்பான்மைகளும் இடம் பெறக் கூடாது. ஆகையால் அரசு இயற்றும் கருத்துப் பரப் பலில் செய்தித் தணிக்கையும் இடம் பெறுகிறது. சமயப் பரப்பாளர் ஊரில் பெரியவர்களுக்குப் பட்டம் அளிக்கிறார் கள். வியாபார விளம்பரத்தார் இலஞ்சம் கூடக் கொடுப்ப துண்டு.

போட்டியாளரின் கருத்துக்களையும், கூற்றுக்களையும், சரக்குகளையும் திறமையாகத் திரித்துக் கூறுவது மற்றொரு பிரசார முறையாகும். கருத்துப் பரப்பாளர் எழுச்சி சார்ந்த சொற்களைப் பயன்படுத்தி நுட்பமான கருத்தீடுகளை எடுத் தெறிகின்றனர். இதன் மூலம் தம் கருத்துக்குச் சாதகமான எண்ணம் உண்டாவதோடு எதிர்க் கருத்துக்களுக்குப் பாதக மான உணர்ச்சிகளும் எழுகின்றன. எங்கள் சோப்பு, விலங்குக் கொழுப்பு கலவாதது' என்று சொல்வது, பண்டம் கொள்ளுநருள் வைதீக இந்துக்கள் மனத்தைக் கவர்வ துடன், பிற சோப்புக்களில் விலங்குக் கொழுப்பு இருக்கக் கூடும் என்ற கருத்தையும் தூவுகிறது. 'நாகபுரிக் காங் கிரஸில் விதைத்த பயிர் சிவப்பு அரிவாட்களால் அறுவடை செய்யப்படும், என்னும் கூற்றும் எழுச்சி ஊட்டிய மொழி யாகும். கேட்போரைத் தம் எதிரிகளுக்கெதிராகத் திருப்பும் மற்றொரு முறையும் உண்டு. இது 'பெயர் சூட்டு முறை' (name calling device) எனப்படும். கம்யூனிஸ்டுகளை 'மாஸ்கோவின் கையாட்கள்' என்றும், திராவிடக் கழகத்த வரைக் 'கறுப்புச் சட்டைகள்' என்றும் காங்கிரஸ்காரரை 'வெள்ளைக் குல்லாக்காரர்' என்றும் 'முரட்டுச் சட்டையர்' என்றும், 'பிர்லாவின் கையாட்கள்' என்றும் சொல்லுவது முதலியவை இதற்கு எடுத்துக் காட்டுகள் ஆவன.

கட்சிக் கூப்பாடு : (slogans)

கருத்துப் பரப்புநர் கட்சிக் கூப்பாடுகளையும் பயன் படுத்துகிறார். இக்கூப்பாடுகள் சுருக்கமானவை ; காலத் துக்கும், நிலைமைக்கும் பொருத்தமானவை ; எளிதாகக்

கவனத்தை ஈர்ப்பவை ; எளிதாக நினைவிற்கொண்டு திருப்பிச் சொல்லக் கூடியவை ; மனவெழுச்சி ஊட்டியவை ; மக்களுடைய உடனடித் தேவைகளுக்குத் தொடர்புள்ளவை. இக்கூப்பாடுகளைக் 'கருத்துப் பரப்பற் குப்பிகள் (capsules of propaganda) என்று விவரித்தது பொருத்தமாகும். 'V for victory' 'வெள்ளையனே வெளியேறு' முதலிய பல போர்க்குரல்களை நாம் கேட்டதுண்டு.

பொதுமக்களும், பொதுமக்கள் எண்ணமும் :—

'பொதுமக்கள்' 'பொதுமக்கள் எண்ணம்' (public opinion) என்ற தொடர்கள் இன்று மிகச் சாதாரணமாகி விட்டன. பொதுமக்கள் தம் புத்தகத்தைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று எழுத்தாளர் தெரிந்து கொள்ள விரும்புகிறார். நாடக ஆசிரியர் பொதுமக்களின் வரவேற்பை விழைகின்றார். விளம்பரக்காரர் பொதுமக்கள் மனத்தைக் கவர முயலுகிறார். அரசாங்கத்தார் 'பொது நலத்தை' முன்னிட்டு அலுவலரை மாற்றுகிறார்கள். பதிப்பாசிரியரும், அரசியல் வாதிகளும் பொதுமக்களுக்கு அறிவு புகட்ட, அவர்களுக்காகப் பேச விரும்புகின்றனர்.

ஆனால் 'பொதுமக்கள்' என்றால் என்ன ? யார் பொதுமக்கள் ஆவர் ? இம்மக்கள் ஒருவருக்கொருவர் எத்தகைய தொடர்பு கொண்டுள்ளனர் ? பொதுமக்கள் எண்ணம் என்றால் என்ன ?

'பொதுமக்கள்' என்பது ஒரு குறிப்பான உளவியற் குழுவாகும். பொதுமக்கட்குழு மிகப் பெரியதாகும். அதன் உறுப்பினர் எல்லோரும் ஓர் இடத்தில் இருப்பதில்லை. ஆகையால் அவர்களுக்குள் நேரடியான இடைத் தொடர்பு கிடையாது. ஆனாலும் மொத்தமாகப் பார்த்தால் அவர்களுடைய நடத்தையும், எண்ணங்களும், மனப்பான்மைகளும் வன்மையுள்ளவையாகின்றன. விளம்பரக்காரர், பதிப்பாசிரியர், நூலாசிரியர் (authors) அரசியற்காரர் ஆகியோர் பல வாயில்கள் மூலம் பொதுமக்களை அணுகுகிறார்கள். இம்மக்கள் நாட்டின் பல பகுதிகளிலும், உலகின் பல பாகங்களிலும் கூட சிதறிக் கிடக்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய எதிர்வினையை விளம்பரக்காரரும் அரசியல் வாதிகளும் எதிர்பார்த்து நிற்கிறார்கள். பொதுமக்கள் ஒரே நிலப் பரப்பில் இருக்க வேண்டியதுமில்லை ; ஒருவரையொருவர்

தெரிந்து கொண்டிருக்க வேண்டியதுமில்லை. அவர்கள் ஒரு நெருங்கிய, பின்னிய குழு அல்லர்; அவர்கள் ஒரு வடிவ மற்ற (amorphous) குழு ஆவர்.

மேலே வரையறுத்த முறையில், 'பொது மக்கள்' இற்றைய நிகழ் முறையாவர். புத்தகம், செய்தித்தாள், திரைப்படம், வானொலி முதலிய இற்றையத் தொலைவுடம்படுப்புச் சாதனங்களைக் கொண்டு எண்ணங்களையும், மனப்பான்மைகளையும் பரப்ப முடிகிறது. தலைவர்கள் தொலைவில் இருந்து கொண்டே மக்களுடைய மனப்பான்மையையும் செயலையும் பாதிக்க முடியும். இடத்தால் பிரிந்துள்ள அல்லது பரவியுள்ள ஏராளமான மக்களை இத்தொலைவுத் தொடர்புச் சாதனங்கள் மூலம் ஒரே குழுவாக ஆக்க முடியும்.

பொதுமக்கட் குழு, கிராமச் சமுதாயம் போன்ற முதனிலைக் குழுக்களினின்றும் வேறுபட்டது. சமுதாய உறுப்பினர் அனைவரும் ஒரே நிலப் பரப்பில் வாழ்கிறார்கள்; பொது அக்கறைகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள்; நெருங்கிய தொடர்பு கொள்கிறார்கள்; இதன் விளைவாக ஏறக்குறைய ஒத்த மனப்பான்மையுள்ளவர்களாகிறார்கள். ஆனால் பொது மக்கள் ஒன்றுக வாழத் தேவையில்லை. ஒன்றுக வாழும் இருவர் வெவ்வேறு பொதுமக்கள் தொகுதியில் உறுப்பினராக இருக்கக்கூடும். எடுத்துக்காட்டாக கணவன் அரசியலில் கவர்ச்சி உடைமையால் அரசியற் பொதுமக்கட் குழுவில் இடம் பெறலாம். ஆனால் மனைவி இசைக் கவர்ச்சி உடைமையால் வானொலிப் பொதுமக்கட் குழுவினளாகலாம்.

பொதுமக்கட் குழுவானது கேட்போர் அவையின்றும் (audience) வேறுபட்டது. கேட்போர் அவையின் உறுப்பினர் தீர்மானிக்கப்பட்டவர் (determinate). கேட்போர் ஒரு பேரறையில் அல்லது தியேட்டரில் அல்லது வகுப்பறையில் கூடியுள்ளனர். அவர்களை எண்ணிவிட முடியும். அவர்கள் பூத முறையில் ஒன்றுக இருக்கிறார்கள். மேலும் அவர்கள் பேசுபவரோடு அல்லது நடிப்பவரோடு நேரடியான உடனடித் தொடர்பு கொண்டுள்ளனர். பேசுகிறவர் அவையின் உறுப்பினருக்குள்ளே இடைத்தூண்டலை உண்டாக்க முடியும். ஒரு விகடத் துணுக்கைக் கேட்டு நகைக்கும்பொழுதும், பாராட்டைத் தெரிவிக்கக் கைதட்டும் பொழுதும்அவையோர்ஒருவரையொருவர் தூண்டிக்கொள்கிறார்கள்.

அவையை ஆள விரும்புபவர், அவையோரின் எதிர் வினையைப் பற்றி உணர்ச்சியுள்ளவராக இருக்க வேண்டும். அதற்கேற்பத் தம்பேச்சையும் சைகைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். ஆனால் வானொலியில் பேசுபவர் அல்லது புத்தகம் எழுதியவர் எத்தனை பேருக்குத் தம் செய்தி செல்லுகிறதென்றும், அவர்கள் யாரென்றும் தெரிந்து கொள்ள முடியாது. ஆகையால் அவர் பொதுமக்களுடைய எதிர்வினைக்கேற்பத் தம் செய்தியை மாற்றியமைத்துக் கொள்ள முடியாது. புத்தகத்தை மக்கள் வாங்கிப் படிக் கிறார்களா என்று தெரிந்து கொண்ட பின்னரே அவர் தம் நடையை அல்லது தரத்தை மாற்றிக் கொள்ள முடியும். அப்படியே ஓர் அரசியல்வாதி, மக்கள் தம் வானொலிப் பேச்சைக் கேட்டு வெகுண்டு கலகம் செய்து விட்டார்கள் என்று தெரிந்து கொண்ட பின்னரே தம் பேச்சை மென் மைப்படுத்திக் கொள்ளக்கூடும். இவ்வாறு தலைவரும், பொதுமக்களும் இடத்தாற் பிரிந்திருப்பதால் பொதுமக்க ளுக்குத் தலைமை வகிப்பது சற்று அரிதான காரியம். எழுத் தாளரும், வானொலிப் பேச்சாளரும், விளம்பரக்காரரும் தம் பொதுமக்களை முற்றிலும் பிணித்து வைத்திருக்க முடியாது.

மேலே, 'தம் பொது மக்களை' என்றது ஏனெனின், சமூகத்தில் பல பொதுமக்கட் குழுக்கள் உள்ளன. மக்க ளுக்கு வெவ்வேறு அக்கறைகள் உள்ளன. இந்த அக் கறைகளுக்கேற்பப் பொதுமக்கட் குழுக்களும் உண்டாகின் றன. புத்தகம் படிக்கும் பொதுமக்கள், அரசியற் பொது மக்கள், பண்டம் கொள்வோர்ப் பொதுமக்கள் என்று அவர் களைப் பல வகையாகக் காணலாம். அக்கறைகள் மிகத் திட்டவட்டமாக அமைந்தால் பெரிய பொதுமக்கட் குழுக் களுக்குள் சிறிய குழுக்களையும் காணலாம். பல அக்கறை கள் உள்ள ஒரே ஆள் ஒரே நேரத்தில் பல பொதுமக்கட் குழுக்களில் உறுப்பினராக இருக்கக்கூடும். ஆகையால் ஒவ்வொரு குழுவிலும் அவர் தமது ஆளுமையின் ஒரு பகுதியையே செலுத்துகிறார். ஆகையால் பொதுமக்கட் குழு ஒரு சற்று அடங்கற் (partially inclusive) குழு வாகும்.

பொதுமக்கட் குழுக்கள் நிலையற்றவை. மக்கள் ஒரு பொருளில் அல்லது ஒரு சமூக அல்லது சமயப் பிரச்சினை யில் அக்கறை கொண்டால் அதைச் சுற்றி ஒரு பொது மக்கட் குழு அமைகிறது. அந்த அக்கறை உள்ளமட்டும்

அல்லது அப்பிரச்சினை தீரும்வரை தான் அக்குழு நிலைக்கிறது. அப்பிரச்சினை மக்களைத் சிந்திக்கத் தூண்டுகிறது; மாறுபட்ட கருத்துக்களைத் தூண்டுகிறது. உரையாடலைக் கிளருகிறது. இந்திய அயல்நாட்டுக் கொள்கை, காஷ்மீர்ப் பிரச்சினை, கோவா இயக்கம், ராஜ்யங்களின் எல்லையைத் திருத்தியமைத்தல், அரிசனங்கள் கோவிலுக்குள் நுழைதல், இந்துப் பெண்களுக்குத் திருமண முறிப்பு உரிமை, பெண்ணுக்குத் தந்தையின் சொத்துரிமை, தூக்குத் தண்டனை முதலியன இத்தகைய பிரச்சினைகளாவன.

பொதுமக்கள் எண்ணம்: (Public opinion) இத்தொடர் 18-ம் நூற்றாண்டில் தோன்றியது. மக்களாட்சிக் காலத்தில் தலைவர்கள், பொதுமக்கள் விருப்பத்தையும், எண்ணத்தையும் அறிந்து நடக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. பொதுமக்கள் என்று சொல்வதால், பொதுமக்கள் எல்லோரும் ஒரே எண்ணம் கொண்டவர்கள் என்று பொருளல்ல. ஒரே பொருளைப் பற்றிப் பொதுமக்களுள் வெவ்வேறு சாரார், வேறுபட்ட கருத்துள்ளவர்கள் என்பது ஆராய்ச்சிகளிலிருந்து தெரிய வருகிறது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றி மக்கள் கூறும் எண்ணத் திரளையே 'பொதுமக்கள் எண்ணம்' என்கிறோம். 'எண்ணம்' என்பது ஆராய்ந்து செய்த முடிவன்று. ஸ்ப்ராட் (W. J. H. Sprott) கூறுகிறபடி பொதுமக்கள் எண்ணம் என்பது நனவொடு கூடிய ஓர் எண்ணம், பிரச்சினையைப் பற்றிப் பொதுமக்கள் மனம் தொடரும் ஒரு வழியாகும். அது பொதுவாக எழுச்சி கலந்ததாகும். நம்பிக்கைகள், ஒத்துக் கொண்ட கொள்கைகள், பற்றுக்கள், நன்கு வேரூன்றிய முற்சார்புகளெல்லாம் அதனுள் அடங்கும். பொதுமக்கள் சிந்தனையில் கருத்துக்களுக்குத் தெய்வத்தன்மை அளித்தல், எழுச்சித் திறம், ஆளுருப்படுத்தல், ஏதீடுகள் மற்றும் பல நனவிலிச் செயல் முறைகளைக் காணலாம். மேலும் பொதுமக்கள் எண்ணம் நெடுங்காலம் நிலைத்து நிற்பதில்லை. நம் நாட்டிலும் இம்மாறுதலைக் காணலாம். இந்துச் சட்டச் சீராதிருத்தம் இந்தியப் பாராளுமன்றத்தில் முதலில் விவாதத்திற்கு வந்தபோது வைதிக இந்துப் பொதுமக்கள் அதை எதிர்த்தனர். இது, முஸ்லிம் சட்டத்தை பார்த்து இந்துச் சட்டத்தை மாற்றியமைப்பதாகும் என்று சொன்னர்கள். ஆனால் ஒருதார மணத்தை முஸ்லீம்களும் பின்பற்ற வேண்டும் என்றும் சொன்னர்கள். இம்முரண்பாட்டைப் பண்டித குன்ஸ்ரு எடுத்துக் காட்டினர். இதிலி

ருந்து பொது எண்ணம் பெரும்பாலும் ஆய்வுப்புறக் (non-rational) கூறுகளால் ஏற்படுகிறதென்பது விளங்கும். சமூகத்தின் அப்போதைய நிலையை அப்படியே மாறுமல் வைத்திருக்க வேண்டுமென்பது அவற்றுள் ஒன்று. 1956-இல் நம் நாட்டின் ராஜ்ய எல்லைகளை மாற்றியமைத்தபோது இத் தகையதொரு மன நிலையைக் கண்டோம். பொது எண்ணத் தில் தெளிந்த சிந்தனையும் ஒவ்வுமையும் (consistency) இல்லை என்பது தெரிந்தது. இருமொழி ராஜ்யங்களை எதிர்த்து வந்தவர்கள் பலர் தம் நிலையை மாற்றிக் கொண்டு மும் மொழி ராஜ்யங்களைக் கூட ஆதரிக்கலானார்கள். ஆகை யால் பொதுமக்கள் எண்ணத்தைச் 'சமூகத்தின் மனச் சான்று' என்று கூறி உயர்த்துவது பொருந்தாது.

பொது எண்ணம் அமைதல் ஒரு சிக்கலான செயன் முறையாகும். சமுதாயத்திலும், தேசத்திலும், உலகத்திலும் அது வெவ்வேறு விதமாக அமைகிறது. முதலாவதாக, சமுதாயத்தில் பொதுமக்கள் எண்ணம் அமைவதைப் பார்க் கலாம். சமுதாயத்தில் பல மனங்கள் பொதுவாகச் செயல் புரிகின்றன. ஏனென்றால் சமுதாய உறுப்பினருக்கிடையே நேரடியான முகம்புகு தொடர்பு உண்டு. ஆகையால் தேசம் முதலிய பெரிய தொகுதிகளை விட, கிராமச் சமுதா யத்தில் பொதுமக்கள் எண்ணம் திட்டவட்டமானது, நிலைத்து நிற்பது. இத்தகைய நிலைத்த மனப்பான்மைகளும் பற்றுக்களும் உறுப்பினருடைய அன்றாட அனுபவத்தால் ஏற்படுபவை. பொது அக்கறையுள்ள நிகழ்ச்சிகள் ஏற்படும்போது சொந்த அனுபவத்தால் மக்கள் பெறும் எண்ணங்களும், சொந்த மனப்பான்மை களும் ஒன்றுகத் திரண்டு அமைவுறுகின்றன. ஒரு பிரா மணக் கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளல், அரிச னங்கள் கோயிலுக்குள் நுழைதல், கிராமத்து இந்து ஒருவர் தமது கிறிஸ்தவ முஸ்லிம் நண்பருக்கு வீட்டில் விருந் தூட்டல், அல்லது தொத்துநோய் போன்ற பொதுத் துன்பம் முதலியன சமுதாயம் பொது அக்கறை கொள்ளும் நிகழ்ச்சிகள் ஆவன. இத்தகைய நிலைமைகளில், கிராமச் சமுதாயத்திலுள்ள சிறுபான்மையர், பெரும்பான்மையரின் நடத்தையை, அல்லது புகழ்வன்மையுள்ள பெரியோரின் நடத்தையைப் பின்பற்ற வேண்டியதிருக்கிறது. பெரி யோரின் புகழ்வன்மையும், பெரும்பான்மையோரின் நல் லெண்ணமும் அவர்களுக்கு விழுமியங்களாகின்றன. சில வேளைகளில் தன்னலமுள்ள சிலர் தங்கள் எண்ணங்களைப்

புகழ்வன்மைப் பெரியார்பால் சார்த்தி, பெரும்பான்மை யோர் அதை ஏற்கும்படிச் செய்து விடுகின்றனர்; அல்லது இப்பெரியோரின் ஊன்றிய அக்கறைகளுக்கு (vested interests) இவ் எண்ணங்கள் பயன்படுபவை என்று அவர் களே நம்பச் செய்கின்றனர். இவ்வாறு ஊன்றிய அக்கறை யுள்ள சிறுபான்மையோராலும் பொதுமக்கள் எண்ணத்தை உண்டாக்கி விடமுடிகிறது. மேலும் குரல் வலுத்த (vocal) சிறுபான்மையினர் தாம் சமுதாயம் முழுமைக்காகவும் பேசு கிறதாகவும், சிந்திக்கிறதாகவும் காட்டிக் கொள்வதுண்டு. மக்கள் எங்குச் சென்றாலும், அஞ்சலகத்திலும், ஆற்றங் கரையிலும், மளிகைக் கடைகளிலும், மரத்தடியிலும், இக்குரல் வல்ல சிறுபான்மையினர் எண்ணத்தைக் கேட்ப தால் இவ் எண்ணங்கள் பொதுவானவை என்று எண்ணு கிறார்கள்.

இற்றையச் சமூகம் ஒரு திரட்சமூகமாகும். இங்கு பொது மக்கள் எண்ணம் செவி சாய்ப்பாலும் (hearsay) கருத்துப் பரப்பலாலும் அமைகின்றது. சிந்தனையைவிட கருத்தேற்றமே இவற்றில் முக்கிய இடம் பெறுகிறது. பொது மக்கள் எண்ணம் அறிவறிந்து ஆய்ந்து முடிவு செய்ததாக அமையவேண்டுமானால் கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏற்பட வேண்டும். மக்கள் ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய ஆற்றல் உள்ளவர்களாக வேண்டும்; அதற்குரிய தகவல் கள் உடையவராக இருக்கவேண்டும்; ஓரச்சார்பும் காய் தல் உவத்தலுமின்றி, பொருளைப் பற்றி உரையாடும் பண்பு அவர்களிடம் அமையவேண்டும்; அவர்கள் கற்றவர்களாக இருக்க வேண்டும்; அவர்களுடைய மனப் பான்மைகளையும் எண்ணங்களையும் கட்டுப்படுத்த தவருன கருத்துப் பரப்பல் முறைகள் நடைபெறக் கூடாது.

மற்றொரு காரியத்தையும் நாம் மனத்திற் கொள்ளவேண் டும். பொது மக்கள் எண்ணம் என்பது உண்மையாகவே பொது மக்களிடம் அமைந்திருக்க வேண்டும். ஆனால் எப் பொழுதும் இவ்வாறு அமைவதில்லை. நாம் பொது மக்கள் எண்ணம் என்று சொல்வது பெரும்பாலும் ஒரு சிறிய, ஆனால் வலிமையுள்ள பகுதியினரின் எண்ணமேயாகும். பிற மக்களின் எண்ணம் வேறு வகையாக இருக்கக் கூடும். பெரும்பாலான மக்கள் பொதுவான எண்ணங்களாலும் பற் றுக்களாலும் பிணிக்கப்பட்டால்தான் உண்மையான, போதிய, பொது மக்கள் எண்ணம் தோன்றக் கூடும்.

பொதுமக்கள் எண்ணம் மாறுதல் :

கிராமச் சமுதாயங்களில் பொது மக்கள் எண்ணம் ஒப்புமையாகத் திட நிலையானது. ஆனால் இங்கும் மக்களுடைய வாழ்க்கை நிலைமை மாறுவதால் அவர்களுடைய பழக்கங்களும், எண்ணங்களும் மனப்பான்மைகளும் மாறுகின்றன. இன்றையச் சமூகத்தில் புதிய தேவைகளுக்கேற்பப் பண்டைய பரம்பரை மனப்பான்மைகள் மறைந்து வருகின்றன. இம்மாறுதலைச் சமயத்திலும், சமூக வாழ்க்கையிலும் அறக் கொள்கைகளிலும், அரசியல் துறையிலும் காணலாம். ஆகையால் சமூகத்திலுள்ள கருத்துத் திரள் திடநிலையாக இருப்பதில்லை.

இன்றையச் சமூகத்தில் மறைமுக உடம்படுப்புச் சாதனங்கள் உள்ளன. திரைப்படங்கள், வானொலி, செய்தித்தாள் முதலியவை பெருவாரியான மக்களின் எண்ணங்களைத் தூண்டுவித்துப் பொது மக்கள் எண்ணத்தை உருவாக்குகின்றன. ஆனால் இவற்றைப் படிக்கும், கேட்கும், மக்கள் அனைவரும் ஒத்த கல்வியுள்ளவர்களல்லர். ஒத்த தீர்ப்புத் தரமும் அவர்களுக்குக் கிடையாது. ஆகையால் பொதுமக்கள் எண்ணம் மிகவும் மாறக்கூடியதாகிறது.

ஓர் எண்ணத்தைக் கொள்பவர்களின் எண்ணிக்கை மாறிக்கொண்டு வருகிறது. அது தோன்றும் இடமும் மாறுகிறது. எடுத்துக்காட்டாக, 1947-48-இல் இந்திய பொது மக்கள் - அதாவது பெரும்பான்மையினர் இந்தியாவில் சமயச் சார்பற்ற அரசை நிறுவ முடியுமா என்று ஐயுற்றனர். இன்று அந்த ஐயப்பாடு குறைந்து வருகிறது. அரசியல் வாழ்க்கையில் சமய நம்பிக்கைகளை நுழைக்க வேண்டிய தேவையில்லையென்று மக்கள் இன்று உணர்ந்து வருகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன் இந்தியப் பொது மக்கள் நம் நாடு ஏதேனுமொரு வல்லரசுக் கட்சியில் சேரவேண்டும் என்று நினைத்தார்கள். இன்று அவர்கள் அப்படி நினைப்பதில்லை. சமயச் சார்பற்ற அரசையும், நடுநிலைமைக் கொள்கையையும் ஆதரிக்கும் மக்கள் தொகை பெருகிவருகிறது. இக்கருத்துக்கள் பரவி வருகின்றன. இவ்வெண்ணங்கள் முதலில் கட்சித் தலைமையகத்தில் சில புகழ்வன்மை மிக்கோரிடத்திலேயே தோன்றுகின்றன. பின் இவற்றைப் பலர் பின்பற்றுவதால் அவை வலுவடைகின்றன.

பொது மக்கள் எண்ணம் மாறுவதற்குப் பல காரணிகள் உள்ளன, முதலாவதாக, இன்று மக்கள் உலகம் முழுவதி லுமிருந்து செய்திகள் பெறுகின்றனர். இவை அன்ருட உரை யாடற் பொருட்களாகின்றன; பல வளர்ச்சிகளைத் தூண்டு கின்றன. பொருளாதாரம் மற்ருெரு மாறுதற் காரணியாகும். வாழ்க்கை நிலைமைகள் மாறுகின்றன. சமூகத்தின் பொருளா தார அமைப்பு மாறுகிறது. இதன் பயனுக மக்கள் தங்கள் பழக்கங்களையும், சமூகத் தொடர்புகளையும், நோக்குகளையும் மாற்றிக் கொள்கிருர்கள்; எடுத்துக்காட்டாக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், பெண்கள் தொழில் செய்து சம்பாதிப் பதை இந்தியப் பொது மக்கள் எண்ணம் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனல் கல்வி பரவியதாலும், மேல் நாட்டு நாகரி கத் தொடர்பாலும், பொருளாதார நிலைமைகள் மாறியுள்ள தாலும், இப் பிரச்சினையைப் பற்றிய பொது மக்கள் எண்ண மும் மாறியுள்ளது.

பொதுமக்கள் எண்ணம் மாறுவதில் சட்டத்திற்கும் ஒரு பங்கு உண்டு. ஒரு சட்டம் இயற்றியபின் மக்கள் கொஞ்சங் கொஞ்சமாக அச்சட்டத்தின் அடிப்படைக் கருத்தை ஏற்றுக் கொள்கிருர்கள். பின் அது நல்லதுதான் என்று நினைக்கிருர் கள். பொதுவாக, சட்டமானது நிலைத்த பொதுமக்கள் எண்ணத்தைப் பின்பற்றி அதைத் தொகுப்பதால் அமை வது. ஆனல் 'சட்டமும் பொதுமக்கள் எண்ணத்தைப் பாதிக்கிறது. நீதிபதிகள் எல்லாத் துறையிலும் உள்ள மக்களின் நடத்தையைத் தீர்ப்பதுடன், ஆளும் அரசாங்கத் தாரையும்தீர்க்க உரிமையுடையவர் ஆவர்'[5]

சட்டம் பொதுமக்கள் எண்ணத்தைப் பாதிக்கும் முறையை, தொடக்கக் கல்வி, அரிசன முன்னேற்றம் முதலிய துறைகளில் காணலாம். இவ்வாறே, குடியொழிப்பு, பெண் களின் சொத்துரிமை முதலியவற்ருலும் நிலைத்த நல் மனப் பான்மைகள் ஏற்படக்கூடும் என்று நாம் நம்பலாம்.

References

1. L. W. Doob, Propaganda, Its Psychology and Technique.

2. Albig, Public Opinion, p. 322.

3. La Piere, Collective Behaviour, p. 272.

4. La Piere and Farnsworth, Social Psychology, p. 348.

5. A. A.A. Fyzee, Group Prejudices in India.

12. தலைமை (Leadership)

வரலாற்றின் பல காலங்களிலும், சமூக வாழ்க்கையின் பல பகுதிகளிலும் நாம் காணும் நிகழ் முறைகளுள் தலைமையும் முக்கியமானதொன்றுகும். மன்னரும், குழுத்தலைவரும் மக்களை வழி நடத்தி வந்துள்ளார்கள். சில காலங்களில் சர்வாதிகாரிகள் தோன்றியுள்ளார்கள். இன்று மற்றொரு வகையான அரசியல் தலைமையை நாம் பாராட்டுகிறோம். வியாபாரத் துறையில் பல உற்பத்தியாளர்கள் தலைமைக்காகப் போட்டியிடுகிறார்கள். பண்டம் கொள்பவரைத் தவருக வழி நடத்தவும் துணிகிறார்கள். கல்வியிலும் சமூகச் சீர்திருத்தத்திலும் வெவ்வேறு மனிதர் தம் குறிக்கோள் தொகுதிகளை மக்கள் ஏற்பதற்காகப் போராடுகின்றனர்.

சமூக உளவியல், தலைமைப் பிரச்சினையை ஒரு சமூகச் செயன்முறையாகக் கருதுகிறது. சமூகவியலர் தலைவர்களைப் பலவாறு வகுத்துள்ளனர், தலைமை எதனைச் சார்ந்தது? தலைமையின் அலுவல்கள் யாவை? எத்தகைய தலைமை மிகவும் பயன் தருவது? இத்தகைய கேள்விகளை உளவியலர் ஆராய்ந்து வந்துள்ளனர்.

உண்மைத் தலைமையில் (real leadership) ஓர் ஆள் (அல்லது குழு) பிறர்மீது ஆதிக்கம் செலுத்துகிறார். அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் இந்த ஆதிக்கம் முழுமையாகவோ, இறுக்கமாகவோ அமைவதில்லை, அமையவும் முடியாது. ஒரு மனிதர் அல்லது ஒரு குழு முழு ஆதிக்கத்தையும் நாடி, பிறரைக் கருவிகளாக மட்டும் பயன்படுத்தினால், அவர் ஒத்துழைப்பைப் பெறமாட்டார், எதிர்ப்பையே தூண்டுவார். தூண்டல் துலங்கற் கருத்து முறையில் பார்த்தால், பிறர் ஒருவரை (அல்லது ஒரு குழுவைத்) தூண்டுவதை விட மிகையாக அவர் பிறரைத் தூண்டினால் அது தலைமை எனப்படும். பிறர் தம் சிந்தனையையும் நடத்

தையையும் பாதிப்பதை விட, தாம் அதிகமாகப் பிறரைப் பாதிப்பவரே தலைவர் ஆவர். தலைவர் பல தனியாட்களுக்கு வழிகாட்டி அவர்களுடைய செயல்களை இணைக்கிறார்.

தலைமை ஓர் இருவழித் தொடர்பாகும். பிறர் ஒருவரை ஏற்றுக் கொண்டால்தான் ஒருவர் தலைவர் ஆவார். குழு ஒருவரைத் தலைவராக ஏற்பது ஒருவழி ஒப்பந்தமேயாகும் என்று ஃஆஃப்ஸ் (Hobbes) கூறியது ஏற்கத்தக்கதன்று. தலைவர் தம்மைத் தொடர்ந்தவரின் சொற்களையும் செயல்களையும் எப்பொழுதும் கவனித்து அதற்கேற்பத் தம்மைப் பொருத்திக்கொள்ள வேண்டும். இம்முறையில் பார்த்தால் தலைவர் தாம் நடத்த விரும்பும் பிறரால் நடத்தப்படுகிறார். ஃபிரவுண் இதனையே வெற்றி தரும் தலைமைக்கு விதியாகக் கூறுவார். "தலைமையின் வன்மை பெருக வேண்டுமானால் அதன் விடுதலை குறைய வேண்டும்". தலைவர் குழுவின் மேல் முழு வன்மை பெறும்போது, அவரும் குழுவின் வன்மைக்கு முற்றிலும் உட்படுகிறார்.

மிக விரிந்த பொருளில் பார்த்தால் ஒவ்வொரு சமூக இடைவினை நிலைமையிலும் தனியாள்தலைமை நடைபெறுகிறது எனலாம். உரையாடும் குழுவில், ஒருவர் பேசிப் பிறர் கேட்டுக் கொண்டிருந்தால் அந்த நேரத்தில் அவர் தலைவராகிறார். விளையாட்டுத் தளத்தில் தலைமைச் செயலைக் காணலாம். வகுப்பறையில் ஆசிரியரும், அவையில் பேச்சாளரும், வியாபாரத்தில் விளம்பரக்காரரும், அரசியலில் சர்வாதிகாரிகளும், கட்சித் தலைவரும், சீரமைப்பாளரும் தலைமை வகிக்கின்றனர், அல்லது தலைமை வகிக்க முயல்கின்றனர்.

புதுமுறை சார்ந்த (formal) **தலைமை :**

தலைமையை இரண்டாக வகுக்கலாம் : ஒன்று **புற முறை சார்ந்த,** அல்லது **பெயரளவான** (nominal) தலைமை; மற்றது **ஆள் தொடர்புள்ள** (personal) அல்லது **உண்மைத்** தலைமையாகும். நிறுவனப்பட்ட சமூக நிலைமைகளில் புற முறை சார்ந்த தலைமையைக் காணலாம். நிறுவனப்பட்ட நிலைமையில் சமூக வாழ்க்கை கூட்டுத் தேவைகளைச் சுற்றி அமைக்கப் பெறுகிறது. உறுப்பினர் சில செயல்களைச் செய்யவும், சில சமூக நிலைமைகட்குட்படவும் வேண்டும். எடுத்துக் காட்டாக, நமது பண்பாட்டிலுள்ள சில சடங்கு

களைக் காணலாம். பெயரிடல், உபநயனம், திருமணம், ஈமச் சடங்குகள் முதலிய பல சடங்ககுகள் உள்ளன. இவற்றில் தனியாள் குறிப்பிட்ட நிலைகட்குட்பட வேண்டிய திருக்கிறது. இம்முறைகள் அவரால் தேர்ந்தெடுக்கப் பட்டவையல்ல. இவை சில குறிக்கோட்களாலும் மரபிலு லும் அமைபவை. இச்சடங்குகளில் சிலர் தலைமை வகிக்கி ருர்கள். இந்த அதிகாரம் அவரவர்களுடைய பதவியால் ஏற்படுகிறதேயன்றி, அவர்களுடைய திறமையாலன்று. இந்நிறுவனத் தலைவர்களின் நிலை வேறு ; மக்களுடைய நிலையைப் புரிந்து கொண்டு அவர்களை வசப்படுத்தி, செயல் திட்டம் வகுக்கும் ஆதிக்கத் தலைவரின் நிலை வேறு. சமய குரு; தந்தை, அம்மான், ஆகியோர் நிறுவனத் தலைவர் என்ற முறையில் ஒரு சடங்கை நடத்துகிருர்கள். ஆனல் அவர்களுக்கு இதைப் பற்றிப் புதிது புனையும் விடுதலை கிடையாது. இத்தகைய தலைவர் புறமுறை சார்ந்த அல்லது பெயரளவான தலைவர் ஆவர். புறமுறைத் தலைமையில் ஆதிக்கம் செலுத்தவும் மனமாற்றம் ஏற்படுத்தவும் முயற்சி தோன்றுவதில்லை. புறமுறைத் தலைவர் வெறும் தலைமனிதரே (headman) ஆவர். அவர் என்னென்ன செய்ய வேண்டும் என்பது வைத்துக்கோடலால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. பல்லியம் நடத்துநர் (conductors of orchestra) பிறர் எழுதி வைத்த இசையை இசைக்கத் துணை புரிகின்றது போலவே இப்புறமுறைத் தலைவரும் செயல் புரிகின்றனர். அரசியற் சட்டப்படி அமைந்த மன்னரும் பாடத்திட்டத்தையும், முறையையும் மாற்றியமைக்க உரிமையில்லாத படைப்படுத்திய (regimented) பள்ளி ஆசிரியரும் இத்தகைய புறமுறை அல்லது பெயரளவுத் தலைவரேயாவர். அவர்கள் தாம் செய்யும் வேலையில் ஓரளவு தம் சொந்தத் திறத்தையும் காட்டக் கூடும். ஆனலும் அவர்கள் பெரும்பாலும் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட நிறுவன வரம்புக்குள்ளேயே செயல் புரிவர். தரைப்படையிலும் கடற்படையிலும் நாம் காணும் நிலைமை ஓரளவு புறமுறையானது, ஓரளவு உண்மையானது.

உண்மைத் தலைமை (Real leadership)

ஒருவர் பிறர்மீது ஆதிக்கம் செலுத்துவற்கு, காரியங்களைத் தாமாகத் திட்டுமிடுவதற்கு, பிறருடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு **உண்மைத்** தலைமை அல்லது **ஆளுடைத்** (personal) தலைமை தேவைப்படுகிறது. ஒரு குழு ஒரு கடமையைச் செய்ய வேண்டியதிருக்கும்போது இத்தகைய

தலைமை தோன்றுகிறது. உறுப்பினருடைய சக்திகளை வழிப்படுத்தவும், ஒத்துச் செயல் புரியத் தூண்டவும் ஒரு வருடைய துணை தேவையாகிறது. இவ்வாறே, புதுப்புனைவு கள் ஏற்படுவதாலும் சமூகத்தின் பொருளாதார அமைப்பு மாறுவதாலும் மரபு வழி வந்த சமூகத் தொடர்புகளை மாற்றி யமைக்க வேண்டியதிருக்கிறது. இந்நிலைமையிலும் உண் மைத் தலைமை தேவைப்படுகிறது. மக்களின் அற உணர்ச்சி பெருகி, வாழ்க்கைக்குரிய புதிய, உயரிய விழுமி யங்களைக் காண்பதற்கும் இத்தகைய தலைவர் தேவையா கின்றனர். இத்தகைய காலங்களில் கூரிய எண்ணங்களும் காட்சியும், உய்த்துணர்வும், தான் தொடங்காற்றலும் உள்ள தனியாட்கள் தலைமை தாங்குகிறார்கள். இந்துச் சமய வரலாற்றிலும் இந்நிலையைக் காணலாம். ஒரு காலத் தில் சமயத்தில் பழைய சடங்குப் பண்பாட்டையும் அறிவு கலந்த அன்பு நெறியையும் இணைத்தால்தான் இந்த சமூகம் நிலைக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டது. அப்பொ ழுது கிருஷ்ணர் தலைமை மேற்கொண்டார். பதின்மூன்றும் நூற்றாண்டில் அறிவு நெறியும் சடங்குகளும் மக்கள் அனை வருக்கும் உரிய சமய எழுச்சித் தேவையை நிறைவிக்கப் போதியவை யல்ல வென்று தெரிந்தது. அப்பொழுது திருத்தூய அடியார்கள் தோன்றி பக்திநெறியை நிலைப்படுத் தினர்கள்.* அரசியல் துறையில் மன்னராட்சியும் ஃபி யூடல் ஆட்சி முறையும் மறைந்த பின் ஆளுடைத் தலைமை தோன்றியது. பொருளாதாரத் துறையில் உற்பத்தி முறை களும் பங்கீட்டு முறைகளும் மாறி விட்டன. ஆகையால் பெரிய தொழில் தலைவர் பண்டம் கொள்ளும் பொதுமக்கள் தலைமைக்காகப் போராடுகிறார்கள்.

தலைவர் பல வகையர்:

எல்லாத் தலைவரும் ஒன்று போல் இருப்பதில்லை. தலை வர் தம் நோக்கங்களிலும் முறைகளிலும் வேறுபடுகின்றனர் சிலர் தம் குழுக்களுக்காகத் தொண்டு புரிகின்றனர். வேறு சிலர் குழுவைத் தம் சொந்த நலனுக்காப் பயன்படுத்துகின் றனர். குழுவுக்காக அவர்கள் என்ன செய்கிறார்கள், குழுவு டன் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்ற அடிபடைகளைக் கொண்டும் தலைவர்களை வகுக்கலாம். மார்ட்டின் கான்வே (Martin Conway) சமாதானத்திலும் போரிலும் கும்பல் (The

* தமிழ்நாட்டில் ஏழாம் நூற்றாண்டிலேயே அப்பரும் சம்பந்தரும் இந்நெறியை நிறுவித் தொண்டர் குழாங்கட்குத் தலைமை தாங்கியமை காண்க.

Crowd in Peace and War) என்ற நூலில் நான்கு வகைத் தலைவரைக் குறிப்பிடுகிறார். அவர்கள் தாம், **குழுவைக் கையாள்பவர்** (group manipulators) **குழுப்பதிலாட்கள்** (group representatives), **குழுவை உருவாக்குபவர்** (group builders) குழுவைத் **தோற்றுவிப்பவர்** (group originators) ஆவர்.

இவருள், **குழுவைக் கையாள்பவர்** தம் நலம் கருதுபவர். அவர்கள் மக்களுடைய உந்துகளை அறிந்து கொண்டு அவற்றை எடுத்துக் கூறித் தலைமை பெறுகிறார்கள், பின் இப்பதவியைத் தம் சொந்த நலனிற்காகப் பயன்படுத்து கின்றனர்.

குழுப்பதிலாட்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார் கள். மக்களுடைய கோரிக்கைகளையும் எண்ணங்களையும் எடுத்துக் கூறுவதற்காகவே இவர்கள் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். தாங்கள் மக்களின் பதிலாட்கள் என்பதை இவர் கள் மறப்பதில்லை. பதிலாட்கள் என்ற முறையில் அவர் கள் செயல் புரிய வேண்டியதிருக்கிறது. ஆகையால தங் கள் சொந்த எண்ணங்களையும், பதிலாட்படுத்திய மக்களின் எண்ணங்களையும் அவர்கள் வேறுபடுத்தி வெளியிடுகிறார் கள்.

குழுவை உருவாக்குபவர் மக்களுடைய உண்மையான தேவைகள் யாவை, மக்களுடைய நலனுக்கு வேண்டியது யாது, என்று ஆழ்ந்து சிந்திக்கிறார்கள்; இதற்கான ஆக்க முறை நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். மக்களுக்காகத் தொண்டு புரிகிறார்கள்; அறிந்து, நலம் துணிந்து செயல் புரி கிறார்கள். மக்களுக்குத் தம்முணர்வு ஊட்டுகிறார்கள். மக் கள் தம் ஆற்றல்களை அறிந்து வெளிப்படுத்தி வெற்றிபெற வேண்டுமென்று அவர்களைத் தூண்டுகிறார்கள்.

கடைசியாக, குழுவைத் **தோற்றுவிப்பவர்கள்** புதிய கருத் துக்கள் உள்ளவர் ஆவர். இவர் தம் கருத்தைப் பரப்பி மக் களைத் தம் வழிக்கு மாற்றுகிறார்கள். இவர்களே ஓர் அமைப் பை நிறுவக்கூடியவர்கள் ஆவர். அல்லது இவர்களுடைய குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு இவர்களுடைய குழுவினர் அமைப்புக்களை நிறுவக் கூடும். இவர்களுட் சிறந் தவர் குருட்டுத் தனமாகத் தம்மைப் பின்பற்றும் குழுவை மட்டும் ஏற்படுத்திக்கொள்ளாமல் பிற தலைவர்களைத் தோற்று விக்கிறார்கள். இவர்களைத் தொடர்பவர் ஒவ்வொருவரும்

தத்தமக்குத் தலைவராய்த் திகழ வேண்டும். அரசியலிலும் சமயத்திலும் இத்தகைய தலைவர்கள் எழுந்துள்ளனர்.

தலைமையைப் பல **நோக்கு நிலைகளை** ஆதாரமாகக் கொண்டு ஆராயலாம் என்று கண்டோம். லாப்பியரும் ஃபார்ன்ஸ்வொர்த்தும், தலைவர் தொடர்வர்த் தொடர்பை அடிப்படையாகக் கொண்டு தலைமையை நோக்கியுள்ளனர்[1] தலைமை நேரடியான முகம்புகு தொடர்புள்ளதாக இருக்கலாம், அல்லது தொலைவுத் தொடர்புள்ளதாக இருக்கலாம். **நேரடித் தொடர்புத்** தலைமையை (direct contact leadership) உரையாடலிலும், சொற்பொழிவிலும், விளையாட்டிலும் காணலாம். வாயிலைப் பேச்சு, புத்தக மூலமும், செய்தித்தாள் மூலமும் பொதுமக்கள் எண்ணத்தை உருவாக்கும் முயற்சி, விளம்பரத்தார் பண்டம் கொள்வோர் மனத்தைத் திருப்ப எடுத்துக் கொள்ளும் முயற்சி, முதலியவை **தொலைவுத் தொடர்புத் தலைமை** (distant contact leadership) ஆவன.

தலைவர்களின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டும் தலைமையை வகுக்கலாம். உலகில் உள்ள நிலைமையை அப்படியே **நிலைநிறுத்த** முயல்வது ஒருவகைத் தலைமையாகும். மக்களுடைய மனப்பான்மைகளையும் குழுவின் பண்பாட்டுப் படிவத்தையும் **மாற்ற** முயற்சி செய்வது மற்றொரு வகையாகும். பின்னர்க் கூறிய தலைவரை ஃபொகார்டஸ் இருவகையாகப் பிரிக்கிறார்:[2] சில தலைவர்கள் **நேரடியாக** மாறுதல்களை உண்டாக்க முயல்கிறார்கள்; வேறு சிலர் புதிய எண்ணங்களையும், புதுப் புனைவுகளையும் உலகிற் புகுத்துகிறார்கள். இவை **மறைமுகமான** மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. தத்துவர்களும், அறிவியலரும் இவ்வகைத் தலைவர் ஆவர்.

உண்மைத் தலைவர் புரியும் செயல்கள் :

எந்தெந்த நிலைமைகளில் தான்தொடங்காற்றல் (initiative) தேவைப்படுகிறதோ அங்குத் தலைவர் செய்யவேண்டிய பல செயல்கள் உள்ளன. அவற்றுள் சில பொதுவானவை; சில குறிப்பானவை, தலைமை பெற வேண்டிய குழுவின் தன்மையைப் பொறுத்தவை. பொதுவான அலுவல்களாவன (functions): ஒவ்வொரு தலைவரும் செயலைத் திட்டமிட வேண்டும்; தொடர்பவரின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும்; குழுவின்

உறுப்பினருக்கு வெவ்வேறு அங்கங்களைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்; தலைவர் வல்லுநராகவும், அறிவுரை ஞராகவும், வழிகாட்டியாகவும் செயல் புரிய வேண்டும்: தாமாகவோ, அல்லது பிறருடன் கலந்தோ முடிவுக்கு வர வேண்டும்; கொள்கைகளை வகுக்க வேண்டும்; நடத்தைத் தரங்கள் விதிக்க வேண்டும்; குழுவின் சுவைகளையும் பற்றுக்களையும் அமைக்க வேண்டும். குழுவினருக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் அவர்களுக்கிடையேயுள்ள தொடர்புகளைக் கட்டுப்படுத்திச் சந்து செய்யவேண்டும்; தம்மைத் தொடர்பவர்களுடைய சக்திகளை ஆற்றுப்படுத்துவதற்காக 'கூடி உழைப்போம்' முதலிய கட்சிக் கூப்பாடுகளைப் பயன்படுத்த வேண்டும்; குழுவினர் செல்லவேண்டிய நெறியை (பஞ்சசீலம் போன்றவற்றை) அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

தலைவர்களும் சமூகமாறுதலும்:

தலைவர் தம் கருத்தைக் குழுவினர் மனத்தில் வலிந்து புகுத்தி, சமூக மாறுதலைத் தூண்டுகிறார் என்று பலர் நினைக்கிறார்கள்; அவர் சில செயல்களைத் தேர்கிறார் என்று எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே அவருக்குத் தேர்தல் உரிமை உண்டா? உண்மையாகவே அவர்தாம் சமூக மாறுதலைத் தூண்டுவிக்கிறாரா?

குழுவிற்காகத் தலைவர் முடிவுகள் செய்கிறார் என்பது உண்மைதான். பொது வாழ்க்கையில் பெரிய தலைவர்கள் வரலாற்றை மாற்றக் கூடிய முடிவுகள் கட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாக காந்தியடிகளின் முடிவுகள், சர்தார் வல்லபாய் பட்டேல் ஃஐதராபாதில் போலீஸ் நடவடிக்கை எடுக்கத் துணிந்தது. ஃஇட்லர் முதலிய தலைவர்களின் முடிவுகளையெல்லாம் கண்டால் இவ்வுண்மை விளங்கும். மேலும் ஒரு மனிதன் தன் பேச்சு வன்மையால் மக்களுடைய உணர்ச்சிகளை எழுப்பி அவர்களை வெறிக்கும்பலாக மாற்றக் கூடும். இத்தகைய சான்றுகளைக் கொண்டு தலைவர்கள் முழு வலிமையுள்ளவர் என்று நாம் நினைக்கக்கூடும். சமூகத்திலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமயத்திலும் வாழ்க்கை நிலைகுலைந்துள்ள காலங்களில் இவ்வாறு தலைவருக்கு அதிக வலிமையுண்டு. ஆனால் நிலைமையின் முக்கியத்தையும் உறுப்பினரின் தேவைகளையும் கவர்ச்சிகளையும் நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. ஒரு குறிப்பிட்ட நிலைமை

அதற்கேற்ற தலைவரை உண்டாக்குகிறது. அறிவும் ஆற்றலும் உள்ள பல மனிதர் தலைமைப் பதவியைப் பெருமல் வாழ்ந்துள்ளார்கள். இவர்களுடைய தலைமைக்கு ஏற்ற அளவுக்குத் தொடர்பவர்கள் முன்னேற்றமடையும் காலம் வருமுன் இவர்கள் தோன்றியுள்ளார்கள். தலைவருடைய கருத்துக்களைப் பிறர் கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். ஒரு குழு தலைவருக்கு அளிக்கும் அங்கங்கள் அவர் வகிக்க ஆயத்தமாக இல்லாவிடில் அக்குழு அவரைத் தலைவராக ஏற்காது. ஒரு குறிப்பிட்ட நிலைமையில் குழுவின் தேவைகளின் அடியாக இவ் அங்கங்களும் அலுவல்களும் அமைகின்றன. இவற்றை நிறைவேற்றக் கூடியவர் தலைவராகிறார்.

தலைவருக்குக் கட்டற்ற உரிமை கிடையாது என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். சட்டங்கள், நிறுவனங்கள், செந்நிலைகள், வழக்கங்கள் முதலிய அடக்கும் கட்டமைப்புக்களுக்குள்ளேயே அவர் செயலாற்றவேண்டியிருக்கிறது. சட்டத்தையும் செந்நிலையையும் வழக்கத்தையும் மீறும் முறையில் அவர் திட்டம் வகுத்தால், சமுக அமைப்பு குலையக்கூடும். அப்பொழுது மக்கள் அவரைப் பின்பற்றமாட்டார்கள். இதனால்தான் தலைவர்கள் தம் எண்ணங்கள் தாமே கண்டுபிடித்தவை என்று சாற்றிக் கொள்வதில்லை. தம் முன்சென்ற பெருமக்களின் வழியையே நாம் தொடர்வதாக அவர் நவில்கிறார்.

இவ்வாறு உண்மையான ஆளுடைத் தலைமைக்கும் விடு தலை வரம்பு உண்டு. பழைய நிறுவனக் கூறுகளின் அடிப்படையிலேயே இவ்வகைத் தலைமையும் இடம் பெற்று நிற்கிறது. பொருளாதாரத்திலும் அரசியலிலும், சமயத்திலும் வேறெந்தத் துறையிலும் பரம்பரை நடத்தையை முற்றிலும் ஒழிக்க முடியாது. இவ்வாறு செய்ய எவரும் முற்படுவதும் இல்லை. எடுத்துக் காட்டாக, கிருஷ்ணர் தாம் கூறிய யோகம் முற்றிலும் புதியதென்று சாற்றவில்லை. அவர் அதை விஸ்வஸ்வத்துக்கும், பின்னவர் அதை மனுவுக்கும், மனு அதை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறினர். சங்கராச்சாரியாரால் முற்றிய கருமமார்க்கத்தை ஒழித்துவிடக் கூடவில்லை; பதின்முன்றும் நூற்றாண்டு அடியார்கள் தாங்கள் வேதங்களின் சாரத்தையே எடுத்துக் கூறுவதாகச் சாற்றினர்.

வெறிக்கும்பலிலுங்கூட, தலைவர் கும்பலுக்கு வெறியூட்டி அதை இயக்கியபின் அவராலும் அதை நிறுத்த முடியாது; நிலைமையைத் திருப்பிவிட முடியாது. மேலும், தலைவருடைய முடிவுகளும் அப்போதைய நிலைமையாலேயே பெரிதும் ஆக்கப்படுகின்றன.

மேற்கூறிய நோக்கு நிலையிலிருந்து ஆய்ந்தால், வெற்றி தரும் தலைமையைப் பற்றிச் சில பொதுமைகளை நாம் வகுக்கலாம்.[8] அவையாவன:

1. ஒருவர் எந்தக் குழுவை நடத்த முயலுகிறாரோ, அக்குழுவைச் சார்ந்தவராக அவர் இருக்க வேண்டும். அவர் குழுவின் மனப்பான்மைகளையும் எதிர்வினைப் பாங்குகளையும் பகிர்ந்துகொள்ள வேண்டும். உளவியன் முறையில் அவர் அக்குழுவுக்குப் புறம்பானவராக இருந்தால் அவரால் அக்குழுவினரோடு உணர்வொருமை (rapport) பெற முடியாது. சில தலைவர்கள் பாமர நுண்முறையைக் (plain folk technique) கையாளுவதும் முழுப் பங்கீட்டைப் பெறுவதற்காகவேயாகும். சில தலைவர்கள் கிராம மக்களோடு வாழ்ந்து, அவர்களோடு உண்டு உழைத்து, மக்களுடைய உடையை உடுத்து வருவதும் இதுபற்றியே.

(2) தலைவருக்குப் புகழ்வன்மை வேண்டும். அவர் தம் குழுவினருள் ஒருவராக இருப்பினும், மற்றவர்களைவிட உயர்ந்தவராக இருக்க வேண்டும்.

(3) அவர் தம் தலைமை நிலைமையின் கள உறுப்பியத்தை (field structure) ஃகெஸ்ட்டால்டைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது மக்களுடைய தேவைகளை, குழுவின் உளவியல் அமைப்பை—உருப்பினருக்கிடையே யுள்ள ஈர்ப்பு வெறுப்புப் படிவத்தை—அவர் புரிந்துகொள்ள வேண்டும்.

தலைவர் குழுவின் மீது முழுமையான கட்டுப்பாடு பெறும் போது குழுவினரும் தலைவரை முழுமையாகக் கட்டுப்படுத்துகிறார்கள்.

தலைமையும், நிலைமையும் ஒன்றுக இணைந்து அமைகின்றன என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டும் அளிக்கலாம். தலைமை ஏற்படும்பொழுது, தலைமை சரிவதற்கான நிலைமை

யும் ஒருங்கே ஏற்படுகிறது. ஒருவர் தலைவராக இருப்பதால் அவரைப் பல துறைகளில் வல்லுநர் என்று கருதிப் பல குழுக்கள் அவரைத் தம் செயல்களில் பங்கெடுக்குமாறு அழைக்கிறார்கள். ஆனால் தலைவரின் ஆற்றல் வரம்புள்ளது. அவர் ஒவ்வொரு குழுவிலும் வல்லுநராகப் பங்கெடுத்துக் கொள்ள முடியாது. அவர் இப்படிச் செய்ய முயன்றால், தலைமையில் குறைந்து செல் விளைவு (diminishing return) ஏற்படுகிறது. மக்கள் வேறொரு தலைவரை நாடுகின்றனர்.

தலைவரின் வலிமைக்குரிய உளவியல் அடிப்படை:

முன்னர்க்கூறியபடி தலைமை ஓர் இருவழித் தொடர்பாகும். மக்கள் ஒருவரைத் தலைவராக ஏற்பதாலேயே ஒருவர் தலைவராகிறார். இந்த ஏற்பு எதனால் அமைகிறது? தலைவரையும் மக்களையும் பிணைப்பது யாது? இதன் அடிப்படையைத் தலைவருடைய ஆளுமை அமைப்பிலும், தொடர்வோருடைய ஆளுமை அமைப்பிலும் காணலாம். தலைவர்கள் குழுவின்மேல் தந்தைமை அதிகாரம் செலுத்த விரும்புகிறார்கள். இவ்வலிமை வேட்கை குழந்தைப் பருவத்தில் அன்பற்ற அனுபவங்களால் ஏற்பட்டிருக்கக் கூடும், என்று உளவியற் பாகுபாட்டாளர் கூறுகிறார்கள். வலிமை நாட்டமானது, உண்மையான அல்லது கற்பனை செய்த தாழ்வுணர்ச்சிக்கு ஈடு செய்வதாக அமையக் கூடும் என்று ஆல்ஃட்லர் கூறுகிறார். மக்கள் தாங்களாக ஒரு காரியத்தைச் செய்ய முடியாவிட்டால் அதைச் செய்யக் கூடிய மற்றொருவருக்குக் கட்டுப்படுகிறார்கள். சிலவேளைகளில், மக்கள் சோம்பலுற்று, பொறுப்பைத் தட்டிக் கழிக்க விரும்புகிறார்கள். ஆகையால் தங்கள் சார்பில் சிந்தித்துப் பொறுப்பேற்றுத் தீர்மானங்கள் செய்யும் ஒருவரை அவர்கள் நாடுகிறார்கள். 'பெரும்பாலன மக்கள் நடத்தப்படவே விரும்புகிறார்கள், கீழ்ப்படிவதற்கு விரைகிறார்கள்'[4] என்பதும் தலைமைக்கு ஒரு காரணமாக இருக்கலாம். குழந்தைகள் தந்தையின் பாதுகாப்பையும், வழிகாட்டையும் எதிர்பார்ப்பது போல அவர்களும் தலைவரிடம் இச்செயல்களை எதிர்பார்க்கின்றனர். அவர்களுக்குத் தலைவர் தந்தை-உரு (father-figure) ஆகின்றார். காந்தியடிகளுக்கு 'தேசத் தந்தை' என்று மக்கள் அளித்த பட்டம் விரைவில் பரவியதும் இப்பண்பினைக் காட்டும். மேற்கூறியது குழுவை உருவாக்கும் தலைவர்களுக்கும் மிகவும் பொருந்தும். குழுவைக் கையாள்பவர்கள் மகளுடைய ஊக்கங்களையும் மனப்பான்

மைகளையும் தம் நலனுக்காப் பயன்படுத்துகிறார்கள். இங்கு தலைவர் மக்களுடைய நனவுடைப் போக்குகளையும் அவாக் களையும் குறிப்பவராகிறார். மக்களும் தங்களைத் தலைவரோடு ஒன்றுபடுத்திக் கொண்டு அவருடைய உயர்வின் மூலம் தங்கள் ஊக்கங்களை நிறைவித்துக் கொள்ளுகிறார்கள்.

ஒருவரைப் பிறர் தலைவராக ஏற்றுக் கொள்வது அவருடைய புகழ்வன்மையைக் காட்டுகிறது. குழுவினர் தலைவருடைய கருத்தீடுகளைச் சிந்திக்காமல் ஏற்கும் வரை, தலைவர் தம் பதவியைக் காத்துக்கொள்ள முடிகிறது. ஏதேனும் இரண்டொருவர் அவருடைய தலைமையப் பற்றிக் கேள்வி கேட்கத் தொடங்கினால் அவருடைய தலைமை விரைவில் சரிகிறது.

தலைமைப் பண்புகள் பற்றிய பிரச்சினை :

இனி மக்கள் அடிக்கடிக் கேட்கும் கேள்வி ஒன்றை நாம் ஆராய்வது பொருத்தமாகும். எல்லா வகைத் தலைவர்களுக்குக்கும் இன்றியமையாத பொதுவான தலைமைப் பண்புகள் உள்ளனவா? என்பதே அக்கேள்வி,

தலைவரின் மதிப்பும் வலிமையும் அவருடைய ஆளுமையிலேயே அடங்கியுள்ளன என்ற முற்கோளின் அடிப்படையில் பலர் தலைவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புப் பட்டியல்கள் வகுத்தனர். குழந்தைகளின் குழுக்களையும், போர்ப்படையையும், பள்ளியையும், அரசியல் துறையையும் தொழில் துறையையும் உற்று நோக்கிய பலர் காண்நிலைப் பொதுமைகள் பலவற்றைக் கூறியுள்ளனர். எடுத்துக்காட்டாக, ஆளுமையின் உடற்கூறுகளைப் பற்றிப் பலர் பொதுமைகள் வகுத்துள்ளனர். ஒருவர் தலைவராக வேண்டுமானால் நெட்டையாக இருக்கவேண்டும், நல்ல உடற்கட்டுடையவராய் இருக்க வேண்டும் என்பர். படைத் தலைவருக்குப் பொதுவாக இப்பண்பு உண்டு. ஆனால் அரசியல் தலைவரும் சமயத் தலைவரும் இத்தகைய உடலமைப்பு உள்ளவராக இருக்க வேண்டும் என்பதில்லை. லெனினும் காந்தியடிகளும் நெட்டையர்கள் அல்லர், வலிய உடற்கட்டுடையவருமல்லர்.

உளவியற் கூறுகளை அடிப்படையாகக் கொண்டும் சிலர் பொதுமைகள் கண்டுள்ளனர். தலைவருக்குப் பரந்த

ஒத்துணர்வும், வலிமையுள்ள, மேலோங்கும் தன்முனைப்பும் வேண்டும் என்று கூலீ கூறினர். ஆனால் உடற்கூருயினும் சரி, உள்ளக் கூருயினும் சரி. ஒரு சமூகம் பாராட்டும் பண்பை மற்றொரு சமூகம் பாராட்டுவதில்லை, ஒரே சமூகத்திலும் ஒரு காலத்தில் தேவைப்படும் தலைமைப்பண்புகள் மற்றொரு காலத்தில் மாறிவிடுவதுண்டு.

ஒரு மனிதனை எக்காலத்திலும் தலைவனுகவே இருத்தக் கூடிய பொதுத் திறமை ஒன்றும் கிடையாது. தலைமையானது தனியாளினுள் அமைந்த ஒரு திட்டவட்டமான உளவியற் கூறினைச் சார்ந்ததென்று சொல்ல முடியாது. ஒரு நிலைமையில் தலைமைக்கு உதவும் பண்பு மற்றொரு நிலையில் தலைமையைக் கெடுக்கும். ஆகையால் திறமையான தலைமை ஒரு குறிப்பிட்ட நிலைமையால் ஏற்படுவது. போர்க்களத்தில் சக்தியும், நுண்ணறிவும், விரைந்த தீர்மானமும் உடைய தலைவன் தேவை. சமயத் தலைவருக்குத் தேவையான குணங்கள் வேறு. அரசியலில் வேறு விதமான பண்புகள் தேவை. இப்பண்புகளும் நாட்டுக்கு நாடு வேறுபடுபவை. கூரிய அறிவும், தன்னலமும், விரைவாற்றலும் (vigour) உள்ள மனிதர் அமெரிக்காவில் தலைவராகக்கூடும். இத்தகையவருக்கு இங்கிலாந்தில் தலைமைப் பதவி கிடைப்பது அரிது.[5] ஒரு தலைவர் தன்னலமுடையவர், மக்களுடைய அவாவை நிறைவேற்ற முற்படாதவர் என்று தோன்றினால், ஆங்கில மக்கள் அவரை ஆதரிக்க மறுப்பர். இவ்வாறு குறிப்பிட்ட நிலைமைகளில் குறிப்பிட்ட அங்கங்கள் தோன்றுகின்றன; இவற்றை வகிப்பதற்குக் குறிப்பிட்ட பண்புகளை உடைய ஆட்கள் தேவை என்று நாம் ஒத்துக் கொள்ளலாம். ஆயினும் சில பண்புகள் எவ்வகை நிலைமைகளிலும் தலைமைக்கு இன்றியமையாதனவாகத் தோன்றுகின்றன. இத்தகைய பொதுவான தலைமைப் பண்புகள் என்று ஆல்ப்போர்ட் கூறுவன: மேலோங்கல் (ascendance), விரைந்த, சக்தி மிளிர்ந்த எதிர்வினைகள், குரலிலும் சைகையிலும் உள்ள தொனி (tone), ஊக்கம், நேருக்கு நேர் நின்று பேசும் ஆற்றல், ஓரளவு உயர்ந்த எழுச்சி மட்டம், மட்டற்ற வலிமை இருப்பது போல் தோற்றுவிக்கும் அடக்கம், அளத்தற்கருமை, பிறரொடு பங்கு கொள்ளும் பண்பு, சக்தியையும் வன்மையையும் ஒரு கடமையின்பால் செலுத்தும் ஆற்றல் அல்லது உந்து ஆகியவையாம்.

குறிப்பிட்ட நிலைமையின் வலிமையையும் நாம் மறக்க லாகாது. நிலைமையும் மக்களின் தேவைகளும் மாறும் போது, மக்கள் தலைவர்களை மாற்றிவிடுகிறார்கள். சென்ற உலகப் போரில் சர்ச்சில் தலைவராகத் தோன்றியதும், போர் முடிந்ததும் அவரைத் தலைமையினின்று நீக்கியதும் இவ் உண்மையை எடுத்துக் காட்டுவன.

சுருங்கக் கூறின், சில மனிதர் தம் தீர்மானங்களின் வன்மையால் வரலாற்றுப் போக்கை மாற்றியுள்ளமை உண்மைதான். ஆனால் அவர்கள் தலைவர்களானதும், தலைவர்களாக நிலைத்திருந்ததும் அவர்கள் தங்கள் சூழ் நிலைமையின் தேவையை நிறைவேற்றியதாலும், அவர்கள் வகிக்க வேண்டுமென்று மக்கள் நினைத்த அங்கங்களைத் திறம்பட வகித்ததாலுமே. பல பெரிய மனிதர் தகுந்த காலத்திற்கு முன் தோன்றிய காரணத்தால் தொடர்வாரைப் பெறவில்லை.

தலைவருடைய செயல் தேர்வு உரிமையும் குறிப்பிட்ட நிலைமையால் கட்டுப்படுவது. வெறிக்கும்பல் தலைவரால் அக்கும்பலின் அட்டகாசத்தை நிறுத்த முடியாது. மிக வலிய தலைமை நிலைமையென்று நாம் எண்ணும் அறிதுயிலில் கூட, ஆட்படுநரைச் சீர்குலைந்த, அறநெறி மீறிய செயல்களைச் செய்யுமாறு அறிதுயிற்றுநர் வற்புறுத்த முடியாது. அவையின் முன் பேசும் பேச்சாளர் கேட் போரின் தன்மையைக் கவனித்துப் பேச வேண்டும்.

தலைவர்கள் உருவாக்கும் குழுக் கவிகிலை (Group atmosphere created by Leaders)

வெவ்வேறு தலைமைகளால் குழு நடத்தை எவ்வாறு பாதிக்கப்படுகிறதென்று கர்ட் லெவின் (Kurt Lewin), லிப்பிட் (Lippitt), உவைட் (White) ஆகியோர் ஆய்ந்தனர். அவர்கள் பிள்ளைகள் குழுக்களைக் கொண்டு ஆராய்ச்சி இயற்றினர். அதிகாரத் (autocratic) தலைவர், மக்களாட்சித் (democratic) தலைவர், தலையிடாத் (laissez faire) தலைவர் என்று மூவகைத் தலைவரைப் பயன்படுத்தினர். அதிகாரத் தலைவர் தொடர்வோரொடு கலந்து கொள்ளாமல் கொள்கைகளை முடிவு செய்கிறார்; ஒவ்வொரு செயலுக்கும் ஆணை பிறப்பிக்கிறார்; வேலையை ஒப்படைக் கிறார்; தொடர்வோரின் செயலைப் புகழ்கிறார் அல்லது

இகழ்கிறார்; அவர் ஓர் ஒரு மனிதப் பல்லியமாவார் (one man orchestra). மக்களாட்சித் தலைவர் தான்தொடங் காற்றலையும், குழு உரையாடலையும் தூண்டுவிக்கிறார்; கொள்கைகளை அனைவரும் சேர்ந்து தீர்மானிக்க வாய்ப பளிக்கிறார்; உறுப்பினர் தாம் செய்ய விரும்பும் வேலை யையும், தம் உடன் உழைப்பவரையும் தேர்ந்து கொள்ள அனுமதிக்கிறார்; தாமும் வேலையில் பங்கு கொள்கிறார். தலையிடாத் தலைவர் செயலற்றவர்; கொள்கை வகுப்பதில் குழுவுக்கு முழு விடுதலை அளிக்கிறார்; இவர் குழுச் செயல் களில் பங்கெடுப்பதில்லை; உறுப்பினரின் நடத்தையைப் புகழ்ந்து, அல்லது இகழ்ந்து கட்டுப்படுத்துவதில்லை. அதிகாரத் தலைமையில் தலைவரிடம் பொறுப்பு உள்ளது. மக்களாட்சியில் குழுவுக்குப் பொறுப்பு உண்டு. தலையிடாக் குழுவில், பொறுப்பு உறுப்பினரிடையே தனியாட்கள் என்ற முறையில் பரவிக் கிடக்கிறது.

கர்ட் லெவின் கண்ட முடிவுகளாவன: அதிகாரத் தலைமையில் மற்ற இரு வகைகளையும்விட வன்செயல் மட்டம் குறைவாகக் காணப்பட்டாலும், தனியாட்கள் எதிர்ப்பு மனப்பான்மையும், முறிவும் கொண்டுள்ளார்கள். அதிகாரத் தலைவர் தொடர்பவரைப் பணிவுள்ளவராக்கு கிறார், அல்லது தமக்கெதிரே மறைந்த வன்செயலுணர்வு கொண்டவராக்குகிறார். அவர்கள் அவரையே முற்றிலும் சார்ந்து தான்தொடங்காற்றலை முற்றிலும் இழக்கக்கூடும்; அல்லது முறிவும் தலைவர்பால் வன்செயலுணர்வும் கொண்டு அவர் மேற்பார்க்கும்பொழுது மட்டுமே செயல் புரிந்து, பின் நிறுத்திவிடக்கூடும். அவர்களுக்குள் ஒத்துழைப்பு இருப்பதில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் துணை புரிந்து காரியம் செய்வதற்கு இத்தகைய தலைமை இடம் கொடுப்பதில்லை.

மக்களாட்சித் தலைவர் வேறு வகையான குழுக் கவிநிலை ஏற்படுத்துகிறார். இவர் அதிகாரத் தலைவரைப் போல் கீழ்ப்படிதல் பெறுவதில்லை; ஆனால் ஒத்துப் போதலையும், தான்தொடங்காற்றலையும் தூண்டுகிறார். ஆகையால் இங்கு தன்முனைப்பு பங்கெடுப்பு (ego-involvement) உளது.செய்யும் வேலை தமக்கு நல்லதுஎன்று உறுப்பினர் உணருகின்றனர். நாமெனும் உணர்வு தோன்றுகிறது. குழு மனத்திடம் (group morale) உயர்ந்த நிலையில் உள்ளது. உள்நிறைவு இங்கு அதிகம். உறுப்பினருக்கிடையே நட்புணர்வு உள்ளது.

தலையிடாத் தலைமைக் குழுவில் ஒத்துழைப்பு குறைவு. நாமெனும் உணர்வு குறைவு. ஆக்கிரமமும், சினமும் இங்கு மிகையாகக் காணப்படுகின்றன. இப் புறஆய்வி லிருந்து ஒரு முக்கியமான கருத்து வெளிப்படுகிறது. பல முக்கிய ஆளுமைப் பண்புகள், குழந்தைகள் எத்தகைய தலைமையில் வளர்கிருர்கள் என்பதைச் சார்ந்து அமை கின்றன.

லெவினுடைய ஆராய்ச்சியைத் தொடர்ந்து கல்வித் துறையில் பலர் ஆராய்ச்சி செய்தனர். தலைமை ஆசிரி யரை ஆசிரியருக்குத் தலைவராகவும், ஆசிரியரை மாண வருக்குத் தலைவராகவும் கொண்டனர். வெவ்வேறு வகைத் தலைமைகளால் வெவ்வேறு வகைக் குழுக் கவிநிலைகள் தோன்றுகின்றன என்னும் உண்மையைத் தொழில் துறையிலும் பயன்படுத்தியுள்ளனர். இங்கு, தொழில் நடத்துபவர் தலைவராகவும் தொழிலாளிகள் தொடர்பவ ராகவும் அமைகின்றனர்.[6] லெவினின் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு குழு இயங்கியல் (group dynamics) ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதில் தொழில் நிறுவாகத்தின்* அடிப்படைக் கொள்கை கள் பல வகுக்கப்பட்டுள்ளன. நார்மன் மேயர் (Norman R. F. Maier) நான்கு பெரிய தொழிலமைப்புகளுடன் இணைந்து ஆராய்ச்சி நடத்துகிருர். நிறுவாகத்தில் மக்க ளாட்சித் தலைமை என்னும் அடிப்படைக் கொள்கை பற்றி ஆய்கின்ருர்.

தலைமையில் அதிகாரப் படிவத்தை விட மக்களாட்சிப் படிவம் மிகத் திறம்படச் செயற்படுகிறதென்று நினைப்பது நமது விருப்பத்தின் விளைவேயன்றி, உண்மையான அறிவியற் கண்டுபிடிப்பன்று என்று ஃபாரிசும் ஸ்ப்ராட்டும் (R. E. L. Faris and W. J. H. Sprott) கூறியுள்ளார். (அவர்களுடைய 'சமூக உளவியல்' காண்க). இத்தகைய புற ஆய்வுகளில் பதத் தேர்வு (selection of sample) இன்னும் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணுகிருர்கள். 'தலைமையைப் பற்றிச் சிந்திப் பதில், உளவியலர் இக்கால உணர்ச்சி ஒழுக்குகளால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் ..... அவர்கள் என்ன காண வேண்டுமென்று விரும்புகிருர்களோ, அக்கருத்துக்களின்

*நிறுவாகம் = நிறுவு + ஆகம்
(நிறுவப்பட்டவற்றிற்கு ஆகமாக, நெஞ்சமாக, மையமாக அமைவது.)

ஏதீடுகளாகவே அவர்களுடைய நோக்குகள் அமைந் துள்ளன,[7] என்று ஃஆர்டிங் (D. W. Harding) கூறி யுள்ளார்.

References.

1. La Piere and Farnsworth, Social Psychology, p. 310

2. Bogardus, Fundamentals of Social Psychology, pp. 202–3

3. J. F. Brown, Psychology and the Social Order, pp. 342–5.

4. Morris Ginberg, The Psychology of Society.

5. W. J. H. Sprott, Social Psychology, p. 79.

6. May Smith, An Introduction to Industrial Psychology. Also, J. A. C. Brown, The Social Psychology of Industry, Ch 8. Also Julian Blackburn, Psychology and Social Pattern.

7. D. W. Harding, Social Psychology and Individual Values p. 105.

13. மனப்பான்மையும் முற்சார்பும்

(Attitudes and Prejudices)

நாம் பொருட்களையும் ஆட்களையும் உள்ளார்ந்த முறையில் வகைப்படுத்தி அதற்கேற்ப நடந்து கொள்கிறோம். அதாவது அவற்றைப் பற்றிய மனப்பான்மை நமக்கு உண்டு. ஒரு பொருளைப் பற்றி அல்லது ஓர் ஆளைப் பற்றி ஒரு குறிப்பிட்ட வழியில் சிந்திக்கவும், உணரவும், செயற்படவும் நம்மிடம் உள்ள ஆயத்த நிலையே மனப்பான்மை எனப்படும். மனப்பான்மைகள் இல்லாத வரே இலர். ஒரு பெண்ணிடம் எக்குலத்தவரை மணம் செய்துகொள்ள விரும்புகிறாய் என்றால், 'எனது குலத்தில்', 'வேறு குலத்தில்', அல்லது 'எக்குலமானாலும் சரி' என்று அவள் பதில் கூறக்கூடும். அவள் மேலும், தனது கணவன் ஒரு குறிப்பிட்ட தொழில் செய்பவராக இருக்க வேண்டும் என்றும் விரும்பலாம். ஒருவரிடம் எந்த இடத்தில் வீடு கட்ட விரும்புகிறீர் என்று கேட்டால், அவர் சில பகுதிகளை விலக்க முயல்வதைக் காணலாம். மாணவர் சில தொழில்களை விரும்புகின்றனர்; வேறு சிலவற்றை விரும்புவதில்லை. இத்தகைய விருப்பங்களை ஆராய்வதன் மூலம் தனியாட்களுக்குச் சாதி, தொழில், இனம், தேசம், மாநிலம் முதலிய அடிப்படைகளைச் சார்ந்து பல மனப்பான்மைகள் உள்ளனவென்று காணலாம். அவர்கள் பொருட்களையும் மக்களையும் சில முன்னுடைமையோடு (prepossessions) கண்டு அவற்றிற்கேற்பத் துலங்குகின்றனர்.

நமது மனப்பான்மைகளுட் சில நமது சொந்த அனுபவத்தால் ஏற்படுபவை; வேறு சிலவற்றைப் புத்தகங்கள் வாயிலாகவும், கேள்வி வாயிலாகவும் -

அதாவது குழுவின் அனுபவத்தால் - பெறுகிறோம். ஆகையால் மனப்பான்மையைப் பின்வருமாறு வரையறுக்கலாம்: 'மனப்பான்மை, உள்ளம் சார்ந்ததும் நரம்பு சார்ந்ததுமானதோர் ஆயத்தநிலை. அது அனுபவத்தால் தீர்மானிக்கப்படுவது. அது தன்னெடு தொடர்புள்ள பொருட்களுக்கும், நிலைமைகளுக்கும் நேராக நமது துலக்கங்களை ஊக்குவித்துத் திசைப்படுத்துகிறது.

மனப்பான்மைகள் ஆளுக்கு ஆள், குழுவுக்குக்குழு, மாறுவன. ஓர் இந்தியர் மூந்நிறக் கொடியைக் கண்டால் வணக்கம் செய்கிறார்; பிற நாட்டவர் அதைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றார். இந்திய நாட்டுப்பண் பாடும்போது இந்தியர் மனத்தில் தோன்றும் உணர்ச்சி வேறு, பிற நாட்டவர் மனத்தில் தோன்றும் உணர்ச்சி வேறு. ஒரு சாதிக் கலப்புத் திருமணத்திற்கோ அல்லது விருந்திற்கோ அழைப்பிதழ் வந்தால் ஒருவர் அதை ஏற்றுக் கொள்கிறார்; மற்றொருவர் அதை மறுத்து விடுகிறார். ஒரு குழந்தை பள்ளியை விரும்புகிறது; மற்றொரு குழந்தை அதை வெறுக்கிறது. ஒரு தொழிலாளி தனது தொழிற்சாலை மிகவும் நல்லதென்று கூறுகிறார்; மற்றொருவர் அது ஒன்றுக்கும் உதவாது என்று கூறுகிறார்.

ஏறக்குறைய 1930-ம் ஆண்டிற்குள் இயல்பூக்கங்கள், உந்துகள், தேவைகள் முதலிய கருத்துக்களுக்கு அமெரிக்காவில் உள்ள ஆதரவு குறைந்து விட்டது. மனப்பான்மை என்னும் கருத்து அதிகமாகப் பயன்படுத்தப் பட்டது. இயல்பூக்கங்கள் வெறும் கருதுகோள்தான். மனப்பான்மைதான் காணப்படும் உண்மை என்று இப்பொழுது அறிஞர் கூறுகிறார்கள். மேலும் இயல்பூக்கக் கருத்து மனிதனுடைய நடத்தையை விளக்குவதற்கு உதாவாது. மனித நடத்தையை உணர்ந்துகொள்வதற்கு இயல்பூக்கத்தை விட மனப்பான்மையே தகுந்த விளக்கமாகும். எடுத்துக் காட்டாக, ஊன்றிய மனப்பான்மைகள் இறுகிய நடத்தைக்குக் காரணமாகின்றன. கடைசியாக, இயல்பூக்கங்களைப் போலல்லாது, மனப்பான்மைகளைப் பதிவு செய்யலாம், ஆராயலாம், வகுக்கலாம், விளக்கலாம். அவற்றை அளந்து தனியாளின் நடத்தையை முற்கூறுவதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தலாம். ஆகையால் மனப்பான்மையைச் 'சமூக உளவியலின் மையக் கருத்து' என்று கூடச் சொல்லலாம். இக்கருத்து சமூக உளவியலை

முற்றிலும் கைப்பற்றி அதற்கு ஒரு புது உருக் கொடுத்துள்ளது. இயல்பூக்கக் கொள்கையும், முற்றிலும் சூழ்நிலை வயக் கொள்கையையும் விடுத்து மரபுநிலைக் கூறுகளையும், சூழ்நிலைக் கூறுகளையும் சேர்த்துக் காண்பதற்கு உளவியலருக்குத் துணை புரிந்தது மனப்பான்மைக் கருத்தேயாம். சமூகவியலருக்கும் இக்கருத்து மிகவும் பயன்பட்டது. அவர்கள் பொருட்களைப் பற்றி வெவ்வேறு பண்பாடுகளில் வெவ்வேறு மனப்பான்மைகள் உள்ளமையைக் கண்டனர். மக்டூகலும் அனுபவத்தின் வன்மையை உணர்ந்தவர் ஆவர். மனப்பான்மைக் கருத்தை அவர் பற்று (sentiment) என்ற பெயரில் பயன்படுத்தினர். 'பற்று என்பது ஒரு பொருளைக் குறித்து நிலையாக அமைந்துள்ள முயற்றி (conative) மனப்பான்மையாகும். அது அப்பொருளுடன் ஏற்பட்டுள்ள அனுபவத்தால் அமைவதாகும்' என்று அவர் வரையறுத்தார். ஆகையால் பற்றுக்கள் அல்லது மனப்பான்மைகள் மன அமைப்பில் இடம் பெறுவதை அவர் உணர்ந்தார்.

மனப்பான்மையை வகுத்தல்:

ஆல்ப்போர்ட் (F. H. Allport) மனப்பான்மைகளை மூன்றாக வகுத்தார். அவையாவன: (1) சமூக மனப்பான்மைகள், (2) குறிப்பிட்ட ஆட்களுக்கேற்ப அமைந்த மனப்பான்மைகள், (3) குறிப்பிட்ட குழுக்களுக்கேற்ப அமைந்த மனப்பான்மைகள். போட்டி, ஒத்துழைப்பு, ஒத்துப்போதல் (conformity) முதலியவை சமூக மனப்பான்மைகளாவன. இவற்றுடன் பிறர் முன்னிலையில் நாம் சொல்லிலும், செயலிலும் எழுச்சி வெளிப்பாட்டிலும், பால் முதலிய உந்தல் வெளிப்பாடுகளிலும் அடக்கமும் கட்டுப்பாடும் உள்ளவர்களாக இருக்கச் செய்யும், பொதுவான சமூக மனப்பான்மையொன்றும் உண்டு. இச் 'சமூக நிலைப்பட்ட தன்மதிப்பு' (socialized dignity) ஓர் அடிப்படையான மனப்பான்மையாகும்..

இப்பொதுவான சமூக மனப்பான்மைகள் தவிர, குறிப்பிட்ட ஆட்களுக்கும், குழுக்களுக்கும் ஏற்ப அமைந்த தனித்த மனப்பான்மைகளும் உள்ளன. நாம் குடும்பத்தின் வெவ்வேறு உறுப்பினரிடத்தும், வெவ்வேறு நண்பர்களிடத்தும், தெரிந்தவர்களிடத்தும் வெவ்வேறு முறையில் நடந்து கொள்கிறோம். தொழில், இனம், மொழி, சமயம்

முதலிய பல அடிப்படைகளில் அமைந்த குழுக்களையொட்டி நம் மனப்பான்மைகள் வேறுபடுகின்றன. நாம் சில தொழில்களை மதிப்பதும், வேறு சிலவற்றை இகழ்வதும் உண்டு. இவ்வாறே சமய இனக் குழுக்களையொட்டியும் நம் மனப்பான்மைகள் அமைகின்றன.

மனப்பான்மைகளின் தோற்றுவாய்: (Origin of Attitudes)

நமது மனப்பான்மைகளுட் சில, நமது சொந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டவை. நமது அனுபவம் குறுகியதுதான். ஆனால் நாம் அதைப் பொதுமைப்படுத்துகின்றோம். ஒரு குழந்தையை ஒரு பூனை நகத்தைக் கொண்டு கிழித்து விட்டதானால், அக்குழந்தை எல்லாப் பூனைகளுக்கும், எப்பொழுதும் அஞ்சுகின்றது. குறிப்பிட்ட ஆட்களைப் பற்றிய நமது மனப்பான்மைகள் பெரும்பாலும் சொந்த மனப்பான்மைகளேயாம். ஒரு குழுவிலுள்ள சிலரோடு நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நாம் அக்குழு முழுவதையும் பற்றிப் பல மனப்பான்மைகள் கொண்டுள்ளோம். சிலரைப் பற்றி நாம் கண்ட சில உண்மைகள் அனைவருக்கும் பொருந்தும் என்று நாம் சிந்தியாமல் முற்கொள்கிறோம் (assume). நம்மைப் பற்றியும் நமக்கு மனப்பான்மைகள் உள்ளன. பிறர் நம்மிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்து இவை அமைகின்றன. அவர்களுடைய நடத்தை அவர்களுடைய எண்ணத்தைக் குறிப்பதாக நாம் கொள்கிறோம். அவர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பதைப் பற்றிய நமது எண்ணம் நாம் நம்மைக் காணும் வகையைத் தீர்மானிக்கிறது.

மனப்பான்மைகள் அமைவதில் சமூக எதிர்பார்ப்பிற்கு முக்கிய இடம் உண்டு. ஆல்ப்போர்ட் இதனை நன்கு விளக்குகிறார். 'நமது முகக்குறிப்பும் தோற்றமும், பிறர் நம்மை அந்நேரத்தில் மதிக்கும் முறைக்கேற்ப அமைகிறது. பிறர் நம்மைப் பற்றி ஐயுறுகின்றனர் என்று நாம் எண்ணினால், நாம் ஏதோ தப்புச் செய்தது போன்ற உணர்ச்சி வருகிறது. பிறர் நம்மைத் தைரியசாலிகள் என்று கருதினால், ஏறுபோல் பீடுநடையும், நம்மை அறிவாளிகள் என்று எண்ணினால் அறிவு சான்ற முகக் குறிப்பும், சமூகத்தில் பெரியவராக நம்மைக் கருதினால், அதற்கேற்ற தோற்றமும் நம்மிடம் காணப்படுகின்றன.

சில மனப்பான்மைகளை நாம் ஏற்கனவே இயன்றவை யாகப் பிறரிடமிருந்து பெற்றுக் கொள்கிறோம். இவை சொந்த மனப்பான்மைகளல்ல. இவைகூட்ட அல்லது குழு மனப்பான்மைகள். ஒரு வகுப்பு மக்களுக்கேற்ப நாம் நடந்து கொள்வது அவர்களுடன் நாம் பெற்ற சொந்த அனுபவத்தை எப்பொழுதும் பொறுத்ததன்று. இந்நூலாசிரி யர், ஒரு தடவை சில மாணவரிடம் இந்துக்கள், பார்சியர், கிறிஸ்தவர் முதலானவர்களை விவரிக்கச் சொன்னர். அவ் வாறு விவரித்த சிலர் இச்சமுதாயத்தைச் சேர்ந்த மக்களைப் பார்த்ததில்லை என்றும் தெரிந்தது. இவர்களது மனப் பான்மை பிறருடைய முன் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு பெற்றதாகும். தாயார் பூனைக்கும் பல்லிக்கும் அஞ்சினால், இவ், அச்சத்தைக் குழந்தையும் பெற்றுக் கொள்கிறது. பெற்றோரும் ஆசிரியரும் ஒரு தொழிலை உயர்த்திப் பேசினால் குழந்தைகள் அதைப்பற்றி உயர்வாக நினைக்கின்றனர். பிற சமயங்களைப் பற்றிய எண்ணமும் இவ் வாறே அமைகிறது. பெரியோர் பிற குழுவினருடன் நடந்து கொள்ளும் முறை குழந்தைகளுக்கு முன்மாதிரியாக அமை கிறது. புத்தகங்களிலும், செய்தித்தாட்களிலும் காணப்படும் திரள் எண்ணம் (mass opinion) நமது எண்ணங்கள் அமைவதற்கான மற்றொரு மூலமாகும். ஒவ்வொரு பண் பாட்டிலும் சில செந்நிலைகள் (mores) உள்ளன. இவை எது நல்லது எது தீயது என்று குறிப்பிடுகின்றன. தனியாள் இச்செந்நிலைகளைத்தான் சரியான வழிகளுக்கு அடிப்படை என்று எண்ணுகிறார். பள்ளியிலும், சமய நிறுவனங்களிலும் அளிக்கப்படும் புறமுறைப் புகட்டலும், கருத்துப் பரப்பலும் மக்களுடைய மனப்பான்மைகளைத் தீர்மானிக்கும் ஏதுக் களேயாம்.

முற்சார்புகள் (Prejudices)

போதிய தகவல்களால் ஆதாரம் பெறுத மனப்பான்மை களை முற்சார்புகள் என்னலாம். முற்சார்புகள் குறிப்பிடு பொருளுக்குச் சாதகமாகவும் அமையலாம், பாதகமாகவும் அமையலாம். ஆனால் பொதுவாக, பாதகமான மனப் பான்மையையே இச்சொல் குறிக்கிறது. ஒரு தனி யாளையோ, குழுவையோ பற்றிய முற்சார்புடையவர் அந்த ஆளை அல்லது அந்தக் குழுவைக் கூடியவரை குறைத்துக் காண முயல்கின்றார். ஒரு மக்கட்குழு இத்தகைய நடத்தை உடையதாக அமையக்கூடும். முற்சார்புடையவர்கள்

தீர்க்கப்பட்டவரிடத்து அன்பு காட்டுவதில்லை; நெருங்கிப் பழகுவதில்லை; அவர் நலம் கருதுவதில்லை; அவருடைய வாய்ப்புக்களையும் அவர் நியாயமாக நடத்தப்படுவதையும் ஆதரிப்பதில்லை. அமெரிக்காவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் வெள்ளையர்–நீக்ரோவர் தொடர்புகளில் இத்தன்மையைக் காணலாம். உயர்சாதி இந்துக்கள், அரிசனங்களைப் பற்றி நெடுங்காலம் கொண்டிருந்த எண்ணமும் இத்தகையதே. அண்மையில் இந்தியாவிலுள்ள ராஜ்ய இடைத் தொடர்புகளிலும், உலகிலுள்ள பல்நாட்டுத் தொடர்புகளிலும் முற்சார்பு தாண்டவமாடுதைக் காண்கிறோம்.

முற்சார்பு ஒருவனைக் குருடனுக்குகிறது. அது ஓரச்சார் பற்ற உற்றுநோக்கலையும், ஆய்ந்து சிந்திக்கும் ஆற்றலையும் கெடுக்கின்றது. முற்சார்புள்ள மனிதர் பல தகவல்களை ஆதாரமாக்கிக் கொண்டு தமது தீர்ப்புக்களை மெய்ப்பிக்க முயல்கின்றார். இத்தகவல்கள் எப்படி உண்டாயின என்பதை அவர் காண்பதில்லை. எடுத்துக் காட்டாக, கறுப்பர்கள் உடற்கூறுகளில் வெள்ளையரினின்று வேறுபடுவதால் மனக்கூறுகளிலும் அவ்வாறே வேறுபடுவார்கள் என்று வெள்ளையர் எண்ணியதுண்டு. யூதருக்கு எதிராக ஏற்பட்டிருந்த பகைமை மனப்பான்மையை நிலைநிறுத்துவதற்காக, அவர்கள் கூர்மையுடையவர்கள், பேராசைக்காரர், குலநோக்குடையவர்கள், உண்மையை மறைப்பவர்கள் என்று கூறினர்கள். நீக்ரோக்களைத் தாழ்வாக மதித்த வெள்ளையர், அவர்கள் புலனடக்கமற்றவர், சந்தடி செய்பவர், பொறுப்பற்றவர், சூதாடுபவர் என்று கூறினர். இந்துக்களுட் சிலர், முகம்மதியர் துப்புரவற்றவர்கள் என்று எண்ணிக் கொண்டு அவர்களை இகழ்ந்தனர். அவ்வாறே சில முகம்மதியரும் இந்துக்கள் விக்கிரகங்களை வணங்குபவர் என்று இகழ்ந்ததுண்டு. வேலையாட்கள் பணத்திற்காகத்தான் வேலை செய்கிறார்களேயன்றி அவர்களுக்கு உண்மையான பொறுப்புணர்ச்சி கிடையாது என்று முதலாளிகள் கருதுவதுண்டு. இதற்கு ஏதுவாக அவர்கள் சில நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுவார்கள். ஆனால் மேற்கூறிய பண்புக் குறைகளெல்லாம் எவ்வாறு ஏற்பட்டன என்று மக்கள் பொதுவாகச் சிந்திப்பதில்லை. முற்சார்புக்குட்பட்ட மக்களிடம் ஒரு குறிப்பிட்ட பண்பு இருக்கும் என்று மதித்து அதற்கேற்ப அவர்களிடம் நடந்து கொள்வதால் இம்மக்கள் அப்பண்புகளை வளர்த்துக் கொள்கிறார்கள். இவற்றை உண்டாக்குவது முற்சார்புள்ள மக்களேயாம். முற்சார்புக்

குட்டபட்டவர்கள் தாம் எப்படி நடந்து கொண்டாலும் அடுத்த கட்சியினரின் நன்மதிப்பைப் பெற முடியாது என்று எண்ணி, தாம் எவ்வாறு இருக்கவேண்டுமென்று அவர்கள் எண்ணுகிறார்களோ அப்படியே நடந்து கொள் கிறார்கள். இவ்வாறு முற்சார்பு வட்டஞ் சுற்றி வளர்கிறது.

முற்சார்பால் ஏற்படும் தீங்குகள் :

முற்சார்புள்ள மக்கள் முற்சார்புக்குட்பட்டவர்களுக்கு எவ்விடத்தும் எப்பொழுதும் குறைந்த வாய்ப்புக்களையே அளிக்கின்றனர். வெள்ளையர் நீக்ரோக்களுக்குக் கல்வி யிலும், வியாபாரத்திலும், சமூக வாழ்க்கையிலும் ஒத்த வாய்ப்பு அளிப்பதில்லை. நீக்ரோக்களுக்கு வெள்ளையரை விடக் குறைந்த சம்பளமே கொடுக்கப்படுகிறது. சில இடங் களில் அவர்களது வாக்குரிமை கூட மறுக்கப்படுகிறது. பெருவாரிச் சமுதாயத்தினரின் முற்சார்புகள் சிறுபான்மை யரின் சமூகத் தேக்கத்திற்குக் காரணமாகிறது. முற்சார்பு வேறு சில உளவியல் ஊக்கிகளுடன் கலப்பதனால் பல அழிவுச் செயல்கள் விளைகின்றன. எடுத்துக்காட்டாக, ஏற்கனவே முற்சார்புக்குட்பட்ட ஒரு குழுவினருக்கு எதி ராக வன்செயலையும் சில துன்புறுத்து வேட்கையினர் (sadists) எழுப்பி விடக்கூடும். துன்புறு மயக்கம் (delusions of persecution) உள்ளவர்கள் பிறருக்குத் தவருன நோக்கங்கள் கற்பித்து அதற்கேற்ப அவர்களுக் கெதிரில் நடந்து கொள்கின்றனர். அரசியலிலும், சமூகத் திலும், பொருளாதாரத்திலும் முறிவடைந்த குழுவினர், பிற குற்றமற்ற குழுக்களைக் குற்றப்படுத்திப் பலியாக்குகிறார்கள். இதன் பயனுகப் பலியாக்கப்பட்ட மக்கள் குறுகிய குடித் தன்மையர் (clannish) ஆகிறார்கள்; சமுதாயத்தினின்று ஒதுங்கி வாழ்கிறார்கள்; மற்றவர்களினின்று வேறுபட்டுத் தோன்றுகிறார்கள். இந்த வேறுபாட்டையும், தங்களுடைய சமூக, பொருளாதார அரசியல் முறிவையும் அவர்கள் உணர்ந்திருப்பதால், தம்மை ஒதுக்கி வைத்துள்ள குழு வினரைப் பற்றி எதிர்மறை மனப்பான்மை கொண்டு அவர் களை வெறுக்கிறார்கள். இதனால் அவர்கள் சமூகத்தின் 'பிரச்சினைக் குழுக்கள்' (problem groups) ஆகின்றனர். அவர்கள் தங்களுக்குள்ளேயும் வன்செயல் உணர்ச்சியை வெளியிடுகிறார்கள். ஏனெனில் மனமுறிவை எங்கே யாவது வெளியிட்டே தீரவேண்டும். பிற குழுக்களுக் கெதிரேயுள்ள மனமுறிவு இடம் பெயர்கிறது. ஆகையால்

இம்மக்கள் தங்களுக்குள்ளே நட்பின்றிச் சண்டையிடும் மக்களாகிறார்கள்.

முற்சார்பு அதனை உடையவருக்கும் தீங்கு செய்வ தாகும். அவர் முற்சார்புக்குட்பட்ட மக்களுக்கெதிரே அற–எதிர் (immoral) அல்லது சமூக-எதிர்ச் (anti-social) செயல் கள் செய்யத் தூண்டப்படலாம். இம்மக்களுக்குச் சமூக உரிமையும் ஏற்றமும் இல்லாததால் இப்படிச் செய்வது எளிதாகிறது. மேலும் ஒரு குழுவிற்கெதிரே பண்பாட்டின் வழிப்பெற்ற முற்சார்பு, அதனையுடையோரின் உயர்ந்த தீர்ப்புக்களோடு முரண்படலாம். மக்கட் சமக் கொள்கை, நீதி, விடுதலை, மனித ஆளுமையில் உள்ளார்ந்த மதிப்பு முதலிய நம்பிக்கைகளை அவர் கொண்டவராஞல், இவற் றிற்கும், முற்சார்புக்கும் உட்போராட்டம் ஏற்படும். இதன் பயனாக அவர் வாழ்க்கையின் அமைதி குலையும். இராம கிருஷ்ண பரமஹம்சர் தம் மனமாற்றத்திற்கு முன் தமது பிராமணச் செருக்கை விட்டொழிக்க முடியாததால் மனக் கவலையுற்றிருந்ததாகச் சொல்லப்படுகிறது.[2]

முற்சார்பின் காரணங்களும், அது வேரூன்றும் வகையும் :

முற்சாற்பின் காரணங்கள் பல. முற்சார்பு பல வகை யில் வேரூன்றுகிறது. 'நாம்'. 'அவர்' என்னும் உணர்ச்சி யும், சமூக மைய நிலையும் ஒரு தனியாளின் வளர்ச்சியில் இயல்பான படிகள் ஆவன. பியாகே (Piaget) கூறியுள்ள படி, குழந்தையின் இயல்பான தன் முனைப்பு மையநிலை (ego-centricism) சற்றுப் பின்னர் சமூக மைய நிலையாக (socio–centricism) மாறுகிறது. நமக்கு அருகில் உள்ள வர்களை நாம் 'நம்மவர்கள்' (ours) என்று நினைக்கிறோம். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பங்கு பெறுதவர்களைப் 'பிறர்' அல்லது 'அவர்கள்' (they) என்று நினைக்கிறோம். 'பிறரை'க் கொஞ்சம் சமூகத் தொலைவிலேயே வைத்திருக் கிறோம். பழகாத விலங்குடன் எச்சரிப்புடன் நடந்து கொள்வது போல அவர்களிடமும் நடந்து கொள்கிறோம். ஆனால் இந்த அயன்மை உணர்ச்சி மட்டும் முற்சார்போடு தொடர்புள்ள எதிர்ப்பு மனப்பான்மைக்கும் புறக்கணிப் புக்கும் போதிய விளக்கம் ஆகாது. 'அவர்கள்' 'நம்' முடைய விழுமியங்களிலும் வாழ்க்கை வழிகளிலும் தரங்களி லும் பங்கு கொள்வதில்லை என்று நாம் நினைத்தால், அவர் களுடைய வழிகளும் விழுமியங்களும் நம்முடைய அழ

குணர்ச்சியையும், அற உணர்ச்சியையும் பாதிக்கின்றன என்று உணர்ந்தால், முற்சார்பு தோன்றுகிறது. 'நாம்' செய்கிறது தான் ஒரே சரியான வழி என்று எண்ணுகிறோம். நமது வாழ்க்கை வழிகளிலும், விழுமியங்களிலும் பங்கு கொள்ளாதவர்களை, நமது பற்றுக்களிலும், அழகுசார் விருப்புக்களிலும் பங்கு கொள்ளாதவர்களை அயலர், அல்லது தாழ்ந்தோர் என்று எண்ணுகிறோம். இதன் பயனாக ஒதுக்குதலும் (segregation) வேறு பிரித்துக் காண்பதும் (discrimination) ஏற்படுகின்றன. "அவர்கள் பகட்டுநிற ஆடை அணிகிறார்கள்," "அவர்கள் நாள் தோறும் குளிப்பதில்லை" — இவை போன்ற கூற்றுக்கள் விலக்கலையும் புறக்கணிப்பையும் காட்டுகின்றன. நாமெனும் உணர்ச்சியின் விரிவுக் கருத்தாகிய குழுச்செருக்கு, முற்சார்பை வலுப்படுத்துகிறது. குழு முற்சார்புடன் பொருளாதார நோக்கங்களும் சேர்ந்தால் நிலைமை இன்னும் சிக்கலடைகிறது. எடுத்துக்காட்டாக 'பனியாக்களைப்' பற்றிய முற்சார்பு வலுத்ததற்குக் காரணம், இம்மக்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் முன்னேறியிருப்பதேயாகும். மேலும் பெரிய தொழிற் பதவிகள் ஒரு குழுவின் உறுப்பினருக்குக் கிடைத்தால் இல்லார் மனத்தில் உடையாருக்கு எதிராகத் தீய எண்ணமும் பகைமையும் உண்டாகின்றன. ஏற்கனவேயுள்ள முற்சார்பு வலுக்கிறது. இத்தகைய விறைப்பு (tension) ஏற்பட்ட பின் 'பிறர்' குழுவைப் பற்றிய சித்திரம் (picture) தரமடைகிறது. (standardized) "இம்மக்கள் எப்பொழுதும் இப்படித்தான்....."என்ற கூற்று எழுகிறது. *

உளப்பாகுபாட்டாளர் முற்சார்புக்கு மற்றொரு காரணமும் காட்டுவர். ஒருவர் தம்முடைய போதுமையின்மை (inadequacy), குற்றம், பகைமை முதலிய உணர்ச்சிகளைத் தாம் எதிர்த்துப்போராடும் கட்சியினர்பால் ஏற்றிக் காண்கிறார். குற்ற உணர்ச்சியுள்ளவர்கள் அதனைப் புற குழுக்கள்பால் புறத்தேற்றுகிறார்கள் (project) என்பது காலிஃபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் இயற்றிய ஆய்வுகளிலிருந்து தெரிகிறது. பாட்னாப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் எஸ். கே. மைத்திரா இயற்றிய ஆராய்ச்சியும் இதனை வலியுறுத்துகிறது.

முற்சார்பு தோன்றுவதற்கு மனமுறிவும் ஒரு முக்கிய காரணமாகும். புகழ்வன்மை இல்லாதவர் அதனை உடைய

* G. Murphy எழுதிய In the Hinds of Men காண்க.

வர்பால் முற்சார்பு கொள்ளலாம். இத்தகைய முற்சார்பின் மூலம் ஒரு தனியாள் அல்லது குழு தம் தாழ்வுணர்ச்சிக்கு ஈடு செய்துகொள்ள முடிகிறது.

ஆகையால் முற்சார்பின் வேரானது, முற்சார்புள்ள மனிதரின் ஆளுமை அமைப்பிலேயே அடங்கியுள்ளது எனலாம். சமூக எதிர்ப் பாங்குகள், (unsocial tendencies) விரும்பத்தகாத மனப்பண்புகள் சமூகம் ஒத்துக்கொள்ளாத பண்புகள் முதலியவற்றை உடையவர்கள் இவற்றைப் புறத் தெறிந்து பிறரிடத்து இவற்றைக் காண்கிறார்கள். இல்லாத முற்சார்பு ஓர் எதிரூன்றற் பொறியமைப்பு (defence mechanism) ஆகிறது. சந்தேகம், பேராசை, மீக் கிளர்ச்சி, அற-எதிர்த்தன்மை ஆகியவற்றைத் தன்னுள் கொண்ட மனிதன் இவற்றைப் பிறர்பால் சார்த்தி, பிறரிடம் இக் குணங்கள் இருப்பது போல எண்ணி நடந்துகொள்கிறான்.

முற்சார்பை மாற்றலும் போக்குதலும்:

சொந்த அனுபவத்தால் ஏற்படும் மனப்பான்மை களுக்கு ஓரளவு ஆதாரம் உண்டென்று சிலர் கூறுவர். ஆனல் நாம் நம்முடைய குறுகிய அனுபவத்தைப் பொது மைப்படுத்துகிறோம். நாம் பார்க்காத பலரையும் உள் ளடக்கும்படி மனப்பான்மைகளை விரித்துக்கொள்கிறோம். ஆகையால் நமது பொதுமைப்பட்ட மனப்பான்மைகளை மாற்றுதற்கு ஒரு வழி, நமது உற்று நோக்குகளைப் பெருக்கு தலும், நமது பொதுமைகளைக் காண்நிலை தாண்டி அறிவியல் நிலைக்குக் கொண்டு வருதலுமாம். கருத்துப் பரப்பல், சொற்பொழிவுகள், போதனை முதலியவையும் முற்சார்பை மாற்ற உதவுகின்றன என்பது புற ஆய்வுகளி லிருந்து தெரிகிறது. பிற குழுக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் திரைப்படங்களையும் காட்டலாம். இவற்றின் மூலம் மக்கள் தம் முற்சார்புற்ற எண்ணங்களையும் மனப் பான்மைகளையும் மாற்றிக் கொள்ளக்கூடும். மதுவிலக்கு, பரத்தைமை ஒழிப்பு, இரவலரை வேலையில் அமர்த்தல் முதலிய பிரச்சினைகளைப் பற்றி விரும்பத்தக்க மனப்பான்மை களை வளர்க்கவும் இம்முறை பயன்படுகிறது. இன்னும் பல பல்கலைக்கழகங்களில், சமூக வியலரின் பகுதிகளாக, இனங்கள், தொழில்கள், பல தேச மக்கள் பற்றிய தகவல்கள் அளிக்கப்படுகின்றன. மாணவர் இதற்குரிய, தேர்ந்தெடுத்த

வாசிப்பு நூல்களைப் படிக்கிறார்கள்; பயணங்களும் செல்கிறார்கள்.

ஆனால் இம்முறைகள் எப்பொழுதும் வெற்றி பெறுவ தில்லை. சில வேளைகளில் கருத்துப் பரப்பலில் நாம் எதிர் பார்த்த விளைவுக்கு மாறான விளைவு ஏற்படுகிறது. மக்கள் மனத்திலுள்ள எண்ணங்களை எப்பொழுதும் சொற்பொழிவு களால் அகற்றி விட முடியாது. அவர்கள் நாம் கொடுக்கும் தகவல்களைக் கேட்டுவிட்டு, இவையெல்லாம் 'விதி விலக்கு கள்' என்று தள்ளிவிட்டு, தமக்குச் சாதகமான வேறு தகவல்களை நினைவுபடுத்திக் கொள்ளக் கூடும். எடுத்துக் காட்டாக, மனிதன் பெண்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதுகிறான். இதற்கு எதிரே ஃகார்கி, மைத்திரேயி, இலக்குமிபாய், விஜயலட்சுமி பண்டிட், போன்றவர்களைப் பற்றிக் கூறினால், இவர்கள் 'விதிவிலக்கு' ஆவார்கள் என்று கருதுகிறான். மாகாண அல்லது மொழி முற்சார் புடையவர்கள் பிற மாகாணக் குழுவினருக்குச் சில குறை உண்டு என்று எண்ணுகிறார்கள். இக்குறை இல்லாத மக்களை எடுத்துக் காட்டினால் அது அவர்களுக்கு விதி விலக்காகத் தோன்றுகிறது. மக்கள் கருத்துப் பரப்பலுக்கு எதிரான முற்சார்பு கொண்டுள்ளதாலும் கருத்துப் பரப்பல் முறை தோல்வியடைகிறது. பொதுவாக, ஆழ்ந்த நம்பிக் கைகள் தனித்தனியே தொங்கிக் கொண்டிருப்பதில்லை. இவையெல்லாம் ஒரு மொத்த மன அமைப்பின் பாகங் களாகின்றன. இவற்றை மாற்றுதற்குத் துண்டுபட்ட முறைகள் பயன்படா.

அறிவு சார்ந்த முறைகள் தோல்வியடைவதற்கு மற் றொரு காரணமும் உண்டு. முற்சார்பு பெரும்பாலும் ஓர் உளவியல் நிறைவிப்பு (gratification) முறையாகும். அது ஓர் எதிரூன்றல் பொறியமைப்பு (புறத்தெறிதல் அல்லது ஈடு செய்தல்) ஆகும். இங்கு மனப்பான்மையை மாற்று வதாவது, ஒருவர் தம்மைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணத் தையே விட்டுவிட வேண்டியதிருக்கிறது. இதன்மூலம் அவ ருடைய உள்நிறைவு பெரிதும் குறைகிறது. ஆகையால் ஒரு மனப்பான்மையை மாற்றுவதால் ஒருவருடைய ஏற்றமும் காப்புணர்ச்சியும் குறையாது என்ற நிலைமை ஏற்பட்டால் தான் நாம் அத்தகைய மாறுதலை எதிர்பார்க்க முடியும். வெவ்வேறு குழுக்களிலுள்ள மக்கள் பொதுவான பிரச்சினை களை எடுத்துக் கூடி உழைத்தால் அவர்கள் மனிதத் தன்

மையின் சாரத்தைப் புரிந்து கொள்ளக்கூடும். மனப்பான்மையை மாற்றுவதற்குப் பல ஊக்கிகளையும் கையாளலாம். ஃகிரகரி ராஸ்ரன் (Gregory Razran) இயற்றிய புற ஆய்வு ஒன்றை ஃகார்டினர் மர்ஃபி (Gardner Murphy) எடுத்துக் கூறுகிறார்.; இத்தாலியர், ஃஅங்கேரியர், ஜப்பானியர், ஜெர்மானியர் முதலிய வெவ்வேறு குழுவின் மக்கள் பெயரை மாணவர் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அப் பொழுது தின்பண்டம் பரிமாறப்படுகிறது. எந்தக் குழுப் பெயர்களைப் படித்துக் கொண்டிருக்கும்போது தின்பண்டம் பரிமாறப்படுகிறதோ, அந்தக் குழுக்களைப் பற்றிய பகைமை குறைவாகக் காணப்பட்டது. இவ்வாறு மனப்பான்மை மாற்றத்தில் ஊக்குவிப்பின் இன்றியமையாமை தெரிகிறது. மக்கள் ஒரே நிலைமையைக் கொண்டு பொதுமைப்படுத்தக் கூடியவர்கள் என்பதும் தெரிகிறது. ஆகையால் அடிப்படையான உயிரியல், உளவியல் தேவைகள் கொண்ட நிலைமை மக்களை ஒன்றுபடுத்தி, சாதகமான மனப்பான்மைகளை வளர்க்க முடியும். பொதுவாகப் பகிரப்படும் ஆழ்ந்த எழுச்சி அனுபவங்களின் விளைவாக, மனிதன் இயற்றிய அடைப்புக்கள் தகர்ந்து விடக்கூடும். ஸ்பினோசா (Spinoza) கூறியள்ளபடி ஓர் எழுச்சியை இடம் பெயர்க்க மற்றொரு எழுச்சி தேவைப்படுகிறது. ஆகையால் நாம் மக்களுடைய அறிவை அணுகுவதை விட அவர்களுடைய எழுச்சியைத் தொட முயலுவது நல்லது. ஒருவரைப் பற்றி ஒருவர் அறிவது மட்டும் முற்சார்பைத் தடுப்பதில்லை. இந்துக்களும், முஸ்லீம்களும் பல நூற்றாண்டுகளாக ஒன்றுக வாழ்ந்து, ஒருவரையொருவர் அறிந்தும் பகைமை விடாதிருந்துள்ளார்கள். இட அண்மை (proximity) மட்டும் போதாது. அது ஒரு வேளை அடிப்படை வேற்றுமைகளை வலியுறுத்தக் கூடும். ஆகையால் பொதுச் செயல்களில் எழுச்சி சார்ந்த பங்கெடுத்துக் கொள்ளுதல் அவசியம். மாணவர் ஒன்றுக வாழ்ந்து ஒன்றுக இயங்கி, ஒன்றுகப் படித்து, பொதுப் பிரச்சினைகளைப் பற்றி உரையாடும் பல்-நிகழ்ச்சித் திட்டங்கள் பயன்படக்கூடும்.

முற்சார்புகளை முற்றிலும் ஒழிக்க வேண்டுமானால், வாழ்க்கையின் அடிப்படை விழுமியங்கள் பொதுவாக அமைய வேண்டும். தூய்மையான நல்வாழ்க்கையே இன்றியமையாததென்று வெவ்வேறு சமயத்தினர் உணர்ந்தால் சமயக் குழுக்களுக்கிடையே முற்சார்பு ஏற்படாது. மனிதனுடைய ஆன்மீக, அற, அழகு உணர்ச்சிகளை நன்கு

பயிற்றுவித்தால் முற்சார்பை அறவே ஒழித்துக் கட்ட முடியும். மக்களுக்கு உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று பேராசிரியர் ரோஸ் கூறியுள்ளார். இன வேற்றுமை முதலிய பிரச்சினைகளைப் பற்றிய அறிவியல் உண்மைகளை மக்கள் அறிய வேண்டும். முற்சார்பு அதை உடையவருக்கே உளவியல் ஊறு விளைவிக்கக் கூடிய தென்று அவர்கள் தெரித்துகொள்ள வேண்டும். முற்சார் புள்ள மக்கள் நாணும் நிலை ஏற்பட வேண்டும். இன வழி யிலும், பிற முறையிலும் ஏற்படும் பிரித்தறி வேறுபாடு சட்டத்தின் மூலம் தடுக்கப்பட வேண்டும். முற்சார்புள்ள மக்கள் தங்கள் எண்ணங்கள் உண்மையை அடிப்படை யாகக் கொண்டனவா? செவி சாய்ப்பினால் (hearsay) வந்ததா? என்று ஆராயவேண்டும். குழந்தைகள் சமூக– மைய நிலையில் இறுத்தம் பெறுதபடியும் நாம் முயற்சி எடுக்கவேண்டும். பிற மக்களுடைய வாழ்க்கை வழிகளை அவர்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களிடமும் நம்மைப் போலவே குணங்களும் குறைகளும் உளவென்று காட்ட லாம். குழந்தைகள், பண்பாட்டு முறையில் தம்மின் வேறு பட்ட குழந்தைகளோடு பழகவேண்டும். இதன்மூலம் 'சமூகப்பொறை' (Social tolerance) ஏற்படக்கூடும்.

மனப்பான்மைச் சோதனைகள் :

பொதுவாக, முதிர்ந்தோரின் பனப்பான்மைகள் நிலை யாக அமைந்தவை. மனப்பான்மைகள் நடத்தையைத் தீர்மானிப்பதால் மக்களுடைய மனப்பான்மை அளப்பதன், மூலம் அவர்களுடைய நடத்தையை முற்கூற முடியும் என்று உளவியலர் எண்ணுகிறார்கள்.

மனப்பான்மையைச் சோதிப்பதற்குரிய சொல் முறைகள் :

ஒருவர் ஆட்களையும் குழுக்களையும், சமூகப் பிரச்சினை களையும் பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மைகளை (வெறுப் புக்கள், நம்பிக்கைகள், விருப்புக்கள் முதலியவற்றைச்) சொல்முறை மூலம் அளக்க முயன்றுள்ளனர். அதாவது ஒருவர் சொல்லுவது அவருடைய செயலுக்கு அறிகுறி யாகும் என்ற முற்கோளை அடிப்படையாகக் கொண்டு இச்சோதனைகள் இயற்றப்படுகின்றன.

சொல்முறைகளுள் வினநிரல் முறையும் ஒன்று. 'ஆம்' 'இல்லை' அல்லது 'ஐயம்' என்று மக்கள் பதிலளிக்க வேண்டிய கேள்வி வரிசைகள் அமைக்கப்படுகின்றன.

(எ...டு)

1. நீர் உம் ஆசிரியரை மதிக்கிறீரா?

2. ஆசிரியத் தொழிலை நீர் மதிப்பதுண்டா?

3. மாணவிகளுக்கென்று தனியான பாடத்திட்டம் தேவையா?

4. குடும்பக் கட்டுப்பாடு விரும்பத்தக்கதா?

5. இப்பொழுது ராஜ்ய எல்லைகளை மாற்றியமைப்பது விரும்பத்தக்கதா?

6. குமரப்பருவத்தினர்பால் திரைப்படங்களின் விளைவு விரும்பத்தக்கதா?

மற்றொருவகைச் சொல் முறையில் சோதிக்கப்படுபவர் முன் ஒரு வாக்கியப் பட்டியல் வைக்கப்படுகிறது. அவர் தாம் அக்கூற்றுக்களை ஒத்துக்கொள்கிறாரா, ஒத்துக் கொள்ளவில்லையா என்று சொல்வதுடன் அவருடைய ஒத்துக் கொள்ளுமை, அல்லது மறுப்பு வன்மையையும் குறிப்பிட வேண்டும். (எ—டு)

1. பெண்களுக்கென்று தனிக்கல்லூரி வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டும்.

2. இந்தியப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் கட்டாய மாக இந்தி படிக்க வேண்டும்.

3. பெண்களுக்குத் தந்தையின் சொத்தில் சட்டப்படி உரிமை அளிக்க வேண்டும்.

4. தனியாட் சொத்து முறை ஒழிக்கப்படவேண்டும்.

5. ஒரு வேலைக்கு மனுச் செய்பவரை, அவருடைய சமயத்தையும் சாதியையும் எழுதச் சொல்லுவது தவறு.

6. ஒவ்வொரு சமுதாயத்திலும் மாணவருக்கென்று சிறப்பான படிப்பு உபகாரச் சம்பளமுறை இருக்க வேண்டும்.

7. ஒருவருக்கு நோய் வந்தால் அவரைப் பொது மருத்துவ மனையில் சேர்க்கவேண்டும்.

8. இரவலரைப் பிச்சை கேட்க அனுமதிக்கக் கூடாது.

ஃபொகார்டஸின் 'சமூகத் தொலைவுச்' சோதனை மற்றொரு சொல்முறைச் சோதனையாகும். ஒருவர் மற்றொரு தொழிற்குழு, சமுதாயம், மொழிக்குழு, தேசத்தவர், முதலிய வரை எந்த அளவுக்கு ஏற்கின்றனர் என்று அறிவதற்கு இதனைப் பயன்படுத்தலாம். இச்சோதனையின் ஒரு வடிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. பதிலளிப்பவர் பொருந்துகிற கட்டத்தில் குறியிட்டுத் தம் ஏற்பைக் குறிப்பிடவேண்டும்.

சொல்வகைச் சோதனையில் சொல் அமைப்பினால் ஏற்படும் இடர்ப்பாட்டையும் நாம் கவனிக்க வேண்டும். எடுத்துக் காட்டாக 'கருத்தடையைப் பற்றிக் கேட்டால் பல மக்கள் அதை எதிர்க்கக்கூடும். ஆனால் 'குடும்பக் கட்டுப்பாடு' என்று சொன்னால் அவர்கள் அதை ஏற்கக் கூடும். இவ்வகைச் சோதனையில் மற்றொரு குறையும் உண்டு. பலர் வினாக்களைப் பற்றிச் சிந்தியாமல் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று குருட்டுத்தனமாகப் பதில் சொல்லக் கூடும்.

ஃபொகார்டஸ் கணிநிரலின் மாற்றியமைப்பு

1.	வீட்டில் குடிக்கூலி கொடுத்து இருக்க	அண்டைய ராக வாழ	விருந்தாளி யாக	இக்குழுவைச் சேர்ந்தவர் இருப் பதை நான் விரும் புவேன்
2.	எனது வர வேற்பு அறையில் அமர	எனது சமைய லறைக்குள் வர	எனதுவீட் டுத் தொழு கை அறைக்குள்வர	* இக்குழுவினரை அனுமதிப்பேன் *

3.	எ ன து வீட்டில்	அவருடைய வீட்டில்	அருந் தகத்தில்	இக்குழுவினருடன் இருந்து சாப்பிடு வேன்.
4.	நான் திரு மணம் செய்து கொள்ள		என்னு டைய தம்பி தங்கையர் திருமணம் செய்து கொள்ள	இக்குழுவில்பெண் தேர்வதை நான் அனுமதிப்பேன்

* வெவ்வேறு தொழிற் குழுக்கள் சமுதாயங்கள், தேசமக்கள் முதலி யோரை இங்குக் குறிப்பிடலாம்.

கட்டுரை முறை:

இம்முறையில், கடிதங்கள், தன் வரலாறுகள், நாட் குறிப்புக்கள், பேட்டிகள் முதலியவற்றை அடிப்படை யாகக் கொண்டு மனப்பான்மைகளையும் எண்ணங்களையும் ஆராய்கிறோம். வாய்ச் சொற் பேட்டியில், பேட்டி காணப் படுபவரின் தான்தோன்றித் (spontaneous) துலங்கல்களைப் பெறுவது ஒரு சிறப்பாகும். நாட்டுக் கதைகள், நாட்டுப் பாடல்கள், பழமொழிகள் முதலியவற்றை ஆராய்வதன் மூலம் ஒரு பண்பாட்டுக் குழுவின் சமூக மனப்பான்மை களைத் தெரிந்துகொள்ளலாம். தனியாட்களிடம், பிற சமுதாய மக்களை, மொழிக் குழுக்களை சமூக நிகழ்ச்சிகளை அல்லது அரசுக் கொள்கைகளைப் பற்றிக் கட்டுரை எழுதச் சொல்லி அவற்றையும் ஆராயலாம்.

கட்டுரை முறையின் மூலம் மனப்பான்மையின் தோற் றத்தையும், வளர்ச்சியையும் பற்றி அறிய முடிகிறது. இக்காரணத்தால் இது மற்ற முறைகளிலும் உயர்ந்தது எனலாம். ஆனால் இதில் ஒரு குறை உண்டு. தம் வரலாறு அல்லது நாட்குறிப்பு எழுதுபவர், பிறர் அதைப் படிப் பார்கள் என்ற காரணத்தால் தம் உண்மையான எண்ணங் களை வெளியிடாமல் அதை எழுதியிருக்கக் கூடும்.

பலவிற்றேர்தலும் (Multiple choice)**அடித்துவிடற் சோதனையும்:** (Cross-out Test)

இம்முறையில் பல கிளைக் கூற்றுக்கள் கொடுத்து அவற்றுள் ஒருவருடைய மனப்பான்மையோடு மிகவும் நெருங்கியதற்கு எதிரே X குறியிடச் சொல்லலாம். எடுத்துக்காட்டாக, பல்வேறு உயர் தொழிற்களைப் பற்றிக் கல்லூரி மாணவர் கொண்டுள்ள மனப்பான்மையைச் சோதிக்க வேண்டுமானால், சில உயர் தொழிற்களை நெடும்பத்தித் (column) தலைப்புக்களாகவும், சில பண்புகளை வரிசைச் சுட்டுகளாகவும் (row captions) அமைத்து, பொருந்தும் இடங்களில் X குறியிடுமாறு கூறலாம். (எ-டு)

	ஆசிரியத் தொழில்	மருத்துவம்	பொறியியல்	வணிகம்
பெருந்தன்மையது				
பொருட்செல்வம் பயப்பது				
அதிகவேலை உள்ளது				
மதிப்பிற்குரியது				

இம்முறையில் சில குறைகள் உள்ளன. சோதனையில் பயன்படுத்தும் சொற்கள் சோதிக்கப்படுபவருக்குத் தெளிவான திட்டவட்டமான பொருள் பயக்காமல் இருக்கலாம். மேலும் சோதனையில் உள்ள சொற்பட்டியலே குறைவுடையதாக இருக்கலாம். சோதனை இயற்றியவர் சொல் தேர்வில் தம் மனப்பான்மைகளைப் புறத்தெறிந்திருக்கக் கூடும். சொல் வரிசை முறையிலும் தவறு இருக்கலாம். (ஒரே சொல் வரிசையில் முன் வந்தால் பெறும் பதில் வேறு, பின் வந்தால் பெறும் பதில் வேறு).[4]

சொல் முறைகளில் ஒரு பொதுவான குறை உளது. சோதிக்கப்படுபவரின் விடைகள் அவருடைய மனப்பான்மையின் நம்பகமான அறிகுறி என்று கொள்ள முடியாது. ஒரு வெறும் சொல் துலங்கலைக் கொண்டு ஒருவருடைய உண்மை நடத்தையை முற்கூற முடியாது. உண்மையான மனப்பான்மையை மறைப்பதற்கும் ஒருவர் சொல் துலங்கலைத் தெரிந்து பயன்படுத்தலாம். மேலும் வழக்கமான பதில் சொல்லும் பொதுப் போக்கும் உண்டு. பால் தொடர்பு, சமயம், அறம் முதலிய துறைகளில் இதனைச் சிறப்பாகக் காணலாம். 'மக்கள் நியாயமாக, உண்மையாக, பணிவாக, கட்டுப்பட்ட வாழ்க்கையராக இருக்க வேண்டும்' என்று ஒருவர் சொல்லலாம். ஆனால் பல வாழ்க்கை நிலைகளில் அவருடைய நடத்தை அவருடைய சொல்லுக்கு மாறுக இருக்கக்கூடும். குடும்பக் கட்டுப்பாடு நல்லது என்று சொல்லுகிறவர் அதை நடைமுறையில் பயிலாமல் இருக்கலாம். ஒருவருடைய நடத்தை பல சுற்று நிலைகளைச் (circumstances) சார்ந்து அமைவது. ஒருவர் ரயில் வண்டிப் பெட்டியில் தம் இருக்கையை ஒரு பெண்ணுக்கு விட்டுக் கொடுப்பாரா என்பது, பல நிலைமைகளைப் பொறுத்தது. அவர் ஓய்வின்றிப் பயணம் செய்யும் தொலைவு, புறப்படுமுன் அவருக்குக் கிடைத்த ஓய்வு, நிற்கும் பெண்ணின் ஏற்றம், தோற்றம் முதலிய பல கூறுகளும் அவருடைய முடிவைப் பாதிக்கின்றன.

மனப்பான்மையைச் சோதிக்கும் பிற முறைகள்: (தரமிடுதல், வரிசைப்படுத்தல், கணிநிரல்)

தரமிடு முறையில் (rating method) ஒரு கூற்றுடன் பல எண்ணப் பாகைகள் (degrees) கொடுக்கப்படுகின்றன. சோதிக்கப்படுபவர் அவற்றுள் ஒன்றைத் தேர வேண்டும். 'திட்டமாகச் சரிதான்', 'ஒருவேளை சரியாகலாம்', 'ஐயம்', 'ஒருவேளை தவருகலாம்', 'திட்டமாகத் தவறுதான்' முதலிய தொடர்களைக் கொண்டு இப்பாகைகளைக் குறிப்பிடலாம். ஃபொகார்டஸின் சமூகத் தொலைவுக் கணிநிரல் மேற் கூறிய தரமீட்டு முறையின் முன்னேற்றமாகும். இதில் வெறும் கூற்றுக்களுக்குப் பதிலாக உண்மையான வாழ்க்கை நிலைமைகள் கொடுக்கப்படுகின்றன.

வரிசைப்படுத்து முறையில் (ranking method) பல கூற்றுக்களைக் கொடுத்து அவற்றைச் சோதிக்கப்படுப

வரின் விருப்பு வரிசைக்கேற்ப (order of preference) அமைக்கச் சொல்லுகிறோம். ஆனால் வரிசைப்படுத்த வேண்டிய கூற்றுக்கள் பலவாக இருந்தால் வரிசைப் படுத்தும் வகை கடைசியில் திட்பம் குறைகிறது. மேலும் அப்பட்டியலிலுள்ள சில கூற்றுக்களைப் பற்றிச் சோதிக்கப் படுபவருக்கு மனப்பான்மை அமையாமலே இருக்கலாம். ஆனால், எழுதச் சொன்னதற்காக அவர் அதற்கு ஏதேனும் ஓர் இடம் அளிக்கலாம்.

மனப்பான்மைக் கணிநிரல்களில் (scales) சுருக்கமான சில கூற்றுக்களே கொடுக்கப்படுகின்றன. ஆகையால் சோதிக்கப்படுபவர் களைப்படைவதில்லை. தர்ஸ்ட்டன் (Thurstone) இம்முறையைக் கையாண்டார். இக் கணி நிரல்களிலுள்ள கூற்றுக்கள் இருபொருள் பயவாதவை. ஆகையால் சோதிக்கப்படுபவர் ஒரு கூற்றைத் திட்டமாக ஏற்கவோ, புறக்கணிக்கவோ முடியும். கொடுக்கப்படும் கூற்றுக்கள் ஆய்வாளரால் புனையப்படுபவையல்ல. அவர் சோதிக்கப்படும் குழுவிலுள்ள மக்களிடமிருந்தே இக் கூற்றுக்களைத் திரட்டுகிறார். இக்கூற்றுக்களை ஒரு நடுவர் குழுவிற்குக் கொடுத்து, வரிசைப்படுத்தி, இரட்டுறுபவை (ambiguous), பொருந்தாதவை முதலியவற்றைப் புறக் கணித்து, மற்றவற்றை ஆதரிப்பு (favourableness) வரிசைப்படி மதிப்பிட்டு அமைக்கின்றனர்.

தர்ஸ்ட்டன் கணிநிரலில் நடுவரின் நேரம் அதிகமாகச் செலவாகிறது என்ற குறை உளது. (கணிநிரல்களைப் பற்றிய விருத்தி உரையாடலை இறுதி இயலில் காண்க.)

REFERENCES

1. F. H. Allport, Social Psychology p. 321.
2. May Muller, quoted by J. B. Pratt, The Religious Consciousness.
3. G. Murphy, The Minds of Men, p. 220.
4. Albig, Public Opinion, p. 193.

———

14. கேட்போர் அவையும் கும்பலும்

(Audiences and Crowds)

கேட்போரவை : (Audience)

கேட்போரவை ஒரு தற்காலிகக் கூட்டமாகும். இதன் உறுப்பினர் ஒரு திட்டமான, ஒத்த நோக்கத்தால் கூடியுள்ளனர். ஒவ்வொருவரும் தம்முடைய சொந்தக் கவர்ச்சியின் பயனாக அந்த இடத்திற்கு வருகிறார். கேட்போரவையின் அளவு, எத்தனை பேர் அந்தப் பொருளைப் பற்றி அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதைப் பொறுத்தது; கூடுவதற்குள்ள இட வசதியையும் பொறுத்தது.

அவை வகைகள் :

அக்கறைகளில் பல வகைகள் உள்ளன. ஆகையால், அவைகளிலும் பலவகைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, மாணவர் போதனைக்காக வகுப்பறைக்கு வருகிறார்கள்; சொற்பொழிவு கேட்பதற்காக, அல்லது சொற்போர் காண, அல்லது சமயப் பிரசங்கம் கேட்பதற்காக, ஒரு பேரறைக்கு வருகிறார்கள். மக்கள் பொழுது போக்கிற்காகத் தியேட்டருக்குச் செல்கிறார்கள். மக்கள் தம் வீட்டிலும், சமுதாயத்திலும் பெறுவதிலும் வேறுன இன்பம் விழைவதால்தான் பொழுதுபோக்கு அவைகள் தோன்றியுள்ளன. எக்காலத்திலும் மக்கள் சமய வாதங்களையும் கீர்த்தனைகளையும் கேட்பதற்குக் குழுமியுள்ளனர். நாடகங்கள் பார்க்கவும் மக்கள் கூடியுள்ளனர். ஆனல் பண்டைக் காலத்தை விட இன்று கேட்போரவைகள் அதிகமாகக் கூடுகின்றன. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவதாக, மக்கள் முன்போல் ஒருவரோடொருவர்

நெருங்கிய தொடர்பு கொள்வதில்லை. இரண்டாவதாக, மக்களுடைய அக்கறைகள் இக்காலத்தில் மிகவும் வேறு பட்டவையாக அமைந்துள்ளன. மக்கள் முன்போல் தம் அண்டையர் வீட்டிற்கு அடிக்கடிச் செல்லுவதில்லை. அதற்குப் பதிலாக, தம் குடும்பத்தோடு, தியேட்டர் களுக்கும் சொற்பொழிவுப் பேரவைகளுக்கும் செல்லு கின்றனர்.

எல்லா அவைகளுக்கும் பொதுவானதொரு நிலைமை உண்டு. அதாவது ஒவ்வொருவரும் (நடிகரை அல்லது பேச்சாளரைப்) பார்க்கவும் கேட்கவும், அவரால் தூண்டப் படவும் ஆயத்தமாக அங்குச் செல்கின்றனர். ஆனால் எல்லா இடங்களிலும் அவைப் படிவம் ஒன்றுபோல் இருப்பதில்லை. அவையில் இயற்றுவோருக்கும் (performer) கேட்பவருக்கும் இடையேயுள்ள ஊடாட்டம் ஒவ்வொரு இடங்களிலும் வேறுக அமைவதே இதற்குக் காரணம். பேசுபவர் அல்லது நடிப்பவர் அந்நேரத் தலைவராகிறார். அதாவது அவர் ஆதிக்கம் செலுத்துகிறார்; அல்லது ஆதிக்கம் செலுத்த முயல்கிறார். அவையோர் அவரால் தூண்டப் பெற ஆயத்தமாக இருக்கிறார்கள். வெவ்வேறு வகையான அவைகளில் இத்தலைமையைத் தீர்மானிக்கும் கூறுகள் வெவ்வேறுகின்றன. இத்தலைமை யானது அவையின் **தன்மையையும், எதிர்பார்ப்புக்களையும் அளவையும்** பொறுத்தது. எடுத்துக்காட்டாக, கோயிலில் கூடியுள்ள சமய அவையானது, போதகரின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்கிறது. அந்த நிலையில் குறிப்பிட்ட முறை யில் நடந்து கொள்ளுமாறு அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள் ளார்கள். கல்லூரியில் விருப்பப் பாடம் படிக்கும் சிறு எண்ணிக்கையுள்ள வகுப்பு மாணவரும் இவ்வாறே நடந்து கொள்கிறார்கள். ஆனால் கட்டாயப் பாடம் படிக்கும் மிகப் பல மாணவர் கொண்ட வகுப்புக்களிலும், பொது மேடைப் பேச்சுக்களிலும், களியாட்டங்களிலும், நல்ல பேச்சு அல்லது நடிப்பு எப்படி இருக்கவேண்டும் என்று கேட் போர் திட்டமான கருத்துடன் வருகிறார்கள். ஒரு வேளை அவர்கள் அதற்காகப் பணம் கொடுத்து வந்திருக்கக் கூடும். ஆகையால் இயற்றுவோர் அதிக ஆதிக்கம் செலுத்த முடியாது. எத்தகைய அவையோரிடம் பேசு கிறோம் என்பதை அவர் நினைவிற்கொள்ள வேண்டும். அவர்களுக்கு இன்பம் ஊட்டுவதுடன் அவர்களுடைய உணர்ச்சிகள் புண்படாதபடியும் பார்த்துக்கொள்ள

வேண்டும். இப்படி வழக்கம் விதித்த வரம்புக்குள்ளேயே நின்று அதே நேரத்தில் அவையோருக்குப் புதிதாக எதையேனும் சொல்லி அல்லது செய்து அவர்களை மகிழ்விப்பது மிகவும் அரிய காரியம். அவையோர் தம் சுவைகளிலும் அறிவிலும் வேறுபட்டவர்களாயிருந்தால் பேசுபவர் (அல்லது நடிப்பவர்) மிகவும் இடர்ப்படக்கூடும்.

பேசுபவர், தமது புதிதான அரசியல், பொருளாதார, சமூக அல்லது சமயக் கருத்துக்களுக்கு நேராக அவையோரைத் திருப்ப முயற்சி செய்யும்போது அவர் அதிகத் திறமையைக் கையாள வேண்டியதிருக்கிறது. இதற்கு வெற்று நீதிகள் (platitudes) புகழ்ச்சிகள், விகடத் துணுக்குகள், உறுதிக் கூற்றுகள் மட்டும் போதா. ஆகையால் அவர் அவையோரின் மனப்பான்மைகளையும், எழுச்சிகளையும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. எடுத்துக்காட்டாக, பல மாணவர் கொண்ட வகுப்பிற்குப் போதிக்கும் ஆசிரியர் சரியான செய்தி, நோக்குநிலை, ஆழ்ந்த அறிவுடைமை, சொல்வன்மை ஆகியவற்றை மட்டும் உடையவராயிருந்தால் போதாது. அவர் சாதாரண மாணவரின் கவர்ச்சியைத் தூண்டி அவர்களைப் பிணிக்க வேண்டும்.

அவையோரின் தொகையையும், இருக்கை அமைப்பையும் நாம் கவனிக்க வேண்டும். சிறிய வகுப்பறையில் அல்லது களிக்குழுவில் பேசுபவருடைய சொற்களுக்கும், சைகைகளுக்கும், எண்ணங்களுக்கும் உடனே எதிர்த்துலங்கல் கிடைக்கிறது. பேசுபவரும் கேட்போருடைய பதிலை எதிர்பார்த்திருக்கிறார். ஆனால் பெரிய அவையில் பேசும்போது இத்தகைய எதிர்வினையை எதிர்பார்க்க முடியாது. பேசுபவர் சிலரை மட்டும் நோக்கிக் கொண்டிருந்தால் போதாது. அவர் அவையோர் அனைவரையும் பிணிக்க வேண்டும். ஆகையால் அவர் கருதிக் கொண்ட கேட்போர் (hypothetical listener) ஒருவரை நினைத்துப் பேசுகிறார். அவருடைய சைகைகள், சொற்கள் எண்ணங்கள் எல்லாம் மிக எளியனவாக அமைகின்றன. அவருடைய பேச்சு கேட்போருள் மிகவும் மந்தமானவர்களுக்கே சொல்லப்படுபவைபோல் இருக்கின்றன. மேலும் அவர் தமது கேட்போரவையின் மனப்பாங்கைக் கவனித்து நடக்க வேண்டியதிருக்கிறது. அவர்கள் அடிக்கடி உறுமினால், இருமினால், கைதட்டினால் அல்லது கால் மிதித்தால் அவர்கள் அவரைக் கேட்க விரும்பவில்லை என்னும் குறிப்பை அவர் உணர வேண்டும். திறமையுள்ள

பேச்சாளர் கேட்போருக்குள் இடைத்தூண்டலை (inter-stimulation) உண்டாக்குகிறார். விகடத் துணுக்குகளை எடுத்தெறிந்து அவர்களை ஒன்று கூடி நகைக்கத் தூண்டு கிறார். மக்கள் கைதட்டக் கிளறும் சொற்களைப் பயன் படுத்துகிறார். இதன்மூலம் நிலைமை புறமுறைமை நீங்கு கிறது. அவையோரின் திறனுய்வு குறைகிறது. பெரிய, நெருங்கி அமர்ந்த, கேட்போரவையில் இடைத்தூண்டல் எளிதாக நடைபெறுகிறது. மக்கள் இடைவெளி விட்டு அமர்ந்துள்ள அவைகளில் மக்கள் கைதட்ட அல்லது நகைக்க அஞ்சுகிறார்கள்; ஏனென்றால் அவர்கள் தனியே விடப்படக்கூடும்.

கும்பலும் (crowd) கும்பல் நடத்தையும்:

கும்பல் நடத்தை ஒரு தரப்பிறழ்வான கூட்டு நடத்தை யாகும். இதனைக் கலகங்களிலும், வெறிக் கும்பல்களிலும் (mobs), கிளிக்கும்பல்களிலும் காணலாம். ஒருவர் முன் னிலையில் ஒருவர் அமைந்துள்ள தனியாட் கூட்டங்க ளெல்லாம் கும்பல்கள் அல்ல. மக்கள் குழுமியுள்ள போதெல்லாம் உளவியற் கும்பல் ஏற்படுவதில்லை. ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் உடன்-செயல்புரி குழு வினரை ஒரு கும்பல் என்று சொல்ல முடியாது. மாலை வேளையில் ஒன்றாக இருந்து பேசிக் கொண்டிருக்கும் குடும்ப அல்லது களிக்குழு உறுப்பினரையும் கும்பல் என லாகாது. பிற குழுமங்களினின்றும் (congregations) கும்ப லைப் பிரித்தறியும் பண்பாவது, கும்பலில் உறுப்பினருடைய கவனம் ஒரு பொதுவான பொருளுக்கு நேராகத் திருப்பப் பட்டுள்ளது. அவர்களுடைய நடத்தையும், இதன் நேரடித் துலங்கலாகும். ஆனால், உடன் செயல்புரி (co-acting) குழுவில் ஒவ்வொரு உறுப்பினரும் தம் சொந்த வேலைகளைச் செய்கிறார். முகம்புகு (face-to-face) குழுவில் உறுப்பினர் ஒருவரையொருவர் கவனிக்கின்றனர்; சைகையாலும், ஒருவரையொருவர் தூண்டுகின்றனர். கும்பலிலும் மக்கள் தம் முன்னிலையாலும், கூச்சலாலும், உடல் தொடுவதா லும், தூண்டுகின்றனர். ஆனால் இத்தூண்டல் துணைத் தன்மையதுமட்டுமேயாகும். கும்பல் மனிதனுடைய எதிர் வினை ஒரு பொதுப் பொருளைக் குறித்தது. பிறரிடமிருந்து பெறும் தூண்டல் அவனுடைய எழுச்சித் துலங்கலையும் நடத்தையையும் மிகைப் படுத்துகிறதேயன்றித் தோற்றுவ தில்லை.

ஆனால் பொதுப் பொருளைக் கவனிப்பதும், அதற் கேற்பத் துலங்குவதும் மட்டும் கும்பலைப் பிற குழுமங்களி னின்று பிரித்தறியப் போதியவையல்ல. கேட்போரவை யிலுள்ள மக்கள் அனைவரும் பொதுவான ஒன்றையே- பேச்சு, நடிப்பு அல்லது இசை ஆகியவற்றைக் – கவனிக் கின்றனர். ஆனால் அவையை நாம் கும்பலாகக் கருதுவ தில்லை. அவையினின்றும் குழு எதில் வேறுபடுகிறது? ஒருவேளை கும்பல் அவையிலும் பெரிது என்று சிலர் எண்ணுவர். ஆனால் இது கும்பலைப் பிரித்தறிவதற்குச் சரியான அடிப்படையாகாது. பொதுவாக, கும்பல்கள் அவையை விடப் பெரியவையாக அமைவது உண்மை தான். ஆனால் தொகையும் அளவும் இவ்வேற்றுமையின் சாரமல்ல. சில வேளைகளில் தியேட்டர்களிலும், வகுப்புக் களிலும் உள்ள மக்கட் குழுவை அல்லது மாணவர் குழுவை, கேட்போரவை என்பதை விட கும்பல் என்பது பொருந்தும். கும்பலைப் பிற குழுமங்களினின்றும் வேறுபடுத்துவது அதன் மனத்தன்மையேயாகும், அதாவது குழு மனித னிடம் காணப்படும் சில நனவுக்கூறுகளும் நடத்தைக் கூறுகளுமேயாம். மார்ட்டின் (E. D. Martin) கூறியுள்ள படி கும்பல் என்பது ஒரு வகுப்பையோ கூட்டத்தையோ குறிப்பதில்லை. அது ஒரு கூட்டத்து மக்களிடம் ஒரே நேரத்தில் தோன்றும் மனநிலையேயாகும்.[2] இந்த மனநிலை ஏற்படும்போது, உடன் செயல்புரி குழுக்களும். முகப்புகு குழுக்களும் கேட்போரவைகளும் கும்பல்களாக மாறு கின்றன. இம்மன நிலையின் அடிப்படைத் தன்மைக ளாவன; பொதுப் பொருளைக் கவனிப்பதும், எழுச்சி வயப் பாடும், நிலைமைக்கெதிரே கட்டின்றிச் செயற்படுவதுமாம். ஒரு பெரிய மனிதரைப் பார்க்கக் கூடியுள்ள காணுநர் கும்பலிடத்தும், கிரிக்கெட் ஆட்டம் பார்க்க வந்த கும்ப லிடத்தும், கலகக்காரரிடத்தும், வெறிக்கும்பலிலும், கிலிக் கும்பலிலும் இத்தன்மைகளைக் காணலாம். டெல்லியிலும் ராஜ்காட்டிலும் 1948 ஜனவரி 30, 31-ம் நாட்களில் கண்ட கூட்டம், 1944 ஏப்ரல் '14-இல் பம்பாய் துறை முகத்தில், கப்பலில் வெடி மருந்து வெடித்ததும் மக்களின் கிலிச் செய்கை, பம்பாய், ஆமதாபாத் முதலிய நகரங்களில் கண்ட இந்து-முஸ்லிம் கலகம், பம்பாய் நகரத்தைப் பற்றிய காங்கிரஸ் தீர்மானத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வெறிச் செயல்கள், சமயப் புத்துயிர்க் கூட்டங்களில் மக்க ளுடைய நடத்தை, முதலியற்றையெல்லாம் நோக்கினால் கும்பல் மனிதன் மீக்கிளர்ச்சி யுடையவன், முற்சின

முடையவன், தனது பொதுவான நிதானத்தையும் நடு நிலையையும் இழந்தவன் என்பது தெரியவரும். அவனு டைய மொத்த நடத்தைப் படிவத்தைப் பார்த்தால் அவன் கிளர்ந்தெழுந்த விலங்கையோ, புராதன மனித னையோ போன்றவன் ஆவான்.

புரட்சிக் கும்பல்களின் நடத்தையை லிபான் (Le Bon) பின்வருமாறு விளக்கியுள்ளார்.

'(கும்பலிலுள்ள) தனியாட்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்களுடைய வாழ்க்கை வழிகளும் தொழிலும், குணமும், நுண்ணறிவும், எவ்வளவு வேறுபட்டனவாக இருந்தாலும் சரி அவர்கள் ஒரு குழுவாக மாறியுள்ள காரணத்தால் ..... அவர்கள் ஒவ்வொருவரும் தனியாக இருந்தால் இயற்றுவதை விட்டு.....வேறுவகையாக உணர்கிறார்கள் சிந்திக்கிறார்கள், செயற்படுகிறார்கள். தனியாக இருந்தால் அவர்கள் கட்டுப்படுத்தி வைக்கும் இயல்பூக்கங்கள் குழுவில் அவர்களை மேற்கொள்ளு கின்றன....தனியாட்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்புணர்ச் சிப் பற்று முற்றிலும் மறைந்துவிடுகிறது. (அறிதுயிலுறுத்தப் பட்டமனிதரைப் போல்) அவர்கள் தம் செயல்களைப் பற்றி நனவுறுவதில்லை. (கும்பல்) மனிதன் நாகரிக ஏணியில் பல படிகள் இறங்கி விடுகிறான். அவன் புராதன மனிதரின் வன்செயலும், வெஞ்சினமும், உற்சாகமும் பெறுகிறான்.'

மக்டூகல் கும்பல் நடத்தையைப் பின்வருமாறு விவரிக் கிறார்:— "கும்பலானது மட்டுக்கு மிஞ்சி எழுச்சிவயப் பட்டது, முற்சினமுள்ளது, நிலையற்றது, முரண்படுவது, தீர்மானமற்றது, அளவு மீறிச் செயற்படுவது, கரட்டு (crude) எழுச்சிகளையும் பண்படாத பற்றுக்களையுமே தோற்றுவிப்பது; அதிகமாகக் கருத்தேற்பது; சிந்திப்பதில் கவலையீனமானது; தீர்ப்பதற்கு விரைவது; எளிதாக ஈர்க்கவும் நடத்தவும்படுவது; தன்னறிவு குறைந்தது; தன் வலிமையைப் பற்றிய உணர்வால் ஈர்த்துச் செல்லப்படுவது; பொறுப்பற்ற, முழு வலிமையின் வெளிப்பாடுகளையெல்லாம் காட்ட முற்படுவது. ஆகையால் கட்டுக்கு அடங்காத குழந்தையைப் போலவும், ஒரு புதிய நிலைமையில் கல்லாத காட்டுமிராண்டியைப் போலவும் (மிகவும் கீழ்த்தரமான நிலைமையை அடைந்தபின்) ஒரு காட்டு விலங்கைப் போலவும் அது நடந்து கொள்கிறது."

தன் முனைப்பு, வெறுப்பு, முழுமுதல் தன்மை (absolutism) பிடிவாதத்தன்மை (dogmatism) ஆகிய பண்புகள் ஏறக்குறைய எல்லாக் குழுக்களிலும் காணப்படுபவை யென்று மார்ட்டின் கூறியுள்ளார். 'ஒவ்வொரு அமைந்த கும்பலும் தன் மதிப்பையும் உயர் பண்பையும் எச்சரிப் புடன் காக்கிறது: தனக்கு மீ உயர்வு (supremacy), வலிமை, புகழ் பாராட்டு அனைத்தும் வேண்டுமென்று உரிமை கொண்டாடுகிறது. ஒவ்வொரு மனிதனிடத்தும் ஓடுக்கப்பட்டுள்ள நனவிலித் தன்முனைப்பானது (unconscious egoism) குழுவில் கூட்டு வெளிப்பாடு பெறுகிறது. இந்நனவிலித் தன்முனைப்பினின்று வெறுப்பு பிறக்கிறது. கும்பல் மனிதன் சீர்த்தி மயக்கமும் (delusion of grandeur) அதனெடு தொடர்புள்ள துன்புறு மயக்கமும் உடைய வனுகின்றன். தன் குழுவின் பெருமையைப் பொறுக்க முடியாமல், சிலர் அதன் சிறப்பைக் குறைக்க, அதை ஒடுக்க, அதை முறையாக வசைக்க முயல்கிறார்கள் என்று நினைக்கிறன். இத்துன்புறு மயக்கம் அந்தப் 'பிறரை' வெறுப்பதற்கு ஒரு (போலிக்) காரணமாகிறது. கும்பலின் முழுமுதல் தன்மையை மார்ட்டின் பின்வருமாறு விளக்குகிறார் :— 'கும்பல் மனத்திற்கு, பிரச்சினைகளே கிடையாது. அது தன் கட்சி வாதத்தை முன்னமே முடித்துக் கொண்டுள்ளது. அது தான் விரும்புவதையே நம்பும்; வேறொன்றையும் நம்பாது'. கும்பல் மனம் உரையாடல் முறையை வெறுக்கிறது; வாதங்களைக் கேட்டு அவற்றைப் பற்றிச் சிந்திப்பதைவிடக் கட்சிக் கூப்பாடுகளை ஒலிக்கவே விரும்புகிறது. அது தன் சிறப்பையும், வலிமை வேட்கையையும், புகழையும், பாராட்டையும் குறைக்கும் எண்ணங்களையும் கூற்றுக்களையும் பொறுப்பதில்லை. "கும்பல் மனம் எங்கும் முழுமுதல் தன்மையது. அதன் உண்மைகளெல்லாம் 'கொடுக்கப்பட்டவை'; முன்னரே முடிவு செய்தவை."

கும்பல் நடத்தையைத் தொடங்குவித்தல்:

கும்பல் நடத்தை ஆராய்ச்சியில் இரண்டே காரியங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவதாகக் கும்பல் மனிதன் அச்செயல்களை ஏன் செய்கிறன்? அவனை ஊக்குவிப்பது யாது? இரண்டாவதாக, அவன் செயல்புரியும் வகை ஏன் அவனுடைய வழக்கமான நடத்தையினின்றும் வேறுபடுகிறது?

இவற்றுள் முதல் கேள்வியை எடுத்துக் கொள்வோம். கும்பல் நடத்தையை விளக்குவதற்குக் 'கூட்டு மனம்' போன்ற கற்பிதக் கருதுகோட்கள் தேவையில்லை. பல தனியாட்கள் ஒன்றுகக் கூடும்பொழுது தனியாள் மனத்திற்கு மிஞ்சிய மீமனம் ஒன்று தோன்றி அவர்கள் தனியாகச் செய்யாத காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது என்னும் கொள்கை அறிவியலுக்கு அப்பாற்பட்டது. நாம் 'கும்பல் மனம்' அல்லது 'கும்பல் தன்னகம்' (crowd self) என்னும் தொடர்களை உருவக முறையில்தான் பயன்படுத்தலாம். கும்பலிலுள்ள மக்கள் ஒத்துச் சிந்திக்கிறார்கள்; ஒத்த எழுச்சி அனுபவிக்கிறார்கள்; ஒரே கோளைத் தொடர்கிறார்கள். இத்தகைய மன ஒருமைப்பாட்டையே குழுமன உருவத்தின் மூலம் குறிப்பிடுகிறோம்.

கும்பல் மனிதனுடைய நடத்தையை விளக்குவதற்கு ஒன்று கூடியிருத்தல் ஒரு தேவையான காரணமாகும். ஆனால் அது போதிய காரணமாகாது. கும்பல், தனியாட்களின் கூட்டம் ஆகும். கும்பலில் இருந்தாலும் சரி, தனியாளாக இருந்தாலும் சரி, தனியாளின் நடத்தை தனக்குள்ளிருந்தே தொடங்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட நிலைமையில் பலரிடத்து ஒருங்கே ஒரேவகை ஊக்கங்களும், உந்துகளும், தேவைகளும், மனப்பான்மைகளும் தூண்டப் பெறுகின்றன. இதனால்தான் கும்பலின் உறுப்பினர் ஒன்றுக நினைப்பதுபோல், உணர்வதுபோல், செயற்படுவதுபோல், தோன்றுகின்றனர். பேரச்ச (panic) நிலைமையை எடுத்துக் கொள்ளலாம். ஒரு தியேட்டரில் தீப்பற்றிக் கொள்கிறது; ஒரு கப்பலின் அடியில் ஓட்டை விழுந்துவிடுகின்றது; எதிரி, படையெடுத்து வந்து விட்டான் என்ற அறிக்கை கேட்கிறது; புதன் என்னும் கோளிலிருந்து மனிதன் உலகில் இறங்கி விட்டான் என்ற வதந்தி பரவுகிறது; வெள்ளம் பரவி வந்து ஊரைச் சுற்றிக் கொண்டது; இளம் பெண்கள் இருக்கும் அறையில் பாம்பு வந்துவிட்டது - இத்தகைய நிலைமைகளுக்குட்பட்ட தனியாட்களுக்குப் பேரச்சம் தோன்றுகிறது; தற்காப்பு உள்துடிப்பு எழுகிறது. இதனாற் பாதிக்கப்பட்ட அனைவரும் ஒடுவதற்கு ஆயத்தப்படுகிறார்கள். இவர்களுள் மிகவும் அஞ்சிய சிலர் ஓட்டத்தைத் தொடங்கி விடுகிறார்கள். பிறரும் தொடர்ந்து ஓடுகிறார்கள். புற்றுக் கலைக்கப்பட்ட எறும்புகளைப்போல் மக்கள் ஓட்டம் பிடிக்கின்றார்கள். ஒரு பெரிய மனிதரின் ஈமச்சடங்குக்கு வந்துள்ள மக்கள் திரளை, ஒரு விபத்தைச் சுற்றித் திரண்டு

நிற்கும் கூட்டத்தை, அல்லது ஆற்றுப்பெருக்கைக் காணக் கூடியுள்ள திரளைக் காண்க. அடக்க முடியாத ஆராய்ச்சி மேலிட்டவர்களும், ஏதேனும் புதிய அனுபவம் நாடும் மக்களும், இக்கும்பல்களில் கூடியுள்ளனர். இனி, பண்ட சாலைகளைக் கொள்ளையடிக்கும் பட்டினிக் கும்பல்களையும், மறியல் செய்பவர் காவலர்மேல் கல்லெறிந்து, பொருட் களுக்கும், உயிருக்கும் சேதம் விளைவிக்கும் வெறிக் கும்பல் களையும் காண்க. உணவு, நல்வாழ்வு, வலிமை, காப்பு முதலியவற்றை நாடும் தனியாள் ஊக்கங்களால் அவர்கள் உந்தப்படுகிறார்கள். பின் இவ் உந்துகளுக்கு எதிர்ப்பும், ஒடுக்குதலும், முறிவு ஏற்பட்ட காரணத்தால் கூட்டு எதிர் வினை தொடர்கிறது. இத்தகைய கும்பல்கள் போராட்டக் குழுக்கள் ஆவன என்று ஆல்ப்போர்ட் கூறியுள்ளார். "பல தனியாட்களுடைய உந்துகளுக்கு ஆபத்து ஏற்பட் டால், இவர்கள் ஒன்றுகப் பிணைக்கப்படுகிறார்கள்; பொது வாகச் செயல்புரியத் தூண்டப்படுகிறார்கள்." ஆழமான நிலையான மனமுறிவு ஏற்பட்டால் இத்தகைய நிலைமைகள் அடிக்கடி தோன்றக்கூடும்.

ஆகையால் எல்லாக் குழப்பங்களிலும், தனியாள் ஊக்கம் அடிப்படையாக அமைந்துள்ளது. ஒரு குறிப் பிட்ட நிலைமையில் தனியாட்கள் தனியே இயற்றத் தூண்டப் படும் அதே செயலைக் கும்பலில் குழுவாகச் செய்கிறார்கள். ஒன்று கூடி இருப்பதால் தாங்கள் தனியே செய்ய விழை பவற்றை விட்டு முற்றிலும் வேறுனவற்றை அவர்கள் செய்வதில்லை. ஆகையால் ஆல்ப்போர்ட் லிபானின் கும்பல் நடத்தை விளக்கத்தை மறுத்துள்ளார். "தனியாள் தான் தனியாக நடந்து கொள்வது போலவே கும்பலிலும் நடந்து கொள்கிறான். ஆனால் இங்கு அதிகமாகச் செயற் படுகிறான்" என்று அவர் கூறுகிறார். கும்பல் நடத்தை யில் ஊக்குவித்தலுக்கு முக்கிய இடம் உண்டென்பது இரு உற்று நோக்குளால் விளங்கும். முதலாவதாக, கும்பலின் தலைவன் அதனை ஓர் அளவுதான் கட்டுப்படுத்த முடியும். ஒரு வெறிக்கும்பல் செய்ய விரும்பும் காரியத்தி னின்று அதைத் திருப்பி நேர்மாறான காரியத்தைச் செய் விக்க ஒருவர் முயன்றால் அவர் தோல்வியடைவார். இப்படிச் செய்பவரைக் கும்பல் 'துரோகி' யாகவும் கருதக் கூடும். இரண்டாவதாக, குழுவின் கருத்தேற்குமையும் நிலையின்மையும் கூடப் பொதுமைப்பட்டனவல்ல. குழுவின் அந்நேர ஊக்கத்தோடு அல்லது அது தொடங்கியுள்ள

செயலோடு தொடர்புகொண்டு இவற்றைத் தாங்கி மிகைப் படுத்தக்கூடிய வதந்திகளையும் கருத்தீடுகளையும்தான் அது முற்றிலும் நம்புகிறது.

குழு நடத்தையின் தரப்பிறழ்வு :

குழு என்ன செய்கிறதென்பதைத் தனியாள் ஊக்கு விப்பு முறையில் விளக்கலாம் என்று பார்த்தோம். ஆனால் பலர் ஒருவருக்கொருவர் முன்னிலையில் ஒரே நிலைமைக்கு எதிராக ஒன்றுக, ஒரே மாதிரிச் செயல் புரிவது கும்பல் நடத்தையின் தரப்பிறழ்வுச் செயலை விளக்கத் துணைபுரியும். கும்பல் நடத்தையில் கரடான, மிஞ்சிய எழுச்சி வெளிப் பாடு, கட்டுப்பாடின்மை, முற்கிளர்ச்சி, பொறுப்புணர்ச்சி யின்மை, தகுதியுணர்ச்சியின்மை, எதிர்விளை மீக்கூர்வு, கருத்தேற்குமை மீக்கூர்வு, வலிமையுணர்வு ஆகியவை முக்கிய கூறுகளாவன என்று பார்த்தோம். இவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

ஒரு குறிப்பிட்ட நிலைமை பல தனியாட்களிடமிருந்து ஒத்த எதிர்விளைகளைத் தூண்டியுள்ளது. அவருள் முற் கிளர்ச்சி மிக்கவர்களும், பண்பாடு குறைந்தவர்களும் செயலைத் தொடங்குகிறார்கள். பிறர் விரைவில் தொடர் கிறார்கள். ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சுற்றி அதே எழுச்சி வெளிப்பாடுகளைக் காணும்போது, அவன் பலவகை யில் பாதிக்கப்படுகிறான். சமூகத்தை உணர்ந்த தன்னகம் (society-conscious self) உள்ளே ஆற்றிக்கொண்டிருக்கும் செய்தித் தணிக்கை குறைகிறது. முற்கிளர்ச்சி நடத்தை யைத் தடுக்கும் வெட்க உணர்ச்சி மறைகிறது. ஏனெனில் தன்னைப்போலவே பிறரும் நடப்பதை அவன் காண்கிறான். இதன் மூலம் அவ்வாறு செய்யத் தூண்டப்படுகிறான்.

தனியாளிடம் பல தன்முனைப்புச் செயற்போக்குகள் உள்ளன. பொதுவாக அச்சத்தாலும், உட்போராட்டத் தாலும், தனது பண்பட்ட அல்லது சமூகத் தன்மைப்பட்ட தன்னகத்தின் வன்மையாலும், அவன் இப்போக்குகளை ஒடுக்கி வைத்துள்ளான். கும்பல் நிலைமையில் இவற்றிற்கு விடுதலை கிடைக்கிறது. கும்பல் நிலைமை சமூகத்திற்கு முற்பட்ட நடத்தை மட்டத்தில் செயல்புரிவதற்கு ஒரு வாய்ப்பாகும். மேலும் உடன்-செயல் புரிவோர் ஒரு தொழிலாளியின் வேலையை விரைவுபடுத்துவது போல்,

கும்பலிலும் பிறர் நடத்தையைப் பார்ப்பதால் கும்பல் மனிதனின் செயல் விரைவுபடுகிறது. பெயர்மறை (anonymity) வுணர்ச்சி அவனைப் பாதுகாக்கிறது. அவனுடைய நடத்தையைப் பொறுப்பற்ற தாக்குகிறது. மேலும் கும்பல் மனிதன் சுற்றியுள்ளவர்களால் தள்ளவும், நெரிக்கவும் படுகிறான். கூச்சல்களும் கட்சிக் கூப்பாடுகளும் அவனுடைய செவியைத் துளைக்கின்றன. ஆகையால் அவன் கும்பலின் வலிமையை உணருகிறான்; இவ் வுளவியல் வன்மைக்குப் பணிகிறான். தன்னைச் சுற்றியுள்ள மக்களின் செயலைப் பார்ப்பதாலும், கும்பலின் வலிமையை உணர்வதாலும் அவனுடைய ஒத்துப்போகும் பண்பு தூண்டப்படுகிறது. தனது நடத்தையை நிறுத்திக் கட்டுப்படுத்த முயல்வது பயனற்றது என்று அவன் உணர்கிறான்.

மற்றொரு கூறும் இச்செயலைத் தூண்டுகிறது. கும்பலில் உள்ள ஒவ்வொருவனும் தன்னைச் சுற்றியுள்ள மிகச் சிலரையே தொடுகிறான்; இன்னும் சிலரைப் பார்க்கிறான். ஆயினும் கும்பலில் உள்ள அனைவரும் இப்படியே உணர்கிறார்கள். நடந்து கொள்கிறார்கள் என்று கற்பனை செய்து கொள்கிறான். இதனை ஆல்ப்போர்ட் 'பொதுமை எண்ணம்' (impression of universality) என்று விவரித்துள்ளார். இச்செயல் சாதாரண மனிதன் தன் உள்துடிப்புகளையும் எண்ணங்களையும் பிறர்பால் சார்த்திக் காணும் தன்மையை அடிப்படையாகக் கொண்டது.

கும்பல் மனிதனின் மிகைக்கருத்தேற்குமையைப் புரிந்து கொள்வது எளிது. நாம் ஒரு பொருள்பால் அல்லது எண்ணத்தில் கவனத்தை மையப்படுத்தித் திறனுய்வை நிறுத்தி வைத்தால் மிகைக் கருத்தேற்குமை ஏற்படுகிறது. கும்பல் மனிதன் ஒரே பொருள் அல்லது எண்ணத்தையே கவனிக்கிறான். கும்பலில் எழுச்சியின் வன்மையால் திறனுய்வுச் சிந்தனை தடைப்படுகிறது. அவன் செயலில் ஈடுபடுவதாலும் அவனுக்குத் திறனுய்ந்து சிந்திக்க நேரம் இருப்பதில்லை. கடைசியாக ஒரே செயலைப் பலரிடத்தும் காண்பதாலும், தன் எண்ணப் புறத்தெறிவாலும் அனைவரும் இப்படிச் செய்கிறார்கள் என்று அவன் எண்ணுவதால் தொகைப் புகழ்வன்மை (prestige of numbers) செயற்படுகிறது, புகழ்வன்மையுள்ள தலைவர் அங்கு இருந்தால் கருத்தேற்குமை இன்னும் அதிகமாகிறது.

கும்பல் மனிதனின் வலிமை உணர்ச்சியைப் பின் வருமாறு விளக்கலாம். பிறருடைய செயலால் உந்தவும், தூண்டவும் பெற்று, பெயர் மறைவினால் பாதுகாக்கப்பட்டு, தனியாள் தன் சக்திகளையெல்லாம் தனது மேலோங்கும் உள்துடிப்புக்களைப் பெறுவதற்காகச் செலவழிக்கிறார். தனியாளுக்குக் கிளர்ச்சி பெருகும்போது இன்னும் அதிகமான சக்தி தோன்றி வெளிப்படுகிறது.

References

1. La Piere and Farnsworth, Social Psychology. p. 334.

2. E. D. Martin, The Behaviour Of Crowds.

15. இனமும் தேசமும்

இனமும் (Race) இனப்பண்பும் (Racial Character):

இனவேற்றுமைகள் முதலிய கருத்துக்கள் உயிரியலுக்கும் மனிதவியலுக்கும் உரியவை. 12–ம் நூற்றாண்டில் மேல்நாட்டு மக்கள் வியாபாரத்திற்காக ஒரு நாட்டை விட்டு மற்றொரு நாட்டிற்குப் பெயர்ந்தபொழுது வெவ்வேறு உடலமைப்பும், வெவ்வேறு மனப்பண்புகளும், வெவ்வேறு வாழ்க்கை வழிகளும் உள்ள பிற மக்களைக் கண்டனர். உயிரியலரும், மனிதவியலரும் மனித இனத்தை, உடலமைப்பு, உயரம், நிறம், தலை வடிவம், தோல் அமைப்பு, முடிவண்ணம், மூக்கின் தோற்றம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு வகுக்கின்றனர். இவ்வாறு மனிதவியலர் மனித இனத்தை மங்கோலியர், நீக்ரோக்கள், காக்கேசியர் என்று மூன்று பிரிவுகளாகக் காண்கிறார்கள்.

உலகில் நிற அடைப்புக்களும் (colour-bar) இன முற்சார்பும் அதிகமாக இருப்பதால் இனத்தைப் பற்றிப் படிப்பது சமூக உளவியலருக்குமிகவும் முக்கியமானதாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இனமுற்சார்பு ஒரு பெரும் தேசீயச் சிக்கலாக இருந்து வருகிறது. இன உணர்ச்சியின் விளைவாக அநீதி, மனிதத்தன்மையை மறத்தல், வெறி முதலிய பல தீங்குகள் தோன்றியுள்ளன. அமெரிக்காவில் சட்டத்திலும் சமயத்திலும், வியாபாரத்திலும், தொழிற் சங்கங்களிலும், கல்வி சுகாதார வசதிகளிலும், போர்ப் படையிலும் கூட ஒதுக்கம் இருந்து வருகிறது.[1] ஆப்பிரிக்காவில் சிறுபான்மை வெள்ளையர் இந்தியரை இழிவுபடுத்தி வருகின்றனர். சென்ற போரில் இன உயர்வு எண்ணத்தின் பயனாக இனத்துடைப்பு (genocide) அதாவது மக்களைத் திரளாகக் கொலை செய்தல் கையாளப்பட்டு வந்தது.

தனி இனங்கள் உள்ளனவா? இனக்குழுக்களுக் கிடையேயுள்ள உயிரியல் வேற்றுமைக்கும், உளவியற் பண்பு களுக்கும் தொடர்பு உண்டா? இத்தகைய கேள்விகளைப் பற்றிச் சமூக அறிவியலரும் உளவியலரும் ஆராய்ந்து வருகின்றனர். மக்கள் அனைவரும் ஒரே உயிரியல் பிரிவினத் தைச் (species) சேர்ந்தவர்கள். இப்பிரிவினத்தை அறிவுள்ள மனித இனம் (homo sapiens) எனலாம். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், ஆப்பிரிக்காவிலும் கருப்பு நிறத்தவருக்கு எதிராகக் காணப்படும் இனப் பிரித்துணர்வுக்கு (racial discrimination) அறிவியல் அடிப்படை கிடையாது.

அமெரிக்க வெள்ளையர் நீக்ரோக்கள்பாலும், மேற் கத்தியர், கீழ்நாட்டவரைப் பற்றியும், ஜெர்மானியர் யூதரைப் பற்றியும் கொண்டுள்ள முற்சார்பு அறிவியல் சாராத ஊக்கிகளாலேயே எழுந்தது. சமூக-மையத்தன்மை, ஒதுக்கல், தொழில் வேறுபாடு, உடல் அமைப்பு வேறுபாடு முதலியவை இனத்தாலும் பிற வகையாலும் ஏற்படும் முற்சார்புகளுக்குக் காரணமாவதைப் பற்றி இயல் 13-ல் பார்த்தோம். இன முற்சார்பைக் குறைப்பதற்கு இப்பொருள் பற்றிய அறிவியல் அறிவை மக்களிடையே பரப்புவது பயன் தரும் என்னும் ஆர்ஞல்டு ரோஸின் கருத்தையும் பார்த்தோம். ஆகையால் அறிவியல் இப்பிரச்சினையைப் பற்றி என்ன சொல்லுகிறது என்று ஆராய்வோம்.

வெவ்வேறு இனங்களுக்கிடையே உளவியற் பண்பு களைப் பொறுத்தவரை உள்ளார்ந்த, உயிரியல் முறையில் தீர்மானிக்கப்பட்ட வேற்றுமைகள் உளவா? என்பதே முக்கிய கேள்வியாகும். உலகத்தில் தலைசிறந்த மனித வியலருள் ஒருவராகிய லிஃக்ராஸ் க்ளார்க் (Prof. W. E. Le Gros Clark) கூறுவதாவது:

'மனிதனுடைய உடல் வேற்றுமைகளெல்லாம் முற்றி லும் மேற்பரப்புக் கூறுகளுக்குள்ளே அடங்கியவை என்பது மனித உடலமைப்பியல் ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது. மூளைதான் மனச் செயல்களின் பூத அடிப்படையாகும் என்று நாம் கொண்டால் இவ் அடிப்படையானது வெவ்வேறு இனங்களுக்கேற்ப வேறுபடுவதில்லையென் பதை நாம் உணர வேண்டும்.'*

* quoted by Theosophical Free Tracts. No. 24.

நுண்ணறிவைப் பற்றிய ஆராய்ச்சியிலும், சமூக பொருளாதார ஏற்றக் கூறுகளையும், கல்வி முதலிய பொதுப் பண்பாட்டுச் சுற்ற நிலையையும் சமன்படுத்திப் பார்த்தால் இனங்களுக்கிடையே காணப்படும் நுண்ணறிவு வேற்றுமை குறைந்து விடுகிறது. ஆகையால் இன வேற்றுமையை நம்புகிறவர்கள் கொஞ்சங் கொஞ்சமாக அம்மயக்கம் தெளிந்து வருகிறார்கள். 'கீழ்த்திசை வரலாறு மிகப் பழங் காலத்திலேயே ஓங்கி வளர்ந்துள்ளதால், சீனரையும், ஜப்பானியரையும் வெள்ளையரை விட மன ஆற்றலில் குறைந்தவர்களாகக் கருதுவதைப் பற்றி நாம் எச்சரிப்போடு இருக்கவேண்டும்' என்று ஆல்ப்போர்ட் கூறியுள்ளார்.[2] எல்லா இனக் குழுக்களுக்குள்ளும் மன ஆற்றல் எல்லை ஏறக்குறைய சமமாகவே உள்ளது என்னும் கருத்துக்கு அறிவியல் ஆதாரம் உளது.*

இனி, மனவெழுச்சி வேற்றுமைகளைப் பார்ப்போம். சுரப்பி அமைப்பில் இனங்களுக்கிடையே வேற்றுமைகள் காணப்படுகின்றன. எழுச்சிக் கூறுகளுக்கும் சுரப்பிகளுக்கும் நெருங்கிய தொடர்புடைமையால் வெவ்வேறு இனங்களுக்கிடையே உள்ளார்ந்த மனப்பான்மை வேற்றுமை இருக்கக் கூடும். ஆனால் ஓர் இனக்குழு புதியதொரு சூழ்நிலையில் வாழத் தொடங்கியபின் பூப்பு வயது மாறுகிறது. இரத்த அழுத்தத்தில் இனங்களுக்கிடையே காணப்படும் வேற்றுமையும் சூழ்நிலையின் வன்மையால் குறைகிறது.

இனி, கலை விருப்பங்களையும், அறத் தரங்களையும் பார்ப்போம். இக்கூறுகளில் காணப்படும் இன வேற்றுமை, சூழ்நிலையாலும், இளமையப் பயிற்சியாலும் ஏற்படுவதாகத் தெரிகிறது. சூழ்நிலையை மாற்றுவதன் மூலம் கலை விருப்பு வெறுப்புக்களையும், அற எண்ணங்களையும் கூட மாற்ற முடியும். யுனெஸ்கோ வல்லுநர்கள் 18—7—50-ல் விடுத்துள்ள ஓர் அறிக்கையில், 'பண்பாட்டிலும், பண்பாட்டுச் சாதனங்களிலும் நாம் காணும் வேற்றுமைகளுக்கு மரபுநிலை வழிப் பெற்ற பிறப்பியல் (genetic) வேற்றுமைகள் முக்கிய காரணிகள் என்பதற்கு அறிவியல் ஆதாரம் இல்லை' என்று கூறப்பட்டுள்ளது.

* இதைப்பற்றிய ஆராய்ச்சி முடிவை Murphy, Murphy and Newcomb Experimental Social psychology (p. 65) O. tto. Klincbarg, Race Differences ஆகிய நூல்களில் காண்க.

ஆரியர் உளவியன் முறையில் உயர்ந்த இனத்தினர் என்பது வெறும் கட்டுக்கதையாகும். உலகம் உய்ய வேண்டுமானால், வெள்ளை மனிதரின் மக்கள் தொகை பெருக வேண்டும், கருப்பர்களின் கல்வியை வெள்ளையரே ஏற்று நடத்த வேண்டும் என்று பழைய காலத்தில் சிலர் எண்ணியதுண்டு. இவ் எண்ணத்திற்கு அறிவியல் அடிப் படை கிடையாது.

தேசத்தின் கூறுகள் யாவை?

வெவ்வேறு ஆசிரியர் தேசத்தன்மைக்கு வெவ்வேறு கூறுகள் வகுத்துள்ளனர். இவற்றுட் சில புறவயமானவை (objective), சில அகவயமானவை (subjective). மொழி, சமயம், நிலம், இயற்கை எல்லைகள் ஆகியவை புறவயக் கூறுகள் ஆவன. அகவயக் கூறுகளாவன, பொது அடிப் படை அவாக்கள், பொதுப் பற்றுறுதிகள், வீரப் பழமை பற்றிய உணர்வு, பொது அனுபவங்கள், பொதுத்துன்பம் ஆகியவை.

இக்கூறுகளுள் எவை இன்றியமையாதவை? ஃபார்க் கெரும் (Barker) ஃஎர்ட்சும் (Hertz) நிலமுடைமை தேசத் தன்மைக்குத் தேவையானது என்று கொண்டனர். ஒரு மக்கள் நாடு உடையவரானால், அல்லது ஒரு காலத்தில் நாடு கொண்டிருந்தவரானால் அவர்கள் தாம் ஒரு தேசத் தினர் என்று எண்ணுகிறார்கள்; அல்லது யூதர்களைப்போல இழந்த தம் நாட்டை மீண்டும் பெறுவோம் என்ற நம் பிக்கை கொண்டிருந்தால் அஃதும் தேச உணர்ச்சியை ஊட்டுகிறது என்பது இவ் அறிஞர்களின் கருத்து. ஆனால் தேசமானது 'தெளிவாக வரையறுக்கப்பட்ட நிலப்பகுதி யைச் சாராமலே அமையக்கூடும்' என்பது ஃப்ளாக்பர்ன் (Blackburn) என்பவருடைய கருத்து.[3]

மொழியும் மிகவும் முக்கியமானது. ஏற்கெனவே பொது மொழி இருந்தால், அல்லது பொதுமொழி ஏற்படுத்த முடிந் தால் தேசப்பற்று ஏற்படுவதற்கு அது மிகவும் துணை புரியும். பொதுமொழி இன்றியமையாததன்று; ஆனால் உதவுவது. இதன்மூலம் உடம்படுப்பு (communication) எளிதாகிறது; அடைப்புக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு குறைகிறது.

சமயமும் இன்றியமையாததன்று. பல தேசங்களில் பல்வேறு சமயத்தினர் கூடி வாழ்கிறார்கள். ஆயினும் அம்மக்கள் தாங்கள் ஒரே தேசத்தினர் என்று உணர்ந்து அதற்காகப் போராடுகிறார்கள். இந்தியாவும் சமயச் சார் பற்ற அரசைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

மேற்கூறிய புறவயக் கூறுகளை விட உளவியற் பிணைப் புக்களே வலிமையுள்ளவை. எர்னஸ்ட் ரேனன் (Ernest Renan). ஜே. எஸ். மில், ராம்சே மூய்ர் (Ramsay Muir) மக்டூகல் முதலிய பலர் இவ் அகவயக் கூறுகளை வலியுறுத்தி யுள்ளனர். இவர்களுடைய கூற்றுக்கள் சிலவற்றைப் பார்க்கலாம்.

'ஒரு மக்கள் தாம் ஒரு தேசத்தினர் என்று உணர்ச்சி யோடும் ஒரு மனத்தோடும் நம்புவதாலேயே தேசம் உரு வாகிறது.' (ராம்சே மூய்ர்)

'வீரப் பழமையைப் பற்றிய உணர்வு, உண்மையான புகழ், பொது அனுபவங்கள், பொதுத் தியாகம், பண்டைக் காலத்தைப் பற்றிய பெருமை, நாணம், மகிழ்ச்சி, துன்பம் அனைத்தும் இருக்க வேண்டும்.' (ரேனனும் மில்லும்)

'மரபுகளும், இப்போதைய கவர்ச்சிகளும், எல்லோரும் ஒருமனத்துடன் ஏற்கும் குறிக்கோட்களும் அதனுள் அடங்கியுள்ளன.' (ஆல்ப்போர்ட்)

வரலாற்றிலும் அரசியலிலும் தேசத்தன்மை என்ற நூலில் ஃஎர்ட்ஸ் இக் கூறுகளைப் பின்வருமாறு பகுத்துள்ளார்: (1) தேசத்தின் மக்கள் ஒருமைக்காகவும் திட நிலைக் காகவும் முயன்று கொண்டிருக்க வேண்டும்; அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும், சமயத்திலும் சமத் துவம் இருந்தால்தான் அவர்கள் இவ்வாறு முயலக்கூடும். (2) அவர்கள் எந்த வடிவத்திலானலும் சரி, அயலருடைய ஆட்சிக்குள் இருக்கக்கூடாது. (3) அவர்கள் தனித் தன்மையும், புதுப்பாங்கும் (originality) உடையவர்களாக விருக்க வேண்டும்; (4) அவர்கள் (அறத்தில் அல்லது போரில்) உயர்பண்பு, செம்மல், கீர்த்தி, புகழ் முதலிய வற்றை நாட வேண்டும்.

தேசமனம்: அது தோன்றுதற்குக் காரணிகள்:

குழு மனத்தைப் பற்றிய உரையாடலில் (இயல். 3) சமூக உயிரி என்னும் உருவத்தைச் சொல்லளவில் உண்மையாகக் கொள்ளக்கூடாது என்று பார்த்தோம். சமூகத்தை ஆளுருப்படுத்தி அதற்கு ஒரு தனி மனம் உண்டென்று கொள்ளக்கூடாது. ஆனால் மக்டூகல் விளக்கிய பொருளில் குழு மனத்தைப் பற்றிப் பேசலாம் என்றும் கண்டோம். மனம் என்பது 'உள்ளச் சக்திகளின் அமைந்த தொகுதி; என்று மக்டூகல் வரையறுத்தார். இவ்வாருயின், குழுவின் கவர்ச்சிகளும் நோக்கங்களும் அமைந்துள்ளனவாயின், குழுவிற்கு ஒரு மனம் உண்டென்று கூறலாம். அமைப்புக் குறைந்த குழுவிற்குக் குறைந்த மனமும் அமைப்பு மிகுந்த குழுவிற்கு மிகுந்த மனமும் (எ–டு, போர்ப்படை, தேசம்) உள்ளன. தேசீய மனத்தை ஆக்குவது உள்ளச் சக்திகளின் அமைந்த தொகுதியேயாகும். இத்தொகுதி தனியாட்களின் நடத்தையின் மூலம் வெளிப்படுகிறது.

குழு அமைப்பிற்குரிய காரணிகளைப் பற்றியும் முன்னமே படித்தோம். இவற்றைத் தேசத்திற்குப் பொருத்தி' தேச மனத்திற்குரிய காரணிகளை மக்டூகல் எடுத்துக் கூறினர்.

(1) குழுவானது இனத்தில் **ஒரு படித்தாக** (homogeneous) இருக்க வேண்டும். இவ் ஒரு படித்தன்மை முதலில் இல்லாவிட்டாலும் இத்தன்மையைக் குழு பெற வேண்டும். வெவ்வேறு இனங்கள் வெவ்வேறு வகையில் சிந்திக்கின்றனர் என்று மக்டூகல் எண்ணினர்.[5] ஆகையால் இன ஒருபடித்தன்மையை அவர் வலியுறுத்தினர். சீனு தேசத்தைப் போல் இன ஒருமை இருக்க வேண்டும். இந்தியாவில் இருப்பது போல் இனக்கலப்பு ஏற்பட்டிருந்தால், இக் கலப்பு முழுமையாக நடைபெற்றிருக்க வேண்டும். வெவ்வேறு இனத்தவர் இரண்டறக் கலவாது ஓரிடத்தில் வாழ்ந்தால், அவர்களுடைய சிந்தனையும், உணர்ச்சியும் வேறுபடும், தேசீய ஒருமை தடைப்படும், என்று அவர் கூறினர். இனங்கள் சரிவரக் கலவாததால் இங்கிலாந்திற்கும் அயர்லாந்திற்கும் அடிக்கடிப் பூசல் ஏற்பட்டதையும், இந்தியாவில் சாதிமுறை இனக்கலப்பைத் தடுத்ததால் அரசியல் நிலையின்மை ஏற்பட்டதையும் அவர் எடுத்துக் காட்டினர்.

ஒரு தேச மக்கள் இயற்கையாக ஒருபடித்தாய் இல்லா விடினும், புவியியல் முறையிலாவது அதனைப் பெற வேண்டும். ஒத்த தொழில், கலை, பழக்கங்கள் முதலிய வற்றால் இத்தகைய ஒருபடித்தன்மை பெற முடியும்.

(2) **உடம்படுப்புச் சுதந்திரம்** (freedom of communication) இரண்டாவது காரணியாகும். புகைவண்டிப் போக்குவரத்து, அஞ்சல், தந்தி, வானொலி, தொலைக்காட்சி, (television) முதலிய உடம்படுப்புச் சாதனங்கள் அமைந் திருக்க வேண்டும். இவை கட்டுப்பட்டிருக்கக் கூடாது; அனைவரும் கட்டின்றிப் பயன்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். இவ்வாறு அமைந்திருந்தால்தான் சிந்தித் துணரும் பொதுமக்கள் எண்ணம் உருவாகக் கூடும்.

(3) தேசத்தை அறிவிலும், அறத்திலும், செயலிலும் முன்நின்று நடத்துவதற்கு ஒரு **தலைவர்** வேண்டும். தலைவர் புரிய வேண்டிய செயல்களைப் பற்றி 12-ம் இயலில் பார்த் தோம்.

(4) மக்களுக்கு முன் தெளிவாக வரையறுக்கப்பட்ட **பொது நோக்கம்** இருக்க வேண்டும். போர்க் காலத்தில் இத் தகைய தெளிவான பொது நோக்கம் தோன்றுகிறது. தம் மக்கள் ஒரே மனத்தொடு சிந்திக்க வேண்டும், உள்நாட்டுப் பகைமைகளை மறக்க வேண்டும் என்பதற்காகச் சில தலைவர்கள் தெரிந்தே தங்கள் நாட்டைப் போரில் ஆழ்த்துவ துண்டு. இக்கோளை நிறைவேற்றுவதற்கு மற்றுமொரு நல்ல முறையும் உளது. நாட்டின் முன் ஒரு பெரிய கடமை தோன்றினால் நாடு ஒருமைப்படக் கூடும். அறியாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு தாழ்த்தப்பட்டோரை உயர்த்துதல், சமத்துவக் குறிக்கோள் எய்தல், விடுதலை, உலகச் சமயம் முதலிய குறிக்கோட்கள் இவ்வாறு துணைபுரியக்கூடும்.

சமூக வாழ்க்கையில் எண்ணத்தின் பங்கு :

மக்கள் தாம் ஒரு தேசத்தினர் என்று உணர்வதே ஒரு தேசத்தை உருவாக்குவது என்னும் கருத்தை மக்டூகல் மிகவும் வலியுறுத்தியுள்ளார். 'உலக வரலாற்றில் ஒரு தேசம் தோன்றியுள்ள போதெல்லாம், இத்தகைய தேசீய உணர்வு தான் அதன் இருப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் இன்றி யமையாத காரணியாக அமைந்துள்ளது'. தாம் ஒரு

'தேசத்தினர்' என்ற எண்ணம் உறுப்பினரைப் பிணைக்கிறது. வழக்கம், மரபு, பொருளாதாரத் தன்னலம் போன்ற பிற பிணைப்புக்களைவிட, இத்தகைய எண்ணத் தளையானது மிகவும் வலிமையுடையது.

வரலாற்றில், சில நாட்டு மக்கள் தாங்கள் ஒரு தேசத் தினர் என்ற எண்ணம் இன்றியே வாழ்ந்து வந்துள்ளார்கள். இங்கு, சிந்தனையுடன் கூடிய அமைப்பு கிடையாது. வரலாற்று வளர்ச்சி மட்டுமே உளது. எதிர்பாராத நிலைமைகள் ஏற்பட்டால் இத்தகைய தேசங்கள் நிலை குலைந்து சிதைகின்றன. ஆனல் ஒரு தேசம் தன்—உணர்வு டையதாகவிருந்தால் அதன் மக்கள் ஒவ்வொரு புதிய நிலைமையையும் கூர்ந்து ஆராய்கிறார்கள். இந்நிலையை மேற்கொள்ளுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்றும் தெளிவாகத் தீர்மானிக்கிறார்கள். இத்தகைய எண்ணங்களை எய்துவதற்கு மக்கள் சிறப்பு அமைப்புக்கள் ஏற்படுத்து கின்றனர். இத்தகைய அமைந்த செயல்களும் போக்குக் களும் ஒரு தேச முயற்றியின் (volition) வெளிப்பாடுகள் என்று சொல்லலாம். தன்னுணர்வுள்ள மக்களுடைய நடத்தையை மறிவினைகளும் பழக்கங்களும் ஆளுவதை விட எண்ணங்கள் அதிகமாக ஆளுகின்றன. அதுபோலவே தேச உணர்வுள்ள மக்களை மரபுப் பாங்கு ஆள்வதை விட மேற்கூறிய எண்ணங்கள் அதிகமாக ஆளுகின்றன. தனி யாளிடத்தானலும் சரி, தேசத்திலானலும் சரி, ஒரு செயலை முயற்றிச் செயல் என்று சொல்ல வேண்டுமானல் தன்னு ணர்வும், வெளிப்படையான எண்ணங்களும் இன்றியமை யாதவை. ஃபூயில் (Fouille) கூறுகிறபடி ஒரு தன்னு ணர்வுள்ள தேசம் 'தன் இருப்பைத் தானே முயற்றுகிறது'; தடங்கல்களை மேற்கொள்ளச் சிந்தித்து முயல்கிறது; புதிய சுற்றுநிலைகளுக்கேற்பப் பொருத்திக் கொள்கிறது. சுருங்கக் கூறின், 'ஓர் எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய தேசமே, தேசமாகும்.' இத்தகைய தேசம் பற்றிய எணணம், ஆக்குகின்ற, பங்களிக்கின்ற, நிலை பெறுத்துகின்ற வன்மையாகும்.

தாம் ஒரு தேசம் என்ற எண்ணம் தவிர, வேறு சில எண்ணங்களும் தேச வரலாறுகளில் இடம் பெற்றுள்ளன என்று மக்டூகல் எடுத்துக் காட்டியுள்ளார். ஐரோப்பாவை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால் ஜெர்மனி பீடிக்கப்பட்டிருந்தது. இஸ்லாமிய நாடுகள் சமயப் படை

யெடுப்பு எண்ணத்தை மேற்கொண்டிருந்தன. பிரஞ்சுப் புரட்சியில் விடுதலை, சம உரிமை, தோழமை என்னும் எண்ணங்கள் முக்கிய இடம் பெற்றன. ஒவ்வொரு தேசமும் பிற தேசங்களுக்கு இயற்ற வேண்டிய கடமை உண்டு. சமாதானம் இன்று ஓர் இன்றியமையாத் தேவை — இத் தகைய எண்ணங்களின் அடிப்படையாக ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான கலாசார அமைப்பு முதலியன தோன்றியுள்ளன.

ஆகையால் தேசங்களின் வாழ்க்கை, குருட்டுச் சக்திகளால் மட்டும் இயன்றதன்று.

தேசப் பண்பு உண்டா ?

ஒவ்வொரு தேசத்திற்கும் உரிய சிறப்புப் பண்பு உண்டென்று பொதுவாக மக்கள் நம்புகிறார்கள். வெவ்வேறு தேச மக்களின் பண்புகளைப் பற்றிச் சார்பற்ற உற்றுநோக் காளர்களின் முடிவுகள் அடிக்கடி ஒன்றுக அமைவதுண்டு. எடுத்துக் காட்டாக இந்தியர் 'அவ்வுலகம்' நாடுபவர், எளிய வாழ்க்கையர், ஆன்மீக மனப்பான்மையுள்ளவர், ஊழ்வினை நோக்குள்ளவர் என்கிறார்கள். ஆங்கிலேயர் சுறுசுறுப்புள்ளவர்கள், காண்நிலையுள்ளவர்கள், தனித் தன்மையுடையவர்கள், பொதுக் கொள்கைகளும், நீண்ட காலத் திட்டமும் வகுக்காமல், பிரச்சினைகள் தோன்றும் போது அவற்றைச் சமாளித்துக் கொள்கிறார்கள்; தனியாள் விடுதலை, கட்டில்லா முயற்றி, விட்டுக் கொடுப்பு முதலிய வற்றை ஆதரிக்கிறார்கள் என்பதும் ஒரு பொதுவான எண்ணம். ஜெர்மானியர் தனித்தன்மையுள்ளவர், ஆனால் விட்டுக் கொடுக்கச் சம்மதிக்க மாட்டார்கள்; அவர்கள் நல்ல உழைப்பாளிகள்; சமூக, அரசியல், தத்துவத் திட்டங் களை வகுக்க விரும்புகின்றனர் என்றும் மக்கள் கருதுகிறார் கள். பிரெஞ்சியருக்கு விதிவிளக்க ஆய்வுப் போக்கு உண்டு; பொதுவான, திட்டமான, அளவையியல் முறைப்படி இயைகின்ற பிரச்சினை விடைகளை அவர்கள் விரும்பு கிறார்கள் என்பது ஒரு பொதுக் கருத்து.

இங்கு இரண்டு கேள்விகளை நாம் எடுத்துக் கொள்ள லாம். (1) 'தேசீயப்பண்பு' என்றால் என்ன? (2) இப்பண்பு எக்காலத்திலும் மாறாது இருத்தப் பெற்றதா? அல்லது அது எப்பொழுதும் மாறிக் கொண்டிருப்பதா?

தேசப்பண்பு என்றால் என்ன?

தேசப்பண்பை ஃஎர்ட்ஸ் (Hertz) பின்வமாறு வரையறுத்தார்:

'மரபுகள், கவர்ச்சிகள், குறிக்கோட்கள் ஆகியவற்றின் முழுமைத் தொகுதியே தேசப்பண்பு ஆகும். இவை ஒரு தேசத்தில் மிகவும் பரந்து நிற்பவை, வன்மையுள்ளவை. ஆகையால் தேசத்தின் சாயலை, அத்தேச மனத்திலும், வெளியார் மனத்திலும் உருவாக்குவது இப்பண்பே..... உணவு, பானம், உறையுள், பிற வாழ்க்கை வழிகள், சிந்தனைப் பழக்கங்கள், பற்றுக்கள் முதலிய எல்லாவற்றிலும் ஒவ்வொரு தேசத்திலும் சில விருப்புக்கள் உள்ளன.'

நாம் குழு மனம் அல்லது தேசமனம் என்று ஆளுருப் படுத்தாமல் ஒரு மக்களின் உளவியற் பண்புகளைப் பற்றிப் பேசலாம் என்று மாரிஸ் ஃகின்ஸ்பெர்கும் கூறியுள்ளார். அதாவது, ஒரு மக்களிடையே உணர்ச்சியிலும், முயற்றியிலும், சிந்தனையிலும், செயலிலும் மிகப் பரந்துபட்ட சில வழிகள் உள்ளன. இவ்வழிகள் அவர்களுடைய நடத்தையை உருப்படுத்துகின்றன. இவை அவர்களைப் பிற மக்களினின்றும் பிரித்துக் காட்டுகின்றன.

தேசப்பண்பின் தீர்விகள் (Determinants):

தேசப்பண்பின் தீர்விகளைப் பற்றி ஆராய்ந்தால் நாம் மேலேகூறியஇரண்டாம் கேள்விக்கு விடையளிக்கமுடியும். 'தேசப்பண்பு மாறுததன்று, அது எப்பொழுதும் உருவாகிக் கொண்டே இருக்கிறது' என்ற ஃகின்ஸ்பெர்கின் கருத்து நமக்கு ஏற்புடைத்தாகும்.

ஒரு தேசம் முழுவதற்கும் உரிய தேசப் பண்பு என்று ஒன்று உண்டா? ஆயின் அதன் தீர்விகள் யாவை? என்ற கேள்விகளைப் பற்றிப் பலர் ஆராய்ந்துள்ளனர். இவர்களுள், ரூத்ஃபெனிடிக்ட், மக்டூகல், ஃஎர்ட்ஸ், மாரிஸ் ஃகின்ஸ்பெர்க், ஃப்ளாக்பர்ன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். முதலில்மக்டூகலின் கருத்தைத் தொகுத்துக் கூறி அதை ஏன் முற்றிலுமாக ஒத்துக்கொள்ள முடியாது என்பதையும் விளக்குவோம்.

முன் கூறியபடி மனமானது உள்ளத்து அல்லது நோக்கமுடைய சக்திகளின் அமைப்பு என்று மக்டூகல் வரையறுத்தார். தேசத்தின் மனமானது இத்தகைய உள்ளச் சக்திகளின் அமைந்த தொகுதியாகும். அது தனி யாட்கள் மூலம்செயற்படுகின்றது என்று அவர் கொண்டார். தேசப்பண்பு அமைவதில் மில்,ஃபக்கிள் முதலியோர் கூறிய சூழ்நிலைக் கூறுகளின் - தட்பவெப்பம், சூரிய ஒளி, காற்று, புயல் முதலியவற்றின் – சிறப்பையும் அவர் உணர்ந் தார். ஆயினும் **இனக்கூறுகளே** அவர் பெரிதும் வலியுறுத் தினர். அவருடைய வாதம் பின்வருமாறு: முதலாவதாக, இனங்களுக்கிடையே இயல்பான மன வேற்றுமை உளது; இரண்டாவதாக, இத்தகைய உள்ளார்ந்த வேற்றுமைகள் நெடுங்காலம் நிலைத்து நிற்கின்றன; மூன்றாவதாக, இவை தேசப் பண்பைத் தீர்மானிக்கின்றன. இவற்றிற்கு அவர் பல எடுத்துக்காட்டுகளும் கொடுத்தார். நீக்ரோக்கள் கவலைப்படாது இன்பம் நாடும் பாங்கினர்; கட்டுப்படுத்தாத மன எழுச்சியை வலுவந்தமாக வெளிப்படுத்துபவர். அயர் லாந்தினர், கவிச்சுவையும் உற்சாகமும் உடையவர். ஆங்கிலேயர் காண் நிலையர், ஃபிரெஞ்சியர் விதி விளக்கம் காண்பவர்; இவ்வேற்றுமைகள் உள்ளார்ந்த உயிரியற் கூறுகளை அடிப்படையாகக் கொண்டவை என்று மக்டூகல் வாதித்தார். 'ஆசியர் ஊழ்வினைபால் நம்பிக்கை கொண்ட இனத்தவர். அதனால் தான் அல்லாவின் ஆணைப்படி பணிந்து நடக்க வேண்டும் என்று போதிக்கும் முஸ்லிம் மதம் அங்கு பரவியுள்ளது.' இந்திய இனம் இயல்பாகவே அறிவு சார்ந்தது, அறநெறிப்பட்டது.மேல்நாட்டுப் பண்பாடு இந்தியர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்ற லிபானின் கருத்தை மக்டூகல் ஆதரித்தார். ஒவ்வொரு இனக்குழுவிற் கும் உள்ளார்ந்த அறிவு (innate genius) உண்டு. அது இவ் இயல்பான அறிவுக்குப் பொருந்துகிறவற்றையே அதன் சூழ்நிலையினின்றும் பிற மக்களிடமிருந்தும் ஏற்றுக் கொள்கிறது. பிரெஞ்சு மக்களுடைய மையப்படுத்திய அரசாங்க முறை அவர்களுடைய விதி விளக்கப் போக் கிற்குப் பொருந்தியது. ஆங்கிலேய மக்களாட்சி அவர் களது காண்நிலை அறிவுக்குப் பொருத்தமானது. இவ்வாறே பிறவும் விரித்துரைக்க. மக்டூகல் இவ்வாறு தமது 'குழு மனம்', 'சமூக உளவியல்' [6] என்ற இரு நூல்களிலும் இனம் தேசப் பண்பைப் பாதிக்கும் வகையை வலியுறுத்தினர்.

ஆனால் மேலே கூறிய மக்டூகலின் கோட்பாட்டை நாம் ஏற்க முடியாது. அடிப்படையிலாவது தேசப்பண்பு மாறக்

கூடாதது என்னும் எண்ணம் இதன் மூலம் ஏற்படுகிறது. இது தவறு. சூழ்நிலை மாறும்போது நன்கு நிலைத்திருந்த தேசப் பழக்கங்களும் பண்புகளும் மாறுகின்றன. சூழ்நிலைக் கூறுகளை மக்டூகலும் உணர்ந்திருந்தார். ஆனால் அவை இனவழிக் (உயிரியல்) கூறுகளுக்கு அடங்கியவை என்று அவர் கொண்டார்.

ஏழு சூழ்நிலைக் கூறுகளை நாம் எடுத்துக் கூறலாம். அவற்றுள் ஒவ்வொன்றும் தனியே இன்றியமையாதவை யல்ல. ஆனால் இவையெல்லாம் ஒன்று கூடி, தேசத்திற்குச் சிறப்பாக அமையும் வாழ்க்கை வழியையும் சிந்தனை வழியையும் ஏற்படுத்துகின்றன. இக்கூறுகளாவன: புவியியல், பொருளாதாரம், பண்பாடு, அரசியல் அமைப்பு, வகுப்பு அமைப்பு, மொழி ஒருபடித்தாதல், சமயம் ஒருபடித் தாதல் ஆகியவை. இனி, தேசீயப் பண்பாடு இக்கூறுகளின் விளைவாதல் எங்ஙனம்? இக்கூறுகள் மாறும்போது தேசப் பண்பு மாறுவது எப்படி? என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

புவியியலுள் தட்பவெப்பம், ஈரம், சூரிய வெளிச்சம், காற்று, புயல், மழை முதலியவையெல்லாம் அடங்கும். இவையெல்லாம் முழு வலிமையுடையனவல்ல. மனிதன் இயிற்கையின் வழியுட் புகுந்து புவியியற் சூழ்நிலையை மாற்றியமைக்க முடியும். ஆகையால் புவியியல் முன்தீர்வு (geographical determinism) என்பது கிடையாது. ஆனால் இப்புவியியற் கூறுகள் 'வளர்ச்சிக்குரிய சில வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றன. இந்தியாவில் தட்பவெட்பநிலை ஆண்டு முழுவதும் ஓரளவு சூடாகவும் ஈரமாகவும் இருப்பதால் தொடர்ந்து சுறுசுறுப்புடன் வேலை செய்வதற்கு உகந்த தன்று; * இந்திய மக்கள் விவசாயம் செய்து பிழைத்தனர். ஆகையால் வான்மழையை நோக்கி வாழவேண்டியதா யிற்று. விளைவு திட்டமாகக் கிடைக்குமென்று அவர்கள் எதிர்பார்க்க முடியாது. நிலைத்த ஒழுங்கான வருமானம் கிடைக்கக் கூடிய தொழில்கள் அவர்கள்முன் இல்லை. இது தான் இந்திய ஊழ்வினைக் கொள்கைக்கு அடிப்படைக் காரணமானது என்பது இவ் ஆசிரியர் கருத்து. இக்கூறுகள் மிக வன்மையுள்ளவையாயினும் ஒரு தேசம் வெவ்வேறு

* குளிர்ந்த வெப்பநிலைக் கூண்டில் வைத்திருந்த எலி வெளியே சென்று பிஸ்கோத்துகளைத் தின்று, அவற்றைச் சேமித்து வைத்தது. ஓரளவு சூடான வெப்பநிலையில் வைக்கப்பட்ட எலி அப்படிச் செய்யவில்லை. அது உள்ளதே போதுமென்று இருந்தது போல் காணப்பட்டது. (Dr. Clarence Mill, Climate Makes the Man.)

காலங்களில் வெவ்வேறு வளர்ச்சி முறைகளைத் தேர்ந்து கொள்ளக் கூடும். நம் நாட்டையே எடுத்துக் கொண்டால், மேல்நாட்டுத் தொழில் நுட்பத் தாக்குதலால் நம் நாடு விரைந்து தொழின்மயப்பட்டு வருவதால் தொழிற் சட்டம் வகுக்கப்படுகிறது. நம் பழைய ஊழ்வினைக் கொள்கை குறைந்து வருகிறது.

இனி, **பொருளாதாரக்** கூறினைப் பார்ப்போம். ஒரு நாட்டின் மக்கள் நெருக்கமும் இதனுள் அடங்கும். தொழில் மயப்பட்ட நாட்டில் மக்கள் கிராமங்களை விட்டு நகரங்களில் அடர்ந்து வாழ்கின்றனர். கிராமங்களின் வாழ்க்கைமுறை நகரங்களின் வாழ்க்கைமுறையினின்றும் வேறுபட்டது.

மூன்றுவதாக, **பண்பாட்டைப்** பார்க்கலாம். வழக்கங்கள், மரபுகள், அடிப்படை நம்பிக்கைகள், விழுமியங்கள் ஆகியவை இதனுள் அடங்குவன. இக்கூறுகள் உயிரியல் மரபுநிலையைவிட முக்கியமானவை. சில பண்பாடுகளில் பணத்திற்கு மதிப்பு கிடையாது. வேறு சிலவற்றில் பணம் தான் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஆட்சி புரிகிறது. சில பண்பாடுகள் குமரப் பருவத்தை அடிப்படை யாகக் கொண்டவை. சில, முதிர்ந்தோர் வாழ்க்கையை மையமாகக் கொண்டவை. ரூத்பெனிடிக்ட் கூறியுள்ளபடி, சில பண்பாடுகள் இறப்பு என்னும் கருத்தை ஆதாரமாகக் கொண்டு கட்டப்பட்டவை. இந்துப் பண்பாட்டில் நான்கு அடிப்படை விழுமியங்கள் உள்ளன. இங்குக் கூறப் பட்டுள்ள நான்கு ஆசிரமங்களும் முறையே, அறிவுபெறல், மண வாழ்க்கை, பற்றறுதல், துறந்து வீடுபெறல் ஆகிய வற்றை நாடுதற்காக ஏற்பட்டவை. அர்த்தம் (Artha) என்பது பொருளீட்டுதலைக் குறிக்கிறது; பொருளின் மூலம் நாம் நமது வேட்கைகளை எய்தலாம். காமம் (Kama) என்பது நமது இச்சைகள் அனைத்தையும் குறிக்கிறது. இணைவிழைச்சு, தன் குழந்தைகள் நலம் பேணல், வலிமை, புகழ்வன்மை, கலை மூலமாகவும் பிற வழிகளிலும் பெறும் தன்-வெளிப்பாடு ஆகியவை அனைத்தும் காமம் என்ற சொல்லில் அடங்கும். தர்மம் (Dharma) என்னும் சொல் நாம் பிற விழுமியங்களைத் தொடரும் அறமுறையைக் குறிக்கிறது. ஆளுமையின் ஒருமைப்பாட்டையும், சமூகத் தின் ஒருமையையும் குலைக்காமல் நாம் நம் செயல்களைத் தொடர வேண்டும். மோட்சம் (Moksha) என்பது வீடு; விடுதலையையும், பற்றறுதலையும் கொண்ட மனநிலை.

இத்தகைய கோள்களைச் சமூகம் ஒப்புக் கொண்டு, மக்கள் நெடுங்காலம் பின்தொடர்ந்து வருவதால் இதனெடு தொடர்புள்ள மனப்பான்மைகளும் சிந்தனை வழிகளும் இந்நாட்டு மக்களுக்கே சிறப்புப் பண்பாகி விடுகிறது.

அடுத்தபடியாக, நாட்டின் **அரசியல் அமைப்பும்** முக்கியமானது. ஒரு நாடு நெடுங்காலம் சர்வாதிகாரிகளால் ஆளப்பட்டால், மக்கள் அடக்குமுறையாலும், ஒற்றுமுறையாலும், அவதிப்பட்டால், இம்மக்கள் சந்தேகமுள்ளவர்களாயிருத்தல் இயல்பேயாகும். மன்னர் நெடுங்காலம் ஆண்ட நாடுகளில் மக்கள் கீழ்ப்படிவது போல் நடிக்கும் பண்பினராகக் கூடும்.

இனி, **வகுப்பு அமைப்பைப்** பற்றிப் பார்க்கலாம். பொதுவாக, உயர் வகுப்பினரைத் தாழ்ந்த வகுப்பினர் பின்பற்றுகிறார்கள். மேலோர் விழுமியங்களைக் கீழோர் ஏற்றுக் கொள்கின்றனர். இந்தியச் சமூகத்தில் மன்னர்களுங்கூட, குருக்களையும் தத்துவர்களையும் மதித்து வந்தனர். ஆகையால் இந்துச் சமூகத்தில் எளிமை, ஆன்மீகம், சமயம் ஆகியவை வாழ்க்கைப் படிவமாக அமைந்ததில் வியப்பொன்றுமில்லை.

கடைசியாக, **மொழியிலும் சமயத்திலும் ஒருபடித்தன்மை** (homogeneity) யும் முக்கியமானது. இவை இரண்டும் சமூகப் பண்பாட்டின் ஊர்திகள் (Vehicles) ஆவன. இந்தியாவைப் போன்ற பன்மொழி நாடுகளில் இத்தகைய ஒருபடித்தன்மையைக் காண்பதரிது. அண்மைக் காலத்தில் 'அந்தர் பாரதி' போன்ற நிறுவனங்கள் மூலம் தேசீய மொழியையும் தேசப் பண்பாட்டையும் வளர்க்க முயன்று கொண்டிருக்கிறோம். விரைவில் தேசப்பண்பு உருவாகி விடும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

மேற்கூறிய கூறுகள் மாறினால் தேசப்பண்பும் மாறுகிறது. புரட்சி முதலிய நெருக்கடி நிலைகளில் இம்மாறுதல் திடீரென்று திகழ்கிறது. இம்மாறுதல் மெதுவாகவும் நடைபெறலாம். மாறுதல் வகையைப் பொறுத்த வரையில் தேசப் பண்பும், தனியாட் பண்பைப் போன்றது. தனியாள் அனுபவத்திலும் மாறுதல் திடுமென்றும் நிகழலாம், பையவும் நடைபெறலாம். ஆகவே தேசப்பண்புகளும்,

பண்புக் கூறுகளும் நெகிழும் தன்மையன, மாறக்கூடியன என்று கருதுவதே பொருந்தும்.

References :

1. Krech and Crutchfield, Theory and Problems of Social Psychology, p. 444.

2. F. H. Allport, Social Psychology; also ref. Murphy, Murphy and Newcomb, Exprimental Social Psychology, p. 65.

3. J. Blackburn, The Framework of Human Behaviour, p. 98.

4. McDougall, Group Mind, p. 101.

5. Morris Ginsberg, in The British Journal of Psychology, 1942.

6. McDougall, Group Mind, p. 108, and Social Psychology p. 330.

16. சமூக மாறுதலும் முன்னேற்றமும்

(Social Change and Progress)

சமூக மாறுதலும் தனியாளின்பால் அதன் வன்மையும்.

சமூகங்கள் எப்பொழுதும் ஒரே நிலையில் நிற்பதில்லை. அவற்றின் உறுப்பினர் மாறுகிறார்கள். அவர்களுடைய சாதனைகள் பெருகுகின்றன. நம்பிக்கைகள், விழுமியங்கள், குறிக்கோள் தொகுதி, கலை, வழக்கம் முதலியனவெல்லாம் மாறுகின்றன. சமூக மாறுதல்கள் பல காரணிகளால் ஏற்படுகின்றன. இக்காரணிகளை, பூதவியல், உடலியல், தொழில் நுட்பவியல், பண்பாடு என்று பலவாறு கூறுபடுத்தலாம்.

இயற்கை நிகழ்ச்சிகள் - பூகம்பம், வெள்ளம், பஞ்சம், இயற்கை வளக்குறைபாடு, தட்பவெப்பநிலை மாற்றம், முதலியவை **பூதவியற் கூறுகளாவன.** (Phsyical factors). இவற்றுட் சில மனிதனுடைய செயல்களால் விளைபவை. எடுத்துக்காட்டாக, மனிதர் பஞ்சங்களை உண்டாக்குகிறார்கள். தம் சுற்றுப்புறத்திலுள்ள இயற்கை வளங்களை விரைந்து பயன்படுத்தி விடுகிறார்கள். அணுகுண்டை வெடித்துப் பரந்த நிலப்பகுதிகளைக் கதிரியக்கத்திற்குட் படுத்துகிறார்கள். இத்தகைய நிலைமை ஏற்பட்டால் மக்கள் இடம் பெயர வேண்டியதிருக்கிறது. புதிய இடங்களுக்கேற்ற புதிய மாறுதல்களை மேற்கொள்ள வேண்டியதிருக்கிறது.

உயிரியற்கூறு (biological factor) என்பது இனக்குழுக்களின் கலப்பைக் குறிக்கிறது. வெவ்வேறு இனத்தைச் சார்ந்த பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் இத்தகைய

மாறுதலின் சின்னங்களாவர்; ஒரே இனத்திலும் கூட பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் பெற்றோர் ஒவ்வொருவரிட மிருந்து பாதி குரோமோசோம்களையே பெற்றுள்ளது. ஆகை யால் ஒவ்வொரு தலைமுறையிலும் புதியதொரு உயிரியல் தொடக்கம் உள்ளது. இவ் உயிரியல் மரபுநிலையானது குழந்தைகளின்பொது அமைப்பையும் சுரப்பி அமைப்பை யும்தீர்மானிக்கிறது. இவைமனப்பாங்கு, நுண்ணறிவு, செயல் மட்டம் முதலியவற்றைத் தீர்மானிக்கின்றன.

இனி, **தொழில் நுட்பக் கூறுகளைப்** பார்க்கலாம். புதுப் புனைவுகள், அல்லது அறிவியற் கண்டு பிடிப்பின் நடை முறைப் பயில்வுகள் இதனுள் அடங்கும். இவற்றின் மூலம் மனிதருக்குச் சுகவாழ்வு, ஓய்வு, இன்பம் முதலியவை பெருகுகின்றன. தொழிற் புரட்சியாலும், இற்றைய வேலைக் குறைப்பு முறைகளாலும் தொலைவுக்குறைப்புச் சாதனங்க ளாலும் இவ்வசதிகள் ஏற்படுகின்றன. இவற்றின் பயனைக் புதியதொரு வேலைப்பாகுபாட்டு முறை ஏற்பட்டுள்ளது; மக்கள் கிராமத்தை விட்டு நகரங்களுக்குப் பெயர்கின்றனர்; சமூக அமைப்பும் மாறுகிறது. ஒரு பக்கத்தில் வேலை யில்லாத் திண்டாட்டமும், மற்றொரு பக்கத்தில் அதிகப்படி ஓய்வும் கிடைக்கிறது. இதை எப்படிச் சரிவரப் பயன் படுத்துவதென்று மக்களுக்குத் தெரியவில்லை.

பண்பாட்டுக் கூறுகள் (cultural factors) பண்பாட்டில் வேறுபட்ட மக்கள் தொடர்புறுவதால் ஏற்படுவன. இத்தகைய தொடர்புகள் மன்னருடைய மன்றங்களிலும், நாட்டின் தலை நகரங்களிலும், வியாபார நகரங்களிலும், பயணங்கள் மூலமாகவும், ஒன்று சேர்ந்து போர்புரியும் நாடுகளின் பாசறைகளிலும், இலக்கியத்தின் மூலமாகவும், பிற கருத்துடம்படுப்பு முறைகளின் மூலமாகவும், வானொலி, ஒலிபரப்புக்களின் வாயிலாகவும் சினிமா மூலமாகவும் ஏற்படுகின்றன. போரில் வெற்றியடைந்தவர்கள், தோற்ற வர்கள் நாட்டில் குடியேறித் தங்கள் பண்பாட்டைத் தோற்றவர்கள்மீது புகுத்துகிறார்கள். இயற்கையின் மாறு தல்களாலும் பிற மக்களுடைய கொடுமையாலும் மக்கள் இடம் பெயர்வதுண்டு. இதன் மூலமாகவும் வெவ்வேறு பண்பாட்டுக் குழுக்கள் ஒன்றாக வாழ நேர்கிறது. இந்திய வரலாற்றில் வட இந்திய மன்னர்களும் தென்னிந்திய அரசுக்குடும்பங்களும் திருமணத்திற் கலந்து கொண்டது. நம் நாட்டில் பண்பாட்டு ஒருபடித்தன்மை ஏற்படுவதற்கு

ஒரு முக்கிய காரணமாக அமைந்தது என்று ஃகுர்யே (Dr. Ghurye) கூறியுள்ளார்.[1] பழங்காலத்தில் வடமேற்கிலிருந்து பல குழுவினர் நம் நாட்டின் மேற் படையெடுத்தனர். ஆங்கிலேயரைத் தவிர, வென்ற குழுவினர் அனைவரும் இந்தியாவிலேயே தங்கிவிட்டனர். ஆகையால் அவர்களுடைய பண்பாடுகள் வட இந்திய வாழ்க்கையில் நன்கு ஊடுருவியிருப்பது இயற்கையே. ஆங்கிலேயர் நகர மக்களிடம் தம் பண்பாட்டைப் புகுத்தினர். இக்காலத்தில் வானொலி, திரைப்படம், அச்சகம் முதலியவற்றின் வன்மையால் உலகின் பல பாகங்களும் ஒன்று கூடிவருகின்றன. இத்தகைய புறக்கூறுகள் தவிர, சில உலகப்பெரியார் தோன்றி வரலாற்றிற்குப் புதிய உரை கண்டுள்ளனர்; மக்களுக்குப் புது விழுமியங்களும் புது நோக்கும் அளித்துள்ளனர். புத்தர், அசோகர், கிறிஸ்து, கார்ல்மார்க்ஸ், ஃபிராய்டு, மகாத்மா காந்தி முதலியோர் இவ்வாறு பண்பாட்டைச் சிறப்பித்த பெரியோர் ஆவர்.

சமூக மாறுதலால் தனியாளின் மேல் ஏற்படும் விளைவுகள்.

சமூக மாறுதல்களுக்குக் காரணம் யாதாயினும் சரி, அவை தனியாளின் உடலையும் மனத்தையும் பாதிக்கின்றன என்பது திண்ணம். இதை விளக்குவதற்கு மக்களின் இடப்பெயர்ச்சி, குடும்ப அமைப்பு மாறுதல், சமயச் சீர்குலைவு முதலியவற்றை எடுத்துக் கொள்வோம்.

இடப்பெயர்ச்சி (Migration). வறுமையாலும், நிலம் இன்மையாலும் கிராமத்தார் நகரங்களை நோக்கிச் செல்கின்றனர். நகர வாழ்க்கையின் கவர்ச்சி, தொழில்மயப்பட்ட பெரிய நகரங்களில் கிடைக்கக கூடிய வேலைகள் முதலியவற்றால் நாட்டு மக்கள் ஈர்க்கப்படுகிறார்கள்.* சில வேளைகளில் இயற்கை வன்மைகளாலும் அரசியற் சண்டைகளாலும் வலுவந்த (forced) இடப்பெயர்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன. இடப்பெயர்ச்சியின் விளைவுகள் சிலவற்றைப் பார்ப்போம். சமுதாய வாழ்க்கை மறைகிறது. இதன் விளைவாக தனியாளுடைய நெருங்கிய சமூகத் தொடர்புகள் குறைகின்றன. அவருடைய காப்புணர்ச்சி கெடுகிறது. கும்பலின் மத்தியிலும் அவர் காணுமற் போனவர்போல். இருக்கிறார். மக்கள் நெருக்கமுள்ள நகரங்களிலும் அவர் தனிமை உணர்ச்சியோடு இருக்கிறார்.

*மக்டுகல் நினைத்தது போல் கூடி வாழும், தன்மையாலன்று. Aldous, Science, Liberty and Peace, 2ம்- Kalelkar Lokjivan- 2ம்-காண்க.

அண்மையில் இந்தியாவிற்குள் திரளாக அகதிகள் வலுவந்தமாக இடம் பெயர்ந்ததை எடுத்துக் கொள்வோம். அவர்கள் தங்கள் நிலங்களை இழந்ததும், தங்கள் உற்றார் கொல்லப்படுவதைப் பார்க்க நேர்ந்ததும் அவர்களுடைய தவறன்று. முன்பின் தெரியாத நாட்டிற்குள் அவர்கள் அடைக்கலம் புகவும், புதிய மக்கள் நடுவே வாழவும், புதிய தொழில்களை நாடவும் நேர்ந்தது. இந்நிகழ்ச்சிகளின் மூலம் அவர்களுடைய காப்புணர்ச்சி தகர்ந்தது. அவர்களுடைய மனவெழுச்சி நிலை பாதிக்கப்பட்டது. அவர்கள் புதிய நிலைகளுக்கேற்ப தங்களைப் பொருத்திக் கொள்ள வேண்டியதிருந்தது. இந்த அகதிகள் அனைவரையும் அரசு பாதுகாப்பதென்பது முடியாத காரியமாயிற்று. தங்கள் பிரச்சனைகளைத் தாங்களே தீர்க்க முயல்பவர்களையும் உலகம் எப்பொழுதும் பாராட்டுவதில்லை. இவ்வாறு துன்புற்றவர்களுட் சிலர் தங்கள் கடவுள் நம்பிக்கை தகர்ந்துவிட்டதென்று கூறினர். வேறு சிலர் கடவுளையே நம்பிக்கையாகக் கொண்டனர். இளம் பையன்களும் பெண்களும் தங்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைகொண்டுள்ளதாகக் கூறியுள்ளனர். ஆனால் இந்நிகழ்ச்சியால் சில நன்மைகளும் ஏற்பட்டுள்ளன. இப் பொருளாதார வற்புறுத்தலால் சிலர் உழைப்பில் ஈடுபட்டு, இதில் ஈனம் ஒன்றும் இல்லை என்று கண்டனர். முற்சார்புகளும் இப்பொழுது மறைந்து வருகின்றன. முற்காலத்தில் சிந்திலுள்ள அமிலியர் (Amils) இனப் பெருமையால் பிறரோடு மணக்கலப்புக் கொள்வது கிடையாது. ஆனால் இப்பொழுது அவர்கள் இத்தகைய குலப்பெருமையை விடுத்து, பிறருடன் கலந்து கொள்கின்றனர்.

சமூக மாறுதலை மற்றொரு எடுத்துக்காட்டைக் கொண்டும் விளக்கலாம். அடிக்கடி போரினாலும், பஞ்சத்தினாலும், இடம்பெயர்தலாலும் ஆண், பெண் விகிதம் மாறுதலடைகிறது. போர்முனையில் திரளான வாலிபர்கள் உயிர் துறக்கக் கூடும். இவ்வாறு நிகழ்ந்தால் ஏற்கனவே நிறுவப்பட்ட திருமண விதிகளும் பாலியல் அறமும் நிலை நிற்பது அரிது; திருமணச் சட்டங்களை மாற்றியமைக்க வேண்டியிருக்கும்; பலதாரமணம் (polygamy) அல்லது பல ஆண்மணம் (polyandry) தோன்றலாம்.*

* Dean Inge -Five essays- 'Essay on war' காண்க. பிறர் கவர்ந்து கொண்டு சென்ற பெண்களை மீட்டபின் வைதீகத்தை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

குடும்ப அமைப்பில் மாறுதல்கள்.

பொருளாதார நெருக்கடிகள், வேலைத்தேவைகள், தனித்தன்மை (individuality) வேட்கை முதலியவற்றின் பயனாகக் கூட்டுக்குடும்ப முறை ஏறக்குறைய முற்றிலும் அழிந்து விட்டது. கல்வியும் சட்டமும் சேர்ந்து குழந்தை மனத்தைப் போக்கத் துணை புரிந்துள்ளன. கருத்தடையும் குடும்பக்கட்டுப்பாடும் வந்துவிட்டன. இவை பொருளாதாரத் தேவையாகின்றன; மேலும் பொறுப்பின்றி இன்பம் துய்க்கும் நோக்கத்தாலும் இவை நிலைபெறுகின்றன. இவற்றின் பயனாக இற்றைய குடும்பத்தில் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்துள்ளது. குடியிருக்கும் வீட்டு நிலையும் இன்று திருப்தியாக இல்லை. தொழில்மயப்பட்ட நகரங்களில் மக்கள் சிறு இல்லங்களிலும், மோட்டார் வண்டிக்கொட்டகைகளிலும்* படிக்கட்டுகளுக்குள் கீழும்* கூடத்தங்குகிறார்கள்.

நடுத்தரக் குடும்பங்கள் சிறியனவாக அமைந்தால் அக் குழந்தைகள் அதிகக் கவனம் பெறுகிறார்கள். உடல் உழைப்புக் குடும்பங்கள் சிறியனவாக இருந்தால் அவற்றிலுள்ள குழந்தைகள் போதிய கவனம் பெறுவதில்லை. மேலும் இச்சிறிய குடும்பக் குழந்தைகளுடைய அனுபவம் குறைந்தது. அவர்களுக்கு மாதிரிகளாகத் தாயும் தந்தையும் மட்டுமே உள்ளனர். இவர்களை வளர்க்கும் பொறுப்பு பெற்றோரை மட்டும் சார்ந்தது. தொழிலாளர் குடும்பங்களில் குழந்தைகளுக்கு மாதிரிகளே அமைவதில்லை. இவ் இருவகை நிலைமைகளும் ஆரோக்கிய வளர்ச்சிக்குத் தகுந்தவையல்ல. கூட்டுக் குடும்பத்தில் முதியோரும், இளையோரும் நெருங்கிய அன்புத் தொடர்புடன் வாழ்கின்றனர். இடர்ப்படும் இளைஞருக்கு அறிவுரையும் துன்பப்படுபவர்களுக்கு ஆறுதலும் இங்குக் கிடைக்கிறது. இற்றையச் சிறு குடும்பத்தில் இந்த நன்மைகள் இல்லை. பெரியவர்களும் தனிமை உணர்ச்சிக்குட்படுகிறார்கள். தங்களைப் பிள்ளைகள் வேண்டுவதில்லையென்று நினைக்கிறார்கள். மதிக்கப்படாத, பராமரிக்கப்படாத, முதுமை துன்பமான நிலைமையாகும். இற்றைய மனிதன் மூப்பிற்கு அஞ்சுகிறான். தான் முதியோனாவதை அவன் தனக்குள் கூட ஒப்புக்கொள்வதில்லை. இளமையாகத் தோன்ற அரிதின் முயலுகிறான்.

* ஆமதாபாத்தில்
* பம்பாயில்

சமயச் சீர்குலைவு (Religious Disorganisation):

மூப்பிற்கு மக்கள் அஞ்சுவதற்கு மற்றொரு காரணம் சாவைப்பற்றிய எண்ணமுமாகும். வாழ்க்கையின் இறுதி நிகழ்ச்சியாகிய சாவிற்கு மக்கள் ஆயத்தமாக இருப்பதில்லை. இற்றைய உலோகாயத மனிதனுடைய வாழ்க்கையில் சமயத்திற்கும் தத்துவத்திற்கும் இடமில்லை. இருபதாம் நூற்றாண்டு புறமுகத் (extrovert) தன்மையது, அகமுகமற்றது. இயற்கையை மேற்கொள்தல், 'மனித ஆற்றலைப் பயன்படுத்தல்', 'பொருட்களையும் மனிதரையும் கையாளுதல்', 'நண்பரைப்பெறுதல்', 'வாழ்க்கையில் வெற்றி பெறல்', 'போட்டியில் வெற்றி' முதலியவை இன்றைய நாகரிக மனிதனுடைய விழுமியங்கள் ஆவன. நாம் எப்பொழுதும் நம் உள்ளார்ந்த தன்மைக்குப் புறத்திலேயே உள்ளோம். நம் தன்னகங்களோடு (self) நமக்கு ஒப்புரவு கிடையாது. தத்துவத்தையும், சமயச் சித்தனையையும் நாம் சற்றுத் தூரத்திலேயே வைத்துள்ளோம்.

இனி, சமயச் சீர்குலைவையும் அதன் உளவியல் விளைவுகளையும் பார்ப்போம்.

மனிதனுடைய அறியாமையாலும், அச்சத்தாலும் எழுந்த சமயம் மறைந்ததற்காக நாம் வருந்தவேண்டியதில்லை. சங்கராச்சாரியார் சொன்னபடி, மனிதன் அறியாமையால் (அவித்தை) அண்டத்தின் எல்லையற்ற சக்தியை மனிதக் கண்ணுடன் நோக்குகிறான். ஃபிராய்டு கூறுகிறபடி, குழந்தை தந்தையுடன் கொண்ட அனுபவமும், அவரைப்பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மையும், அறியாமையுடன் சேர்வதால் அவன் கடவுளை அல்லது (கடவுளரைத்) தன் தந்தையின் சாயலிலே உருவாக்குகிறான். நம்பிக்கை ஆராய்ச்சியுடன் சேரும்போது, அறிவியலானது இயற்கையைத் துருவி வெற்றி கொள்ளும் போது, உளவியலறிவின் துணையால் பெற்றோர் தோழரும் நண்பருமாகிவிட்டபோது, அரசு தன் குடிகள் அனைவருக்கும் பொருளாதாரப் பாதுகாப்பு அளிக்கும்போது மனித அறியாமையால் தோன்றிய கடவுளர் மாய்வது இயற்கையே.

ஆனால் குழந்தையைக் குளிப்பாட்டிய தண்ணீரைக் கொட்டும்பொழுது குழந்தையையும் சேர்த்து எறிந்துவிடக் கூடாது. சமயத்தை நாம் புறக்கணிக்க முடியாது. சமய

மாவது, நமக்கும் அண்டம் அனைத்திற்கும் உள்ள பிணைப்புக்களை நாம் குழுத்தன்மையோடு எய்துவதேயாகும். இந்த முறையில் உணர்ந்த சமயமே நமக்கு மெய்யறிவைக் கொடுக்கக் கூடும்; அறிவு, எழுச்சி, செய்கை ஆகிய எல்லாத்துறைகளிலும் நமக்குச் சமநிலை அளிக்கக்கூடும். இக்கருத்தில், அண்டத்தின் சக்தி ஒன்று உளது, நாமும் அதனுள் அடங்கியுள்ளோம், இச்சக்தி வளர்ந்து வெளிப்படுகிறது என்னும் முற்கோள் அடங்கியுள்ளது. இம் முற்கோள் நியாயமானதே. அது ஒருவேளை அசைக்கக் கூடாததுமாகும். இது அறிவியலை ஆதாரமாகக் கொண்ட தோர் நம்பிக்கை. இந்த அறிவு நம்மிடம்தாழ்மையுணர்வை ஊட்டுகிறது. இத்தாழ்மையானது சமய உணர்வுக்கே உரியது. இம்முறையில் நாம் கண்ட சமயம் நமது வாழ்க்கை முழுவதிலும் பரவியிருக்க வேண்டும். அறிவியலை அதிகமாக அறிவதால் இத்தகைய சமய உணர்ச்சி வளர்கிறது. இயற்கையின் சிக்கல்களை நன்கு ஆய்ந்தால், நிகழ்முறைகளின் தொடர்ச்சியை உணர்ந்தால், படிமலர்ச்சியைப் பற்றிப் படித்தால், நமது சொந்தச் சாதனைகளையும் அரசியல் அடைவுகளையும் பற்றிச் சிந்தித்தால் நாம் உண்மையான தோழமை யுணர்ச்சியுடன் ஒன்றுபடுவோம். உயிர்களின் துன்பங்களையும் உணருவோம்.

உண்மையான சமய உணர்ச்சி இல்லாததால் இற்றைய மனிதன் வாழ்க்கையின் மாறுதல்களைச் சமாளிக்க ஆயத்தமற்றவனாகிறான். இழப்பு, முதுமை இறப்பு முதலியவற்றை அவனால் எதிர்ப்பட முடியவில்லை. அவனுக்குச் சரியான நோக்கு நிலையைக் கொடுப்பதற்கும் சமய உணர்ச்சி தேவையானது.

சமூகம் தொழின்மயப்படல்:

இனி, தொழில் நுட்பம் தனியாளைப் பாதிக்கும் வகையைப் பார்ப்போம்.

எந்திரங்கள் நுழைந்ததன் விளைவாக மனிதவேலை மிச்சப்படுகிறது. பண்டைய தொழில்கள் பல அழிந்து போகும் நிலையில் இருக்கின்றன. வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிக்கிறது. எந்திரமுறை உற்பத்தியில் பழைய வகைத் தொழிலாளிகள் தேவையில்லை; தனித்துறை வல்லுநரே தேவையாகின்றனர். தனித்துறை வல்லுநரும்

கூடமிகவும் நல்ல நிலையில் உள்ளார் என்று சொல்லமுடியாது. அவர் தாம் மேற்பார்க்கும் எந்திரத்தின் ஒரு பாகமாகவே ஆகிவிட்டார். தான் படைக்கும் ஒருபடி வார்ப்புற்ற (stereotyped) பண்டங்கள் தன் ஆளுமையை வெளியிடுவனவல்ல என்று உணர்கிறார். இது ஒரு பெரும் உளவியல் இழப்பு ஆகும்.

எந்திரத் தொழில்களின் விளைவாக மக்கள் தொகையின் தன்மையும் அவர்கள் குழுமமும், மையமும் மாறுகின்றன. ஆலைத்தொழிலாளர் வாழும் இடத்தில் எல்லோரும் ஒரு தொழிலையே செய்கின்றனர். ஆகையால் குடி வாழ்க்கையின் வேறுபடுப்புகளையும் அவற்றின் இன்பத்தையும் அவர் துய்க்க முடியாது.

தொழிலாளி, கூட்டுக்குடும்பத்திலோ, கிராமச் சமுதாயத்திலோ வாழ்வது குறைந்துவிட்டதென்று பார்த்தோம். இதன் விளைவாக அவர் சமூகத் தன்மை பெறுவதும் தொழிற்பயிற்சி பெறுவதும் குறைந்து விட்டது. மரபு வழித் தொழிற்பயிற்சி பெருத இற்றை மனிதன் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கென்று பயிற்சி பெருமலே உலகத்தில் நுழைகிறான். ஆகையால் தொழிற்பொருத்தம் எய்துவதற்கு மிகவும் இடர்ப்படுகிறான்.

தனியார் முதலாளித்துவத்தில் ஆலைகளின் வேலை நிலைமையும் உள் நிறைவு பெறக்கூடிய வகையில் அமைய வில்லை. தொழிலாளியின் வாழ்க்கை பொருளாதார முறையில் ஏமாப்புடையதாக (secure) அமைந்தாலும் அவன் தன் தொழிலின் உற்பத்திப் பொருளைக் காண்பதில்லை. ஒரு கைதியைக் கண்காணிப்பது போல் அவனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் வேலை ஈனமாகத் தோன்றுகிறது. அவன் தன்மதிப்பை இழக்கிறான். அவனுடைய இல்வாழ்க்கை இன்பமும் பொறுப்புணர்ச்சியும் மறைகின்றன. இற்றைய தொழிலாளி தாழ்ச்சியடைந்து, தான் தொடங்காற்றலை இழந்து, பொறுப்பின்றி, சூது, அறநெறிப்பிறழ்வு, கும்பல் நடத்தை முதலியவற்றை உடையவராஞல் இதில் வியத்தற்கொன்றுமில்லை.[2]

சமூக முன்னேற்றமும் அதன் காரணங்களும் :

மனிதனுடைய சமூக வாழ்க்கை மிகவும்சிக்கலடைந்து விட்டதென்பதில் ஐயமில்லை. வாழ்க்கைத் தரம் உயர்ந்து

விட்டது. மனிதர் ஒருவர்பால் ஒருவர் அதிகமாகச் சார்ந்துள்ளனர். புதுவகையான கூட்டுவாழ்க்கை தோன்றியுள்ளது. பலவகையான நிறுவனங்கள் மனிதனுடைய ஆளிடைத் தொடர்பு நடத்தையைக் கட்டுப்படுத்துகின்றன. இவற்றைச் சமூக முன்னேற்றம் என்று சமூக வியலர் கொள்கிறார்.

சமூக முன்னேற்றத்தை விளக்குவதற்குப் பல கோட்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமான கோட்பாடுகளின் சாரத்தைக் கூறி, நாம் ஒப்புக்கொள்ளக் கூடிய சமூக முன்னேற்றக் கோட்பாட்டை வகுப்போம்.

ஃபக்கிளின் (Buckle) மனித–புவியியற் (Anthropo Geographical) கொள்கை.

வரலாற்றில் சமூக முன்னேற்றத்திற்கு இரண்டுவகைக் கூறுகள்—புறக்கூறுகளும் அகக் கூறுகளும் — உள்ளனவென்று ஃபக்கிள் கூறியுள்ளார். புவியியல் நிலைமைகளைப் புறக்கூறுகள் என்று அவர் கொண்டார். மனிதனுக்குள் உள்ள கூறுகளை அகக் கூறுகள் என்றார். மனிதன் தனது உயர்ந்த அறிவுடைமையால் அதிக அறிவு பெறவும் இயற்கையை மேலும் மேலும் அடக்கவும் வல்லவனாகிறான். புவியியற்கூறும் மிகவும் முக்கியமானது. ஃபக்கிள் ஐரோப்பிய நாடுகளின் நாகரிக வரலாற்றை ஆராய்ந்து, தட்பநிலை உழைப்பிற்குக் காரணியாவதையும் வளமுள்ள நிலம், போதிய உணவு முதலியவை முன்னேற்றத்திற்கு இன்றியமையாத காரணமாவதையும் எடுத்துரைத்தார்.

மனிதச் சமூகத்தின் பண்டைய வரலாற்றைப்பொறுத்த வரையில் ஃபக்கிளின் கோட்பாடு ஒத்துக்கொள்ளக் கூடியதுதான். ஆனால் வரலாற்றின் எல்லா உண்மைகளையும், இக்கோட்பாட்டைக் கொண்டு விளக்க முடியாது. ஐரோப்பாவில் பழைய கிரேக்க ரோம நாகரிகங்கள் நலிந்து மறைந்து விட்டமையை இக்கோட்பாட்டைக் கொண்டு விளக்க முடியாது.

மேலும் சமூகம் எதிர்காலத்தில் எத்திசையில் செல்ல வேண்டும் என்பதைப் பற்றி இக்கோட்பாடு நமக்கு வழி காட்டுவதில்லை.

சமூக முன்னேற்றத்தில் பொருளாதாரக் கோட்பாடு.

சமூக வாழ்க்கையின் எல்லாக்கூறுகளும்—அறிவு, சமயம், அரசியல் முதலியவையெல்லாம்—பொருளாதாரக் காரணிகளால் தீர்மானிக்கப்படுவனவென்று கார்ல் மார்க்ஸ் கூறியுள்ளார். பொருளாதாரக் கூறுகள் என்பதில் பொருட்களை உற்பத்தி செய்வதையும் பங்கிடுவதையும் அவர் அடக்கினர். தொழில் முறை, தொழில்நுட்பநிலை, பங்கீட்டு முறை ஆகியவை தனியாளின் சமூக வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன. அரசாங்க அமைப்பு, சமூகச் சட்டங்கள், அறப்பொருள், சமயப்பொருள், ஆகியவற்றையும் இப்பொருள் வயக் கூறுகளே தீர்மானிக்கின்றன. அதாவது, 'பொருளாதார அமைப்பே நாகரிகத்தின் அடிப்படையாகிறது.'

வரலாற்றின் பொருளாதாரக் கோட்பாட்டின்படி சமூக வாழ்க்கை தகுந்த திசையில் முன்னேற வேண்டுமானால், அதன் சமூக அமைப்பை முதலில் மாற்றவேண்டும்.

மார்க்ஸின் கோட்பாட்டில் ஓரளவு உண்மை உளது. பொருளாதார நிலைமைகள் மனிதனுடைய தேவைகளிலெல்லாம் மிகவும் அடிப்படையான உணவையும் பிழைப்பையும் பாதிக்கின்றன. ஆகையால் இத்தேவைகள் மனித வாழ்க்கையின் எல்லாத்துறைகளையும் பாதிக்கக்கூடும். பசியால் வாடுபவர்களுக்குப் பாகவதத்தைப் போதிப்பதில் பயனில்லை. மக்கள் ஒவ்வொருவருக்கும் போதிய உணவும், பொருளாதாரக் காப்புணர்ச்சியும் கிடைக்கும்படி நாம் சமூகத்தை அமைக்கவேண்டும். இதனால் சமூகத்தில் காப்புணர்ச்சிக்கேடும், கவலையுணர்ச்சியும், பொருளாதார முறையில் உயர்ந்தவர்கள் மனவெறுப்பும் நீங்கும். ஆகையால் சில அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றினாலன்றி உண்மையான ஒத்துழைப்பு வேலை இயலாது. மனிதனுடைய உயர்வளர்ச்சியும் நிகழாது.

ஆனால் மார்க்ஸின் கொள்கை ஒரு முக்கிய கருத்தைக் காணத்தவறி விட்டது. பொருளாதாரக் கூறுகளும், பொருளாதாரத் தொடர்புகளும் வாழ்க்கையைப் பாதிப்பது உண்மைதான். ஆனால் பொருளாதாரக் கூறுகளைப் புறக்கணிக்கும் சில தொடர்புகளும் மனித வாழ்க்கையில் உள்ளன. மேலும் 'உளவியற்' கூறுகளும் செயல்புரிகின்றன.

மனித இனத்தின் முன் னேற்றத்தின் சில கூறுகள் உயிரியல் வன்மைகளைவிட உளவியல் வன்மைகளாலேயே அதிகம் உந்தப்பட்டவை. மேலும் பொருளாதார முறையில் குறிக்கோட்சமுதாயத்தை நாம் அடைந்தபின்னும் மனித இடைத்தொடர்புகளைப்பற்றிய பிரச்சினைகள் இருக்கும். தோழமை, தன்னெடுப்பு, அறிமுகம் போன்ற பல உளவியல் தேவைகளை மனிதன் நிறைவேற்ற முயன்று கொண்டே இருப்பான்.

சமூக முன்னேற்றத்தைப் பற்றிய உளவியற் கோட்பாடு.

மனிதன் தன்னுடைய உயர்ந்த அறிவாற்றலால் முன்னேறியுள்ளான் என்று இக்கோட்பாடு கூறுகிறது. மனிதன் இயற்கையைப் பற்றியும், தனது சொந்த ஆற்றல்களைப் பற்றியும் அறிவு திரட்டியுள்ளான். இயற்கையைப் பற்றிய அறிவின் மூலம் தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்படுகிறது; மனித இயல்பைப்பற்றிய அறிவிலும் அறத்திலும் முன்னேற அடிகோலுகிறது. சமூக வாழ்க்கை இன்றுள்ள நிலைமைக்கு உயர்ந்ததற்குக் காரணம் மனித உயர் பற்றுக்களேயாகும் என்றும் இக்கோட்பாடு கூறுகிறது.

இக்கோட்பாடு இயற்கை நிலைமைகளின் சிறப்பை ஒத்துக் கொள்கிறது. ஆனால் அவை மனிதனுக்கு அடங்கியவை. ஆகையால் இயற்கைக்கு இரண்டாம் இடமே உண்டு என்று கூறுகிறது. இக்கோட்பாடு இவ் ஆசிரியர் ஏற்றுக் கொள்வதொன்றாகும். இதனை விளக்குவாம்.

மனித வாழ்க்கை இவ் உலகில் முன்னேறியுள்ளதை அனைவரும் ஒத்துக்கொள்வர். படிமலர்ச்சி முறையில் மனித இனம் தோன்றியபின் புராதன மனிதன் நெடுங்காலம் உயிரியல் மட்டத்திலே வாழ்ந்திருக்கவேண்டும். தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவன் போராடியிருக்கவேண்டும். ஆனால் நாளடைவில் அவனுடைய உற்றுநோக்காலும் அதன் பயனாக ஒத்துணர்வுக் கடத்தலாலும், ஒத்து அமைந்த உயிரிகளுக்கிடையேயுள்ள 'நனவிலி இருவழிமையாலும்' (unconscious mutualism) அவனிடம் சமூகத் தன்மை தோன்றியது. இதுஅவனுடைய நீண்ட, கையாலாகாத குழந்தைமைச் சார்பினால் வலுப்

பெற்றது. இது பிற்காலத்தில் தெரிந்து சிந்தித்த இரு வழிமை அல்லது இடைச்சார்பு (inter-dependence) ஆக முதிர்ச்சியடைந்திருக்க வேண்டும். இம்மாறுதல் ஓரளவு தாமாக ஏற்பட்டிருக்கும், ஓரளவு பற்றுக்களினுல் ஏற்பட்டிருக்கலாம். தனிமை உணர்ச்சியாலும், தன் தேவையைத் தானே நிறைவேற்றும் ஆற்றலின்மையாலும் மனிதன் உண்மையான சமூக வாழ்க்கையை உண்டாக்கியிருக்க வேண்டும். மனிதர் கூடி வாழ்ந்தபின் இக்கூட்டுவாழ்க்கையால் மனவெழுச்சி முறையிலும் நடைமுறையிலும் பெறும் நன்மைகளை அதிகமாக அனுபவித்திருப்பார்கள். இவ்வாறு மனிதன் மனிதனை நாடுவதால் புராதனக்குடும்பம், இனக்குழு, சிறுகுடி, குலம், சமுதாயங்கள் முதலியவை தோன்றியிருக்க வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்ததால் மக்கள் தங்கள் அன்ருட உயிரியற் பிரச்சினைகளுக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கும் விடை கண்டிருக்கக்கூடும். இவ்வாறு நாட்டவர்வழிகளும், வழக்கங்களும், செந்நிலைகளும், அற நெறிகளும் வளர்ந்தன. மனிதனுடைய உள்ளார்ந்த ஆராய்வும், அவனுடைய கையாளும் ஆற்றலும் அவனுடைய நடைமுறைச் சாதனைகளை ஆதாரமாகக் கொண்டு முன்னேறின. மனித வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. வாழ்க்கை மேலும் மேலும் சிக்கலடைந்து கொண்டே போனது. வாழ்க்கை சிக்கலடைந்ததால் வேலைப்பாகுபாடும் பொதுமுடிவை நோக்கிய கூட்டு முயற்சியும் தோன்றின. இவ்வாறு தனியாளின் வாழ்க்கை குழு நனவினுல் அறிவு பெறுகிறது.

சமூக வாழ்க்கை இன்றைய நிலையை எய்தியதற்குப் பல காரணிகள் உள்ளன. அவற்றுள் உளவியற்கூறுகளே மிகவும் முக்கியமானவை. ஆராய்வு, பற்றுக்கள், எண்ணங்கள், நம்பிக்கைகள் முதலியவையெல்லாம், சமூக வாழ்க்கைத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிந்துள்ளன. இப்பண்புகள் இல்லாவிட்டால் மனிதனுடைய சமூக வாழ்க்கை பிற கூடிவாழ் இனங்களின் மட்டத்திலேயே இருந்திருக்கும்.

References:

1. Vakil and Nanavaty (Eds), Group Prejudices in India.
2. Lewis Way, Man's Quest for Significance, Chs. I and II.

17. மனப்பான்மையையும் பொது எண்ணத்தையும் அளத்தல்.

(Measurement of Attitudes and Puplic Opinion)

சமூக உளவியல் ஒரு கோட்பாடு அறிவியலும் நடை முறை அறிவியலுமாகும் என்று இயல் 1 -இல் பார்த்தோம். சமூக உளவியலர் மனப்பான்மைகளையும் எண்ணங்களையும் அளவிட முனைந்துள்ளது இப்போக்கை வலியுறுத்துகிறது. மனப்பான்மையை அளப்பதன் மூலம் மனப்பான்மைத் தோற்றம், நிலைப்பு, வளர்ச்சி முதலியவற்றைப் பற்றிய நமது கருதுகோட்களை நாம் சோதிக்கமுடியும். நடை முறையில் பார்த்தால், நம்பிக்கைகளும், மனப்பான்மை களும் ஓரளவு நிலைத்து நின்று, நம் நடத்தையைப் பெரிதும் தீர்மானிப்பதால் இவற்றைப் பற்றி நன்கு அறிவது நாம் தனியாட்களை நன்கு புரிந்துகொள்ளத் துணைபுரியும். இத்தகைய அறிவின்மூலம் நடத்தையை முற்கூறவும் முடியும். எடுத்துக்காட்டாக, மக்கள் எந்த அளவுக்கு அரசாங்கத்தை ஆதரிக்கிறார்கள், எந்த அளவுக்கு எதிர்க் கிறார்கள் என்றும், இந்த மனப்பான்மை ஒரு குறிக்கோள் தொகுதியை அடிப்படையாகக் கொண்டதா என்றும், ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த அறிவு அவர்களுடைய கொள் கைகளை வகுக்கவும் அவர்களுடைய உற்சாகத்தைத் தணிக்கவும் உதவும். அரசியல் கட்சியினர் தங்கள் திட்டத் தைப் பற்றி மக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று அறிந்தால் தேர்தலில் தங்கள் வெற்றி தோல்வியை முற்கூறவும் முடியும். தொழில் நிறுவனங்களில் தொழிலா ளருடைய மனப்பான்மைகளை அளந்து அவர்களுடைய மனத் திடத்தைக் (morale) காணலாம். உற்பத்தியா ளர்கள் பண்டம் கொள்வோரின் மனப்பான்மைகளை

அளந்து அதற்கேற்பத் தம் விளம்பரத் தலைப்புகளையும், தோற்று முறைகளையும் (display), பிற விளம்பரச் சாதனங்களையும் மாற்றிக் கொள்ளமுடியும்.

இவ்வாறு மக்களுடைய மனப்பான்மைகளில் அக்கறை கொண்டுள்ளவர்கள் மனப்பான்மையின் பல அளவுக் கூறுகளையும் (dimension) அறியவேண்டும். முக்கியமான அளவுக்கூறுகளாவன: மனப்பான்மை ஆதரவானதா? எதிரானதா? மனப்பான்மையின் பரப்பும் எல்லையும், மனப்பான்மையின் ஒவ்வுமை (consistency), அதன் மீக்கூர்வு (intensity), அதன் மேல்நிற்பு (prominence), அளவு ஆகியவை. மேலும் ஒரு மனப்பான்மை பொதுப்பட்டதா? திட்டமானதா? அது குறிப்புக் குறைந்ததா (non-specific)? அதாவது ஒரு பெரிய குறிக்கோள் தொகுதியின் பகுதியா? அல்லது குறிப்பானதா (specific)? அதாவது பிற நம்பிக்கைகளோடு தொடர்பற்றதா? மேற்கூறிய மனப்பான்மைக் கூறுகளைக் கல்வியாளரும் அரசியல் வாதிகளும், சட்ட வல்லுநரும், வணிகக் கருத்துப் பரப்புநரும் புறக்கணிக்க முடியாது.

அளவீட்டுக் கருத்து பூத அறிவியல் துறைளிகனின்று சமூக உளவியலால் மேற்கொள்ளப் பட்டது. பூதவியலில் விரிவு, எடை, வெப்பநிலை, மின்தடை முதலிய தன்மைகளை அளவிடுகிறோம். இவற்றை அளப்பதற்குப் பூதவியலர் தகுந்த முறைகளைக் கையாளுகின்றார்கள். இதற்காக அவர்கள் கொள்ளும் அலகுகள், அங்குலம், சென்டிமீட்டர், சென்டிகிரேட், டிகிரி, அவுன்ஸ், பவுண்டு முதலியனவைத்துக் கொண்ட இடுகுறிகள் ஆவன. இதுபோலவே மனப்பான்மையின் பல்வேறு அளவுக் கூறுகளை அளப்பதற்குச் சமூக உளவியலரும் தகுந்த கருவிகளை இயற்றிக் கொள்கிறார்கள்.

மனப்பான்மையையும் எண்ணங்களையும் அளப்பது இன்றைய சமூக ஆராய்ச்சியில் முக்கிய இடம் பெறுகிறது. அமெரிக்காவில் அது ஒரு 'பெரும் தொழில்' ஆகிவிட்டது. வணிகரும் அரசியலரும் அதைப்பயன் படுத்துகிறார்கள். அது, 'சமூகவியலுக்கே உரித்தான மிகக் குறிப்பிடத்தக்க நுட்பச் சாதனை' யாகக் கருதப்படுகிறது. ஏனெனின் நம்பத்தக்க, ஏற்புடைய கணிநிரல்கள் இயற்றுவதும், பதம் (sample) திட்டமிடுவதும் அதனெடு இணைந்த செயல்கள் ஆவன. ஆய்கூடங்களிலும், வகுப்பறைகளிலும், மருத்துவச்சாலை

களிலும் உளவியலர் சிறிய பதங்களைக் கொண்டு ஆராய்கிறார்கள். பெரிய பதங்கள் தேவைப்பட்டால், வீடுகளுக்கும், ஆலைகளுக்கும் செல்கின்றனர். தெருவில் மக்களைக் கண்டு பேசுகின்றனர்.

நம்பகம் (reliability) ஏற்புடைமை (validity) என்ற சொற்களை விளக்க வேண்டும். ஒரு கருவியை, (இங்கு மனப்பான்மை கணிநிரலைக்) கொண்டு ஒரே ஆளை ஒத்த நிலைமைகளில் இரண்டு தடவை அளந்து ஒரே மதிப்பெண் பெற்றால் அச்சோதனை நம்பகமுடையது. அது ஏற்புடைய தாக வேண்டுமானால், (1) ஒரு தனியாள் சில குறிப்பிட்ட நிலைமைகளில் எப்படி நடந்து கொள்வார் என்று அதைக் கொண்டு முற்கூற முயலவேண்டும். (2) அக் கருவியைக் கொண்டு நாம் அளந்த மனப்பான்மையானது சோதிக்கப் பட்டவர் உண்மையான வாழ்க்கை நிலையில் பேசுவதையும் நடந்து கொள்வதையும் ஒத்திருக்க வேண்டும்.

ஒருவருடைய மனப்பான்மையைத் தெரிந்துகொள்ள நேரடி முறையையும் பயன்படுத்தலாம். மறைமுக முறையையும் கையாளலாம். நேரடி முறையில் சில கூற்றுக்களுக்குரிய ஒருவருடைய எதிர்வினையை நேராகவே கேட்டு விடுகிறோம். இம்முறையில் பதிலளிப்பவர் தாம் தமது மனப்பான்மையை வெளியிடுகிறோம், என்று உணர்வார். மறைமுகமுறையில் நாம் ஒருவருடைய மனப்பான்மைகளைச் சோதிக்கும்போது அவருக்குத் தாம் தம்முடைய மனப்பான்மைகளை வெளியிடுவது தெரியாது. முற்சார்பையும், கருத்துப் பரப்பினால் ஏற்படும் மனப்பான்மைகளையும் அளப்பதற்கு மறைமுக முறைகள் மிகவும் பயன் படுபவன.

மனப்பான்மைகள் பெரும்பாலும் சொல் (verbal) முறையிலேயே அளக்கப்படுகின்றன. சோதிக்கப்படுபவர் கூறும் அல்லது தேர்ந்தெடுக்கும் கூற்றுக்கள் அவருடைய மனப் பான்மைக்கு அறிகுறியாகக் கொள்ளப்படுகின்றன. ஒருவர் தமது மனப்பான்மையை எப்பொழுதும் வெளிப்படையான நடத்தை மூலம் காட்டிவிடுவதில்லை. ஆகையால் அதற்கடுத்த சிறந்த மூலம் அவருடைய கூற்றுக்களேயாம். ஒருவருடைய பேச்சின்மூலம் அவருடைய உள்ளம் வெளிப்படுகிறது என்பதே இம்முறையின் அடிப்படை முற்கோள் ஆகும்.

மனப்பான்மைக் கணிநிரல்கள் (Attitude Scales) மனப் பான்மைக் கணிநிரலைக் கொண்டு ஒருவருடைய மனப் பான்மை ஆதரிப்பதா? எதிர்ப்பாதா? அது எவ்வளவு வன்மையானது? அது முரண்பாடின்றி அமைந்துள்ளதா? அது எத்தனை பொருட்களை அடக்குவது? என்றெல்லாம் அறிந்து கொள்ளலாம். இத்தகைய அளவுக் கூறுகள் ஒவ் வொன்றையும் அளப்பதற்கு ஏற்ற கணிநிரல்கள் அமைக் கலாம்.

ஒரு மனப்பான்மைக் கணிநிரலில் மூன்று, நான்கு, ஐந்து அல்லது, அதற்கு மேற்பட்ட கூற்றுக்கள் அல்லது தொடர்கள் அமைந்திருக்காலம். கணிநிரல் அமைப்பதில் ஒரு குறிப்பிட்ட மனப்பான்மைப் பொருளோடு நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்புற்ற கூற்றுக்களே தேர்ந் தெடுக்கப்படுகின்றன. ஒவ்வொன்றிற்கும் ஓர் எண்மதிப்பு அளிக்கப்படுகிறது. இம்மதிப்பு பல வல்லுநர் அல்லது நடுவர்களின் மதிப்பீட்டை ஆதாரமாகக் கொண்டது. எடுத்துக்காட்டாக, 'பையன்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு பாடங்கள் கற்பிக்கவேண்டும்' என்பது கூட்டுக் கல்வியைப் பற்றிய மனப்பான்மையைக் குறிப்பிடும் ஒரு நேரடியான கூற்று. 'ஆற்றல்களில் பால்வேற்றுமைகள் உண்டு' என்பது அதே மனப்பான்மையை மறைமுகமாகக் குறிக்கும் கூற்று.

சோதிக்கும் முறையில் தன்னிகழ்வுக் (random) குறை பாடுகள் தோன்றக்கூடும். ஆகையால் கணிநிரலில் உள்ள கூற்றுக்கள் பலவாக இருந்தால் இக்குறைகள் ஒன்றை யொன்று திருத்திவிடக்கூடும். எடுத்துக் காட்டாக, பலதார மணம், குழந்தைமணம், சீதனம் முதலியபழக்கங்களைப்பற்றி அரசு சட்டமியற்றுதலைப் பற்றிய மனப்பான்மையை அளப்பதற்குக்கீழ்க்கண்ட ஐம்மூனைக் கணிநிரலைக் கொடுக் கலாம். சோதிக்கப்படுபவர் தம் கருத்தை வெளியிடும் கூற்றுக்களைக் குறியிடவேண்டும்.

1. சமூகப் பழக்கங்களில் அரசு தலையிடக்கூடாது.
2. அரசு சில பழக்கங்களைக் கட்டுப்படுத்தலாம்.
3. அரசு பெரும்பான்மையான பழக்கங்களை கட்டுப்படுத்த வேண்டும்.

4. அரசு இப்பொழுது செய்வதை விட கடுமையாகக் கட்டுப் படுத்த வேண்டும்.
5. ஒவ்வொரு சமூகப் பழக்கத்தையும் அரசு கட்டுப்படுத்த வேண்டும்.

கணிநிரல் அமைக்கும் முறைகள். கணிநிரலை அமைப் பதற்கு வெவ்வேறு முறைகளை வெவ்வேறு ஆராய்ச்சியாளர் பயன்படுத்துகிறார்கள்.

1. தர்ஸ்ட்டன் (Thurstone, 1929) முறை பின் வருமாறு:— ஆராய்ச்சிக்குரிய பொருளுடன் நேரடியாகத் தொடர்புள்ள பல எளிய, இருபொருட்படாத கூற்றுக்களைத் திரட்டவேண்டும். இக்கூற்றுக்கள் எல்லா ஆதரவுப் பாகைகளையும் (degrees of favourableness) எதிர்ப்புப் பாகைகளையும் குறிப்பிடவேண்டும். பின் இவற்றை ஏறக் குறைய நூறு நடுவர்களுக்குக் கொடுத்து, ஒத்துக் கொண்மை (agreement) உள்ள ஏறக்குறைய இருபது கூற்றுக்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். (நடுவர்களின் மதிப்பை அடிப்படையாகக் கொண்டு) இக்கூற்றுக்களை ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை வரிசைப்படுத்தி அமைக்கவேண்டும். இவ்வாறு கணிநிரல் மதிப்புப் பெற்ற சில கூற்றுக்களைக் கீழே கொடுத்துள்ளோம். *

கணிநிரல் மதிப்பு.	கூற்று.
1.3	தேசீய மானம் இன்றி ஒரு நாடு ஒரு பொருட்டாகாது. மானத்தைக் காப்பதற்குப் போர்தான் ஒரே வழி.
2.5	தேசம் போரில் தலையிட்டபின் நாம் படையில் சேர வேண்டும்.
5.2	மெலிந்த தேசங்களைக் காப்பதற்காகப் புரியும் போர்கள் மட்டுமே நியாயமானவை.
5·4	முன்னேற்றத்திற்குச் சமாதானமும் போரும் இன்றியமை யாதவை.
5·6	நாம் மிஞ்சிப்போனால் ஓரளவு போரொழிப்பையே பெற முடியும்.

* டிட்ரோபா (Droba) அமைத்தது.

8·4 போரில் வாழ்க்கையையும் உரிமைகளையும் பற்றி நாம் மதிப்பிழப்பது பல குற்றச் செயல்களைத் தொடர்விக்கிறது.

10·6 எல்லாத்தேசங்களும் உடனே படைப்பலம் நீக்க வேண்டும்.

2. லிக்கெர்ட்டின் (Likert) கணிநிரல் அமைப்பு பின்வருமாறு: நாம் ஆராய்ச்சிப் பொருளை நேரடியாகக் குறிப்பிடுகிற, அல்லது (ஆராய்ச்சியாளர் கருத்தின்படி) அப்பொருளோடு தொடர்புள்ள பல கூற்றுக்களைத் திரட்ட வேண்டும். பின் இக்கூற்றுக்களை ஏறக்குறைய நூறுபேருக்கு (நடுவர்களுக்கல்ல) அளித்து இவற்றை வன்மையாக ஒத்துக்கொள்கிறார்களா (வ. ஒ.), ஒத்துக்கொள்கிறார்களா (ஒ.), தீர்மானிக்க முடியவில்லையா (?), மறுக்கிறார்களா (ம.), வன்மையாக மறுக்கிறார்களாக (வ. ம.) என்று கூறச் சொல்ல வேண்டும். பின் இவற்றுள் ஆதரவான கூற்றுக்களைப் பின்வருமாறு மதிப்பிடவேண்டும்.

வ. ஒ. = 5

ஒ = 4

(?) = 3

ம = 2

வ. ம. = 1

எதிரான கூற்றுக்களை வ. ஒ. = 1 என்று தொடங்கி மறு வரிசையில் மதிப்பிடவேண்டும். பின் இந்தக் கூற்றுக்களுக்கும் ஒவ்வொருவரும் பெறும் மதிப்பெண்களைக் கூட்ட வேண்டும். ஒவ்வொரு கூற்றின் மதிப்பெண்ணிற்கும் உள்ள உடனியைபைக் (correlation) கணிக்கவேண்டும். மொத்த மதிப்பெண்ணோடு மிகுந்த உடனியைபுள்ள கூற்றுக்களைத் தேர்ந்தெடுத்துக் கணிநிரல் அமைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு சமயத்தினர் அல்லது சாதியினர், பிற சாதி சமயத்தினரைப் பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மையை அளப்பதற்குரிய கணிநிரலில் பின் வருவன போன்ற கூற்றுக்கள் அடங்கியிருக்கும்.

கல்விப் பேறும் ஆற்றலும் சமமாக இருந்தால் தொழில் அமர்த்துவோர் தம் சாதி அல்லது வகுப்பினருக்கே முதலிடம் அளிக்க வேண்டும்.

(வ. ஒ.); (ஒ); (?): (ம): (வ. ம.)

இனி ஃபொகார்டஸின் சமூகத் தொலைவு முறையைப் பார்க்கலாம். அவர் 1925-இல், அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஏழு கூற்றுக்களை 1725 அமெரிக் கருக்குக் கொடுத்து அவர்கள் ஒத்துக் கொள்பவற்றைக் குறிக்கச் சொன்னார். இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் சோதனைப்படுவோர் பிறதேச மக்களை ஏற்கிறார, புறக் கணிக்கிறார என்பதன் பாகையைக் குறிப்பிடுகிறார். அதாவது தமக்கும் அத்தேச மக்களுக்கும் அவர் வைத்துக் கொள்ள விரும்பும் தொலைவை அவர் இம்முறையில் குறிக் கிறார். ஃபொகார்டஸின் முடிபுகள் சிலவற்றையும் அடுத்த பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஃபொகார்டஸ் சோதனையை மாற்றியமைத்து, வெவ்வேறு சமயத்தினர், சாதியினர், மொழிக் குழுவினர் முதலியோருக்கிடையேயுள்ள சமூகத் தொலைவை அளக்கலாம். (அத்தகைய மாற்றியமைப்பு ஒன்றை இயல் 13-ல் காண்க.)

பொகார்டஸ் சமூகத் தொலைவுச் சோதனை

எனக்கு முதலில் தோன்றும் எழுச்சி எதிர்வினைப்படி பத்தித் தலைப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ள இனத்தவரை (அதாவது அவ்வகுப்பை, அதன் சிறந்த அல்லது தாழ்ந்த உறுப்பினரையல்ல) கீழே கண்ட கூற்று வகைகளுக்கேற்ப ஏற்பேன்; அதனை X குறியிட்டுக் காட்டியுள்ளேன்.

கூற்றுக்கள்.	கானடா தேச மக்கள்	சீனர்	ஆங்கிலேயர்	பிரெஞ்சியர்	ஜெர்மானியர்	இந்துக்கள்
1. திருமணத்தின் மூலம் நெருங்கிய உறவு கொள்க.						
2. எனது களிக்குழுவில் சொந்த நண்பராக.						
3. எனது தெருவில் அண்டையராக.						
4. எனது தொழிலில் உடன் தொழிலராக.						
5. எனது நாட்டுக் குடிமைக்கு.						
6. எனது நாட்டைச் சுற்றிப்பார்ப்ப வராக.						
7. எனது நாட்டினின்று விலக்குவேன்.						

கூற்றுக்கள்.	1	2	3	4	5	6	7
ஆங்கிலேயர்	93·7	96·7	97·3	95·4	95·9	1·7	0·00
பிரெஞ்சியர்	67·8	85·4	88·1	90·4	92·4	3·8	0·8
நீக்ரோக்கள்	1·4	9·1	11·8	38·7	57·3	17·6	12·7
இந்துக்கள்	1·1	6·8	13·0	21·4	23·7	37·1	19.1

வரிசைமுறைக் கணிநிரல் (Rank Order Attitude Scale.)

ஒப்பிடக்கூடிய பலபொருட்களைப் பற்றிய ஒருவருடைய ஒப்புமையான (relative) மனப்பான்மையைச் சோதிப்பதற்கு வரிசை முறைக்கணிநிரல் பயன்படுகிறது. பல்கலைக் கழக சங்கங்களுக்காகத் தேர்தலுக்கு நிற்பவரை உறுப்பினர் வரிசைப்படுத்திக் குறிப்பிடுவதுண்டு. மாணவர் தம் ஆசிரியர்களை, மாணவர் நட்புறவு, திறமை, கல்வி முதலிய அளவுக்கூறுகளில் வரிசைப் படுத்துவதுமுண்டு. தங்கள் தலைவர்களை வரிசைப்படுத்துமாறு குடிமக்களுக்குக் கூறலாம். அங்காடியிலுள்ள சோப்புக்களையும் வாசனைப்பொருட்களையும் இல்லத் தலைவியரைக் கொண்டு வரிசைப்படுத்தலாம். ஓர் ஆண்டில் இயற்றிய கூட்டங்களின் சிறப்பைக் குடிமக்களைக் கொண்டு வரிசைப்படுத்தலாம். சோதிக்கப்படுபவர் அப்பொருளை அல்லது ஆளை அல்லது செயலைப் பற்றிக் குறிப்பிடுகிறோம். என்று உணராமல் ஒரு பொருளை அல்லது ஆளை அல்லது செயலைப் பற்றிய மனப்பான்மையைச் சோதிப்பதற்கு இம்முறை மிகச் சிறந்ததாகும்.*

நடுவர்களின் தரமீட்டைக் கொண்டு அளவிடல். சில வேளைகளில் மனப்பான்மையை அளப்பதற்குச் சோதிக்கப்படுபவரின் துலங்கல்களைப் பதிவு செய்து அவற்றைத் தரமிடுமாறு நடுவர்களைக் (judges) கேட்டுக் கொள்வதுண்டு. இவ்வாறு தரமிடக்கூடிய துலங்கல்களாவன :

1. சோதிக்கப்படுபவரின் நேரடி நடத்தை.

2. அவர் அம் மனப்பான்மைப் பொருளைப் பற்றிச் சாதாரண உரையாடலிலாவது, திறந்த (open-end) பேட்டிகளிலாவது பேசுதல்.

3. அவருடைய முகக்குறிப்பு, சைகை, குரல், தொடர்பிரிப்பு முதலியன. (இவை வழிநிலை உளவுகள் (secondary clues) ஆகின்றன).

4. அவருடைய கடிதங்கள், நாட்குறிப்புக்கள், தன் வரலாறு, கட்டுரைகள்.

* கணிநிரல் அமைப்பைப் பற்றிய விரித்துரையும் மதிப்பீடும் காண Krethc and Crutchfield, Theory and Problems of Social Psychology Newcomb, Social, Psychology, Murphy, Murphy and New Comb, Experimental Social Psychology pp. 897-903; காண்க.

5. புறத்தெறி சோதனையில் அவருடைய துலங்கல்கள். இது மனப்பான்மை காட்டும் துலங்கல்களை மறைமுகமாகப் பெறுவதாகும்.

மருத்துவர்களும் பேட்டி வல்லுநர்களும் இத்துலங்கல்களைத் தீர்ப்பிட்டு, மதித்துத் தரமிடுகின்றனர். இத்தரமீடுகளின் சராசரியை எடுத்துக் கொள்கிறோம்.

எடுத்துக்காட்டுகள். நடுவர் தாமாகவே தரமிடப்படுபவரை உற்று நோக்கலாம். அல்லது அவருடைய நடத்தையைப் பற்றி பிற உற்றுநோக்காளர் கொடுக்கும் அறிக்கையைப் படிக்கலாம்; அவருடைய வாக்களிக்கும் முறையைத் தரமிடலாம். ஒருவர் தேசத்திட்டத்தைப் பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மையை அறிய அவருடைய சேமிப்பு முறையைக் கவனிக்கலாம். சோதிக்கப்படுபவர் சாலை விதிகளைக் கைக் கொள்ளுகிறாரா, மீறுகிறாரா என்று உற்று நோக்கலாம். இச்செயல் அவருடைய ஆட்சி ஒழுங்குமுறையைப் பற்றிய மனப்பான்மையை அல்லது மோட்டார் சொந்தக்காரர்களைப் பற்றிய மனப்பான்மையைக் காட்டக் கூடும். ஒரு மாணவன் தன்னுடைய பழைய ஆசிரியரிடமும் இன்றைய ஆசிரியரிடமும் நடந்து கொள்ளும் வகையைக் கொண்டு அவன் ஆசிரியத் தொழிலைப் பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மையை அறியலாம்: அவன் சாதாரணமாகப் பேசும் பொழுதும், 'திறந்த' பேட்டியில் அவன் பேசும்பொழுதும் ஒரு மனப்பான்மை பொருளைப் பற்றி என்ன சொல்கிறான் என்று கவனிக்கலாம். அவனுடைய முகக்குறிப்பு, குரல், சைகை முதலியனவும் அவனுடைய மனப்பான்மையைப் பற்றிக் குறிப்பிடத்தக்க தகவலாகக் கூடும்.

ஒருவர் எடுத்துக் கூறும் அல்லது புனைந்து கூறும் பழமொழிகளும் தரமிடுவதற்கு ஆதாரமாகின்றன. கடிதங்கள், நாட்குறிப்புக்கள், தன்வரலாறுகள், கட்டுரைகள் முதலியனவும் பயன்படுகின்றன. சொந்த வாசகங்களும் கட்டுரைகளும் மனப்பான்மையைக் காட்டுவதுடன் அதன் தோற்றத்தையும் வளர்ச்சியையும் சுட்டுகின்றன. ஆனால் இத்தகைய மூலங்களை முற்றிலும் நம்பமுடியாது. பிறர் தாம் எழுதியுள்ளதைப் படிப்பார்கள் என்று நினைத்தால் ஒருவர் தம் எண்ணங்களைத் திரித்து எழுதக்கூடும்.

தன் தரமீட்டு (Self-rating) முறையில் அளவிடல். இம்முறையில் ஒருவர் சில கூறுகளைப் பொறுத்தவரை தம்

மையே புறவயப்படுத்தி, நாம் உணர்வதையும் சிந்திப் பதையும், செய்வதையும் தீர்ப்பிடக்கூடும். ஆனால் சில வேளைகளில் நனவிலி முறையில் அவர் தம்மை ஏமாற்றிக் கொள்ளக் கூடும். ஒடுக்கிய மனப்பான்மைகள் இருந்தா லும், தமது மனப்பான்மைகள் பிறருக்குத் தெரிந்துவிடும் என்ற எண்ணம் இருந்தாலும் தன் - தரமீட்டு முறை பயன் தராது. மேலும், ஒவ்வொருவருடைய தீர்ப்புத்தரமும் (standard of judgement) வேறுபடக்கூடும். கிராமத்தார் ஒருவர் பிற கிராமத்தாரின் செயலைத் தரமாகக் கொண்டு தம்மை முன்னேற்ற மனப் பான்மையினராகக் கருதலாம். நகரத்து நடுவர் அவரை வைதீகராகக் கருதக்கூடும்.

சொல்முறைகளின் மதிப்பீடு.

கணிநிரல்கள் மூலம் மதிப்பிடுவது இரண்டு வகை களில் சொல்முறையாகிறது. முதலாவதாக, சோதிப்பவர் சொற்களைப் பயன்படுத்துகிறார். கணிநிரலில் பெயரெச் சங்கள், சொற்றொடர்கள் அல்லது கூற்றுக்கள் உள்ளன. சோதிக்கப்படுபவர் அவற்றைப் பற்றித் தாம் எண்ணுவதை 'X' குறியிடவேண்டும் அல்லது வட்டக்குறியிட வேண்டும். ஆனால் சொற்கள் குறையற்ற கருவிகளல்ல என்பதை நாம் மனதிற் கொள்ளவேண்டும். சொற்கள் இரு பொருள் தரு வனவாக இருக்கக் கூடாது. கூற்றுக்கள் தெளிவாக இருக்க வேண்டும். கூற்றுக்களில் உள்ள ஒவ்வொரு சொல்லும் சோதிக்கப்படுபவருக்குத் தெளிவாக, திட்டமாகப் பொருள் பட வேண்டும். நுட்பமான (technical), அல்லது தனித் துறை சான்ற (specialised) பொருள் இருந்தால் அதனைத் தெளிவாகக் கூறவேண்டும். எடுத்துக்காட்டாக குழந்தை களின் 'பிடிவாதத்தைப்' பற்றிப் பெற்றோரின் மனப்பான் மையை அறிந்து கொள்ள வேண்டுமானால் அந்த நிலைமை யைத் தெளிவாக வரையறுத்துக் கூறவேண்டும். இவ்வாறே 'குவிவு' என்னும் சொல்லுக்குப் பாமரர் ஒரு பொருள் கொள்வார். உளவியலர் அதற்கு ஒரு தனித்துறைப் (specialized) பொருள் கொள்வார். மேலும் கூற்றுக்கள் கணி நிரல் அமைப்பவரின் சொந்த மனப்பான்மைகள் சுமத்தப் பட்டனவாக (loaded) இருக்கக்கூடாது. சொல்லமைப்பு, புறவயப்பட்டதாக இருக்க வேண்டும். 'கம்யூனிஸ்டு', 'செங்கொடி', 'சடத்துவம்' முதலிய சொற்கள் எழுச்சி யூட்டிய துலங்கல்களைக் கிளரக்கூடும். ஆகையால் 'கம்யூனிஸ்டு' என்னும் பெயரை விடுத்துப் பொது

உடைமைக் கொள்கையரின் குறிக்கோட்களையும் அடைவு களையும் கணிநிரலில் குறிப்பிடுவது நல்லது. ஒவ்வொரு கூற்றையும் நன்கு கவனித்துப் பதிலளிப்பதற்குச் சோதிக் கப்படுபவருக்கு நேரம் கொடுக்க வேண்டும். மிகவும் விரைந்து குறிப்பிடுமாறு அவரைத் தூண்டக்கூடாது.*

இரண்டாவது போதிக்கப்படுபவரின் சொல் துலங் கல்கள் நமக்குக் கிடைக்கின்றன. இதில் ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. சோதிக்கப்படுபவர் ஒரு கூற்றை ஒத்துக் கொள்கிறார். அல்லது மறுக்கிறார் என்றால் அதை நாம் அவருடைய **உண்மையான** மனப்பான்மையைப் பற்றிய நம்பகமாக, ஏற்புடைய அறிகுறியாகக் கொள்ளலாமா என்று சிந்திக்க வேண்டும். சோதிக்கப்படுபவருடைய கூற்றுக்கள் சிலவேளைகளில் உண்மையான மனப்பான் மையை மறைப்பதற்காகக் கூறியவையாக இருக்கலாம். இத்தகைய செயல் சமூகமனப்பான்மையைப் பொறுத்த வரை அடிக்கடி நிகழ்வதுண்டு. ஆகையால் ஒருவருடைய உண்மையான நடத்தையையே நாம் தகுந்த சோதனை யாகக் கொள்ளவேண்டும். சோதிக்கப்படுபவர் 'நாம் நியாமும், உண்மையும், அடக்கமும், கட்டுப்பாடும் உடையவர்களாயிருக்க வேண்டும்' என்று கூறலாம். ஆனால் அவர் இக்குணங்கள் இல்லாதவராக இருக்கலாம். அல்லது எப்பொழுதும் இப்பண்புகளைச் செயற்படுத்தாத வராகக் குடும்பக் கட்டுப்பாடு நல்லது என்று சொல்பவர் குடும்பக் கட்டுப்பாட்டைத் தாமே கையாளாதவராக இருக்கலாம். ஆகையால் சோதிக்கப்படுபவருடைய கூற்றுக்களை நாம் நம்ப வேண்டுமானால் அவர் தம் மனப் பான்மைகளை வெளியிடுவதால் அவருக்கு இடைஞ்சல் ஏற்படாது என்று நாம் உறுதி கூறவேண்டும். இத்தகைய உறுதிமொழி இல்லாவிட்டால் அவர் வழக்கமான விடை களையே கூறுவார். சிறப்பாக, ஆசாரம், அறநெறி, சமய நம்பிக்கைகள் முதலியவற்றில் இத்தகைய பதில்கள்தான் கிடைக்கும்.

மனப்பான்மையை அறிதற்குரிய மறைமுக முறைகள்.

சோதிக்கப்படுபவர் தம் மனப்பான்மை அளக்கப் படுகிறது என்ற நினைப்பு இல்லாதவாறு இயற்றும்

* விக்மானும் ஸ்டாக்டில்லும் (Wicmnan and Stogdill) குழந்தைகளிடம் சாணைப் படும் நடுக்கம், தற்புணர்ச்சி, குவிவு, சண்டைத்தனம் முதலிய நடத்தைகளைப் பற்றிப் பெற்றோரும் ஆசிரியரும் கொண்டுள்ள மனப்பான்மைகளை ஆராய்ந்தனர். இம்முடிவுகளை மேற்கூறிய காரணத்தால் க்ளின் குறைகண்டுள்ளார். D. B. Klein, Mental Hygiene, ப. 189 - 195 காண்க.

அளவுகள் மறைமுக அளவீட்டு முறைகளாகும். (1) நனவிலி மனப்பான்மைகள் செயல் புரியும் போதும், (2) சமூக மனப்பான்மைகளை அளவிடும் போதும், (3) முற் சார்புகளை ஆராயும்போதும், (4) புற ஆய்வு முறையில் மனப்பான்மையை மாற்றும் முயற்சியின் பயனை ஆராயும் போதும், - மறைமுக முறையில் நல்ல பயன் கிடைக்கக் கூடும். மேற்கூறிய நிலைகளில் நேரடி முறைகள் பயன் தருவதில்லை.

புறத்தெறி முறை (Projective method).

சில வேளைகளில் பொருளொடு புணர்ந்தறி சோதனையை (T.A.T.) மாற்றியமைத்து மனப்பான்மைகளை அளக்கப் பயன்படுத்துகிறோம். பலவழிகளில் காணக் கூடிய இருபொருள் தரும் படம் ஒன்றைச் சோதிக்கப் படுவோருக்குக் கொஞ்ச நேரம் காட்டுகிறோம். பின் அந்தப் படத்தில் அவர் பார்த்தவற்றை விபரமாகக் கூறும் படி அவரைக் கேட்கிறோம். அவர் புனையும் கதை அவரு டைய மனப்பான்மையைக் காட்டுகிறது. எடுத்துக் காட்டாக, ஓர் அரசாங்க அலுவலரை, ஒரு பார்ப்பனரை, ஒரு முதலாளியை, ஒரு வடஇந்தியரை, அல்லது ஒரு மருத்துவரைக் காட்டும் நிலை படத்தில் சித்திரிக்கப்பட் டுள்ளது. சோதிக்கப்படுபவரின் புறத்தெரிவுகளை ஆராய வேண்டும். அவர் புனையும் கதையை இரண்டு அல்லது மூன்று தேர்ந்த நடுவர்கள் தரமிடுகிறார்கள். இத்தர மீடுகளை ஒன்று சேர்த்து மதிப்பெண் பெறுகிறோம். இந் நுண்முறை மிக நம்பகமானதாகத் தெரிகிறது. இதன் முடிபு களும் மனப்பான்மைக் கணிநிரல் முடிபுகளும் மிகவும் உடனியைபுள்ளவையாகக் காணப்படுகின்றன.

மெய்-பொய்ச் சோதனை. (True-False Test).

இம்முறையில் பல கூற்றுக்களைச் சோதிக்கப்படு பவருக்கு அளிக்கிறோம். அவர் அவற்றுள் உண்மை யென்று கருதும் கூற்றுக்களுக்கு நேரே × குறியிட வேண் டும். இச்சோதனையில் அடங்கியுள்ள கூற்றுக்களைப் பற்றிச் சோதிக்கப்படுபவருக்குப் போதிய அளவு உண்மைத் தகவல் இருக்காது. ஆகையால் அவர் தமது அப்போதைய மனப்பான்மைகளை ஆதரிக்கும் கூற்றுக் களையே தேர்ந்தெடுப்பார்.

மதுவிலக்கைப் பற்றிச் சோதிக்கப்படுபவரின் மனப் பான்மையைச் சோதிக்க வேண்டும் என்று வைத்துக்கொள் வோம். அப்படியானால் தகவல்களை அடிப்படையாகக் கொள்ளாத பல கூற்றுக் களைக் கொடுத்து, அவை மெய்யா, பொய்யா என்று கேட்க வேண்டும்.

(எ-டு) மதுவிலக்கின் மூலம் :—

(a) உயர்ந்த வாழ்க்கைத் தரம் பெறலாம்.

(b) குற்றம் அதிகப்படும்.

(c) குற்றம் குறையும்.

(d) இளம்பருவ நெறிபிறழ்வு குறையும்.

(e) இலஞ்சம் பெருகும்.

(f) நல்ல பொழுதுபோக்கு முறைகள் தோன்றும்.

இவற்றுள் ஒருவர் எவற்றை 'மெய்'யென்று கொள் கிறார் என்பதைக் கொண்டு அவருடைய மனப்பான்மை யைச் சோதிக்கலாம். (தொழில்களைப் பற்றிய சோதனை யொன்றை இயல் 13-இல் 'பலவில் தேர்தல்' என்ற பகுதி யில் காண்க).

பொது மக்கள் எண்ணத்தை அளத்தல்.

இதுவரை கூறிய மொழிகள் சிறு குழுக்களின் மனப் பான்மையை அளவிடுதற்குப் பயன்படுவன. மேலும் இம் முறைகள் புறமுறையானவை.
அதிக நேரம் பிடிப்பவை. சோதிக்கப்படுபவர் உட்கார்ந்து ஒவ்வொரு கூற்றையும் குறிக்க வேண்டியதிருக்கிறது. ஆகையால் பதிலளிப்பவர் எளிதாக அணுக முடிந்தவராக, பொறுமையாக, ஒத்துழைக்க விருப்பமுள்ளவர்களாயிருந் தால்தான் இம்முறையைக் கையாள முடியும்.

ஆனால் பொதுமக்களைப் பொறுத்தவரை பெரிய அள வில் பார்வையிடல் (survey) முறைகளைக் கையாள வேண் டியதிருக்கிறது. இவை புறமுறையற்றவை, அதிக நேரம் பிடிக்காதவை, சோதிப்பவர் ஆய்தொகுதி (population

or universe) என்று கொள்ளும் மக்களுடைய ஆதாரமான அல்லது எதிரான எண்ணத்தின் பரவலைக் காண முயல்கிறார்.

வாக்கெடுப்பு (poll) முறை. இம்முறை ஃகாலப்பின் (Dr. C. H. Gallup) பெயரோடு இணைந்துள்ளன. அவர் அமெரிக்க ஐனாதிபதித் தேர்தல் முடிவை முற்கூறுவதற் காக இம்முறையைப் பயன்படுத்தினர். பின் பல பொதுமக் கள்எண்ணப்பார்வைகளில் (opinion surveys) இம்முறை அல்லது அதன் மாற்றியமைப்புப் பயன்பட்டுள்ளது. பல அரசியற் பதவிகளையும் சமூகப்பகுதிகளையும் இம்முறை யில் ஆராய்கிறார்கள். அரசியல் வாக்கெடுப்புகள் 'தனிக் குடிமகனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் மக்களாட்சி யின் வன்மையுள்ள நேரடிச் சாதனமாகின்றன.' இதில் பங்கெடுக்கும் குடிமக்களைப் பத (sample) முறையில் தேர்கிறோம். உற்பத்தியாளர் பண்டம் கொள்வோரைப் பார்வையிடுகிறார்கள். செய்தித் தாட்களில் இயற்றப் படப்போகும் ஒரு சட்டத்தை அரசாங்கக் கொள்கையை அல்லது நாட்டின் எதிர்காலத் தலைவரைப் பற்றிய கேள்வி கள் கேட்டு விடையை எதிர்பார்க்கிறார்கள். இந்தகைய பார்வைகள்மூலம் மனப்பான்மைகளும் எண்ணங்களும் எவ்வளவு தூரம் வயதாலும், பாலாலும், கல்வியாலும், தொழிலாலும் பாதிக்கப்படுகின்றன என்று காணலாம். இவற்றைத் தொடர்ந்து பயன்படுத்தினால் உற்பத்தியாள ரும் அரசியலரும் தம் நடவடிக்கைகளில் வெற்றியைச் சீர் தூக்க முடிகிறது.

முற்காலத்தில் இவ்வினாக்களை அஞ்சல் மூலம் பெரு வாரியான மக்களுக்கு அனுப்பும் முறையைக் கையாண் டனர். ஆனால் பலர் இவ்வினாக்களுக்குப் பதிலளிப்ப தில்லை. ஆகையால் இப்பொழுதெல்லாம் ஆய்தொகுதியை எடுத்துக்காட்டக்கூடிய பதம் (sample) ஒன்றைத் தேர்ந்து அதிலுள்ள மக்களைப் பேட்டி காண்பது வழக்கமாகி விட்டது. ஆனால் பதத்தேர்வுமுறை மிகவும் முக்கிய மானது. எடுத்துக்காட்டாக, 1936-ல் ஏறக்குறைய இரண்டு மில்லியன் மக்களுடைய பதிலை ஆதாரமாகக் கொண்டு (Literary Digest) பத்திரிகை ரூஸ்வெல்ட் தோற்றுவிடுவார் என்று முற்கூறியது. ஆனால் முற்கூற்று பொய்த்தது. இதற்குக் காரணம் இவ் ஆய்வாளர் பதத் தேர்வில்; தொலைபேசிச் சந்தா கட்டுபவர், மோட்டார்கார்

சொந்தக்காரர் ஆகியோரின் பட்டியலை ஆதாரமாகக் கொண்டார். ஆகையால் அவருடைய பதமானது உயர் நடுவகுப்பு மக்களுக்குள்ளேயே அமைந்தது.

ஆய்தொகுதியின் சீரான (fair) பதம் தேர்ந்தெடுப்ப தற்குத் கீழ்க்கண்ட முறையைக் கையாளலாம். (1) மொத்தத் தொகுதியில் உள்ளவர்கள் பெயரை அகர வரிசைப்படுத்தி ஐந்தில் ஒன்று, பத்தில் ஒன்று அல்லது பதினைந்தில் ஒன்று வரிசையாகத் தேரலாம். (2) இத் தகைய பட்டியல் இல்லாவிட்டால் ஒரு குறித்த தொகையை முதலிலேயே தீர்மானித்துக் கொள்ளலாம். பையன்கள் இத்தனை, பெண் பிள்ளைகள் இத்தனை; ஆண்கள் இத்தனை, பெண்கள் இத்தனை என்று ஒவ்வொரு வகுப்புக்கும் உள்ள தொகையைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். (3) இடங் களை அல்லது நிலப்பகுதிகளை முதலில் தேர்ந்துகொண்டு; பின் ஒவ்வொன்றிலும் தன்னிகழ் பதம் (random sample) தேர்ந்தெடுக்கலாம். எடுத்துக் காட்டாக, தொழிற்பகுதி ஒன்றைத் தேர்ந்து அதில் ஆட்களை தன்னிகழ்வில் தேர்ந் தெடுக்கலாம்.

பின் இந்தப் பதத்தில் உள்ள ஒவ்வொரு ஆளையும் பேட்டி காணவேண்டும். வீட்டில் முதல் தடவையில் காணக்கூடியவர்களை விட, பல தடவைகள் சென்ற பின்னரே காணக்கூடியவர்கள் குறிப்பிடத்தக்க முறையில் வேறுபடுகிறார்கள்'[2] பல மக்கள் இரண்டாவது வகை யைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் பலதடவைகள் சென்று பார்த்து அவர்களையும் பதப்பார்வையில் (sample survey) சேர்ப்பது முக்கியமானது. வீட்டில் இருப்பவர் களை மட்டும் பார்ப்பது தவறான முடிவுகளை அளிக்கலாம்.

வாக்கெடுப்புக் கேள்விகள்.

மனப்பான்மைகளையும் எண்ணங்களையும் பார்வையிடு வதில் இரண்டு வகைக் கேள்விகள் பயன்படுகின்றன. ஒன்று வாக்கெடுப்புக் கேள்வி; மற்றொன்று திறந்த முடிவுக் (openn-ed) கேள்வியாகும். வாக்டெப்பு த் துறையில் ஏற்கனவே இயற்றியுள்ள விடைகளுள் ஒன்றைத் தேர வேண்டும். (எ-டு).

'ஆம்-இல்லை,' ஒத்துக்கொள்கிறேன் - மறுக்கிறேன் - தெரியாது முதலியன.

பதிலளிப்பவர் ஏதாவது விடையளித்தால் அவற்றை ஏற்கனவே இயற்றியுள்ள விடைகள் ஒன்றினுள் பொருத்திக்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் எல்லாத் தொழில்களையும் எடுத்துக் கொள்ள வேண்டுமா? (ஆம் – இல்லை)

இந்தி தேசீய மொழியாக வேண்டுமா? (ஆம் - இல்லை)

இந்தி பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டுமா? (ஆம் - இல்லை)

கருத்தடை தேவையானது (ஒத்துக்கொள்கிறேன் - மறுக்கிறேன்-தெரியாது) ஐந்தாண்டுத்திட்டத்தில் கிராமச் சீரமைப்புக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். (ஒத்துக் கொள்கிறேன் - மறுக்கிறேன் – தெரியாது)

பேட்டி காண்பவர் பதிலளிப்பவரின் மனப்பான்மையின் எல்லா அளவுக் கூறுகளையும் பற்றி அறிய விரும்புகிறார். ஆகையால் அவர் பல தனிக்கேள்விகள் கேட்கிறார். இவையெல்லாம் ஒரே பிரச்சினையைப் பற்றியவை; ஆனால் அந்த மனப்பான்மையின் பல்வேறு கூறுகளைக் குறித்தவை. தனிக்கேள்வி முறையானது மனப்பான்மைக் கணிநிரல் முறையை விட பல முறைகளில் சிறந்தது. படிக்காதவர்களிடம் மனப்பான்மைக் கணிநிரலைப் பயன்படுத்த முடியாது. எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும் இதற்கு அதிக நேரம் பிடிக்கிறதென்று நினைக்கிறார்கள். தெரியாத ஒருவர் வந்து கொடுக்கும் மனப்பான்மைக் கணிநிரலின் பல கூற்றுக்களையும் குறிக்கப் பலர் விரும்புவதில்லை. சாதாரணமாக, பதிலளிப்பவர் தம் எண்ணங்களை ஒரு நாளில் குறித்துக் கொடும்பதை விடப் புறமுறை சாராமல் பேசுவதையே விரும்புகிறார்கள். தனிக்கேள்வி முறையில் இக்குறைகளெல்லாம் கிடையாது. இத்தகைய கேள்விகள்மூலம் பதிலளிப்பவரின் மனப்பான்மையின் பல அளவுக்கூறுகளையும் பற்றித் தெரிந்து கொள்ளலாம். பதிலளிப்பவர் கேள்வியைப் புரிந்து கொள்கிறாரா, அல்லது மேல்பரப்பான ஒருபடி வார்ப்புற்ற (stereotyped) பதில் அளிக்கிறாரா என்றும் இம்முறையில் உய்த்துணரமுடியும்.

திறந்த முடிவுக் (open-end) கேள்விகள்:

இக்கேள்விகள் வாக்கெடுப்புக் கேள்விகளினின்றும் வேறுபட்டவை. இம் முறையில் பதிலளிப்பவர் ஒரு பிரச்சினையைப் பற்றி என்ன நினைக்கிறாரோ, அதைக் கட்டின்றிக் கூறலாம். இக்கேள்விகள், மருத்துவர் திசைப்படுத்தாமல் கேட்கும் (non-directive) எப்படி இருக்கிறீர்கள்? என்ற கேள்வியைப் போன்றவை (எ - டு).

நம் நாட்டின் அயல் நாட்டுக் கொள்கையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சமயச் சார்பற்ற அரசைப்பற்றி உங்கள் எண்ணம் என்ன?

பால் கல்வியைப் பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?

குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

திறந்த முடிவுக் கேள்வியில் பதிலளிப்பவர் தமக்குத் தோன்றும் பதில்களை இயற்கையாகக் கூறமுடியும். ஆகையால் அவருடைய உண்மையான மனப்பான்மைகளை இம்முறையில் அளக்கும் வாய்ப்பு அதிகம்.

பதில்களை வகைப்படுத்தித் தொகுத்து எழுத எளிதாக இருக்கும்படி திறந்த முடிவுக் கேள்விகளை முதலில் அமைத்து அவற்றைச் சோதித்து அமைக்கின்றனர். சில பரந்த திறந்த முடிவுக் கேள்விகளுக்குப் பின் ஓரளவு குறிப்பான கேள்விகள் அமைக்கப்படுகின்றன. பேட்டியின் முடிவில் மிகவும் குறிப்பான கேள்விகள் கேட்கப்படுகின்றன. இம்முறை படிக்குறுக்கம் (funelling) எனப்படும். இம்முறையில் பதிலளிப்போரின் மனப்பான்மைகளின் அளவுக்கூறுகள் அனைத்தையும் அளக்கலாம். பதிலளிப்போரின் புடைநிலையையும் (frame of reference) இம்முறையிற் காணலாம். படிக்குறுக்கத்தை விளக்குவதற்குச் சில கேள்விகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

A. 1. நம் நாட்டில் பெரும் அளவில் திட்டமிடுவதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

2. இதுவரைக்கும் நாம் பெற்ற சாதனைகளைப் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

3. ஐந்தாண்டுத் திட்டத்தில் சரியான வற்றிற்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளதா?

B. 1. **இந்துச் சட்டத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

2. **இந்துச் சட்டத்தை மாற்றியமைப்பதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

3. **இந்தக் காரியத்தை அரசாங்கம் தொடங்குவதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

வாக்கெடுப்புக் கேள்விகளைத் தொடர்ந்தும் திறந்த முடிவுக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. இம்முறையில் பதிலளிப்பவரின் மனப்பான்மைக்குக் காரணங்களை அறியலாம்.

திறந்த முடிவுக் கேள்விகளில் பதிலளிப்பவர் விட்டுக் கொடுக்காமல் இருந்தால் நேரடியான கேள்விகள் கேட்கப் படுகின்றன.

வினைக்களின் சொல் அமைப்பு:

முற்காலத்தில் வினைக்களின் சொல் அமைப்பைப் பற்றி அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை. இத்தகைய கேள்விக்குக் கிடைத்த விடைகளை ஆதாரமாகக் கொண்ட முற்கூறல் அடிக்கடி தவறியதுண்டு. ஆகையால் வினைக்களின் சொல் அமைப்பைப் பற்றி இன்றைய ஆய்வாளர் மிக்க கவனம் செலுத்துகிறார்கள். வினைக்கள் இருபொருள் தராதனவாக இருக்க வேண்டும்; எளிய சொற்களால் இயன்றிருக்க வேண்டும்; மிக நீளமாய் இருக்கக் கூடாது; ஒருபடி வார்புற்ற விடைகளைத் தூண்டுவனவாக இருக்கக் கூடாது. அவற்றின் உள்ளடக்கம் தெளிவாக இருக்க வேண்டும். அவை ஆய்தொகுதியில் அனைவருக்கும் பொருள்படுவனவாக, கவர்ச்சியுள்ளனவாக இருக்க வேண்டும். குடும்பக்கட்டுப்பாடு நல்லதா? குடும்பக் கட்டுப்பாடு விரும்பத் தக்கதா? என்பவை சிறந்த வினைக்கள் அல்ல. 'நல்ல' என்றுல் அறமுறையிலா? ஆன்மீக முறையிலா? பொருளாதாரத்திலா? என்று தெளிவாக வில்லை. அப்படியே 'விரும்பத்தக்கது' என்றுல் சமூகத்தின் எல்லா அடுக்குகளுக்குமா (strata) என்பது தெளிவாக வில்லை. மேலும், வினைக்கள் 'சுமத்தப்பட்டனவாக'(loaded) இருக்கக் கூடாது; அதாவது எழுச்சியூட்டிய சொற்களும் சொற்றொடர்களும் கொண்டனவாக இருக்கக் கூடாது. "ஐ. நா. சபை காஷ்மீரத்தைப் பற்றி மேற்கொண்ட தீர்மானத்தை இந்தியா எதிர்க்க வேண்டுமா?" என்பதில் 'எதிர்க்க' என்பது எழுச்சியூட்டிய சொல் ஆகும். ஆகவே

இது ஒரு சுமத்தப்பட்ட வினு. "இந்தியா அணுத்துலக வன்மைக்குப் பணிய வேண்டுமா?" என்பதும் சுமத்தப் பட்ட கேள்வி. 'வன்மை' 'பணிதல்' முதலியவை எழுச்சி யூட்டிய சொற்கள். அணுத்துலக எண்ணத்தை அறிந்த பின் இந்தியா என்ன செய்யவேண்டும்? என்பதுஇதனிலும் சிறந்த கேள்வி. புகழ்வன்மையுள்ள பெயர்களையும் வினுக் களினின்று தவிர்க்க வேண்டும். ஏனெனில் இவையும் விடைகளைப் பாதிக்கும் வன்மையுடையவை.

வினு அமைப்பைப் பற்றி ஃகாலப் வகுத்த நியதிக ளாவன :[8]

1. வினுக்கள் சுருக்கமாகவும், ஆய்பொருளுக்கு நேரடிப் பொருத்தமுள்ளனவாகவும் இருக்கவேண்டும். சார்புத் தொடர்களையும், காரணத் தொடர்களையும் விலக்குக.

2. அன்ருட வாழ்க்கையில் பயிலும் எளிய சொற் களையும் சொற்ருெடர்களையும் பயன்படுத்துக.

3. அதிக எழுச்சிச் சார்புள்ள சொற்களை விலக்குக.

4. தேர்வுகள் பலவாயின் அவற்றை ஓர் அட்டையில் அச்சிட்டு, பதிலளிப்பவருக்குக் காட்டுக. அவர் பொருத்து வனவற்றைக் காட்டட்டும்.

ஒரு வினுவிற்குப் பல சொல்லமைப்புக்களைச் சோதித்து தெளிவான, சார்பற்ற வினுவடிவம் பெறவேண்டும்.

இந்தியாவில் பொதுமக்கள் எண்ணம் பற்றிய ஆராய்ச்சி:

சென்ற போர் நடக்கும் பொழுது இந்தியப் புள்ளி இயல் நிறுவனத்தினர் (I. S. I.) நேசநாடுகள், நடுநிலை நாடுகள், எதிரி நாடுகள் முதலியவற்றிலிருந்து வெளியாகும் ஒலிபரப்புக்களைப் பற்றிய பொதுமக்கள் எண்ணத்தை அளப்பதற்குப் பார்வை (survey) இயற்றினர். அவர்கள் கல்லூரிகளில் சமயபோதனையைப் பற்றியும், கைம்பெண் மறுமணத்தைப் பற்றியும், கல்கத்தாவில் பொதுமக்கள் எண்ண ஆராய்ச்சி நடத்தினர். இதன் மூலம், அதிகம் படித்தவர்கள் சமயபோதனையை எதிர்க்கிருர்கள். கைம் பெண் மறுமணத்தை ஆண்களை விடப் பெண்களே அதிக மாக எதிர்க்கின்றனர் என்று கண்டனர். இந்த நிறுவனம்

1950-இல் தேசீயப் பதப்பார்வை (National Sample Survey) யுடன் சேர்ந்து செய்தித்தாள் படிக்கும் பழக்கம், வீட்டில் பண்டம் கொள்ளும் செலவு, பம்பாயில் அகதிப் பிரச்சினை முதலியனவற்றை ஆராய்ந்தனர்.

இந்தியப் பொதுமக்கள் எண்ண நிறுவனத்தினர் (Indian Institute of Public Opinion) 'சமுதாயத்தின் சமூகவுடைமைப் படிவத்தைப் (socialistic pattern of society)பற்றிய பொதுமக்கள் எண்ணத்தை ஆராய்ந்தனர். இதன் மூலம் மக்களுள் கால் பகுதியினர்தான் ஆவடித் தீர்மானத்தைப் படித்துள்ளனர் என்று கண்டனர். இந்நிறுவனத்தினர் மேலும் மதுவிலக்கைப் பற்றியும் வாக்கெடுத்தனர். குடிப்பதனால் சமுதாயத்திற்கு ஏற்படும் சமூகச் செலவைப்பற்றிப் பொதுமக்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. மதுவிலக்கின் திட்டமான நன்மைகளைப் பற்றியும் அவர்கள் அறியவில்லை. பெரும்பாலும் அறநெறிக் காரணங்களைக் கொண்டே அவர்கள் குடியை எதிர்த்தனர். இந்நிறுவனத்தினர் 1955-இல் ரஷியத் தலைவர்கள் இந்தியாவிற்கு வந்தபோது ஒரு பார்வை நடத்தினர். இத் தலைவர் வருகையால் 'போர்ப்புகைச்சல்' (cold war) பற்றிய சர்ச்சைகள் (controversies) குறைந்துள்ளவா என்பதைக் காணவே இவ் ஆராய்ச்சி நடத்தினர். சாதிக் கொள்கைகள், பெண்மை உரிமை, கூட்டுக்குடும்பம் முதலியவற்றைப் பற்றியும் இந்தியப் பொதுமக்களின் மனப்பான்மைகளை ஆராய்ந்துள்ளனர். அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பொதுமக்கள் பெரிதும் மதிப்பதாகத் தெரியவில்லை.

இந்நிறுவனத்தினர் 1951—52 பொதுத் தேர்தலை யொட்டி முதல் தேசீய வாக்கெடுப்பு நிகழ்த்தினர்.

References.

1. The Eastern Economicst. Blue Supplement—Vol. 11 No. 8.
2. Hilgard and Payne, Public Opinion Quarterly, 1944, 8.
3. Garret, Great Experiments in Psychology, p. 208.

———

பின்னுரை

(Epilogue)

சமூக உளவியல் ஒரு காண்நிலை அறிவியல். அது மனிதனுடைய சமூக அனுபவத்தையும் சமூக நடத்தையையும் விவரிக்கவும் விளக்கவும் முயல்கிறதென்று இயல் 1-இல் பார்த்தோம். இந்நூலில் இக்கருத்தை நிலைநாட்டியுள்ளோம். மனிதன் எப்பொழுதும் சமூக நிலைமைகளுக்கு உட்பட்டுள்ளான். இவற்றிற் கேற்பத் தன்னை இடைவிடாது பொருத்திக் கொண்டிருக்கின்றான். வீடு, பள்ளி, ஆகியவற்றின் மூலம் செயற்படும் 'பண்பாட்டுக் கவிநிலை' யின் பங்கையும் பற்றிப் பார்த்தோம். பண்பாடு தனியாளின் விடுதலையைக் கட்டுப்படுத்துகிறது. சமூகச் சூழ்நிலையின் மூலம் செயற்படும் பண்பாட்டுக் கட்டுப்பாடுகளுக்குத் தனியாள் பணியவேண்டியதிருக்கிறது.

சமூக உளவியலானது, கல்வி, தொழில், மருத்துவம் போன்ற பல வாழ்க்கைப் பகுதிகளிலும் பயன்படுகிறதென்றும் பார்த்தோம். இத்துறைகளில் நாம் பெற்றுள்ள வெற்றியைப் பார்த்தால் உளவியலரின் துணைகொண்டு நாம் நாகரிகத்தின் எதிர்காலத்தை மீட்டமைக்கக் கூடும் என்று தோன்றுகிறது.

மேற்கூறிய காரணத்தால் சமூக உளவியலர் வெறும் இருப்பு நிலை (positive) அறிவியலராக மட்டும் இருக்க முடியாது. முதலாவது அவர் நிகழ்ச்சிகளை விவரிக்க வேண்டும்; விளக்க வேண்டும். பின்னர் அவர் உயர்நிலை (normative) மனப்பான்மை கொள்ளவேண்டும், தம் முடைய விவரிப்பைத் தொடர்ந்து வழிகாட்ட வேண்டும், விளக்க வேண்டும், திருப்பிவிட வேண்டும்.

பொருத்தப்பாடு, பொருத்தப்பிறழ்வு (mal-adjustment) நலமான சமூகத் தொடர்பு, 'முற்சார்பு', 'விரைப்பு', 'உளக் கோட்ட ஆளுமை' முதலிய தொடர்களில் உயர்நிலை நோக்கு அடங்கியுள்ளது. உளவியலர் திரட்சமூகத்தில் இற்றைய மனிதனுடைய வாழ்க்கையையும், நகரத்தவர் ஒத்துழைக்கும் ஆற்றலை இழந்துள்ளதையும் பற்றிக் கவலை யுறுகிறார். இஃதும் உளவியலில் உயர்நிலை நோக்கு அமைந்துள்ளதைக் காட்டுகிறது. நலமான சமூகத்தின் சமூக வாழ்க்கையின் சாரம் என்ன? சமூகம் அத்தகைய நிலையை நோக்கிச் செல்கிறதா? அதாவது சமூகம் உண்மை யாகவே முன்னேறிக் கொண்டிருக்கிறதா? இல்லையென்றால் சமூக முன்னேற்றம் என்று உளவியலர் எண்ணுவது யாது? முதலிய கேள்விகள் எழுகின்றன.

அறிவுத்துறையில் நம் சாதனைகள் பல. மனிதன் இயற்கையின் மறைமங்கலை(secrets)க் கண்டு பிடித் துள்ளான். மனிதத் தன்மையைத் துருவி ஆராய்கிறான். இத்தகைய அறிவைப் பயன்படுத்தி வருகிறான். அறிவார்வ மும் பெருகி வருகிறது. மனிதன் இயற்கையின் வழிகளுக் கிடையேயும் புகுந்து சூழ்நிலையை மாற்றிக் கொண்டு வருகிறான்.

இங்கு நாம் முக்கியமாக அக்கறை கொண்டுள்ளது சமூக வாழ்க்கையைப் பற்றியேயாகும். சமூக வாழ்க்கை மிகவும் சிக்கலடைந்து கொண்டு வருகிறது. மனிதர் மேலும் மேலும் ஒருவரையொருவர் சார்ந்து வாழ நேர்கிறது. ஆனால், இப்போதுள்ள சமூக வாழ்க்கைப் படிவம் நலமா னதா? தனியாள் அதில் மகிழ்ச்சியாக இருக்கிறாரா? இவ் வாழ்க்கையின் மூலம் மனிதன் இன்னும் உயர்ந்த வாழ்க்கை மட்டத்தை எய்தமுடியுமா?—இதுபோன்ற கேள்விகள் நம் மனத்தில் எழுகின்றன.

சமூகத்தின் சடப்பொருட் சிக்கல் (material comple-xity) மட்டும் சமூக முன்னேற்றத்தின் இறுதியான நியதி யாகாது. சமூக முன்னேற்றத்தின் உண்மையான அளவை இருவகைப்படும். முதலாவதாக, தனியாளின் இன்பத் திற்கும் முன்னேற்றத்திற்கும் சமூகத்தில் எவ்வளவு வாய்ப்பு உள்ளது என்று பார்க்கவேண்டும். இரண்டாவதாக, இயற் கையையும், மனித இயல்பையும், மனிதத் தொடர்பையும் எவ்வளவு தூரம் அறிவொடு கட்டுப்படுத்தமுடியும் என்று காணவேண்டும்.

சமூகத் தொடர்புகள் இன்பமாக அமையவேண்டுமானால் நாம் பிறரொடு ஒத்துழைக்க வேண்டும். நம்மை இருந்த இடத்திலேயே இருத்தக் கூடிய செயல்களில் நம் சக்திகளை நாம் வீணாக்கக் கூடாது. உலகின் பொருள் நிலைகளை உயர்த்துவதன் மூலம் போராட்டம், மனமுறிவு, வன்செயல் முதலியவற்றை ஓரளவு குறைக்க முடியும். மேலும் நாம் நலமான மனவாழ்க்கை வாழவேண்டும். நம்மோடு நாம் சமாதானமாக வாழ்வதே மனநலத்தின் சாரமாகும். இதற்காக நாம் தேங்கி வாழ வேண்டும் என்பது அவசியமில்லை. வாழ்க்கையின் அறியாமைத் திரையை அறுத்தெறிந்த பல பெரியோர் இறுக்கமான (tense) பெரிய செயலில் ஈடுபட்டவராகத் தம்மைத் தத்தம் செய்தவராக, ஐயப்படுபவராக* இருந்துள்ளனர். ஆயினும் அவர்கள் நோயுற்ற, உளக்கோட்ட ஆன்மாக்களல்லர். அவர்கள் தம்முள் அமைதி கண்டுள்ளனர். இத்தகைய நோக்கங்களை அடைய வேண்டுமானால் நாம் நமது சக்திகளுக்கெல்லாம் வெளிப்பாடு காணவேண்டும். வாழ்க்கையில் பொருண்மை காணவேண்டும். ஒரு சமூகத்தில் தனியாளுக்கு மதிப்பு இருந்தால், அறிவும் ஆன்மீகமும் முக்கிய விழுமியங்களாக இருந்தால்தான் வாழ்க்கை பொருண்மைப்படும். அறிவு நாட்டமும், ஆன்ம நாட்டமும் மனிதன் சமூகத்தில் பரந்து பங்கெடுக்க ஏதுவாக்குகின்றன.

இன்றையச் சமூக அமைப்பு மேற்கூறிய நோக்கங்களை எய்துவதற்கு ஏற்றதா என்பது ஐயத்திற் கிடமாகிறது. நாம் குறிக்கோளாகக் கொள்ளும் சமூகத்தில் ஒரு மனிதன் எந்தெந்த அனுபவங்களிலெல்லாம் பயன்பெற முடியுமோ அந்த அனுபவங்கள் அவனுக்குக் கிடைக்க வேண்டும். மனிதன் தனிமை உணர்ச்சியால் நலியக் கூடாது. அவனுடைய உளவியல் தேவைகளெல்லாம் நிறைவேற வேண்டும். நமது இப்போதைய சமூக அமைப்பிலுள்ள மனவெழுச்சி நெருக்கம், (emotional intimacy) ஈரம் (warmth), காப்புணர்ச்சி முதலியன குறைந்து வருகின்றன. ஆகையால் சமூக அமைப்பைத் திருத்தி அமைக்க வேண்டியதிருக்கலாம். ஒரு வேளை நாம் பழைய சமுதாய வாழ்க்கைப் படிவத்தை நோக்கி ஓரளவு செல்ல வேண்டியதிருக்கலாம். காந்தியடிகள் கூறியபடி நாம் தொழிலை மையம் பிரித்துக் (decentralize) கிராமத் தொழிலாக நடத்தினால் தொழின் மயத்துடன் இத்தகைய சமூக நலன்களையும் பெறக்கூடும்.

*R. Linder, prescription for Rebellian P. 274

நாம் இப்பொழுது பெறக்கூடிய உடம்படுப்பு வசதிகளையும், காலச்சேம வசதிகளையும் பயன்படுத்தினால் பெருந்தொழில்களையும் நாம் இம்முறையில் அமைக்கலாம். இத்தகைய சமூகத்தில் தனித்துறை வல்ல தொழிலாளரை பண்டைக் காலத்தைப் போல மரபுவழித் தொழிற்பயிற்சியின் மூலம் பெறமுடியும். இவ்வாறு வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும். *

இவையெல்லாம் இடைக்காலக் கொள்கையாகத் தோன்றலாம். ஆனால் காலத்தின் மாற்றத்தையெல்லாம் முன்னேற்றம் என்று சொல்லும்பொழுது, வருங்காலத்தில் பழைய வாழ்க்கைப் படிவம் ஒன்றைத் திரும்பப் பெற்றால் அதனையும் முன்னேற்றமென்று ஏன் சொல்லக்கூடாது? இத்தகைய 'இடைக்காலக் கொள்கையை' நாம் விரும்பாவிட்டால் தனியாளின் உளவியல் தேவைகள் எல்லாவற்றையும் நிறைவிக்கவும் எல்லா ஆற்றல்களையும் வெளியிடவும் வாய்ப்பைத் தரும் தொழில்மயச் சமுதாயம் ஒன்றை அமைக்க வேண்டும். இத்தகைய புனைவுகளும் பெரும்பாலும் 'பழையன புகுத்தலாகவே' இருக்கக்கூடும்.

* இக்கருத்து விளங்கவில்லை. இது எப்படிக் கைகூடும் என்று மூலநூலாசிரியர் விளக்கவில்லை. இதன் தத்துவம் ஆராய்ச்சிக்குரியது. இத்தகைய வாழ்க்கைப் படிவம் இருந்தபோது எல்லோரும் (அல்லது பெரும்பான்மையினராவது) எல்லா உளவியல் தேவைகளையும் எய்தினார்கள் என்றே, ஆற்றல்களைச் சரிவர வெளியிட்டார்கள் என்றே என்று ஆசிரியர் இந்நூலில் நிறுவவில்லை.

B. A. பட்டத் தேர்வு - மார்ச்சு 1959

பகுதி III—தொகுதி III-C — உளவியல்

சமூக உளவியற் கூறுகள்

காலம் : மூன்று மணி] **[மொத்த மதிப்பெண்கள் 100**

[எவையேனும் ஆறு கேள்விகளுக்கு விடையளிக்க. எல்லாக் கேள்விகளுக்கும் மதிப்பெண்கள் சமம்.]

1. சமூக உளவியலின் எல்லையை வரையறுத்துக் கூறு. அது சமூகவியலினின்றும் பொது உளவியலினின்றும் எவ்வாறு வேறுபடுகிறது என்று காட்டுக.

2. கூட்டுக்கம் (Gregarious instinct) என்றால் என்ன ? மனி தன் சமூகத் தன்மைப்படும் முறையைப்பற்றி உரையாடுக.

3. மனப்பான்மைகளை எவ்வாறு அளக்கலாம்? மனப்பான்மை களை அளப்பதற்கு வழக்கிலுள்ள சில அளவைகளைச் சுருக் கமாக விவரிக்க.

4. தனியாளின் பல்வேறு செயல்களைக் குழுச் சூழ்நிலை பாதிக் கும் விதத்தைப்பற்றி F. H. ஆல்ப்போர்ட் இயற்றியுள்ள புற ஆய்வுகளை விவரிக்க.

5. குழு என்றால் என்ன? சமூகத் தரத்தைப்பற்றிய ஷெரிஃபின் புற ஆய்வைப்பற்றி உரையாடுக.

6. ஒருபடி வார்ப்பு (stereo type) என்றால் என்ன ? தேசங் களுக்கிடையே ஏற்படும் முற்சார்புகளை (prejudice) ஒரு வார்ப்புக்கள் எங்ஙனம் பாதிக்கின்றன என்பதைப்பற்றி உரையாடுக.

7. பொதுமக்கள் எண்ணம் (public opinion) என்றால் என்ன ? அது எவ்வாறு உருவாகிறது ? சமூக வாழ்க்கை யின் பல்வேறு கூறுகளில் அதன் பங்கை விளக்குக.

8. பொருத்தப்பாட்டு நடத்தையில் உள்ளார்ந்த மறிவினைகள் எவ்வெவ் வகைகளில் மாற்றியமைக்கப்படுகின்றன ? எடுத் துக் காட்டுகள் அளிக்கவும்.

9. கீழ்க்கண்டவற்றுள் எவையேனும் மூன்றினைப்பற்றிச் சிறு குறிப்பு எழுதுக :—

   (a) புடை நிலையமைப்பு (frame of reference)
   (b) குழு மனம்
   (c) எழுச்சிகள் ஒத்துணர்வால் பரவுதல் (induction)
   (d) சமுகத் தொலைவு.

B. A. பட்டத் தேர்வு - செப்டம்பர் 1959

பகுதி III—தொகுதி III-C — உளவியல்

சமூக உளவியற் கூறுகள்

காலம் : மூன்று மணி] [மொத்த மதிப்பெண்கள் 100

[எவையேனும் ஆறு கேள்விகளுக்கு விடையளிக்க. எல்லாக் கேள்விகளுக்கும் மதிப்பெண்கள் சமம்.]

1. "சமூக உளவியல் தனியாளின் அனுபவத்தையும் நடத்தையையும் சமூகத் தூண்டல் நிலைமைகளோடு தொடர்புறுத்தி ஆய்கிறது" உரையாடுக.

2. சமூகத்திற்குரின்றிய ஊக்கிகள் (Socio-genic motives) என்றால் என்ன ? மனித நடத்தையை ஒரு இயல்பூக்கத்தால் அல்லது இயல்பூக்கத் தொகுதியால் விளக்க முடியுமா ? உமது விடைக்குக் காரணங்கள் கொடுக்கவும்.

3. சமூக மனப்பான்மைகள் என்றால் என்ன ? சமூக நடத்தையைப்பற்றிப் படிப்பதில் அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி உரையாடுக.

4. கும்பலின் உளவியலைப்பற்றி ஒரு சிறிய கட்டுரை வரைக.

5. கீழ்க்கண்டவற்றிற்கிடையேயுள்ள வேற்றுமையைத் தெளிவாகக் கூறு.
   (i) அகக் குழுவும் (in-group) புறக்குழுவும் (out-group)
   (ii) உறுப்பினராகும் (membership) குழுவும், புடைநிலைக் (reference) குழுவும்

6. சமூக நடத்தையைச் சமூக நிறுவனங்களும், மரபும், வழக்கங்களும் (customs) பாதிக்கும் விதத்தைப்பற்றி உரையாடுக.

7. ஆல்ப்போர்ட் 'முன் வலிமைய மறிவிப்புகள்' (prepotent reference) எனக் கூறுபவை யாவை ?

8. தலைவனுக்குத் தேவையான பண்புகள் யாவை ? தலைவர் குழுவின் உளவியல் தேவைகளை எவ்வாறு நிறைவேற்றுகிறார் ?

9. கீழ்க்கண்டவற்றுள் எவையேனும் மூன்றினைப்பற்றிச் சிறு குறிப்பு எழுதுக :
   (a) சமூகத் தடுநிலை (taboo)
   (b) ஆதிக்கக் கருத்தேற்றம் (prestige suggestion)
   (c) சமூக முற்சார்பு (social prejudice)
   (d) வதந்தி

மூன்றாண்டுப் பட்டப் படிப்பு

B. A பட்டத் தேர்வு - ஏப்ரல் 1961

பகுதி III—கிளை VII — உளவியல் (மூலப்பாடம்)

தொகுதி A

சமூக, தரப்புற (abnormal) உளவியற் கூறுகள்

காலம் : மூன்று மணி] [மொத்த மதிப்பெண்கள் 100

[ஒவ்வொரு பகுதியிலுமிருந்து மூன்று கேள்விகள் தேர்ந்து மொத்தம் ஆறு வினுக்களுக்கு விடையளிக்க. எல்லா வினுக்களுக்கும் மதிப்பெண் சமம்]

பகுதி A. சமூக உளவியல்

1. "ஒப்புமையாகப் புறமுறை சார்ந்தேனும், புறமுறை சாராமலேனும் (informal), சமூக நிலைமையையே சமூக உளவியல் மெய்ப்பொருளாகக் கொண்டு ஆராய்கிறது." — உரையாடுக.

2. 'உளவியற் குழுக்களின்' பண்புகள் யாவை? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

3. 'நாம் எத்தகைய மக்களாக ஆவோம் என்பது நாம் வளர்க்கப்படும் பண்பாட்டினுல் பெரும்பாலும் தீர்மானிக்கப்படுகிறது'—விளக்குக.

4. பொதுமக்கள் எண்ணத்தை அளந்தறியும் முறைகளை மதிப்பிடுக.

5. பொதுமக்கள் எண்ணத்தை உருவாக்குவதில் பேசும் படங்களும் வானெலியும் கொண்டுள்ள பங்கினை விளக்குக.

6. கீழ்க்கண்டவற்றுள் எவையேனும் இரண்டினைப்பற்றிச் சிறு குறிப்பு எழுதுக :—

   (a) விலங்குகளின் சமூக நடத்தை.

   (b) குழு மனம்

   (c) ஒத்துணர்வு

   (d) பின்பற்றல்.

பகுதி B. தரப்புற உளவியல்

மூன்றாண்டுப் பட்டப் படிப்பு

B. A. பட்டத் தேர்வு - ஏப்ரல் 1962

பகுதி III—கிளை VII — உளவியல் (மூலப்பாடம்)

தொகுதி A.

சமூக, தரப்புற (abnormal) உளவியற் கூறுகள்

காலம் : மூன்று மணி] [மொத்த மதிப்பெண்கள் 100

[ஒவ்வொரு பகுதியிலுமிருந்து மூன்று கேள்விகள் தேர்ந்து மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம்.]

பகுதி A. சமூக உளவியல்

1. சமூகப் பாகுபாட்டின் மூன்று மட்டங்களை—தனியாள், குழு, நிறுவனம் ஆகியவற்றைச்—சுருக்கமாக விவரிக்க.

2. குழு நிகழ்மைகளைப்பற்றிய லெவினின் (Lewin) கருத்தியற் பாகுபாட்டைச் (Topological or Vector analysis) சுருக்கி விளக்குக.

3. சமூகத் தூண்டலின் வடிவங்கள் என்ற முறையில் ஒத்துணர்வு, பின்பற்றல் ஆகியவற்றின் பங்கினை விளக்குக.

4. மனப்பான்மைகளின் சமூக முக்கியத்துவத்தைப்பற்றி உரையாடுக. அவை எவ்வாறு உருவாகின்றன ?

5. பண்பாடென்பது "சமூக உறுப்பினர் மீண்டும் மீண்டும் இயற்றும் துலங்கல்களின் அமைப்பேயன்றி வேறல்ல என்பதே ஆய்வின் இறுதி முடிவாகும்." இக்கூற்றினை ஆராய்க.

பகுதி B. தரப்புற உளவியல்.

INDEX AND GLOSSARY

கருத்தகராதி

அக்கறை (ரை) - interest 28, 313
அகக்காட்சி - introspection 32
அகத்தேற்றம் -introjection 129
அகம் காண் - introspect 32
அக முகம்(ன்)-introversion (t) 192, 193
அக வய - subjective 28, 34, 41, 42, 212
அங்கம் (இடம், வேடம்) - role 221, 146, 176, 186
அச்சம் - fear 74
அச்சுறுத்தல் - threat 235
அடக்கம் - control 213
அடிக்கூறு - substrata 56, 63
அடிப்படை - basis, foundation 11, 62, 84, 88, 287
அடுக்கமைப்பு - stratification 155
அடைவு - achievement 185
அண்டையம்(மை) - neighbourhood 22, 160
அண்டையர் - neighbours 2
அண்மை - proximity 138
அணுகல் - approach 87
அணுத்திரட்பூதவியல் - molecular physics 24
அணுவிய அமைப்பியல் - structural atomism 56
அதிகார - authoritarian 14
அமிலியர் - Amils 343
அமைப்பியல் - Organizational 59
அமைப்பு - Organization 58, 243
அமைப்பு (உறுப்பியம்) - Structure 137, 140, 188
அமைப்புக் குலைவு - disorganization 158
அரசியல் - politics 23, 28, 50, 142, 338
அரசியல் தத்துவம் - political philosophy 57
அரசியல் பிரசாரகர் - political propagandist 156
அரசு- state 144, 160, 233, 252
அரப்பேஷியர் - Arapeshians 212
அருவருப்பூக்கம் - repulsion 74
அலர் - gossip 235, 243
அலுவல் (செயல் புரிவு) - function 283
அலுவல் சார்ந்த - functional 154
அலைத்தல் - annoyance 97
அவாவு நிலை - level of aspiration 43, 192
அவை (கேட்போரவை) - audience 138, 313
அழுக்காறு - envy 73

அளவில் வசதியளிப்புக் கருத்து - quantitative concept of facilitation 134
அளவிடுதல், அளவீடு-measurement 33, 352
அளவு (பாகை)- degree 189
அளவுக் கூறு - dimension 189, 353
அளவையியல் - logic, logical 18, 20, 57
அற எதிர் - immoral 301
அறத்தரம்-moral standards 327
அறநெறி - morals 243
அறப் பழக்கங்கள் - moral habits 10
அறவியல் ஒப்புமை - ethical relativity 244
அறிக்கை - report 32
அறிகுறி - sign 96
அறிதல் - cognition 19
அறிதுயில் - hypnosis 111
, திரள் - mass hypnosis 265
அறிதுயிற்றுநர் - hypnotist 111
அறிமுகம் (பெறல்) - recognition 23, 124
அறிவிதழ் - journal 50
அறிவியல் சார்ந்த-scientific 28
அறிவியற்கு முற்பட்ட - pre-scientific 29
அறிவுடம்படும்பு (உடம்படுப்பு) - communication 96
அறிவுள்ள மனித இனம்-Homo Sapiens 326
அன்பு - love, tenderness 75
அனுபவம் - experience 63, 89
அனுபூதிக் கொள்கை (மறை பொருட் கொள்கை) -mysticism

ஆக்க நிபந்தனையுறுத்தல் - conditioning 46, 87
ஆக்க வளர்ச்சி-creativity 236
ஆக்கிரமம் (வன்செயல்) - aggression 292
ஆசன இருத்தம் - anal fixation 79
ஆசாரங்கள் - manners 229
ஆட்படுநர் - subject 33, 41, 111, 125
ஆதரவு - favourableness 356
ஆதிக்கம் (மேலோங்கல்) - dominance 69
ஆய்கூடம் - laboratory 42
ஆய் தொகுதி (தொகுதி) - population, universe 365
ஆய்வாற்றல் - reason 66
ஆய்வு - reason(ing) 3, 73
ஆய்வுப் புற - non-rational 273
ஆராய்ச்சி (ஆய்வு)- research46
ஆராய்வூக்கம் - instinct of curiosity 74
ஆள் தனியியல் - individuality 58
ஆளிடைத் தொடர்புகள் - interpersonal relationships 47, 249
ஆளின் மிஞ்சிய - super-personal 205
ஆளுருப்படுத்தல் - personification 55, 58
ஆளுமை - personality 31, 185
- க் கூறுகள்- personality dimensions (traits) 79, 188
- ப் பட்டியல்-personality inventory 36
, ஆயும் முறைகள் - methods of study 220
, உடன் நனவுடை - co-conscious 58
, உள நோயுடை - psychopathic 209
, நனவுடை - conscious 58
, பிரிந்த-divided 58

ஆளுமை மாறிவரும் - alternating 58
ஆற்றல் - ability 64, 190
ஆற்றல் (சக்தி) - energy 65

இஃது (அஃது நிலைமனம்) – id 204
இகழ்ச்சி - scorn 73
இசைவு - harmony 192
இட அண்மை - proximity 305
இடப் பெயர்ச்சி - displacement 48, 110, 132
,, - migration 342

இடப்பேறு - context 17
இடம் - position 20, 21
இடிப்பஸ் நிலை - oedipus situation 77
இடைச் சார்பு -inter-dependence 351
இடைத் தூண்டல் - inter-stimulation 103, 316
இடைத் தொடர்பு - inter-relation 20
இடை வினை - inter-action 3, 14, 57, 93, 110
இணை விழைச்சு - mating 67, 76
இயக்கத் திரிபுக் காட்சி - illusion of movement 41
இயக்கம் - incentive 170
இயங்காற்றல் - (இயங்குமை) motility 190, 192
இயங்கிலித் தன்மை - inertia 137
இயங்கியல் தீர்ப்பிகள் - dynamic determinants 8
இயங்குரிமை - freedom of movement 23
இயல்பிய - nativistic 8, 76
இயல்புப் போக்கு - native tendency 64
இயல்பூக்கம் - instinct 70, 76, 88, 295
இயற்கைப்புற - unnatural 133
இயற்கை மிஞ்சிய - super natural 40, 184
இயற்கைய - naturalistic 8, 66, 204
இயற்கையாற்றல் - capacity 190
இயற்கையான - native 69
இயற்கையுடன் இயைந்த - naturalistic 35
இயற்றுவோர் - performer 314
இயைபு விதி - Law of association 87
இருக்கை நிலை (இருப்பு நிலை) - positive 29
இரு கூறுபடுப்பு - dichotomy 71, 198
இருத்தம் - fixation 63, 79, 215
இருப்பி - being 66
இருமுகன் - ambivert 196
இருவர்க் குழு - pair group 2
இருவழித் தேர்தல் - mutual choice 39
இருவழிப் பாதிப்பு - reciprocal influence 59
இரு வழிமை - matualism 20
இல்பொருள் காண்டல் - hallucination 265
இல்வாழ்க்கை - married life 208
இழை - tissue 55
இளங்குமர(ன்)-adolescent
இளமையச் சூழ்நிலை - early environment 4
இறுக்கம் - rigidity 43, 153
இன்பக் கொள்கை - pleasure principle 171
இன்பம் சார்ந்த ஊழ்வினைக் கொள்கை - hedonistic fatalism 251
இனக்குழு - horde (tribe) 98, 114, 137
இனக்கூறு - racial factor 335
இனத்துடைப்பு - genocide 325
இனப் பண்பு-racial character 325

இனப் பழக்கங்கள் - racial habits 84
இனம் - race 325
இன முற்சார்பு - race prejudice 48, 325
இன வேற்றுமைகள் - racial differences 327

ஈடு செய்தல் - compensation 48, 129, 193, 257, 303
ஈர்ப்பு வெறுப்புப் படிவங்கள் - patterns of attraction and repulsion 38
ஈராஸ் - Eros 77

உட்கலப்பு - incest 78
உட்காட்சி - insight 4, 197
உட்கு - awe 73
உட்குழு - clique 39
உட்சூழ்ச்சி - intrigue 235
உட்செல் - afferent 87
உட்படுத்தல் - internalisation 204
உட்பாட்டு நீட்சி - mood 195
உடம்படுப்பு (அறிவுடம்படுப்பு) - communication 6, 23, 55, 56, 57, 93, 96, 137, 173, 331
உடன் தீர்ப்பவர் - co-judging individual 135
உடனிகழ்ச்சி - concomitant
உடனியைபு-correlation 25, 36, 200, 357
உடனிருக்கை (உடனுறைவு) - company 1, 23, 70
உண்மை உணர்வு -sense of reality 171
உணர்ச்சி - feeling 10
உணர்ச்சிப் பகுதித் துலங்கல்- sensitive zone responses 86
உணர்வொருமை - rapport 286
உணவு தேடுக்கம்-food-seeking instinct 75, 88
உந்து-drive, urge 9, 18, 65, 66, 67, 68, 137
உந்து —
, தற்காப்பு - self-preserving 67
, இனக்காப்பு- race-preserving 67
உந்தூக்கம் - propensity 72, 84
உய்த்தல் - inference 33
உயர் இடைநிலை வகுப்பு - upper middle class 23
உயிர் ஆற்றல் - elan vitale, libido 64
உயிர்க் கொள்கை - animism 54
உயிர்ச்சார - vital, vitalistic 53, 71, 82
உயிரணு, உயிரறை - cell 55, 63, 105
உயிரி-organism 55, 58, 65, 150
, உரு-concrete organism 56
, பிரித்தியங்கு-discrete organism 56
உயிரிய-organic 65
உயிரியல் - biology, biological 9, 25, 55, 89, 178, 198
உயிரியல்-உளவியல் - bio - psychological 70
உயிரியற் கூறு - biological factor 340
உரிமை - right 5, 21, 152
உருத்துலக்கம் (வளர்ச்சி) - development 85, 185
உருப்படுத்தல் (உருவாக்கல்)- formulation 25, 29
உரை காண்டல் - interpretation 43
உரையாடற் குழு - discussion group 142
உள்துடிப்பு - impulse 55, 73, 211
உள் மணம் - endogamy 78
உள்ளத் தெழுச்சி - 'எழுச்சி' காண்க
உள்ளப் பாகுபடுப்பியல்-psycho analysis 47
உள்ளப் பாகுபாட்டாளர்-psycho analyst 47, 287, 302

உள்ளத் தோற்ற - psychogenic 205
உள்ளார்ந்த - innate 18, 64, 66, 84
உளக்கோட்டம் - neurosis 219
உளப் படுத்தல் - intermalisation 78
உளப் பாலியல்-psycho-sexual 77, 78
உளவியல் - psychology
, ஒப்பியல் - comparative 46
, குழந்தை - child 46, 47
, சமூக - social
, தனி - pure 11
, தனியாள் - individual 46
, நடைமுறை - applied 11, 33
, பொது - general 46
, மருத்துவ - clinical 46, 110
- கோட்பாடு - Theory 350
உளவியல் நடிப்பு - psychodrama 44
உற்று நோக்கு (நோக்கல்) - observation 20, 29, 33, 34, 71, 82
உறுப்பிய - structural 21, 65
உறுப்பியல் - structure 60, 72, 188, 247

ஊக்கி - motive 25, 64, 73, 89, 90, 98, 179, 256, 267
ஊக்குவித்தல் (ஊக்கம் பெறல்) - motivation 46, 64, 186
ஊழ்விதிக் கொள்கை - fatalism 336
ஊடாட்டம் - interaction 314
ஊன்றிய அக்கறை (ரை) - vested interests 274

எச்ச வகையீடுகள் - residual categories 30
எண்ணக் கவிகிலை - climate of opinion 3
எண்ணப் பார்வை - opinion survey 366
எண்ணம் - opinion, idea 55, 121, 331
எதிர் உரிமை - counter claims 182
எதிர்க் கருத்தேற்றம் - contra-suggestion 258
எதிர்ப்பின் இடைத்தடை - interference of oppositions 108
எதிர்ப் பின்பற்றல் - contra-imitation 258
எதிர்ப்பு - unfavourableness-356
எதிர்பார்ப்பு - expectation 176
எதிர் பாற் கவர்ச்சி - hetero-sexual interest 79
எதிர் பெய்து நிற்றல் - responsiveness 198
எதிர் விணைக் காலம் - reaction time 192
எல்லை - Scope 1, -range 93
எலெக்ட்ரா நிலை - Electra situation 77
எழுச்சி - Emotion 73
, அறிவூட்டிய-intellectualized 97
, கலப்பு - blended 73
, சார்பு - derived 73
- அகலம் - breadth 195
- ஆழம் - depth 195
- எல்லை - range 195
- க் கட்டுப்பாடு-control 224
- சைகை - gesture 95
- தன்னியக்க வாயிற்படி - autonomic threshold 195
- முதிர்வு - maturity 221
- வலிமை - strength 195

எழுச்சி —
வெளிப்பாடு - expression 97
எழுச்சியக் காப்பு - emotional security 70
எழுப்புதற் கூட்டங்கள் - Revival meetings 116
ஏதீடு - rationalization 33, 48, 121, 257
ஏளனம் - ridicule 213
ஏற்பு - acceptance 70, 168, 215
ஏற்புடைமை - validity 354
ஏற்றம் - status 20, 31, 124, 168
, தொடக்கச் சமூக - initial social status 2

ஒட்டுமை - contiguity 87
ஒடுக்குதல் - repressoin 47, 77, 133
ஒத்தியக்கம் - empathy 119
ஒத்துக்கொண்மை - agreement 356
ஒத்துப்போதல் - conformity 236, 257
ஒத்துணர்வு (ச்சி) - sympathy 6, 110, 124,
, புராதன - primitive 105, 119, 166
ஒத்துழைப்பு-co-operation 104
ஒதுக்கம் - reservedness 192, 326
ஒதுக்குதல்-seggregation 13, 302
ஒதுங்கூக்கம் - instinct of escape 74
ஒப்பந்தம் - contract 20, 152
-க் கோட்பாடு-Theory of contract 20, 152
ஒப்பு - similarity 87, 139
ஒப்புமை-relativity, relation 19
ஒருங்கிணைதல் - co-ordination 192
ஒரு சீர்மை - uniformity 55
ஒரு தார மணம் - monogamy
ஒருபடித் தன்மை - homogeneity, 167, 211, 330, 338
ஒருபடி வார்ப்பு-stereotype 347
ஒருமைப்பாடு (ஒருமை) - integration 13, 17
ஒழுக்கம் - character 210
ஒவ்வுமை - consistency 55, 211, 273, 353
ஒன்றிய கோட்பாடு - unified theory, 29
ஒன்றுதல் - identification 48, 77, 110, 119, 128 167, 170

ஓட்டம், உளவியல் - psychological currents 38
ஓரின உணர்ச்சி - consciousness of kind 139
ஓவியச் சைகை - graphic gestures **95**

ஃஆர்மிக - hormic **70**
ஃஆர்மோன்கள் - harmones 81, 202

கட்டிலி இயைபு - free association 47
கட்டிலி முயற்றி - free will 251
கட்டில்லா வெளிப்பாடு - free expression 192
கட்டுப்பாடு(படுத்தல்)-control 11
கட்டுக்கம் - instinct of construction 75
கடத்தி - transmitter 63
கடப்பாடு - imperative 85, 239
கடமை (கடன்) - duty 21, 53
கண்டனம் - condemnation, dis-approval 241, 242
கணி நிரல் - scale 39, 308, **311**, **355**
கதை சொல்லல் - story telling 45

கதை முடித்தல் - story completion 45
கருவு - fraud 235
கருத்தீடுகள் - suggestions 10, 111
கருத்து - concept 46, 49, 57
கருத்துப் பரப்பல் (பிரசாரம்) - propaganda 4, 260
கருத்துப்பரப்பற் குப்பிகள் - capsules of propaganda 269
கருத்தேற்குமை- suggestibility 40, **111**, 170, 207, 257
கருத்தேற்றம் - suggestion 5, 6, 110, **111**, 166
, திரள் - mass 116
, மந்தை - herd 113
கருதிக் கோடல் - hypothesizing 29
கருதுகோள் - hypothesis 5, 22, 29, 49, 60
கல்வி - education 261
கலைச்சுற்றம் - art circles 159
கலை விருப்பம் - art preference 327
கவர்ச்சி - interest 3, 10, 18, 89, **91**, 192
கவன எல்லை - range of attention 265
கவி நிலை - climate atmosphere 2, 3, 161
கழிவுக் கட்டுப்பாட்டுப் பயிற்சி - toilet training 36, 215
கள உற்று நோக்கு - field observation 35
கள உறுப்பியம் - field structure 286
களிக்குழு - club 79, 144, 315
கற்பழிப்புப் பாவனை - seduction fantasy 79
கற்பிதம் - speculation 29, 30, 49
கற்றல் - learning 46
, உள்ளார்ந்த-latent 174
, திறமைகள் - of skills 175
கற்றல்—
, விலங்கு-of animals 235
காசியர் - Khasis 217
காண்டல் அமைப்பு - frame of reference 40
காண் நிலை - empirical 27
காப்பின்மை - insecurity 158
காப்புணர்ச்சி - security 15, 168, 204, 206, 214
காமம் - lust 75
காரண காரிய முறை - cause and effect 28
காரணங் கற்பித்தல் (ஏதீடு) - rationalization 257
காலக் கோட்டம் - craze **254**
காலக் கோலம் - fashion 32, 75, 120, **246**, **254**
காலப் பாணி - fad **254**

கிராமச் சமுதாயம் - rural community 141, 149
கிலி (பேரச்சம்) - phobia 79

குடில் தாய் - house mother 38
குடியாட்சி (மக்களாட்சி) - democracy 51
குடும்பம் - family 8, 20, 22, 77, 131, 165, 232, 247, 344
கும்பல் - crowd 7, 19, 57, 313, 316
குமரப்பருவம்-adolescence 207, 217
குருதிக் கிளைமை-blood relationship 232
குரோமோசோம் - chromosome 341
குவிவு - reclusiveness 192, 194
குழந்தைமை, குழந்தைப் பருவம்- childhood 164, 203
குழவியப் பாலியன்மை - infantile sexuality 76
குழு - group
, அக்கரை அறிந்த - interest conscious 152

குழு—
, அடைத்த (மூடிய) - closed 49, 142
, அமைவற்ற - unorganized 49
, அமைவுற்ற - organized 49
, இடைச் செயல் புரி - interacting 141
, இயற்கைக் - natural 140
, உடன் செயல் புரி - co-acting 134, 141
, ஓரளவு திறந்த - partially open 140
, சற்று அடங்கற் - partially inclusive 140, 141, 271
, செயற்கைக் - artificial 140
, தற்காலிக - temporary 140
, தற்செயலாக அமைந்த - accidental 140
, திறந்த - open 49, 140, 142
, நிலையான - permanent 140
, நோக்கமுடன் அமைந்த - purposive 140, 141
, முதனிலைக் - primary 22, 49, 140, 142, 165
, முற்று அடங்கற் - totally inclusive 140, 141, 149
, வடிவமற்ற - amorphous 270
, வழிநிலைக் - secondary 22, 49, 140, 142
, இயங்கியல் - dymanics 292
, உணர்ச்சி - feeling 139, 148
, உளவியல் - psychology 138
, ஒற்றுமைக் காரணிகள் - factors for group unity 148
குழு—
- க் கவிநிலை - climate 290
- த்தரம் - norms 41, 57
- ப் பற்று - loyalty 147
- மனத்திடம் - morale 29
- மனம் - mind 49, 50, 59
- வய முற்சார்பு - prejudice 42
- வன்மை - pressures 138
குழுமம் - congregation 316
குழுவை உருவாக்குபவர் - group builders 282
குழுவைக் கையாள்பவர் - group manipulators 282
குழுவைத் தோற்றுவிப்பவர் - group originators 282
குழுப் பதிலாட்கள் - group representatives 282
குறிக்கோட் குழுவினர் - idealistic school 230
குறிக்கோண்மை - idealism 144
குறிக்கோள் - ideal 10, 123
குறிக்கோள் தொகுதி - ideology 146, 247
குறிப்பிடுமை - significance 10, 173, 249
குறியீட்டுச் சைகை - symbolic gestures 95, 96
குறியீடு - symbol 98
குறிவயின் இறுத்தம் - genital fixation 79
குறுகிய குடித்தன்மை - clannishness 300
குறைந்துசெல் விளைவு - diminishing return 287
கூட்ட(டு) - collective, joint
- குடும்பம் - family 23, 160, 214
- குறியீடுகள் - symbols 229
- நடத்தை - behaviour 49, 115
- நனவு - consciousness 49, 50, 54
- நோக்கு - purpose 26

கூட்ட(டு)—
- முன்னிறுத்தங்கள் - presentations 156
கூட்டாளிக்குழு - gang 176, 207
கூட்டுறவு - co-operation 213
கூட்டுக்கம் - gregarious instinct 75
கூம்புதல் - depression 195
கூறு - factor 28
கூறுபடுப்பு - analysis 29, 191
கேட்போரவை, கேட்போர் அவை-audience 270, 313
கையாடுதல் - manipulation 68
கொள்கை - principle 172
கோட்படுப்பு - theorising
கோட்பாடு - theory 29
கோள் - goal 19, 63, 80,90, 105
கோள்-நாடும்-goal-seeking 66
கோள்நோக்கிய - goal-directed 63, 64, 71, 84
ஃகெஸ்ட்டால்ட்டு - Gestalt 188, 286

சங்கம் - association 19, 20, 140, 144, 149, 151, 159
, உழைப்பாளர் - labour unions 160
, வர்த்தக - trade unions 160
சட்டம் - law 5, 233, 246
சட்டவியல் - law 28
சடங்கு-ceremony 122, 237, 245
சர்வதேசக் கொள்கை - internationalism 58
சரிக்கட்டுதல் -manipulation235
சமநிலை - equilibrium 66
சமநிலை மீட்டல் - homeostasis 67
சமயம் - religion 232, 249, 329, 338, 345
சமயப்புற - secular 237
சம வயதுக் குழு - peer group 166
சமுதாயம்-community 8, 20,233
சமுதாயப் படிவம் - community pattern 160
சமுதாயப் புறக்கணிப்பு - excommunication 241
சமூக - Social
- அடுக்கமைப்பு - stratification 155
- அமைப்பு - organization 137
- அள வீட்டியல் - sociometry 38
- இடைவினை - interaction 93, 110
- உளவியல் - psychology
- எதிர் - anti-social 303
- எதிர்பார்ப்பு - expectation 172, 231
- எண்ணம் - opinion 163
- கட்டுப்பாடு- control 229, 260
, அழித்தல் வகை - exploitative type 235
, ஆக்கல் வகை - constructive type 235
, உடன்பாட்டு - positive 235
, எதிர்மறை- negative 235
, ஒடுக்கம் - constraining 235
, குடியாட்சி - democratic type 234
, தந்தைமை - paternalistic 234
, நிறுவனப்பட்ட - institutionalized 242
, நேரடி - direct 233
, மறைமுக -indirect 233
- கடத்தம் - induction 110
- தன்மை - sociability 198
- தன்மை பெறல் - socialization 162, 179

சமூக—
- தரம் - norms 6, 239, 241
- தளைகள் - bonds 232
- திண்மை - solidarity 8
- துலங்கல் - response 110
- தூண்டல் மதிப்பு- stimulous value 186
- தூண்டுவிப்பு- stimulation 93
- தேர்தல் - selection 177
- தொலைவுக் கணிநிரல் - (social) distance scale 358
- நடத்தை - behaviour 62
- நோயியல் - pathology 159
- பண்பு - character 177
- புத்தமைப்பு- reconstruction 15
- புறநிலை - non-social state
- பொறை - tolerence 306
- மனப்பான்மை- attitude
- மனம் - mind 49 [224
- மாறுதல் - change 284
- முன்னேற்றம் - progress 229, 340
- மைய நிலை - Socio-centricism 227
- வன்மைகள் - pressures, influences 231, 233
, பன்முகச் - multiple society 155
, திரட் - mass society 159
சமூகத்த - societal 145
சமூகத்தை உணர்ந்த தன்னகம் - society conscious self 322
சமூகம் - society
சமூகம் வாழ் - societary 137
சமூகவியல் - sociology 230
சாதி - caste 153, 247
சாயல் - image 56
சாயலுறுதல் - imaginary 63
சார்பற்ற கடப்பாடு - categoric imperative 205
சார்பு - dependence 1, 70, 222
சார்பெழுச்சி - derived emotion 73
சார்வு - belonging 1
சாவூக்கம் - death instinct 76

சிந்தனைக்குழு - committee 138
சிந்தனைத் தரப் பகிர்வு- shared norms of thinking 6
சிறுகுடி - clan 20, 77, 137
சினம் - anger 74

சீர்குலைவு, சமய - religious disorganization 345
சீர்மை - right 251
சீர்த்தி மயக்கம் - delusion of grandeur 319

சுட்டுச் சைகை - demonstrative gesture 95
சுமத்தப்பட்ட சொற்கள் - 'loaded' words 362
சுரப்பித் தொகுதி - glandular system 16, 202
சுழற்சி மாறுதல் விதி - law of cyclic changes 256
சுற்று நிலை - circumstance 34, 185

சூழ்நிலை - environment 46, 83, 198
, உளவியற்-psychological 17
, சமூகச் - social
, புவியியற்-geographic16
, பூதச் - physical 1
செந்நிலைகள் - mores 19, 150, 172, 229, 249
செய்தித் தணிக்கை - censorship 235, 268
செயல் நிரல் - action programme 41
செயலாராய்ச்சி - action research 41

செயலி - agent 232
செயற்புரிவு (அலுவல்) - functions 46, 67, 145
செயற்புரிவுத் தனியாட்சி - functional autonomy 46
செயற்போக்குகள் - action tendencies 64, 69
செயன் முறை - process 3, 8
சொந்த - private, personal 51, 90

சோதனை - test 42, 306
, அகமுக-புறமுக-intro-version-extraversion10
, அகவய - subjective 42
, அடித்து விடற் (பிரஸ்ஸி) - cross-out 24, 310
, எழுதற்-paper and pencil 220
, கட்டுரைச் - essay 309
, குழந்தையர் உட்புலச் - childrens apperception
, செய்கை - performance 220
, சொல் இயைபு - word association 44
, சொல் முறை - verbal method 307, 357, 362
, சொற்புறத்தெறி சோதனை- verbal projection test 44, 45
, தன் எண்ணம் நிரப்புதல் (முடித்தல்)-self idea completion 226
, பலவில் தேர்தல்-multiple choice 310
, புறத்தெறி - projective 220, 364
, பொருளொடு புணர்ந்தறி - thematic apperception 132
, மறைமுக -indirect 363
, மெய்- பொய்-true-false 364

சோதனை—
, மேலோங்கல் - பணிவு - ascendance-submission 101
, மைத்தட-ink blot 225
, வாக்கியம் - நிரப்பல் 225
தகவல் - data 18, 28, 33, 53
தடமாற்றம் - deflection 80
தடமுறை - routine 82
தடுப்பி - deterrant 170
தடை - inhibition 133
தடைக் கட்டளை - prohibition 78
தடைக் கூறுகள் - inhibitive factors 120
தண்டனை - punishment 167, 236
, உடலல் - non-physical 236
, உளவியல் - psychological 236
தண்டுவடம் - spinal cord 62
தத்துவம்-philosophy 50, 82, 83
தந்தை உரு - father figure 79 287
தந்தை வழி உரிமை - patrilineal system 22
தபுநிலை - taboo 78, 237
தரநிலை - normal 219
தரப் பிறழ்வு - abnormality 322
தரம் - norm, standard 32
தரம் பிறழ் (தரப்புற) - abnormal 8, 51, 115, 219
தரமிடு நிரல் - rating scale 220
தரமீடு - rating 113, 311
, தன் - self-rating 33, 221, 361
தலைமனிதர் - headman 280
தலைமை - leadership 224, 278
, ஆள் தொடர்புள்ள - personal 279, 280
, உண்மைத் - real 278, 280
, தொலைவுத் தொடர்புத் - distance contact 283

தலைமை—
, நேரடித் தொடர்புத் - direct contact 283
, புறமுறை சார்ந்த - formal 279
, பெயரளவான-nominal 279
, ப் பண்புகள் - traits 288
தலைவர் - leader 290, 331
, அதிகாரத்-autocratic290
, தலையிடாத் - laissez-faire 290
, மக்களாட்சித் - democratic 290, 291
தற்கருத்தேற்றம் - auto-suggestion 41, 112
தற்காட்சி - self perception
தற்காட்டுதல் - self display 69
தற்காமம் - auto erotism 77
தற்பாதுகாப்பு - self-protection 69
தன்-இன உணர்வு - consciousness of kind 8
தன்-எண்ணம் முடித்தல் - self idea completion 44, 226
தன்-திறனாய்வு - self-criticism 193, 206
தன்-பாலினர் பற்று-homosexual attachment 78
தன்-முனைப்பு - egoism, ego 37, 51, 128, 167, 204
தன்-மைய - ego centric 15, 76, 171, 201
தன் விருப்ப - autistic 171
தன் வெளிப்பாடு- self expression 192
தன்னகம்(தான்)-self 14, 52, 128
, கண்ணாடித்-looking glass self
, காண்நிலைத் - empirical self
தன்னறிவு, தன் நனவு, தன்னுணர்வு - self consciousness 49, 55
தன்னிகழ் - automatic 62
தன்னிகழ்வுப் பதம் - random sample 355
தன்னுளம் காட்டும் சைகை - austistic gesture 95, 96

தன்னெடுப்பு - elation74, 76, 282
தன்னொடுக்கம் - negative self feeling 75, 222

தன்னோக்கு - self view 178
தனித்திறன்(நாட்டம்) - aptitude 190
தனித்துறை - specialization 346
தனிப் பண்பாடு - cult 250
தனிமர் - isolates 38
தனிமைப்பாடு - isolation 163
தனியாள் - individual 2, 51, 162, 178, 187, 230

தாய்வழி உரிமை - matrilinial system 22
தான் (தன்னகம்) - self 14, 52, 118
தான் தொடங்காற்றல் - imitative 224, 283, 291
திடநிலை - stability 76, 159, 250
திண்மை - solidarity 8
திரட் சமூகம்-mass society 159, 263, 274
திரட்சி - coherence 55
திரட்டூக்கம்- instinct of acquisitiveness 75, 84, 88
திரண்மை (திரள்வு) cohesion 39, 158
திரள் எண்ணம் - mass opinion 113, 298
திரள்(ட்) கருத்தேற்றம் - mass suggestion 113
திருச்சபை - chruch 141, 144, 233
திருத்தத் தரம் - standard of accuracy 29

திருமணம் - marriage 208, 218, 247
திறனுய்வாற்றல் - critical faculty
திறனுய்வு - criticism 53

தீர்ப்பி (தீர்வி) - determinant 8, 83, 90, 206,334
தீர்ப்புத்தரம் - standard of judgment 362

துடிப்புக் கடத்தல் - transmission of impulses 88
துருவி ஆய்தல் - exploration 68
துலங்கல் - response, 110
துறைகள் - fields 46
துன்புறுத்து வேட்கையம் - sadists 100, 300
துன்புறு மயக்கம் - delusions of persecution 300

தூண்டல் - stimulus 267
தூய்மைப் படுத்தல் - sublimation 78, 180

தேங்கிய - stagnant
தேச உணர்வு - National conciousness 332
தேசப் பண்பு - national characteristics 333
தேசம் - nation 141, 142, 328
தேச முயற்றி - national volition 332
தேசீய (தேச) மனம் - the mind of a nation
தேர்தல்-choice, selection 17,43
தேவை - need 18, 19, 46, 56, 65, 68, 70, 88, 123, 124, 144
, இரண்டாம் படித் - second order 70
, உயிரியல் உளவியல் - bio-psychological 70
, உளவியல்-psychological 168, 205

தொகுதி (ஆய்தொகுதி)- population, universe 39
தொகைப்புகழ் வன்மை-prestige of numbers 114
தொடர்ச்சி - continuity
, புறமுறைத் - formal 147
, பொருள் வயத்- material 147
தொடர்பு - relationship
, நேரடி - direct 94
, மறைமுக- indirect 94
தொழில் - occupation, industry 209, 218
தொழில் நுட்ப - technical 16, 337, 341
தொழில்மயப்படுத்தல் - industrialisation 23, 337, 346
தொழிற் சங்கம் - labour union 142, 143
தொழிற் பாகுபாடு (வேலைப்பாகுபாடு)-division of labour 160
தொழிற் புரட்சி-industrial revolution 160

தோற்றுவாய்-source, origin 297
தோதுச் சின்னம்-totem 78
தோழமை-comradeship 75, 88

நகை - laughter 102, 126
நட்சத்திரம் - star 38
நடக்கை - conduct 239
நடத்தைக் கொள்கையர் - behaviourists
நடத்தைப் படிவம் - behaviour pattern 21
நடுவர் - judge 224
நடுவர்களின் தரமீடு (நடுவர்த் தரமீடு) - jury rating 360
நடுவர் குழு - jury 312
நம்பகம் - reliability 354
நம்பச் செய்தல் - persuasion 234
நம்பிக்கை - belief
நரம்புத் தொகுதி - nervous system 16
, தன்னியக்க - autonomic 180

நரம்பியல் - neural 81
நற்சான்று - testimony 267
நன்றியுணர்வு - gratitude 73
நனவிலி - unconscious 33, 43, 47, 79, 131

நாட்குறிப்பு - diary 233
நாட்டம் - aptitude 190
நாட்டவர் வழி - folk way 25, 229, 239

நிகழ்முறை - phenomenon 19, 29, 49
நியதி - criterion 55, 139, 152
நிலமுடைமைக் கூறு) - territory 328
நிலைத்து ஒதுங்குநர் - schizophrenics 195, 206
நிலைத்துநிற்றல் - conservation 229
நிலை நிறுத்தல் - maintaining 246, 287
நிலையற்ற - fickle 189
நிற அடைப்பு - colour bar 324
நிறுக்கை, நிறுக்கை நிலை - posture 97, 124
நிறுவனக் கூறுகள் - institutional aspects 145
நிறுவனம் - institution 8, 10, 20, 50, 229
நிறுவிய செயலாறுகள் - institutionalized practices 19
நிறைவிப்பு, நிறைவு - gratification 46. 79, 88, 304

நீதித் துறை - judiciary 253
நீர்மம் - humour 200

நு.ஈ. - I. Q 199
நுண்ணறிவு - intelligence 71, 190, 199, 203
, சமூக - social intelligence 223
நுண்முறை - technique 32, 35, 225, 264

நெகிழ்ச்சி - plasticity 6, 71
நெளிவு - plasticity 216
நெறி பிறழ்ந்த - delinquent 45
நெறி பிறழ்ந்த - delinquency 201, 209

நோக்கம் - aim, purpose 4, 56, 147
, பொது - common purpose 331
நோக்கு நிலை - point of view 22, 283

பங்கு - role 148
பசி - hunger 86
பட்டியல் - inventory 36
படக்கதைச் சோதனை - picture story test 43
படிக் குறுக்கம் - funnelling
படிப் பெருக்கம் - geometric progression 123
படி மலர்ச்சி - evolution 65, 66, 217, 232
படிவம் - pattern 11
படுதா - purdah 75
படைப்படுத்தல் - regimentation 235, 253
பண்பாட்டுக் கவிநிலை - climate of culture 28
பண்பாட்டுப்படிவங்கள் - patterns of culture 11, 25, 48
பண்பாட்டுப் பின்புலன் - cultural back ground 40
பண்பாட்டுப் புகுத்தல் - indoctrination
பண்பாட்டு மனிதவியல் - cultiral anthropology 24, 46, 48
பண்பாடு - culture 211, 217, 337, 341
பண்பியல் வேற்றுமை - qualitative difference 74
பண்புக் கூறு - characteristic 187, 190, 196

பணிதல், less-பணிவு - submission 192, **194**, **196**, 265
பணிவுக்கம் -self-abasement 75
பதப் பார்வை - sample, survey 367
பதத் தேர்வு - selection of sample 292
பதம் - sample 39, 353, 366, **367**
பதிலி - agent 2
பயில்வு - application
பல ஆண் மணம் - polyandry 343
பல தார மணம் - polygamy 343
பழக்கம் - habit 89, 112
பழக்கச் சைகை - habitual gestures 95, **96**
பழி வாங்கல் - revenge, reprisal 73
பள்ளி - school 166, 207
பற்று - sentiment **90**, 296
பற்றுறுதி - loyalty 141, 207

பாகை - degree 37
பாங்கு - disposition 90, 188, 221
பாசம் - affection 168
பாதிப்பு - (வன்மை) - influence 3, 59
பாதுகாக்கும் உள்துடிப்பு - protective impulse 75
பாதுகாப்பின்மை - insecurity 36
பாமர நுண்முறை - plainfolk technique 286
பார்வை(யிடல்) - survery 36, **365**
பாராட்டி - approval 70, 124, 198
பாராட்டு மறுப்பு - dis-approval 198
பாராளுமன்றம் - parliament 142
பால் - sex **86**, 176, 208, 216
பால் வேற்றுமை - sex difference **216**
பாலியல் - sexual 67
பாலூக்கம் - sex instinct 75, 76 88
பாவனை - fantasy 18, 176
பாற் சக்தி - libido

பிரச்சினை - problem 9, 25, 28
- க் குழந்தை - problem child 206
- க் குழு - problem group 300
பிரசாரம் (கருத்துப் பரப்பல்) - propaganda 42
பிரித்துணர்வு (பிரித்தறிதல்) - discrimination 18, 326
பிரிவினம் - species 326
பிரிவு நிலை - dissociation 265
பிறப்பியல் - genetics 327
பின்பற்றல் - imitation 5, 6, 110, **117**, 166, 176, 208
, எதிர்ப் - contra 258
, தெரிந்து - conscious **119**
, தெரியாமல் - unconscious **118**
- விதிகள் - law of 160
பின்புலம் - back-ground 3, 10
பின்வாங்கல் - withdrawal **85**
பில் - Bhils 213

பீடிப்பு - obsession 116

புகழ்ச்சி - praise 234
புகழ் வன்மை - prestige 40, **112** **113**, **121**, 266, 286
, தொகைப் - prestige of numbers **170**, 267, 323
புதுப் புனைவு - invention 13
புலக் காட்சி - perception 10, 14, 46, 183
புலன் காண் - perceive 3
புரளிப் பேச்சு - rumour 132
புராதன - primitive 6, 78, 80, 81, 217

புராணவியல் - mythology 50
புரோட்டோஸோவா - protozoa 137
புவியியல் முன் தீர்வு- geographic determinism 336
புவியியற் கூறு - geographic factor 336
புற ஆய்வு - experiment 9, 40, 101, 113. 134, 182, 184, 235, 292
- உற்று நோக்கல் - experimental observation 35, 39
புறக்கணிப்பு - rejection **86**, 236, 241, 302
புறக் குடியிருப்பு - slum 75
புறச் சாதியார் - out castes 156
புறத்தெறி - projective 48, 110
புறமணம் - exogamy 246
புறமுகன்(ம்) - extravert (sion) 192, **194**
புறமுறை (சார்ந்த), புற ஆசார - formal 143, 152, 161, 233
புறவய - objective 42, 79, 85
புறவயப்பட்ட - objectified 247
புறவயப் படுத்திய கூட்டு நோக்கம் - objectified collective purpose 252
புனராக்கம் - reconstruction 28

பூத - physical 17
பூதப் புற (மிகைப் பூத) - metaphysical 30
பூதவியற் கூறுகள் - physical factors **340**

பெண்பாற் கொள்கை - feminine principle 235, 268
பெயர் சூட்டல் - name calling 235, 268

பெயர்ப் பேறு - reputation 187
பெயர் மறை - anonymity 323
பெற்ற-acquired 18, 84, **88**, 162
பேச்சு - speech **98**
பேட்டி - interview 35, 220, 309
பேரச்சம் - panic 320

பொது உணர்வு - common sense 29
பொதுக் குழு (பொதுச் சமூகம்) - The Body Politic 52, 60
பொதுப் போக்கு - general tendency 111
பொது மக்கள் - the Public **19**, **269**
பொது மக்கள் எண்ணம் - public opinion **260**,**269**, **272**, 352, 365
பொது முயற்றி - general will 49, 50, 51
பொதுமை எண்ணம்-impression of universality 323
பொதுமைப்படுத்தல், பொதுமை- generalization 26, 29
பொருண்மை - meaning 18, 25
, வைத்துக் கோடற் - conventional 99
, உளவியல்-psychological 100
பொருத்தப்பாட்டுப் பாகை - degree of adjustment 221
பொருத்தப் பாட்டுப் பிறழ்வு (கோளாறு)-maladjustment 38
பொருள் வயப்படுத்தல் - objectification 130
பொருளாதார (பொருளியல்) - economic 28, 233, 337, 349
பொருளொடு புணர்ந்தறி சோதனை - The matic Apperception test 43
பொருமை - jealousy 73
பொறிவயிற் சமநிலை - mechanical equality 5
பொறி ஆய்வியல் - mechanics 24
பொறியமைப்பு - mechanism 125, 128

போக்கு - tendency 68
போதுமையின்மை - inadequacy 302
போட்டி - competition **105**, 177
போர்ப் புகைச்சல் - cold war 13
போராட்டம் -conflict, struggle **86, 107**
போரூக்கம் - instinct of pugnacity 74, 75

ஃப்யூடலிஸ்ம் - Feudalism 212, 281

மகவூக்கம் - parental instinct 75, 81
மட்டம் - level 66
மடைமாற்றம் - canalization 179
மரபு - tradition 55, 147, 232
மரபுநிலை - heredity 2, **198**
, உயிரியல் - biological 4
, சமூக - social 10, 9, **232**, 236
மரபுநிலையியல் - eugenics 13
மரபுநிலை ஏற்றம் - hereditary status 146
மலர் கும்பலர் - cyclothymes 195, 219
மலர்நிலை - elation 195
மருத்துவப் பதிவுகள் - clinical records 220
மருத்துவ மனை - clinic 43
மறப்பு (பால் மறப்பு) - weaning 214
, உளவியல் - psychological weaning 249
மறிவினை - reflex 62
, முதன்மைய -prepotent reflex **84**, 181
மறை பொருண்மை - mysticism 80
மறை பொருள் தன்மைய - mystical 51, 54
மறை வசை - satire 235
மன்குடல் - cajolery 234
மன்னராட்சி - monarchy 281
மனக்கோட்டம் - psychosis
மனச்சான்று - conscience 59, 130, 204
மனத்திடம் - morale 36, 352
மனப்பாங்கு - temperament 190, 194, 200
, அழுமூஞ்சி - melancholic 201
, சிடு மூஞ்சி -choleric 201
, சிரிமுக - sanguine 201
, தூங்கு மூஞ்சி - phlegmatic 200
மனப்பாங்குச் சார்பு - temperamental bias 3
மனப்பான்மை - attitude 3, 12, 19, 89, **90**, 190, **197, 294**, 297, 350
மனவன்மை - faculty 66
மனித இயல்பு தன்மை - human nature 23, 25, **80**
மனித புவியியற் கொள்கை - anthropo-geographic theory 348
மனிதவியல் - anthropology 9, 20, 50
மனிதவியலர் - anthropologists 80, 217

மாற்றியமைப்பு - adaptation 44, 71, **87, 88**
மாறுதல் - change 275, 283, 284, 340
மானதங்கள் - monads **82**

மிகைப்பூத (பூதப்புற) - meta-physical 60, 128
மிகைப்பூதவியல் - metaphysics 52, 54
மின் உடலியல் - electrophysiology 63
மின் துடிப்புக்கள் - electrical impulses 62

மீ இயற்கையம் - supernaturalism 80
மீக் (மிகைக்) கருத்தேற்குமை- hyper suggestibility 261,323
மீக்கூர்வு - intensity 192, 322, 353
மீட்டுணர் - recapitulate 66
மீத்தனிமனம் - over - individual mind 50
மீ நம்பிக்கை - Superstition 244, 250
மீ மனம் - Super-ego 78, 130, **204**
மீள்-பயில்வு - repetion 265, **266**
மீள்-போக்கு - regression 48

முக அமைப்பு (இயல்)-physiognomy 102
முகக் குறிப்பு - facial expression 97
முகத் துதி - flattery 234
முகம் புகு தொடர்பு- face-to-face relationship 142, 149, 316
முகிற்படச் சோதனை - cloud picture test
முதன்மைய(முன்வலிமைய) மறி விணை- prepotent reflex 84, 181
முதன்மையூக்கம் - self assertion 74
முயற்சி - conation 74
முயற்றி - will (voluntary conative) 49, 51, 52, 58, 66, 73, 74
முயற்றிப் பழக்கங்கள் - habits of will 211
முரசறை முறை - band wagon device 267
முரண்பாடு - contradiction 220
முழு முதல், முழு முடிவு - absolute 52, 233, 243
முற்கிளர்ச்சி-impulsiveness 189
முற்கூறல், முற்கூற்று - prediction 11, 221
முற்கோள் - assumption 25, 29
முற்சார்பு - prejudice 11, 13, 116, **294, 298**
முற்படுப்பு-increment 133
முற்பாங்கு-predisposition 25, 84 , இன-racial 325
முறிவு - frustration 81, 180, 291, 302
முறை - method 28
முன்னுடைமை - prepossession 294
முன்னேற்றம் - progress **340**
முன்னெட்டம்-starting **86**
முனியும் பண்பு - cynicism 195
—முனை (மும்முனை, நான்முனை) - three-point, four point etc. **189**, 224

மூல எழுச்சி - primary emotion 73
மூளைப்புறணி - brain cortex 62

மெய்ப்பாடு - bodily expression (of emotion) 125
மெய்ப்பித்தல் - verification 29, 60

மேல்நிற்பு - prominence 353
மேலோங்கல் - dominance, ascendance 31, 187, 189, 192, 194, **196**

மைத்தடச் சோதனை - ink-blot test 43

மொழி - language **98, 172, 328**, 338

ராபரிகள் - Rabbaris 213

வகுப்பு அமைப்பு - class organization **338**

வகுப்புக்கள் - classes **152**
வசதிப்பாடு (வசதியளிப்பு) - facilitation 40, 110, **133**
வரம்புகள் - frontiers 26
வரம்பு மனிதன் - marginal man 116, 163
வரிசைப்படுத்தல் - ranking 46, 311
வரிசை முறைக் கணிநிரல் - rank order scale 360
வலுவந்தம் - coercion 243
வழக்கம் - custom 4, 19, 150, 229, **244**
வழக்காறு - usage 229, **244**
வழிகாட்டல், தொழின் முறை - vocational guidance 43
வழிநிலை உளவுகள் - secondary clues 366
வற்புறுப்பு - constraint 231
வன்செயல் - aggression 31, 76, 81, 133, 176, 180, 214, 300
வன்மை-pressure, influence 4

வாக்கியம் நிரப்புதல் - sentence completion 226
வாக்கெடுப்ப - poll **336. 36**
வாழ்க்கைத் திட்டம் - Life plan **91**
வாழ்க்கை வரலாறு - life history 35, 220
வாழ் தொழில் - vocation 91

விசை நிலைமைகள் - key situations **203**
விட்டுக்கொடுத்தல் - accommodation **108**
விதிப்பு வழக்காறுகள் - prescriptive usages 237
விதி விளக்கம்-deduction 29,60
விந்துக்கள் - spermatozoa 137
வியப்பு - wonder 74
வியப்புணர்வு - admiration 73
விரிவு-expansiveness 194, 192
விரும்பத்தக்கவை - the desirable 243
விரும்புகிறவை-the desired 243
விரைப்பு-tension 39, 154, 302
விவரிப்புக் கருத்து - descriptive concept
விழுமியம் - Value 10, 13, 15, 17, 244, 247, 251
விளக்கக் கருத்து - explanatory concept 117
விளம்பரம்-advertisement 234

விளையாட்டுக்குழு - play group 142
வினு நிரல் - questionnaire **35**, 39, 220, **307**

வெகுமதி-reward 167, 170, 236
, குறியீட்டு - symbolic reward, 170
, சொல் - verbal reward 170
, பொருள் - material reward 170
வெட்கம் - shame 73
வெளிக்கொணர் - recall 40
வெளிச் செல் - efferent 62, 87
வெளிப்படையான நனவு - explicit consciousness 62
வெற்றுத்தாள் - tabula rasa 9
வெற்றுநிலைப்படுத்தல் - abstraction 19, 25
வெறிக்கும்பல் (வெஞ்சினக் கும்பல்) mob 316
வெறுப்பு - disgust 74

வேடம் (அங்கம்) - role 48, 186
வேற்றமைப்பு (வேறுபடுப்பு) - variation 43, 71, 212
வேறுபிரித்துக் காணல் - discrimination 302
வேலைப் பாகுபாடு - division of labour 144
வைத்துக்கோடல் - convention 32, 99, 150, 164, 182, 245,
வைத்துக் கோடற்பொருள் conventional, connotation 174

பி. ஏ. வகுப்பு நூல்கள் (தமிழில்)

அரசியல்

1. அரசியல் அமைப் புகள் (ஐரோப்பிய நாடுகள்)	திரு. பு. ரா. பக்கிரிசங்கர், எம்.ஏ., பி.எல்.,	சென்ட்ரல் ஆர்ட்ஸ் அச்சகம். ஆக்டன் லாட்ஜ். 11, மெக்நிக்கால் ரோடு, சேத்துப்பட்டு சென்னை–31. விலை : ரூ. 6–00
2. பொதுத்துறை ஆட்சி இயல்	திரு. பொ. நடராசன், எம்.ஏ., (வரலாறு) எம்.ஏ., (அரசியல்)	ஸ்டார் பிரசுரம், 66, பெரிய தெரு திருவல்லிக்கேணி, சென்னை-5. விலை : ரூ. 5–00
3. அரசியல்	பேராசிரியர் ஆர். பாஸ்கரன்	சென்ட்ரல் ஆர்ட் அச்சகம், ஆக்டன் லாட்ஜ், 11, மெக்நிக்கால் ரோடு, சென்னை 21 விலை : ரூ. 2–50-
4. அரசாங்கத்தின் வரலாறு	திரு. மோ. கிளாரன்சு, எம்.ஏ., (வரலாறு) எம்.ஏ., (அரசியல்) எம்.ஏ., (பொருளாதாரம்) திரு. டி. டி. பெலிக்ஸ். எம்.ஏ., (அரசியல்) எம்.ஏ., (பொருளாதாரம்)	திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப் புக்கழகம் லிமிடெட் 1/140, பிராட்வே சென்னை–1. விலை ரூ. 7-50
5. அரசியல் அமைப் புகள் (அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, ஜப்பான், ஆஸ்திரேலியா)	திரு.ஜே. இராமச்சந்திரன், எம்.ஏ., ஏ.எம்., (சிகாகோ)	என். சி. பி. எச். பிரைவேட் லிமிடெட், 6, நல்லதம்பி செட்டி தெரு, சென்னை-2. விலை : ரூ. 4– 62

பொருளாதாரம்

6. இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு. (முதற் பகுதி)	பேராசிரியர் அ. முத்தையா, எம்.ஏ.,	பாரி நிலையம், 59, பிராட்வே சென்னை–1. விலை : ரூ. 3-00

7. பொருளாதாரம்-I	பேராசிரியர் சி. வேலாயுதம், எம்.ஏ., எல்.டி., பி.காம். (ஆனர்சு) (லண்டன்)	கலைக்கதிர் அச்சகம், 2/256-பி, அவனாசி ரோடு, கோயம்பத்தூர்-1. விலை : ரூ. 8-40
8. இந்தியப் பொருளியல்	டாக்டர் பா. நடராசன், எம்.ஏ., டி. லிட்.,	திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிடெட், 1/140, பிராட்வே சென்னை-1. விலை : ரூ. 9-00
9. அமெரிக்க பொருளாதார வளர்ச்சி	டாக்டர் எம். ஜே. கே. தவராஜ், எம்.ஏ., பி.எச்.டி.,	தமிழ்ப் புத்தகாலயம் 393, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5. விலை : ரூ. 4-25.
10. சோவியத் பொருளாதார வளர்ச்சி	டாக்டர் எம். ஜே. கே. தவராஜ், எம்.ஏ., பி.எச்.டி.,	தமிழ்ப் புத்தகாலயம் 393, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5. விலை : ரூ. 4-50
11. பணவியலும், பாங்கியலும். (பாகம்-1)	பேராசிரியர் சி. வேலாயுதம், எம்.ஏ., எல்.டி., பி.காம். (ஆனர்சு) (லண்டன்)	பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. விலை : ரூ. 6-75
12. பன்னாட்டு வாணிபம்	டாக்டர் மு. ஆரோக்கியசாமி, எம்.ஏ., பி.எச்.டி	அமுத நிலையம், பிரைவேட் லிமிடெட்., தேனாம்பேட்டை, சென்னை-18. விலை : ரூ. 6-00
13. பொருளாதாரச் சிந்தனை வரலாறு	பேராசிரியர் சோணைச்சலம்	ஸ்டார் பிரசுரம், 66, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. விலை : ரூ. 5-00
வரலாறு		
14. இங்கிலாந்து வரலாறு	டாக்டர் கே. கே. பிள்ளை, எம்.ஏ., டி. லிட்.டி.பில்., (ஆக்சன்)	திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப் புக் கழகம் லிமிடெட்., சென்னை-1. விலை : ரூ. 7-50

15. ஐரோப்பிய வரலாறு (கி. பி. 1500 முதல் 1815 வரை) (முதல் பாகம்)	டாக்டர் மு. ஆரோக்கியசாமி, எம்.ஏ., பி.எச்.டி.,	அமுத நிலையம், பிரைவேட் லிமிடெட்., தேனும்பேட்டை, சென்னை-18. விலை : ரூ. 3-50
16. இந்திய வரலாறு (பாகம்-1)	திரு. ஆர். சத்தியநாத அய்யர், எம்.ஏ., எல்.டி., திரு. டி. பாலசுப்பிர மணியன் எம்.ஏ.,	அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.
17. இந்திய வரலாறு (பாகம்-2) (1200 A. D. To 1707 A.D.)	திரு. ஆர். சத்தியநாத அய்யர், எம்.ஏ., எல்.டி., திரு. டி. பாலசுப்பிர மணியன் எம்.ஏ.,	அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.
18. ஐரோப்பிய வரலாறு (கி.பி. 1815 முதல் 1945 வரை) (இரண்டாம் பாகம்)	டாக்டர் மு. ஆரோக்கியசாமி, எம்.ஏ., பி.எச்.டி.,	அமுத நிலையம், பிரைவேட் லிமிடெட்., தேனும்பேட்டை, சென்னை-18. விலை : ரூ. 3-00
19. இங்கிலாந்து அரசியலமைப்பு வரலாறு	ஜார்ஜ் பர்ட்டன் ஆடம்ஸ் தமிழாக்கம்: பா. சூரியநாராயணன், எம்.ஏ., (வரலாறு) எம்.ஏ., (அரசியல்)	பழனியப்பா பிரதர்ஸ், 4, வெங்கடேச நாயக்கன் தெரு, சேப்பாக்கம், சென்னை-5. விலை : ரூ. 6-00
20. இந்திய வரலாறு (பாகம்-3) (1707-முதல் தற் காலம் வரை)	திரு. ஆர். சத்தியநாத அய்யர், எம்.ஏ., எல்.டி., திரு. டி. பாலசுப்பிர மணியன், எம்.ஏ.,	அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.
21. இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாறு (இரண்டாம் பகுதி)	ஜார்ஜ் பர்ட்டன் ஆடம்ஸ் தமிழாக்கம்: பா. சூரியநாராயணன், எம்.ஏ., (வரலாறு) எம்.ஏ., (அரசியல்)	பழனியப்பர் பிரதர்ஸ், 4, வெங்கடேச நாயக்கன் தெரு, சேப்பாக்கம், சென்னை-5. விலை : ரூ. 8-00

உளவியல்

22. உளவியல் (முதல் பாகம்)	டாக்டர் தா. ஏ. சண்முகம், எம்.ஏ., எம். லிட். பி.எச்.டி.	திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1/140, பிராட்வே, சென்னை-1. விலை : ரூ. 6-00
23. உளவியல் சோதனை வழி காட்டி	டாக்டர் ஜி. டி. பேர்வஸ், எம்.ஏ., டி.பில். (ஆக்ஸன்)	அமுத நிலையம், பிரைவேட் லிமிடெட், தேனும்பேட்டை, சென்னை-18, விலை : ரூ. 3-00
24. "சமூகத்தில் நாம்"	திரு. அ. பெச்சன்ட்கிரீப்பர் ராஜ், எம்.ஏ., (தத்துவம்) எம் ஏ., (உளவியல்)	மெஸர்ஸ் குமார் பப்ளிஷர்ஸ், 1, வெங்கடராம ஐயர் தெரு, சென்னை-1. விலை : ரூ 6-00
25. உளவியல் (இரண்டாம் பாகம்)	திரு. தா. ஏ. சண்முகம், எம்.ஏ., எம். லிட். பி.எச்.டி.	திருநெல்வேலி தென் னிந்திய சைவ சித் தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-1. விலை : ரூ. 7-00

புவியியல்

26. புவிப் புறவியல் (முதல் பாகம்)	திரு. ந. அனந்தபத்ம னைபன், பி.எஸ்.ஸி., (ஆனர்சு)	ஹிக்கின் பாதம்ஸ் பிரைவேட் லிமிடெட், மவுண்ட்ரோடு, சென்னை-2. விலை : ரூ. 2-75
27. இந்தியத் தரை இயல் (முதல் பகுதி)	திரு. சு. மாணிக்கம், எம்.ஏ., (பொருளாதாரம்) எம்.ஏ., பி.டி., (பூகோளம்)	பாரி நிலையம், 62, பிராட்வே, சென்னை-1. விலை : ரூ. 6-20
28. தொழிலமைப்பும் நிருவாகமும் (முதற் பாகம்)	தமிழாக்கம் : ஓ. இரா. கிருட்டிணசாமி, எம்.ஏ., எம். காம். ஏப்.ஆர்., ஈ.எஸ்., (இலண்டன்)	எம். சேஷாசலம் அண்டு கம்பெனி, 7, சுங்குராமச் செட் டித் தெரு, சென்னை-1. விலை : ரூ. 7-50

29 தொழிலமைப்பும் நிருவாகமும் (இரண்டாம் பாகம்)	தமிழாக்கம்: ஒ. இரா. கிருட்டிணசாமி, எம்.ஏ., எம். காம். எப்.ஆர்., ஈ.எஸ், (இலண்டன்)	எம். சேஷசலம் அண்டு கம்பெனி, 7, சுங்குராமச் செட்டித் தெரு, சென்னை-1. விலை : ரூ. 7–50
தத்துவம்		
30. மேல்நாட்டுத் தத்துவ வரலாறு (முதற் பாகம்)	டாக்டர் டி.எம்.பி. மஹாதேவன், எம்.ஏ., பி.எச்.டி., திரு. பி.என். சண்முக சுந்தரம், எம்.ஏ., எம்.லிட்.,	புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், 135, பவழக்காரத் தெரு, சென்னை-1. விலை : ரூ. 4–00
31. இந்தியத் தத்துவ ஞானம்	திரு. கி. லக்ஷ்மணன், எம்.ஏ.,	பழனியப்பா பிரதர்ஸ் 4, வெங்கடேச நாயக்கன் தெரு, சென்னை-5. விலை : ரூ. 6–75
32. மேல் நாட்டுத் தத்துவ வரலாறு (இரண்டாம் பாகம்)	டாக்டர் டி.எம்.பி. மஹாதேவன், எம்.ஏ., பி.எச்.டி., திரு. பி. என். சண்முக சுந்தரம், எம்.ஏ., எம்.லிட்.,	புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், 135, பவழக்காரத் தெரு, சென்னை-1. விலை : ரூ. 7–50
அளவையியல்		
33. ஐரோப்பிய அளவையியல்	திரு. கி. ர. அப்புள்ளச் சாரி, எம்.ஏ., எல்.டி.,	அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், தேனும்பேட்டை, சென்னை-18. விலை : ரூ. 6–00
அறிவியல்		
34. உயிரியல்	திரு. வி.எஸ் ராமஸ்வாமி எம்.ஏ.,	கலைக்கதிர் அச்சகம், 2/256-பி, அவனாசி ரோடு, கோயம்பத்தூர்-1. விலை : ரூ. 5–60
35. இலகு பௌதீகம்	திரு. பா. சவரிமுத்து, எம்.ஏ.,	ஹிக்கின்பாதம்ஸ் பிரைவேட் லிமிடெட், மவுண்டு ரோடு, சென்னை-2. விலை : ரூ. 5–60

6. வான நூல்	திரு. ஆர். மகாதேவன், எம்.ஏ.,	சக்தி காரியாலயம், 3/111, மவுண்டு ரோடு, சென்னை-6. விலை : ரூ. 2–60
37. வேதியியல்	திரு. கி. கண்ணபிரான், எம்.ஏ,, பி.எஸ்.ஸி., (ஆனர்சு)	கலைக்கதிர் அச்சகம், 2/256-பி, அவனாசி ரோடு, கோயம்பத்தூர்-1. விலை : ரூ. 3–70
38. புள்ளியியல்	திரு. க. வெங்கடேசன், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்.,	சரஸ்வதி பிரசுரம், சென்னை-4. விலை : ரூ. 2–50

ஆசிரியர் கல்லூரிக்கானவை

39. கணிதம் கற்பித்தல்— கோட்பாடும் செயற்பாடும்	திரு. ந. பார்த்தசாரதி, எம்.ஏ., எல்.டி.,	திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப் புக் கழகம் லிமிடெட், சென்னை-1. விலை : ரூ. 4–25
40. கல்வி உளவிய லும் கல்விச் சமூக வியலும்	திரு. எஸ். சந்தானம், எம்.ஏ., பி.டி.,	அமுத நிலையம், பிரைவேட் லிமிடெட், தேனும்பேட்டை, சென்னை-18. விலை : ரூ. 8–00
41. கல்விக் கலை	திரு. ப. துரைக்கண்ணு முதலியார், எம்.ஏ., எல்.டி.,	அமுத நிலையம், பிரைவேட் லிமிடெட், தேனும்பேட்டை, சென்னை-18. விலை : ரூ. 10–00
42. கற்றல் கற்பித்தல் பொது முறைகள் (முதற் பகுதி)	திரு. எஸ். சந்தானம், எம்.ஏ., பி.டி., திரு. டி. கௌரிநாதன், எம்.ஏ., பி.டி., திரு. வி. கணபதி, எம்.ஏ., பி.டி.,	குமார் பப்ளிஷர்ஸ், 1, வெங்கடராம ஐயர் தெரு, சென்னை-1. விலை : ரூ. 5–70

தமிழ் வெளியீட்டுக் கழக வெளியீடுகள்

1.	இந்திய அரசியலமைப்பு வரலாறு	V. கண்ணையா.
2.	இங்கிலாந்து வரலாறு-I	K. R. அநுமந்தன்.
3.	ஐரோப்பிய வரலாறு (A. J. கிராண்ட்) தமிழாக்கம்	V. விருத்தகிரீசன்.
4.	ஐரோப்பிய வரலாறு-I	T. V. சொக்கப்பா.
5.	பொருளாதாரம்-II	S. வேலாயுதம்.
6.	அமெரிக்காவின் நவீனப் பொருளாதார வளர்ச்சி- (K. A. ஜோசப்) தமிழாக்கம்	T. C. மோகன்.
7.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	P. V. சீனிவாசன்.
8.	பணவியலும் பாங்கியலும்-II	S. வேலாயுதம்.
9.	வணிகவியல்	K. ஆளுடைய பிள்ளை.
10.	குழந்தை உளவியல்- (ஆர்தர் T. ஜெர்சீல்டு) தமிழாக்கம்	K. R. அப்புள்ளாச்சாரி.
11.	சமூக உளவியல்- (அகோல்கர்) தமிழாக்கம்	N. வேதமணிமனுவேல்.
12.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	A. S. நாராயணன்.
13.	வட அமெரிக்கா	R. அலமேலு.
14.	புவிப்புறவியல்	N. அனந்தபத்மனுபன்.
15.	தென் கண்டங்கள்- ஆஸ்திரேலியா	H. நியூமென்.
16.	மக்கட் பரப்பியல்	V. S. அனந்தபத்மனுபன்.
17.	மானிடவியல்	M.S. கோபாலகிருஷ்ணன்.
18.	ஆசியா-I	K. சேஷநரசிம்மன்.
19.	அரசாங்க நிதியியல்	R. சேஷாசலம்.
20.	சமூத்திரவியல்	K. இராமசாமி.

கிடைக்குமிடம் :

மெஸர்ஸ் ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
மவுண்டு ரோடு, சென்னை-2.